

2

# கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்

**கி.வா.ஜ.**

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

பாகம் – 2

கி.வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிவு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு : 2003

மொத்த பக்கங்கள் (10+370) = 380

**விலை: ரூ. 120.00**

**அல்லயன்ஸ் கம்பெனி**
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி: 2494 1314

Laser Typeset by - **Print Point Graphics,** Chennai - 20.
Printed at - **Kay Em Packaging Industries,** Chennai - 14.

# பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களுள் ஒருவர். எங்கள் நிறுவனர் வி. குப்புஸ்வாமி ஐயருக்கு, மூத்த குமாரர் போல் பழகி வந்தவர். அவருடைய நூல்கள் நமது நிறுவனத்தின் மூலம் மூன்று தலைமுறையினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவர் தமிழ் இலக்கியத்தில் கரை கடந்தவர்; ஆன்மிகத்தில் பரம்பொருளைக் கண்ட ஞானி. எனவே இவரை 'ஞானப் புலவர்' என்று கூறினால், அது மிகையாகாது. இப்புவியில் அவ்வப்போது இப்படிப் பல 'ஞானப்புலவர்'கள் தோன்றிக் கொண்டே இருப்பதால்தான், நமது மொழிச் செல்வமும், ஞானச் செல்வமும், இறைவனது கட்டளைப்படி காப்பாற்றப்பட்டு வருகின்றது எனலாம். இப்போதும் நம்மிடையே திரு. சுகி சிவம், திரு. பி.என். பரசுராமன் போன்ற பல 'ஞானப்புலவர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண மனித சக்தியை மீறி, இறைவன் திருவருளால், ஏராளமான சொற்பொழிவுகளையும்; நூல் களையும் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இவர்களுடைய பேச்சுக் களையும், எழுத்துக்களையும் நாம் பின்பற்றி வந்தாலே போதும். அதுதான் அவர்கள் எல்லாம் பாமரராகிய நமக்குக் காட்டும் வழி.

சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு 'ஞானப் புலவர்' இருந்தார். அவர்தான் அருணகிரிநாதர். இறைவனை நேரில் தரிசித்து அருளைப் பெற்றவர். இவர் அருளிய நூல்கள் எல்லாம் நமக்கு, பரப்பிரம்மத்தை உணரவைக்கும் வழிகாட்டிகள். இப்படி இவர் அருளிய நூல்களுள் 'கந்தர் அலங்கார'த்திற்கு விரிவான, அழகான, தெளிவான – தொடர் சொற்பொழிவை, ஒரு சமயம் கி.வா.ஜ. அவர்கள் நிகழ்த்தி னார்கள். அந்தச் சொற்பொழிவின் தொகுப்புதான் இந்நூல். இதைப் பற்றி அவரே, தனது முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1986 வாக்கில் ஒரு நாள், அடியேன், கி.வா.ஜ. அவர்களுடன் 'புரூஃப்' பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம், ''நீ

என்னுடைய அலங்காரப் புத்தகங்களைப் போடுகிறாயா?'' என்று கேட்டார். ஒரு தெய்வப் புலவர் எழுதியதை மற்றொரு தெய்வப் புலவர் விளக்கமாகக் கூறிய நூலை 'வெளியிடுகிறாயா?' என்று கேட்கப்பட்ட வுடன் அதிர்ச்சி அடைந்தேன்; இவ்வளவு பெரிய பாக்கியம் நமக்கு உள்ளதா? என்று எண்ணி வியந்தேன். அன்று அவர் போட்ட பிள்ளையார் சுழி இன்றும் தொடர்ந்துகொண்டே போகிறது. எல்லாம் அவன் அருள்! 2005–ம் வருடம் கி.வா.ஜ. அவர்களின் நூற்றாண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் அவருடைய அனைத்து நூல்களையும், ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட, இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நல்லதையே எண்ணி னால், நல்லவைகளே நடைபெறும் என்பது ஞான வாக்கு. அதேபோல, இப்படிப்பட்ட நல்ல நூல்களை வெளியிட எண்ணி, அதன்படி நாங்கள் நடந்து வருவதால், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் நல்லவைகளே சித்தி பெறும்.

இந்நூல் இப்போது நமது நிறுவனத்தின் மூலம் ஒரே தொகுப்பாக (6 பாகங்களாக) முதல் பதிப்பாக வெளிவந்தாலும், 1956 வாக்கிலிருந்து சிறுசிறு நூல்களாக, அவ்வப்போது வெளியிடப்பட்டதுதான்.

வாசகர்களே! கி.வா.ஜ. அவர்களின் ஞானப் பெருக்கையும், அவர் கையாண்ட தமிழ் அழகையும் நீங்களே படித்து ரஸியுங்கள்; சுவையுங்கள்; போற்றிப் பாதுகாத்து பயன்பெறுங்கள்.

– 'அல்லயன்ஸ்' **ஸ்ரீநிவாஸன்**

# உள்ளுறை

## 1. வாழ்க்கைக் கூத்து


### வாழ்க்கைக் கூத்து (11 – 30)

குழந்தைப் பருவம் (11), பிரார்த்தனை (12), பொம்மலாட்டம் (12), கயிறு அறுந்தது (13), கண்ணியில் சிக்குதல் (14), மனமும் அநுபவமும் (16), பதிவும் வாசனையும் (16), ஞானிகளும் பொறிகளும் (18), பொறியால் விளையும் துன்பம் (19), உபதேசம் வீணாதல் (20), பாசக் கட்டு (21), ஐவரை அடக்கியவன் (23), எச்சரிக்கை (24), கைதட்டல் (24), சூரன் காணும் காட்சி (26), மேரு குலுங்குதல் (26), தேவர் மகிழ்தல் (27), மேருவும் மலைகளும் (28)

### சிற்றடி பட்ட இடம் (31 – 47)

கலைஞர் வழக்கம் (31), திரிவிக்கிரமர் (32), மகாபலியின் இயல்பு (33), சுக்கிராசாரியார் செய்கை (34), பேரடியும் சிற்றடியும் (36), மயிலின் மேல் (36), தேவர் தலைமேல் (38), பழமும் விதையும் (39), அடி ஏடு (40), உள் நின்ற நாக்கு (42), உள்ளமே அடி ஏடு (43), சுவடு படாத உள்ளம் (44), உள்ளமும் உரையும் (45), ஈர உள்ளம் (46)

### இருந்தபடி இருங்கள் (48 – 65)

சொல்லும் வகை (48), ஆணவம் இல்லாத உரை (49), வழி உண்டா? (49), அறம் செய்ய விரும்புதல் (51), அறமும் மனமும் (53), மனத்தைத் தடுத்தல் (54), மணிவாசகர் அநுபவம் (55), வெகுளியை விடுதல் (56), பற்று நீங்க வழி (57), தான வகை (58), உள்முகப் பார்வை (60), இருந்தபடி இருத்தல் (61), தடை நீக்கம் (61), ஆற்று நீர் (62), கிணற்று நீர் (63), சிற்பி செய்யும் தொண்டு (63), சூரும் குன்றமும் (64)

## வேலன் துணை (66 – 82)

பெரியவருடைய அச்சம் (66), யார் துணை? (67), வேலாயுதன் காப்பு (67), மனக் குரங்கு (68), மனமென்னும் யானை (69), உலகத்தினிடம் பயம் (70), பகலும் இரவும் (71), ஞானத்தின் உருவம் (72), நால்வகை நூல்கள் (73), வேதாகம வேல் (75), ஞானவேல் (76), திருத்தாள் அழகு (76), காலும் வேலும் (77), இப்போதே (77), சூதானதற்ற வெளி (79), சும்மா இருத்தல் (80), அநுபவமும் ஆராய்ச்சியும் (80), அருணகிரியார் உபதேச முறை (81)

## செல்லும் பொருளும் செல்லாப் பொருளும் (83 – 102)

பலவகை உபதேசம் (83), பெருமையும் கருணையும் (84), நாணய மாற்றம் (84), நீண்ட பயணம் (84), இங்கும் அங்கும் (85), நம்பிக்கை (85), பால்வளம் (86), பாங்கில் உள்ள பணம் (88), நேர்மாறு (89), செருக்கு அற (90), புகழ் ஆசை (90), பொருளால் அருள் (91), நான்கு குற்றம் (92), யாருக்கு? (90), நடைமுறைக்கு ஏற்ற உபதேசம் (94), குறிப்பு (95), காரணம் (96), மனம் திருந்த (96), துன்பமும் இன்பமும் (97), வேறுபாடு இல்லாத நிலை (98), கடவுள் வந்தும் (100), ஏழையாக வருவான் (101), உதவாத பொருள் (101)

## எல்லாம் மறந்த நிலை (103 – 115)

காதலும் வீரமும் (103), வீரமுருகன் (104), காதலிற் சிறந்த முருகன் (104), வேல் (105), மாலை (106), அநுபவ நிலைகள் (106), அறிவும் அநுபவமும் (107), முயற்சியும் பலனும் (108), உடம்பு இறந்தது (109), உணர்ச்சி மரத்தல் (110), படிப்படியாக (111), நினைவும் உணர்வும் (111), நிர்க்குணம் (113),

## அருளும் பொருளும் (116 – 130)

கோபமும் இரக்கமும் (116), வாழத் தெரிந்தவர்கள் (117), கோழிக் கொடியன் நினைவு (118), அருளா, பொருளா? (119), வாழ்வு என்பது என்ன? (120), பொருளால் வாழ்வு உண்டா? (121), பொருள் தொடர்ந்து வருமா? (121), வல்வினை நோய் (122), நல்வினை நலம் (123), வல்வினையின் விளைவு (123), ஊழின் வகை (124), கைக்கு எட்டியது (125), பொன் புளிவிளங்காய் ஆதல் (127), புதைத்து வைத்தல் (128)

# 2. மரணம் இல்லா வாழ்வு


## மரணம் இல்லா வாழ்வு (137 – 155)

மரணம் தவிர்க்க முடியாதது (137), பிரமாதம் (137), மரணம் என்பது யாது? (138), மரணத்துக்கு அஞ்சாதவர்கள் (139), அச்சத்துக்குக் காரணம் (140), கரும்பு போட்டவன் (141), விடுதலையும் சிறை மாற்றமும் (143), யமகிங்கரரும் கணங்களும் (144), பரிபூரணம் (145), பயண முடிவு (145), மங்கல மரணம் (146), வாய்த்த துணை (147), குழந்தையின் உவகை (148), போதணிந்த திருவடி (149), வீரப்புகழ் (150), தாலி காத்தவன் (150), கிருபை வழங்குவான் (152), ஞானாகரன் (152), தேவ சூரியன் (152), மரணம் இல்லா வாழ்வுக்கு வழி (154)

## வள்ளியை வேட்டவன் (156 – 170)

கூந்தற் பூ (157), முத்தமிழ் (158), முருகனது தமிழ்க் காதல் (159), பழைய நினைவு (160), குற்றம் காணா அன்பு (161), தமிழ்நாடும் முருகனும் (161), கார்த்திகேயன் (162), பரிபாடலில் கண்ட செய்தி (163), நிந்தாஸ்துதி (165), காளமேகத்தின் பாடல் (165), மாமன் புகழ் (166), ராவண சங்காரம் (167), உமை குமரன் (169)

## பலித்த விண்ணப்பம் (171 – 191)

ஆனந்த வாழ்வு (171), அநாயாச மரணம் (172), வாழ்க்கையில் இன்பம் (172), இறைவனை உணர்தல் (173), வேண்டுகோள் (174), திருச்செங்கோடு (174), அர்த்த நாரீசுவரர் (175), செங்கோட்டு வேலவன் (175), அருணகிரியார் ஈடுபாடு (176), செழுஞ் சுடர் (177), சேய்மையும் அணிமையும் (179), செங்கோட்டின் பெருமை (180), அடையாளம் (181), பீடிகை (182), நாம் வாழும் குடிசை (183), குலையும் வீடு (183), வருமுன் காப்போன் (184), விளக்கும் ஆயுதமும் (185), தோன்றாத் துணை (186), முருகன் கருணை (187), இந்த வேண்டுகோள் (188), பலித்தது (189), இதுவும் அதுவும் (190)

## வெளியான இரகசியம் (192 – 209)

நயமான சரக்கு (192), குட்டு வெளிப்பட்டது (193), செட்டியார் (195), ஏரகத்துச் செட்டியார் (195), முருகன் சொன்ன இரகசியம் (197),

உபதேசம் (199), அருணகிரியார் பெற்ற பேறு (200), இரகசியம் வெளிப்பட்டது (200), குறிப்பு (202), அதுவும் இதுவும் (203), வள்ளி திருமணம் (205), சோதனையும் போதனையும் (206), அநுபவ ஒற்றுமை (207)

### 5. அந்தகா! வந்துபார்! (210 - 231)

அதிசயம் (210), அஞ்சுதலும் விஞ்சுதலும் (211), அருணகிரியார் செய்த புதுமைகள் (211), அச்சத்தைப் போக்கும் வழி (213), மெஸ்மெரிஸம் (214), நினைப்பில் வலிமை (214), தண்டமும் சூலமும் (217), அவர் பெற்ற ஆயுதம் (218), செந்தில் வேலன் (218), தொண்டும் ஞானமும் (219), பக்தி, கர்மம், ஞானம் (220), மூன்று வகை மக்கள் (222), சீவன் முக்தன் செயல் (226), அவிரோத ஞானம் (227), இறைவன் தொண்டும் உயிர்களிடம் அன்பும் (228), "வந்து பார்" (228), வீரம் (230)

### 6. காலத்தை வெல்லுதல் (232 - 251)

வாழாத வாழ்வு (232), லாப நஷ்டக் கணக்கு (234), அரசனும் மந்திரியும் (235), இரண்டு மந்திரிகள் (236), உடம்பின் குறை (238), பயனுள்ள வாழ்வு (238), பற்றுவதே பற்றுதல் (239), காலத்தைக் கொல்லுதல் (240), சீலம் (242), குருநாதன் (243), கோலக் குறத்தி (244), எப்போதும் வருவான் (245), உபதேசம் (247), காலத்தை வெல்லுதல் (248), யோகம் (249), வெறும் கர்மிகள் (249)

## 3. காலையும் மாலையும்

### 1. காலையும் மாலையும் (259 - 280)

பலவகை உபாயம் (259), பலவகை வழிபாடுகள் (260), காட்சியும் பதிவும் (261), கண்ணும் கருத்தும் (263), என்ன பயன்? (264), யம பயம் (265), அறிகுறிகள் (260), படம் எழுதுதல் (267), காலையும் மாலையும் (267), கடைசி நினைவு (269), காக்கைக்குச் சோறு (271), உண்டுகாட்டி (271), இறக்கும்போது நினைவு (272), இறைவன் திருக்கோலம் (273), கந்தவேள் (274), வெட்சி மாலை (274), கொடி முதலியன (276), ஆறு பொருள்கள் (278), குறிப்பு (278), அநுபவத்தால் உணரல் (279)

## 2. கண்டமும் அகண்டமும் (281 – 300)

அநுபவத்துக்கு முன் (281), நம்பிக்கை (282), உருவ வழிபாடு (283), இணைப்புப் பாலம் (284), சோலையின் ஓவியம் (284), சிறைப்பட்டவன் காணும் காட்சி (285), விடுதலைக்குப் பின் (286), கண்டமும் அகண்டமும் (288), கோயிலில் காணும் காட்சி (288), எண்ணும் அநுபவமும் (290), அநுபவ வளர்ச்சி (291), வேல் விளங்கும் கை (291), வீழ்ந்து இறைஞ்சுதல் (293), இறைஞ்சுவதால் பயன் (294), மால் கொள்ளுதல் (296), சொல்ல அரியது (296), எவ்வாறு புகல்வது? (297)

## 3. கடலும் புணையும் (301 – 322)

அருணகிரியார் கருணை (301), மிகுதியாக உள்ள நோய் (301), மனத்தில் வரும் நோய் (302), காம மென்னும் நோய் (303), காமம் என்ற சொற் பொருள் (304), நேர்மையான காமம் (304), வாழ்க்கைத் துணை (305), கடமையும் இன்பமும் (306), பரம்பரை வளர (307), தசரதன் விருப்பம் (307), தருமியின் வேண்டுகோள் (308), உண்மை அன்பு (309), காமத்தை வெல்ல வழி (310), காம மென்னும் கடல் (311), இருவகைக் காமம் (311), சீதையின் பண்பு (312), சித்ர மாதர் (313), தெப்பம் (314), முரண்பாடா? (314), காணும் வழி (314), பேராண்மை (315), லட்சுமணன் இயல்பு (316), திருக்கோவையாரில் உள்ள காட்சி (317), அம்மையும் அப்பனும் (320), குமாரனும் மாரனும் (321)

## 4. சொல்வதும் சொல்ல வேண்டுவதும் (323 – 341)

முயற்சியும் அநுபவமும் (323), செட்டியார் விருந்து (324), பலவகைப் பயிற்சி (324), மனநலம் (326), சூர்தாஸ் (327), முயற்சியும் பண்பும் (328), மனமும் பொறிகளும் (329), மடை மாற்றுதல் (331), அநுபவ வேறுபாடு (331), குழந்தையும் பசியும் (332), செருப்பு நினைவு (333), நினைவு முந்துதல் (333), மூன்று முறிவு (334), எதிர் நிரனிறை (336), அவகாமமும் சிவகாமமும் (337), வரகுணன் வரலாறு (338), எங்ஙனம் காண்பது (339)

## 5. குடிலும் வீடும் (342 – 354)

பொறி இன்பம் நிலை அன்று (342), முதுமையும் தளர்ச்சியும் (342), மூன்று குளங்கள் (343), உடம்பை வெறுத்தல் (344), உடம்பை

விடாமை (345), உடம்பு நோயும் மன நோயும் (347), பிறவித் துன்பம் (347), மரணத்துக்கு அஞ்சாதவர்கள் (349), அருணகிரியார் வேண்டுகோள் (350), திருவடியே வீடு (350), சூர சங்காரம் (351)

## 6. கண்ணும் வேலும் (355 – 368)

தவத்தின் இலக்கணம் (355), தவ முனிவரின் படைகள் (355), மன வலிமை (356), தாக்கும் படை (356), விசுவாமித்திரர் கதை (357), வதைக்கும் கண்ணார் (361), அவர் கருணை (362), நச்சுக் கண் (363), ஞான சக்தி (364), குழந்தை உள்ளம் (364), வேற் கந்தன் (365), வெள்ளோட்டம் (366)

# முகவுரை

அருணகிரிநாதர் முருகனுடைய திருவருளால் புலமை பெற்றவர்; கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர்; அவன் திருவரு ளால் பிரபஞ்சச் சேற்றைக் கழுவித் தூய ஆனந்த வாரியில் ஆழும் பேறு பெற்றவர்; தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெற வேண்டும் என்ற கருணை உடையவர். அந்தக் கருணையினால் பாடிய பாடல்களே திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி முதலியவை.

தமக்குப் புலமை முருகன் திருவருளால் வந்ததென்பதைப் பல இடங்களில் அவர் சொல்கிறார். கந்தர் அலங்காரத்தில், முருகன் சிற்றடி, ''என்பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ?'' என்று பாடுகிறார். அவர் சொல்லுகிற அடி ஏடு அவருடைய உள்ளம். முருகனுடைய சின்னஞ்சிறிய குழந்தைத் திருவடி அவர் உள்ளத்திலே பதிந்ததாம். அதிலிருந்து பாக்கள் வந்தனவாம். கந்தர் அநுபூதியில்,

''யாம்ஓ தியகல் வியும்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்''

என்று பாடினார். அவர் உள்ளத்தில் இறைவன் திருவடி பட்டது. அதன் விளைவாக அவர் நாவின் வழியே பாக்கள் வெள்ளமாகப் பெருக்கெடுத்தன.

முருகன் திருவருளால் பெற்ற புலமையை அவனுக்கே அர்ப்பணமாக்கினார்.

''அருணதள பாதபத்மம் அதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா''

என்று பாடுகிறவர் அல்லவா?

இந்தப் புத்தகத்தில் ''தாவடி யோட்டு மயிலிலும்'' என்ற கந்தரலங்காரப் பாட்டு இருக்கிறது. அதில்தான் ''என் பாவடி யேட்டிலும் பட்டதன்றோ?'' என்று பாடுகிறார்.

இந்தப் புத்தகத்தில் ஏழு அலங்காரப் பாடல்கள் உள்ளன. அருணகிரியாரின் இயல்புகளை உணர இந்த ஏழு பாடல்களும் உதவுகின்றன. அருட்புலமை பெற்ற அவருடைய பக்தித் திறத்தையும், கருணைப் பெருக்கையும், அநுபவ முதிர்ச்சியையும் காண்கிறோம். முருகன் அருளால் தாம் பாடும் ஆற்றல் பெற்றதையும், எல்லாவற்றையும் மறந்து நிற்கும் அநுபவம் பெற்றதையும் பாடுகிறார்.

''நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம் ஒருங்கிய
நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந்தேன்! இறந்தே
விட்டது இவ்வுடம்பே''

என்ற அநுபவம் மிக மிக உயர்ந்தது. உலகில் உள்ள மக்களிடம் பற்றையும், பொருள்களிடம் ஆசையையும் வைத்த மனம் முருகனை நிலையாக நினைக்கக்கூடத் தெரிந்து கொள்ள வில்லை. ஒரு கணத்தில் எண்பது கோடி நினைந்து எண்ணும் வேகம் உடையது அது. அத்தகைய மனம் ஒன்றையே நினைப்பது அருமை. நினைந்து நினைந்து பழகிப் பின்பு ஒன்றை உணர்வது பின்னும் அருமை. முருகனை உணர்ந்து உணர்ந்து உள்ளத்தின் ஆற்றல் முழுவதும் ஒருமுகப்பட்டால் உள்ளமே நின்றுவிடுகிறது; தன்னையே மறக்கும் நிலை வருகிறது; அங்கே உடம்புக்கு என்ன வேலை?

இந்த அநுபவம் அருணகிரிநாதருக்குக் கிடைத்தது. நமக்கும் இது கிடைக்காதா என்று அன்பர்களுக்கு ஆர்வம் உண்டாக வேண்டுமென்றே இதைச் சொல்கிறார்.

இத்தகைய அநுபவத்தை நுகர்ந்த அவர் இனிப் புதிதாகப் பெறப் போகிறவரைப் போல, மனத்தைப் பார்த்து ஒரு பாட்டில் பேசுகிறார். பக்குவம் பலவகை. முருகன் திருவடியிலே அன்பு வைத்து உருகும் ஒருவன் தன் மனத்தைத் துணையாக்கிக் கொண்டு இன்ப நிலையை அடைய முயலுகிறான். அவன் சொல்வது போல இருப்பது அந்தப் பாட்டு. 'இக்கரை கடந்து வேலாயுதனைத் துணைக்கொண்டு அக்கரைக்குப் போகலாம் வா, மனமே' என்று அழைப்பவர் போலப் பாடுகிறார்.

''அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச்
சும்மா இருக்கப்
போதாய் இனி மனமே''

என்று சொல்கிறார்.

தம்முடைய நிலை மிக உயர்ந்ததாக இருந்தாலும் மற்றவர் களையும் உயர்த்த வேண்டும் என்ற கருணை உள்ளவர் அருண கிரிநாதர். அவர்கள் நிலையையே தமதாக எண்ணிப் பாடும் இடங்கள் பல. சற்றே உயர்ந்த பக்குவ நிலையில் இருப்போர் பாடுவதாகச் சொன்னது மேலே சொன்ன பாட்டு. பெரும்பாலான மக்கள் அந்த நிலையில் இல்லை. பாசத்துட் கட்டுப்பட்டு ஐம்பொறிகளின் போக்கிலே மனத்தை அலைய விட்டுச் சுழன்று திரிகிறவர்களே பலர். அவர்களுக்கும் முருகன் அருள் கிடைக்க வேண்டும். அவர்களோ தமக்கு இன்ன அல்லல் வந்திருக்கிறது என்பதையே தெரிந்து கொள்ளாமல் உழல்கிறார்கள்; ஐம்பொறி களுக்கு அடிமையாகி உலக அரங்கில் ஆடுகிறார்கள்.

வாழ்க்கையை நாடகமாகச் சொன்னவர்கள் உண்டு. அருண கிரியாரும் ஒரு வாழ்க்கைக் கூத்தைக் காட்டுகிறார். ஒருவர் திரைக்குப் பின் இருந்து ஆட்டப் பாவைகள் ஆடும் கூத்து ஒன்று உண்டு; அதற்குப் பாவைக் கூத்து என்று பெயர். ஐந்துபேர் ஆட்ட ஒரு பாவை ஆடுகிற கூத்து வாழ்க்கைக் கூத்து. நெஞ்சாகிய ஒன்று ஐவருடைய செயலுக்கு உட்பட்டுச் சுழலுகிறது. 'இத்தகைய கூத்துக்கு ஆட்பட்டு நான் திண்டாடுகிறேன்; என்னை ஈடேற்ற வேண்டும், முருகா!' என்று வேண்டுகிறார் அருணகிரியார்.

''குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
ஐவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்றுவாய்''

என்பது அந்த வேண்டுகோள். 'நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு, என்னை மறந்திருந்தேன்' என்று சொன்னவரே இப்படிச் சொல்கிறார். இந்தப் பிரார்த்தனைப் பாட்டு, கந்தரலங்காரத்தில் 14-ஆவது பாட்டு. ''என்னை மறந்திருந்தேன்'' என்ற அநுபவப் பாட்டு 19-ஆவது பாடல்.

'14–ஆவது பாட்டுப் பாடுகிறபோது அப்படி இருந்தார். 19–ஆவது பாடலைப் பாடுகையில் உயர்ந்துவிட்டார் என்று சொல்லலாமா? இதற்கு முன்பும் இத்தகைய அநுபவங்களைச் சொல்லியிருக்கிறார். கந்தர் அலங்காரத்தின் முதற் பாட்டே,

''பிரபஞ்சம் என்னும்
சேற்றை கழிய வழிவிட்டவா!''

என்றல்லவா சொல்கிறது? பிரபஞ்சச் சேற்றை இறைவன் அருள் நீரினால் கரைத்துப் போக்கிவிட்டவர் அருணகிரிநாதர், அவருக்குப் பாச நெஞ்சு ஏது? ஐவரினால் சுழற்சி ஏது?

உலக வாழ்க்கையில் ஈடுபட்டு ஐவர் அடிக்கும் கூத்திலே சிக்கிச் சுழலும்த மனமுடையார்களுக்காகப் பாடிய பாட்டு இது. அவர்கள் வாயில்லாப்பூச்சிகள் என்ற இரக்கத்தால், அவர் களுக்காகப் பாடியது; அவர்களைத் தாமாகவே கருதிப் பாடியது. இத்தகைய வேண்டுகோட் பாடல்களை நாம் முருகன் சந்நி தானத்துக்குச் சென்று வழிபடும்போது பாடி உருக வேண்டும்.

இப்புத்தகத்தில் உள்ள பாடல்களில் இரண்டு அருணகிரியார் தாம் பெற்ற பேற்றைச் சொன்னவை; ஒன்று தம் மனத்தை நோக்கிச் சொல்வதாக அமைந்தது; மற்றொன்று பிரார்த்தனையாக உள்ளது. எஞ்சிய மூன்றும் உலகத்தவரைப் பார்த்து இன்னவாறு ஒழுகுங்கள் என்று உபதேசம் செய்யும் முறையில் இருப்பது. அறம், பொருள், வீட்டுநெறி என்ற மூன்று திறத்தில் இந்த உபதேசங்கள் அமைந்துள்ளன. தாம் ஈட்டியவற்றைப் பிறருக்கும் பகிர்ந்தளிக்கவேண்டும் என்று சொல்கிறார். ஈகை என்பது பொருள் நிரம்பியவருக்கு மாத்திரம் உரியதன்று. யாரும் அறம் செய்யலாம். தாம் தாம் பெற்றதைப் பிறருக்கும் இட்டு உண்ணு வதே அறம். தாம் உண்ணுவது சிறிதாயினும் அதிலும் ஒரு சிறு பங்கைப் பிறருக்கு வழங்க வேண்டும். இந்தக் கருத்துக்களை இரண்டு பாடல்களில் வெளியிடுகிறார்.

''தானம் என்றும் இடுங்கோள்''

என்று பொதுவாகச் சொன்னவர்,

"வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி
வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்"

என்று வசதியில்லாதவர்களும் அறம் செய்யும் முறையைச் சொல்லித் தருகிறார்.

பொருளைப் பிறருக்கு ஈவதுதான் அதனை ஈட்டுவதற்குப் பயன். ஈயாமல் ஈட்டித் தொகுக்கும் பொருளாலே இம்மையிலும் பயன் இல்லை; மறுமையிலும் பயன் இல்லை.

"வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின்
வெறுநிழல் போல்
கையில் பொருளும் உதவாது காணும்
கடைவழிக்கே"

என்றும்,

"உங்கள் வல்வினை நோய்
ஊழிற் பெருவலி உண்ணவொட்
டாது உங்கள் அத்தம் எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு,
மோநும் அடிப்பிறகே"

என்றும் பாடுவது காண்க.

உலகில் நன்றாக வாழவேண்டுமானால் முருகனைப் பணிந்து அன்பு செய்ய வேண்டும் என்று எதிர்மறைமுகமாகக் குறிப்பிக்கிறார்.

"கோழிக் கொடியன் அடி பணி
யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள்!"

அமைதியுடைய வாழ்வே வாழ்வாகையால், அமைதியைத் தரும் இறையன்பு வாழ்க்கைக்கு இன்றியமையாதது. நன்றாக வாழ்வதாக எண்ணுகின்ற வாழ்க்கை வெறும் போலி வாழ்க்கை; இறுதியில் சாவிலே முடியும் வாழ்க்கை; வளர்த்த ஆசைகளையும் வளர்த்த உறவுகளையும் வளர்த்த தாபனங்களின் மேல் உள்ள பற்றையும் வளர்த்த உடம்பையும் சுடுகாட்டிலே பொசுக்கிவிடும் வாழ்க்கை.

இங்கே தொடங்கின முயற்சி அங்கே பலிக்க வேண்டும். அத்தகைய வாழ்வே வாழ்வு. அல்லாதது வாழ்வு அன்று.

''வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய், ஆழாமற் காப்பானை ஏத்தாதே''

என்று மணிவாசகர் பேசுகிறார். நெஞ்சம் தான் நன்றாக வாழ்வ தாகவே எண்ணி ஏமாந்து நிற்கிறது. ''இது வாழ்வு அன்று; திடீ ரென்று அற்றுவிடும் கனவு. இந்த வாழ்வு பின்வரும் நீடிய இன்ப வாழ்வுக்கு வேராக, வித்தாக இருக்க வேண்டும். வல்வினைப் பட்டு ஆழாமல் காப்பானை ஏத்துவதே அதற்கு வழி'' என்று மணிவாசகர் சொல்வதையே அருணகிரியார், ''கோழிக்கொடியன் அடிபணியாமல் வாழ்ந்துவிடலாம் என்று மதிமோசம் போகிறவர் களே!'' என்று வேறு வகையில் சொல்கிறார். ''கோழிக்கொடியன் அடிபணியுங்கள்; நீங்கள் நன்றாக வாழலாம்'' என்ற உபதேச மாகவே அதைக் கொள்ளவேண்டும்.

பின்னும் சில உபதேசங்களை அருணை முனிவர் இந்தப் பாடல்களில் சொல்கிறார். தானமும் தருமமும் செய்து, கோழிக் கொடியன் அடிபணியச் சொன்னவர் மனத்தைப் பண்படுத்தும் வழியையும் சொல்கிறார். மனம்போன போக்கிலே திரிந்து அதற்கு அடிமையாகிவிட்டால் நமக்கு மீட்சி இல்லை. அதன் போக்கிலே முட்டுக்கட்டை போடவேண்டும். வெகுளியைப் போக்க வேண்டும். சிறிதும் சலியாமல், 'அது வேண்டும்; இது வேண்டும்' என்று அலையாமல், 'ஐயோ இது கிடைக்குமா!' என்று ஏங்காமல், இருந்தபடி இருக்க வேண்டும்.

''தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
வெகுளியைத்; தானம் என்றும்
இடுங்கோள்! இருந்தபடி இருங்கோள்''

என்னும் பொன்னான உபதேசத்தை அருணகிரியார் கூறுகிறார்.

முருகனுடைய திருக்கோலத்தையும், அவனுடைய வீர விளையாடலையும் சொல்லாவிட்டால் இது கந்தருடைய அலங் காரம் ஆகாதே! அவற்றை அங்கங்கே இணைத்து இணைத்துப் பாடுகிறார். அவன் கை ஆறு இரண்டு உடையவன்; சண்முகன்; அவன் திருமார்பில் கடம்ப மலர்மாலை விளங்குகிறது.

அவன் திருவடி தாமரை மலரைப் போன்றது. அந்தப் பாதாரவிந்தங்களில் அடியார்கள் அருச்சித்த வெட்சி மலர் பொலிவு பெற்றுத் தோன்றுகிறது. தண்டையை அணிந்த திருவடி அது. அதனை அடியார்கள் அரணாகப் பற்றிக் கொள்கிறார்கள். அது தாவடி ஓட்டும் மயிலின் மேல் அமர்கிறது; தேவர் தலையிலே படுகிறது; அருணகிரியார் பா அடியேட்டிலே பதிகிறது.

அவன் திருக்கரத்தில் வேல் விளங்குகிறது. அது கூர்மையான வேல். வேதமும் ஆகமமுமே முருகன் கையில் வேலாக விளங்கு கின்றன. அழகுடைய அந்தச் சித்திர வேலால் அவன் சூரனுடைய மார்பையும் கிரவுஞ்ச மலையையும் துளைத்தான். கிரவுஞ்ச மலை சொன்னமயமானது. அதனை ஊடுருவிச் சென்றது அந்தக் கதிர்வேல்.

அவன் தன் திருக்கரத்தில் கோழிக் கொடியைப் பிடித்திருக் கிறான்.

குழந்தை முருகன் தன் பன்னிரண்டு கைகளாலும் சப்பாணி கொட்டுகிறான். அப்போது எட்டுத் திக்கிலும் உள்ள மலைகள் பிளந்து பாதி பாதியாய் விழுகின்றன; மேருமலை குலுங்குகிறது. ''நாங்கள் பிழைத்துப் போனோம்'' என்று தேவர்கள் குதுகலிக்கிறார்கள்.

ஒரு பாட்டில் முருகப் பெருமானுடைய மாமா வருகிறார். வாமனராகவும் திரிவிக்கிரமராகவும் வருகிறார்.

''மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்''

என்று திருமாலைக் காட்டிப் பின்பு அவனுடைய மருகனாகிய முருகனைக் காட்டுகிறார்.

★

இந்தச் சொற்பொழிவுகளில் பாடல்களின் விளக்கம் விரிந்து நிற்கிறது. பல பெரியார்கள் சொன்ன கதைகளை இடையிடையே சொல்லியிருக்கிறேன். இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய கதைகள் வரும். டால்ஸ்டாய் கதை வரும். புதிய கதையும் வரும். அப்படியே பழைய உவமைகளும் புதிய உவமைகளும் விரவி யிருப்பதைக் காணலாம். நுட்பமாக உள்ள கருத்தைச் சொற்

பொழிவில் விளக்கும் போது இவைகளெல்லாம் உபகாரமாகின்றன.

சில இடங்களில் மேற்கோளாகக் காட்டும் பாடல்களுக்கும் விளக்கம் கூறியிருக்கிறேன். திருக்குறட் பாக்களும் திருவாசகப் பாடலும் இப்புத்தகத்தில் விளக்கம் பெறுவதைக் கண்டு, மற்றொன்று விரித்தல் என்று அன்பர்கள் கொள்ள மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். சொல்ல வந்த கருத்துக்கு உபகாரமாக உள்ள அப்பாடல்களின் பொருள் தெளிவாகத் தெரிந்தால்தான் எடுத்துக் கொண்ட கருத்தோடு ஒப்பு நோக்க இயலும்; ஆதலால் விளக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று.

கந்தர் அலங்காரப் பாடல்கள் இலக்கியச் சுவைக்காக மாத்திரம் படிப்பவை அல்ல; அருணகிரியார் பெருமையை உணர்ந்து பாராட்டுமளவில் நிற்பதற்காகவும் இவற்றைப் படிக்கக் கூடாது. நம்முடைய வாழ்க்கைக்குப் பயன்படும் கூறுகள் இவற்றில் உண்டா என்று ஆராய்ந்து, அவற்றை மேற்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தைச் சொற்பொழிவுகளில் அவ்வப்பொழுது வற்புறுத்தி வருகிறேன். இந்தப் புத்தகத்தில் உள்ளவற்றிலும் அத்தகைய இடங்கள் சில இருக்கும்.

★

வழக்கம் போல் இந்தச் சொற்பொழிவுகளை எழுத்து வடிவம் எடுக்கும்படி செய்யும் அன்பர் ஸ்ரீ அனந்தன் அவர்கள் உதவி நீளுகிறது; அதனால் புத்தக வரிசையும் நீண்டு வருகிறது.

தேனாம்பேட்டைக் கோயில் தர்மகர்த்தர்களுடைய பேரார்வமும் கேட்கும் அடியார்களுடைய அன்பும் இணைந்து இச்சொற்பொழிவுகளை நன்றாகச் செய்ய வேண்டும் என்ற ஊக்கத்தை எனக்கு அளிக்கின்றன.

எழுத்தாக வடிவெடுத்த சொற்பொழிவுகளைப் புத்தகமாகத் திரட்டிக் கோலம் செய்யும் உதவியை அமுத நிலையம் மேற்கொண்டிருக்கிறது. அதன் தலைவர் ஸ்ரீ. ரா.ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள் அன்பே இதனைச் செய்விக்கிறது.

எல்லோருக்கும் நன்றி.

**கி.வா. ஜகந்நாதன்**
04.12.1956

# வாழ்க்கைக் கூத்து

# வாழ்க்கைக் கூத்து

முருகப் பெருமானுடைய பெருமையை அலங்காரமாகச் சொல்லிவருகிறார் அருணகிரியார். எம்பெருமான் மெல்ல மெல்லத் தவழ்ந்து வர, அவன் இடையில் கட்டப்பட்டுள்ள கிண்கிணி ஒலிக்கிறது. அந்த நாதத்தினாலே மேரு மலையும், ஏனைய எட்டுக் கிரிகளும் அசைகின்றன. அதனை முன்னே சொன்னார். அந்தப் பெருமான் சற்று வளர்ந்துவிட்டான். இப்பொழுது எழுந்து உட்கார்ந்து கொண்டான்; உட்கார்ந்து கொண்டு கையைத் தட்டுகிறான்.

## குழந்தைப் பருவம்

குழந்தைகள் வளரும்போது ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு விளையாட்டுச் சிறப்பாக இருக்கும். குழந்தை பிறந்த ஒன்பதாம் நாள் அதற்குக் காப்பு இடுவார்கள்; தெய்வங்கள் இந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி, வேப்பிலைக் காப்பும், தங்கக் காப்பும், வெள்ளிக் காப்பும் இடுவார்கள். அந்தப் பருவத்தைப் பிள்ளைத் தமிழில் வருணிப்பார்கள் புலவர்கள். அதுவே காப்புப் பருவம். அடுத்தபடி தொட்டில் இடுவார்கள். தொட்டில் இட்டுத் தாலாட்டுப் பாடும் பருவத்திற்குத் தாலப் பருவம் என்று பெயர். குழந்தை 'இங்கு இங்கு' என்று சொல்லும்; பூமியில் படுத்துக் கொண்டு நீந்தத் தொடங்கும். இந்தப் பருவத்திற்குச் செங்கீரைப் பருவம் என்று பெயர். பின்பு குழந்தை எழுந்து உட்கார்ந்து கொண்டு இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டும். அது சப்பாணிப் பருவம். பாணி என்பது கை. கையோடு கை சேர்த்துத் தட்டுவதனால் அப்பெயர் வந்தது. அடுத்தது முத்தந் தா என்று கேட்கும் முத்தப் பருவம். வா, வா என்று அழைப்பது வருகைப் பருவம். இப்படியே பத்துப் பருவங்கள் உண்டு.

இப்போது அருணகிரியார் சப்பாணிப் பருவத்தைப் பாடுகிறார். முருகன் சப்பாணி கொட்டுகிறதனால் விளையும் விளைவைச்

சொல்கிறார். சென்ற பாட்டிலே அவன் இடையி லுள்ள மணி யின் ஓசையை எடுத்துக் காட்டினார். இந்தப் பாட்டிலே அவன் கை ஓசையை எடுத்துக் காட்டுகிறார்.

குழந்தை சற்றே வளர்ந்து உட்காரத் தெரிந்து கொண்ட பிறகே இரண்டு கைகளையும் ஓசை எழும்படி தட்ட இயலும். பிறந்த குழந்தைக்குக் கை விரிவது இல்லை. பற்றிக் கொண்டு இருக்கும். முருகக் குழந்தை சற்று வளர்ந்துவிட்டான். மூடி இருக்கிற கையை விரித்துத் தட்டி, சப்பாணி கொட்டி விளையாடுகிறான்.

## பிரார்த்தனை

இந்த விளையாட்டைச் சொல்வதற்கு முன்னே அருண கிரியார் பிரார்த்தனை செய்து கொள்கிறார்; சப்பாணி கொட்டும் குழந்தையைப் பார்த்துத்தான். மற்றக் குழந்தைகள் இரண்டு கை களினாலே சப்பாணி கொட்டும். அவன் ஆறுமுகமும், பன்னிரண்டு திருக்கரங்களும் உடையவன். ஆகையால் தன்னுடைய பன்னிரண்டு திருக்கரங்களினாலும் சப்பாணி கொட்டி விளையாடுகிறான். அவனைப் பார்த்து வேண்டுகிறார்.

**குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்**
**ஐவரில் கொட்புஅடைந்த**
**இப்பாச நெஞ்சனை ஈடேற்றுவாய்!**

## பொம்மலாட்டம்

ஒரு பெரிய மேடை. அதில் திரை விட்டிருக்கிறார்கள். பொம்மலாட்டம் நடக்கிறது. பழங் காலத்திலிருந்து வரும் கலை பொம்மலாட்டம். மேடைகளில் பொம்மைகளே வந்து ஆடும். கையைத் தட்டும். ஆணும் பெண்ணும் கையைக் கோத்துக் கொண்டு நடனம் ஆடும். திரைக்கு முன்னாலே மேடையில் வந்து பொம்மைகள் ஆடும்: அந்தப் பொம்மைகள் இயங்குவதற்குக் காரணமாய் இருப்பவன் திரைக்குப் பின்னால் இருப்பான். பொம்மையின் கை, கால், தலை ஆகியவை ஆட வேண்டுமானால் அதை ஆட்டுவிக்கின்றவனுடைய கை, கால், தலை திரைக்குப் பின்னால் ஆடும். பொம்மைகளின் ஆட்டம் அத்தனையும் பின்னால் இருக்கிற மனிதனுடைய ஆட்டத்தை ஒத்தே நிகழும். அவன் ஆடாவிட்டால் அந்தப் பொம்மைகள் ஆட மாட்டா.

அவன் ஆடும் போது அந்தப் பொம்மைகள் எப்படி ஆடுகின்றன? மிகவும் மெல்லிய கறுப்புக் கயிற்றினால் பின்னால் ஆடுகின்ற மனிதனுக்கும் அந்த பொம்மைகளுக்கும் தொடர்பு இருக்கும். அவன் கையையும் காலையும் ஆட்டும் போது அந்தப் பொம்மையின் கையும் காலும் ஆடும். இந்த இரண்டு பேரையும் இணைக்கும் பொருள் கயிறு. கயிற்றை வடமொழியில் பாசம் என்பார்கள். பின்னால் இருக்கிற ஆளுக்கும், முன்னால் இருக்கிற பொம்மைகளுக்கும் பாசம் ஆகிய கயிறு தொடர்பாக இருப்பதால் அந்த மனிதன் இந்தப் பொம்மைகளை எல்லாம் ஆட்டி வைக்கிறான். பொம்மைகள் ஆடுவதற்கு இரண்டு காரணங்கள். ஒரு காரணம் பின்னால் இருக்கிற மனிதனது ஆட்டம். மற்றொரு காரணம் அவனுக்கும், பொம்மைகளுக்கும் இடையில் தொடர்பாகவுள்ள கயிறு.

## கயிறு அறுந்தது

ஒரு கதை இங்கே நினைவுக்கு வருகிறது. நன்றாகப் பாடுகின்ற வித்துவான் ஒருவன் ஓர் அரசனிடம் வந்தான். அரசன் சங்கீதம் என்றால் பலம் எத்தனை விலை என்று கேட்கிறவன். சங்கீத வித்துவான் பாடும்போது தன் அறியாமையைக் காட்டிக் கொள்ளாமல் இருகக வேண்டுமென்று அரசன் நினைத்தான். தன் மந்திரியிடம், ''அந்தச் சங்கீத வித்துவான் பாடப் போகிறார். அவர் பாடும் போது எங்கே மிக நன்றாக இருக்கிறதோ அங்கே தலையை அசைக்க வேண்டும். எனக்கு விஷயம் தெரியாது. என் தலையோடு சேர்த்து உன் தலையையும் ஒரு கறுப்புக் கயிற்றினால் கட்டிக் கொண்டு திரைக்குப் பின்னால் நீ உட்கார்ந்து கொள். நீ தலை அசைப்பதை அக்கயிற்றினால் நான் அறிந்து கொண்டு, நானும் தலையை அசைக்கிறேன்'' என்றான். அப்படியே மந்திரி செய்தான். வித்துவான் பாடும்போது அரசனும் அங்கங்கே தலை அசைத்து வந்தான். ஓர் ராகத்தை வித்துவான் மிக நன்றாகப் பாடும் போது, அந்தச் சுவாரசியத்தில் மந்திரி மிகவும் வேகமாகத் தலையை அசைத்தான். கயிறு அறுந்துவிட்டது. அரசன் வித்துவானைப் பார்த்து, ''கொஞ்சம் இரும். கயிற்றைக் கட்டிக் கொண்டு விடுகிறேன்'' எனச் சொல்லிவிட்டான். அங்கே கயிறு அறுந்த பிற்பாடு அவன் நாடகமும் அறுந்துவிட்டது; நடிக்க முடியவில்லை.

அப்படியே, பின்னால் இருக்கிற ஆளுக்கும், முன்னால் உள்ள பொம்மைகளுக்கும் இடையே தொடர்பாக உள்ள கயிறு அறுந்துவிட்டால், எவ்வளவுதான் பின்னால் இருக்கிற ஆள் ஆடினாலும், மேடையிலுள்ள பொம்மைகள் ஆடா. பொம்மைகள் ஆடவேண்டுமானால் கயிறு வேண்டும். ஓர் ஆள் பின்னால் நின்று கொண்டு கயிற்றின் மூலம் மேடையில் உள்ள பல பொம்மைகளை ஆடவைக்கிறான்.

அதற்கு மாறாக அருணகிரியார் இங்கே சொல்கிறார். பின்னால் ஐந்து பேர்கள் சேர்ந்து கொண்டு ஒரு பொம்மையை ஆட்டி வைக்கிறார்களாம். பின்னால் இருந்து ஆட்டுகின்றவர்களோ ஐந்து பேர். ஆடுவது ஒரு பொருள்.

இந்த ஆட்டம் நிகழும் மேடை எங்கே அமைந்திருக்கிறது? உலகம் என்ற மேடையிலே ஆட்டம் நடக்கிறது.

## கண்ணியில் சிக்குதல்

மிருகங்களை வேட்டை ஆடுகின்ற வேடர்கள் அவை நடமாடு கின்ற இடங்களில் எல்லாம் வலைகளைப் பரப்பி வைத்திருப் பார்கள். அவற்றில் மிருகங்கள் வந்து சிக்கிக் கொள்ளும். அவ் வண்ணமே இந்த உலகம் முழுவதும் எங்கே போனாலும் அங்கே நெஞ்சம் சிக்கிக் கொள்கிற கண்ணிகள் நிரம்பியிருக்கின்றன. நெஞ்சம் என்ற ஒன்று காலில் கத்தி கட்டிக் கொண்டு போனா லொழியக் கண்ட இடங்களில் எல்லாம் வீழ்ந்து சிக்கிக் கொள்ளும். அந்தக் கத்திக்கு ஞானம் என்று பெயர். பார்ப்பதற்கு நல்ல இடமாக இருக்கிறதே என்று கத்தி இல்லாமல் நெஞ்சம் அந்த இடத்திற்குப் போனால், அங்கே சிக்கிக் கொள்ளும்.

இறைவன் திருக்கோயிலை நாடிப் போனாலும் அங்கேயுள்ள கண்ணிகளில் சிக்கிக் கொள்ளும். அது எப்படி? எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுக் கோயில் கட்டி, கும்பாபிஷேகம் செய்து, மூர்த்திகளைச் சிலர் பிரதிஷ்டை செய் கிறார்கள்; அந்தக் கோயில்களின் கும்பங்களையும், மூர்த்திகளையுமே சிலர் திருடிக் கொண்டு போகவில்லையா? கோயிலுக்கு வந்தவன் கண்ணிகளில் சிக்கிக் கொண்டுதான் இம்மாதிரியான திருட்டுக் காரியங்களைச் செய்கிறான் என்பதை இந்த நிகழ்ச்சி காட்டுகிறது.

அறுபத்து மூவர் விழாவின் போது சிந்தாதிரிப் பேட்டை முருகன் வீதிவலம் வருகின்றான். முழுக்க முழுக்க வைரங்களி னாலேயே அம் முருகனை அலங்கரித்திருப்பார்கள். அதனாலேயே அவனை வைர முருகன் என்று சொல்வது வழக்கம். ஒரே வைரக் கற்களாலான நகைகளாகவே போட்டுக் கொண்டிருப்பான். நம்முடைய நாட்டில் பெண்களுக்கு நகை என்றால் கொஞ்சம் அதிக ஆசை. புன்னகையைவிடப் பொன்னகையின் மேல் ஆசை; அதைவிடக் கல் நகையின் மேல் ஆசை. இறைவனிடத்தில் அன்பு உடையவர்கள், ஞானம் ஆகிய கத்தியைக் கட்டிக் கொண்டிருக்கும் நெஞ்சமுடையவர்கள், அவனைத் தரிசித்து, '''சண்முகநாதரின் திருக்கோலந்தான் எத்தனை அழகு! இந்தக் குமரேசனது இரு தாளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், சண்முகமும், தோளும் கடம்பும் எனக்கு முன்னே சதா தோன்றிக் கொண்டே இருக்கக் கூடாவா?'' என நெகிழ்ந்து வேண்டுகிறார் கள். ஆனால் அங்கே வந்த ஒரு பெண் அங்கேயுள்ள கண்ணியில் சிக்கிக் கொள்கிறாள். ''எவ்வளவு பெரிய வைரப் பதக்கம் போட்டிருக்கிறது பார்த்தாயா? இது எத்தனை விலை இருக்கும்? நம் ஜமீன்தாரிணி அம்மாள் போட்டிருப்பதைவிடப் பெரியதாக இருக்கிறதே!'' என்கிறாள்.

இப்படி இந்த உலகம் முழுவதும் நல்ல இடமோ, பொல்லாத இடமோ எங்கே பார்த்தாலும் இந்தக் கண்ணி பரப்பப்பட்டிருக் கிறது. அதில் சிச்கிக் கொள்ளாமல் நெஞ்சம் தப்பிக் கொள்ள வேண்டுமென்றால் ஞானம் என்ற கத்தி வேண்டும். ஞானம் இருந்தால் கண்ணிகள் அறுபட்டுப் போகும். பெரும்பாலான நெஞ்சங்களுக்கு அது இல்லை. பாசவலைக்குள் சிக்கிக் கொள்கிற ஆற்றல்தான் இருக்கிறது.

அப்படிச் சிக்கிக் கொள்ளும்போது பின்னால் இருக்கிற ஐந்து பேர்வழிகள் அதை ஆட்டத் தொடங்குகிறார்கள். உலகமாகிய பெரிய மேடையில் பாசமாகிற கயிற்றால் நம்மைப் பிடித்துக் கொண்டு ஐவரும் ஆட்டி வைக்கிறார்கள்.

கயிற்றைச் சுற்றி மிக வேகமாக இழுத்துவிட்டால் பம்பரம் மிகவேகமாகச் சுழலுகிறது. அதைப் போல நெஞ்சம் சுழன்று கொண்டே இருக்கிறது. பாசமாகிற கயிற்றினால் சுற்றப்பட்டு ஐந்து பேர்களால் மிக வேகமாகச் சுழலுகிறது. ஓர் இடத்தில்

நிற்பதே இல்லை. ஒரே கணத்திற்குள் எத்தனையோ கோடி காதம் சென்று விடுகிறது மனம். சென்று சென்று சுழன்று கொண்டே இருக்கிறது.

## மனமும் அநுபவமும்

முன்னலே அநுபவித்த ஒன்றை நினைப்பதற்குத்தான் மனத்துக்கு ஆற்றல் உண்டு. ஐந்து பொறிகளென்னும் வாசல் வழியாக நமக்குப் பல அநுபவங்கள் வருகின்றன. கண்டு, கேட்டு, கண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்பொறிகளால் அநுபவிக்கிறோம். அந்த அநுபவத்தின் வாசனை மனத்தில் ஏறுகிறது. மல்லிகை மலரை எடுத்து மோந்து பார்க்கிறோம். பிறகு ஒரு சமயம், அந்தப் பொருள் கண் முன்பு இல்லாவிட்டாலும் ஒரு மல்லிகை மலரை எடுத்து மோப்பது போன்ற அநுபவத்தை நினைப்பால் மனம் பெறுகிறது. நல்ல ஜிலேபியைச் சாப்பிடுகிறோம். சாப்பிடுவது வாய்தான் என்றாலும், சாப்பிட்ட பிற்பாடு அதை மனம் நினைக்கிறது. வாசனை நுகர்கின்ற நினைவு வேறு; சங்கீதம் கேட்கின்ற நினைவு வேறு. நினைப்பு ஒன்றாக இருந்தாலும் அநுபவ வேறுபாட்டால் ஐந்து விதமான நினைப்புக்கள் அமைகின்றன. ஜிலேபியை வாயில் போட்டுக் கொண்டு சுவைப்பது சுவை; அதைப் பற்றி நினைப்பது நினைவு; அதுவே வாசனை. குழந்தையை அணைக்கிறமாதிரி நினைக்கிறோம். அழகான உருவத்தைப் பார்க்கிற மாதிரி நினைக்கிறோம். இப்படி ஐந்து பொறிகளின் அநுபவமான வாசனைகளும் மனத்தில் படிந்திருக்கும். மனம் ஐந்து பொறிகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்றை நினைக்க முடியாது. ஐந்து பொறிகளுக்கும் உட்பட்ட அநுபவத்தையே நாம் நினைக்கிறோம். முன்பின் பார்த்திராத மனிதன் ஒருவனைச் சொப்பனத்தில் பார்க்கிறோமே, அது எப்படி? பார்க்காத மனிதனைச் சொப்பனத்தில் பார்த்தேன் என்று சொன்னாலும், மனிதன் என்ற பொருளை நாம் பார்த்துப் பார்த்துப் பழகியிருக்கிறோம் அல்லவா? மனத்தில் இத்தகைய அநுபவம் படலம் படலமாகச் செறிந்திருக்கிறது.

## பதிவும் வாசனையும்

அமெரிக்க நாட்டில் குற்றவாளியையும், நோயாளியைப் போலவே கருதி, மருத்துவத்தின் மூலம் அவனது குணத்தை

மாற்றலாம் என்று கண்டிருக்கிறார்கள். அவன் குற்றம் செய் வதற்குக் காரணம் அவனது இளம் பருவ முதல் மனத்தில் படிந்த வாசனை என்று உளநூலறிஞர் சொல்கிறார்கள். திடீரென்று குழந்தை கோபுரத்தைப் பார்த்துப் பயந்து கொண்டு அழுகிறது. அதற்குக் காரணம் என்ன? ஏதோ ஒரு காலத்தில் கோபுரத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது. அதன் வாசனை அதன் அடி உள்ளத்தில் இருப்பதனால்தான் பயப்படுகிறது என்கிறார்கள். இளமைக் காலத்தில்பட்ட அநுபவங்களின் வடுக்கள் எல்லாம் வாசனையாக நின்று வயசு ஆக ஆக அதன் பரிணாமமான உணர்ச்சிகளை எழுப்புமாம். இப்படி விஞ்ஞானம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

அப்படி அறிந்தவர்களுக்கும் புலப்படாத பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. அவர்கள் இந்தப் பிறவியில் இளமைக் காலத்தில் உண்டான அநுபவத்தை ஏடு புரட்டிப் பார்க்கிறார்கள். நம்மவர்கள் ஒரு படி மேலேயே சென்றிருக்கிறார்கள். மனம் என்பது இந்தப் பிறவி அநுபவத்தை மாத்திரம் கொண்டு அமைவது அன்று. பிறவி தோறும் வரும் வாசனை படலம் படலமாக அதன்பால் இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தப் பிறவியில் ஏற்படும் அநுபவங்களின் வாசனை கடப்பைக் கல் போல இருக்கும் என்றால், முந்திய பிறவிகளின் வாசனை வெங்காயத் தோல் போல இருக்கும் என்ற சொல்லலாம். கடப்பைக் கல்லை விஞ்ஞான அறிவினால் பார்த்துவிட்டார்கள். அதற்குப் பிறகு மிக நுட்பமாக வெங்காயத் தோல் இருப்பதை மெய்ஞ்ஞான அறிவினால் நம் பெரியோர்கள் பார்த்திருக்கிறார் கள். நம்முடைய மனத்தில் தோற்றுகிறதை நினைவு என்று சொல்கிறோம். நாம் தெரிந்து கொள்ள முடியாதபடி மனத்துக்கு அடியில் இருந்து கொண்டு விளைவுகளை உண்டாக்கும் நினைவு களை அடிமனப் பதிவுகள் என்று சொல்வார்கள். இந்த இரண்டுக்கும் கீழே ஆழமாகவும், மிக மிக நுட்பமாகவும் உள்ளவைகளை வாசனை என்று சொல்வது சமயநூல் மரபு. இந்த மூன்று நிலை களில் முதல் நிலையாகிய நினைவை நாம் தெரிந்து கொண்டிருக் கிறோம். இரண்டாவதாகிய அடிமன வடுவை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். மூன்றாவதாகிய வாசனையை மெய்ஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

ஒரு வயிற்றில் பிறந்து ஒரே ஆசிரியரிடம் பயிலும் இரண்டு மாணவர்களின் அறிவு வெவ்வேறு விதமான சக்தி உடையனவாக இருப்பதைப் பார்க்கிறோம். இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தவர் களின் அறிவேனும் ஒரே மாதிரியாக இருக்கிறதா? இல்லை. இதற்குக் காரணம் என்ன? இரண்டு பேரும் ஒரே வயிற்றில் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தாலும், முந்திய பிறப்பில் அவர்களின் உள்ளங்களில் அமைந்த வாசனையினால் அறிவு முதலியன மாறுபாடு அடைகின்றன. மனத்தில் முன்பு ஏற்பட் டிருக்கும் அநுபவங்களின் வடுக்கள் எல்லாம் வாசனையாக இருப்பதனால்தான் வெவ்வேறு வகையில் மனமும் செயல்களும் அமைகின்றன. இந்த மனம் ஆகிய பொம்மையைப் பொறி களாகிய ஐந்துபேர்கள் பின்னால் இருந்து வெவ்வேறு வகையில் ஆட்டுகிறார்கள். பாசம் என்ற ஒன்றோடு நெஞ்சைச் சேர்த்துக் கட்டி வைத்து ஆட்டுகிறார்கள். வாழ்க்கையே ஐந்துபேர் மனத்தைப் பாசத்தால் ஆட்டும் கூத்தாக அமைகிறது.

## ஞானிகளும் பொறிகளும்

உடம்பைப் பெற்ற யாவருக்கும் ஐந்து பொறிகள் உண்டு. பொறிகளை இந்திரியங்கள் என்பர். மெய்ஞ்ஞானிகளுக்கும் அவை உண்டு. அவர்களும் கண்ணால்தான் பார்க்கிறார்கள். காதால் தான் கேட்கிறார்கள். காலால்தான் நடக்கிறார்கள். வாயால்தான் சாப்பிடுகிறார்கள். ரமண மகரிஷி, ராமகிருஷ்ண பரமஹம்சர் முதலிய பெரிய ஞானிகளும் அப்படித்தான் இருந்தார்கள். ஞானம் பெற்றவர்கள் என்பதற்காக அவர்கள் காது செவிடாகப் போகவில்லை. கண் குருடாகப் போகவில்லை. உடம்பு கட்டை யாகக் கிடக்கவில்லை.

அப்படியாயின் அவர்களுக்கும் நமக்கும் என்ன வேற்றுமை? அவர்களுக்கும் நம்மைப் போல ஐந்து பொறிகளும் வேலை செய்கின்றன. ஆனால் மனம் அமைதியாக இருக்கிறது. பின்னே இருக்கிற மனிதன் எப்படி ஆட்டினாலும், வெளியிலுள்ள பொம்மை கள் ஆடவில்லை. ஏன்? இருசாராரையும் இணைத் திருக்கும் கயிறு அறந்துபோய்விட்டது. ஐந்து பொறிகளும் மனத்திற்கும் இடையே உள்ள கயிறாகிய பாசம் அறுபட்டுப் போய்விட்டது; அதனால் மனம் ஆடுவது இல்லை. பார்ப்பதற்கு நாமும், ஞானி

களும் ஒரே மாதிரியாக இருந்தாலும், நாம் பாசமாகிற கயிற்றினால் பொறிகளோடு கட்டப்பட்ட மனத்தை உடையவர்கள். அவர்கள் அந்தக் கயிற்றை ஞானமாகிற கத்தியினால் அறுத்து விட்டவர்கள். ஆகவே அவர்கள் இருதயத்தில் இருக்கிற இறைவனோடு எப்போதும் ஒன்றுபட்டு ஞானமயமாக இருக்கிறார்கள். அவர்கள் செய்கிற காரியங்கள் அத்தனையும் ஞானத்தின் விளைவாகவே அமையும். நாமோ பாசமாகிற கயிற்றை அறுக்கும் ஞானம் இல்லாதவர்களாக இருக்கிறோம். நம்மை ஐந்து பொறிகளாகிய பேர்வழிகள் ஆட்டிக்கொண்டே இருக்கிறார்கள். நாம் சுற்றிச் சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கிறோம். அப்படிச் சுழல்வதனால் நமக்கு ஏதாவது இன்பம் உண்டா? இல்லை. துன்பத்தைத்தான் கண்டோம். ஐந்து பொறிகளையும் நமக்கு அடிமையாக்க முடியாமல் நாம் அவற்றுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். நம் மனம் அவற்றுக்கு அடிமைப்பட்டு நம்மையும் தன்னோடு இழுத்தடிக்கிறது. அதனால் விளைவது துன்பம்.

## பொறியால் விளையும் துன்பம்

பொறிகளின் வசம் அகப்பட்டுப் படுகின்ற துன்பமே பலருடைய உயிரை மாய்க்கிறது. விட்டில் பூச்சி எரிந்து கொண்டிருக்கிற விளக்கைக் கண்ணால் பார்க்கிறது. கட்பொறிக்கு அடிமைப் பட்ட அது, அதனைப் பழம் என்று நினைத்துக் கொண்டு போய் அதில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்கிறது. பழமா இல்லையா என்று பார்க்கிற ஆற்றல் இல்லாமையினால் கட்பொறிக்கு அடிமைப்பட்டு உயிரையே விடுகிறது.

அசுணம் என்பது ஒரு பறவை. அதன் காது மிக நுட்பமானது. வீணை வாசித்தால் ஓடி வரும். பறையைக் கேட்டால் இறந்து விடும்.

''யாழ் நறையடுத்த அசுணநன் மாச்செவி
பறை அடித்தது போலும்''

என்று இந்தச் செய்தியைக் கம்பர் உவமையாக ஆளுகிறார். இந்த அசுணப் பறவையைப் பிடிப்பதற்கு வேடர்கள் ஒரு தந்திரம் செய்வார்கள். முதலில் வீணையை வாசிப்பார்கள். வீணா கானத்தைக் கேட்ட அந்தப் பறவை வந்து நிற்கும். உடனே

அதைப் பற்றிக் கொள்வார்கள். காது என்ற பொறிக்கு அது அடிமையாவதனால்தான் வேடர்களிடம் சிக்கிக் கொண்டு உயிரை விடுகின்றது.

இப்படிப் பறவையும், விலங்கும் பொறிகளுக்கு அடிமைப் பட்டு அல்லலுறுவதைப் பார்க்கிறான் ஆறறிவு படைத்த மனிதன். ஆயினும் அவற்றைப் போலவே அவனும் அந்தக் கண்ணிகளில் சிக்கிக் கொள்கிறானேயன்றித் தப்புவதற்கு ஞானமாகிற கத்தியை உபயோகப்படுத்தாமல் இருக்கிறான்.

## உபதேசம் வீணாதல்

மனம் என்ற ஒன்றை ஐந்து பொறிகளும் பாசமாகிய கயிற்றினால் கட்டிச் சுழற்றிக்கொண்டே இருக்கின்றன. மனம் கொஞ்ச நேரம் நின்றால்தானே இறைவனை நினைக்க முடியும்? மிக வேகமாகச் சுழன்று கொண்டே இருக்கிற இயந்திரத்தின் அருகில் போய்த் தொட்டால் அது தொட்டவனைத் தூக்கி எறிந்துவிடும். கல்லையோ, வேறு ஏதாவது பொருளையோ போட்டாலும் அப்படித்தான் தூக்கி எறியும். ஐந்து பொறி களுக்கும் அடிமைப்பட்டு எப்போதும் சுழன்றுகொண்டே இருக்கும் மனமுடையவனிடம் சென்று கொஞ்சம் உபதேசம் பண்ணிப் பாருங்கள். நம்மை அப்படியே தூக்கி எறிந்து விடுவான். ஓடுகின்ற ரெயிலின்மீது கல்லை விட்டெறிந்தால் அந்தக் கல் திரும்பவும் எறிந்தவன் மேலேயே வந்து விழுவது போல, ஐந்து பொறிகளுக்கும் அடிமைப்பட்டவன் காதிலே உபதேசம் செய்தால் சொன்ன வேகத்தைக் காட்டிலும் மிக வேகமாக அது திரும்பி வந்துவிடும்.

தாடகை மேலே ராமன் அம்பை விட்டான். அது என்ன ஆயிற்று?

"சொல்ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்றன்றே!"

அவன் விட்ட அம்பு, முனிவர் சாபம் இட்டால் எப்படி வேகமாகப் போய்ச் சாபத்துக்கு ஆளானவர்களைத் தாக்குமோ

அவ்வளவு வேகமாகத் தாடகையைத் தாக்கியது. அந்தத் தாடகையின் மார்பு வைரம் பாய்ந்த பாறை போல் இருக்கிறது. அதைத் தொளைத்துக் கொண்டு போயிற்று, ராமன் விட்ட அம்பு. அதற்குக் கம்பர் கூறும் உவமையை இங்கே கவனிக்க வேண்டும். 'கல்லாத மனிதர்களுக்குக் கற்றவர்கள் உபதேசம் செய்தால் அது அவர்களது ஒரு காதில் புகுந்து மற்றொரு காதின் வழியே எவ்வளவு வேகமாக வெளியே போய்விடுமோ அவ்வளவு வேகமாகப் போயிற்று' என்கிறார். ஐந்து பொறிகளுக்கும் அடிமைப்பட்டுச் சுழன்று கொண்டே இருக்கிறவர்கள் என்ன சொன்னாலும் ஏற்கமாட்டார்கள். எப்போதும் மனம் சுழன்று கொண்டே இருக்கும் மக்களுக்கு அமைதி என்பது இல்லை. ''இவ்வாறு நான் சுழலுகிறேன்'' என்று நாம் சொல்ல வேண்டியதை அருணகிரியார் சொல்கிறார்.

## பாசக்கட்டு

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
ஐவரிற் கொட்படைந்த.

கு என்பது உலகம். இங்கே நாம் வாழ்கிற வாழ்க்கை பாச வாழ்க்கை. ஆத்மாவைக் கட்டியிருப்பது பாசம். ஆத்மாவானது கடவுளிடம் சொல்லாதவாறு பாசம் என்ற கயிறு அதைக் கட்டியிருக்கிறது. அந்தக் கயிற்றை ஞானமென்னும் கத்தியினால் துண்டித்தால்தான் ஆத்மா கடவுளை அடைய முடியும். அந்தக் கட்டு இருக்கிற வரைக்கும் இறைவனை அடைய முடியாது. ஒரு பசு இருக்கிறது. அது தன் கன்றுக் குட்டிக்குக் கொடுப்பதற்காக மடி நிறையப் பாலை வைத்திருக்கிறது. ஆனால் மாட்டுக்காரன் கன்றுக் குட்டியை முளையோடு முளையாகச் சேர்த்துக் கட்டி விடுகிறான். கன்றை அவிழ்த்து விட்டால்தான் பசுவின் பாலைக் கன்றுக் குட்டி உண்ண முடியும். ஆத்மாக்கள் பாசம் என்ற கயிற்றினால் கட்டப்பட்டுள்ளன. கயிறு அறுபட்டால்தான் ஆத்மா இறைவனை அடைய முடியும். பதியாகிய இறைவன் பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு இன்பம் தருவதற்காகவே இருக்கிறான். அதைப் பெற முடியாமல் பாசமாகிற கயிற்றால் கட்டுண்டிருக்கிறது, ஆன்மா. பாசம் என்ற கயிற்றினால் கட்டப்பட்டு வாழ்கின்ற வாழ்க்கை இவ்வுலக வாழ்க்கை; பாச வாழ்க்கை.

உலகமாகிய மேடையில் உயிர்களாகிய பொம்மைகள் ஆடுகின்றன. இவற்றோடு சேர்த்துக் கட்டப்பட்டுள்ள பாசமாகிற கயிற்றைப் பிடித்து ஆட்டி வைப்பவர்கள் திரைக்கு மறைவில் இருக்கிறார்கள். பல பல வேஷங்களைப் போட்டுக் கொண்டு உலகமாகிற மேடையில் வந்து ஆடுகின்றது உயிர். இந்தப் பாச வாழ்க்கையில் ஐந்து பேர்கள் கூத்தாடுகிறார்கள். இவர்கள் திரைக்கு மறைவில் கூத்தாடினால்தான் திரைக்கு முன்னே இருக்கிற உயிர்கள் கூத்தாடும்.

ஐம்பொறிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் ஆடுகின்ற படியெல்லாம் ஆடிக்கொண்டே, சுற்றிக் கொண்டே இருக்கிறோம். அதனாலே வருகிறது என்ன? மீண்டும் மீண்டும் பிறவிதான் வருகிறது.

ஐந்து இந்திரியங்களுக்கும் கட்டுப்பட்டே மனிதன் வாழ்கிறான். எத்தனை தூரம் அவை அவனை ஆட்டி வைக்கின்றனவோ அத்தனை தூரம் அவன் ஆடுகிறான். அவற்றைத் திருப்திப் படுத்துவதற்கான காரியங்களையே செய்து கொண்டிருக்கிறான். இந்த உலகத்தில் பிறந்து இந்த உடம்பையும், உடம்பில் ஐந்து இந்திரியங்களையும் பெற்றிருப்பது இந்த உலகிலுள்ள பொருள் களைத் தன் சக்தி கொண்ட மட்டும் அநுபவித்து இன்புறுவதற் காகவே என்று நினைக்கிறான். அதனாலே மீண்டும் மீண்டும் பிறவி வந்து கொண்டே இருக்கிறது. பிறவி வளர வளரத் துன்பமும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. ஐந்து இந்திரியங் களுக்கு உட்பட்டு அவை சுற்றுகின்றபடி எல்லாம் சுற்றிச் சுழன்று கொண்டே இருக்கும் நெஞ்சு உடையவர்களுக்குப் பிறவி மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கிறது.

''இந்த உலகமாகிய பாச வாழ்க்கையில் கூத்தாடுகின்ற ஐந்து பேர்கள் என் நெஞ்சை ஆட்டுகிறார்கள். அவர்கள் சுற்றுகின்ற சுற்றுக்கு ஏற்ப என் நெஞ்சு சுழன்று கொண்டே இருக்கிறது. ஒரு நிமிஷங்கூட நிற்பது இல்லை. உன்னை நினைக்கலாம் என்றால் மனம் அமைதியாக நின்றால் அல்லவா நினைக்க முடியும்? எப்போதும் சுழன்று கொண்டே இருக்கிற என் நெஞ்சில் உன் நினைவு ஒரு கணம் வந்தாலும் சிதறுண்டு போகிறது. இதற்குக் காரணமாய் இருப்பது என்ன? ஐந்து இந்திரியங்களின் ஆட்டம்.

*அதற்கு இடமாக இருப்பது பூமி. பூமியிலே பாசம் நிரம்பி வாழ்க்கையில் ஐம்பொறிகள் மனத்தை ஆட்ட, நான் ஆடுகிறேன். சுழற்சியை அடைந்த பாச நெஞ்சினை உடைய பாவியாக நான் இருக்கிறேன். இப்பாச நெஞ்சனை ஈடேற்ற மாட்டாயா?'' என்று பிரார்த்தனை செய்கிறார் அருணகிரியார்.*

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
ஐவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்றுவாய்.

*அருணகிரியாரே 'கொட்பு அடைந்த நெஞ்சினை உடையவனாக இருக்கிறேனே!' என்று சொன்னால் நாம் எல்லாரும் எங்கே இருக்க வேண்டும்? நாம் ஒரு கணம்கூட இறைவனை நினைந்து அறியாதவர்கள். ஐந்து இந்திரியங்களுக்கும் அப்பாற்பட்டு இருக்கிற ஒருவனை, ஐந்து இந்திரியங்களுக்கும் உட்பட்டு எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும் நெஞ்சுடைய நம்மால் நினைக்கத்தான் முடியுமா? அவனை நினைக்க வேண்டுமென்றால் இந்திரியங்கள் நமக்கு அடங்கினவை ஆக வேண்டும். நாம் அலங்காரம், மமகாரம் அடங்கினவர்களாக ஆகவேண்டும். இந்தச் சுழற்சி நீங்க வேண்டும். யாரை வேண்டியனால் சுழற்சி நீங்கும்? நம்மை ஆட்டி வைக்கின்ற ஐந்து பேர்களின் கொட்டம் அடங்க, இந்த ஐந்து பேருக்கும் அப்பாற்பட்ட வேறு ஒருவன் அருள் வேண்டும். அவன் யார்? அவனே முருகன். அவன் ஐந்து பேரை அடக்கும் ஆற்றல் படைத்தவன்.*

# 2

## *ஐவரை அடக்கியவன்*

*கந்தப் பெருமான் அசுரர்களோடு போர் செய்து அவர்களைச் சங்காரம் செய்தான். பல வெள்ளக்கணக்கான அசுரர்கள் இருந்தாலும் அந்தப் படைக்குத் தலைவனாக இருந்தவன் சூரன். அவனுக்கு உறுதுணையாக இருந்தவர்களையும் சேர்த்தால் பெருந் தலைவர்கள் ஐவர் ஆவார்கள். தாரகாசுரன் ஒருவன்; யானைமுகம் படைத்தவன்; அவன் சூரனுக்குச் சகோதரன். சிங்கமுகாசுரன் மற்றொரு சகோதரன். கிரௌஞ்சாசுரன் சூரனுக்குக் கவசம்*

போன்றவன். பானுகோபன் சூரனுடைய மகன். இந்த நால்வரோடு சூரனும் சேர்ந்தால் ஐவர். இவர்கள் ஐந்து பேர்களும் கந்தபுராணத்தில் வருகின்ற அசுரர்களின் தலைவர்கள். இவர்களோடு போரிட்டுச் சங்காரம் செய்தவன் ஆறுமுகம் படைத்த ஆண்டவன். ஐந்து அசுரர்களையும் அடக்கி ஒழித்துத் தேவர்களுக்கு இன்பம் தந்த பெருமான் ஆறுமுகநாதன்.

## எச்சரிக்கை

ஆறுமுகநாதப் பெருமான் அவதாரம் செய்தவுடனே சூரனைப் போய்க் கொல்லவில்லை. ''நான் உன் கொட்டத்தை அடக்கத் தான் அவதாரம் செய்திருக்கிறேன். ஜாக்கிரதை'' எனச் சூரனுக்கு எச்சரிக்கை செய்ய விரும்பியவனைப் போல, முன்னாலே தன் அவதாரத்தை அழுகையினால் தெரிவித்தான். பாலுக்காக அழும் குழந்தையைப் போல அழுது காட்டினான். கேட்டு, ''ஐயோ, நம்மைக் கொல்ல வந்த எமன் பிறந்து விட்டானே!'' எனச் சூரன் அழுதான். ஆனால் அழுத மறுகணமே மாயை அவனை மூடி விட்டது.

இந்த உடம்பு நிலை அற்றது என்று நமக்கு நன்றாகத் தெரியும். இறந்து போகின்றவர்களின் பிரேதத்தோடு சுடுகாடு போய் வருகிறோம். வீட்டுக்கு வந்த மறுகணமே நாமும் ஒரு நாள் இறக்கத்தானே போகிறோம் என்ற நினைப்பின்றிப் பல காரியங்களைச் செய்கிறோம். அதுதான் மாயை. மாயையின் வாடை படுகின்ற நமக்கே அப்படியானால், மாயையின் பிள்ளை யாகிய சூரனைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? குழந்தையின் அழுகுரலைக் கேட்டு அவன் அழுதான். மறுபடியும் அதை மறந்து விட்டான். குழந்தை தன் இடுப்பில் கட்டியிருக்கும் கிண்கிணி ஓசையை எழுப்பிற்று. அந்த நாதம் யுத்த காலத்தில் எழுப்புகின்ற ஒலியைப் போல நாலு பக்கமும் முழங்கியது. அந்த ஒலியையும் சூரன் கேட்டான். அப்பொழுதும் அவன் கொட்டம் அடங்கவில்லை. இப்பொழுது முருகன் தன் சின்னக் கையைத் தட்டினான்.

## கை தட்டல்

கிராமங்களில் இரவுக் காலங்களில் நீர் நிலைகளுக்குப் போகிற வர்கள் கையைத் தட்டிக்கொண்டுதான் போவார்கள். பூச்சி புழுக்கள்

கை தட்டும் சத்தத்தைக் கேட்டவுடனே ஓடிவிடும். உலகத்திற்குத் துன்பத்தைத் தரக் கூடிய பூச்சி புழுக்களாகிய அசுரக் கூட்டங்கள், தன்னுடைய வருகையை உணர்ந்து கொண்டு ஓடிவிடமாட்டாவா என்ற கருணையினால் முருகப் பெருமான் தன் சின்னஞ் சிறு கைகளைச் சேர்த்துத் தட்டினான்.

கையைத் தட்டின மாத்திரத்தில் குன்றுகள் எல்லாம் குலுங்கின. அஷ்ட திக்குப் பர்வதங்கள் பாதியாய்ப் பிளந்தன. சூரனுக்கு அந்தச் சத்தம்கூடவா கேட்கவில்லை? கை தட்டிய சத்தம் கேட்கா விட்டாலும், குன்றுகள் பாதி பாதியாய்ப் பிளந்து விழுந்ததுகூடா கண்ணில் படவில்லை?

முருகன் தன் தாய் தந்தையர்களை மாத்திரம் மகிழ்ச்சி யடையச் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தால், அவர்கள் காதில் மட்டும் விழும்படி சப்பாணி கொட்டியிருப்பான். தேவர் கள் மகிழ வேண்டும், தன்னுடைய அவதாரத்தின் காரணத்தைப் பகைவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிச் சண்முகப் பெருமான் தன் ஆறிரண்டு கைகளால் சப்பாணி கொட்டுகிறான். அதனால் விளைந்தவற்றைப் பார்க்கலாம்.

இரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங்
குலுங்கவிண் ணாரும்உய்யச்
சப்பாணி கொட்டிய கைஆ
நிரண்டுடைச் சண்முகனே.

உலகத்திற்கு நடுவாய் இருப்பவன் ஆண்டவன். எட்டுத் திசை களுக்கும் நடுவான இடத்தில் அவன் இருக்கிறான். அவன் இருக் கிற இடத்தில் இருந்து கையைத் தட்டினால் எந்தத் திசையில் எங்கே நின்றாலும் கேட்கும். எட்டுத் திசைகளுக்கும் அடையாள மாக அவற்றின் எல்லையில் எட்டுக் குலாசலங்கள் இருக்கின்றன என்பர் புராணக்காரர்கள். சூரன் எங்கே இருந்தாலும் இந்தச் சத்தம் கேட்கும். தேவர்களுக்கும் கேட்கும். வருந்துகின்ற அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்.

இந்த ஓசை எட்டுத் திக்குகளின் எல்லையிலுமுள்ள மலை களைத் தாக்குகிறது.

இரு நான்கு வெற்பும் அப்பாதி யாய்விழ.

அந்தத் தாக்குதலினால் எட்டுக் குலாசலங்களும் பாதி பாதியாய்ப் பிளந்து விழுகின்றன.

## சூரன் காணும் காட்சி

ஒரு பெரிய மலைக்கு நடுவிலே சூரன் உட்கார்ந்து இருக்கிறான். இடி இடிப்பது போன்ற சத்தம் கேட்கிறது. உடனே மலைகள் பிளந்து பிளந்து விழுகின்றன. அவன் பார்க்கிறான். 'நாம் போடுகின்ற உத்தரவுப்படி முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நாம் எந்தவிதமான உத்தரவும் போடவில்லையே! அஷ்ட திக்குப் பர்வதங்கள் நம்முடைய உத்தரவு இன்றியே பிளந்து பிளந்து விழுகின்றனவே. நம்முடைய சக்திக்கும் அப்பாற்பட்டதொரு சக்தி இருக்கிறது போல் இருக்கிறதே' என எண்ணுகிறான். மறுபடியும் ஒன்று நிகழ்கிறது.

## மேரு குலுங்குதல்

உலகத்திற்கே நடுத் தூணைப் போலவும், அச்சைப் போலவும் இருக்கிற மேரு மலை குலுங்குகிறது. அது குலுங்கினால் உலகம் முழுதும் குலுங்கும். சூரனது குடல் குலுங்குகிறது. அவன் தன் கண் முன்னாலேயே தனக்குக் கட்டுப்படாத வேறு ஒரு சக்தி இயங்குகிறது என்பதைக் கண்டுவிட்டான். உலகம் எல்லாம் தன் ஆட்டத்திற்கு அடங்கி ஆடிக் கொண்டிருப்பதாக எண்ணியிருந்த அவன் மனம் ஆடுகிறது.

''ஏன் இப்படி மலைகள் பிளந்து விழுகின்றன? மேருகிரி ஏன் குலுங்குகிறது?'' எனக் கேட்கிறான் சூரன். அறிந்தவர்கள் சொல்கிறார்கள்; ''ஒரு குழந்தை தன் கையைத் தட்டிற்று, அந்த ஓசை கேட்டு இப்படி நிகழ்ந்தன'' என்கிறார்கள். சின்னஞ்சிறு குழந்தை விளையாட்டாகக் கையைத் தட்டும்போதே அஷ்டதிக்குக் குலாசலங்களும் பாதி பாதியாய்ப் பிளந்து விழுகின்றன, மேரு குலுங்குகிறது என்றால், அந்தக் குழந்தை நினைத்து ஒரு காரியத்தைச் செய்தால் என்ன ஆகும் என்று நினைக்கிறான். அப்படி நினைக்கும்போது சூரனது மனமாகிய மலை அசையத் தொடங்குகிறது. பின்னாலே நடக்கப் போகிற யுத்தத்தை நடக்காமல் செய்ய முடியுமா என்ற உள்ளம் ஆண்டவனுக்கு.

இவற்றையெல்லாம் கண்டாவது சூரன் திருந்த மாட்டானா என்று நினைக்கிறான். குறும்பு செய்கிற குழந்தையை அடிப்பதற்கு முன்னால் தாய் அதைப் பயமுறுத்தித் திருத்த விரும்புகிறாள். அப்படியும் திருந்தாவிட்டால் அடிக்கிறாள்.

## தேவர் மகிழ்தல்

முருகன் சப்பாணி கொட்டிய அதிர்ச்சியில் மேரு மலை குலுங்குகிறது. மேருமலையின் உச்சியிலே வாழ்கின்ற தேவர்கள் முதலில் அஞ்சினார்கள். சூரனிடம் பயந்து பயந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உள்ளங்களில் முதலில் பயம் தோன்றுவது தானே இயல்பு? ஆனால் அடுத்த கணமே சண்முக நாதப் பெருமான் கையைத் தட்டியதால் மேரு குலுங்கியது என்று உணர்ந்தவுடன் அவர்களுக்கு முறுவல் உண்டாகிவிட்டது. முன்பு சூரனிடம் நடுங்கி நடுங்கி அச்சம் கொண்டார்கள்; இப்பொழுதோ முதலில் நடுங்கிப் பின்பு உவகை கொண்டார்கள்.

ஆறு குழந்தைகளாக அவதாரம் செய்த எம்பெருமான் பராசக்தியின் அணைப்பினாலே ஆறுமுகமும், பன்னிரு திருக்கரங்களும் உடைய சண்முகநாதனாக மாறி வந்திருக்கிறான்; போர் செய்து சூரனைத் தொலைக்க வந்திருக்கிறான். அவன் தன் கையைத் தட்டி, ''நான் இருக்கிறேன். உங்களைக் காப்பாற்று கிறேன்'' என அபயம் அளிக்கிறான் என்று நினைக்கும்போது தேவர்களுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. சப்பாணி கொட்டிய சண்முகநாதன் சூரன் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கி, தேவர்களது மனத்தில் அபயத்தை உண்டாக்கினான்.

## விண்ணாரும் உய்ய.

தேவர்கள் எல்லாம் உய்வு பெறும்படியாகச் சப்பாணி கொட்டினான். 'தேவர்கள் சூர சங்காரம் ஆனால்தானே உய்வு பெறுவார்கள்? சப்பாணி கொட்டிய மாத்திரத்தில் எப்படி உய்வு பெற்றார்கள்?' என்றால், எந்தக் காரியத்தையும் ஆண்டவன் தொடங்கிவிட்டால் போதும், அது நிச்சயமாக வெற்றி பெறும் என்பது அவர்களுக்குத் தெரியும். அற்ப சக்தி உடைய மனிதர்கள் ஒரு காரியத்தை நினைந்து ஆரம்பித்தால் அது முற்றுப் பெறாமல் போகலாம். ஆனால் எம்பெருமானுடைய சக்தி அளவிடற்

*கரியது. தொடங்கினால் போதும்; நிச்சயம் வெற்றி பெறுவான். இந்த உண்மை தெரிந்த தேவர்களுக்கு, அஞ்சாதீர்கள் எனச் சொல்கின்ற குறிப்புப் போலக் கையைத் தட்டினான்.*

**கைஆ றிரண்டுடைச் சண்முகனே.**

*ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கரங்களும் உடைய சண்முக நாதனாக இருப்பவன் தட்டினான்; பன்னிரண்டு திருக்கரங் களாலும் சப்பாணி கொட்டினான்.*

*'பன்னிரண்டு திருக்கரங்களும், ஆறுமுகமும் உடைய சண்முக நாதப் பெருமானே, நீ சப்பாணி கொட்டித் தேவர்கள் உய்யும்படி யாகவும், சூரன் முதலிய ஐந்து அசுரத் தலைவர்களின் மனமாகிய மலைகள் எல்லாம் நடுங்கிப் பிளந்து குலுங்கும்படியாகவும் செய்தவன் அல்லவா? நான் என்ன செய்வேன்! என் உடம்பாகிய வீட்டில் ஐந்து பகைவர்கள் எப்போதும் கூத்தாடிக் கொண்டே இருக்கிறார்கள். நெஞ்சம் கணம்கூட உன்னை நினைக்காமல் சுழன்று கொண்டே இருக்கும்படி செய்கிறார்கள். இந்தப் பகைவர் களை அடக்கி, எப்போதும் சுழன்று கொண்டே இருக்கிற என்னுடைய பாச நெஞ்சை, உன் திருவடியைப் பற்றிக் கொண்டு கொஞ்ச நேரமாவது சுழலாமல் நிலைத்திருக்கும்படி காப்பாற்றக் கூடாதா? இந்த வாழ்க்கைக் கூத்துக்கு ஒரு முடிவு கட்ட மாட்டாயா?'' என்று வேண்டிக் கொள்கிறார் அருணகிரியார்.*

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
 ஐவரில் கொட்புஅடைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று
 வாய்;இரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேரும்
 குலுங்கவிண் ணாரும்உய்யச்
சப்பாணி கொட்டிய கைஆ
 றிரண்டுடைச் சண்முகனே!

## மேருவும் மலைகளும்

*இந்தப் பாட்டையும் சேர்த்து நான்கு பாட்டுக்களில் மேரு மலையும், எட்டுத் திக்கிலுள்ள குன்றுகளும் குலுங்குவதைப் பார்த்தோம். முதல் பாட்டில் முருகப் பெருமானது வாகனமாகிய*

மயிலின் தோகை பட்டு வீசிய காற்றில் மேரு அசைந்தது என்றும், அது நடையிட எட்டுப் பர்வதங்களும் தூள் தூளாகப் போயின என்றும் சொன்னார். அடுத்த பாட்டில் எம்பெருமானது கொடியில் உள்ள சேவல் சிறகை அடித்துக் கொள்ள மாமேரு வெற்பும் இடைப்பட்ட குன்றமும் இடிபட்டன என்றார். அதற்கப் பால் முருகப் பெருமானின் இடையில் கட்டிய கிண்கிணியின் ஓசையினால் எட்டுவெற்பும் கனகப் பருவரைக் குன்றமும் அதிர்ந் தன என்றார். மயில், கோழி இரண்டும் முருகப் பெருமானது சம்பந்தம் உடையன என்றாலும் அவன் திருமேனியுடனேயே ஒட்டியிருப்பது, அவன் இடையில் கட்டியுள்ள கிண்கிணி. அதை விட அவனது திருமேனியின் உறுப்பாகவே இருப்பது கை.

எதையும் செய்வது கைதான். கை செயலுக்கு அறிகுறி. முருகன் கைகளே துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்பவை. தன்னுடைய சக்தியை முதலில் மயிலை விட்டுக் காட்டினான்; கோழியை விட்டுக் காட்டினான்; இடையிலுள்ள மணியை விட்டுக் காட்டினான். இப்பொழுது தன் கைகளைத் தட்டினான். அசுரர் களுக்குப் பயம் உண்டாயிற்று; தேவர்களுக்கு அபயம் அளித்தன.

அவன் கையைத் தட்டியவுடனே மேருவானது குலுங்கியது. எல்லைகளாக உள்ள மலைகள் தகர்ந்து, இரண்டாகப் பிளந்து விழுந்தன. எல்லைகளைக் காப்பாற்றுபவன் அல்லவா இறைவன்? உலகத்தைக் காப்பாற்ற வேண்டியவன் உலகுக்கே அச்சாக உள்ள மேருவைக் குலுக்கலாமா என்பது ஒரு கேள்வி. ஆனால் அந்த எட்டு மலைகளும் இதுவரையில் எந்த ராஜ்யத்திற்கு எல்லையாக இருந்தன? சூரபன்மனது இருள் அரசுக்கு எல்லைக் கல்லாக இருந்தன. மேரு அவன் ராஜ்யத்திற்கு அச்சாக இருந்தது. அதனால் சூரபன்மனது மாயா வாசனை ஏறியிராதா? படலம் படலமாக அவனால் ஏற்பட்ட அழுக்கு அவற்றின்மேல் ஏறி நிற்கின்றது. அவை உதிர வேண்டுமென்றால் அவற்றை உலுக்கித்தானே ஆக வேண்டும்? வைரம் உயர்ந்ததுதான். நல்லவர்கள் கையில் கிடைத் தால் அது மிகச் சிறந்து உயர்ந்த ஆபரணமாகியது. கெட்டவர்கள் கையில் சேர்ந்தால் அது நஞ்சாகத்தானே மாறுகிறது. மேரு உயர்ந்ததுதான். ஆனால் அது சூரனுடைய சம்பந்தத்தால் அழுக் கடைந்திருந்தது. அந்த அழுக்குப் போகவேண்டுமென்றால் குலுக்கத்தானே வேண்டும்?

*''பன்னிரண்டு திருக்கரங்களால் சாப்பாணி கொட்டிய சண்முக நாதா, ஐந்து பகைவர்களால் என் மனம் சுழன்று கொண்டே இருக்கிறதே! இதைக் காப்பாற்ற மாட்டாயா? என் மனம் உன் திருவடிகளில் தூங்கும்படியாகச் செய்ய மாட்டாயா?'' என்ற குறிப்புள்ள பிரார்த்தனையை அருணகிரியார் வழங்கும் பாட்டில் நாம் தெரிந்து கொள்ளலாம்.*

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
　　ஐவரில் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று
　　வாய்;இரு நான்கு வெற்பும்
அப்பாதி யாய்விழ மேரும்
　　குலுங்கவிண் ணாரும் உய்யச்
சப்பாணி கொட்டிய கைஆ
　　றிரண்டுடைச் சண்முகனே!

*(பூமியில் பாசத்தினாற் கட்டப்பட்ட வாழ்க்கையில், கூத்தாடும் ஐம்பொறிகளால் சுழற்சி அடைந்த இந்தப் பாசமயமான நெஞ்சையுடைய எளியேனை நற்கதி அடையச் செய்வாய்; எட்டு மலைகளும் அங்கங்கே அந்த அந்தப் பாதியாய்த் துண்டுபட்டு விழவும், மேரு மலையும் குலுங்கவும், தேவர்கள் உய்யவும் சப்பாணி கொட்டிய பன்னிரண்டு கைகளை உடைய ஆறுமுகப் பெருமானே!*

*(கு – உலகம். ஐவர் – ஐம்பொறிகள். கொட்பு – சுழற்சி.)*

# சிற்றடி பட்ட இடம்

அருணகிரிநாதப் பெருமான் முருகன் என்னும் குழந்தையை நமக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டிக் கொண்டு வருகிறார். குறிஞ்சிக் கிழவன் என்று பெயர் சொன்னாலும், குருத்தைப் போலப் பச்சிளம் குழந்தையாகத் தொட்டிலில் படுத்து விளை யாடிப் பாலுக்காக அழுவதைச் சொன்னார். பின்பு அவனது இடையில் கட்டிய கிண்கிணியில் ஒலி எப்படி எதிரொலியை எழுப்பியது என்று சொன்னார். அதற்குப் பிறகு முருகன் தவழ்ந்து உட்கார்ந்து கையைச் சேர்த்துச் சப்பாணி கொட்டியதைக் கூறினார். அதன் பின்பு முருகக் குழந்தை நடக்கத் தொடங்கி யிருக்கிறான். அக்குழந்தை அடி எடுத்து வைக்கும்போது என்ன விளைந்தன என்று அவர் சொல்கிறார்.

## கலைஞர் வழக்கம்

அருணகிரிநாதர் கவிஞராதலின், ஒரு கருத்தைச் சொல்ல வரும்போது அதை மாத்திரம் நேர்முகமாகச் சொல்லாமல், சுற்றிச் சூழ இருக்கிற விஷயங்களையும் சொல்லி அழகுபட விளக்குவார். ஒன்றைச் சொல்லுகையில் அதற்கு நிலைக்களனாகத் தொடர் புடைய வேறு பலவற்றைச் சொன்னால் அழகாக இருக்கும். பொன்னாலான கட்டித்திற்குள் வைரத்தை வைத்துக் கட்டினால் அழகு மிகுதியாகும். அஸ்திவாரம், விதானம், தூண் முதலியவை யாவும் விரிவாக வைத்து அமைத்துக் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இது கலைஞர்களின் வழக்கம். அந்த வகையில் எம்பெருமான் அடி எடுத்து வைத்தான் என்று சொல்ல வரும்போது அவனுக்கு முன்னாலே அடி எடுத்து வைத்த பெருமானை நினைக்கிறார்; முருகனுடைய மாமாவை நினைக்கிறார். தம்முடைய பெரிய திருவடியால் அவர் மூன்றடி வைத்து அளந்தார். அவருடைய மருமகனாகிய முருகப் பெருமானும்

*தன்னுடைய சிறிய அடிகளால் மூன்றடி வைத்தான். அருணகிரியார் இந்த இரண்டையும் சேர்த்துச் சொல்லுகிறார்.*

## *திரிவிக்கிரமர்*

*முதலில் பெரிய அடிகளால் அளந்த பெருமானைப் பார்ப்போம்.*

படிமாவலிபால்
மூவடி கேட்டு, அன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்.

*பழைய காலத்துக் கதையாகையால் 'அன்று' என்று சொல்கிறார். ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் ஆகியவற்றுக்கு முன்பே நடந்த கதை; வாமனாவதாரத்து நிகழ்ச்சி இது.*

*''மூன்று அடி தந்தேன்'' என்று மகாபலி சொன்னவுடனே விசுவரூபத்தை எடுத்துக் கொண்டு பூவுலகத்தைத் தம்முடைய பேரடியினால் ஓர் அடியாகவும், வானுலகத்தை ஓர் அடியாகவும் அளந்துவிட்டு, மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டார் திரிவிக்கிரமர். மகாபலிச் சக்ரவர்த்தியிடம் அவர் வரும் போது வாமனராக, குறிய வடிவினராக வந்தார். தம்முடைய உடம்பை மிகவும் குறுக்கிக் கொண்டு, பார்ப்போர் அருவருத்து வெறுத்து ஒதுக்கும்படியாகக் கூனிக் குறுகி வந்தார். பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பிறரிடத்தில் கையை நீட்டி இரத்தல் இழிவான செயல். அப்படி இரக்கிறவன் எத்தகைய தைரியமும், பராக்கிரமும் உடையவனாக இருந்தாலும் கேட்கும்போது கூனிக் குறுகிப் போவான். தானம் வாங்கப் போன திருமால் தம்முடைய நெடிய உருவத்தோடு போகவேண்டாம்; சாதாரண மனிதனது உயரத்திலாவது போயிருக்கக் கூடாதா? அதிலும் மிகக் குட்டையான வாமன உருவத்தோடு சென்றார். கடவுள் எந்த விளையாட்டைச் செய்தாலும் அதில் ஒரு நீதி இருக்கும். யாசகத்திற்கு என்று போகும்போது அவருடைய உருவமே குறைந்துவிட்டது. பிறரிடம் கையை நீட்டி யாசகம் பண்ணுகிறவர்கள் கூனிக் குறுகிப் பல்லை இளிக்கும் அவலநிலையை அடைவார்கள் என்ற தத்துவத்தை அதனால் காட்டினார்.*

*உலகத்தில் உள்ளவர்களுக்கு மிகுந்த துன்பத்தை அளித்து வந்த மகாபலியை அடக்கவே அவர் போனார். அவனிடத்தில்,*

''மூன்றடி மண் தா'' என்று கேட்டார். உலகத்தோருக்கு எல்லாப் பொருளையும் கொடுக்கும் வள்ளலாகிய திருமால், எல்லாப் பொருள்களையும் தம்மிடத்திலேயே வைத்துக் கொண்டிருப் பவராக இருந்தாலும், மகாபலியிடம் அவர் கேட்டது யாசகந் தானே? இல்லாதவன் கேட்பது இயற்கை. அவன்கூடக் கேட்கக் கூடாது என்று பெரியோர் கூறுவர்.

## மகாபலியின் இயல்பு

**வா**மனராக வந்து யாசித்த போது மகாபலி என்ன நினைத் தான்? அவன் ஞானம் உடையவன் அல்லவே! ஞானம் உடைய வனாக இருந்தால் தருகிறேன் என்று சொல்வானா? ''நான் தருவதற்கு என்ன இருக்கிறது? எல்லாவற்றையும் எனக்குத் தந்தவன் நீதானே? என்னிடம் நீ கொடுத்திருப்பனவற்றை எல்லாம் நீயே வாங்கிப் போக வந்திருக்கிறாய். எடுத்துக் கொண்டு போ'' என்று சொல்லி அவன் காலைப் பிடித்துக் கொண்டிருக்க மாட்டானா?

மகாத்மா காந்தி அடிகள் ஒரு கருத்தை அடிக்கடி சொல்வார். பணக்காரர்கள் எல்லாம் தர்மகர்த்தா மாதிரி இருக்க வேண்டும். ஆண்டவன் திருவருளால் தாம் பெற்ற பணத்தைப் பிறருக்கும் கொடுத்துப் பகிர்ந்து உண்ண வேண்டும். ''அப்படிப் பணக்காரர் கள் இருந்தால் தொழிலாளி, முதலாளியிடையே சண்டையே வராது'' என்று பலமுறை அவர் சொல்லி இருக்கிறார். மகாபலி ஞானம் உடையவனாக இருந்தால், ''ஆண்டவனே, முன்னாலே கொடுத்த பொருளை உரிமையோடு கேட்பதற்கு வந்திருக்கிற நீ எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போகலாம்'' எனச் சொல்லி அவன் காலைப் பற்றிக் கொண்டிருப்பான். அவன் அரக்க சாதியினன். ஆகவே தன்னிடம் யாசகத்திற்கு வந்திருப்பவனுக்குத் தான் ஏதோ கொடுப்பதுபோல எண்ணிக் கொண்டு, ''தருகிறேன்'' எனச் சொல்லி, கையில் நீர் வார்க்கக் கிண்டியை எடுத்தான்.

உலகத்தில் முற்றும் பொல்லாதவர்களும் இல்லை; நல்லவர் களும் இல்லை. பொல்லாதவர்களிடத்தும் சில நல்ல குணங்கள் இருக்கும். ஒருவன் ஒழுக்கம் தவறியவனாக இருப்பான். ஆனால் யார் கேட்டாலும் இல்லை என்னாது கொடுக்கும் இயல்பு

அவனிடம் இருக்கும். இத்தகையவன் மகாபலி. வாமன உருவத்தில் திருமால் வந்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ளவில்லை. அவர் கேட்ட மூன்றடி மண் தருகிறேன் என்று சொல்லிவிட்டான்.

## சுக்கிராசாரியார் செய்கை

ஆனால் அவனுடைய குரு சுக்கிராசாரியாருக்கு வாமனராக வந்தவர் யார் என்று தெரியும். அவர் ஞானம் உடையவர். ''மகா பலியே, வாமனராக வந்திருப்பவர் யார் என்று தெரியாமல், கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டாயே. முடியாது என்று சொல்லிவிடு'' என அவனைத் தடுத்தார்.

''நான் சொன்ன வாக்கை மீறமாட்டேன்'' என்று சொல்லி விட்டான் மகாபலி. அப்பொழுதுங்கூடச் சுக்கிராசாரியாருக்கு மனம் வரவில்லை. அவன் தண்ணீர் வார்க்க எடுத்த கிண்டியின் வாயில் ஒரு சிறு வண்டைப்போல நுழைந்து கொண்டு, தண்ணீர் கீழே விழாமல் தடுத்தார். வாமனர் தம் கையில் வைத்திருந்த தர்ப்பையை எடுத்து அதன் துவாரத்தின் வழியே குத்தினார். அதனால் சுக்கிராசாரியார் ஒரு கண்ணை இழந்தார். நல்ல ஞானம் படைத்த சுக்கிராசாரியாருக்கு அசுரனாகிய மகாபலியைத் திருத்து கிற ஆற்றல் இல்லை. மகாபலியின் அசுரத் தன்மை அவருக்கு வந்துவிட்டது. நல்லவர்களிலும் சிலர் சேர்க்கையினால் இப்படித் தான் கெட்டுப் போவார்கள் என்பதற்கு அவர் ஒரு சான்று. சில நல்லவர்கள் எங்கே இருந்தாலும் அந்த இடத்தில் தாம் கெட்டுப் போகாமல் இருப்பார்கள். இது அவர்களின் மனத்தின்மையைப் பொறுத்தது.

ஒருவன் மற்றொருவனுக்கு ஒன்றைக் கொடுக்கும்போது அதைக் கொடுக்காதே என்று தடுக்கக் கூடாது என்பது நல்ல ஞானம் வாய்ந்த சுக்கிராசாரியாருக்குத் தெரியவில்லை. நாம் சில சமயங்களில், ''அவன் எனக்குக் கொடுக்கிறேன் என்றதை இந்தப் பாவி கொடுக்காமல் செய்துவிட்டானே! இவனும் இவனைச் சேர்ந்தவர்களும் வாழ்வார்களா? சோற்றுக்கும் துணிக்குமின்றி இவன் நாசமாகப் போகமாட்டானா?'' என்று சொல்வது உண்டு. அதையே அழுத்தந் திருத்தமாக வள்ளுவர் அழகான தமிழில் மிக நாகரிகமாகச் சொல்கிறார்.

''கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.''

சுக்கிராசாரியார் இந்தப் பாவத்தைச் செய்தார். வாமனர் ஒரே அடியாகச் சுக்கிராசாரியாரை மாய்த்து இருக்கலாம். பெருமாளுடைய நோக்கம் அது அல்ல. சுக்கிரசாரியாருக்கு அறிவு போதாது; இரண்டு கண்ணும் இருக்கும் மனிதனுக்கு இருக்க வேண்டிய அறிவு விரிவு அசுரகுருவுக்கு இல்லை. ஆகையால் ஒரு கண்ணைக் குத்தி விட்டார்.

மகாபலி நீர் வார்த்து, ''மூன்றடி மண் தந்தேன்'' என்று சொன்னான். உடனே வாமனருடைய திருவுருவம் பெரிதாகி விட்டது. விசுவரூபத்தை ஏற்றுக் கொண்டவுடன் தம்முடைய ஓர் அடியாலே பூவுலகத்தை அளந்தார். மற்றோர் அடியாலே வானுலகத்தை அளந்தார். மூன்றாவது அடியால் அளக்க ஒன்றும் இல்லை. ''நீ வாக்களித்தபடி மூன்றாவது அடிக்கு இடம் எங்கே?'' என்று கேட்டார். அப்போது மகாபலி தன் தலையைக் காட்டினான். ''உன் திருவடியை என் தலையில் வைத்து அளந்து கொள்'' என்றான். திருமால் அவன் தலையின் மேலே தம்முடைய திருவடியை எடுத்து வைத்தார். இறைவரது திருவடி சம்பந்தம் கிடைத்த மாத்திரத்திலே அவனுக்குப் புகழ் உண்டாகி விட்டது. ''எம்பெருமானே, இன்றைக்குத்தான் என் அகத்தில் நீங்கள் விளக்கு ஏற்றி வைத்தீர்கள். இன்றைத் தினத்தில் உலகிலுள்ள மக்கள் தங்கள் அகங்களில் விளக்கு ஏற்றி வைத்துக் கும்பிடட்டும், என் நினைவாக'' என்றான். மகாபலிச் சக்ரவர்த்தி நல்ல ஞானம் பெற்று உய்யுமாறு பெருமாள் அவன் தலையில் திருவடி வைத்த நாளைத்தான் நம் நாட்டில் இன்றைக்கும் கார்த்திகைத் திருவிழாவாகத் தீபங்கள் ஏற்றி வைத்துக் கொண்டாடுகிறோம்.

''மனிதன் யார்? அவன் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள வழி என்ன? அதைக் காப்பாற்றித் தருகின்ற நாயகன் யார்?'' என்பவற்றைப் போதிக்கின்ற வேதாந்த சித்தாந்த தத்துவங்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன நாம் கொண்டாடுகின்ற திருநாட்கள். மகாபலியின் அகத்தில் விளக்கு ஏற்றப்பட்ட நாள் எல்லா மக்களின் அகத்திலும் விளக்கு ஏற்றி வைக்கப்படும்

*கார்த்திகை நாளாக இருக்கிறது; இந்தக் கதையை நினைவு படுத்துகிறார் அருணகிரியார்.*

படி மாவலிபால்
மூவடி கேட்டுஅன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்

*மாவலிபால் படி மூவடி கேட்டார். படி என்பது நிலம். பிறகு பழையதாகிய இந்த அண்டத்தின் உச்சியிலே முட்டும்படியாத் தம் சிவந்த அடியை நீட்டிய பெருமான் திருமால்.*

# 2

## *பேரடியும் சிற்றடியும்*

சேவடி நீட்டும் பெருமான்
மருகன்தன் சிற்றடியே

*அப்படிச் சேவடியை நீட்டிய பெருமானுக்கு மருகன், தங்கை பிள்ளை, முருகன். மாமாவாகிய திருமாலின் அடி பெரிய அடி; உலகத்தை எல்லாம் அளந்த பேரடி. அந்தப் பேரடியை உடையவர் மருகன் முருகக் குழந்தை. அவனுடைய திருவடி சிறிய அடி. மாமாவின் பேரடி மூன்று பொருளை அளந்தது. மருகனின் சிற்றடியும் மூன்று பொருளை அளந்தது. பூவுலகம், வானுலகம், மாவலியின் தலை ஆகிய மூன்றையும் அளந்தது அந்தப் பேரடி. இந்தச் சிற்றடி எந்த மூன்று பொருள்களை அளந்தது?*

தாவடி ஓட்டும் மயிலிலும் தேவர் தலையிலும்,என்
பாஅடி ஏட்டிலும் பட்டதன்றோ?

### *மயிலின்மேல்*

*முருகனுடைய சிற்றடி மயில் மேலே பட்டது. மோட்டார் கார் வைத்திருந்தவர்கள் யாவருக்கும் யுத்த காலத்தில் பெட்ரோலுக்கு லைசென்சு எளிதில் கொடுக்கவில்லை. ஆனால் பெட்ரோல் மிக எளிதாகக் கிடைக்கக்கூடிய சிலபேர் இருந்தார்கள். அவர்கள்தாம் டாக்டர்கள். அவர்களுக்குப் பெட்ரோல் எளிதாகக் கிடைக்கும்*

படி லைசென்சு கொடுக்காவிட்டால் யாருக்குத் துன்பம்? நோய்ப் பட்டிருக்கிற உயிர்களின் நோயைப் போக்குபவர்கள் டாக்டர்கள். சமுதாயத்தில் மிகச் சிறந்த தொண்டைச் செய்பவர்கள். அவர் களுக்குக் கார் எதற்கு என்றா கேட்பது?

டாக்டர் ரங்காச்சாரியார் வைத்தியத் துறையில் மிகப் புகழ் வாய்ந்தவர். எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியிருக்கிற புண்ணியவான் அவர். அவர் மிகப் பெரிய 'ரோல்ஸ்ராய்ஸ்' கார் வைத்திருந்தார். யாரோ ஒருவர் அவரை, ''இவ்வளவு அதிக விலை உடைய கார் எதற்காக வைத்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டாராம். டாக்டர் அதற்குப் பதிலாக அவரைப் பார்த்து, ''நீங்கள் இரண்டு மூன்று லட்சம் செலவு செய்து எதற்காக வீடு கட்டினீர்கள்?'' என்று கேட்டார். ''நான் வாழ்கின்ற வீடு அல்லவா? அதற்காகத் தான் மிக்க வசதியுள்ளதாக அதிகப் பொருள் செலவு செய்து கட்டினேன்'' என்றாராம் கேட்டவர். ''நானும் ஒரு நாளைக்குப் பல மணி நேரம் காரில் வசிப்பதனால் தான் இதை வைத்திருக் கிறேன்'' என்று சொன்னாராம்.

அதைப்போல மயில் வாகனம் வைத்துக் கொண்டிருக்கிற பெருமான் அதைப் பெருமைக்காக வைத்துக் கொள்ளவில்லை. கோயிலில் வைத்துக் கும்பிடுவதற்காகவும் அல்ல. அடியார்கள் அழைப்பதற்கு முன்னே ஓடிச் சென்று அருள் செய்வதற்காக வைத்திருக்கிறான்.

''நீலம்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதை''

என்று ஒரு திருப்புகழ் வருகிறது.

''ஆண்டவனே, நான் நீ இருக்கிற இடத்திற்கு வந்து உன்னை எவ்வாறு வேண்டி அருள்பெறப் போகிறேன்!'' என ஏங்கினாள் ஒரு பெண். முருகன் மயில் வாகனத்தில் வந்து அன்பர்களின் வீட்டு வாசலில் இறங்கினான். 'தேவலோகத்தில் இருப்பவன் பூலோகத்திலுள்ள சிற்றுயிர்களுக்கு அருள் செய்வதற்காகவே மிக வேகமாக ஓடி வரும் மயிலை வாகனமாக வைத்திருக்கிறான். ஆகவே அவன் மேல் காதல் கொண்டால் அது நிறைவேறும்' என்று அந்தப் பெண்ணுக்குத் தைரியமும் நம்பிக்கையும் வந்தனவாம்.

எம்பெருமான் மயில் வாகனத்தின்மேல் எப்பொழுது ஏறுகிறான்? தன்னை நினைந்து உருகுகின்ற பக்குவத்தை அடைந்திருக்கும் அடியார்களை அந்தக் கணமே ஆட்கொள்வதற்காகப் பாய்ந்து ஓடும்போது அதை அணைத்துக் கொண்டு ஏறுவான். அவனது கால் மயிலின்மீது படுவதே அடியார்களுக்கு அருள் செய்வதற்காகத்தான். அதன்மீது அவன் ஒரு காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு மற்றொரு காலைத் தூக்குகிறான். அவன் அமர்ந்த மாத்திரத்திலே நாலுகால் பாய்ச்சலில் குதிரை செல்வது போல அந்த மயில் தாவி ஓடுகிறது. அவன் விரைவாகவே ஏறுகிறான். அவன் சரியாக அமர்வதற்கு முன்னே மயில் விரைந்து செல்லத் தொடங்குகிறது. முருகன் மயில் வாகனத்தின் மேல் பொருந்திச் சுகமாக அமர்ந்திருக்கவில்லை. அன்பர்களிடம் சென்று உதவ வேண்டும் என்ற வேகத்தோடு இருக்கிறான். இதை நினைந்தே, 'சுப்பிரமணியசுவாமி மயில் வாகனத்தில் இருக்கிறமாதிரி'' என்ற பழமொழி வந்தது. அதற்கு வேறு வகையாகப் பொருள் சொல்வார்கள். அது தவறு.

தாவடி ஓட்டும் மயிலிலும்.

தாவுகின்ற அடியை உடையது மயில். தாவித் தாவி ஓடுகின்ற அந்த மயிலின் மேல் முருகன் தன் சிற்றடியை வைத்தான், எதற்காக? அடியார்களுக்கு அருள் செய்வதற்காக.

## தேவர் தலை மேல்

தேவர் தலையிலும்

எம்பெருமான் அடி சிற்றடியானாலும் அதன் பெருமை சொல்லி முடியாது. ''ஒரு பறவையின் மேலேதானே அந்தத் திருவடி பட்டது?'' எனக் குறைவாக நினைக்கக் கூடாது.

முப்பத்து முக்கோடி தேவர்கள் தாம் தாம் உயர்ந்தவர்கள் என்று எண்ணி இறுமாந்து தலை நிமிர்ந்து நடந்தார்கள். அவர்கள் தலை வணங்கி அறியாதவர்கள். தம்மைக் காட்டிலும் வேறு ஒரு தலைவன் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தலைவனாகிய இந்திரன் தலை நிமிரிந்து செருக்கோடிருந்தான். ஆண்டவன் அவர்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று நினைத்தான். சூரன் என்ற அசுரன் வந்தான். அப்பொழுது

தான் இந்திராதி தேவர்களுக்கு, தங்களினும் மேம்பட்ட ஆற்ற லுடையவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. சூரன் தன்னுடைய அசுரத் தன்மையைக் காட்டித் தேவர்களை அல்லலுற வைத்தான். இந்திரனது வீரம் அவனை அடக்கப் பயன்பட வில்லை. அவனது வச்சிராயுதமும் பயன்படவில்லை. அவன் தேவலோகத்தையே இழந்தான்.

அப்பொழுதுதான் இந்திரன் முதலிய தேவர்களுக்கு ஆண்டவன் நினைவு வந்தது. சிவபெருமானிடத்தில் ஓடிப் போய், ''எம் பெருமானே, சூரன் செய்கிற கொடுமைகள் எல்லை யில்லாதன; அவனை அடக்க மிக்க வீரம் செறிந்த ஒரு குழந்தையைத் தர வேண்டும்'' என்று வேண்டினர். அப்பொழுது முருகன் அவதாரம் செய்தான். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு வாழ்வளிக்க முருகன் என்னும் குழந்தை அவதாரம் செய்திருக்கிறான் என்றால், அவர்களெல்லாம் அவனைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடாமல் என்ன செய்வார்கள்? அக்குழந்தையின் சிறிய திருவடிகள் தேவர் தலைகளின்மேல் பட்டன. ''முருகனே, உன்னுடைய சின்னஞ்சிறு திருவடியை எங்கள் தலையிலே வை அப்பா'' எனச் சொல்லித் தேவர்கள் தலையைக் காட்டி வணங் கினர். முன்பு தலை நிமிர்ந்து நின்றவர்கள் முருகப் பெருமானுக்கு முன் தலை வணங்கினார்கள். அவர்கள் தலைகளில் எல்லாம் அந்தக் குழந்தையின் சிற்றடி பட்டது.

# 3

## பழமும் விதையும்

தாவடி ஓட்டும் மயிலிலும்
தேவர் தலையிலும்,என்
பாஅடி ஏட்டிலும் பட்டதன்றோ?

இந்தப் பாட்டை அருணகிரியார் சொல்வதற்கு முக்கியமான காரணம் இரண்டாவது அடியில் இருக்கிறது. நல்ல பழத்தில் மேலே தோல் இருக்கும். அப்புறம் கதுப்பு, சுளை; நடுவிலே விதை இருக்கும். இந்தப் பாட்டிலும் விதைபோல அவருடைய சொந்த அநுபவம் இரண்டாவது அடியில் இருக்கிறது. அதை

எப்படிச் சொல்கிறார்? "மகாபலியிடத்தில் மூன்றடி நிலம் கேட்டு, பிரபஞ்சமாகிய அண்டத்தின் முகடு முட்டும்படியாகப் பெரிய உருவத்தை எடுத்துக் கொண்டு தம்முடைய பெரிய அடி ஒன்றினாலே பூமியையும், மற்றோர் அடியாலே வானத்தையும், மூன்றாவது அடியாலே மகாபலியின் தலையையும் அளந்த பெருமானுடைய மருகனாகிய முருகன், மயிலின் மேலே ஏறும் போது தன்னுடைய சிற்றடி அதன் மேல் படும்படி செய்தான். முப்பத்து முக்கோடி தேவர்களுடைய தலைமீது தன் சிற்றடி படும்படியாகச் செய்தான். தேவர்களுடைய சிரத்திற் பட்டது கிடக்கட்டும். அந்தச் சிற்றடி **"என் பா அடி ஏட்டிலும் பட்டது"** என்று சொல்கிறார். இதுதான் அவரது சொந்த அநுபவம்.

## அடி ஏடு

ஒருவர் அருணகிரியாரைப் பார்த்து, "நீங்கள் ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதிக் குவிக்கிறீர்களே; அது எப்படி முடிகிறது? அற்புதமான திருப்புகழைச் சந்தம் பிறழாமல் பாடும் ஆற்றல் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? கங்கையாற்று வெள்ளம் போலல்லவா பாட்டு உங்கள் வாக்கிலிருந்து பொங்குகிறது?" என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கேள்விக்கு விடை அளிப்பதைப் போல இங்கே அருணகிரியார் பாடுகிறார்.

"என்ன அப்பா சொன்னாய்? நானா பாடுகிறேன்? நான் எழுதுகிற பாக்கள் எல்லாம் உயர்ந்தன என்றா புகழ்கின்றாய்? இந்தப் புத்தகத்தைப் பார்த்தாயா? இதன் அடி ஏட்டிலே விழுந் திருக்கும் முத்திரையைப் பார்?" என்று காட்டுகிறார்.

ஒரு வியாபாரியிடம் சென்று, "என்ன ஐயா, இந்த ஆண்டு லட்சக்கணக்கான லாபம் சம்பாதித்திருக்கிறாயே! உன் கணக்குப் புத்தகத்தில் இவ்வாண்டு முதல் முதலில் யாருடைய பெயரில் வரவு வைக்கப்பட்டது?" என்றால் அவர் என்ன சொல்கிறார்? "என் அம்மாவின் பெயரைப் போட்டு முதலில் வரவு வைத்தேன்" என்று சொல்கிறார்.

அதே மாதிரியாக அருணகிரியார் சொல்கிறார். "இவற்றை எல்லாம் நானா பாடினேன்? என்னுடைய பாக்களின் அடி ஏட்டைப் பார்த்தாயா? மஞ்சள் குங்குமம் தடவினாற்போல,

பிள்ளையார் சுழி போட்டாற்போல, என் பாடி அடி ஏட்டிலே முருகப் பெருமானுடைய சிறிய திருவடிகள் அல்லவாபட்டிருக் கின்றன? என் பாட்டின் அடி ஏட்டிலே முதல் முதலில் அவன் தன் திருப்பாதங்களை வைத்தான். அந்த ஏட்டைத் தன் திருவடி களால் தொட்டுவிட்டு, அப்புறம் அவன் அல்லவா எல்லா வற்றையும் காலால் எழுதினான்?'' என்பது போலச் சொல்கிறார்.

என்
பா அடி ஏட்டிலும் பட்ட தன்றோ?

''தாவி ஓடுகின்ற மயிலின் மேலே பட்ட திருவடி, தேவர் களுடைய தலையில் பட்ட திருவடி, என்னுடைய கவிதையின் அடி ஏட்டிலும் பட்டதன்றோ? மயிலைப் போல மெத்தென்று இருப்பது அல்ல என் ஏடு. அல்லது தேவர்களுடைய முடியைப் போல ரத்தின கசிதமான வேலைப்பாடு அமைந்த மகுடங்கள் நிரம்பியதும் அல்ல. வேறு சிறப்பு எதுவும் இல்லாதது. அப்படி இருந்தும் அந்தப் பெருமானுடைய சிற்றடி என் பா அடி ஏட்டிலும் பட்டது. அவன் கருணை அது. அவன் திருவடி பட்ட மாத்திரத்திலே இக்கவிதைகள் உயர்வு பெறாமல் எப்படி இருக்கும்?'' என்று சொல்வது போலச் சொல்கிறார்.

அருணகிரியார் பெரிய புலவர். அவர் சந்தம், எதுகை மோனை முதலியவை பார்த்து, வார்த்தைகளைச் சேர்த்துக் கவிதை **எழுதுபவர்** அல்ல; கவிதை **பாடுகிறவர்.**

''என் பா அடி ஏட்டிலும் பட்டதன்றோ எனச் சொல்லி யிருக்கிறாரே; ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதியிருக் கிறாரே; எந்தச் சுவடியின் அடி ஏட்டில் அந்தப் பெருமானுடைய சிற்றடி பட்டது?'' என்று கேட்கலாம்.

அருணகிரியாரைப் போன்று பெரும் புலவர்கள் ஏடு எழுத்தாணி எடுத்து வைத்துக் கொண்டு பாட்டுக்கள் எழுது பவர்கள் அல்ல. அவருக்கு ஏடு எது? நாக்குதான். நாவிலிருந்து வெள்ளம் வெள்ளமாகக் கவிதை பெருகும். அவ்வாறு பாட்டு வரவேண்டுமென்றால் அது இருதயத்திலிருந்து கிளம்ப வேண்டும். உள்ளே நினைத்தால்தான் வாக்கிலே வரும். நாம் பேசுகின்ற பேச்சு எல்லாம் முதலிலே மனத்துள் உருவாகிறது. அது வெடித்து எழுந்து வந்து நாக்கிலே குதிக்கிறது. பேசுகிறோம்.

## உள் நின்ற நாக்கு

தஞ்சை மாவட்டத்தில் திருக்கருகாவூர் என்று ஒரு தலம் இருக்கிறது. அதன் பெயர் திருக்களாவூர் என மருவி வழங்கு கிறது. அந்த ஊரில் உள்ள அம்பிகையின் பெயர் கருக்காத்த நாயகி. கருவுற்ற மகளிரைக் கருச்சிதையாவண்ணம் காப்பாற்று கிறவள் அந்த அம்பிகை. இன்றைக்கும் அம்பிகை சந்நிதியில் எண்ணெய் வார்த்து அந்த எண்ணெயைக் கருவுற்ற மகளிர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அம்பிகை, கருக் காக்கின்ற ஊர் ஆதலாலே அதற்குத் திருக்கருகாவூர் என்று பெயர். அந்தத் தலத்துக் கடவுளைப் பற்றி அப்பர் சுவாமிகள் ஒரு பாட்டுப் பாடு கிறார். பெரிய பாட்டு. அதிலே நமக்கு வேண்டியது ஓர் அடி.

''உள்நின்ற நாவுக்கு உரையாடியாம்''

எனப் பாதி அடியில் சொல்கிறார்.

நாடகங்களில் திரைக்கு முன்னாலே மேடையில் வேஷம் போட்டுக் கொண்டிருப்பவர்கள் நடிப்பார்கள். திரைக்குப் பின்னால் இருந்து ஒருவன் நடிகன் பேச வேண்டிய பேச்சுக்களை மெள்ளப் படிப்பான். அவனுக்குப் ''ப்ராம்ப்டர் (Prompter) என்று ஆங்கிலத்தில் பெயர். எவ்வளவு பெரிய நடிகனாக இருந்தாலும் அவன் சொல்ல வேண்டிய வார்த்தைகள் விட்டுப் போகாமல் இருக்க, உள்ளே இருந்து 'ப்ராம்ப்டர்' சொல்லிக் கொண்டே இருப்பான்.

அதே போன்ற ஒன்று நாம் பேசுகையில் நிகழ்கிறது. நாக்குப் பேசுகிறது. இந்த நாக்குப் பேசுவதற்கு முன்னாலே உள்ளே இருக்கிற நாக்கு ஒன்று பேசுகிறது. வெளியே இருக்கிற நாக்காகிய ஏட்டுக்கு அடி ஏடு உள்ளேயுள்ள நாக்கு.

புறத்தில் இருக்கிற கண்ணைப் புறக்கண் என்கிறோம். அதே போல அகத்தில் கண் இருக்கிறது. அது அகக்கண். கண் மாத்திரம் அல்ல. காதும் இருக்கிறது. உள்ளே இருக்கிற நாக்குப் பேசு வதைத்தான் நினைப்பு என்று சொல்கிறோம். உள்ளே இருக்கிற நாக்குப் பேசுவதை வெளியே இருக்கிற நாக்கானத ஒலியை அதிகப்படுத்திக் கூட்டியும், குறைத்தும் வெளியிடுகிறது.

''இல்லை, இல்லை. வெளியே இருக்கிற நாக்குத்தான் பேசு கிறது'' என்றால் ஊமைக்கும் நாக்கு இருக்கிறதே, அவனால்

பேச முடிகிறதா? இல்லை. ஏன்? பேச்சு என்ற ஒன்று உள்ளே எழுந்தால்தான் வெளியே வரும். உள்ளே உள்ள நாக்குப் பேச வில்லை என்றால் வெளியே உள்ள நாக்கும் பேசுவது இல்லை.

உள்ளே இருக்கிற நாக்கும் தானாகப் பேசாது. அதற்கு உரை சொல்லிக் கொடுக்கிறவன் ஒருவன் இருக்கிறான். அவன்தான் ஆண்டவன். முதலிலே பேசுகிறவன் ஆண்டவன். அதற்கு அப்புறம் உள்ளேயுள்ள நாக்கு, மன நாக்கு, பேசுகிறது. அதற்கப்புறந்தான் வெளி நாக்குப் பேசுகிறது. ஆண்டவனே ஒவ்வொருவருடைய நாக்கும் இயங்க மூலமாக இருக்கிறான். இதையே அப்பர், **"உள்நின்ற நாவுக்கு உரையாடியாம்"** என்று பாடினார்.

## உள்ளமே அடி ஏடு

பாட்டுக்களை வெள்ளம் வெள்ளமாகப் பொழிந்த அருணகிரி நாத சுவாமிகள் என்ன சொல்கிறார்? "நானா அவற்றைப் பாடு கிறேன்? எம்பெருமான் முருகனது சிற்றடி என்பா அடி ஏட்டிலும் பட்டது" என்கிறார். பாட்டுக்கு அடி ஏடு எது? மேல் ஏடு எது? மேல் ஏடுதான் வெளியிலுள்ள நாக்கு. அடி ஏடு உள்ளம். உள்ளத்தில் தோன்றியது நாவில் வருகின்றது.

"எம்பெருமான் முருகனது சிற்றடி என் மனத்திலே பட்டது. அதனால் அல்லவா வெள்ளம் வெள்ளமாகப் பாட்டு வருகிறது?" என்கிறார்.

**"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளி உண் டாகும்"**

எனப் பாரதியார் பாடுகின்றார். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டா வதற்குக் காரணம் ஆண்டவன் அங்கே வீற்றிருப்பதுதான். ஆண்ட வனது அடி அந்த அடி ஏட்டில் பட்டால்தான் ஒளி உண்டாகும். பிறகு அந்த உண்மை ஒளி வாக்கினிலும் உண்டாகும். "கவிதை பிறக்கின்ற என் உள்ளமாகிய அடி ஏட்டில் இறைவனது சிற்றடி பட்டது" எனச் சொல்கிறார் அருணகிரியார். பட்டது என்று செருக் கோடு அவர் பேசவில்லை. "பட்டது அல்லவா?" எனக் கேட்கிறார் நயமாக. அவன் கருணையை நினைந்து அப்படிக் கேட்கிறார்.

"நான் கவிதை எழுதுகிற புத்தகத்தின் மேல் ஏடு நாக்கு. அடி ஏடு உள்ளம். அதன்மேல் ஆண்டவன் திருவடி வைத்தான். திரு

வடி வைத்ததுமே எம்பெருமானின் மணம் பாட்டில் மணந்தது. பாட்டும் வெள்ளமாக வருகிறது. நான் பாடினேன் அல்லேன். எம்பெருமான் பாட வைத்தான். நான் வாக்கினாலே பாட, என் உள்ளத்திலே தன் திருவடியை வைத்தான். அவன் திருவடி பட்ட தனால் மணக்கின்ற அடிநாக்கின் மணந்தான் வெளி நாக்கிலிருந்து வெளிப்படுகிறது'' என்று அலங்காரமாகச் சொல்கிறார்.

## சுவடுபடாத உள்ளம்

குருக்ஷேத்திரத்தில் என்றோ ஒரு நாள் பாரத யுத்தம் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் நடந்தது என்று எண்ணுகிறோம். ஒவ்வொரு நாளும் நம் உள்ளங்களில் நடந்து கொண்டிருக்கிறது அந்தப் போர். ஒரு கோடி மாயா சக்திகள் நமது உள்ளங்களிலே நித்தம் போராடி அவற்றை எல்லாம் போர்க் களமாக்குகின்றன. போர்க்களத்திலே அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்த கண்ணபிரான் நித்தம் நமது உள்ளங்களிலேயும் கீதை படிக்கிறான். ஆனால் அந்தக் கீதையைக் கேட்பதற்குச் சக்தி இல்லாமல் இருக்கிறோம். துன்பப்படுகிறோம். எம் பெருமான் நம் உள்ளங் களிலேயே இருக்கிறான். மனச்சாட்சியாக இருக்கிறான். இருந்தும் அவன் அடிச்சுவடு நம் உள்ளங்களிலே விழவில்லை. காரணம் என்ன?

ஒரு திருடன் எப்படி ஓடினான் எனப் போலீஸார் துப்பு விசாரிக்கிறார்கள். அந்த வீட்டிற்கு உள்ளே திருடன் எந்த எந்தப் பக்கம் போயிருப்பான் என்று பார்க்கிறார்கள். கீழே காலடிச் சுவடு எதுவும் இல்லை. தோட்டப் பக்கம் வருகிறார்கள். முதல் நாள் இரவு மழை பெய்ததனால் தோட்டம் ஈரமாக இருக்கிறது. அந்த ஈர மண்ணிலே திருடன் காலடிச் சுவடு படிந்திருக்கிறது. உள்ளே காலடிச் சுவடு இல்லை. அங்கே ஈரமில்லை. ஈரமில்லாத கட்டாந்தரையில் எப்படிக் காலடிச் சுவடுபடும்?

அதுபோல், 'நமது உள்ளங்களிலே இறைவன் நடமாடின போதிலும் அவன் காலடிச் சுவடு விழவில்லையே!' என்றால், நம் உள்ளங்கள் காய்ந்த கட்டாந் தரையாக இருக்கின்றன. அவற்றை அன்பு நீரால் நனைந்த தரையாக்கினால் அவன் காலடி தானே விழும். அருணகிரிநாதப் பெருமான் உள்ளம் அன்பினால்

நனைந்து ஈரமாக இருப்பது. நாய்கள் நடமாடுகிற உள்ளத்திலே நாய்களின் சுவடு இருக்கும். மனிதன் நடமாடுகிற இடத்திலே மனிதர்களின் சுவடு இருக்கும். முருகப் பெருமான் நடமாடுகிற உள்ளம் உடையவர் அருணகிரியார். ஆகவே, அங்கே முருகப் பெருமானின் சிற்றடி பதிந்திருக்கிறது. காமம், மோகம், மதம், மாச்சரியம் முதலிய அழுக்குகளை வேரோடு களைந்து எடுத்தவர் ஆதலால் எம்பெருமான் அவரது உள்ளத்திலே பல பல சுவடுகள் உண்டாகுமாறு எப்போதும் ஓடி ஆடிக் கொண்டிருக்கிறான். அது எப்படித் தெரியும்? மன ஏட்டிலே அவன் திருவடி படுகின்றது; பாட்டு வெளி வருகின்றது; அவன் வைக்கின்ற ஒவ்வோர் அடியும் ஒவ்வொரு பாட்டாக மலர்கிறது.

## உள்ளமும் உரையும்

நமக்கு அப்படி வராததற்கு நமது உள்ளங்களிலே முருகன் சிற்றடிகள் பதியவில்லை என்பதுதான் காரணம். கோபத்தின் அடி படுகிறது. அதன் பயனாக நமது நாவில் வசவு கொப்புளிக்கிறது. காமத்தின் அடி பதிகிறது. அதனால் பைத்தியக்காரச் சொற்கள் வருகின்றன.

**திரு.வி.க.** அவர்கள் வேடிக்கையாக ஒன்று சொல்வார்கள். அரசியல் மேடைகளின் நடக்கும் சொற்பொழிவுகளை எல்லாம் கேட்டு, "நாம் முன்னோர்கள் இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று மூன்று வகைத் தமிழ் இருப்பதாக வரையறை செய் தார்கள். அந்த மூன்றுக்கும் மேல் நான்காவதாக 'வசைத்தமிழ்' என்ற ஒன்று இப்பொழுது வளர்ந்து வருகிறதே" என்று சொல் வார்கள்.

இனிமையான தூய சொற்கள் நம் வாக்கிலிருந்து வர வேண்டுமானால் நம் உள்ளங்கள் தூயனவாக இருக்க வேண்டும். நாம் பேசுகிற பேச்சு நமது உள்ளங்களின் நினைவையே எடுத்துக் காட்டுகிறது. உள்ளம் நன்றாக இருந்தால் தவறான பேச்சைச் சொல்ல வேண்டுமென்றாலும் வராது.

ஒரு பெரியவர் இருந்தார். அவர் தூய உள்ளம் உடையவர். அவருக்கு வசவே வராது. ஒரு வெள்ளைக்காரன் அவர்மேல் கோபம் கொண்டு கண்டபடி அவரை ஆங்கிலத்தில் வைதான்.

அது அவருக்கு விளங்கவில்லை. ஆனால் நம்மை வைகிறான் என்பதை மாத்திரம் உணர்ந்தார். திரும்ப வைய ஆரம்பித்தால் தான் அவன் போவான் எனவும் எண்ணினார். ஆனால் எப்படி வைவது? அவருக்கு வசைத்தமிழ் தெரியாது. 'வாழைக்காய், வெண்டைக்காய், பாகற்காய், கத்திரிக்காய்'' என்று காய்களின் பெயராகவே அடுக்கிக் கொண்டு போனார். அப்படிச் சொல்லும் போது வார்த்தைகளைக் கடுமையாகச் சொன்னார். அந்தத் தொனியைக் கேட்டு அவர் தன்னை வைகிறார் என எண்ணி அந்த வெள்ளைக்காரன் போய்விட்டான். வைய வேண்டுமென் றாலும் கனிந்த உள்ளங்களிலே வசவு தோன்றுவதில்லை.

### ஈர உள்ளம்

அன்பு நீரினால் நனைந்து ஈரமாகிய உள்ளங்களில் ஆண்டவனது சிற்றடிகள் பதிகின்றன. ''என்னுடைய உள்ளத்தில் ஆண்டவனுடைய சிற்றடிகள் பதிந்தன'' என்று அருணகிரியார் அகங்காரத்தோடு சொல்லவில்லை. 'மயில்மேல் பட்ட பாதம், தேவர் தலையில் பட்ட மலரடி இந்த ஏழையின் ஏட்டிலும் பட்டது' என்று பணிவாகவே சொல்கிறார். அகங்காரம் அறவே அற்றுப்போன உள்ளங்களில்தானே அவன் சிற்றடி படுகின்றது? இருதயத்திலே பதிந்து அவன் திருப்பாதம் மணக்கிறது. இருதயத்திலிருந்து வெளிப்படும் பாட்டிலும் அந்த அடியின் மணம் வீசுகிறது.

''முருகன் அடி என் பாவின் அடி ஏட்டிலே பட்டது'' என்று தம் அநுபவத்தையும் நன்றியறிவையும் சொல்ல வந்தவர், இறைவன் செய்த அந்த உபகாரத்தின் பெருமையை எடுத்துக் காட்ட அந்தச் சிற்றடி செய்த பிற செயல்களையும் உடன் கூறினார்.

தாவடி ஓட்டும் மயிலிலும்
    தேவர் தலையிலும்என்
பாஅடி ஏட்டிலும் பட்டதன்
    றோ,படி மாவலிபால்
மூவடி கேட்டு அன்று மூதண்ட
    கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்
    மருகன்தன் சிற்றடியே?

*(தாவிப் பாய்ச்சலாக ஓடச் செய்யும் மயிலின் மேலும், தேவர்களின் தலையின்மேலும், என்னுடைய பாக்கள் எழுதிய சுவடியின் அடி ஏட்டிலும் பட்டது அல்லவா, அன்று மாவலியினிடம் மூன்று அடி மண் கேட்டுப் பழைய அண்ட கூடத்தின் உச்சி முட்டும்படியாகத் தன் சிவந்த அடியை நீட்டும் பெருமானாகிய திருமாலின் மருகனுடைய சிற்றடி?*

*தாவடி ஓடுதல் – தாவிச் செல்லுதல். வீரர்கள் நடப்பதைத் தாவடி செல்லுதல் என்பர். பா எழுதிய அடி ஏடு. படி-பூமி. முது அண்ட கூடம். முட்டை போன்ற வடிவை உடைமையால் பிரபஞ்சத்துக்கு அண்டம் என்ற பெயர் வந்தது. முகடு – உச்சி. சிற்றடி பட்டதன்றோ?)*

# இருந்தபடி இருங்கள்

## சொல்லும் வகை

கந்தர் அலங்காரத்தில் அருணகிரியார் வெவ்வேறு வகையாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார். முதல் பாட்டிலே வந்தது போல்,

''பேற்றைத் தவம்சற்றும் இல்லாத
என்னைப் பிரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா!''

என்று தம்முடைய சொந்த அநுபவ நிலையில் நின்று சொல்கிறது ஒரு வகை. முருகனைச் சார்ந்திருக்கிற வேல், சேவல், மயில், கிண்கிணி இவற்றின் ஆற்றலை உணர்த்துவதன் வாயிலாக அவன் பெருமையை உணரவைப்பது ஒரு வகை.

''அழித்துப் பிறக்கவொட்டாஅயில் வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீா''

என்பது போல நாம் செய்யாத காரியத்தைச் சொல்வது மற்றொரு வகை.

இப்பொழுது வேறு ஒரு வகையாகப் பாடுகிறார். இன்னது செய்ய வேண்டும் என்பதைச் சொல்ல வருகிறார். மற்றவர்களுக்கு அறிவுரை கூற வருகிறவர்கள், தாம் உயர்ந்த நிலையில் இருந்தால்தான் அப்படிச் செய்யலாம். உயர்ந்தநிலையில் இருக்கிறவர்களிலும் இரண்டு வகையினர் உண்டு. தாங்கள் உயர்ந்த நிலையில் இருப்பதாக எண்ணிக் கொண்டு, மற்றவர்கள் கீழான நிலையில் இருப்பதுபோல் எண்ணி, உபதேசம் செய்ய வருவார்கள் சிலர். தாங்கள் உயர்ந்த நிலையில் இருக்கிறோம் என்பதை நினைக்காதவர்கள் சிலர். அவர்கள் பின்னும் உயர்ந்த நிலைக்கு ஏறிவிடுகிறார்கள். செருக்கு எந்த நிலையிலும் வந்து விடும். செருக்குக் கூடாதென்று பிறருக்குச் சொல்லச் சொல்ல

அந்த அறிவைப் பிடித்துக் கொண்டே செருக்கு வந்துவிடும். அதனால் ஏமாந்து போகாமல் உயர்ந்த நிலையப் பெற்றவர் தாம் உயர்ந்த நிலையில் இருப்பதை மறந்து விட வேண்டும். தாம் பெற்ற பேற்றாலே உயர்ந்த நிலை ஒன்று; அதனை மறந்து விடுவதனாலே மேலும் உயர்ந்த நிலை ஒன்று; ஆக இரண்டு உயர்வு அப்போது கிடைக்கும்.

## ஆணவம் இல்லாத உரை

பிறருக்கு உபதேசம் செய்ய வருகின்ற அருணகிரிநாதப் பெருமான், ''நான் இந்த அதிகாரம் உடையவன்'' என்று நினைத்துச் சொல்லவில்லை. ''நானா பாடுகிறேன்? எம் பெருமான் திருவடி பட்டதனால் அல்லவா இந்தப் பாட்டு வருகிறது?'' எனச் சொல்வதன் மூலம் செருக்கைத் தொலைத்துக் கொண்டு, பிறகு உபதேசம் செய்கிறார். அவர் செய்யும் உபதேசம் நம்மிடத்தில் உள்ள பரிவினால் வருவது. பல பக்தர்கள் தவித்துக் கொண்டிருப் பதைப் பார்த்து, அவர்களுக்கும் வழி காட்டி அழைத்துப் போக எண்ணிப் பின்னே திரும்பி வந்து, அழைத்துப் போகும் ஒருவரைப் போல அவர் பேசுகின்றார். அவரது உள்ளத்தில் அன்பும், பரிவும் இருக்கின்றன. ஆணவம் இல்லை.

## வழி உண்டா?

அவரிடம் ஒருவர் கேட்கிறார். ''நான் ஆண்டவனது திருவருளைப் பெற வேண்டும். எனக்குச் சாஸ்திரம் எதுவும் தெரியாது. யோகம் பண்ணத் தெரியாது. ஞான விசாரம் செய்யும் ஆற்றல் இல்லை. நான் இங்கு வாழ்ந்து கொண்டுதான் இருக்க வேண்டும். வாழும் போதே இறைவன் திருவருள் எனக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு ஏதாவது வழி உண்டா?'' என்று கேட்கிறார் ஒரு பக்தர்; பக்தர் என்பதைவிட ஆசை உடையவர் என்று சொல்லலாம்.

இறைவன் திருவருள் வேண்டுமென்ற ஆசை உடையவரா னாலும் அதற்கு ஏற்ற வகையில் உழைக்கும் ஆற்றல் அவருக்கு இல்லை. மனைவி மக்களிடையே வாழவேண்டும். சாதாரண மாகத் தினமும் சாப்பிடுவதையே சாப்பிட வேண்டும். எந்த எந்தக் காரியங்களைச் செய்து வருகிறோமோ அந்த அந்தக்

காரியங்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படி இருக்கும்போதே இறைவன் திருவருள் வந்து வாய்க்குமா?

இந்தக் கேள்வியைக் கேட்டவர் நம்முடைய பிரதிநிதியாகவே இருக்க வேண்டும். ஏனென்றால் நாமும் அப்படித்தான் கேட்போம். தினந்தோறும் உண்ணுகின்ற உணவில், அணிகின்ற ஆடையில், நுகர்கின்ற உலகியல் இன்பத்தில் சிறிதும் குறைவுபடாமல் இருக்கும்போதே, இறைவன் திருவருள் கிடைக்க வேண்டுமென்ற ஆசை உலகத்திலுள்ள எல்லா மக்களிடத்திலும் இருக்கிறது. தவநெறியில் செல்ல வேண்டுமானால் இப்பொழுது நுகரும் இன்பங்களைக் கைவிட வேண்டும். இறைவனது திருவருள் பெற்று விட்டால் அழிவே இல்லாத, எல்லையே இல்லாத பேரின்பம் சித்திக்கும் என்று சொல்லுகிறார்கள். அது கிடைக்கிறது என்பது என்ன நிச்சயம்? இப்பொழுது நாம் அடைகின்ற உலக இன்பம் கையின் மேல் இருக்கிறது. பேரின்பம் கிடைப்பது உண்மையாக இருந்தால் கையில் கிடைப்பதை விட்டு விடலாம். அது கிடைப் பது உண்மையோ, பொய்யோ நமக்குத் தெரியாது. ''இப்பொழுது கிடைப்பதை விட்டுவிடாமல் இதையும் அநுபவித்துக் கொண்டே இருக்கிறோம்; அந்தப் பேரின்பம் உண்மையானால் அதைப் பெறவும் ஆயத்தமாகய் இருக்கிறோம். இந்த இன்பத்தைச் சிறிதளவும் விடாமல், அதைப் பெறுவதற்கு வழி ஏதேனும் உண்டா?'' இதுதான் நம் கேள்வி.

இப்படிக் கேட்பவர் கூட்டத்தைப் பார்த்து ஒருவர், ''உனக்கும் வழி உண்டு'' என்று சொன்னால், அவரைவிடக் கருணை உடையவர் யாராவது இருக்க முடியுமா? ''நீ பட்டினி கிடக்க வேண்டாம். சாஸ்திரங்கள் படித்திருக்க வேண்டாம். தலங்களுக்கு யாத்திரை செய்திருக்க வேண்டாம். தத்துவ விசாரம் செய்திருக்க வேண்டாம். அவற்றில் ஒன்றும் இல்லையே என்ற கவலை வேண்டாம். கொஞ்ச நேரமாவது மௌனமாக இருக்க எனக்குத் தெரியாதே என்றுகூடக் கவலைப்பட வேண்டியதில்லை. நீ இப் பொழுது இருக்கிறபடியே இரு. இறைவன் அருள் தானே உனக்கு வந்து வெளிப்படும்'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

**கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.**

''ஆண்டவனுடைய திருவருள் எங்கே, எப்படிக் கிடைக்கும் என்று அதை நீங்களே தேடிச் செல்ல வேண்டாம். நீங்கள் எப்படி

இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள். தானாக அவன் அருள் வந்து கிடைக்கும்'' என்று அவர் சொல்கிறார்.

''இது மிகவும் நல்ல உபதேசமாக இருக்கிறதே! இன்றைக்கு நாம் செய்து கொண்டிருக்கிற காரியங்களை எல்லாம் இப்படியே செய்து கொண்டு, இருந்தபடி இருந்தால் போதுமே! இவர் சொல்கிறபடி அருள் தானாக வந்து வெளிப்பட்டுவிட்டால் மிகவும் நன்று'' எனப் பலர் நினைக்கலாம்.

அருணகிரிநாதர், ''இருந்தபடி இருங்கள்'' என்று மாத்திரம் சொல்லி இருந்தால் எல்லா மக்களும் அந்த இன்பத்தை அடைய முடியும். ஆனால் அதற்கு முன்னாலே சில சாதனங்களைச் சொல்கிறார்.

**தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்**
**வெகுளியைத் தானம்என்றும்**
**இடுங்கோள்.**

## அறம் செய்ய விரும்புதல்

குழந்தைகளுக்கு உபதேசம் செய்கிறாள் ஔவைப் பாட்டி. அகர வரிசையில் அவள் சொல்ல ஆரம்பித்து முதலில், ''அறஞ் செய விரும்பு'' என்கிறாள். அதற்கு அடுத்தபடி ''ஆறுவது சினம்'' என்று போதிக்கிறாள். இவை இரண்டும் மனித வாழ்க்கைக்குப் பயன்படுகிற காரியங்கள். சாஸ்திரங்கள் எல்லாம் மனிதனுக்கு எந்தத் தர்மத்தைச் சொல்கின்றனவோ அதைக் குழந்தைகளுக்குச் சொல்கிறாள் ஔவை. காரணம் என்ன? 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஆதலால் குழந்தை உள்ளத்திலேயே அந்த வித்தைப் புதைத்துவிட்டால் பிறகு அது நன்கு வளர்ந்து படரும். தலை நரைத்த பிறகு, ''ஆண்டவன் நாமத்தைச் சொல்; அறத்தைச் செய்'' என்று சொன்னால் வராது. ஆகவே வேத சாஸ்திரங்களின் பரம தாத்பர்யம் எதுவோ அதைச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அகர வரிசைப் பாட்டிலே ஔவை சொல்கிறாள்.

வாழ்க்கையில் மனிதர்கள் பெற வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் ஆகும். இவற்றையே தர்மார்த்த காம மோட்சம் என்கிறார்கள். இந்த நான்கையும் குழந்தைக்குப் பாட்டி சொல்கிறாள். ''அறஞ்செய விரும்பு''

என்று தர்மத்தைச் சொன்னாள். பிறகு ''பொருள்தனைப் போற்றி வாழ்'' என்று பொருளைச் சொன்னாள். ''மெல்லியலார் தோள் சேர்'' என்று இன்பத்தைச் சொன்னாள். ''வீடு பெற நில்'' என்று வீட்டு நெறியையும் சொல்லிவிட்டாள்.

இந்த வகையில்தான் முருகப் பெருமானின் அருள் தானே வந்து நமக்கு வெளிப்பட வேண்டுமாயின், அதற்கான சாதனங்கள் இன்னவென்று சொல்ல வருகிறார் அருணகிரியார். அறத்தைச் சொல்ல வருகிறார். பக்தி என்பது அறத்திலிருந்து வேறுபட்டது அல்ல. தர்மம் இல்லாத பக்தி பக்தி அன்று. தர்மம் இல்லாதது தவமும் அல்ல. அரக்கர் செய்த தவம் அறநினைவு இல்லாத தவம். தவம் முதலியன விசேஷ தர்மங்கள். அன்பு, ஜீவதயை என்பன சாமான்ய தர்மங்கள். அடிப்படையான அறம் – சாமான்ய தர்மம் – இல்லாமல் சிறப்பான அறம் – விசேஷ தர்மம் – பயன் தராது. அஸ்திவாரம் இல்லாத கட்டிடம் நிற்குமா? உயர்ந்த தர்மங்களை எல்லாம் செய்யப் போகின்ற ஒருவன் மிகவும் அடிப்படையான தர்மமாகிய அன்பு பாலிப்பதை விட்டு விடலாமா?

சூரபன்மன் தவம் செய்தான்; அறிவை வளர்த்தான்; அன்பு இல்லாமல் அறிவு வளர்ந்து கொண்டே போகும் போது என்ன ஆகிறது? அணுக்குண்டு பிறக்கிறது. அன்பு, கருணை, இரக்கம் ஆகிய அடிப்படைக் குணங்கள் இல்லாமல் வளர்ந்து கொண்டே போன அறிவினால் அவன் தன்னைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்று எண்ணி உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் துன்பத்தைத் தருகின்ற ஆற்றல் படைத்தான். தர்மம், அன்பு ஆகியவை அவனது தவத்திற்கு ஆதார பீடமாக அமைந்திருந்தால் அவன் அறிவு நன்மையை உண்டாக்கியிருக்கும்.

இறைவன் திருவருள் கிடைக்க வேண்டுமானால் அறத்தோடு இணைந்த தவம் செய்ய வேண்டும். அருளுக்கு ஆதார பீடமாக அறத்தை வைத்திருக்கிறார்கள். இறைவனோடு ஒன்றுபட்டு வேறு அல்லாமல் இருக்கிற அருட்சக்தியாகிய அம்பிகைக்குத் தர்மசம்வர்த்தினி என்று பெயர்; அறப் பெருஞ் செல்வி என் பார்கள்; அறம் சிறிதும் இல்லாவிட்டால் அருளைப் பெறுவதற்கு மனிதன் எந்த வகையான முயற்சி செய்தாலும் கிடைக்காது.

## அறமும் மனமும்

எல்லாவற்றிற்கும் அடிப்படையாக நிற்பது அறம். அந்த அறம் உள்ளத்திலே முதலில் தோன்ற வேண்டும். அதனால் பாட்டி குழந்தையைப் பார்த்து, ''அறஞ்செய்'' என்று சொல்லாமல், ''அறம் செய விரும்பு'' என்றாள். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வருகிற குழந்தை தன் பையிலுள்ள காலணாவை ஒரு குருட்டுப் பிச்சைக்காரனுக்குப் போடுகிறது. மிக்க செல்வம் உடைய ஒருவன் லட்ச ரூபாயைத் தர்மத்திற்காக எழுதி வைக்கிறான். அது காலணா, இது லட்ச ரூபாய் என்ற வேறுபாடு இருந்தாலும் அந்தச் செயலுக்கு மூலகாரணமாக இருப்பது அவர்கள் அற நினைவு. அந்த நினைவு மனத்திலே தோன்ற வேண்டும். அறத்தில் விருப்பம் மனத்திலே தொடங்கினால் அது வாய்ப்பு நேரும்போது செயலாக வரும். மனத்தில் இல்லாமல் புறத்தில் இருந்தால் அது கணத்திலே மடிந்து விடும். நம் வீட்டிலுள்ள ரோஜாச் செடி பூக்கவில்லை. பக்கத்து வீட்டு ரோஜாச் செடி நிறையப் பூத்துக் குலுங்குகிறது. அந்தப் பூவிலே சிலவற்றைப் பறித்துக் கொண்டு வந்து, இந்தச் செடியில் ஒட்ட வைத்தால் என்ன ஆகும்? சில நிமிஷத்திற்கு அப்பால் அவை வாடிவிடும். அந்த மலருக்குச் செடியோடு ஒட்டுதல் இல்லை. செடி ரோஜாச் செடித்தான். பூ ரோஜாப் பூத்தான். ஆனால் அந்தச் செடியில் பூத்த ரோஜாப் பூ அல்ல. ''யார் யாரோ தர்மம் செய்து புகழ் அடைகிறார்களே; நாமும் புகழ் வாங்க வேண்டும்'' என்று எண்ணிச் செய்கிற தர்மம் உள்ளத்திலே தோன்றாமல் புறத்தில் மாத்திரம் இருக்கிறது. செடியில் பூக்காத பூவை அதனுடன் ஒட்டி வைத்தாற்போல அமைவது அது. அதனால்தான் வள்ளுவர்,

> ''மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்;
> ஆகுல நீர பிற''

என்று சொன்னார். மனிதன் குற்றம் அற்ற உள்ளம் உடையவனாக இருந்தால் அதற்கு ஏற்றபடி அவன் செய்யும் அறம் சிறப்படையும் என்கிறார். பலர் உள்ளத்தில் அன்பு உணர்ச்சி இல்லாமல் செய்யும் காரியங்கள் அறச் செயல்கள் அல்ல; தம்மை விளம்பரப் படுத்திக் கொள்ளும் செயல்களாம்.

## மனத்தைத் தடுத்தல்

தர்மம் செய்வது முக்கியம். ஆனால் தர்மம் செய்வது புறத்தில் இருந்தால் போதாது. மனத்திலிருந்து அந்த அற நினைவு உண்டாக வேண்டும். அறமல்லாத வகையிலே புகும் மனத்தை அறத்திலே செலுத்த வேண்டும். மனம் தூய்மை உடையதாக, அன்பு உடையதாக இருந்தால், அங்கே உண்டாகின்ற எண்ணங்கள் உண்மையான செயலாக மாறும். அந்தச் செயல் நிரந்தரமாகவும் நீடிக்கும். அதை அருணகிரிநாதர் தெரிந்து கொண்டார். ''நீ இருந்த படி இரு. கை காலை ஆட்ட வேண்டாம். ஆனால் ஒரு காரியம் மாத்திரம் செய். கடிவாளம் எதுவும் இல்லாமல் தலைதெறிக ஓடிக் கொண்டிருக்கிறது மனம். அதன் ஓட்டத்தை நிறுத்த வேண்டாம்; ஓடும்போது லகானை மாத்திரம் இழுத்துப் பிடி'' என்கிறார்.

தடுங்கோள் மனத்தை.

அவர், ''மனத்தை ஓடாமல் செய்யுங்கள்'' என்று சொல்லலாம். ''மனத்தை அடியோடு அழித்துவிடுங்கள்'' என்றும் சொல்லலாம். அப்படிச் சொல்லவில்லை.

மனத்தை அடக்கிப் பக்குவமாக்குகிற பெரியவர்கள் மூன்று வகையான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒன்று மனத்தைத் தடுப்பது. மற்றொன்று மனத்தை நிறுத்துவது. மூன்றாவது மனத்தை அழிப்பது. மனத்தைத் தடுப்பது என்பது, போகும் வழியை மாற்றுவது; மடை மாற்றுவது. ஓட்டத்தை நிறுத்துவது அல்ல. மனத்தை நிறுத்துவது என்றால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அசையாமல் நிற்கச் செய்வது. அப்புறம், நின்ற மனத்தை இறந்து போகும்படி செய்யும் நிலை ஒன்று. அவ்வாறு மனம் அற்ற பரிசுத்த நிலையே ஜீவன் முத்தி நிலை. இந்த நிலை எப்படி வரும்? தன் இச்சைப்படி ஓடுகின்ற மனத்தை மடைமாற்றி ஓடச் செய்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்கச் செய்து பழகப் பழகக் கடைசியில் வரும். ''இப்பொழுது மனம் உன்னைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. இனி நீ மனத்தைத் தடு'' என்று அருணகிரியார் ஆரம்பிக்கிறார். ''உன் மனக் குதிரையின் கடிவாளத்தை வேறு யார் யாரோ பிடித்துக் கொண்டு ஓட்டுகிறார்கள். அதை மாற்றி நீ பிடித்துக் கொள். பாய்ந்தோடுகிற மனத்தை நிறுத்த வேண்டாம்; மடை மாற்றி விடு'' என்கிறார்.

## தடுங்கோள் மனத்தை.

### *மணிவாசகர் அநுபவம்*

மாணிக்கவாசகப் பெருமான் தம்முடைய சொந்த அநுபவம் ஒன்றை இப்படித்தான் மிக அழகாகச் சொல்கிறார். "ஆண்டவனே, நான் உன்னை அடைவதற்கு எந்தக் காரியத்தையும் செய்ய வில்லையே! நான் இருந்தபடி இருந்தேன். என் இந்திரியங்களை நிக்கிரகம் செய்தேனா? இல்லையே! கண்ணால் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். காதால் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். அப்படி இருக்கும்போது என்னை நீ ஆட் கொண்டோயே! அது என்ன ஆச்சரியம்?" என்று வியப்பெய்திப் பேசுகின்றார். ஆண்டவன் அவரை எப்படி ஆட்கொண்டான்? அவரே சொல்கிறார்: "ஆண்டவனே, நான் பல பல பொருள்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருந்தேன். அந்தச் சிந்தனையை அடைக்கவில்லை. ஆனால் அதை உன் பக்கம் திருப்பிவிட்டேன்; நீ திரும்பும்படி அருள் செய்தாய். என் கண்கள் ஏதேதோ பார்த்துக் கொண்டே இருந்தன. அந்தப் பார்வையை நான் நிறுத்தவில்லை. அதை உன் பக்கம் திருப்பிவிட்டாய். வாய் எதை எதைப் பற்றியோ பேசிக் கொண்டே இருந்தது. அந்த வாயை அடைக்கவில்லை. ஆனால் உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கும்படியாகச் செய் தாய். ஆகவே நான் முன்பு எப்படி சிந்தித்துப் பார்த்துக் கேட்டுப் பேசிக்கொண்டு இருந்தேனோ, அப்படியேதான் இருந்து கொண் டிருந்தேன். ஆனால் அவை முன் போய்க் கொண்டிருந்த பாதையைத் திருப்பி, உன் பக்கமாகப் போய்க் கொண்டே இருக்கும்படி செய்தேன்; மடை மாற்றிவிட்டேன். அவ்வளவுதான்" என்றார்.

ஓர் ஓட்டைக் குடம் இருக்கிறது. அந்த ஓட்டைக் குடத்தில் தண்ணீரை எவ்வளவு தடவை நிரப்பி வைத்தாலும் தண்ணீர் அந்தத் துவாரத்தின் வழியாக ஒழுகிப் போய்விடுகிறது. அந்த ஓட்டைக் குடத்தில் அமுதத்தை நிரப்ப வேண்டும். தண்ணீர் விட்டாலே ஒழுகிப்போய்விடுகிற ஓட்டைக் குடத்தில் அமுதத்தை விட்டால் ஒழுகிப் போகாமல் இருக்குமா? அமுதக் கடலாக இருக்கிற இறைவனிடத்திலிருந்து அமுதத்தை அகப்பையினால் எடுத்துக் குடத்திற்குள் விட்டால் ஒழுகிப் போகும். ஆகவே மாணிக்கவாசகர் என்ன செய்தார்? அந்தக் குடத்தையே அமுதக்

*கடலுக்குள் போட்டுவிட்டார். எந்தத் துவாரத்தின் வழியே அமுதம் ஒழுகிப் போய்விடும் என்று அஞ்சினாரோ, அந்தத் துவாரத்தின் வழியே அமுதம் உள்ளே புகுந்து குடத்தை நிரப்பிற்று. முன்னே இருந்த துவாரம் அடைபட்டு விடவில்லை. ஆனால் அமுதம் அதன் வழியாகவே குடத்திற்குள் நிரம்பிவிட்டது. குடமும் அமுதக் கடலுக்குள்ளேயே கிடக்கிறது. ஓட்டைகளை அடைக்காமல் குடம் நிரம்பிவிட்டது எவ்வளவு வியப்பு!*

''சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே! மலையே! நின்னைத்
தந்தனை; செந் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டுமில்இத் தனியே னேற்கே!

*என்பது திருவாசகம்.*

*''இதைப் போல நீங்கள் செய்ய வேண்டும்'' என்கிறார் அருணகிரிநாதர். தன் இச்சைப்படி ஓடுகின்ற மனத்தை நிறுத்த முடியாது. அது ஓடுகின்ற வேகத்திற்கு அங்கங்கே முட்டுக் கட்டை போட்டு, மடை மாற்றிவிட வேண்டும். ஓடுகின்ற மனத்தை அங்கங்கே தடுக்க வேண்டும். தடுப்பதாவது அதன் போக்கைத் திருப்பி ஓடவிடுவது.*

## *வெகுளியை விடுதல்*

*இதனால் என்ன ஆகும்? அப்போதைக்கு மனம் கொஞ்சம் வசப்பட்டது போலாகும். ஆனால் தன் இச்சைப்படி போக முடியாத காரணத்தினால் கோபம் உண்டாகும். நம்மை நாமே கோபித்துக் கொள்வோம். மற்றவர்களை அடித்துப் பழகின கை, அடிக்க ஆள் அகப்படாவிட்டால் தன்னையே அடித்துக் கொள்ளும். வெறிபிடித்த நாய், கடிப்பதற்கு வேறு எதுவும் அகப்படாவிட்டால் தன்னைத் தானே கடித்துக் கொள்ளும். அது இயற்கை. பொறிகளின் செய்கை தடுக்கப்படவில்லை என்றாலும், மடை மாற்றப் பட்டுவிட்டதல்லவா? அதனால் உள்ளே கோபம் கொந்தளிக்கும். ''அந்தக் கோபத்தை அழி'' என்கிறார் அருணகிரியார்.*

விடுங்கோள் வெகுளியை.

எத்தனையோ சொல்வதற்கு இருக்க, அருணகிரியார் கோபத்தை விடுங்கள் என்று சொன்னாரே என்றால், அதற்குக் காரணம் இருக்கிறது.

எல்லாவற்றையும் பற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மனத்திற்கு உண்டு. இப்படிப் பற்றிக் கொள்ள நினைப்பதைத் தான் காமம் என்பர்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்"

என்று திருவள்ளுவர் பேசுகின்றார். மனிதர்களுக்குத் துன்பம் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களுள் ஒன்று அவா. மற்றொன்று வெகுளி. அடுத்ததாக இருப்பது, ஒன்றை ஒன்றாக நினைக்கின்ற மயக்கம். முதலில் இருக்கின்ற அசுரன் அவா என்கிற காமம். மனம் ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றுவதுதான் ஆசை அல்லது அவா. மனத்தை நிறுத்த வேண்டுமானால் காமத்தை நிறுத்த வேண்டும். மனத்தின் சஞ்சாரம் அவாவின் வெளியீடு. அவா என்பதுதான் எல்லாப் பிறப்புக்கும் மூலவித்து. நமக்கு உபதேசம் செய்ய வருகின்ற அருணகிரியார் பிறப்புக்கு மூலமாக இருக்கின்ற பொருளைக் கெடு என்று மறைமுகமாகப் பாடுகிறார். அவர் காமம் இல்லாமல் இரு என்று சொன்னால் பயமாக இருக்கும். நமக்கு விளங்காது. காமத்தை அடக்கு என்று சொல்வதும், மனத்தைத் தடு என்று சொல்வதும் ஒன்றுதான்.

அடுத்தபடி, ஆசையினால் கோபம் உண்டாகிறது. காமம், வெகுளி இரண்டும் ஒழிய வேண்டும். முதலில் அதை அப்படியே சொல்லாமல், **"தடுங்கோள் மனத்தை"** என்றும், **"விடுங்கோள் வெகுளியை"** என்றும் சொன்னார். "ஆறுவது சினம்" என்று ஔவையும் சொன்னாள்.

## பற்று நீங்க வழி

**கோ**பத்தை அடக்கிவிட்டோம். எல்லாத் துன்பத்திற்கும் காரணமாய் இருக்கிற பற்றை எப்படி ஒழிப்பது? அதைப் போக்குவதற்கு வழி உண்டு. அது தானம். பத்து ரூபாய் நம் கணக்கில் கூடிவிட்டது என்றால் அந்தப் பத்து ரூபாயைச் செலவிட்டு

விட்டால் முன்பு இருந்த நிலை வந்துவிடுகிறது. அதே போலப் பல பல பொருள்களிடத்தில் பற்றுக் கொண்டுள்ள மனத்திடம் பற்றை விட்டுவிடு என்று சொன்னால் பயன் இல்லை. தேடின பொருள்களிடத்தில் பற்று இருப்பது போல, அந்தப் பொருள் களைப் பிறருக்குக் கொடுப்பதிலும் விருப்பம் வைக்க வேண்டும். பல பல பொருள்களை ஈட்டிப் பற்று வளர்கிறது; அவற்றை உவகையோடு பிறருக்குக் கொடுப்பதன் மூலம் அந்தப் பற்றுக் குறைந்துவிடுகிறது. ஒரு குழந்தை காகிதத்தை நிறையக் கிழிக் கிறது. அதைக் கிழிக்காதே என்று சொல்வதில் பயன் இல்லை. அப்போதைக்குப் பயந்து கொண்டு நம் முன் சும்மா இருந்தாலும் நாம் இல்லாதபோது அது எல்லாப் புத்தகங்களையும் கிழித்து விடும். ஆகவே நாம் என்ன சொல்ல வேண்டும்? "கிழித்துப் போட்டவைகளைப் பொறுக்கிக் கொண்டுபோய்க் குப்பைத் தொட்டியில் போடு" என்று சொல்ல வேண்டும். குழந்தைக்குக் கிழிப்பது முதல் விளையாட்டு; கிழித்ததை வெளியில் கொண்டு போய்ப் போடுவது இரண்டாவது விளையாட்டாக அமைகிறது. அதனால் அறை முன்பு இருந்தது போலவே சுத்தமாக இருக்கும்.

பலபல பொருள்களை ஈட்டுவதன் மூலம் மனம் அழுக்கடை கிறது. ஈட்டிய பொருளைப் பிறருக்குத் தானம் செய்வதன் மூலம் அது மறுபடியும் சுத்தம் அடைந்துவிடுகிறது. பல காலமாகப் பொருளை ஈட்டி ஈட்டிப் பழக்கப்பட்ட மனத்தை மாற்ற வேண்டு மானால், அதற்கு மாற்று மருந்தாக இருப்பது அறநினைவு; தியாகம் செய்யும் உணர்ச்சி பிறருக்குக் கொடுக்கும் செயல். ஆகவே அருணகிரியார்,

தானம் என்றும் இடுங்கோள்

என்று உபதேசிக்கிறார்.

## தான வகை

"எவற்றைத் தானம் பண்ண வேண்டும்?" என்று கேட்கலாம். தானம் என்பது அணா பைசாவைக் கொடுப்பது மாத்திரம் அன்று. நல்லது நினைப்பதே தானம். நல்ல வாக்குச் சொல்வதே தானம். இந்தக் காலத்தில் எத்தனை பேர் வாக்குத் தானம் செய்கிறார்கள்! "பாவம்! இந்தப் பிள்ளை ஏழை; உங்கள் பள்ளியில் சேர்த்துக்

கொள்ளுங்கள்'' என்று ஒருவர் சிபாரிசு செய்கிறார். அதனால் அந்தக் குழந்தை பள்ளியில் சேர்ந்து, படித்து ஐ.ஏ.எஸ். பரீட்சையில் தேர்ச்சி பெறுவதற்குரிய அடிப்படையான உபகாரத்தைச் செய்யவில்லையா அவர்? உண்மையான தூய நினைப்பினால் பலர் பிறருக்குத் தானம் செய்கிறார்கள். தாய் போடுகின்ற சாப்பாடு இந்த உயர்ந்த நிலையைச் சேர்ந்தது. குழந்தை வளர வேண்டுமென்று அவள் நினைக்கிறாள். அந்த நினைப்போடு வெறும் மோர்ஞ்சாதத்தைத் தான் பிசைந்து குழந்தைக்குப் போடுகிறாள். இருந்தாலும் அவளது தூய அன்பு நினைப்பினாலே அந்தக் குழந்தை வளருகிறது. சமுத்திர அலைகளைக் காட்டிலும், நாம் பார்க்கிற காற்று அலைகளைக் காட்டிலும், நாம் கேட்கிற ஒலி அலைகளைக் காட்டிலும், எண்ண அலைகள் மிகுதியான சக்தியை உடையவை. நாம் வாழ வேண்டுமென்று பெரியவர்கள் நினைக்கின்ற நல்ல நினைப்பானது, கண்ணுக்குத் தெரியாத மிக நுட்பமான சக்தி உடையது. அந்தச் சக்தியின் வன்மையினால் நம்மிடத்திலுள்ள கெடுதல் மறைந்துவிடும். கல்லை எடுத்து ஒருவனை அடிக்கிறோம்; மண்டை உடைந்து ரத்தம் வருகிறது. இரண்டு நாளில் காயம் ஆறிப்போகிறது. ஆனால் ஒருவனை வாயினால் அவன் மனம் புண்படும்படி பேசிவிடுங்கள். அந்தச் சொல் வெளிப்படையாக உடம்பில் காயத்தை ஏற்படுத்தாவிட்டாலும், அவன் உள்ளத்தை எவ்வளவு நோக அடித்துவிடுகிறது?

''தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு''

என்று வள்ளுவர் சொல்லவில்லையா? வெறும் சொல், வெறும் காற்று; அது படும்போது அறிவுடையவனுக்கு, உணர்ச்சி உடையவனுக்கு, உயிர் துடிக்கிறது. இது குழந்தைக்கு விளங்காது.

செயலைக் காட்டிலும் சொல் நுட்பமானது; அதைக் காட்டிலும் எண்ணம் நுட்பமானது. அவற்றின் விளைவுகளும் அப்படியே வரவர நுட்பமானவே. நெஞ்சின் நினைப்பு அலைகள் வேலை செய்வதைக் கண்டுபிடிக்க மேல்நாட்டு விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகிறார்கள். அதற்கு உருவம் உண்டு, நிறம் உண்டு என்று கண்டுபிடித்துப் புத்தகம் எழுதி இருக்கிறார்கள். நினைப்பு எத்தனைக்கு எத்தனை தீயதாக இருக்கிறதோ அத்தனைக்கு அத்தனை அது சார்ந்த இடங்கள் துன்பமயமாக இருக்கும்.

''அவன் கொள்ளிக் கண்ணால் பார்த்தான். செடி பட்டுப் போய் விட்டதே! குழந்தை அன்றைக்கே ஜுரம் என்று கீழே படுத்துக் கொண்டு விட்டது'' என்று சொல்வதைக் கேட்பது இல்லையா? உள்ளத்திலே தோன்றுகிற அசுர சக்திகளுக்கு அத்தனை ஆற்றல் உண்டு.

பிறருக்குத் தானம் கொடுக்க வேண்டுமென்ற விருப்பம் உள்ளத்தின் விளைவு. உள்ளத்தில் அன்பு இருந்தால்தான் கொடுக்கத் தோன்றும். உள்ளத்தில் பற்று மெல்ல மெல்ல நழுவி, தன்னிடம் உள்ள பொருள்களை எல்லாம் பிறருக்குக் கொடுக்க வேண்டுமென்ற அன்பு நினைவு எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுது இறைவன் நமக்கு அருள் பாலிக்க வருகிறான்.

> தடுங்கோள் மனத்தை, விடுங்கோள்
> வெகுளியைத் தானம் என்றும்
> இடுங்கோள்.

## உள்முகப் பார்வை

இந்த விரிந்த உலகத்திலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் சென்று கொண்டே இருக்கிறார்கள். அவர்களது பார்வை எல்லாம் வெளி நோக்காக இருக்கிறது. ஒருவர் பார்த்ததை இன்னொருவர் பார்க்கவில்லை. அவரவர்கள் தாம் தாம் கண்டதே உண்மை எனச் சொல்கிறார்கள். எல்லோரும் மையத்தின் வெளிவட்டக் கோட்டில் நிற்கிறார்கள். அவர்கள் பிரயாணத்தை வட்டத்தின் உள்முகமாகச் செலுத்தினால் எல்லோரும் வந்து சேருகின்ற இடம் மையப் புள்ளி ஒன்றுதான். புற நோக்கமானது வேறுபாட்டை வளர்த்து வரும். பார்வையை உள்முகமாகச் செலுத்தினால், வேறுபாடுகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கிற பரம்பொருளைத் தெரிந்து கொள்ள முடியும்; அன்பு பெருகி, நாம் எல்லோரும் சகோதரர்கள், இறைவனுடைய குழந்தைகள் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

''பல பல பொருள்களைப் பார்த்துப் பார்த்து விரிந்து கொண்டே போகிற மனத்தைத் தடுத்து உள்முகமாகச் செலுத்து; உள்ளே பொங்குகின்ற கோபத்தை அடக்கு. எல்லாவற்றையும் பற்றிக் கொள்ள வேண்டுமென்ற பேராசையால் ஈட்டிக் கொண்டே இருக்கும் பொருள்களை எல்லாம் வாரி வாரித் தானம் வழங்கு.

இப்படிச் செய்தால் ஒரு நடு நிலைமை வரும். நீ அதே நிலையில் இருந்து கொண்டிரு'' என்பது அருணகிரியார் உபதேசம்.

தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
வெகுளியை; தானம் என்றும்
இடுங்கோள்; இருந்த படிஇருங்கோள்.

## இருந்தபடி இருத்தல்

இருந்தபடியே இருந்து கொண்டு உயிர்களுக்கு ஞானத்தைப் போதிக்கிறார் தட்சிணாமூர்த்தி. ஆலயத்திற்கு வருகின்றவர்களுக்கும் மனோவேகம் கெட்டுக் கொஞ்சம் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்யட்டும் என்பதற்கு வழிகாட்டியாக அவர் தெற்குமுகம் நோக்கி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். பெரியவர்கள் பரமேசுவரன் சந்நிதானத்தில் வணங்கிவிட்டு, அம்பிகையையும் தரிசனம் செய்து கொண்டு, தட்சிணா மூர்த்தியின் சந்நிதானத்தில் உட்கார்ந்து கொண்டு மந்திரஜபம் செய்வார்கள். இறைவன் பிறரை உட்கார வைக்கத் தானும் உட்கார்ந்திருக்கிறான்.

இப்படி மற்ற மற்றச் செயல்கள் செய்யாமல், மனம் அடங்கி, செயல் அடங்கி மௌனமாக இருந்தபடி இருப்பார் களானால் அருள் அங்கே வரும்.

மனத்தில் பல காலமாக ஏறியிருக்கிற அழுக்கைத் துடைக்க வேண்டும். காமம் அற்றுப் போக மனத்தைத் தடுக்க வேண்டும். வெகுளியை ஓட்ட வேண்டும். பல காலமாக இருந்த பற்றுக் கழி வதற்காகத் தானம் செய்ய வேண்டும். இந்த மூன்று முயற்சியும் தீவிரமாக இருந்தால் மனத்தினுடைய மாசு போகும்; அது சுத்தமாகும். ஆண்டவன், ''எந்த இடம் சுத்தமாக இருக்கிறது? நாம் தலையிலுள்ள அருள் மூட்டையை எங்கே சிறிது வைத்து விட்டு உட்காரலாம்?'' என்று காத்துக் கொண்டிருக்கிறான். சுத்தமான உள்ளத்தை வைத்துக் கொண்டு, இருந்தபடி இருந்தான் அவன் அருள் அங்கே வெளிப்படும்.

## தடை நீக்கம்

ஒரு விளக்கை ஏற்றி வைத்து அதன்மேல் மரக்காலைக் கவிழ்த்தால் விளக்கின் ஒளியைப் பார்க்க முடியாது. மரக்கால்

விளக்கின் ஒளியை மறைத்து, விளக்கை நமக்குக் காட்டாமல் தன்னைக் காட்டுகிறது. ஆனால் விளக்கின் மேல் கண்ணாடி குளோப்பைக் கவிழ்த்தால் அதற்குள் இருக்கிற விளக்கும் தெரிகிறது; விளக்கின் ஒளியும் வெளிப்படுகிறது. மரக்காலுக் குள்ளும் கண்ணாடிக் குளோப்புக்குள்ளும் இருப்பது விளக்குத் தான். ஆனால் மரக்கால் தன்னுள் உள்ள விளக்கின் ஒளி வெளிப் படுவதற்குத் தடையாக இருக்கிறது. கண்ணாடிக் குளோப் தடையாக இராமல் வெளியிடுகிறது. இதைப்போல் அகங்கார, மமகாரம் உடையவர்களுக்குள் ஆண்டவன் இருந்தாலும் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. அவன் அருள் ஒளி வெளிப் படுவதற்கு அவைகளே தடையாக இருக்கின்றன. அகங்காரம், மமகாரம் நீங்கியவர்கள் பரிசுத்தமான கண்ணாடி போல் தம்முள் இருக்கும் ஆண்டவன் அருள் ஒளி வெளிப்படுவதற்குத் தடை ஏதும் இராமல் இருக்கிறார்கள்.

எல்லோர் உள்ளத்திலும் ஆண்டவன் இல்லாமல் இல்லை. புதிதாக அவன் வெளிப்படுவதில்லை. மறைந்திருந்தவன் வெளிப் படுகிறான். ''பரிசுத்தமான உள்ளம் உடையவர்களாக இருங்கள். அருள் வந்து தானே வெளிப்படும்'' என்கிறார். இல்லாத ஒன்று எப்படி வெளிப்பட முடியும்? அது இருக்கிறது. ஆனால் வெளிப் பட முடியாமல் அகங்கார மமகார அழுக்குகள் அதற்குத் தடை யாக இருக்கின்றன. ''அந்த அழுக்கைக் கழுவி விடுங்கள். அருள் தானே வெளிப்படும்'' என்கிறார் அருணகிரியார்.

## ஆற்று நீர்

ஆற்று நீர் பாய்ந்து கொண்டே இருக்கிறது. அதன் கரையில் மேடான வயல் ஒன்று இருக்கிறது. அதில் தண்ணீர் பாய்கிற தில்லை. மேடாக இருக்கிறதனால் பாய்கிறதில்லை. தண்ணீர் பாய வேண்டும் என்று வயலுக்குச் சொந்தக்காரன் நினைக்கிறான். ஒரு பெரியவர் அதற்கு வழி சொல்கிறார். ''ஆற்றோரத்தில் மேடாக இருக்கிறதே; அந்த மேட்டை வெட்டி விடு; நடுவில் இருக்கிற புதர்களை எடுத்துப் பள்ளமாக்கு. பிறகு பார், தானே ஆற்று நீர் உன் வயலில் பாயும்'' என்கிறார். அவர் சொல்வது நியாயந்தானே? ஆற்று நீரைக் குடம் குடமாக எடுத்துவிட்டாலும் வயல் முழுமையும் பாய்ச்ச முடியாது. வயலில் நீர் பாயத்

தடையாயிருக்கும் மேட்டையும் புதரையும் நீக்கினால், நீர் தானே பாயும்.

இது போலவே அருணகிரியார் ஆண்டவன் அருள் நீர் பாய வழி சொல்கிறார். ''இந்த மேட்டையெல்லாம் வெட்டிவிட்டுச் சும்மா இரு. அது தானே பாயும், பார்'' என்கிறார்.

## கிணற்று நீர்

பூமிக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது. அது தானே வெளிப் படும்படி செய்யலாம். நல்ல கூர்மையான ஆயுதங்களால், தண்ணீர் வெளிப்படத் தடையாக இருக்கிற மண்ணைத் தோண்டினால் தண்ணீர் குபுகுபு என்று வெளிப்படுகிறது. அது வெளிப்படுவதற்குத் தடையாக இருந்தது மண். அது தன்னைக் காட்டி, தன்னுள் இருக்கும் தண்ணீரை மறைத்துக் கொண்டிருக்கிறது. அதை அகற்றிவிட்டால் அந்தப் பூமியில் இருந்தே தண்ணீர் வெளிப்படு கிறது. அதைப் போல நம்முள் இறைவன் இருந்தாலும் அருள் வெளிப்படுவதற்குத் தடையாகச் சில இயல்புகள் இருக்கின்றன. விளக்கை மறைத்துக் கொண்டிருக்கும் மரக்காலைப் போல, தண்ணீர் வெளிக்குத் தெரியாமல் மறைத்துக் கொண்டிருக்கும் மண்ணைப் போல அவை இருக்கின்றன. அவற்றை ஒழித்துவிட்டால், இறைவன் அருள் தானே வெளிப்படும். காமம், வெகுளி, உலகத்துப் பொருளை உண்மையாகக் கொண்டு அவற்றைப் பற்றிக் கொண்டிருக்கும் மயக்கம் ஆகிய மூன்றையும் நாம் ஒழித்துவிட்டால் அருளே மயமாக இருக்கிற ஆண்டவன் வெளிப்படுவான்.

## சிற்பி செய்யும் தொண்டு

ஒரு பெரிய பாறாங்கல்லைக் கொண்டு வந்து கோயிலுக்கு எதிரே போட்டிருக்கிறார்கள். அந்தக் கல்லை நாம் பார்க்கிறோம். அதே கல்லை ஒரு சிற்பியும் பார்க்கிறான். நாம் கல்லைத்தான் பார்க்கிறோம். அவன் கல்லையும் பார்க்கிறான்; அதற்குள் இருக்கிற முருகனது வடிவத்தையும் பார்க்கிறான். ஆனால் நமக்கு முருகனது வடிவம் தெரியவில்லை. சிற்பி அந்த முருகனது வடிவம் நமக்குத் தெரியாதபடி மறைத்திருக்கின்ற பகுதிகள் எல்லாவற்றையும் தன்னுடைய உளியால் செதுக்கிச் செதுக்கித்

தள்ளுகிறான். அப்பொழுது முருகப்பெருமானது உருவம் நமக்குத் தெரிகிறது. அப்பொழுதுதான் அந்த உருவம் வரவில்லை. அதற்கு முன்னாலேயே அதற்குள் மறைந்திருந்த உருவத்தை அந்தச் சிற்பி மாத்திரம் கண்டான். இப்பொழுது நாமும் காணும்படியாகச் செய்தான்.

அதைப் போல, நம்முள் இருக்கிற இறைவனது அருள் ஒளியை நாம் காணமுடியவில்லை. அதற்குக் காரணம் அவன் உள்ளே இல்லை என்பது அல்ல. அதற்குத் தடையாக இருக்கிற பொருள்கள் தங்களைக் காட்டுகின்றன; அந்த அருள் ஒளியைத் தடை செய்கின்றன. அவற்றை நாம் செதுக்கி எறிந்துவிட்டால் அந்த அருள் ஒளி தானே வெளிப்படும்.

## சூரும் குன்றமும்

யாருடைய அருள் வெளிப்படும்?

எழு பாரும்உள்ளக்
கொடுங்கோபச் சூருடன், குன்றம் திறக்கத் துளைக்க
வைவேல்
விடும்கோன் அருள்வந்து தானே உமக்குவெளிப்படுமே.

''விடுங்கோள் வெகுளியை'' என்று சொன்னார். வெகுளி இருந்தால் கொடுங்கோபச் சூரன் ஆவோம். சூரன் அகங்காரத்தின் உருவம். அகங்காரத்தின் விளைவு, மமகாரம். அந்த மமகாரமே கிரௌஞ்சாசுரன்; சூரனுக்குக் கவசம் போல் இருந்தவன் அவ்வசுரன். கிரௌஞ்சாசுரனாகிய குன்றத்திற்குள் சூரன் ஒளிந்திருந்தான். ''என் வீடு, என் மனைவி, என் பிள்ளை'' என்று விரிந்து கொண்டே போகின்ற மமகாரத்திற்குள் ஒளிந்திருப்பது நான் என்ற அகங்காரம். ஆண்டவன் தன்னுடைய கூர்மையான வேலைக் கிரௌஞ்ச மலைக்குள் செலுத்தி மலையும் தவிடு பொடியாகப் போகும்படி செய்தான்; அதனுள் ஒளிந்து கொண்டிருந்த சூரனையும் அழிந்து போகும்படி செய்தான். மலை போலச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிற மமகாரம், அதற்குள் ஒளிந்திருக்கும் நான் என்ற அகங்காரம் ஆகிய இரண்டையும் தன்னுடைய ஞானமாகிய வேலைச் செலுத்தி ஒழிப்பவன் முருகன் என்பதை இந்தத் திருவிளையாடல் புலப்படுத்துகிறது.

உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் வாழ வேண்டுமென்பது இறைவன் கருணை. எழுபாரும் உய்ய வைவேல் விடும் கோன் அவன். ''சூரனும் கிரௌஞ்சாசுரனும் அழிந்தால், அகங்காரமும் மமகாரமும் ஒழிந்தால், உலகம் சுபிட்சத்தை அடையும். தான தர்மங்கள் நடைபெறும். தவம் செய்ய முடியும்'' என்று கண்டு கொண்டு தன்னுடைய வேலைச் செலுத்தினான் முருகன். அந்த வேல் கூர்மையானது; வைவேல்.

''இவ்வாறு கூர்மையான வேலை விட்ட முருகனுடைய அருள் வந்து தானே, உமக்கு வெளிப்படும். மனத்தைத் தடுத்து, கோபத்தை அழித்துவிட்டு ஈட்டி வைத்திருக்கின்ற பொருள்களைத் தானம் செய்து, நீங்கள் இருந்தபடி இருங்கள்'' என்பது அருண கிரியார் உபதேசம்.

தடுங்கோள் மனத்தை; விடுங்கோள்
  வெகுளியைத் தானம்என்றும்
இடுங்கோள்; இருந்த படிஇருங்
  கோள்; எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன், குன்றம்
  திறக்கத் துளைக்க, வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே
  உமக்கு வெளிப்படுமே.

*(மனத்தை அதன் போக்கிலே விடாமல் தடுங்கள்; கோபத்தை விட்டு விடுங்கள்; என்றும் தானம் இடுங்கள்; அந்த நிலையில் இருந்தபடியே இருங்கள்; அப்போது, ஏழுலகமும் உய்யும்படியாக, கொடுமையான கோபத்தைக் கொண்ட சூரனோடு கிரௌஞ்சமென்னும் குன்று திறக்கவும், கூர்மையான வேலை விடும் இறைவனாகிய முருகனது அருள் தானே வந்து உமக்கு வெளிப்படும்.*

*தடுங்கோள், விடுங்கோள், இடுங்கோள், இருங்கோள் என்பன வழக்குச் சொற்கள். சூர்–சூரபன்மன், குன்றம் – கிரௌஞ்சமலை. வை– கூர்மை).*

# வேலன் துணை

## *பெரியவருடைய அச்சம்*

ஒரு பெரியவர்: அவருக்கு வைரம், முத்து முதலியவை அடங்கிய ஒரு சிறு முடிச்சுக் கிடைத்தது. அற்கு முன்னால் அவர் என்ன என்ன மூட்டைகளையோ வைத்திருந்தார். அந்தக் காலங் களில் அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஆனால் இன்றைக்கு வைரம், முத்து அடங்கிய இந்த முடிச்சுக் கிடைத்த வுடன் பயம் வந்துவிட்டது. அதை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல் அஞ்சினார். தம்முடன் இருந்த ஒரு பையனிடம் அந்த மூட்டையைக் கொடுத்து, ''அப்பா, இந்த மூட்டையை மிகவும் பாதுகாப்பாக எடுத்துக் கொண்டு என்னுடன் வா. நாம் இங்கே இருக்கக் கூடாது. வேறு ஓர் இடத்திற்கு ஓடிப் போய் விடுவோம்'' என்றார்.

நடுவழியில் அந்தப் பையன் மெல்ல முடிச்சைத் திறந்து பார்த்தான். அதைப் பக்கத்தில் இருந்த வேறு சிலரும் பார்த்தார்கள். அவனிடத்தில் உள்ள அந்த முடிச்சை எப்படித் திருட்டுத்தன மாகக் கைப்பற்றிக் கொண்டுபோவது எனச் சிலர் நினைத்தார்கள். ''அப்பா, இந்தப் பகல் நேரத்தில் எங்கே பார்த்தாலும் மக்கள் திரண்டு இருக்கிறார்கள். இவர்களுக்குத் தெரியாமல் நாம் எப்படிப் போவது? இவர்கள் எல்லோரும் நம்மிடம் உள்ள முடிச்சைப் பற்றிக் கொண்டு போகப் பார்க்கிறார்களே!'' என்று பெரியவர் மிகவும் அஞ்சினார்.

இரவு வந்தது. 'இந்த ராத்திரியில் எங்கேயாவது ஓடிப் போய்விடுவோம்' என்று முதலில் அவர் நினைத்தார். ஆனால் அவரை வேறு ஒரு பயம் பற்றிக் கொண்டுவிட்டது. ''பகல் நேரத் திலாவது யாராவது கை முடிச்சைப் பற்றினால் பற்றுகின்றவனது முகம் தெரியும். இரவுக் காலத்திலோ கள்ளர் பயம் அதிகமாக இருக்கும். யாரேனும் கையில் உள்ளதைத் தட்டிப் பறித்துக்

கொண்டு போனால் பறித்துக் கொண்டவனது முகத்தைக்கூடப் பார்க்க முடியாது. கூவி அழைத்தால் யாரும் உதவி செய்ய வரமாட்டார்களே!'' என்று நடுங்கினார்.

ஆகவே, அவர் பையனைப் பார்த்துச் சொல்லுகிறார்: ''நாம் கையிலுள்ள முடிச்சைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டு மென்றால் பகல், இரவு அற்ற ஓர் இடத்திற்குப் போனால்தான் அது சாத்தியமாகும். என்னுடன் ஓடிவா. நாம் இருவரும் பகல், இரவு அற்ற ஒரு வெளியில் போய் ஒளிந்து கொள்வோம்'' என்கிறார். பையன், ''சரி'' என்கிறான்.

அந்தப் பையனுக்கு அவ்வளவாகச் சாமர்த்தியம் போதாது என்பது பெரியவரின் எண்ணம். முன்பு அவன் தலையில் கரி மூட்டையை ஏற்றிவைத்து அழைத்துப் போயிருக்கிறார்; விறகு மூட்டையைத் தூக்கிவரச் செய்திருக்கிறார். இன்றைக்கோ அவனிடம் வைர மூட்டையை அல்லவா கொடுத்திருக்கிறார்? அவன் அதைப் பத்திரமாக எடுத்து வருவான் என்ற நம்பிக்கை இல்லை.

## யார் துணை?

அவர்களிடமுள்ள மூட்டையை வழியில் யாரும் பறித்துக் கொண்டு போகாமல் இருக்க வேண்டுமானால், பாதுகாப்போடு போவதுதான் நலம். பாதுகாப்பான இடம், இரவும் பகலும் இல்லாத இடம் என்று தெரிந்து கொண்டார். அந்த இடத்துக்குப் போய்ச் சேரும் வரையிலும் பாதுகாப்பு வேண்டுமே! அதற்கு யாரைப் பாதுகாப்பாளனான நியமிப்பது? அவன் திருடர்களை அடித்து ஒழிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். அவர்களை எதிர்ப்பதற்குக் கையில் தக்க ஆயுதம் தாங்கியவனாகவும் இருக்க வேண்டும்.

## வேலாயுதன் காப்பு

அவருடைய நல்ல காலம், கூர்மையான வேலைத் தாங்கிய வேலாயுதன் பாதுகாப்பாளனாக வர இசைந்தான். அவ்வளவு தான். அந்தப் பெரியவர் மிக்க மகிழ்ச்சியோடு அந்தப் பையனைப் பார்த்து, ''சீக்கிரம் ஓடி வா. பகல், இரவு அற்ற ஒரு வெளிக்குப் போய்விடுவோம். இங்கே இருக்கக் கூடாது. யார் எந்தச் சமயத்தில்

நம்மிடம் உள்ள செல்வத்தைப் பறித்துப் போவார்களோ தெரியாது. அதற்குள் யார் கண்ணிலும் படாத ஓர் இடத்திற்கு நாம் போய் விட வேண்டும்'' என்கிறார். மடியில் கனம் உள்ளவர் அல்லவா?

அப்படி அழைப்பது போல ஒரு பாடலைப் பாடுகிறார் அருணகிரியார். இங்கே பையன், மனம். வைரம், முத்து அடங்கிய முடிச்சுத்தான் ஞானம். பெரியவர், ஆத்மா. ஆத்மாவாகிய பெரியவர் தம்மிடம் உள்ள ஞான முடிச்சைக் காப்பாற்றிக் கொள்ள மனம் என்னும் பையனிடம் அதைக் கொடுத்து, ''முருகனாகிய வேலா யுதனது துணை கொண்டு அல்லும் பகலும் இல்லாத, சூதானது அற்ற, வெளிக்கு ஓடிப்போய் ஒளிந்து கொள்ளலாம், வா!'' என்று அழைக்கிறார்.

வேதா கமசித்ர வேலா
  யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக
  அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே
  ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய், இனிமன மேதெரி
  யாதுஒரு பூதர்க்குமே.

## மனக் குரங்கு

நம்முடைய மனம் நல்ல வழியைக் காட்டினாலும் காட்டும்; அல்லாத வழியைக் காட்டினாலும் காட்டும். அது குரங்கு போன்றது. குரங்கு சிட்டுக் குருவிகள் கட்டுகிற கூட்டைப் பிரித்து எறியும். மாலைகளைப் பிய்த்து எறியும். கட்டியதைப் பிரித்து எறியும் இயல்புடைய குரங்குகளை ஆட்கொண்டான் இராமன். அந்தக் குரங்குகள் குரங்கரசனாகிய சுக்கிரீவனது தலைமையில், ஆங்காங்கே சிதறிக் கிடந்த கற்களை எல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு வந்து இலங்கைக்கு அணை கட்டின. கட்டியதைப் பிரிக்கும் இயல்புடைய குரங்குகள் இராமனோடு சேர்ந்தமையால் பிரிந்த வற்றை ஒன்று சேர்த்துக் கட்ட உதவின. அவ்வாறே மனம் என்னும் குரங்கு தன் விருப்பப்படி திரிந்தால் நாம் நல்ல எண்ணங்களைக் கட்டக் கட்ட அவற்றைக் குலைத்து, செய்கின்ற

முயற்சியை எல்லாம் சின்ன பின்னப்படுத்துகிறது; துன்பத்தை உண்டாக்குகிறது. ஆனால் அதே குரங்கை இராமன் ஆண்டது போல நாமும் அடக்கி ஆண்டுவிடுமோனால் அதுவே நமக்கு உதவியாக இருக்கும்.

## மனமென்னும் யானை

மதம் பிடித்த யானையினிடம் யாராவது போனால் தன் துதிக்கையினால் அவர்களைப் பற்றி இழுத்து மிதித்து அழித்து விடுகிறது. அதைக் கண்டால் எல்லோரும் ஓடுகிறார்கள். அந்த யானையை அடக்கிய பிறகு தன்னைக் குத்தி நோவ அடிக்கும் மாவுத்தனுக்குப் பணிந்து கீழே கிடக்கும் அங்குசத்தை எடுத்துக் கொடுக்கிறது. தன்னைக் கட்டுவதற்குரிய இரும்புச் சங்கிலியைத் தன் துதிக்கையினாலேயே அவனிடம் எடுத்துக் கொடுக்கிறது. காலையும் தூக்கிக் காட்டுகிறது. மதம் அடங்கின யானையாக மனம் ஆகிவிட்டால் தன்னைக் கட்டுகிற வழியை அதுவே காட்டும். இல்லாவிட்டால் மதம் பிடித்த யானை சுற்றியுள்ளவர் களுக்குத் துன்பத்தைக் கொடுத்து, தன்னை அடக்க வருகின்ற மாவுத்தனையும் கொன்று வீழ்த்துவது போலத் துன்பம் கொடுத்து, ஆத்மாவையே கொன்றுவிடும்.

அத்தகைய மனத்தைப் பார்த்து அருணகிரிநாதர் சொல்லு கிறார். அந்த மனம் இப்போது நல்ல மனமாகிவிட்டது. முன்பு மதம் பிடித்த யானை போலத் தன் இச்சைப்படி எங்கெங்கோ ஓடித் திரிந்து கொண்டிருந்தது. தன் வழியில் குறுக்கிடுபவர்களின் மேல் சினம் கொண்டு சீறி விழுந்தது. உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் தானே பற்றிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையால் அலைந்து ஓடிற்று.

அழுக்கு மூட்டையைச் சுமந்து செல்லும் கழுதை போல அது இருந்தது. இப்பொழுதோ அருணகிரிநாதப் பெருமானாகிய ஆசிரியர் உபதேசம் செய்த பின்பு, அந்த மனம் மடைமாறிச் சென்றது. வெகுளி அடங்கியிருக்கிறது. தன்னிடமுள்ள பொருள் களை எல்லாம் தானமாகப் பிறருக்குக் கொடுத்துப் பற்று நீங்கி இருக்கிறது. முன்பு சிறிது கண்ணை மூடினாலும் என்ன என்ன எண்ணமோ வரும்; யார் யார் முகமோ தோன்றும். இப்பொழுது கண்ணை மூடும் பொழுது முருகப் பெருமானின் திருவுருவந்

தான் வருகின்றது. அவன் சம்பந்தமான நினைவுகள் தாம் வருகின்றன. இப்போது மனம் கழுதை அன்று; முருகப் பெருமானாகிய அரசனைச் சுமந்து வரும் யானை. வேலாயுதப் பெருமான் வருகிறான் வருகிறான் என்று பராக்குக் கொடுத்துக் கொண்டு வருவது போலத் துதிக்கையை உயரத் தூக்கி தூக்கி அசைத்துக் கொண்டு வருகிறது.

## உலகத்தினிடம் பயம்

ஞானம் என்ற வைர முடிச்சைப் பெற்றவுடன் ஆத்மா பயப்படுகிறது. 'இதை மனமாகிய பையன் பத்திரமாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமே!' என அஞ்சுகிறது. 'மாயை பல பல விதமாக வந்து வேறு வேறு விளையாடல்களைச் செய்யுமே. அவற்றினின்றும் பிழைத்து இந்த ஞானச் செல்வத்தைக் காப்பாற்ற வேண்டுமே!' என்று பெரியோர் அஞ்சுகிறார்கள்.

ஒருவன் பாங்கிலிருந்து நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு டாக்ஸியில் வந்து இறங்குகிறான். அவனுடைய தந்தை, "ஏண்டா பஸ்ஸில் வரக்கூடாதோ?" என்கிறார். அவன், 'டாக்ஸிக்கு ஒரு ரூபாய் செலவாகுமே என்று எண்ணிப் பஸ்ஸில் ஏறி வந்தால் நூறு ரூபாயையும் யாராவது முடிச்சு மாறிகள் முடித்துக் கொண்டு போய் விடுவார்கள். டாக்ஸிக்கு ஒரு ரூபாய் போனாலும் எஞ்சிய 99 ரூபாய் பத்திரமாக வீடு வந்து சேர்ந்தனவே" என்கிறான். சில நாளைக்குள் செலவழிந்து போகும் செல்வத்துக்கு இவ்வளவு பாதுகாப்பு என்றால், பலகாலம் செய்த தவப் பயனாகப் பெற்ற ஞானமாகிய தனத்தைப் பாதுகாக்க எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

இறைவன் திருவருளால் பெற்ற ஞானச் செல்வத்தைப் பாதுகாத்து வைக்க வேண்டுமே என்று அறிவு பயப்படுகிறது. 'உலகிலுள்ள யாராவது நம் இந்திரியங்களுக்கு இன்பத்தைக் கொடுத்துத் திருடிப் போவார்களோ? நாக்குக்குச் சுவையான சாப்பாட்டைப் போட்டுத் தூங்கப் பண்ணிக் கைப்பொருளை அபகரித்துப் போவார்களோ? நமது பழைய பிறவி வாசனையை உண்டு பண்ணி விடுவார்களோ' என்று அஞ்சுகிறது. 'ராத்திரி நேரமானாலோ தாமச குணத்தினால் சோர்வு வருகிறது. பகலானாலோ பகைவர்கள்

நம்மைச் சுற்றியே இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பொருளைக் காப்பாற்றப் பகலும் கூடாது, இரவும் கூடாது' என்று நினைக்கிறது.

## பகலும் இரவும்

பகல் என்பது நினைப்பு; ராத்திரி என்பது மறப்பு. பகலானது, உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து கொண்டே போகிற நிலை. இரவாவது, செயலை மறந்து தூக்கத்திற்குள் அடங்கிக் கிடக்கிற நிலை. இந்த இரண்டு நிலையும் நமக்குப் பயன் ஒன்றையும் அளிக்கவில்லை. பகலும் இரவும் நாம் ஓயாமல் ஒழியாமல் வேலை செய்கிறோம். இரவில் படுத்துத் தூங்குவதும் ஒரு வேலைதானே? அவை உயிருக்கு நலம் செய்யும் பயனை அளிப்பதில்லை.

ஒரு குருநாதருக்கு ஒரு சிஷ்யன் கிடைத்தான். ஒரு நாள் ராத்திரி அவர் அந்தச் சிஷ்யனிடம், ''நாளைக் காலை செங்கற் பட்டு வரையில் போகவேண்டும்'' என்றார். மறுநாள் காலையில் பத்து மணிக்குச் சிஷ்யன் வந்து நின்றான். அவன் காலில் முழங்கால் மட்டும் புழுதி. ''எங்கேயடா போயிருந்தாய்?'' என்று கேட்டதற்கு அவன், ''செங்கற்பட்டு வரையில் போக வேண்டு மென்று அவ்விடத்தில் உத்தரவாயிற்றே; அதன்படி போய்விட்டு வந்தேன்'' என்றான். குருநாதர் உத்தரவிட்டது உண்மைதான். ஆனால் அவன் செய்தது பயனில்லாத காரியம். ''எதற்காகப் போக வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்?'' என்று கேட்டுக் கொள்ளாமல் அவன் போய் வந்தால் பயன் என்ன?

இப்படியே நாம் சுறுசுறுப்பாக எத்தனைதான் வேலை செய் தாலும் அதனால் இன்பம் வராது. பகல் முழுவதும் உத்தியோக சம்பந்தமாகவோ வீண் காரியங்கள் சம்பந்தமாகவோ நம்முடைய உழைப்பை எல்லாம் ஈடுபடுத்தி விடுகிறோம். ஆத்மாவுக்கு இன்பத்தைத் தரக்கூடிய காரியம் ஒன்றைக்கூடச் செய்வதில்லை. இரவிலோ அந்தச் செயல்கூட அற்றுத் தூங்கிக் கிடக்கிறோம். நனவாகிய நிலை சகலாவஸ்தை; தூக்கமாகிய நிலை கேவலா வஸ்தை. சகலத்தில் பயனற்ற வீண் வேடிக்கைக் காரியங்களைச் செய்கிறோம். கேவலத்தில் அந்த முயற்சியும் இல்லாமல் தூங்கு கிறோம். ஆகவே, பகலும் இரவும் நமக்கு இன்பத்தைத் தருவ தில்லை. ஆத்மாவுக்கு இன்பத்தைத் தருவதற்குப் பகல் இர அற்ற இடம் வேண்டும்.

தெரியாது ஒரு பூதர்க்குமே.

எப்படி ஓர் அருமையான பொருள் கிடைத்துவிட்டால் வேறு யாருடைய கண்ணிலும் படாமல் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அப்படியே கிடைத்தற் கரிய பேறான ஞானத்தைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பூதர்க்கும் - ஓர் உயிருக்கும் - தெரியாமல் இருக்க வேண்டும்.

# 2

அருணகிரியார் மனத்தைப் பார்த்துச் சொல்கிறார்; ''ஒரு பூதர்க்கும் தெரியாத ஓர் இடம் உண்டு. நமக்கு இரவும் கூடாது. பகலும் கூடாது. இரவு, பகல் அற்ற அந்த வெளிக்குப் போய் விடலாம் வா'' என்று அழைக்கிறார். ''போகிற வரைக்கும் துணை வேண்டும். போன பிற்பாடும் துணை வேண்டும். கள்ளர் நம்மைக் கண்டு பயப்பட்டு நெருங்காமல் போக வேண்டுமென் றால் ஆயுதம் கையில் உடையவன் துணையாக வர வேண்டும். பெரிய பெரிய அசுரர்களைச் சங்காரம் செய்து வாகை சூடிக் கொண்டிருக்கும் தேவசேனாபதியாகிய முருகனுடைய துணையைப் பெற்றுப் போகலாம் வா. சூரபன்மன் முதலிய அசுரர்களைச் சங்காரம் செய்வதற்குக் கருவியாய் இருந்த வேல் அவன் கையில் இருக்கிறது. நமக்குக் கவலை இல்லை. அவனுடைய பாதங்களையே சரணாகப் பற்றிக் கொண்டு போகலாம் வா'' என்கிறார்.

## ஞானத்தின் உருவம்

அவன் கையில் உள்ள வேல் எத்தகையது? நாம் பற்றிக் கொள்கிற அவனது பாதார விந்தம் எத்தகையது?

**வேதா கமசித்ர வேலாயு தன்வெட்சி**
**பூத்ததண்டைப்**
**பாதாரவிந்தம்.**

ஆண்டவனது கையில் உள்ள வேல் ஞான மயமானது. அது ஞானசக்தி. தாமச குணங்களைப் போக்கி, அறியாமையை நீக்கி, அறிவைக் கொடுப்பது அந்த ஞானவேல்.

ஞானத்திற்கு உருவம் என்ன? ''அவன் மிக்க அறிவாளி'' என்றால், அவனிடமுள்ள அறிவைக் காண இயலாது. அதற்கு

உருவம் இல்லை. அவன் அறிவுக்கு ஓர் உருவம் கொடுக்க வேண்டுமென்றால் நாம், ''அவன் பெரிய அறிவாளி; எம்.ஏ. படித்திருக்கிறான்'' என்று கூறுகிறோம். அறிவுக்கு உருவம் இல்லையானாலும் எம்.ஏ. படித்திருக்கிறான் என்பதன் மூலம் அதற்கு ஒரு வகையாக அடையாளம் கூறுகிறோம். அதையே உருவம் என்று சொல்லலாம்.

இறைவனோடு தொடர்வுடைய அறிவு எதுவோ, அது மெய்ஞ் ஞானம். ஞானம் இருவகைப்படும். கல்வி, கேள்வி யினாலே வருவது அபரஞானம். உணர்வினாலே அநுபவத் தினாலே பெறு வது பரஞானம். அநுபவத்தினால் பெறுகின்ற ஞானத்திற்கு இந்த நாட்டில் எப்பொழுதும் தலைமை உண்டு. கல்வி, கேள்வி ஞானத்தோடுகூட, அநுபவத்தினால் உயர்ந்த அறிவைப் பெற்ற எத்தனையோ மகான்கள் இந்த நாட்டில் ஆசாரியர்களாக இருந் திருக்கிறார்கள்.

அபர ஞானத்தைத் தர உதவியாக இருப்பவை நூல்கள். எல்லா நூல்களிலும் சிறந்தது வேதம். வேதம் இறைவன் அருளியது என்பர். அது எல்லோருக்கும் பொதுவானது. வேதத்தோடு சார்த்திச் சொல்பவை ஆகமங்கள். அந்த அந்தச் சமயத்தவர் களுக்கு ஏற்றபடி தனித்தனியே ஆகமங்கள் இருக்கின்றன. பொதுவான வேதத்தையும், சிறப்பான ஆகமங்களையும் சேர்த்து வேதாகமம் என்று சொல்வது வழக்கம்.

வேதத்தில் மந்திரம் மிகவும் முக்கியம். ஆகமத்தில் தந்திரம் மிக வும் முக்கியம். அதனால் வேதத்தை மந்திரமென்றும் ஆகமத்தைத் தந்திரம் என்றும் சொல்வர். வேதம் இறைவனைப் பற்றியும், அறங்களைப் பற்றியும் சொல்கிறது. ஆகமங்கள் இறைவனை அடைவதற்குரிய செயல் முறைகளைச் சொல்கின்றன.

### நால் வகை நூல்கள்

**வே**தம் எசமானனைப் போல், ''இது செய்; இது செய்யாதே'' என்று கட்டளையிடுகிறது. ஒரு தலைவன் இப்படி இப்படிக் காரியங்களைச் செய் என உத்தரவு இடுவது போல இருக்கிறது அது. ஏன் அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்கக்கூடாது. அது எசமானனுடைய உத்தரவு. அதனால் வேதத்தை, ''பிரபு சம்மிதை''

என்பர். பிரபு – தலைவன். வேதம் கட்டளை இடுகிறது. ஆகவே தான் அது தலைவன் வாக்கு, பிரபு சம்மிதை ஆயிற்று.

சில நெறி முறைகள் காலத்திற்குக் காலம் மாறுபடலாம். இடத்திற்கு இடம் வேறுபடலாம். நம்முடைய நாட்டில் இருக்கிற ஆசாரம் வேறு. வடநாட்டில் இருக்கிற ஆசாரம் வேறு. இவற்றை எல்லாம் கண்டு இப்படி இப்படி ஒழுக வேண்டும் என்று அவ்வப்போது வழி வகுத்துக் கொடுப்பது ஸ்மிருதி ஆகும். அது, அரசாங்கத்தார் அவ்வப்போது படைக்கிற சட்டத்தைப் போன்றது.

அத்தகைய ஸ்மிருதியை ''ஸுஹ்ருத் ஸம்மிதை'' என்பர். 'ஸுஹ்ருத்' என்பது நண்பனைக் குறிக்கும். அவன் நமக்கு நல்லதையே சொல்வான். நமக்கு ஓர் உயர்ந்த நண்பனைப் போல இருந்து, நம்முடைய மனநிலை, முயற்சி இவற்றுக்கு ஏற்ப ஒழுக்க வகைகளை நிர்ணயம் செய்வது ஸ்மிருதி. அது நண்பன் வாக்கைப் போன்றது.

சுருதி ஸ்மிருதிகளைத் தெரிந்து கொள்ளப் பயிற்சி வேண்டும். அத்துணைப் பயிற்சி இல்லாதவர்களும், வேதக் கருத்தைத் தெரிந்து கொள்ளும்படி அமைந்தது காவியம். அதைக் காந்தா ஸம்மிதை என்பர். மனைவியின் சொல் போன்றது என்பது பொருள். மனைவி, நாயகன் மனத்தை மாற்றுவதற்கு எவ்வளவு இங்கிதமாகப் பேசுகிறாள்! கணவனிடம், ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று சொல்வதற்குமுன், சிரித்த முகத்தோடு அவன் எப்பொழுது காரியாலயத்திலிருந்து வருவான் எனக் காத்துக் கொண்டிருக்கிறாள். வந்தவுடனே அந்த விஷயத்தைச் சொல்வது இல்லை. பலகாரம், காபி முதலியவை கொடுத்து அவன் களைப்பைப் போக்குகிறாள்.

அப்புறம் மெல்ல இனிமையாகப் பேசுகிறாள். அவள் பேச்சிலே இவன் குழைந்து இன்புற்று இருக்கும்போது சொல்ல வேண்டியதை மெல்லச் சொல்லுகிறாள். ''இன்றைக்கு நானும், அடுத்த வீட்டு லலிதாவும் கோயிலுக்குப் போயிருந்தோம். சுவாமி தரிசனம் திவ்யமாகக் கிடைத்தது. அங்கே பச்சைப் புடைவை கட்டிக் கொண்டு ஒருத்தி வந்திருந்தாள். எவ்வளவு அழகாக இருந்தது! விலை நூறு ரூபாய்க்கு மேல் இருக்குமென்று நினைத்தேன். ஆனால் அறுபது ரூபாய்தானாம். லலிதாகூட அம்மாதிரி ஒன்று வாங்கிக் கொள்ளப் போவதாகச் சொன்னாள்''

என்று அவள் சொல்வதற்குள்ளேயே, ''நீயும் ஒன்று வாங்கிக் கொள்ளேன்'' என்று சொல்லிவிடுவான். இதற்காகத்தானே அவள் இவ்வளவு குறைவாகப் பேசுகிறாள்?

இவ்வாறே காவியம் மிக இனிமையாகக் கருத்தைச் சொல்லி, நம் உள்ளங்களிலே இன்பம் சுரக்கும்படி செய்து அறிவூட்டுகிறது. அதனால் 'காந்தா ஸம்மிதை' என்று அதைச் சொல்கிறார்கள். சாகுந்தலம், வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் முதலிய காவியங்களில் உள்ள உண்மை எல்லாம் வேதத்தில் இருப்பனவே. ஆனால் வேதம் போல அப்படியே இவை சொல்லவில்லை. கதையை அலங்காரமாகச் சொல்லி இன்பத்தைச் சுரக்கச் செய்து, தம்மை மறந்து படித்து உண்மையை உணரும்படி செய்துவிடு கின்றன.

புராணங்கள் உருவகக் கதைகள். குழந்தைகளுக்குக் கதை சொல்வது போல, அரிச்சந்திரன் கதை முதலியவற்றைச் சொல்லி வேதப் பொருளின் சாரத்தை மனத்தில் பதியவைப்பது புராணம். இப்படி வேதாகமம், ஸ்மிருதி, காவ்யம், புராணம் என நான்கு பிரிவுகளாக ஞானம் நிற்கிறது. இவை நான்கும் ஞானத்தின் வடிவங்கள் என்று கூறலாம்.

## வேதாகம வேல்

நமக்கு கிடைக்கும் ஞானம் எப்படி வருகிறது? வேதமாக வருகிறது. ஆகமமாக வருகிறது. பிற நூல்களாக வருகிறது. எம்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலை ஞான வேல் என்று பெரியவர்கள் சொன்னார்கள். அருணகிரிநாதர் அந்த ஞானத்திற்கு உருவம் கொடுத்து ஞானம் தரும் நூலாகிய வேதத்தையும், ஆகமத்தையும் நினைத்து, அந்த வேல் வேத வேல், ஆகம வேல் என்று சொல்கிறார்.

இறைவனோடு சம்பந்தப்பட்டட எல்லாவற்றையுமே வேதம் என்று சொல்வது வழக்கம். சிவபிரான் ஏறிச் செல்லும் இடபம் வேதம். அவன் அணிகின்ற ஆடை வேதம். அவன் பாதுகை வேதம். அவன் சிலம்பு வேதம் என்பர்.

அருணகிரிநாத சுவாமிகள் இந்த முறையை நினைத்து, மற்றவர்கள் சொல்லாத புது வகையில், முருகன் வேதா

கமத்தையே வேலாக வைத்திருக்கிறன் என்கிறார். வியப்புக்குரிய பொருளாக இருக்கிறது அந்த வேல்; சித்ரவேல் அது.

## வேதா கமசித்ர வேலாயுதன்

கிடைப்பதற்கரிய பொருள் ஒன்று கிடைத்தால் அதை அறிவுடைய மனிதனால்தான் காப்பாற்ற முடியும். உயர்ந்த ஞானச் செல்வத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அதற்குரிய பாதுகாப்பாக இருப்பது ஞானவேல்.

## ஞானவேல்

உலகத்தைத் தனக்குள் அடக்கி ஆண்ட சூரபன்மனது உடலைத் துளைத்து, அவனுக்குக் கவசம் போலிருந்த கிரெளஞ்ச கிரியையும் பொடிப் பொடியாக்கிப் பெரிய ஆச்சரியமான காரியங்களைச் செய்தது அந்த வேல். அஞ்ஞானத்தைப்போக்க உதவும் ஞானமே வடிவான வேதாகமத்தை வேலாக வைத்திருக்கிறான் முருகன். அவனை நமக்கு துணையாகக் கெள்ள வேண்டும்.

வேல் நமக்குத் துணையாக வேண்டுமென்றால் அந்த வேலை உடைய வேலாயுதன் தாளை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். அவன் காலைப் பற்றினால் வேலை விடுத்து நம்மைக் காப்பாற்று வான். காலைப் பிடிப்பவருக்குப் பயன் படுவதாகவே வேலை வைத்திருக்கிறான்.

## திருத்தாள் அழகு

அவன் திருத்தாள்கள் எத்தகையவை?

அநாதிகாலம் தொட்டுப் பக்தர்கள் எப்போதும் அருச்சனை செய்து வரும் பாதம் அது. அவர்கள் தூவிய மலர்கள் அதன்பால் இருக்கின்றன. வெட்சிப் பூ நிரம்பக் குவிந்திருக்கிறது. அவன் பாதத்திலேயே பூத்த மாதிரியாக அது மலர்ச்சியோடு இருக்கிறது. வெம்மையுடைய மனிதன் கையில் பட்டால் மலர் வாடிவிடும். செடியில் இருப்பது போலவே, அதையும்விட மிக்க மலர்ச்சி யோடு, முருகன் கால்களில் வெட்சி மலர் கிடக்கிறது. அவ்வளவு தண்மை உடையது அவன் தாள். மலரை அணிந்ததோடு தண்டை யையும் அணிந்த திருவடி அது; அரவிந்தம் போன்றது.

வெட்சி பூத்த தண்டைப்
பாதர விந்தம் அரணாக.

இறைவன் தண்டை அணிந்திருப்பதால் அவன் வரும்போது, ''இறைவன் வருகிறான், வருகிறான்'' என்று பக்தர்களுக்கு அது ஒலி செய்து காட்டுகிறது. ''அந்தத் திருவடித் தாமரைகளை நமக்கு அரணாகப் பற்றிக் கொண்டு போவோம் வா, மனமே என்கிறார் அருணகிரியார்.

## காலும் வேலும்

நாம் பற்றிக் கொள்வது கால். நமக்கு அஞ்சல் என்று சொல்வது கை. நாம் தண்ணீர் விடுகிற இடம் வேர். நமக்குக் காய் தருகிற இடம் செடியின் மேற்பகுதி. அவனது திருவடியைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விட்டு, 'நீயே சரணம்'' என்று கதறினால் அவன் கை, ''அஞ்சல்'' என்று சொல்லும். அவனது வெட்சி பூத்த, தண்டை அணிந்த பாத தாமரையைப் பற்றிக் கொண்டால், அவன் கையிலுள்ள வேல் நம்மைப் பாதுகாக்கும்; நாம் பாதுகாப்பான இடத்தை அடையலாம்.

அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச்
சும்மாஇருக்கப் போதாய்.

## இப்போதே

''இனி இங்கே ஒரு கணமும் இருக்கக் கூடாது. இந்தச் சமயமே இங்கிருந்து கிளம்பிவிடு. வேறு இடத்திற்குப் போய் விடுவோம்'' என்கிறார் அருணகிரி முனிவர். அது எப்படிப்பட்ட இடம்? பகலும் இரவும் அற்ற இடம்; நினைப்பும் மறப்பும் அற்ற இடம்; நமக்கு கிடைத்துள்ள ஞானச் செல்வத்தைக் கள்வர்கள் பறித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்று பயப்பட அவசியம் இல்லாத இடம்.

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் சொல்வது இங்கே நினைவுக்கு வருகிறது. புலவன் ஒருவன் வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டான். முருகன் எங்கே இருக்கிறான் எனத் தேடி, வீடு, வாசல், மாடு, மனைவி எல்லாவற்றின் மேலும் உள்ள

*பற்றை விட்டு விட்டுக் கிளம்பிவிட்டான். வழியில் நக்கீரர் வரு கிறார். அவர் முகத்தைப் பார்க்கும் போதே அவனுக்கு, ''முருகன் எங்கே இருக்கிறான்?'' என்று அவரிடம் கேட்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ''சுவாமி, உங்களைப் பார்த்தால், ஆண்டவனுடைய அருள் அநுபவம் உடையவராகத் தோன்றுகிறதே! ஆண்டவன் முருகன் எங்கே இருக்கிறான்?'' எனக் கேட்கிறான்.*

*''முருகனைத் தேட ஆரம்பித்துவிட்டாயா? வீட்டை விட்டும் கிளம்பிவிட்டாயா? மெத்த மகிழ்ச்சி. அப்படியானால் இனி ஒரு கணம்கூடத் தாமதிக்காதே; திரும்பிப் பார்க்காதே. அவன் அருளை இப்பொழுதே நீ பெறுவாய். உடனே புறப்படு'' என்கிறார்.*

''எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.''

*'நீ பிறந்த குலம் என்ன? செய்துவந்த தொழில் என்ன?' என்பன போன்ற கேள்விகளை அவர் கேட்கவில்லை. ''உடனே புறப்படு, இன்னே பெறுதி நீ'' என்று சொல்கிறார்.*

*இப்படித்தான் ஞானிகள் இறைவனது அருளினால் ஞானத்தைப் பெற்ற மாத்திரத்தில் அவனுடைய திருவடியில் சேர்ந்து எல்லை யில்லா இன்ப நலங்களைத் துய்க்க, ஒரு கணமும் தாமதமின்றி ஓடுகிறார்கள். ''நமக்குத் தெரியாமல் அவர்கள் எங்கே போய்விடு கிறார்கள்?'' எனக் கேட்கலாம். அவர்களது உடல் நம்மிடையே இருந்தாலும் மனத்தால் அவர்கள் நம்மைவிட்டு வெகுதூரம் ஓடி விடுகிறார்கள்.*

*அப்படி ஓடிவிட வேண்டுமென்ற உள்ளம் படைத்த மக்களுக்குச் சொல்வதைத் தம் மனத்துக்குச் சொல்கிறார் அருணகிரியார். ''எங்கே போவது, போனாலும் நம்மிடம் இருக்கும் ஞானச் செல்வத்தை எப்படிப் பாதுகாப்பது, என்ற கவலை இனி வேண்டாம். வேலாயுதனைத் துணையாகக் கொள்வோம். இங்கே பகல் இருக்கிறது. இரவு இருக்கிறது. ஞானத்தைக் குலைக்கும் அஞ்ஞானமாகிய சூது இருக்கிறது. எங்கே பார்த்தாலும் மனிதர்*

களாகவே இருக்கிறார்கள். நல்ல காற்று வாங்குவதற்குக் கொஞ்சம் கூட இடம் இல்லை. எங்கே பார்த்தாலும் மூச்சு காற்று. எங்கே பார்த்தாலும் கட்டிடங்கள். வஞ்சனையும் சூதுமே நிரம்பியிருக் கின்றன. இந்த இடத்தில் இருக்க வேண்டாம், வா. போகலாம், மனமே.''

அல்லும் பகலும் இல்லாச்
சூதான தற்ற வெளிக்கே........ போதாய்.

## சூதானதற்ற வெளி

இரவு அற்ற இடம் என்றால், அங்கே பகல் உண்டு என்று தோன்றும். பகல் அற்றது என்றால் இரவு உண்டு என்று ஆகும். இரண்டும் ஒன்றுக்கொன்று இனமானவை. வெண்டாமரை என்ற சொல் செந்தாமரை என்ற இனத்தை நினைப்பூட்டுகிறது. அதைப் போல இரவு என்று சொன்னால் பகல் இருப்பது நினைவுக்கு வருகிறது. அந்த வெளியோ பகலும் இரவும் இல்லாத இடம். மறதி, நினைப்பு ஆகிய இரண்டும் அங்கே இல்லை. மறதி நினைப்பு அற்ற, இரவு பகல் அற்ற இடம்; சூது அற்ற இடம்; வெறும் வெட்டவெளியான இடம் அது.

வெளி என்பது ஆகாசம். ஆகாசம் ஐந்து பூதங்களுக்குள் ஒன்று; மற்றப் பூதங்களை எல்லாம் தன்னுள் அடக்கி வைத்திருப்பது; அது பூதாகாசம். அந்த வெளி சூதுடைய வெளி. அதற்குமேல் ஓர் ஆகாசம் உண்டு. அதற்குச் சிதாகாசம் என்று பெயர். அது எல்லாவற்றை யும் தனக்குள் அடக்கி வைத்திருப்பது. பூதாகாசத்திற்குத் தோற்றம் உண்டு; முடிவு உண்டு. சிதாகாசத்திற்கு அவை இல்லை. முன்பு ஒரு பாட்டில், கால எல்லை, பூத எல்லை, இட எல்லை யாவை யும் கடந்த ஓர் இடத்தை, ''வெறும் பாழ்'' என்று சொன்னார். அந்தப் பாழைக் குறிப்பிடுக்கின்றது, ''அல்லும் பகலும் இல்லாச் சூதானது அற்ற வெளி'' என்பது. கால எல்லைக்குள், பூத எல்லைக்குள், மூச்சுக் காற்றுக்குள் அடங்கி வாழ்கின்ற நாம் காலனுக்குப் பயப்பட்டே வாழ வேண்டும். இந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்ட இடத்தில், இரவும் பகலும் அற்ற வெளியில் சிதாகாசத்தில் இருக்கின்ற இறைவனோடு நாம் போய்ச் சேர்ந்து விடலாம். அங்கே போய் ஒளித்துக் கொண்டால் வேறு யாருக்கும் தெரியாது.

தெரியாது ஒரு பூதர்க்குமே.

''ஒருயிருக்கும் தெரியாமல் யாரும் காணமுடியாத நிலைமையில், அல்லும் பகலும் அற்ற வெளியாக இருக்கிற, சூது அற்ற நிலைக்குப் போதாய்'' எனச் சொல்கிறார். அங்கே போவதற்கும் வேலாயுதன் துணையாக இருப்பான். அங்கே போன பிறகும் துணையாக எப்பொழுதும் இருப்பான்.

இங்கே இருந்தால் ஒரு கணம்கூடச் சும்மா இருக்க முடிவதில்லை. எந்தச் சமயத்தில் யார் நம்மிடம் இருக்கும் செல்வத்தைப் பறித்துப் போய்விடுவார்களோ எனப் பயந்து பயந்து ஓடி ஒளிய வேண்டியிருக்கிறது. ஒரு கணம்கூடத் தூக்கம் வருவதில்லை. எப்போதும் வேலை. பகலும் வேலை; இரவும் வேலை. பகலும், இரவும் இல்லா இடத்தில் வேலையே இராது.

## சும்மா இருத்தல்

சும்மா இருக்கப் போதாய்.

சும்மா இருப்பது என்பது என்ன? செயல் அடங்கி, பேச்சு அடங்கி, மனம் அடங்கி இருப்பதையே சும்மாயிருத்தல் என்பர். இந்த மூன்றையும் காஷ்ட மௌனம், வாங் மௌனம், மனோ மௌனம் என்று சொல்வர்.

## அநுபவமும் ஆராய்ச்சியும்

இறைவனுடைய அருளைத் தேடிச் செல்கிறவர்கள் அதைப் பெறுவதற்கு என்ன என்னவோ முயற்சி செய்கிறார்கள். அதை அடைந்த மாத்திரத்தில் சொல் அடங்கி, செயல் அடங்கி, மனம் அடங்கிச் சிதாகாசப் பொருளோடு ஒன்றுபட்டுச் சும்மா இருக்கிறார்கள். அதுவரைக்கும் அவர்கள் பேசியிருக்கலாம். ஆனால் அநுபவத்தில் ஈடுபடும்போது எல்லாம் அடங்கிவிடும்.

இரண்டு பேர், எங்கே உயர்ந்த நல்ல சாதி மாம்பழம் கிடைக்கும் எனத் தேடிப் போனார்கள். ஒரு மாந்தோட்டத்திற்குள் வந்தார்கள். ஒருவன் தனக்குக் கிடைத்த மாம்பழத்தை கையில் வைத்துக் கொண்டு, ''இந்தப் பழம் எப்படி வந்தது? இந்த மாமரத்திற்கு வயசு என்ன? இந்தச் செடி எந்த நாட்டிலிருந்து கொண்டு வரப்

பட்டது?'' என்று ஆராய்ச்சி செய்தான். அவன் தாவர சாஸ்திர வல்லுநன். ஆனால் மற்றவன் தன் கையில் கிடைத்த மாம்பழத்தை நன்றாகச் சுவைத்துச் சாப்பிட்டான். எதைப் பற்றியும் யோசிக்க வில்லை. இரண்டு பேரும் மாம்பழத் தோட்டம் எங்கே இருக்கிறது என்றுதான் முதலில் ஆராய்ச்சி செய்தார்கள். மாம்பழம் கிடைத்த மாத்திரத்தில் ஒருவன் ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டான். மற்றொருவன் கிடைத்த மாம்பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு பின்னும் ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தான். ஆராய்ச்சிக்கும் பேச்சுக்கும் எல்லை உண்டு. அந்த எல்லை கடந்து செல்வதால் பயன் இல்லை.

> ''ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
> சோதிக்க வேண்டா''

என்று திருஞானசம்பந்தர் சொல்கிறார்.

இறைவனைப் பற்றியும் உயிரைப் பற்றியும் அவனருள் பெறுவது பற்றியும் ஆராய்ச்சி பண்ணத்தான் வேண்டும். உண் பதற்கு உணவு படைத்தால் அது உணவுதானா, அல்லது நஞ்சா என ஆராய்ச்சி செய்யலாம். அது உணவுதான் என்று அறிந்த பிறகு அதைச் சாப்பிடாமல், ''இந்த அரிசியின் பெயர் என்ன? எங்கே விளைந்தது? எத்தனை நாள் பயிர்? எந்தக் கடையில் வாங்கியது?'' என்றெல்லாமா துருவித் துருவி ஆராய்ச்சி செய்வது? ஆத்மாவுக்கு உண்மையான ஆனந்தத்தைத் தருபவன் இறைவன் எனத் தெரிந்து கொண்டுவிட்டால், அவன் அருளைப் பெறு வதற்கு அந்தக் கணமே உழைக்க ஆரம்பித்துவிட வேண்டாமா?

ஞானமாகிய செல்வம் கிடைத்துவிட்டால் அதைப் பாதுகாத்து அவனோடு இயைந்து சும்மா இருக்க வேண்டாமா? சும்மா இருத்தல்தான் அநுபவம்.

## அருணகிரியார் உபதேச முறை

''மனமே, வா, சும்மா இருக்கலாம்'' என்று அருணகிரியார் தம் மனத்தைப் பார்த்துச் சொன்னதுதான் இது.

> ''தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியைத்
> தானம் என்றும் இடுங்கோள்''

என்று நேரே நம்மைப் பார்த்துச் சென்ற பாட்டில் சொன்னவர் இப்பொழுதும் தம் மனத்தைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்கிறார். இரண்டும் நமக்காகச் செய்த உபதேசமே.

வேதா கமசித்ர வேலா
யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக,
அல்லும் பகலும்இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே
ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய், இனிமன மே!தெரி
யாதுஒரு பூதர்க்குமே.

*(மனமே! வேதமும், ஆகமமுமான அழகிய வேலைப் படையாகக் கொண்ட முருகனது வெட்சி மலர் மலர்ந்தாற்போல விளங்கும் தண்டையை அணிந்த பாதமாகிய தாமரையே பாதுகாப்பாக நிற்க, இரவும் பகலும் இல்லாத, சூது அற்ற சிதாகாச வெளியில் ஒருயிருக்கும் தெரியாமல் உலகினின்றும் ஒளித்துச் செயலற்று இருக்க, இப்போது வருவாயாக.*

*வேதம், ஆகமம் ஆகிய சித்ரவேல். சித்ரம் – அழகு; வியப்புக்குரியது என்றும் சொல்லலாம். அரண் – பாதுகாப்பு. அல் – இரவு. சூது – அஞ்ஞானத்தால் விளையும் நிகழ்ச்சிகள். வெளி – சிதாகாசம். போதாய் – வருவாயாக. பூதர் – உயிரையுடையோர்.*

# செல்லும் பொருளும் செல்லாப் பொருளும்

## பலவகை உபதேசம்

கந்தர் அலங்காரப் பாடல்கள் யாவும் ஒரே வகையில் அமைந்தவை அல்ல. அருணகிரியார் தம்முடைய அநுபவ நிலையிலிருந்து சொல்லும் பாடல்கள் பல. உலகினருக்குப் பயன்படும் உபதேசங்களாக உள்ளவை பல. அப்படிச் செய்யும் உபதேசங்கள் ஒரே மாதிரியாக இருந்தால் அதற்கு ஏற்ற நிலையில் இருப்பவர்கள் மாத்திரம் பயன் அடைவார்கள். மிக உயர்ந்த பக்குவிகளும் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் அபக்குவிகளும் உலகில் வாழ்கிறார்கள். அவரவர்களுக்கு ஏற்ற வகையில் வெவ்வேறு உபதேசங்களை அருணகிரியார் அருளியிருக்கிறார்.

மிக நன்றாகப் படித்த ஒருவர் மிக உயர்ந்த நிலையில் பேசினால் பலருக்கு விளங்காது. எல்லோருக்கும் புரிய வேண்டுமென்பதற்காகக் கொஞ்சம் எளிய நடையில் பேசினாலோ, ''இது என்ன சந்தைக் கடையா?'' என்று படித்தவர்கள் சொல்வார்கள். எல்லாவகையிலும் பேசினால் யார் யாருக்கு எது பிடிக்குமோ அதை எடுத்துக் கொள்வார்கள். எல்லோருக்கும் பயன்படும் வகையில் தெளிவாகப் பேசக் கூடியவர் சகலகலா வல்லுநராக இருக்க வேண்டும்.

தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறும்படியாகச் செய்கிறவர்களே சிறந்த ஆசாரியர்கள். அவர்கள் உயர்ந்த அநுபவ நிலையிலிருந்தே பேசினால் பலருக்கு விளங்காது. தாழ்ந்த நிலைக்கு இறங்கி வந்து மாத்திரம் பேசினால் உலகத்தோர் மதிக்க மாட்டார்கள்; 'இவரும் நம்நிலையில்தானே இருக்கிறார்?' என்று எண்ணிவிடுவார்கள். அதனால் உலகியல் வாழ்க்கையில் தொடர்புடைய மக்கள் தங்கள் தங்கள் மனப் பக்குவத்திற்கு ஏற்பப் பயன் அடையக் கூடிய பல வழியில் அருணகிரியார் உபதேசம்செய்கிறார்.

## பெருமையும் கருணையும்

தம் அநுபவத்தைச் சொல்லும்போது அவருடைய பெருமை தெரிகிறது. இறங்கி வந்து பேசும்போது அவருடைய கருணை வெளியாகிறது. இந்த இரண்டு நிலைகளிலும் அவர் இருப்பது அவருடைய சிறப்பை மிகுதிப்படுத்துகிறது.

அருணகிரியார், மனம் அடங்காதவர்களுக்கும் நல்வழி காட்டு கிறார். மனம் அடங்கிய பிறகு எந்த வழியில் போக வேண்டு மென்று தெரியாதவர்களுக்கும் வழிகாட்டுகிறர். போன பாட்டில் நல்ல மனம் உடையவர்கள், பக்குவம் இருந்தும் வழி தெரியாது நிற்கும்போது, மேற்கொள்ளும் நெறியைத் தம் மனத்தைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்லி வழி காட்டினார்.

இந்தப் பாட்டு மிகக் கீழ் நிலையில் உள்ளவர்களும் பயன் பெற வேண்டுமென்று பாடுவது; எல்லாவற்றுக்கும் அடிப்பீட மாகிய அறத்தைச் சொல்வது.

## நாணய மாற்றம்

ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகிறவர்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு போவார்கள். நீண்ட தூரம் போகிறவர்கள் பணத்தை முடிச்சாகக் கொண்டு போவது வழக்கம்; அல்லது நோட்டாக மாற்றிக் கொண்டு போவார்கள். வெளி நாட்டுக்குப் போகிறவர்கள் இந்த நாட்டுப் பணத்தை நிறைய எடுத்துக் கொண்டு போனாலும் பயன் இல்லை. அந்த நாணயம் போகும் தேசத்தில் செலாவணி ஆகாது. அங்கே செலாவணி ஆகக் கூடிய வகையில் நாணய மாற்றம் செய்யும் காரியாலயத்தில் அந்தத் தேசத்து நாணயமாக மாற்றிக் கொண்டு போக வேண்டும்.

ஆகவே, ''அந்த ஊரில் எந்த நாணயம் செல்லும்? நம்மிடம் இருக்கும் நாணயத்தை, அந்த ஊரில் செல்லும் நாணயமாக எப்படி மாற்ற வேண்டும்?'' என்பன போன்ற விஷயங்களை வெளிநாடு போகிறவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

## நீண்ட பயணம்

இந்த உலகத்தில் பிறந்தவர்கள் எல்லோருக்கும் நெடுந்தூரப் பயணம் ஒன்று உண்டு. உலகத்தில் பிறந்த யாராலும் இந்தப் பிரயாணத்தைத் தவிர்க்க முடியாது.

இந்த நெடுவழிப் பிரயாணத்திற்கு முன்கூட்டியே பாதுகாப்புச் செய்ய வேண்டும். இங்கே சுகமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் போகிற இடத்திலாவது சுகமாக இருக்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருப்பது இயல்பு. உள்ளே இருக்கும் போது அழுக்குச் சட்டை, வெளியே போகும் போது வெள்ளைச் சட்டை என்று நாம் திட்டம் வைத்துக் கொள்கிறோம். அதே போலப் போகிற இடத்தில் சுகமாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்ற நாம், அப்படி இருப்பதற்கு வழி என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆனால், நாம் அப்படிச் சிந்திப்பதில்லை. இந்த உலகத்தில் நம்மிடம் உள்ள செல்வத்தை அந்த உலகத்தில் பயன் படுவதற்கு ஏற்ற வகையில் மாற்றிக் கொள்ள மறந்துவிடுகிறோம்.

## இங்கும் அங்கும்

இங்கே உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். தூய்மையானதாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் மக்கள் மதிக்கமாட்டார்கள். வேறு உலகத்திற்குப் போனால் மனத்தை வளர்த்துப் பக்குவப்படுத்த வேண்டும்.

ஆயிரம் புத்தகங்கள் படித்திருந்தாலும் மிக்க அறிவுடை யவனாக இருந்தாலும் ஓர் இடத்திற்குப் போகும் போது நல்ல ஆடம்பரமான மேலாடை இல்லாமல் போனால் என்ன மதிப்புக் கிடைக்கும்? எந்த வகையில் பார்த்தாலும் தோற்றம் நன்றாக இருக்க வேண்டும். இங்கே உடம்பின் தோற்றம் நன்றாக இருக்க வேண்டும். அங்கே உள்ளத் தோற்றம் நன்றாக இருக்க வேண்டும். இங்கே ஆடை அழுக்கு இல்லாமல் இருக்க வேண்டும். அங்கே மனம் அழுக்கு இல்லாமல் இருக்க வேண்டும்.

மன அழுக்கை மாற்றிக் கொண்டு போனால் போதுமா? அங்கே சாப்பாடு வேண்டாமா? இந்த உலகத்தில் நம்மிடம் இருக்கும் செல்வத்தை அந்த உலகத்தில் செலாவணி ஆகின்ற நாணயமாக மாற்றிக் கொள்ள வேண்டும். வேறு உலகத்தில் செலாவணி ஆகின்ற நாணயம் எது? அதுதான் புண்ணியம்; அது அறத்தினால் வருவது.

## நம்பிக்கை

வேறு உலகத்தில் செலாவணி ஆகும் நாணயங்களைப் பெறு வதற்கு இந்த உலகத்தில் நம்மிடமுள்ள நாணயங்களைத்

தர்மத்தில் செலவிட வேண்டும். இங்கே செய்கிற தர்மம் அங்கே பயன்படும் என்ற நம்பிக்கை இருந்தால்தான் அப்படிச் செலவிட மனம் வரும்.

உடனே கண்முன்னாலே பயன் கிடைக்கும் என்று இத்தகைய செயல்களில் எதிர்பார்க்க இயலாது. நல்ல காரியம் செய்யும்போது ஐயங்கள் உண்டாகின்றன. ''இறைவனுக்குக் குடம் குடமாகப் பால் அபிஷேகம் செய்கிறார்களே; இதனால் என்ன பயன்? எத்தனையோ குழந்தைகள் குடிக்கப் பால் இன்றித் தவிக்கும் போது எதற்காக இப்படிப் பாலைக் கொட்ட வேண்டும்?'' என்பது போன்ற சந்தேகம் எழும். அதற்குக் கண் முன்னாலே ஒரு பயனும் தோன்றவில்லை அல்லவா? ''இறைவனுக்குப் பால் அபிஷேகம் செய்தால் உயர்வு'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு பால் அபிஷேகம் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. வீட்டில் குழந்தை பாலுக்காகக் கதறும் போது, இறைவனுக்குப் பால் அபிஷேகம் செய் என்று சொல்லவில்லை. எவ்வளவு இயலுமோ, அந்த அளவுக்குச் செய்தால் போதும்.

### பால்வளம்

நம்முடைய நாட்டில் எங்கே பார்த்தாலும் முன் காலத்தில் பசுக்கள் மிகுதியாக இருந்தன. வறுமையான வீட்டில் கூட ஒரு மாடு இருந்தது. சங்க காலத்து நூலாகிய குறுந்தொகையில்,

''ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை''

என்று வருகிறது. ஒரு பசுமாத்திரம் ஒரு வீட்டில் இருந்தால் அந்த வீட்டார் வாழ்க்கை சிறப்பில்லாத வாழ்க்கையாம்.

அப்படி இருந்த நாட்டில் இப்பொழுது நமக்குப் பால் போதியதாக இல்லை. பால், தயிர், நெய் ஆகியவற்றில் எதுவும் சுத்தமானதாகக் கிடைக்கவில்லை. நம்முடைய வாழ்க்கை சீருடைய வாழ்க்கை ஆகாது. வறுமை மிகுதியான வீட்டில் ஒரு மாடாவது அந்தக் காலத்தில் இருக்கும் என்றால் எத்தனை பசுக்கள் நாட்டில் இருந்திருக்கும்!

''வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்''

என்று ஆண்டாள் பாடியிருக்கிறாள். மனிதர்களுடைய தொகையைக் காட்டிலும் அதிகமாகப் பசு மாடுகளின் தொகை இருந்தமையால், தேவைக்கு அதிகமான பால் மிகுதியாகக் கிடைத்த காலம் அது.

தேவைக்குமேல் பால் கிடைக்குமானால் மிஞ்சும். மிஞ்சின பாலை அப்படியே வைத்துப் பல நாளுக்குக் காப்பாற்ற முடியாது; புளித்துப் போய்விடும். பால் பயனின்றி வீணாகிறது என்ற எண்ணம் மக்களுக்கு உண்டாகிவிட்டால் பால் கறக்கும் ஆர்வம் குறைந்து போகும்; பசுக்களைப் பேணும் உற்சாகமும் போய்விடும்.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் தேவைக்கு மேல் அதிகமாகக் கோதுமை விளைந்தமையால் அவற்றைக் கப்பலில் எடுத்துப் போய்க் கடலில் கொட்டினார்கள். அடுத்த ஆண்டு கோதுமை விளைச்சல் குறைந்துவிட்டதாம். காரணம் என்ன? ''சென்ற ஆண்டு கோதுமை விளைவித்தோம். அதைக் கடலில் கொண்டு போய்க் கொட்டினார்கள். எதற்காக இவ்வாண்டு அவ்வளவு உழைக்க வேண்டும்?'' என்று பலர் உற்சாகம் குன்றியிருக்கக் கூடும். அப்படி இல்லாமல் எத்தனை விளைந்தாலும் அதற்குச் சிறந்த விநியோகம் உண்டென்று தெரிந்தால், மேலும் மேலும் விளைச்சல் அதிகமாகிக் கொண்டே வரும்.

கோதுமை அளவுக்கு மிஞ்சி அமெரிக்காவில் விளைந்தது போல இந்நாட்டில் பால் அதிகம் இருந்தது. இறைவனுக்கு அபிஷேகம் செய்வது உயர்வு என்று சொன்னார்கள். படிப் பால் மிஞ்சியவனும் படிப் பால் அபிஷேகம் செய்தான். குடப் பால் மிஞ்சியவனும் குடப் பால் அபிஷேகம் செய்தான். மேற் கொண்டு இருவரும் பசுக்களைப் பேணி வளர்த்து, பால் அதிகம் கறந்தார்கள். மிஞ்சினால் பின்னும் அதிகப் பயனுள்ள காரியத்துக்குப் பயன்படுகிறது என்ற எண்ணம் இருந்ததே இந்த ஊக்கத்துக்குக் காரணம்

''பால் குறைவாக இருக்கும் காலத்தில் அபிஷேகம் செய்ய வேண்டியது அவசியமில்லையே?'' என்ற கேள்வி எழலாம். ஒரு வழக்கம் இடைவிடாமல் இருந்தால்தான் சமயத்தில் நல்ல பயனைத் தரும். பால் இல்லாத காலத்தில் அபிஷேகத்தை நிறுத்திவிட்டால் மீண்டும் அந்தப் பழக்கம் வருவது எளிதன்று. அதனால் தான் எப்போதும் பால் அபிஷேகம் செய் என்றார்கள். இவ்வளவு பால்தான் அபிஷேகம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. வழக்கத்தை விடாதே என்று மட்டும் சொன்னார்கள். ஓர் உத்தரணிவிட்டாலும் போதும். உலகியலுக்கும் அருளியலுக்கும் ஒத்த பழக்கம் இது.

நம்மிடம் இருக்கும் மிகுதியான பொருளை இறைவனுக்கு நாம் அர்ப்பணம் செய்தால் நம்மிடம் இல்லாத பொருளை அவன் நமக்கு அளிக்கிறான் என்ற நம்பிக்கை பக்தர்களுக்கு இருந்தது. "இறைவனுக்கு நாம் பால் அபிஷேகம் செய்வதனால் கண்ணுக்கு முன்னாலே என்ன பயன்?" என்று இப்போது கேட்கிறார்கள். தென்ன மரத்துக்கு வேரிலே விடுகின்ற தண்ணீர் இளநீராக வருகிறது. அப்படி இறைவனுடைய திருவடிக்கு நாம் பக்தியால் செய்பவை அவன் அருளாக மாறிப் பயன் தருகின்றன. அறத்தில் நம் பொருளையும், ஆற்றலையும் செலவிட்டால் அது புண்ணிய மாக மாறி மறுமைக்குப் பயன்படுகின்றது.

## பாங்கில் உள்ள பணம்

பாங்கில் பணம் போடுகிறோம். பாங்கில் இருப்பவர்கள் நம்முடைய பணத்தை அப்படியே மூட்டை கட்டி வைப்பதில்லை. ஆனால் நம் பணம் அங்கே இருக்கிறது என்பதற்குக் கணக்கு உண்டு. கோயில் கட்டுபவன், தண்ணீர்ப் பந்தல் வைக்கிறவன், ஏழைகளுக்கு உபகாரம் செய்கிறவன் ஆகிய பலர் செய்யும் நற் செயல்களும் இறைவனுடைய அருளாட்சிப் பாங்கில் அடை யாளமிட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணத்துக்குரிய கணக்கு நமக்குத் தெரியாது. அந்த உலகத்தில் நமக்குப் பயன் படுவதற்குத் தகுந்த நாணயமாக அவை மாறுகின்றன.

"இவ்வுலகிலுள்ள மக்கள் எல்லோரும் கடைசியாகச் செய்ய வேண்டிய பிரயாணம் ஒன்று இருக்கிறது. அது நெடுவழி. அந்த வழியில் செல்லும்போது நமக்குப் பயன்படும் செல்வத்தை நாம் தேடிக் கொள்ள வேண்டாமா?" என்று கேட்டால் ஒருவர், "என்னிடம் பத்து வீடுகள் இருக்கின்றன. பத்து லட்சம் ரூபாய் இருக்கிறது. அவற்றை வெள்ளி ரூபாயாகவே கட்டி வைத்திருக் கிறேன், இவை பயன்படாவா?" என்கிறார். அருணகிரியார், "இவை யாவும் போகக்கூடிய உலகத்தில் உனக்குப் பயன்படுவ தில்லையே!" என்கிறார். "அப்படியா? இவற்றால் எனக்குப் பயன் உண்டாக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?" என்று மறுபடியும் கேட்டால், அவர் சொல்கிறார்.

வையிற் கதிர்வடி வேலோனை
    வாழ்த்தி, வறிஞர்க்குஎன்றும்
நொய்யிற் பிளவள வேனும்
    பகிர்மின்கள்; நுங்கட்குஇங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா
    உடம்பின் வெறுநிழல்போல்
கையில் பொருளும் உதவாது
    காணும் கடைவழிக்கே.

''அந்தப் பயணத்திற்கு நம் கையில் வைத்திருக்கும் பணம் உதவாது. அந்த உலகத்தில் செலாவணி ஆகக் கூடிய பணம் ஒன்று சொல்கிறேன். உங்களிடம் இருக்கும் பணத்தை எந்தப் பாங்கில் கொடுத்து, அந்தப் பணமாக மாற்ற வேண்டும் தெரியுமா? பணம் இல்லாத வறியவராகிய பாங்கில் போட்டு மாற்ற வேண்டும்'' என்கிறார்.

## நேர் மாறு

உலகியலும் அருளியலும் சில சமயங்களில் நேர்மாறாகத் தோன்றும். மிக்க ஆடம்பரமாக உடையணிந்து கொண்டிருக்கும் பெரிய பணக்காரனை உலகியலில் மதிக்கிறார்கள். அவன் ஞானியாக மாட்டான். வீதியில் ஓடு ஏந்திக் கோவணம் கட்டிக் கொண்டு போகும் சிலரை ஞானிகள் என்கிறோம். அருளியலில் அவர் களுக்குத்தான் மதிப்புண்டு. இறைவனே கபாலியாகத் தோற்றம் அளிக்கிறான். நம்மிடம் இருக்கும் பணத்தை நாம் பணம் நிறைய இருக்கும் பாங்கில் போடுகிறோம். உலகத்துச் செல்வ நிலை இது. ஆனால் வறிஞர்களாகிய பாங்கில் போடச் சொல்கிறார் அருணகிரியார். இது தலைகீழ்ப் பாடமாகத் தோன்றுகிறது.

போன பாட்டிலே, நம்மிடத்தில் இருக்கும் ஞானமாகிய செல்வத்தைப் பிறர் களவாடிக் கொண்டு போகாமல் இருக்க நமக்கு வேதாகம சித்திர வேலாயுதன் துணையாக வருவான் என்று சொன்னார். நாம் செல்கின்ற இடத்தில் செலாவணி ஆகும் பொருளை நம்மிடம் வைத்திருந்தால் வழியில் நமக்குத் துணையாக வரு கிறவனும் அவனே.

இவ்வுலகில் நம்மிடம் இருக்கும் செல்வத்தை எப்படி மாற்ற வேண்டும்?

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி...
பகிர்மின்கள்

(வை - கூர்மை.) கூர்மையான கதிரை வீசும் வடிவேல் பெருமானை வாழ்த்தி, அவனைத் தொழுது, தர்மம் செய்ய வேண்டும்.

## செருக்கு அற

தர்மம் செய்வோருக்குச் செருக்கு உண்டாவதுண்டு. நல்ல காரியங்கள் செய்பவர்கள் கர்வம் அடைவார்கள். தவம் செய்வோருக்கும் அகங்காரம் வந்துவிடுகிறது. மனித வாழ்வில் கடைசியில் நினைவு செத்துப்போகும்; இந்திரியம் செத்துப் போகும்; ஆசை செத்துப் போகும். ஆனால் நான் என்ற உணர்ச்சி கடைசி வரையில் செத்துப் போகாது. எதைச் செய்தாலும், ''நான் செய்தேன்'' என்ற நினைவு வரும்.

## புகழ் ஆசை

நாலு பேர் புகழ வேண்டும் என்பதற்காகச் சிலர் தர்மம் செய் கிறார்கள். அவர் எதிர்பார்த்த புகழ் கிடைத்துவிட்டால அவருக்கு அந்தத் தர்மத்துக்குரிய பயன் அப்பொழுதே கிடைத்தாகிவிடு கிறது; இனி மறு உலகில் கிடையாது.

நாம் ஒரு கூலியாளுக்கு இரண்டு ரூபாய் முன் பணம் கொடுக் கிறோம். அவன் நாளைக்கு வந்து செய்ய வேண்டிய வேலைக் காகக் கொடுக்கிறோம். அப்படியின்றி அவனிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டு, அன்றைக்கே வேலையை வாங்கிக் கொண்டுவிட்டால் நாளை வந்து அவன் செய்கின்ற வேலைக்குப் புதுக் கூலி கேட்பான். நேற்றே கொடுத்தேனே என்றால், நேற்றைக்குக் கொடுத்தது நேற்று வாங்கிக் கொண்ட வேலைக்குச் சரியாகப்போய்விட்டது என்பான். இவ்வுலகில் நாம் லட்ச லட்ச மாகத் தர்மம் செய்துவிட்டுப் பலபேர் புகழ வேண்டுமென்று நினைத்தால், அந்தத் தர்மத்திற்குரிய விலையாகப் புகழ் கிடைக் கிறது. மறுபடியும் பயன் எப்படி வரும்? ஆகவே, தர்மம் செய்யும் போது நான் செய்கிறேன் என்று நினைத்துச் செய்யக் கூடாது; புகழை எதிர்பார்த்தும் செய்யக் கூடாது.

உலகில் பொருள் பெறுவது எளிது. உயர் குணங்கள் நிரம்பிய வனிடத்திலும் பொருள் இருக்கிறது. தவறான காரியங்கள் செய் கின்றவனிடத்திலும் பொருள் இருக்கிறது. ஆகவே பொருளைப் பெறுவது கடினம் அல்ல. ஆனால் அதைக் கொடுப்பது அருமை. கொடுப்பதிலும் தன்னை மறந்து கொடுப்பது மிகமிக அருமை. ஈதலின் நோக்கமே ஆசைகளை அழிப்பதுதான். ஆதலால் புகழாசையை அந்த ஈகை உண்டாக்கக் கூடாது.

## பொருளால் அருள்

சிலருக்கு எத்தனை முயன்றும் பொருள் கிடைப்பதில்லை. ஆனால் சிலருக்கு மிகுதியான பொருளைக் கொடுத்திருக்கிறான் இறைவன். எதற்காக?

"இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்"

என அப்பர் சுவாமிகள் சொல்கிறார். மக்களுக்கு அருள் புரிவதற் காக இறைவன் அவர்களிடம் மிகுதியான பணத்தைக் கொடுக் கிறான். அந்தப் பணத்தின் மேல் அவர்கள் ஆசை வைக்காமல், அதைக் கொடுத்தவன் இறைவன் என எண்ணி, இரப்பவர்களுக்கு எல்லாம் தம்மிடம் இருப்பதை இல்லையென்று ஒளிக்காது ஈந்தால் அவர்களுக்கு இறைவன் அருளைக் கொடுக்கிறான்.

"கரப்பவர் தங்கட் கெல்;லாம்கடுநர கங்கள் வைத்தார்."

தம்மிடம் பொருள் இருந்தும், இரப்போர்க்குக் கொடுக்காமல், இல்லை எனச் சொல்லி மறைத்து வைத்துக் கொள்கிறவர்களுக்குக் கடுமையான நரகத்தை வைத்திருக்கிறானாம். நம்மிடம் பொருள் மிகுதியாக இருந்தால், இறைவன் அருள் பெற மிகுதியான வாய்ப்பு இருக்கிறது என்று கொள்ள வேண்டும். அருள் வருகின்ற வாய், பொருள் என்ற கார்க்கினால் அடைபட்டிருக்கிறது. புட்டிக் குள் இருக்கும் பொருள் வேண்டுமென்றால் மேலே மூடி யிருக்கிற கார்க்கை எடுத்து எறிய வேண்டும். அந்தக் கார்க்கை எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தால், உள்ளே இருக்கிற பொருளை நுகர முடியுமா? அருள் வருகின்ற வாயை அடைத்துக் கொண்டிருக்கும் பொருளை இரப்போர்க்கு எல்லாம் இல்லை யென்னாது கொடுத்தால் ஆண்டவன் அருள் வரும். அந்தப் பொருளைத் தன்னுடையது என்று வைத்துக் கொண்டால் அருள் வராது.

அருள் பாலிக்க வேண்டும் என்ற பெருங்கருணையுடன் இறைவன் சிலரிடம் மிகுதியான பொருளைக் கொடுத்திருக் கிறான். ''எந்தக் குழந்தை நாம் கொடுத்த பொருளைக் கையாராப் பிறருக்கு எடுத்துக் கொடுக்கிறது?'' என்று அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். அக்குழந்தைக்கு அருளை வழங்குகிறான்.

அருளைப் பெறுவதற்குத் துணையான பொருளை நம்மிடம் கொடுத்திருக்கிறான் என்று உணர்ந்தால் அவனை வாழ்த்த வேண்டாமா? வேறு உலகத்திலே பயன்படுகிற நாணயமாக மாற்று வதற்கு உரிய பொருளையும் நம்மிடம் கொடுத்து, பயணம் புறப் பட்ட பின்பு, 'நானும் உன்னுடன் துணையாக வருகிறேன்' என்று வேலைப் பிடித்துக் கொண்டு நிற்கும் அவனை வாழ்த்துவது நம் கடமை. ஆகையால், வையிற் கதிர்வடி வேலானை வாழ்த்தி வறிஞர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அருணகிரிப் பெருமான் சொல்கிறார்.

நாலு பேர் காணக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கர்வத்துக்கு அறிகுறி. ஆயிரம் ஆயிரம் கோயில்களை இந்நாட்டில் எழுப்பியிருக்கிறார்களே, அவற்றை எல்லாம் எழுப்பியவர் யார் என்று நமக்குத் தெரியுமா? ஆண்டவன் பெயரை வெளிப்படுத்தி, தம் பெயரை மறைத்துக் கொண்டு விட்டார்கள் அவர்கள். காரணம் என்ன? ''நான் செய்தேன்'' என்ற நினைப்பு அற்று, எல்லாம் இறைவன் திருவருளால் நிகழ்க்கின்றன என்ற எண்ணத் தில் தம்மை மறந்து தர்மம் செய்த பெரியவர்கள் அவர்கள்.

## நான்கு குற்றம்

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

என்றார் வள்ளுவர். ''அவன் தர்மம் பண்ணிப் புகழ் பெறுகிறானே; நாம் குறைந்து விட்டோமா? அவனுக்கு மேல் கொடுக்க வேண்டும்'' என்று எண்ணிக் கொடுப்பது பொறாமையின் விளைவு. அது அறம் ஆகாது. ''இது செய்தால் எனக்குப் புகழ் கிடைக்கும்; பிறர் நமக்கு உதவி செய்வார்கள்'' என்று நினைப்பது அவா. அதுவும் தவறு. எப்போதும் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருக்கிறா னென்று சிடுசிடுவென்ற முகத்தோடு வீசுவது சினம். ''இதைத்

தொலைத்துக் கொண்டு போ'' என்பது இன்னாச் சொல். இந்த நான்கும் இல்லாமல் செய்யும் தர்மம் உயர்ந்தது என்று வள்ளுவர் சொல்கிறார்.

''இறைவன் திருவருளினால் கொடுக்க வாய்ப்புக் கிடைத் திருக்கிறது'' என்ற நினைப்பு இவற்றை அழிக்கும். 'ஒரு கை கொடுப்பது மற்றொரு கைக்குக்கூடத் தெரியக் கூடாது' என்பர். கையா கொடுக்கிறது? கையை உடையவன் கொடுக்கிறான்; கை கருவியாக நின்று கொடுக்கிறது. நாம் கொடுக்கிறோம் என்று கை நினைப்பது இல்லை. அது போல நம்மைக் கருவியாகக் கொண்டு இறைவன் கொடுக்கிறான் என்று உணரவேண்டும். நாம் நம் விருப்பப்படி கொடுக்கிறோம் என்ற எண்ணம் தக்க தன்று. நினைத்தபடி செய்யக் கூடிய ஆற்றல் நம்மிடம் இருக்கு மானால் எத்தனையோ அரிய செயல்களைச் செய்வோம். அவ் வாற்றல் நம்மிடம் இல்லை. அப்படி இருக்க, நாம் கொடுக் கிறோம் என ஏன் நினைக்க வேண்டும்? ஆண்டவனது சித்தப்படி கொடுப்பதற்கு மனம் முந்துகிறது; கை கொடுக்கிறது என்றே எண்ண வேண்டும்.

கொடுக்கும்போது அன்புடன் கொடுக்க வேண்டும். இறை வனிடத்தில் அன்பு வேண்டும்; இரப்பவனிடத்திலும் அன்பு வேண்டும். நாம் கருவியாக இருந்து கொடுக்கிறோம் என்று நினைந்து கொடுக்க வேண்டும். ''வையிற் கதிர் வடி வேலானை வாழ்த்திக் கொடு'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

## யாருக்கு?

யாருக்குக் கொடுக்க வேண்டும்? ''வறிஞர்க்கு என்றும் கொடுங்கள்'' என்கிறார். யார் வறுமை உடையவர்களோ அவர்களுக்குக் கொடுப்பது கொடை.

''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறிஎதிர்ப்பை நீர் துடைத்து''

என்கிறார் வள்ளுவர். ''வறியார்க்குக் கொடுப்பதே கொடை. மற்றவர்களுக்குக் கொடுப்பது, பின்னாலே நமக்கு வேறு வகையில் உதவி அவராலே கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொடுப்பதே ஆகும்'' என்பது அவர் கருத்து.

## நடைமுறைக்கு ஏற்ற உபதேசம்

"நான் எப்படிக் கொடுக்க முடியும்? எனக்கு என்ன சக்தி இருக்கிறது?" என்று சிலருக்குச் சந்தேகம் வரும். சிலர் பிச்சைக் காரர்கள் தம் வீட்டுக்கு வந்தால், "என்னிடம் பிச்சை கேட்க வந்தாயா? நீ வெளியில் வந்துவிட்ட பிச்சைக்காரன்; நான் உள்ளே இருக்கிற பிச்சைக்காரன்" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். "நமக்கு இருந்தால்தானே பிறருக்குக் கொடுக்க முடியும்?" என்று கேட்பவர் பலர். அருணகிரியார் இது தெரிந்து சொல்கிறார்:

> வையிற் கதிர்வடி வேலோனை
>     வாழ்த்தி வறிஞர்க்குஎன்றும்
> நொய்யிற் பிளவள வேனும்
>     பகிர்மின்கள்

"நீ இரண்டு வேளை சாப்பிடுகிறாய் அல்லவா?"

"இல்லை; ஒரு வேளைதான் சாப்பிடுகிறேன்."

"சரி; அந்த ஒரு வேளையாவது அரிசிச் சோறு சாப்பிடுகிறாய் அல்லவா?"

"இல்லையே! அந்த ஒரு வேளையும் கஞ்சிதானே சாப்பிடுகிறேன்?"

"சரி, நீ கஞ்சிக்கு நொய் போடுகிறாய் அல்லவா? அந்த நொய்யிலும் உடைந்த நொய் இருக்கிறது. நீ நொய்யைச் சாப்பிடு. நொய்யிலும் உடைந்த குறுநொய் இருக்கிறதே, அதையாவது பிறருக்குக் கொடுக்கலாமே" என்கிறார்.

ஓர் அரிசியில் உடைந்தது நொய். அதில் குறைந்தது குறு நொய். அதைக் குறுணை என்று இப்பொழுது சொல்கிறோம். பெரிய விருந்தாக வைத்தால்தான் தர்மம் என்று ஆகாது. "நீ விருந்து போடவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சோறு சாப்பிட்டால் அதில் ஒரு பகுதியைத் தர்மமாகக் கொடுக்கலாம். அரிசியாகவே கொடுக்க வேண்டுமென்பதில்லை. நொய்கூடக் கொடுக்க முடியாது என்றால் அதிலும் உடைந்த குறுநொய் இருக்கிறது. அதைக் கொடுக்கக் கூடாதா?" என்கிறார்.

## குறிப்பு

வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்.

''நொய்யிற் பிளவள வேனும்'' என்று உம் போட்டுச் சொல்வதன் பொருள் என்ன? நொய்யில் பிளவுதான் கொடுக்க வேண்டுமென்பது இல்லை.

ஒரு பணக்காரனிடம் ஏழைப் பிள்ளை ஒருவன் வந்து, '''ஐயா, நான் படிப்பதற்கு மிகவும் துன்பப்படுகிறேன். ஒரு புத்தகம் வாங்கிக் கொடுங்கள்'' என்று சொன்னால் ஒரே ஒரு புத்தகம் வாங்கிக் கொடுங்கள் என்று பொருள் ஏற்படும். அப்படி இல்லாமல், ''ஒரு புத்தகமாவது வாங்கிக் கொடுங்கள்'' என்றால் என்ன பொருள், ''எல்லாப் புத்தகங்களையும் வாங்கிக் கொடுத்தால் நல்லது'' என்ற குறிப்பு அதில் தோன்றுகிறது. அதைப் போல், ''நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்'' என்றால், ''உங்களிடம் இருப்பது எல்லாவற்றையும் கொடுத்தாலும் கொடுக்கலாம். அது நல்லது'' என்ற குறிப்புத் தோன்றுகிறது. பிளவளவு கடைசிப் பட்சம்; உயர்ந்த பட்சத்துக்கு அளவு இல்லை.

யாரோ ஒரு பெரிய பணக்காரக் கிறிஸ்துவரிடம் ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவனுக்கு அந்தப் பணக்காரன் ஒரு தம்படி கொடுத்தான். அந்தப் பிச்சைக்காரன், ''நீயும் நானும் சகோதரர்கள் என்று கர்த்தர் சொல்கிறார். உன்னுடைய சொத்தில் பாதிக்கு உரிமை உடைய எனக்கு ஒரு தம்படி போடுகிறாயே?'' என்று கேட்டானாம். அதற்கு அந்தப் பணக்காரன், ''ஆம்; அவர் சொன்னது உண்மை. அவர் சொன்னதை எண்ணி நான் என்னிடம் இருக்கும் பணத்தை எல்லாம் பிரித்து எல்லாக் கிறிஸ்துவர்களுக்கும் கொடுப்பதானால் உனக்கு இந்த ஒரு தம்படிகூட வராது. ஆகவே அந்தத் தம்படியையும் கொடுத்துவிட்டுப் போ அப்பா'' என்றாராம். பிச்சைக்காரன் நடைமுறையில் நடக்காததைக் கேட்டான். அருணகிரிநாதர் அப்படிச் சொல்லவில்லை.

''நீங்கள் சோறு சாப்பிடுகிறீர்கள்; அதைக் கொடுங்கள்'' என்று சொன்னால் சிலர் மறுக்கலாம். நீங்கள் அரிசி சாப்பிடவில்லையா? அந்த அரிசியைக் கொடுக்க வேண்டாம். அந்த அரிசியில் உடைந்த நொய்யைக் கொடுக்கக் கூடாதா? அதுவும்

*முடியவில்லை என்றால் அதில் பிளந்த குறுநொய் இருக்கிறது. அதைக் கொடுக்கலாம்'' என்று சொன்னால், ''நிச்சயம் தரலாம்'' என்று தோன்றும். இப்படி வாழ்க்கையில் நடைமுறையில் பயன் படுகிற உபதேசத்தைச் சொல்கிறார் அருணகிரியார்.*

*யாருக்குக் கொடுக்க வேண்டும்? வறிஞருக்கு. எப்பொழுது கொடுக்க வேண்டும்? எல்லாக் காலத்தும்; என்றும்.*

## காரணம்

*ஏன் கொடுக்க வேண்டும்?*

நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா
உடம்பின் வெறு நிழல்போல்
கையில் பொருளும் உதவாது
காணும் கடைவழிக்கே.

*''நீங்கள் இவ்வுலகை விட்டு, வேறு உலகத்திற்குக் கடைசி யாகச் செய்யப் போகின்ற பிரயாணத்தில் உங்களிடம் இருக்கும் பணம் பயன்படாது. ஆகவே அந்த உலகத்தில் பயன்படக்கூடிய அருட்செல்வமாக அவற்றை எல்லாம் மாற்றிக் கொள்ள, வறிஞர் களுக்கு இப்பொழுதே கொடுங்கள்'' என்கிறார்.*

## மனம் திருந்த

*ஆண்டவன் கோயிலுக்குப் போவதும், தர்மம் செய்வதும் மனத்தைப் பக்குவப்படுத்தத்தான். நான் என்பது அகங்காரம். என்னுடையது என்பது மமகாரம். நான் என்பது உண்டாகிப் பின்பு என்னுடையது என்பது உண்டாகிறது. நான் என்ற ஆணவம் அடங்க வேண்டும். ஆணவம் முதலில் அடங்காது. கப்புக் களைகளை எல்லாம் கழித்துவிட்டு நடுமரத்தை வெட்டுவது போல, எனது என்பதைத் தறித்துப் பின் நான் என்பதைத் தறிக்க வேண்டும். எனது என்பதைத் திடீரென்று மறந்துவிட முடியாது. எனது என்பதைப் பிறரது என்று மாற்ற வேண்டும். ''எனது, எனது'' என்று சொல்லிப் பழகின மனத்தை, ''என்னுடையது அல்ல'' என்று மறுத்து நினைக்கச் செய்ய முடியாது. ஆனால் வெகு சுலபமாக, ''எல்லாம் இறைவனுடையது'' என்று நினைக்கச் செய்யலாம்.*

"அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ?
எண்டோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய், பிழைசெய்வாய்;
நானே இதற்கு நாயகனே?"

என்று மணிவாசகர் சொல்கிறார்.

ஒரு கல்லை எடுத்து ஆற்றில் போட்டால் அது ஆற்றுக்குள் அமிழ்ந்துவிடுகிறது. ஆனால் ஒரு தெப்பக்கட்டையைப் போட்டு அதில் எவ்வளவு பெரிய கல்லை ஏற்றினாலும் தண்ணீரின் மேலே மிதக்கிறது. "நான் இருக்கிறேன்; எல்லாம் என்னுடையது" என்றால் தண்ணீருக்குள் மூழ்கிப் போக வேண்டியதுதான். "என்னுடையது அன்று. எல்லாம் இறைவனுடையவை. இறைவன் சார்பிலே இருக்கிறேன்" என்று நினைக்கிறவர்களுக்கு அந்தக் கவலை இல்லை. மிதக்கிற பொருளுக்கு ஆழத்தைப் பற்றி கவலை இல்லை. ஆழ்கின்ற பொருளுக்குத்தான் ஆழத்தைப் பற்றிக் கவலை. "ஓர் அடி ஆழமாக இருந்தால் தப்பலாமே! ஒன்பது அடி ஆழமாக இருந்தால் செத்துப் போவோமே" எனத் தண்ணீருக்குள் தனித்து வீழ்ந்தவன் கவலைப்படுவான். தெப்பக் கட்டையோடு புகுந்தவனுக்கு ஆழ்த்தைப் பற்றி என்ன பயம்?

## துன்பமும் இன்பமும்

உலகத்தில் துன்பங்களுக்கு நடுவில் வாழ்கிற மனிதனுக்கு இறைவன் திருவருள் தெப்பமாக இருந்தால் எத்தனை துன்பங்கள் வந்தாலும் கலங்கமாட்டான். துன்பங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. உலகம் மாறிவிடவில்லை. அருளைத் தெப்பமாகப் பெற்றவனும் வேறிடம் போவதில்லை. எந்த ஊரில் எந்த மக்களுக்கு இடையே வசித்து வந்தானோ அதே ஊரில், அதே மக்களுக்கிடையேதான் அவன் வசித்து வருவான். ஆற்றுக்குள் எத்தனை மேடுபள்ளம் இருந்தாலும் கல், முள் இருந்தாலும் ஆற்றின்மேல் தெப்பத்தில் மிதக்கிறவனுக்கு அவற்றைப் பற்றி என்ன கவலை? அவன் ஆற்றின் மேலேதான் இருக்கிறான்?

அதைப் போல உலகமாகிய ஆற்றில், இறைவன் அருளாகிய தெப்பத்தின் மீது ஏறிக்கொண்டவர்களுக்கு, உலகத்தில் எத்தனை துன்பங்கள் இருந்தாலும் கவலை இல்லை. அவர்கள் உலகத் திலேதான் இருக்கிறார்கள். ஆனால் துன்பம் அடைவதில்லை.

மழை பெய்கிறது. வீதியில் போகிறவர்கள் குடுகுடு என்று ஓடி, மழைக்காக ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் ஒருவன் மாத்திரம் போய்க் கொண்டே இருக்கிறான்; மழையில்தான் போய்க் கொண்டிருக்கிறான். மழை எங்கும் பெய்துகொண்டே இருந்தாலும் அவனளவில் மழை இல்லை போல இருக்கிறது. காரணம்; அவன் கையில் குடை வைத்திருக்கிறான். மழை பெய்து கொண் டிருக்கும் பொழுது மழை இல்லாதது போன்ற நிலை அவனளவில் வந்துவிடுகிறது. எம்பெருமானின் திருவருள் நமக்குக் குடையாக இருந்துவிட்டால் உலகில் எத்தனை துன்பம் இருந்தாலும் நம்மள வில் துன்பம் இல்லாத நிலை வந்துவிடும்.

## வேறுபாடு இல்லாத நிலை

உலகத்தில் துன்பம் என்றும், இன்பம் என்றும் வேறு பிரித்துப் பகை என்றும் நட்பென்றும் வேற்றுமை கொள்வதற்கு நம் அகங்கார மமகாரமே காரணம். ஞானிக்கு எல்லாரும் நண்பர்கள். உலகத்திலுள்ள குழந்தைகள் எல்லாரும் இறைவன் குழந்தைகள். உலகில் நிகழ்கின்ற எல்லாச் செயல்களும் அவனால் நிகழ்கின் றன. அடிப்பதும், அணைப்பதும் ஒன்றே ஆகும் என்ற ஞானம் அவர்களிடம் இருக்கிறது. கறுப்பு, சிவப்பு, பச்சை என்ற வர்ணங்கள் இருக்கின்றன. எல்லாம் நிறங்களே. முள்ளைப் போலச் சித்திரம் போட்டாலும், பூவைப் போலச் சித்திரம் போட்டாலும் சித்திரங் களே. இரண்டு சித்திரங்களுக்குள்ளும் உயர்வு, தாழ்வு இல்லை. ஆனால் நாம் நம்முடைய அகங்கார மமகாரங்களுடன் தொடர்பு படுத்திப் பார்த்து வர்ணங்களுக்குள்ளும் சித்திரங்களுக்கும் உயர்வு, தாழ்வு கற்பிக்கிறோம். பலாப்பழத்தை விரும்புகிறோம்; பாகற்காயை வெறுக்கிறோம். பாகற்காயைச் சுவைத்துச் சாப்பிடு கிறவனும் இருக்கிறான். பலாப்பழத்தை வெறுக்கிறவனும் இருக் கிறான். பலாப்பழம், பாகற்காய் இரண்டும் ஒன்றுக்கொன்று உயர்வு, தாழ்வு, வேறுபாடு அற்றன. இருந்தாலும் ஒவ்வொரு மனிதனும் தன் அளவில் வேறுபாடாகக் காண்கிறான். அவன்

உள்ளத்திலுள்ள வேறுபாடு பொருள்களுக்குள் உயர்வு தாழ்வை நிர்ணயம் செய்கிறது.

அகங்காரம், மமகாரம் அற்ற நிலையில் இறைவன் திருவருளோடு ஒன்றுபட்ட ஒருவனுக்கு உலகம் முழுவதும் நல்லதாக இருக்கும். இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்கிறார். ஒரு பெரியவர் ஒரு நாள் பிரசங்கத்தில், ''உலகத்திலுள்ள எல்லாம் பிரம்மம்'' என்று சொன்னாராம். அதை ஒருவன் கேட்டுவிட்டு, ''எல்லாம் பிரம்மம்'' என்று கூவிக்கொண்டே போனான். போகும் வழியில் ஒரு மதம் பிடித்த யானை வந்தது. அதன்மேல் இருந்த பாகன், ''ஐயா, ஐயா! நகர்ந்து போங்கள்'' என்று சொன்னான். ''போடா போ, எல்லாம் பிரம்மம்'' என்று சொல்லி அவன் போனான். யானை துதிக்கையால் பிடித்து அவனைத் தூக்கி எறிந்து விட்டது. நல்லவேளை, அவன் சாகவில்லை. உடனே உபதேசம் செய்தவரிடம் அவன் சென்று, ''எல்லாம் பிரம்மம் எனச் சொன்னீர்களே; அந்த யானை என்னைத் தூக்கி எறிந்துவிட்டதே!'' என்றானாம். அதற்கு அவர், ''ஆம், சொன்னேன். யானையைப் பிரம்மம் என்று எண்ணினாய். அதன் பாகனும் பிரம்மந்தானே? அந்தப் பிரம்மம் உன்னை நகர்ந்து போ எனச் சொன்னபோது நீ ஏன் நகரவில்லை?'' என்றாராம். அவன் ஞானம் போலி ஞானம்.

உலகம் எங்கும் இறைவன் இருக்கிறான் என்பதை அநுபவப் பொருளாக ஞானிகள் காண்கிறார்கள். சுகமாக இருக்கும்போது நாம் இறைவனை நினைப்பதில்லை. ''ஆண்டவன் கோயிலில் இருக்கிறான். தொண்டர்கள் கூட்டத்தில் இருக்கிறான்'' என்றெல்லாம் சொல்கிறார்கள். அவன், **''நோயுளார் வாய் உளான்''** என்கிறார் சம்பந்தர். நோய் என்றால் துன்பம். யார் யார் துன்பம் உடையவர்களோ அவர்கள் வாயில் இருக்கிறானாம். துன்பப் படும்போதுதான் இறைவனை நினைக்கிறோம். இது மனிதஇயல்பு. எப்போதும் அவனையே நினைப்பது உண்மை அன்பர் இயல்பு.

அகங்காரம், மமகாரம் மாறவேண்டும். அகங்காரம் மாறும் முன்பு எனது என்கிற மமகாரம் ஒழிய வேண்டும். மமகாரத்தை ஒழிக்க எனது எனது என்ற எண்ணத்தை மாற்றி, எல்லாம் அவனது என்று சொல்லவேண்டும். அவனது கருவியாக நான் இங்கே நடமாடிக் கொண்டிருக்கிறேன் என்று எண்ண வேண்டும். நம்மிடம் வரும் வறியவர்களை அவனாகவே

எண்ணி, அவன் கொடுத்திருக்கும் பொருளை ஒளிக்காமல் அவனிடமே கொடுக்க வேண்டும்.

## கடவுள் வந்தும்

டால்ஸ்டாய் ஒரு கதை எழுதியிருக்கிறார். ஓர் ஊரில் ஒரு சக்கிலியன். அவனுக்கு ஆண்டவனைக் கண்ணால் பார்க்க வேண்டு மென்று ஆசை. பல காலம் அவனது தரிசனத்திற்காகக் காத்துக் கிடந்தான். ஒருநாள் அவன் கனவில், ''வெள்ளிக்கிழமையன்று நான் வருவேன்'' என்று ஆண்டவன் சொல்லி மறைந்தான். வெள்ளிக்கிழமை அன்று வழக்கமாகத் தான் செய்யும் வேலை களை எல்லாம் கட்டி வைத்துவிட்டு ஆண்டவனது வருகைக்காக அந்தச் சக்கிலியன் காத்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கிழவர் வந்தார். ''அப்பா, நான் பத்து மைல் தூரம் நடந்து போக வேண்டும். என் செருப்பு அறுந்துவிட்டது. கொஞ்சம் இதைத் தைத்துக் கொடு'' எனக் கேட்டார். ''அதெல்லாம் இன்றைக்கு முடியாது; போ போ'' எனச் சொல்லி விட்டான் அவன். மணி ஏறிக் கொண்டே போயிற்று. இறைவனைக் காணவில்லை. ஒரு சின்னக் குழந்தை குடு குடுவென ஓடி வந்து மழலைச் சொல்லில், ''நான் விளையாடப் போக வேண்டும். இந்தச் செருப்பைக் கொஞ்சம் தைத்துக் கொடு'' என்றது. அவன், ''இன்று ஒரு வேலையும் செய்ய முடியாது போ'' எனச் சொல்லி விரட்டிவிட்டான். ஆண்டவன் வருகைக்காக அல்லவா அவன் காத்துக் கொண்டிருக்கிறான்? ஆண்டவன் வரவில்லையே என்ற ஏமாற்றத்தோடு இருந்த அவனிடம் மறுபடியும் ஒரு கிழவி வந்தாள். ''அப்பா, தண்ணீர் வைக்கும் இந்தத் தோல் பை கிழிந்துவிட்டது. இதைத் தைத்துக் கொடு'' என்று கேட்டாள். அவன் கோபத்தோடு, ''இன்று ஆண்டவன் வரும் நாள். ஒன்றும் செய்ய முடியாது போ'' என்று சொல்லிவிட்டான். இரவு மணி பத்தாகிவிட்டது. இறைவன் சொன்னபடி வரவில்லை. சக்கிலியன் துக்கத்தோடு, ''ஆண்டவனே, நீ இன்றைக்கு வருவதாகச் சொன்னாயே! வரவில்லையே!'' என்று நைந்து வருந்தியபடியே படுத்தான். கனவில் இறைவன், ''அப்பா, நான் மூன்று தடவை வந்தேன். ஏழைக் கிழவனாக வந்தேன். குழந்தையாக வந்தேன். கிழவியாக வந்தேன். நீதானே என்னைப் போ போ என்று மூன்று தடவையும் விரட்டினாய்?'' என்றானாம். அப்பொழுதுதான் அவனுக்கு ஞானம் பிறந்தது. .

## ஏழையாக வருவான்

எம்பெருமான் ஏழையாக வருவான். இறைவன் அருளை நமக்கு வாங்கிக் கொடுக்க வருகின்ற பிரதிநிதிகள் ஏழைகள் என்று நினைத்தார்கள், நம் நாட்டுப் பெரியோர்கள். நம்மிடம் இறைவன் கொடுத்து வைத்திருக்கிற பொருளை வாங்கிப் போக யார் வருவார்கள் என்று காத்துக் கிடந்தார்கள்.

தன்னிடம் உள்ள பொருளை இறைவனுடையது என்று எண்ணி ஏழைகளுக்குக் கொடுப்பது அகங்காரம், மமகாரம் இரண்டையும் ஒழிப்பதற்கு வழி. பற்றையும் ஆசையையும் போக்கத் தியாகமே மாற்று. நம்மிடம் உள்ள பொருளை நம்முடையது அல்ல என்று நினைக்கலாம். அப்போது யாருடையது என்ற கேள்வி வரும். அதற்கு இடமே இல்லாமல் இறைவனுடையது என்று எண்ணி, இதை அவன் நமக்குக் கொடுத்திக்கிறான் என நினைக்க வேண்டும். ஆகவேதான் அருணகிரியார், ''வையிற் கதிர் வடிவேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும் கொடுப்பாயாக'' என்றார்.

## உதவாத பொருள்

அப்படி ஏன் கொடுக்க வேண்டும்? கடைசியாகப் போக வேண்டிய கடை வழிக்குப் பயன்படும் பொருட்டு. ''இவ்வுலகில் என்னிடம் இருக்கும் செல்வம் வேறு யாரிடமும் இல்லை. இத்தனை பணம் சேகரித்து வைத்திருக்கிறேனே, இவை யாவும் பயன்படவா?'' என்றால், ''இந்தப் பணம் பயன்படாது அப்பா. உன்னுடைய கைப்பொருள்களில் எதுவும் உனக்கு உதவாது. இவையேனும் உன் கை கால்களால் ஓடி ஆடிச் சம்பாதித்தவை. ஆனால் உன் உயிரோடு ஒட்டியே பிறந்த உடம்பு இருக்கிறதே, அது உனக்கு உதவுகிறதா? நல்ல வெயிலில் போக முடியாமல், புழுதிச் சூட்டைத் தாங்க முடியாமல், தவிக்கிறாயே. அப்போது உன்னுடைய நிழலில் நீயே கொஞ்சம் தங்கி இளைப்பாற முடியுமா? அல்லது உன் நிழலில் வேறு யாராவது தான் தங்க முடியுமா? உன் உடம்பின் நிழல் எப்படி உனக்கே பயன்படாதோ அதுபோலவே உன் கைப்பொருளும் அந்தக் கடைவழிக்குப் பயன்படாது'' என்கிறார்.

வெய்யிற்கு ஒதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல்போல்
கையில் பொருளும் உதவாது
காணும் கடைவழிக்கே.

"உங்களிடம் இருக்கும் பொருளை வறிஞருக்குக் கொடுங்கள். அவ்வுலகில் பயன்படுகிற இறைவன் அருளாகக் கிடைக்கும். போகிற வழியில் நமக்குத் துணையாக இருக்கிற வடிவேலனை வாழ்த்திக் கொடுங்கள். அவன் கையில் இருக்கிற வேல் கூர்மை யானது; ஒளியை உடையது. இருட்டில் போகும்போது அது ஒளி கொடுக்கும். பகை வரும்போது அதன் கூர்மை உங்களைக் காப் பாற்றும். உங்களிடம் இருக்கும் பொருளை வறிஞருக்கு என்றும் கொடுத்து, கடை வழிக்குப் பயன்படுகிற அருளாக மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் படைத்த உடம்பே உங்களுக்கு உதவாத போது உங்கள் கையில் படைத்த தனமா உதவும்? உதாவது" என்கிறார் இந்தப் பாட்டில்.

வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி வறிஞர்க்குஎன்றும்
நொய்யிற் பிளவள வேனும்
பகிர்மின்கள்; நுங்கட்குஇங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல்போல்
கையிற் பொருளும் உதவாது
காணும் கடைவழிக்கே.

(கூர்மையையும், ஒளியையும் உடைய அழகையுடைய வேலாயுதக் கடவுளை வாழ்த்தி, பொருள் இல்லாத வறுமையை உடையவர்களுக்கு இன்ன காலம் என்னாது எந்த நாளிலும், நீங்கள் உண்பது நொய்யுணவாக இருந்தால் அப்போது நொய்யிலும் பிளவளவாவது பகிர்ந்து கொடுங்கள். அப்படிக் கொடுக்காமல் பாதுகாத்து வைத்திருந்தால், உங்களுக்கு இங்கே வெயிலுக்கு ஒதுங்கவும் உதவாத உடம்பின் பயனற்ற நிழலைப் போலக் கையில் உள்ள பொருளும் இறுதியில் செல்லும் வழிக்கு உதவாது.

நொய்யுணவாக உண்பவரானால் அதிற் பிளவாகிய குறு நொய் யுணவைத் தர்மம் செய்யுங்கள் என்பது பொருள். ஒரு நொய்யில் பாதி எடுத்து வைத்து, "இந்தாருங்கள்" என்று சொல்வது அவர் கருத்தன்று.

வை - கூர்மை. வடி - அழகு. இங்ஙன் - இங்கே. வெறு நிழல் - பயன்படாத நிழல்)

# எல்லாம் மறந்த நிலை

தமிழ் நூல்களில் சொல்லப் பெறும் பொருள்கள் எல்லாவற்றையும் இலக்கண ஆசிரியர்கள் இரண்டு வகையாகப் பகுத்திருக்கிறார்கள். அகம் என்பதும் புறம் என்பதுமே அந்தப் பகுப்பு ஆகும். மக்கள் வாழ்க்கையிற் பெற வேண்டிய பொருள்கள் நான்கு. அறம், பொருள், இன்பம், வீடு என்ற அந்த நான்கையும் உறுதிப் பொருள்கள் என்பர். அவற்றையே அகம், புறம் என்ற இரண்டிலும் அடக்குவது தமிழ் மரபு. இன்பத்தை அகம் என்றும், அறம் பொருள் வீடு என்ற மூன்றையும் புறம் என்றும் வகைப்படுத்தியிருக்கிறார்கள்.

அகம், காதல் கற்பு என்ற இன்ப வாழ்க்கையின் வகைகளைச் சொல்வது. புறம், அறம் பொருள் வீடு என்ற மூன்றையும் சொன்னாலும் பெரும்பாலும் பொருளின் வகையாகிய வீரத்தைப் பற்றியே சொல்லும். ஆதலால் அகம் என்றால் காதலும், புறம் என்றால் வீரமுமே முதலில் நினைவுக்கு வரும். காதல் வாழ்க்கையின் பல துறைகளை விரித்துரைப்பது அகப்பொருள் இலக்கணம். வீர வாழ்க்கையின் பல துறைகளை விரிவாகச் சொல்வது புறப் பொருள் இலக்கணம்.

## காதலும் வீரமும்

காதலும் வீரமும் இரண்டு கண்களைப் போலத் தமிழர்களால் போற்றப் பெற்றவை. பெண் என்றால் காதலும், ஆண் என்றால் வீரமும் நினைவுக்கு வருகின்றன. பெண்ணின் இயல்பு காதலை உண்டாக்குதல்; விருப்பத்தைக் கிளரச் செய்தல். அதனால்,

"மாதர் காதல்"

என்று தொல்காப்பியம் சொல்கிறது. மாதர் என்ற சொல்லுக்கே காதல் என்று பொருள். பெண்ணின் தன்மை பெட்பு; அதற்கு விருப்பம் என்று பொருள்.

இப்படியே ஆணின் தன்மை ஆண்மையாகும். ஆண்மை என்ற சொல்லுக்கு வீரம் என்று பொருள். ஆண்டவனுடைய இயல்புகளுள் வீரம் தலை சிறந்தது என்பது இதனால் தெரிய வரும். பெண்ணால் காதலும் ஆணால் வீரமும் வளர்கின்றன. பெண்ணின் காதலை ஆணின் வீரம் பாதுகாக்கிறது.

ஆணும் பெண்ணுமாக மக்கள் உருக்கொண்டு வாழும் உலகத்தில் வீரமும் காதலும் வாழ்க்கையை அரண் செய்து இன்பத்தை ஊட்டுகின்றன. வீர வாழ்க்கையும் காதல் வாழ்க்கையும் கவிஞரால் காப்பியங்களில் சிறப்பாக வருணிக்கப் பெறுகின்றன.

## வீரமுருகன்

முருகன் வீரத்தைப் பாதுகாக்கும் தெய்வம்; வீரம் நிறைந்த தெய்வம். அவன் தேவர் படைத் தலைவன். போர் பல செய்து வெற்றி பெற்றவன். அவன் திருக்கரத்தில் உள்ள வேல் அவன் வீரச் சிறப்புக்கு அடையாளமாக இலங்குகிறது. படைகளுக்குள் வில், வாள், வேல் என்பவை சிறந்தவை. அவற்றிலும் வேல் சிறந்தது. அதனைக் கைக்கொண்ட முருகன் பெரிய வீரன்.

"பெருவிறல் மள்ள"

என்று திருமுருகாற்றுப்படை அவனைப் போற்றுகிறது.

## காதலிற் சிறந்த முருகன்

வீரத்தில் சிறந்து நிற்பது போலவே முருகன் காதலிலும் சிறந்து நிற்கிறான். காதலைப் பாதுகாக்கும் தெய்வம் அவன். வள்ளியெம்பிராட்டியிடம் காதல் சிறந்து நின்ற பேரழகன் அவன். வீரமும் காதலும் சிறந்த முருகனை,

"மங்கையர் கணவ, மைந்தர் ஏறே"

என்று நக்கீரர் பாராட்டுகிறார்.

காதற் சிறப்பை அவன் அணிந்த மாலை காட்டுகிறது. அவன் வெவ்வேறு வகையான மாலைகளை அணிவதுண்டு. அவனுக்கு அடையாள மாலை காந்தள். அவனுடைய காதலுக்கு அடையாளமாக இருக்கும் மாலை கடம்பு. அதைப் போகத்துக்கு உரிய மாலை என்று நச்சினார்க்கினியர் சொல்வார்.

*முருகனது வீரப் பெருமையை அவன் திருக்கரத்திலுள்ள வேலும், காதற் பெருமையை அவன் திருமார்பில் அணிந்த கடம்ப மாலையும் புலப்படுத்துகின்றன. அந்த இரண்டையும் ஒரு சேர நினைக்கிறார் அருணகிரிநாதர்.*

**சொன்ன க்ரவுஞ்ச கிரிஊ**
**டுருவத் தொளைத்தவைவேல்**
**மன்ன! கடம்பின் மலர்மாலை**
**மார்ப!**

## வேல்

*முதலில் வேலைப்பற்றிச் சொல்கிறார். அது கிரௌஞ்ச மலையைத் துளைத்தது; அதனூடே புகுந்து உருவியது. யானை, குதிரை முதலியவற்றையும் காலாளையும் ஊடுருவிச் செல்வது எளிது. குருதியும் தசையும் உள்ள உடம்புகளாதலின் பச்சை மரத்தில் ஆணி இரங்குவது போல வேல் புகுந்துவிடும். ஆனால் கிரௌஞ்ச மலை பாறையாக இருப்பது. அம்பும் வேலும் தன்பால் வந்து மோதினால் அவற்றின் முனைகளை மழுங்கச் செய்யும் வன்மையை உடையது அந்த மலை. அது சொர்ண மயமானது என்று அருணகிரியார் சொல்கிறார்.*

**''பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்**
**எங்கோன்''**

*என்று கந்தர் அலங்காரத்திலும்,*

**'கனகக் கிரியைப் பொரும்வேலா''**

*என்று திருப்புகழிலும் கிரௌஞ்ச மலையைத் தங்கமலை என்று பாடியிருக்கிறார். வெள்ளி மலையாக இருப்பதே தன் மாயத்தால் தங்க மலையாகவும் நிற்கலாம்.*

*கந்தபுராணத்தில் உள்ள வரலாறுகள் வெவ்வேறு வகையாக வழங்கி வருகின்றன. பழங்காலத்தில் முருகனைப் பற்றி வழங்கிய வரலாறுகள் பல பிற்காலத்தில் மறைந்தன. புதிய வரலாறுகள் எழுந்தன. பிற நூல்களில் காண இயலாத பல வரலாறுகள் அருணகிரியார் வாக்கில் வரும். அப்படி உள்ளவற்றில் ஒன்று, கிரௌஞ்ச மலை பொன் மயமானது என்பது.*

இறுகிய பொன்னாக நின்ற கிரௌஞ்சத்தில் ஊடுருவிச் சென்று முருகனுடைய வேல் தொளைத்தது. வேல் தொளைத்தது என்று கூறினாலும், அந்தச் செயலுக்குரிய வீரம் முருகனிடம் இருப்பதுதான். அவன் வேலை ஏவினான்; அது தொளைத்தது.

### மாலை

வீரம் படைத்த வேலாயுதத்தையுடைய மன்னனாக முருகனைப் பரவிய அருணகிரியார், அடுத்தபடி அவனது மாலையைச் சொல்கிறார். அவன் வெட்சி, காந்தள், கடம்பு முதலிய மாலைகளை அணிபவன். கடம்பு அவன் திருமார்பில் அணியும் மாலை. குறிஞ்சி நிலத்திலே மலரும் மலர் கடம்பு. அம்மலர் சக்கரத்தைப் போல உருளும்; மாலை தொடுத்தாற் போல அதன் கொத்து இருக்கும். முருகன் அலங்காரம் செய்து கொண்டு தன் தேவி மாரோடு உல்லாசமாக இருக்கும்போது அணிகிற மாலை அது.

"அலங்கலென வெண்கடம்பு
புனைந்துபுண ருங்குறிஞ்சி
அணங்கைமணம் முன்புணர்ந்த - பெருமாளே"

என்று திருப்புகழில் வருகிறது. கடம்பு மாலையை அணிந்து வள்ளியெம்பெருமாட்டியோடு இன்புற்றானாம் முருகன்.

வீரத்துக்கும் காதலுக்கும் நாயகனாக வைவேல் மன்னனாகவும் கடம்பணியும் மார்பனாகவும் இருக்கும் முருகனை ஏத்துகிறார் அருணகிரியார்.

சொன்ன க்ரவுஞ்ச கிரியூ
டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன! கடம்பின் மலர்மாலை
மார்ப!

# 2

## அநுபவ நிலைகள்

அருணகிரியார் முருகனுடைய திருவருளில் திளைத்து இன்ப அநுபவம் பெற்றவர். இறைவனை வழிபட்டு அன்பு முறுக

முறுகப் பலவகையான அநுபவங்கள் உண்டாகும். யோகம் செய்தாலும், உபாசனை செய்தாலும், துறவுள்ளத்தோடு உண்முக நோக்கிலே ஈடுபட்டாலும் இறைவன் அருள் பதியப் பதியப் புதிய புதிய அநுபவம் உண்டாகி வரும். முத்தியின்பம் என்பது முடிந்த முடிபாகிய அநுபவம். அதற்குமுன் எத்தனையோ படிகள் உண்டு. சாதனங்களை மேற்கொண்டு ஒரு காலைக்கு ஒரு கால் பயிற்சி முற்றி வரும்போது அநுபவமும் முதிர்ந்து வரும். பயிரை விளைக்கையில் நாளுக்கு நாள் பயிர் வளர்ந்து பல நிலைகளை அடைவதுபோல அநுபவம் வளரும்.

## அறிவும் அநுபவமும்

புத்தகத்தைப் படித்தும் இறைவனைப் பற்றிய செய்திகளைக் கேட்டும் பெறும் அறிவு நமக்கு இறைவன் அருளைப் பெற வேண்டும் என்ற ஆசையை உண்டாக்குமே யன்றி, அநுபவத்தை உண்டாக்காது. நெல்லின் வகைகளைப் பற்றியும் நெற்பயிர் விளைவிக்கும் திறத்தைப் பற்றியும் வேளாண்மையில் நேரும் இடையூறுகளைப் பற்றியும் எவ்வளவு தெரிந்து கொண்டாலும், நெல் அறுவடை செய்ய இயலாது. உழுது பரம்படித்து விதைத்துப் பயிர் செய்தால்தான் நெல்லை அறுவடை செய்யலாம். முயற்சி இல்லாமல் எந்தக் காரியமும் கைகூடாது. ஒரு கவளம் சோறு கிடைக்க வேண்டுமாயின் அதற்காக எவ்வளவோ பாடுபட வேண்டியிருக்கிறது. அன்ன சத்திரங்களின் விலாசங்களை மாத்திரம் தெரிந்து வைத்துக் கொண்டால் சோறு நம் வாயில் வந்து விழாது. சோற்றைத் தேடி அலைய வேண்டும். அதைப் பெறுவதற்கு என்ன காரியம் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

அதற்கே அப்படியானால் உயிருக்கு இன்பம் தரும் அநுபவம் எளிதில் வருமா? நூலறிவினால் அதனைப் பெற இயலாது. பல ஆண்டுகள் முயன்றும் தமக்கு இறையருள் அநுபவம் கிடைக்க வில்லையே என்று ஏங்குபவர்கள் இருக்கிறார்கள்.

அநுபவத்தில் பல நிலைகள் உண்டு என்று சொன்னேன். இறைவன் திருநாமத்தைச் சொன்னால் நாக்கு இனிக்கும் என்று பக்தர்கள் சொல்கிறார்கள். அந்த அநுபவம் நமக்குத் தெரியாது. இறைவனை நினைத்தால் மனம் இனிக்கும் என்கிறார்கள். அது மற்றோர் அநுபவம்.

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துளுணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டிஅணைத் தாலும்
இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே"

என்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார். அது ஓர் அநுபவம்.

## முயற்சியும் பலனும்

உண்மையாக முயற்சி செய்பவனுக்குக் கைமேல் பலன் உண்டு. வேளாண்மை செய்கிறவனுக்கு நிலமும் கருவியும் உரமும் உழைப்பும் தக்கபடி அமைந்தால், அவன் நாளுக்கு நாள் தன் உழைப்புக்குப் பலன் உண்டாகி வருவதைக் கண்முன் காண்பான். இறைவனுடைய அருளுக்காக ஏங்கி நின்று அன்பு செய்யும் அன்பர்களுக்கும் நாளுக்கு நாள் அநுபவத்தில் வளர்ச்சி தெரியும். "நான் செய்கிற பக்தி சரிதானா?" என்று பிறரைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. சோறு வயிற்றில் போகப் போகப் பசி அடங்கி வருவதை உண்டவன்தானே அறிகிறான்? அவன் வேறு ஒருவனிடம் போய், "எனக்குப் பசி தீர்ந்துவிட்டதா?" என்று கேட்பதில்லை.

இறைவன் அருளுக்காக முயலும் அன்பு நெறியில் கிடைக்கும் அநுபவம் அவரவர்களுக்குத் தெரியும். அந்த அநுபவம் முதிர்ந்து வருவதும் அவர்களுக்குத் தெரியும். முயற்சி செய்யாதவர்களுக்கு, சாதனத்திலே ஊக்கம் இல்லாதவர்களுக்கு, அநுபவம் பெற்றவர் கள் ஏதேனும் சொன்னால் கதையாகத் தோன்றும்; கற்பனை யாகத் தோன்றும்; நம்பிக்கை பிறக்காது. ஆனால் ஓரளவு முயற்சி செய்து அதனால் விளைந்த அநுபவத்தைப் பெற்றவர்களுக்கோ, அநுபூதிமான்களின் வாக்குக் கேட்கும்போது, "ஐயோ! இந்த அநுபவத்தை நாம் இன்னும் பெறவில்லையே!" என ஏக்கம் உண்டாகும். தாம் செய்த முயற்சியின் அளவுக்கு ஒருவகை அநுபவம் பெற்றவர்களாதலின், பெரியவர்கள் கூறும் அநுபவங்கள் உண்மையானவையே என்று தோன்றும். தாம் பெற்ற சிறிய அநுபவம் ஒரு காலத்தில் பொய்யாக அவர்களுக்குத் தோன்றி யிருக்கும். ஆனால் இப்போது அது மெய் என்று தெளிந்திருக் கிறார்கள். இது முயற்சியின் பயனாக விளைந்தபோது எப்படி

மெய்யாகத் தோன்றுகிறதோ, அப்படியே இன்னும் முறுகிய முயற்சியினால் பெரியவர்கள் பெற்ற மேலான அநுபவமும் மெய்யாகத் தோன்றும் என்ற அறிவு அவர்களுக்கு உண்டாகும்.

அருணகிரிநாதர் பெற்ற அநுபவ வகைகளில் ஒன்றை இப்போது சொல்கிறார். அதை அருளிய வைவேல் மன்னனை, கடம்ப மலர்மாலையணிந்த மார்பனைப் பார்த்துச் சொல்கிறார். அந்த அநுபவம் அவருக்கு வியப்பை மூட்டுகின்றது.

அது என்ன அநுபவம்?

## உடம்பு இறந்தது

இந்த உடம்பு இறந்துபோய்விட்டதாம்.

இறந்தே விட்டது இவ்வுடம்பே.

உடம்பு இறந்துபோனால் இந்தப் பாட்டை எப்படிப் பாடினார்?

உயிர் உடம்பினின்றும் போய்விட்டால் இறந்துவிட்டான் என்று சொல்கிறோம். இறத்தல் என்ற சொல்லுக்கு விட்டு நீங்குதல் என்பதுதான் பொருள். உடம்பிலிருந்து உயிர்விட்டு நீங்குவதால், உயிர் இறந்துவிட்டது என்று சொல்வதுதான் பொருத்தம். ''முத்தப்பன் இறந்துவிட்டான்'' என்று சொல்கிறோம். முத்தப்பன் என்ற பெயராலே குறிக்கப்பட்ட உடம்பு எங்கும் போகவில்லை. உயிர்தான் போயிற்று. அந்த உடம்பு உயிரோடு இருந்தபோது முத்தப்பன் என்று அடையாளம் சொல்லுகிறோம். அவன், அவர் என்று சுட்டும் பொருள் உயிர்தான். ''அவர் போய் விட்டார்'' என்னும்போது போனது உயிர்தானே? ஆகவே உயிர்தான் இறந்ததேயன்றி உடல் இறக்கவில்லை. உயிர் இறந்ததனால், உடம்பு பிணமாயிற்று என்று வேண்டுமானால் சொல்லலாம், உடம்பு இருக்க உயிர் போகிற நிலை அது.

அருணகிரிநாதர் அதைச் சொல்லவில்லை. உயிர் இருக்கும் போது உடம்பு இறந்துவிட்டதாம்! இது வேடிக்கையாக இருக்கிற தல்லவா? உடம்பு இறந்துவிட்டது என்று கூறுவதற்கு என்ன பொருள் என்று சிந்திக்க வேண்டும். உயிர் இறந்த பிறகு உடம்பு இருந்தாலும் அதில் உணர்ச்சி இருப்பதில்லை. அதை வெட்டி

னாலும் குத்தினாலும் துடிப்பதில்லை. கொசுக் கடித்தால் உடனே துள்ளுகிறோம். புண் வந்தால் துடியாய்த் துடிக்கிறோம். இதே உடம்பு உயிர் இறந்தபிறகு என்ன பண்ணினாலும் உணர்ச்சி யின்றிக் கட்டையாகி விடுகிறது.

உயிர்போன உடம்புக்கும் உயிர் போகாத உடம்புக்கும் இந்த வேற்றுமை இருக்கிறது. உயிர் போனபிறகு வர வேண்டிய நிலை உயிர் இருக்கும்போது உடம்புக்கு வந்துவிட்டதாம். அதைத்தான், ''இறந்தே விட்டது இவ்வுடம்பே'' என்று அருணைமா முனிவர் சொல்கிறார்.

## உணர்ச்சி மரத்தல்

"அப்படி உணர்ச்சி இல்லாமல் உயிருள்ள உடம்பு இருக்குமா?'' என்று கேட்கலாம். ஒருவன் அயர்ந்து தூங்குகிறன். ''உடம்பு மறந்து தூங்குகிறான்'' என்று சொல்கிறோம். மூட்டைப் பூச்சி கடிக்கிறது. அது அவனுக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு அவன் உடம்பிலே உணர்ச்சி இருப்பதில்லை. அந்தப் பூச்சி அழுத்தமாகக் கடித்தால் சற்றே புரண்டு கொடுக்கிறான்.

மயக்கம் போட்டு விழுந்தவனைப் பாருங்கள். அவன் மண்டை யில் காயம் பட்டு ரத்தம் ஒழுகுகிறது. ஆனாலும் அவனுக்கு உணர்ச்சி இருப்பதில்லை. அவன் உடம்பிலே உயிர் இருந்தாலும் உணர்ச்சியற்றுப் போகிறது.

ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்கிறார்கள். உணர்ச்சி மரத்துப் போக ஊசி குத்திச் சஸ்திர சிகிச்சை செய்கிறார்கள். கத்தியினால் அறுத்து மருந்து போட்டுப் பின்பு தைக்கிறார்கள். அப்போதெல் லாம் அவன் உடம்பில் உணர்ச்சியே இருப்பதில்லை. உயிர் உடம்பில் இருக்கும்போதே உணர்ச்சி அற்றுப் போகும் நிலை வருவது அநுபவபூர்வமானதுதான் என்று இவற்றால் தெரிகிற தல்லவா?

தூக்கத்தால் ஓரளவு உணர்ச்சி மரக்கிறது; மயக்கத்தாலும் மரக்கிறது; மருந்தினால் உணர்ச்சி மரத்துப் போகிறது. அப்படியே ஒருவகை நிலையில் யோகியர்களுக்கு உடம்பு உணர்ச்சியற்றுப் போகிறது. உடம்பு இருந்தும் இறந்துவிட்டது போல ஆகிவிடு கிறது. அந்த நிலையில் பெற்ற அநுபவத்தையே,

இறந்தே விட்டது இவ்வுடம்பே

என்று அருணகிரியார் சொல்கிறார்.

## படிப்படியாக

அந்த நிலை எவ்வாறு வந்தது என்பதை அவர் சொல்கிறார். உடம்பு உணர்ச்சியற்றுப் போவதற்கு முன்பு படிப்படியாகச் சில முயற்சிகள் செய்தார். அவற்றின் விளைவே இந்த அநுபவம்.

முருகனை எப்போதும் பாடினார்; பின்பு மௌன முற்றார்; தியானித்தார். மனத்தால் நினைத்தார். அப்படி நினைக்கும்போது வேறு நினைப்புகளும் இடையிடையே தலைப்பட்டன. அவற்றை மெல்ல மெல்ல ஓட்டினார். முருகனது நினைப்பில் அழுத்தமும் ஒருமைப்பாடும் ஏறியவுடனே மற்ற நினைப்புகள் தாமே ஒழிந்தன. அந்த நினைவில் ஒன்றியபோது முருகனுடைய நினைவு மாத்திரம் இருக்கவில்லை. முருகனுடைய உணர்வே எழுந்தது.

## நினைவும் உணர்வும்

நினைவு என்பது மனத்தோடும் அறிவோடும் ஒட்டியது. உணர்வு என்பது அநுபவத்தோடு இணைந்தது. முருகனுடைய திருநாமம், அவன் திருவிளையாடல், அவன் திருக்கோலம் ஆகியவற்றை நினைக்கலாம். அவனை நினைப்பதென்பது இது தான். அவனை உணர்வதாவது அந்த நினைப்பையும் மறந்து அநுபவத்திலே கரைவது. நினைக்கத் தொடங்கும்போது கடைப் பிடி நழுவுவதும் மீட்டும் நினைப்பதும் நமக்கு வழக்கம். திரும்பத் திரும்ப ஒன்றை நினைத்து நினைத்துப் பழகினால்தான் ஒருமைப்பாடு உண்டாகும். அப்படியே நினைவு கடந்த உணர் விலும் கடைப்பிடி நழுவும் நிலை உண்டு. உணர்வு நினைவாக இழியும். அப்போது மீட்டும் மீட்டும் உணரவேண்டும். அப்படி உணர உணர அந்த உணர்வில் ஒருமைப்பாடு உண்டாகும்.

"நினைந்துநினைந்து உணர்ந்துஉணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந்து"

என்பது திருவருட்பா. நினைக்க வேண்டும்; மீட்டும் மீட்டும் நினைக்க வேண்டும். நினைப்பு முறுகின பக்குவத்தில் உணர்ச்சி

தலைப்படும். உணர வேண்டும்; மீட்டும் மீட்டும் உணர வேண்டும். உணர உணர அவ்வுணர்வில் முதலில் தட்டுப்படும் மேடு பள்ளங்கள் மறையும்; சலனம் ஒழியும்.

உணர்ச்சி முதலில் தோற்றும்போது புது வெள்ளம் போல வரும்; அலையெறிந்து கொண்டு வரும்; கொந்தளிப்போடு குதிக்கும். மீண்டும் மீண்டும் உணரும்போது ஒருமைப்பாடு உண்டாகும்; அமைதி பிறக்கும்.

பொறிகளால் உண்டான அநுபவம் மனத்தில் வாசனையாக நிற்கிறது. இறைவனுடைய திருவருளுணர்வு உதயமாகும்போது இந்த வாசனை இடறுவதனால்தான் கொந்தளிப்பு ஏற்படுகிறது. பண்பட்ட நிலத்தில் நீர் பாய்ந்தால் மெல்லப் பாயும். மேடும் பள்ளமுமான நிலத்தில் பாய்ந்தால் வேகம் உண்டாகும்; கொந்தளிப்பு ஏற்படும்? மேடு கரைந்து பள்ளம் நிரம்பினால் அலையில்லாத அமைதி நிலவும்.

வாசனை காரணமாக மனம் அலைகிறது. புழுதியாக இருக்கிற இடத்தில் நீர் ஊற்றும்போது முதலில் புழுதி கிளம்பும். அப்படியே இறைவனை நினைக்கும்போது மனத்தில் பழைய வாசனைப் புழுதி கிளம்புகிறது. நினைப்பு நிலைதாண்டி உணர்ச்சி நிலை வரும்போது, புழுதி அடங்கினாலும் மண் வாசனை வீசுவதுபோல, மனத்தில் அடங்கி நிற்கும் மாசுகள் மேலே வர முண்டுகின்றன. மனம் சிதறுகிறது. பஞ்சுபோலச் சிந்தனைகள் பரவப் பார்க் கின்றன. ஆனால் உணர்ச்சி முறுகி விட்டால், உணர்ச்சியிலே ஒருமைப்பாடு வந்துவிட்டால், அவை அடங்கிவிடும். திக்குக்கு ஒன்றாக எழுந்த எண்ணங்களும் தலை நீட்டிய வாசனைகளும் மணம் வீசிய வித்துக்களும் அடங்குகின்றன. இறைவன் உணர் வாகிய ஒன்றிலே ஒன்றி மறைந்து மாய்கின்றன. அப்போது ஒருமைப்பாடு வருகிறது. எல்லாம் ஒருமுகப்பட்டு உணர்வு மயமாக நிற்கும் அநுபவம் அது.

நினைப்பு உள்ளவரையில் மனம் இயங்கியது. உணர்வு உள்ள வரையில் உள்ளம் இயங்கியது. மனம் நின்ற போது அநுபவத்தை உணரும் உள்ளம் இயங்கத் தொடங்கியது. மனம் இயங்கும்போது உருவம் நாமம் எல்லாம் நினைவு இருந்தன. அவன் நாமமும், உருவமும் தியானத்துக்குத் தட்டுப்பட்டன.

மனம் அடங்கி உள்ளம் இயங்கியபோது இன்னதென்று சொல்ல இயலாத ஒன்று உணர்ச்சியிலே தட்டுப்பட்டது. அதை வடிவம் என்று சொல்ல இயலாது; நாமம் என்று சொல்ல இயலாது. ஆனால் ஒன்று இருப்பது தெரிந்தது. அதுவே இந்த அநுபவத் துக்கு நிலமாக இருப்பதும் தெரிந்தது. அப்படி இருக்கும் நிலையே குணம் உள்ள நிலை. அதற்கு வடிவில்லை. ஆனால் அநுபவத்தைத் தரும் இயல்பு உண்டு. அப்படிச் சொல்வதைவிட, நாம் வேறாக நின்று, இதை அநுபவிக்கிறோம் என்ற உணர்ச்சியைத் தரும் வேறுபட்ட நிலை உண்டு என்று சொல்லலாம். அதுதான் குணம்.

## நிர்க்குணம்

**உ**ணர்வு ஒன்றியது; எல்லாம் ஒருங்கியது; அப்போது அந்தக் குணமும் மறைந்தது. அடையாளம் ஒழிந்தது. நான் அநுபவிக் கிறேன் என்ற உணர்வும் மறைந்தது. மயக்க மருந்தை மூக்கிலே காட்டும்போது டாக்டர் ஒன்று இரண்டு என்று எண்ணச் சொல் கிறார். எண்ணிக்கொண்டே வருகிறவன் கடைசியில் எண்ணுவதை மறந்து தன்னையும் மறந்துவிடுகிறான். அது போன்ற நிலை இப்போது வருகிறது. இது வரையில் ஏதோ பிழம்பாகத் தோன்றிய ஒன்றில் மூழ்கிச் செயலற அநுபவ உணர்ச்சி மாத்திரம் தோற்றியது. இப்போது அதுவும் நழுவியது. அநுபவம் இது, அநுபவிப்பவன் நான் என்ற வேறுபாடே இல்லை. நிர்க்குண மான நிலையில் தன்னையும் மறக்கும் அநுபவம் ஏற்படுகிறது. கருவி கரணம் கழன்ற நிலை இது என்பார்கள்.

இத்தகைய அநுபவத்தைப் படிப்படியாகச் சொல்கிறார் அருணகிரியார்.

'நான் உன்னை உணர்ந்தேன். இடையே வாசனை கலைத்தது. மீட்டும் உணர்ந்தேன். இந்த உணர்ச்சியை அடுத்தடுத்து இயங்கச் செய்தேன்.'

**நின்னை உணர்ந்து உணர்ந்து.**

'நினைப்புக் கடந்து உணர்வுலகத்திலே பலமுறை ஊற்றம் பெற்று முறுகியபோது, பல திசையிற் சிதறிய எண்ணமும் உணர்வும் ஒன்றி ஒருமுகப்பட்டன. அப்போது வடிவில்லாத, உருவில்லாத அடையாளமில்லாத, குணமில்லாத, நிர்க்குணமே பூண்டிருந்தேன்.'

நின்னை உணர்ந்து உணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு.

*அப்போது நான் பெற்ற அநுபவம் வேறு, நான் வேறு என்ற உணர்வு இல்லை. நீ வேறு, நான் வேறு என்ற உணர்வும் இல்லை. நானே அங்கு இல்லை. என்னையே மறந்திருந்தேன்.'*

எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந்தேன்

*தன்னையே மறந்த நிர்க்குண நிலையில், உணர்வின் இயக்கமும் ஒழிந்து ஒருங்கிய நிலையில், உடம்பு இறந்துவிட்டதாம். உடம்பை இயக்கும் உயிரே உணர்வற்று நிற்கும்போது உடம் புணர்வு எங்கே எழப்போகிறது?*

*உள்ளே போட்ட சட்டையோடு கழற்றும்போது வெளிச்சட்டையும் கழலுவதுபோல, தன்னையே மறந்த நிர்க்குண நிலையில் உடம்பும் மறந்துபோவது இயல்புதானே?*

*முருகனுடைய தியானத்தினால் இந்த அநுபவம் விளைந்ததென்று அருணகிரிப் பெருமான் சொல்கிறார்.*

என்னை மறந்திருந்தேன், இறந்
தேவிட்டது இவ்வுடம்பே.

*முருகனுடைய வீர வேலையும் கடம்பமாலையையும் நினைத்துத் தியானம் பண்ணத் தொடங்கினால் நாளடைவில் நினைப்பிலே ஒருமை உண்டாகும்; பிறகு உணர்வு தலைப்படும்; அப்பால் உணர்வில் ஒருமைப்பாடு வரும்; எல்லாம் ஒருங்கிய ஒருமைப்பாட்டிலே குணங்குறி கடந்த நிர்க்குண அநுபவம் நிகழும்; அப்போது கருவி கரணம் கழன்று, தன்னை மறந்து, தன் உடம்பை மறந்து நிற்கும் இன்பம் ஏற்படும்.*

சொன்ன க்ரவுஞ்ச கிரிஊ
டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன! கடம்பின் மலர்மாலை
மார்ப!மௌ னத்தைஉற்று
நின்னை உணர்ந்துஉணர்ந்து எல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம்பூண்டு
என்னை மறந்திருந் தேன்; இறந்
தேவிட்டது, இவ்வுடம்பே.

*(தங்க மயமான கிரவுஞ்சமலை ஊடுருவும்படியாகத் தொளைத்த கூர்மையையுடைய வேலாயுதத்தைக் கொண்ட மன்னனே! போகத்துக் குரிய கடம்பமலர் மாலையை அணிந்த மார்பை உடையவனே! வாயால் பேசுவதை ஒழிந்து மௌனத்தை அடைந்து, நின்னைப் பலகால் உணர்ந்து உணர்ந்து முயற்சி யாவும் ஒருமுகப்பட்ட நிர்க்குண நிலையைப் பூண்டு என்னை மறந்திருந்தேன்; அப்போது இவ்வுடம்பு உணர்ச்சியற்று இறந்தே போய்விட்டது.*

*சொன்னம் - தங்கம். வை - கூர்மை. நிர்க்குணம் - குணம் அற்றது.)*

மௌனத்தை உற்று என்றது வாய் பேசுவதை ஒழிந்த நிலை; நிர்க்குணம் பூண்டு என்றது மனம் சிந்தித்தலை ஒழிந்த நிலை; இறந்தேவிட்டது இவ்வுடம்பே என்றது உடம்பு உணர்ச்சியை மறந்த நிலை. இவை முறையே வாங் மௌனம், மனோ மௌனம், காஷ்ட மௌனம் எனப் பெறும்.

வாயால் பேசுவது நின்று மனத்தால் சிந்திப்பதும் நின்றால் உடம்பு தானே உணர்விழந்துவிடும். நான் என்ற உணர்வும் அற்றுப் போகும். இதையே சமாதி நிலை என்று கூறுவர் பெரியோர்.

**''உல்லாச நிராகுல யோகஇதச்
சல்லாப விநோதனும் நீஅலையே?
எல்லாம்அற என்னை இழந்தநலம்
சொல்லாய், முருகா! சுரபூபதியே!''**

என்ற அநுபூதிப் பாட்டில், ''என்னை இழந்த நலம்'' என்று குறிப்பிப்பதும் இந்த நிலைதான்.

# அருளும் பொருளும்

உடம்பு இருந்தும் இல்லாது போன்ற நிலையை, கருவி கரணங்கள் கழன்று உடம்பின் வாசனை எல்லாம் போய்ப் புளியம்பழம் ஓட்டோடு ஒட்டாமல் இருப்பது போன்ற அநுபவ நிலையை, அருணகிரிநாதர் முன் பாட்டில் சொன்னார். ''இறந்தே விட்டது இவ்வுடம்பே'' என்று முடித்த அவருக்கு, உடம்பை விட்டு இறந்தே போகின்ற மக்களைப் பற்றிய நினைப்பு வந்தது. வந்தவுடன் இரக்கம் பிறந்தது.

## கோபமும் இரக்கமும்

உடம்பைவிட்டுச் செல்லவேண்டிய மக்கள், உடம்பு இருக்கும் பொழுதே, நிச்சயமாக உயிர் உடம்பை விட்டுப் போகப் போகிற தென்று உணர்ந்து, அதனிடம் உள்ள பற்றை அகற்றிவிட்டால் ஒருவிதமான துன்பமும் இல்லை. ரெயில் வருகிறதென்று தெரிந்தவுடனே மூட்டை முடிச்சுக்களை எல்லாம் ஆயத்தமாக எடுத்து வைத்துக் கொண்டால் வந்தவுடன் ஏறிக் கொண்டுவிடலாம். வண்டி வந்த பிறகு மூட்டை முடிச்சைக் கட்ட ஆரம்பித்தால் வண்டி நகர்ந்துவிடும். உடம்பு இருக்கும் பொழுதே அதனிடம் பற்று இல்லாமல் இருந்தால் பின்னால் துன்பம் இல்லை.

உடம்பினிடம் உள்ள பற்றை விடுவது இருக்கட்டும். உடம்பினால் உழைத்துச் சேமித்து வைத்துள்ள பொருள்களிடம் கொண்டுள்ள பற்றையே விடமுடியவில்லையே! இந்த நினைப்பு அருணகிரியாருக்கு வந்தது. சிறிது கோபமும் உண்டாயிற்று. நல்லவர்களுக்குக் கோபம் வந்தால் கல்லால் அடிக்க மாட்டார்கள்; சொல்லால் அடிப்பார்கள். பொருளின் மேல் அழுத்தமான பற்றை உடையவர்களைப் பார்த்து,

**மதியிலிகாள்!**

என்று அழைக்கிறார். பின்பு இரக்கம் வருகிறது. ''பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு வாழத் தெரியாமல் இருக்கிறீர்களே!'' என்று இரக்கப்படுகிறார்.

## வாழத் தெரிந்தவர்கள்

உலகத்தில் வாழத் தெரியாதவர்கள் யார், வாழத் தெரிந்தவர்கள் யார் என்று கேட்டால், பெரும்பாலான மக்கள் என்ன விடை சொல்வார்கள்? யார் பணம் சேர்த்து வைத்துக் கொள்ளவில்லையோ அவர்களே வாழத் தெரியாதவர்கள் என்றும், பணம் உடையவர்களே வாழத் தெரிந்தவர்கள் என்றும் சொல்வர். அருணகிரிநாதர் அப்படிச் சொல்லவில்லை.

இந்த உலகத்தில் சுகமாக வாழலாம்; பல செளகரியங்களைப் பெற்று வாழலாம். அத்தகைய வாழ்வுக்குக் கருவியாய் இருப்பது பணம். அதனால்தான் பணம் உடையவனை வாழத் தெரிந்தவன் என்றும், பணம் இல்லாதவனை வாழத் தெரியாதவன் என்றும் உலகத்தார் சொல்கிறார்கள். பணம் உள்ளவன் அந்தப் பணத்தை வாழ்வதற்குரிய கருவியாகக் கொண்டு பொருள்களை வாங்கிப் பயன்படுத்த இயலும்; அப்படிச் செய்வான் என்ற நினைப்பில், பணமுள்ளவன் வாழ்கிறவன் என்கிறார்கள். அப்படி இல்லாமல் பணத்தைப் பத்திரமாக வைத்துக் கொண்டு பயன்படுத்தாமல் இருப்பவனைப் பாராட்டுவதில் பொருள் இல்லை. பணத்தை வைத்துக் கொண்டிருந்தும் வாழத் தெரியாதவன் அவன் என்றே சொல்ல வேண்டும்.

ஒருவன் பாங்கில் நிறையப் பணம் வைத்துக் கொண்டிருக் கிறான். ஒரு நாள் அவனுக்கு ஆயிரம் ரூபாய் உடனே தேவை யாய் இருக்கிறது. பாங்கியில் பணம் எடுக்க முடியாது; அன்று ஞாயிற்றுக்கிழமை. அவன் ஓடிப்போய்ப் பக்கத்து வீட்டுக்காரனிடம் ஆயிர ரூபாய் கடன் வாங்கி வரவேண்டிய அவசியம் ஏற்படு கிறது. பணம் இருந்தும் சமயத்துக்குப் பயன் படாதபோது அவன் படுகிற பாடு அவன் உள்ளத்துக்குத் தெரியும். அந்த ஒரு நாள் அவன் பிறரை நம்பி வாழ்பவன் ஆய்விடுகிறான். வாழ்நாள் முழுவதும் பணத்தைப் பயன்படுத்தாமல் வாழ்கிறவர்களைப் பற்றி என்ன சொல்வது? அவர்களை எண்ணி இரங்குகிறார் அருணகிரியார்

கோழிக் கொடியன் அடிபணி யாமல்
குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி காள்!உங்கள்
வல்வினைநோய்
ஊழிற் பெருவலி உண்ணஒட் டாது,உங்கள்
அத்தம்எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும்
அடிப்பிறகே?

வாழ்வதற்குப் பொருள் அவசியம் என்று உலகம் சொல்கிறது. அருணகிரிநாதரோ அருள் அவசியம் என்று சொல்கிறார். கோழிக் கொடியனுடைய அடியைப் பணிந்து அருள் பெற்றால் இந்தக் குவலயத்தில் வாழலாம். அப்படி வாழத் தெரிந்து கொள்ளாத வர்கள் மதியிலிகள் என்பது அவர் கருத்து.

## கோழிக் கொடியன் நினைவு

நம்முடைய வாழ்நாள் பல ஆண்டுகளை உடையது. ஒவ்வோர் ஆண்டிலும் மாதங்கள் உண்டு. மாதம் பல நாட்களால் ஆனது. ஒவ்வொரு நாளின் ஆரம்பத்தையும் காலை என்று சொல்கிறோம். நாம் தூங்கி விழித்தவுடன் நமக்கு நாள் தொடங்குகிறது. நமக்கு விழிப்பை ஊட்டவும் நாள் ஆரம்பமாயிற்றென்று அறிவிக்கவும் கோழி கூவுகிறது. வாழ்நாளில் பரீட்சைக்குப் படிக்கிற குழந்தை களுக்கு ஒவ்வொரு நாளும் அலாரம் அடிப்பதிலிருந்து தொடங்கு வது போல, பழங்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு ஒவ்வொரு நாளும் கோழி கூவுதலிலிருந்து தொடங்கிற்று. சூரியன் தன் பொற் கிரணங்களைப் பரப்பிக் கொண்டு வான வீதியிலே எழுந்து வரப் போகிறான் என்பதை நினைவுறுத்தக் கோழி கூவு கிறது. அதைக் கேட்டவுடனே நாம் எழுந்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தொடங்குகிறோம்.

மணி பார்க்கிறவன் கடியாரத்தை மறக்கலாமா? மணி பார்க்கும்போது கடியாரத்தையும் பார்த்து அதற்கு எப்போது சாவி கொடுக்க வேண்டுமென்பதை நினைப்பது முறை. அப்படியே காலையில் கூவி எழுப்பும் அந்தக் கோழியை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த நினைப்பை மேலும் வளரவிட்டுத்

தொடர்ந்து, கோழியைக் கையில் கொடியாக ஏந்திய ஆண்டவனை நினைக்க வேண்டும். வாழ்வில் ஒவ்வொரு நாளும் தொடங்கும்போது முருகனை நினைப்பதற்கு வாய்ப்பாக அல்லவா கோழி கூவுகிறது?

நாமோ கோழியின் குரலைக் கேட்டுத் தினமும் எழுந்திருக்கிறோம். ஆனால் அந்தக் குரலையுடைய கோழியையும் நினைப்பதில்லை; அதைப் பிடித்த ஆண்டவனையும் நினைப்பதில்லை. கோயிலுக்குச் சென்று அங்குள்ள கொடி மரத்தில் இருக்கும் கோழியைப் பார்த்துக் கும்பிடாவிட்டாலும், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கோழி நம் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் தன்னை நினைப்பூட்டுகிறது; முருகனையும் நினைப்பூட்டுகிறது. எவ்வளவு எளிதில் முருகனுடைய நினைப்பை உண்டாக்கிக் கொள்ளலாம்!

கோழிக் கொடியைப் படைத்த கரம் முருகன் திருக்கரம். அந்தக் கோழிக் கொடி முருகனது திருக்கரத்தின் நினைப்பை உண்டாக்கி, அப்பெருமானின் பாதத்தில் புக வேண்டுமென்ற நினைப்பையும் உண்டாக்கிவிடும். முருகனுடைய அன்பர்களுக்குக் கோழியின் குரல் கேட்ட மாத்திரத்தில் அத்தகைய நினைப்பே வரும்.

அவன் நினைப்பு இல்லாமல் இந்த உலகத்தில் வாழ முடியுமா? உலகத்தில் வாழ வேண்டுமென்று நினைக்கிற மக்கள், பொழுது விடிந்துவிட்டது என்று தெரியாமல் வாழ முடியுமா? விடிந்தது என்பதற்கு அறிகுறி கோழி. விழித்துக் கொள்பவனுக்குக் கோழியின் குரல் காதில் விழும். நன்றாக விழித்துக் கொள்பவனுக்குக் கோழிக் கொடியன் அடி மனத்தில் தோன்றும்.

**கோழிக் கொடியன் அடிபணி யாமல் குவலயத்தே**
**வாழக் கருதும் மதியிலி காள்!**

## அருளா, பொருளா?

"கோழிக் கொடியை உடையவனைப் பணியாமல் இந்த உலகத்தில் வாழ விரும்புகிற புத்தி அற்றவர்களே!" என்று ஆரம்பிக்கிறார் அருணகிரியார். கோழிக் கொடியனைப் பணிவதால் வருவது அருள். வியாபாரம் முதலியவற்றால் வருவது பொருள்.

பொருள் இருந்தால் போதாது. அருள் இல்லாவிட்டால் இவ் வுலகில் வாழ முடியாது.

> "அருள் இலார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருளிலார்க்
> கிவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்று வள்ளுவர் சொல்கிறார். அதனால், "அருள் இந்த உலகத் திற்கு வேண்டியதில்லை. இந்த உலகத்தில் பொருள் இல்லா விட்டால் இன்பம் இல்லை" என்று சிலர் சொல்வர். அப்படிச் சொல்வது முறையன்று. இந்த உலகத்தில் அருளைப் பெறாதவர் களுக்கு அந்த உலகம் இல்லை. இந்த உலகத்தில் வாழும்போதே அருளைச் சேமித்துக் கொள்ள வேண்டும். அது மறுமையில் பயன்படும். இங்கே அருளும் பொருளும் உடையவன் இம்மையும் மறுமையும் நல்வாழ்வு பெறுவான். இதுதான் அக்குறளுக்குப் பொருள். பொருள் மாத்திரம் இருந்தால் வாழ்ந்துவிடலா மென்பதை மறுக்கிறார் அருணகிரிநாதர். அருள் இருந்தால்தான் அந்தப் பொருளினால் நல்ல பயனை அடைந்து வாழ முடியும்.

அருள் தரும் முருகனைப் பணிந்து வாழ வேண்டும். "அவன் திருவடிகளைப் பணியாமல் வாழ்ந்துவிடலாம் என நினைக்கிற மதி அற்றவர்களே, நீங்கள் நினைப்பது முடியாத காரியம்" என்று அறிவுறுத்துகிறார் முனிவர்.

இவ்வுலகிலுள்ள கோழி சூரியன் கிளம்புகிறான் என்பதற்கு அடையாளமாகக் கூவுகிறது. முருகன் திருக்கையில் உள்ள கோழி ஞான சூரியனான ஷண்முகநாதப் பெருமானை நினைத்துக் கூவுகிறது. புறத்தில் இருக்கும் இருள் விடிவது போல, அகத்தில் இருக்கும் இருள் விடிந்தால்தானே உண்மையாக வாழ முடியும்?

## வாழ்வு என்பது என்ன?

வாழ்வு என்பது என்ன? ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்ந் தான் என்றால் நூறு ஆண்டுகள் உயிரோடு இருந்தான் என்பது பொருள் அல்ல. நல்ல நெறியில் இன்பமாக வாழ்வதே வாழ்வு; நல்லது அல்லாத வழியில் வாழ்நாள் போவது தாழ்வு. அவன் நன்றாக வாழ்ந்தவன் என்பதற்கு நல்ல நெறியிலே சென்று இன்ப வாழ்வு வாழ்ந்தவன் என்பதே பொருள். உயிரும், உடம்பும் ஒட்டிப் பல காலம் கிடப்பதை நல்ல வாழ்க்கை என்று சொல்ல இயலாது.

## பொருளால் வாழ்வு உண்டா?

இப்போது, நன்றாக வாழ்கிறவன் என்று பொருள் நிறைய வைத்துக் கொண்டிருப்பவனைச் சொல்கிறார்கள். பொருளினால் இன்பம் உண்டாவதனால் பொருளுடையோனை இன்பம் உடையவன் என்று சொல்லிவிடுகிறார்கள். பொருள் நிறைய இருப்பதனால் மட்டும் இன்பம் உண்டாகாது என்பதை அமெரிக்காக் காரர்களைக் கேட்டால் சொல்வார்கள். அவர்களிடம் உள்ள பொருள் உலகத்தில் வேறு யாரிடமும் இல்லை. பொருளை மலைமலையாகக் குவித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பொருள் ஒவ்வொரு கணமும் அவர்களுக்குப் பயத்தைத் தருகிறது. இன்பத்தைத் தரவில்லை. ரஷ்யாக்காரர்களைக் கண்டு ஒவ்வொரு நாளும் அமைதியற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

ஆண்டவன் திருவருளைப் பெறும் முயற்சி எதுவோ அந்த முயற்சி உடையவர்கள்தாம் உண்மையில் அமைதியுடன் வாழ்கிறார்கள்; இன்பமாக வாழ்கிறார்கள்.

இறைவனை நினைக்காமல் வாழ்கின்றவர்கள் தங்களை எவ்வளவு அறிஞர்கள் என்று சொல்லிக் கொண்டாலும் அருணகிரிநாதர் அவர்களை, ''மதியிலிகாள்'' என்கிறார். நல்ல நெறியில் போகாத குழந்தையைப் பார்த்து வையும் உரிமை தாய்க்கு உண்டு. உலகிலுள்ள மக்கள் எல்லாரும் இன்பம் பயக்கும் நெறியைப் பின்பற்ற வேண்டுமென்ற பரம கருணையுடைய தாயைப் போன்ற அருணகிரியார், அந்நெறியே போகாமல் அல்லாத நெறியில் போவோரைப் பார்த்து, ''மதியிலிகாள்'' என்று அழைப்பது தவறாகுமா?

## பொருள் தொடர்ந்து வருமா?

"நாங்கள் என்ன, புத்தியில்லாதவர்களா? எங்களிடம் அளவற்ற பணம் இருக்கிறது. நன்செய், புன்செய் நிலங்கள் நிறைந்திருக்கின்றன. நாங்கள் நினைத்தால் எங்கள் புத்தியைக் கொண்டு இன்னும் பத்தாயிரம் மடங்காகப் பெருக்கிக் கொள்வோம்'' என்று சிலர் சொன்னார்கள். அவர்களைப் பார்த்து, ''உங்கள் சொத்துச் சுதந்தரம் எல்லாம் மறுமையிலே பயன்படுமா?'' என்று கேட்கிறார்.

**உங்கள் வல்வினைநோய்**
**ஊழிற் பெருவலி உண்ணஒட் டாது,உங்கள் அத்தம் எல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே?**

"நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் அத்தம் - பொருள் - எதற்குப் பயன்படும்? நீங்கள் இறந்த பிறகு உங்களுடன் தொடர்ந்து வருமா? அதைப் புதைத்து வைக்கிறீர்களே! அது இப்போதும் பயன்படவில்லை; இனிமேலும் பயன்படாது" என்கிறார்.

## வல்வினை நோய்

மக்கள் பாதுகாத்து வைத்திருக்கும் பொருள் அப்படியே அவர்களுக்குப் பயன்படும் என்று சொல்ல இயலாது. கோடி கோடியாகப் பணத்தைச் சேமித்து வைத்திருக்கிறவன் தன் வீட்டில் ஒரு கவளம் உண்ண முடிவதில்லை; வயிற்று வலி, வயிற்று வலி என்று துடித்துக் கொண்டே இருக்கிறான்.

ஒருவன் அமெரிக்கா போகிறான். அவன் அங்கே தங்கப் போகிற ஆறு மாத காலத்திற்கு வேண்டிய பணத்தை டாலர்களாக மாற்றி அந்நாட்டில் உள்ள பாங்கில் போட்டுவிடுகிறான். அவன் தனி விமானத்தில் போகிறான். அவன் வரப்போகிறான் என்று அமெரிக்க விமான நிலையத்தில் பலர் காத்து நிற்கிறார்கள். இங்கே புறப்பட்டவன் அங்கே போய்ச் சேரவில்லையே! கெய்ரோ போவதற்குள்ளேயே மார்படைக்கிறது; இறந்து போகிறான். அவன் விமானத்தில் ஏறுவதற்கு முன் டாக்டர்கள் அவனைப் பரிசீலனை செய்து பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு இப்படி ஆகும் எனத் தெரியவில்லையே! அது எதனாலே வந்தது தெரியுமா? அதற்குக் காரணம் வல்வினை நோய் என்கிறார் அருணகிரியார்.

"ஒரு வியாதியும் இல்லை. நேற்று வரை ஜுரம், தலைவலி என்று கீழே படுத்தது இல்லை. ஆளைப் பார்த்தால் கல்லுக் குண்டு போல் இருந்தான். அவன் இன்று செத்துப் போய் விட்டானே! நம்ப முடியவில்லையே!" எனச் சொல்கிறோம். நோய் இல்லை; நொடி இல்லை; ஆனால் எப்படி மரணம் அடைந்தான்? அருணகிரியார் சொல்கிறார்; "நீ சொல்கிற நோய் அல்ல அது. நீ சொல்கிறது உடம்புக்கு வருகிற நோய். இது வல்வினை நோய். பொல்லாத ஊழ்வினை நோய்" என்கிறார்.

## நல்வினை நலம்

நல்வினை வேறு; வல்வினை வேறு. நல்வினை இருந்தால் என்ன ஆகும்? அவன் பம்பாய் போக விமானத்தில் இடம் பதிவு செய்திருப்பான். அந்தச் சமயம் பார்த்து யாராவது வருவார். அதனால் பயணத்தை ஒத்திப் போட்டு விடுவான். அன்று இரவு அவன் பிரயாணம் செய்ய இருந்த விமானம் போகும்போது நடுவழியில் எரிந்து விழுந்து விட்டது எனப் பத்திரிகையில் மறுநாள் வரும். அவன் அன்று போயிருந்தால் என்ன ஆயிருக்கும்? அவன் நல்வினை அவனுக்கு அரணாக இருந்தது.

ஒருவர் ஆயிரக்கணக்கில் செலவழித்துப் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்தார். கல்யாணத்தன்று பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு வைர அட்டிகை போட்டால்தான் கல்யாணம் நடக்கும் என்று சொன்னார்கள். வைர அட்டிகைக்குப் பெண்ணின் தந்தை என்ன செய்வார்! பெருந்தொகையைச் செலவழித்துக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார். வைர அட்டிகை இல்லாமல் பிள்ளை வீட்டார் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்தார்கள். அந்தச் சமயம் பார்த்துச் சம்பந்திகளுக்குச் சந்தனம் கொடுக்கக் கையில் பேலாவுடன் அவர் மருமான் வந்தான். ''வாடா பயலே, இங்கே'' என்று அவனைக் கூப்பிட்டு அவன் மார்பிலே சந்தனம் பூசி, ''நீ உட்காரடா கல்யாணப் பந்தலிலே; என் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்'' என்று சொல்லி அவனுக்கு மணம் செய்து வைத்தார். அவன் நல்வினை அப்படி வந்தது. நல்வினை நலம் இப்படியெல்லாம் விளையும்; வல்வினை நோய் நேர்மாறாக விளையும்.

## வல்வினையின் விளைவு

உடம்பு குண்டாக, வியாதி இல்லாமல் வாழ்கிறவருக்குத் திடீரென்று உயிர் போகிறது. எத்தனை பணம் சேமித்து வைத்திருந்தால் என்ன? அவை அவருக்குப் பயன்படுகின்றனவா? பணம் பணம் என்று அதைச் சேமிக்க அவர் என்ன பாடுபட்டார்! வீட்டிற்குள் அவற்றைப் புதைத்து வைத்துப் பூதம் போல யாரும் எடுக்காமல் இருக்க வேண்டுமே என்று காவல் காத்தார். அது அவருக்காவது பயன்பட்டதா? இல்லை. அவர் உயிரைக் கொண்டு போக எந்த வியாதி வந்தது? அதுதான் வல்வினை நோய்.

தலைவிதியாகிய ஊழில் பெரிய வலிமையுடைய பகுதி அது. ஊழிற் பெருவலியாகிய பொல்லாத வல்வினையென்னும் நோய் வாழ்வில் புகுந்து துன்பத்தை உண்டாக்குகிறது. ஊழுக்கு ஏற்பப் போகம் தருகிறவன் ஆண்டவன். அது அவன் சக்தியால் இயங்குகிறது தவிர நம் சக்தியால் அல்ல. இறைவன் அருளாணை நல்வினை, பொல்லாத வினை ஆகியவற்றைக் காரணமாகக் கொண்டு இயங்குகிறது. மின்சார சக்தியானது பல்பை இடமாகக் கொண்டால் ஒளி வீசுகிறது. 'ரெப்ரிஜிரேட' ரோடு சேர்ந்து இயங்கும் போது தண்மை அளிக்கிறது. அது தண்மைதான் அளிக்கும் எனச் சொல்ல முடியுமா? 'ஹீட' ரோடு சேரும்போது வெப்பத்தை அளிக்கிறது. ஆகவே மின்சாரம் வெப்பத்தைத்தான் தரும், தண்மையைத்தான் தரும், ஒளியைத் தான் தரும், ஒலியைத் தான் தரும் எனச் சொல்லமுடியுமா? எல்லாவற்றையும் அது தருகிறது. எதனோடு இணைக்கப் படுகிறதோ அதற்கு ஏற்றபடி விளைவு உண்டாகிறது. இவை எல்லாவற்றையும் அளிக்கும் மின்சார சக்தி ஒன்றுதான். ஆண்டவன் அருளாணையும் அத்தகையதுதான். பாவமாகிய வல்வினை உள்ளவனுக்கு அவன் அருளாணையால் துன்பம் விளைகிறது. புண்ணியம் அவனது ஆணையோடு சேரும்போது இன்பம் விளைகிறது.

## ஊழின் வகை

ஊழ், ஆகூழ் என்றும் இழவூழ் என்றும் இரண்டு பிரிவாக நிற்கிறது. புண்ணியப் பயனால் இன்பத்தைத் தரக் காரணமாக இருப்பது ஆகூழ்; நல்ல ஊழ். அது நல்வினை விளைவாகிய நலம். பாவத்தின் பயனாகத் துன்பத்தைத் தருவது இழவூழ். அது பொல்லாத ஊழ். அது வல்வினையின் விளைவாகிய நோய். ''ஊழிற் பெருவலி யாவுள'' என்று வள்ளுவர் சொல்கிறார். அருணகிரியாரும், ''ஊழிற் பெருவலி'' என்கிறார்.

நல்வினை நலமும் வல்வினை நோயும் சேர்ந்ததே ஊழ் என்றால், வல்வினை நோயையே பெருவலி என்று சொல்வது ஏன்? அதுதான் பெரும்பான்மையானது. ''ஆண்டவன் நமக்குத் துன்பத்தைக் கொடுக்கிறான். மற்றவருக்கு இன்பத்தைக் கொடுக்கிறான். இப்படிப் பட்சபாதமாக அவன் நடக்கிறானே'' என்று சொல்லக்கூடாது. அவனுடைய சக்தி எல்லோருக்கும் பொது

வாகவே இயங்குகிறது. ஆடிக் காற்று அடித்தால் ஆலம்பழுப்பு உதிர்ந்து பறக்கிறது. கொந்தளிக்கும் கடல் அலைகளை வாரி வாரி வீசுகிறது. இலவம் பஞ்சு பறக்கிறது. மலையோ அசையாமல் நிற்கிறது. காற்றின் வேகம் பொதுவானது. அதைத் தாங்கும் சக்தியுள்ள பொருள்கள் நிலையாக இருக்கின்றன. மற்றவை பறக்கின்றன. பறப்பதும், நிலையாக இருப்பதும் அந்த அந்தப் பொருள்களைச் சார்ந்தவையே தவிரக் காற்றுப் பாரபட்சமுடையது எனச் சொல்லலாமா? அப்படியே இறைவனுடைய அருட் சக்தி எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது. அவரவர்களுடைய பாவ புண்ணியத்திற்கு ஏற்பத் துன்பமும், இன்பமும் விளைகின்றன.

விதியின் சக்தியை நாம் எப்பொழுது உணர்கிறோம்? இன்பம் உண்டாகும்போது யாரும், ''இது என் தலைவிதி'' என்று சொல்வது இல்லை. ''என்ன ஐயா, உங்கள் பையன் பி.ஏ. முதல் வகுப்பில் தேறியிருக்கிறானாமே?'' என்றால் யாராவது, ''இது என் தலை எழுத்து'' என்று சொல்கிறார்களா? ''வியாபாரத்தில் உங்களுக்கு நஷ்டம் உண்டாகிவிட்டதாமே?'' என்றால், ''எல்லாம் என் தலை எழுத்து'' என்கிறார். லாபத்தைத் தலையெழுத்து என்று சொல்வதில்லை. ஆனால் தலையெழுத்து லாபம், நஷ்டம் இரண்டுக்கும் ஆதாரமாக இருக்கிறது. இருந்தாலும் ஊழின் விளைவு பெரும்பாலும் தீமையாக இருப்பதனால் வல்வினை நோயே ஊழிற் பெருவலிமையுள்ள பகுதியாகத் தோன்றுகிறது. அந்த வல்வினை நோய் எவ்வளவு பொருள் ஈட்டி வைத்தாலும் அவற்றை நுகர விடுவதில்லை.

**உங்கள் வல்வினை நோய்**
**ஊழிற் பெருவலி உண்ணஒட்டாது.**

## கைக்கு எட்டியது

பழம் இருந்தும், அதை எடுத்து எண்ணும் கை இருந்தும், வாய் இருந்தும், வயிறு இருந்தும், பழம் கை வரைக்கும் வருகிறது; அதற்கு மேல் போகாமல் ஊழ் தடுத்து விடுகிறது. ''கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை'' என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறோம். அந்தப் பழமொழி காரைக்கால் அம்மையாரின் வரலாற்றை நினைக்கச் செய்கிறது.

புனிதவதி என்ற பெயருடைய அப்பெருமாட்டியார் பிறந்து மொழி பயின்ற போதிலிருந்தே சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் நினைக்காதவர். ஆண்டவனிடம் இடையறாத பக்தி இளமைப் பருவத்திலிருந்தே வளர்ந்தது. அம்மையாருக்கு முறைப் படி திருமணம் ஆயிற்று. பரம தத்தன் என்ற அவருடைய நாயகன் ஒரு நாள் கடையிலிருந்து இரண்டு மாங்கனிகளை வீட்டிற்கு அனுப்பி வைத்தான். பிற்பகல் இரண்டு மணிக்கு அவன் கடையிலிருந்து வீட்டிற்குச் சென்று சாப்பிடுவது வழக்கம். தம் நாயகனுக்காக அந்த அம்மையார் உணவு சமைத்துக் கொண்டிருந்த போது ஒரு சிவனடியார் மிகவும் பசியான இருக்கிறது என்று வீட்டிற்கு வந்தார். அவருக்கு உணவு படைக்க வேண்டுமென்பது புனிதவதியாரின் எண்ணம். காய்கறிகள் இன்னும் சமைக்கவில்லை. அன்னம் ஒன்றுதான் வடித்து இறக்கி வைத்திருந்தார். சிவனடி யாரோ மிக்க பசி என்கிறார். அம்மையார் என்ன செய்வார்? அன்னத்தைப் பரிமாறி ஒரு மாங்கனியையும் படைத்து, அவரை உபசரித்து அனுப்பி விட்டார்.

பிற்பகல் இரண்டு மணிக்கு அவருடைய நாயகன் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு உணவு படைத்து, மீதியிருந்த ஒரு மாங்கனியை யும் கொண்டு வந்து வைத்தார். அந்த மாங்கனியைச் சுவைத்த வன், ''இது மிகவும் நன்றாக இருக்கிறது. இரண்டு பழம் வாங்கி அனுப்பினேனே; மற்றதையும் கொண்டு வந்து போடு'' எனச் சொன்னான். புனிதவதியார் மற்றொரு மாங்கனிக்கு எங்கே போவார்? அதைத்தான் சிவனடியாருக்குப் படைத்து விட்டாரே! அதை எப்படிச் சொல்வது எனத் தெரியாமல் உள்ளே போனவர், இறைவனை நினைத்துக் கொண்டு அப்படியே நின்று விட்டார். இறைவன் அருள் அப்போது வெளிப்பட்டது. அவர் கையில் ஒரு மாங்கனி விழுந்தது. அவர் மிக்க மகிழ்ச்சி அடைந்தவராய், அதைக் கொண்டு போய் நாயகனுக்குப் படைத்தார்.

அதைச் சுவைத்துத் தின்றான் அவன். அது தனிச் சுவையாக இருந்தது. ''இது நான் அனுப்பிய பழம் அன்று. இதைப் போன்ற சுவையுள்ள பழத்தை நான் இது வரையில் பார்த்ததே இல்லை. இந்தப் பழம் உனக்கு ஏது?'' என்று தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான். அம்மையார் நடந்த வரலாற்றையும், அந்தப் பழத்தைக் கொடுத்தவன் இறைவன் என்பதையும் கூறிவிட்டார்.

''நீ சொல்வது உண்மையானால் மற்றொரு மாம்பழத்தை வருவித்துத் தா, பார்ப்போம்'' எனக் கூறினான்.

அவர் என்ன செய்வார்? உள்ளம் உருகி இறைவனை வழி பட்டார். பின்னும் ஒரு மாம்பழம் கிடைத்தது. அதைக் கொண்டு வந்து தாம் சொன்னவை யாவும் உண்மை என்று மெய்ப்பித்து, அவன் கையில் கொடுத்தார். கையில் கிடைத்த பழத்தை அவன் புசித்திருந்தால் அவனும் அம்மையாரைப் போல ஞானியாகப் புறப்பட்டிருப்பான். ஆனால் அவன் விதிவிடவில்லை. பழத்தைச் சாப்பிட எடுத்தான். அது மறைந்துவிட்டது. கைக்கு எட்டியது அவன் வாய்க்கு எட்டவில்லை. முதலில் உண்ட பழம் அவனுக்குக் காரைக்கால் அம்மையாரிடம் பக்தியை ஊட்டியது.

இப்படியே தமக்குக் கிடைக்கிற பொருளை அநுபவிக்க மாட்டாமல் எத்தனை பேர் இருக்கிறார்கள்! காரணம் என்ன? ''உங்கள் வல்வினை நோய் உண்ண ஒட்டாது'' என்கிறார் அருண கிரியார். உண்ணுவதாவது அநுபவித்தல். அநுபவிக் காததற்குக் கையில் பொருள் இல்லாதது காரணம் அன்று. கையில் பொருள் இருந்தும் அநுபவிக்கும் வாய்ப்பு இல்லை. தீவினை கையில் எத்தனை பொருள் சேர்த்து வைத்திருந்தாலும் அவற்றை உண்ண ஒட்டாது.

## பொன் புளிவிளங்காய் ஆதல்

ஒருவர் நிறையப் பணம் சேமிக்க வேண்டுமென்று நினைத்தார். ஓர் அணா இரண்டு அணாவாகச் சேர்த்து ஒரு தங்கக்கட்டி யாக்கினார். அதை தம் குழந்தைகளுக்குக்கூடத் தெரியாமல் ஓர் இடத்தில் ஒளித்து வைத்திருந்தார். அது கடைசிப் பிள்ளைக்குத் தெரிந்தது. அப்பா செத்துப் போன பிறகு அதை மற்றவர்களுக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்ளலாம் என்று அவன் காத்திருந்தான். அவருக்கு நோய் உண்டாகி மிகவும் துன்பப்பட்டார். சாகக் கிடந்த அந்தப் பெரியவருக்கு அப்போது தர்மம் செய்ய வேண்டு மென்று ஓர் எண்ணம் தோன்றியது. ஒளித்து வைத்திருந்த தங்கக் கட்டி நினைவுக்கு வந்தது. அவரால் எழுந்திருக்க முடியவில்லை; பேசவும் முடியவில்லை. கையினால், 'அங்கே அந்தத் தங்கக் கட்டியிருக்கிறது' என்று சைகை செய்து காட்டினார். இது மற்றப் பிள்ளைகளுக்குத் தெரிந்துவிடப்போகிறதே என்ற பயம் கடைசிப்

பிள்ளைக்கு வந்துவிட்டது. ''ஐயையோ! எங்கள் அப்பாவுக்குப் புளி விளாங்காயின் மேலே பிரியம் அதிகம். அது வேண்டுமென்று கையைக் காட்டுகிறாரே; இப்போது கொடுக்கலாமோ?'' என்று வேதனைப்பட்டான் அவன்.

இந்தக் கதை நாலடியாரில் வருகிறது.

''சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார் – இறுகிறுகிப்
பின்அறிவாம் என்றிருக்கும் பேதையர் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்''

(சிறு காலை – இளம் பருவத்தில், செல்வுழி வல்சி – போகும் இடத்துக்குரிய உணவு, தோட்கோப்பு – தோட்சுமை.)

தங்கக்கட்டியை மறைத்து வைத்தவருக்கு அது சமயத்தில் பயன்படவில்லை. அவர் வல்வினை நோய் உண்ண வொட்டா மல் தடுத்துவிட்டது. இத்தகைய அநுபவத்திலிருந்தே,

உங்கள் அத்தம் எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் அடிப்பிறகே?

என்று கேட்கிறார் அருணகிரியார். ''ஆழப் புதைத்து வைக்கின்ற பொருள் எல்லாம் இந்த உலகத்தில் உங்களுக்குப் பயன்படுவ தில்லை. வல்வினையாகிய ஊழிற் பெருவலி அவற்றை இந்த உலகத்தில் நீங்கள் அநுபவிக்கும்படி விடுவது இல்லையே! இங்கே பயன்படாவிட்டாலும் மறுமையிலாவது வருமா என்றால் அங்கும் வராதே. உம்முடைய அடியைப் பின்பற்றி வருவதாக இருந்தால் எவ்வளவு புதைத்து வைத்தாலும் நல்லதுதான். அப்படி வருமா? நீங்கள் நடைபோடும்போது உங்களோடு உங்கள் நிழல் வருவது போல அவை வருமா?' இப்படி அம்முனிவர் கேட்கிறார்.

## புதைத்து வைத்தல்

பழங்காலத்தில் பாங்கிகள் இல்லை. திருடர்கள் பயமோ அதிகம். ஆகவே அக்காலத்தில் தாங்கள் சேமிக்கின்ற செல்வத்தைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக வீட்டிற்குள்ளேயே எங்கேயாவது குழி தோண்டிப் புதைத்து வைப்பது வழக்கம்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தை புதைத்து வைப்பது என்பது அக்காலம். புதைத்து வைக்கும் செல்வந்தான் புதையல்.

ஒரு பழைய வீட்டை வாங்குகிறோம். அதை இடித்துக் கட்டும் போது புதையல் கிடைக்கிறது. புதையல் கிடைப்பது அதிருஷ்டம் எனச் சிலர் நினைக்கலாம். அது அதிருஷ்டமா? தன் உழைப் பினால் சேமித்த பொருளை ஒருவன் புதைத்து வைத்தான். அந்தப் பொருள் அவனுக்குப் பயன்படவில்லை. உழைப்பினால் சேமித்த பொருள் அவனுக்கே பயன்படவில்லை என்றால், உழைப்பு இல்லாமல் நமக்குக் கிடைக்கும்போது நமக்குத்தானா அது பயன்படப் போகிறது?

புதையலைப் பூதம் காக்கும் என்பர். புதைத்த அச்செல்வத்தை பூதம் போலத்தானே அதைப் புதைத்தவன் காத்திருக்கிறான்? அருணகிரிநாதர் இத்தகைய நிகழ்ச்சிகளை அக்காலத்தில் நேரில் பார்த்தவர் ஆகையால் சொல்கிறார். 'இவ்வுலகத்தில் வாழ்நாளை வீணாக்காமல் வாழ வேண்டும். நல்லதைச் சேமிக்க வேண்டும். இங்கே சேமிப்பவை இரண்டு. ஒன்று அருள். கோழிக் கொடியனுடைய அடியைப் பணிந்தால் அதைச் சேமிக்கலாம். மற்றொன்று பொருள். முருகனை மறந்துவிட்டுப் பொருளைச் சேமித்துப் புதைத்து வைத்தால் அது இந்த உலகத்திலும் உதவாது. ஆதலின் அருளைச் சேமிக்க வேண்டும். அருள் கிடைத்தால் பெற்ற பொருளை நாமும் நுகர்ந்து பிறருக்கும் கொடுத்து வாழும் வகை பிறக்கும்' என்ற எண்ணங்களின் சாரமாக இந்தப் பாட்டை பாடுகிறார்.

> கோழிக் கொடியன் அடிபணி
> யாமல் குவலயத்தே
> வாழக் கருதும் மதியிலி
> காள்!உங்கள் வல்வினை நோய்
> ஊழிற் பெருவலி உண்ணஒட்
> டாதுஉங்கள் அத்தம்எல்லாம்
> ஆழப் புதைத்துவைத் தால்வரு
> மோநும் அடிப்பிறகே?

(கோழியைக் கொடியாகக் கொண்ட முருகனுடைய திருவடியைப் பணிந்து அவன் அருளைச் சேமிக்காமல் உலகில் நன்றாக வாழ எண்ணும்

*அறிவில்லாத மக்களே! உங்கள் தீவினை நோய் ஆகிய விதியிலே பெருவலிமையையுடைய பகுதி நீங்கள் சேமித்த பொருளை உண்ணும்படி உங்களை விடாது. நீங்கள் உண்ண முடியாமல் இருக்கும் உங்கள் பொருள் எல்லாவற்றையும் நிலத்தில் ஆழமாகப் புதைத்து வைத்தால் அவை நீங்கள் இறந்த பிறகு உங்கள் அடிக்குப் பிறகே உங்களைப் பின்பற்றி வருமா?*

*வல்வினை - இழவூழ். அது துன்பத்துக்குக் காரணமாதலின் நோய் என்றார். வல்வினையாகிய நோய்; நோயாகிய பெருவலி. அத்தம் - அர்த்தம்; பொருள். ஆழ - ஆழும்படியாக; மறையும் படியாக. அடிப்பிறகே வருதலாவது, போகும் இடங்களில் எல்லாம் தொடர்ந்து வருதல். உங்கள் அத்தமெல்லாம் உண்ண வொட்டாது, அது வருமோ என்று கூட்டிப் பொருள் செய்க.)*

இந்தப் பாட்டுக்கு மறுதலையான குறிப்பை ஆராய்ந்தால், 'கோழிக்கொடியன் அடிபணிந்தால் குவலயத்தே வாழலாம்; சேமிக்கும் பொருளை உண்ணலாம்; புதைத்து வைக்காமல் பிறருக்கும் கொடுக்கலாம். அதன் பயனாக விளையும் புண்ணியம் தொடர்ந்து வரும்' என்ற பொருள் கிடைக்கும்.

# மரணம் இல்லா வாழ்வு

# முகவுரை

அலங்கார மாலையில் இது ஐந்தாவது புத்தகம். கந்தர் அலங்காரப் பாடல்களில் ஆறு (21–6) இதில் விளக்கம் பெறு கின்றன. தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணியர் திருக்கோயிலில் வியாழன் தோறும் மாலை 7 மணி முதல் 8–30 மணி வரையில் நடைபெறும் சொற்பொழிவுகளே இப்போது புத்தகங்களாக உருவாகின்றன என்பதையும், இத்துறையில் பேருதவி புரிகிறவர் அன்பர் ஸ்ரீ அனந்தன் என்பதையும் முன்பே தெரிவித்திருக் கின்றேன்.

சொற்பொழி வாதலின், பல பல கருத்துக்களை விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் நேர்கிறது. எழுத்தாக இருப்பின் இன்னும் சுருக்கிக் கொள்ளலாம். ஒரு கருத்தை விளக்குவதற்குக் காட்டும் மேற்கோளின் மூலத்தை மாத்திரம் சொல்லி விட்டு விட்டால், பேச்சின் வேகத்தினிடையே மேற்கோளின் பொருத்தம் தெளிவாக விளங்காது. ஆகையால் மேற்கோளையும் விளக்கி, இன்னதற்கு அது மேற்கோளாவது என்பதையும் புலப்படுத்த வேண்டியிருக்கிறது.

இந்த விரிவுரைகள் கந்தர் அலங்கார விரிவுரைகள் என்று சொல்வதோடு, ஒரு வகையில் நம்முடைய சமய நெறியைப் பற்றிய விரிவுரைகள் என்றுகூடச் சொல்லாம். ஒரு பாடலின் தலைமையான கருத்து ஒன்றாக இருந்தாலும் வேறு கருத்துக் களும் அதனைச் சார்ந்திருக்கும். அவற்றையும் விளக்க வேண்டும்; அப்போது வேறு கருத்துக்களும் இடையிலே வரும்.

இந்தப் புத்தகத்தில் வரும் ஆறு பாடல்களில் ''மரணப்ர மாதம்'', ''தண்டாயுதமும்'', ''நீலச்சிகண்டியில்'' என்ற பாடல்கள் மரணத்தை வெல்லும் செய்தியைச் சொல்வன. முதல் பாட்டு,

மரணப்ர மாதம் நமக்கில்லை யாம்;என்றும்
    வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும் உண்டே; கிண்
    கிண்முகுள

சரண!ப்ர தாப! சசிதேவி மங்கல்ய
தந்துரக்ஷா
பரண!க்ரு பாகர! ஞானா கர!சுர
பாஸ்கரனே

என்பது. இதில் முன் இரண்டடிகளில் பாட்டின் தலைமையான கருத்து வருகிறது. மரணம் இல்லா வாழ்வையும், வேலும் மயிலும் துணையாக நிற்றலையும் அங்கே காண்கிறோம். அவற்றின் பின் முருகனை முன்னிலைப் படுத்தித் துதிக்கிறார் அருணகிரிநாதர். ஆறு வகையாக முருகனை விளிக்கிறார். கிண்கிணி முகுள சரண, ப்ரதாப, சசிதேவி மங்கல்யதந்து ரட்சாபரண, க்ருபாகர, ஞானாகர, சுரபாஸ்கரனே என்பவை அவை.

இந்தப் பாடலுக்கு விளக்கம் கூறும்போது, "மரணம் என்ற தவறு நமக்கு இல்லை" என்று சூத்திரம் போல அருணை முனிவர் சொல்லியிருப்பதைத் தெளிவாக்காமல் இருக்க முடியுமா? 'இறைவன் திருவருளைப் பெற்றவர்களுக்கு மரணம் இல்லா வாழ்வு கிடைக்கும்' என்று சொன்னால் போதாது. 'அவர்கள் உடம்பு விட்டுப் போனாலும் அது மரணம் ஆகாது' என்ற உண்மையை விளக்கினால்தான் அது விளங்கும். ஆகவே, மரணம் என்பது இன்னதென்றும், அருள் பெற்றோர் உடலை நீத்து மறைவதற்கும் ஏனையோர்கள் இறப்பதற்குமிடையே உள்ள வேற்றுமை இன்னதென்றும், விடுதலையடைவதையும் சிறை மாற்றம் பெறுவதையும் போன்றவை அவை என்றும் சொல்லி விளக்கியிருக்கிறேன். வேறுவேறு உவமைகளை எடுத்துக் காட்டிக் கருத்தைத் தெளிவாக்கும்போது இந்தப் பகுதி விரிவடைகிறது. பாட்டின் தலைமைக் கருத்தே இதுதானே? இதைத் தெளிவாக விரித்துரைப்பது இன்றியமையாததல்லவா?

அடுத்த செய்தி வேலும் மயிலும் துணையாக நிற்கும் திறம். இவ்விரண்டையும் பற்றி முன்பே விளக்கிச் சொல்லியிருத்தலால் இங்கே ஓரளவு சொன்னேன்.

பிறகு விளிகள் வருகின்றன. கிண்கிணி முகுளம் என்பதை விளக்குவதும், பிரதாபத்துக்கும் கீர்த்திக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துரைப்பதும் இவ்விடத்தில் அவசியமாக இருந்தன. முருகன் பிரதாபம் உடையவன் என்பதை அவன் சசிதேவி மங்கல்யதந்துவை

ரட்சித்த செய்தியே காட்டுகிறதென்று தொடர்பு படுத்திச் சொல்ல வாய்ப்புக் கிடைத்தது. அந்தக் கதையைச் சற்றே விரித்துக் கூறினேன்.

பின்பு, கிருபாகரன் என்பதை விளக்குகையில் அது கீர்த்தியைச் சொல்வது என்று பொருத்திக் காட்டினேன். ஞானாகரன், சுரபாஸ்கரன் என்பவை பின்பு விளக்கம் பெற்றன.

இறுதியில் பொருளைத் தொடர்புபடுத்தி முடித்துக் காட்டு கையில் நாம் எவ்வாறு மரணத்தை வெல்லலாம் என்பதைச் சிறிது சொன்னேன். அருட்பா ஒன்று அக்கருத்துக்குத் துணை செய்தது.

இப்படிப் பிரித்துப் பிரித்து விளக்கித் தொடர்பு படுத்தி முடிக்கும்போது, இந்தச் சொற்பொழிவு 24 பக்கங்களை அடைத்துக்கொண்டு விடுகிறது. சொற்பொழிவு நிகழும்போது ஒன்றரை மணி நேரம் ஆகிறது. அப்போது சொன்னவற்றில் சில சில பகுதிகளை நீக்கியே இவற்றை உருவாக்குகின்றேன்.

சொற்பொழிவினூடே தொடர்ச்சி வேண்டும் என்பதை மற வாமல் கடைப்பிடிக்கின்றவன் நான். ஒரே தலைப்பாக இருந்தால் அந்தத் தொடர்ச்சி நன்றாக அமைந்துவிடும். பல செய்திகளைச் சொல்லும் பாடல்களாதலின் பல கருத்துக்கள் இடையிடையே வருகின்றன. அவற்றைத் தொடர்பு படுத்திப் பார்த்தால் பாடலின் கருத்து நன்றாக உள்ளத்தே பதியும். கூடிய வரையில் இந்தத் தொடர்பை எடுத்துக்காட்ட முயன்றிருக்கிறேன்.

**''மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன்''** என வரும் பாட்டில், வள்ளியை வேட்டதற்கும் தமிழால் வைதாரை வாழ வைப்பதற்கும் உள்ள பொருத்தத்தை ஒருவாறு எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

**''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ் சுடரே''** என்ற பாடல் அருணகிரியார் வாழ்க்கையோடு தொடர் புடையது என்பதைக் கந்தர் அநுபூதிப் பாடல் ஒன்றை ஆதார மாகக் கொண்டு காட்டியிருக்கிறேன்.

**''கின்னங் குறித்தடியேன்''** என்ற பாட்டில் முற்பகுதிக்கும் பிறபகுதிக்கும் உள்ள இயைபு பாட்டில் விளக்கமாக இல்லை. ஆயினும் அருணகிரியார் வேறு வேறு இடங்களில் அருளிய

வற்றைக் கொண்டு அவ்வியையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதை இந்தச் சொற்பொழிவில் காணலாம்.

அருணகிரியார் செய்த புதுமைகளில் யமனை முன்னிலைப் படுத்தி அறைகூவும் முறை ஒன்று. "**தண்டாயுதமும்**" என்ற பாடல் அத்தகையது. அப்பாட்டில் தொண்டே ஞானமாதலை விரிவாக விளக்கியிருக்கிறேன்.

"**நீலச்சிகண்டியில்**" என்ற பாட்டில் உள்ள சீலம் இன்னதென்பதைச் சற்றே விரிவாகச் சொல்லியிருக்கிறேன்.

★

*இதில் வரும் பாடல்களில் மூன்று (1,3,4) முருகனை முன்னிலைப்படுத்திப் பாடியவை; மற்ற மூன்றும் (2,5,6) படர்க்கைப் பரவல். முதற்பாட்டில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக விரவியிருக்கின்றன. பின்னும் சில பாடல்கள் இப்படி வருகின்றன. திருப்புகழில் வடசொற்களும் தொடர்களும் மிகுதியாகக் கலந்து வரும் இடங்கள் பல.*

*மரணத்தை எண்ணி அஞ்ச வேண்டாம் என்பதை வேறு வேறு வகையில் அருணகிரியார் சொல்கிறார். இதில் மூன்று பாடல்கள் உள்ளன. அவற்றை அடுத்தடுத்துப் பாராயணம் பண்ணுவதனால் நம் உள்ளம் உறுதி பெறும். இறைவனுடைய திருவருளில் முழு நம்பிக்கை வைத்து ஒளிநெறியிலே பழகுகிறவர்களுக்கு இவை போன்ற பாடல்கள் துதிகளாகவும், மந்திரமாகவும், கவசமாகவும் பயன்படுபவை.*

**கி.வா. ஜகந்நாதன்**
18.04.1957

# மரணம் இல்லா வாழ்வு

### *மரணம் தவிர்க்க முடியாதது*

*ஞானம் பெற்றவர்கள் இந்த உலக வாழ்வு நிலையாதது என்பதை உணர்கிறார்கள்; இறைவன் நித்தியமான பொருள் என்பதையும் அறிகிறார்கள். நமக்கு மரணம் நிச்சயம் என்பதைத் தெளிந்துகொண்டு நமக்குத் துணையாக இருப்பது இறைவன் திருவருள் என்று உறுதியாக உணர்ந்து அதனை அடைய முயற்சி செய்கிறார்கள். இந்த இரண்டு வகையான அறிவில் நாம் மரணம் அடைவோம் என்ற ஒன்றை எல்லோரும் அறிவார்கள்.*

*சிறு பையனானாலும் உலகில் பிறந்த மக்கள் யாவரும் நிச்சயமாக மரணத்தை அடைவார்கள் என்ற உண்மையை அறிவான். அதற்காகச் சாஸ்திரம் படிக்க வேண்டாம். புராணம் எதையும் படிக்கவேண்டாம். வேதாந்த நூல்களை ஆராய்ச்சி பண்ண வேண்டாம். பிரத்தியட்சமாகப் பார்த்து வருகின்ற உண்மை அது. அப்படி உள்ள மரணம், ''நமக்கு இல்லை'' என்று அருணகிரியார் சொல்கிறார்.*

மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்.

### *பிரமாதம்*

*பிரமாதம் என்பதற்கு வடமொழியில் தவறு என்று பொருள். ஆனால் தமிழில் அதன் பொருள் மாறிவிட்டது. இசைச் கச்சேரி நடக்கிறது. ''அடடா! கல்யாணி ராகத்தில் பாடிய பாட்டு எப்படி இருந்தது தெரியுமா? பிரமாதம், பிரமாதம்!'' என்கிறார் ஒருவர். ஒரு திருமணத்திற்காகப் பந்தல் போட்டிருக்கிறார்கள். மிக அலங்காரமாகப் போட்டிருக்கும் அதைப் பார்த்து, ''பந்தல் மிகப் பிரமாதமாக இருக்கிறதே!'' என்கிறோம். இப்படி, ''அழகு, இனிது, நன்று'' என்று சொல்வதற்கெல்லாம் பிரமாதம் என்று சொல்வது வழக்கமாகப் போய்விட்டது. ஆனால் வடமொழியில்*

அந்தச் சொல்லுக்குத் தவறு என்றே பொருள். அந்தப் பொருளில் தான் இந்தப் பாட்டில் உபயோகிக்கிறார் அருணகிரியார்.

யாவரும் மரணம் என்றால் அஞ்சுகிறார்கள். அவர், ''அந்தப் பயம் நமக்கு இல்லை'' என்று பெருமிதத்தோடு சொல்கிறார். பல பல இடங்களில் 'நான், எனக்கு' என்று சொல்லி வந்தவர் இங்கே, ''நமக்கு'' என்கிறார். அப்பர் சுவாமிகள் மிகமிகப் பணிவு உடையவர்.

''குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்''

என்று தம்மைச் சொல்லிக் கொள்கிறார். ஆனால் இறைவன் திருவருட் பேற்றைப் பெற்ற பெருமிதத்தில்,

''நாம்ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்''

என்று மிடுக்கோடு பாடுகிறார். எல்லோரும், ''ஐயோ!'' என்று அலறும் இடத்தில் அவர், ''நாம்'' என்று தலை நிமிர்ந்து பேசுகிறார். அதுபோலவே அருணகிரிநாதர், ''மரணம் எனக்கு இல்லை'' என்று சொல்ல வேண்டியவர், ''மரணம் என்ற தவறு நமக்குக் கிடையாது'' என்று பேசுகிறார். அது அவருடைய பெருமிதத்தைக் காட்டுகிறது.

தவறாவது என்ன? மனிதன் வாழ்நாளில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் அல்லாத காரியங்களைச் செய்தால் தவறு செய்தான் என்று சொல்வோம். அந்தப் பிழைக்கு என்ன பயன்? மற்றொரு பிழை பயனாக விளையும். தினை விதைத்தால் தினை விளையும்; வினை விதைத்தால் வினை விளையும். பிழைக்குப் பிழைதானே விளையும்? வாழ்நாளில் செய்ய வேண்டிய காரியங்கள் அல்லாதவற்றைச் செய்தால் தவறு ஆகிய மரணம் சம்பவிக்கும்.

''மரண ப்ரமாதம் நமக்கு இல்லையாம்'' என்று அருணகிரியார் சொல்கிறாரே; மரணம் இல்லாமல் நாம் இருக்க முடியுமா? மரணம் இல்லாப் பெருவாழ்வு என்பது ஒன்று உண்டா? இதைச் சற்று ஆராய்ந்து பார்க்கலாம்.

## மரணம் என்பது யாது?

உடம்பு ஐந்து பூதங்களால் ஆனது. தாய் வயிற்றில் கருவாகிப் பின்பு அந்தக் கரு முதிர்கிறது; வெளிவந்து நிமிர்ந்து வளர்ந்து

வருகிறது; விதை முளைத்துச் செடியாகி மரமாகிக் கப்பும் கிளை யுமாகப் படர்ந்து வளர்வதுபோல வளர்கிறது. எந்தப் பொருளுக்குத் தோற்றம் உண்டோ அந்தப் பொருளுக்கு நிச்சயம் அழிவும் உண்டு. ''தோற்றம் உண்டேல் மரணம் உண்டு'' என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் சொல்கிறார். தோற்றிய உடம்பு நிச்சயமாக மறையும். உடம்பு மறைவதுதான் மரணம். உலகில் யாரானாலும், சிவஞானம் பெற்றவர்களாக இருந்தாலும், நிச்சயமாக இறந்து போவார்கள். எட்டு வயசில் இறந்து போகிறவர்களும் இருக்கிறார் கள். எண்பது வயசில் இறந்து போகிறவர்களும் இருக்கிறார்கள். நூறாண்டுக்கு மேல் ஒருவன் வாழ்ந்தான் என்றாலும் அப்புறம் மரணம் அடையத்தான் வேண்டும் உடம்பு எல்லோருக்கும் கடைசியில் மரித்துப் போகும். கடுமையான யோகத்தினால் பல ஆண்டுகள் இளமையோடு வாழ்கிறவர்களானாலும் அவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகாவது மரணம் அடையத்தான் வேண்டும். உடம்பு பஞ்ச பூதங்களால் ஆனது. ஐம்பெரும் பூதங்கள் இருக்கும் வரையில், தவம் யோகம் முதலியவற்றால் வாழ்ந்து கொண்டிருக்க வகை தேடிக் கொண்டாலும், ஐம்பெரும் பூதங்களும் மங்கும் பிரளயம் உண்டாகும்போது பஞ்ச பூதங்களா லான உடம்பும் அழிந்தே போக வேண்டும்.

''அப்படி இருக்க, அருணகிரிநாத சுவாமி நமக்கு மரணம் இல்லை என்கிறாரே; எந்தத் தைரியத்தைக் கொண்டு சொல்கிறார்? நமக்கு என்று சொல்வதனால் எல்லோரையும் சேர்த்துச் சொல் கிறாரா?'' என்ற ஐயப்பாடு எழலாம். எல்லோரையும் சேர்த்துச் சொல் வதற்கு அவருக்கு உரிமை இல்லை. தம்மையே குறிப்பிட்டுச் சொல்கிறார். அப்படிச் சொல்ல அவரிடம் என்ன சாமர்த்தியம் இருக்கிறது? அவரும் உடம்பு படைத்தவர் அல்லவா?

## மரணத்துக்கு அஞ்சாதவர்கள்

மரணம் இல்லாப் பெருவாழ்வு இன்னது என்று முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். உடம்பிலிருந்து உயிர் போய் விட்டால் மரணம் அடைந்தான் என்று சொல்கிறோம். ஒருவன் நோய்வாய்ப்பட்டு இறந்து போகிறான். மற்றொருவன் மார் அடைப்பினால் மரிக்கிறான். வேறொருவன் கார் விபத்தில் அகப்பட்டுக் கொண்டு மாளுகிறான். இப்படி உயிர் உடம்பை

விட்டுப் புறப்படுகின்ற முறையில் பல வேறுபாடு இருந்தாலும், மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவாகவே இருக்கிறது. மரணத்தினால் ஏற்படுகின்ற துன்பத்தைக் கண்டு சிலர் எமன் என்றைக்கு வந்துவிடுவானோ என்று பயத்தால் செத்துக் கொண் டிருக்கிறார்கள். ''சாவு என்றைக்கு வந்தாலும் கவலை இல்லை'' என்று இருப்பவர்கள் எமனுக்குப் பயப்படுவதில்லை. தாயுமானவர்,

> "சந்தமும் வேதமொழி யாதொன்று பற்றினது
> தான்வந்து முற்றும் எனலால்
> சகமீ திருந்தாலும் மரணம்உண் டென்பதைச்
> சதாநிஷ்டர் நினைவ தில்லை"

என்கிறார். எப்பொழுதும் சகஜ நிஷ்டையில் இருப்பவர்கள், தாம் அடைய வேண்டியதை அடைந்து, புளியம் பழமும் ஓடும் இருப்பது போல உடம்போடு இருக்கும்போதே உடம்பின் வாசனையை எல்லாம் மாய்த்து விட்டு வாழ்கின்ற பெருமக்கள். இந்த உலகத் தில் இருந்தாலும் மரணம் உண்டென்ற பயம் அவர்களுக்கு இராது. மரணம் வந்தால் அதனால் ஏற்படும் துன்பம் அவர்களுக்கு இல்லை.

## அச்சத்துக்குக் காரணம்

மரணத்துக்கு அஞ்சுவது ஏன்? பல காலம் இவ்வுடம்பில் இருந்த உயிர் போவதனால் ஏற்படும் பிரிவுத் துன்பந்தான் அதற்குக் காரணம். கையை வெட்டும் போது ஏற்படும் வலியைப் போல உயிர் உடம்பினின்றும் போகும்போது துன்பம் ஏற்படும் என்பது சரி அல்ல. உண்மையில் ஆண்டவன் ஒரு நிலைக்குமேல் துன்பமோ, வலியோ அதிகமானால் அதை நாம் உணராதிருக்கும் படியான சக்தியைக் கொடுத்திருக்கிறான். ஒருவனுக்கு ஜுரம் 105 டிகிரிக்கு மேல் போய்விட்டது என்றால் உடனே மயக்கம் வந்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலே மயக்கம் உண்டாவத னால் உடம்பு படுகிற அவஸ்தையை அறிவு தெரிந்து கொள்வது இல்லை. ஆகவே உயிர் போகும்போது, 'இந்த உடம்பை விட்டுப் போகிறோமே; இனி என்ன ஆகுமோ?' என்ற எண்ணத்தினால் ஏற்படும் பயந்தான் பெரிய துன்பமாக விளைகிறது. இந்த உடம்பு நமக்குச் சொந்தம் என்ற நம்பிக்கையோடு இதனிடம் அதிகப் பற்றுக் கொண்டமையினால் அஞ்சுகிறோம். உடம்பைப் பற்றி மாத்திரம் அல்ல, உடம்போடு சம்பந்தப்பட்ட மக்கள்,

உடம்போடு சம்பந்தப்பட்ட சொத்துக்கள், உடம்போடு சம்பந்தப் பட்ட வாழ்க்கை ஆகிய எல்லாவற்றையும் பிரிகிறோமே என்று எண்ணி மனம் துன்புறுகிறது; இனிப் போகிற இடம் எப்படி இருக்குமோ என்ற கவலை உண்டாகிறது.

தண்ணீர் இல்லாக் காட்டில் ஓர் அதிகாரி இருக்கிறார். அவர் மேலதிகாரியிடம் நல்ல பெயர் வாங்கியவர். அவருக்கு மாற்றலாகிறது. அதனால் அவர் மிகவும் சந்தோஷப்படுகிறார். மற்றொருவர் தஞ்சை ஜில்லாவில் இருக்கிறார். அவருக்கு மாற்றலாகிறது. ஆனால் மாற்றலாகி விட்டதே என மிகவும் கவலைப்படுகிறார். ''ஐயோ! வேறு ஊருக்குப் போய்ச் சேர வேண்டுமே!'' என்று துன்பப்படுகிறார். இருவருக்கும் மாற்றல் என்பது பொதுவானது. ஆனால் ஒருவர் உள்ளத்தில் மகிழ்ச்சியும், மற்றவருக்குத் துக்கமும் உண்டாகக் காரணம் என்ன? 'தண்ணீர் இல்லாக் காட்டில் இத்தனை நாள் மிகவும் துன்புற்றோம். இப்பொழுதாவது நல்ல இடத்திற்கு நம்மை மாற்றினார்களோ' என்று எண்ணி, இருக்கும் இடத்தைவிடப் போகிற இடம் நல்லது என்ற நினைப்பினால் அதை வரவேற்கிறார் ஒருவர்; அதனால் அவர் சந்தோஷப்படுகிறார். மற்றவரோ, 'இத்தனை நாள் மிகவும் மகிழ்ச்சியாக இந்தத் தஞ்சை ஜில்லாவில் இருந்து கொண்டிருந்தோம். நம்மைத் தண்ணீர் இல்லாக் காட்டுக்கு மாற்றிவிட்டார்களே! அங்கே போய் எத்தனை துன்பப்பட வேண்டுமோ தெரியவில்லையே!' என்று எண்ணி வருந்துகிறார்.

அதே போல நாம் இந்த உடம்பை விட்டுப் போகும் போது, போகிற இடம் நல்லதாக இருக்குமென்று தெரிந்து கொண்டால் போகத் தயாராக இருப்போம். இனி வருகின்ற பிறவியில் நமக்கு இதைக் காட்டிலும் சிறந்த இன்பம் உண்டு என்ற நிச்சய புத்தி உடையவர்கள் இந்த உடம்பை விடுவதால் துன்பப்பட மாட்டார்கள்.

## கரும்பு போட்டவன்

''கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண்டு உழவார்;
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கால் பரிவ திலர்''

என்பது நாலடியாரில் வரும் பாட்டு.

நன்றாக விளைந்து முற்றின கருப்பங்காடு. கருப்பங்கழியை வெட்டி, ஆலையில் இட்டுக் கருப்பஞ்சாறு பிழிந்து, வெல்லம் சர்க்கரை முதலியவை யாவும் பண்ணி லாபம் அடையலாம் என்று தோட்டக்காரன் நினைத்துக் கொண்டிருக்கிறான். யாரோ பொல்லாதவன் ஒருவன் அந்தக் காட்டில் நெருப்பை வைத்து விட்டான். கருப்பங்காடு தீப்பற்றி எரிகிறது. தீயிலே கருப்பங் கழிகள் எல்லாம் வெந்து சாம்பலாகின்றன. அதைப் பார்த்துத் தோட்டக்காரன் அலறித் துடித்துப் போகாமல் என்ன செய்வான்?

ஆனால் வேறு ஒருவன், விளைந்த கரும்பை எல்லாம் வெட்டி ஆலையில் இட்டு வெல்லமாக்கி விட்டான். அவன் தோட்டத்திலே கருப்பஞ் செத்தைகள்தாம் காடாகக் கிடக்கின்றன. அங்கே ஒருவன் நெருப்பை வைத்துவிட்டான் என்றால் அந்தத் தோட்டக்காரன் துன்பப்படுவானா? 'நானே அந்தக் காட்டில் நெருப்பை வைத்துத் தோட்டத்தைச் சுத்தமாக்க வேண்டுமென்று நினைத்தேன். நல்லவேளை! எவனோ வைத்தான். எனக்குப் பாடு இல்லாமல் போய்விட்டது' என்று எண்ணி மகிழ்வான். அதைப் போலவே, இறந்து போகின்ற மக்கள் துன்பப்படுகிற தற்குக் காரணம், 'உடம்பினால் அநுபவிக்க வேண்டியவைகளை இன்னும் அநுபவித்து முடிக்கவில்லையே! இந்த உடம்பு அழிந்து விட்டால் என்ன செய்வது?' என்ற நினைவே. இந்த உடம்பை வைத்துக் கொண்டு எத்தனையோ இன்பங்களை அடைய வேண்டு மென்ற ஆசை இருக்கிறது. அந்த ஆசை ஒவ்வொரு கணமும் மிகுந்து வருகிறது. படிப்படியாக வளர்கிறதே அன்றிக் குறைவது இல்லை. இரண்டு அநுபவித்தால் நான்கு வேண்டுமென்று ஆசை கூடுகிறது. பலவற்றை அநுபவிக்க வேண்டுமென்ற ஆசை இருப்ப தனால் உயிருக்கு உடம்பை விட்டுப் போக மனம் இல்லை.

ஒருவன் தினமும் கஞ்சி சாப்பிடுகிறான். கஞ்சி சாப்பிடுவதை விட்டுவிடு என்றால் அவன் விடுவதில்லை. கஞ்சிக்குப் பதிலாக அவனுக்குப் பால் கிடைக்கும் என்ற உறுதி இருக்குமானால் அவன் கஞ்சி சாப்பிடுவதை நிறுத்தக் கவலைப் பட மாட்டான்.

அதைப் போல அறநெறியில் செல்வதன் மூலம் இறைவனுடைய இன்ப அநுபவங்கள் நிச்சயமாக உண்டாகும் என்று தெரிந்தால் இந்தப் பிறவியில் இந்திரியங்களினால் ஏற்படுகின்ற இன்ப

சுகத்தை விட்டுவிடச் சித்தமாக இருப்பார்கள் மக்கள். இந்தப் பிறிவியில் இந்திரிய சுகம் என்ற அநுபவம் நமக்குத் தெரிகிறது. வேறு வகையான அனுபவம் நமக்கு இல்லை. இப்போது உண்டாகும் சுகத்திற்குரிய கருவியாக இருக்கிற உடம்பை விட மனம் வருவதில்லை. வேறு வகையான இன்ப அநுபவம் உண்டு என்று சிலர் சொல்கிறார்கள்; ஆனால் நாம் அதை நம்புவது இல்லை. அப்படி ஓர் அநுபவம் இருக்கிறது உண்மைதான் எனத் தெரிந்து, அது நமக்குக் கிடைக்கும் என்றும் தெரிந்தால் அதை நாடுவார்கள் அல்லவா? அப்படித் தெரிந்து கொண்டவர்களே ஞானிகள். அவர்கள் மரணத்துக்கு அஞ்சுவதில்லை.

## விடுதலையும் சிறை மாற்றமும்

ஒரு பெரிய சிறைக்கூடம் இருக்கிறது. அந்தச் சிறைக் கூடத்தில் பல வகையான கைதிகள் இருக்கிறார்கள். அவர்களோடு சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்ட அரசியல் கைதிகளும் இருக் கிறார்கள். அவர்களில் இரண்டு பேர் ஒருநாள் வெளிவந்தார்கள். ஒருவன் சத்தியாக்கிரகம் செய்து சிறைக்குச் சென்றவன். அவனை வரவேற்க நாலுபேர் மாலையுடன் வெளியே காத்துக் கொண் டிருக்கிறார்கள். வந்தவுடன் அவனுக்கு மாலையிட்டுக் காரில் ஏற்றி அழைத்துச் செல்கிறார்கள். நேரே வீட்டுக்குப் போகிறான் அவன். மற்றொருவனும் வெளிவருகிறான். அவனைச் சுற்றியும் நாலுபேர் இருக்கிறார்கள். அவன் கழுத்தில் மாலை சூட்ட வில்லை. கையில் விலங்கு பூட்டிக் காரில் ஏற்றிக் கொண்டு செல்கிறார்கள்.

இரண்டு பேரும் சிறையிலிருந்து வெளிப்பட்டு நல்ல காற்றைச் சுவாசிக்க ஆரம்பித்தவர்களே. முதல்வனுக்கு விடுதலை. ஆகவே மிக்க மகிழ்ச்சியோடு மாலையும் கழுத்துமாகத் தன் வீட்டுக்குச் செல்கிறான். மற்றொருவனுக்கோ சிறை மாற்றம். இந்தச் சிறை யிலிருந்து கோயம்புத்தூர்ச் சிறைக்கு அனுப்பப்படுகிறான். நாலு பேர் காவலாக உடன் இருக்கிறார்கள். இரண்டு பேரும் சிறை யிலிருந்து வெளி வந்தவர்கள்தாம். ஆயினும் ஒருவனுக்கு விடுதலை; மற்றொருவனுக்குச் சிறை மாற்றம். இரண்டும் ஒன்றாகுமா? ஒரு சிறையிலிருந்து வேறு சிறைக்கு மாற்றப்படுபவன் இன்னும் எத்தனை சிறைகளுக்கு மாற்றப்படுவானோ, தெரியாது.

ஞானிகளும் மரணம் அடைகிறார்கள். அஞ்ஞானிகளும் மரணம் அடைகிறார்கள். இருவர் மறையும் செயல்களும் ஒன்றாவதில்லை.

மரணம் வந்தால் அது நமக்கு விடுதலை ஆகாது. நேரே நாம் வீட்டுக்குப் போவதில்லை. விலங்கு மாறுவதில்லை. நமக்கு ஏற்படுவது சிறை மாற்றந்தான். நம்மை ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு அழைத்துப் போகப் போலீஸ்காரர்களைப் போல எமகிங்கரர்கள்தாம் வருகிறார்கள். ஆனால் ஞானிகள் அடையும் மரணமோ விடுதலை. அவர்கள் இன்ப துன்பங்களை அநுபவிக்க வேண்டிய காலம் முற்றுப் பெற்றமையினால், சிறை யில் இருக்கும்போதே நல்ல பிள்ளையாக இருந்து விட்டமை யால், அவர்களை நேரே வீட்டுக்குத் தேவர்கள் வந்து அழைத்துப் போகிறார்கள்; வீடாகிய மோட்சத்திற்கு விமானத்தில் ஏற்றி அழைத்துப் போகிறார்கள்.

## யமகிங்கரரும் கணங்களும்

ஒரு கதை சொல்வார்கள். யாரோ ஒருவன் உயிரோடு இருக்கும் போது மிக்க பாவங்களைச் செய்து வந்தான். இவற்றை எல்லாம் எமன் குறித்துக் கொண்டே வந்தான். ஒருநாள் அவன் மீனாட்சி யம்மையைத் தரிசனம் செய்திருக்கிறான். அதை எமன் குறித்துக் கொள்ளவில்லை. அவன் மரணம் அடைந்தான். அவனை அழைத்து வர அம்மை சிலரை அனுப்பினாள். இதற்குள் அங்கே எம கிங்கரர்கள் போலீஸ்காரர்களைப் போல அழைத்துப் போகக் காத்து நின்றார்கள். மீனாட்சியம்மையின் பணியாட்கள், ''நீங்கள் எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''இவன் சொல்லொணாப் பாவங்களைச் செய்திருக்கிறான். ஆகவே நாங்கள் அழைத்துச் செல்ல வந்திருக்கிறோம்'' என்று சொன்னார்களாம். அதற்கு, ''அவன் எத்தனை ஆயிரம் பாவங்களைச் செய்திருந்தால்தான் என்ன? ஆயிரம் பொதி பஞ்சு மூட்டை அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன; என்றாலும் ஒரு சிறு தீப்பொறிபட்டால் அவையாவும் பொசுங்கி விடாதா? இவன் எத்தனை பாவங்கள் செய்திருந்தாலும் ஒரு முறை எங்கள் தேவியின் தரிசனம் பெற்றான். அது போதாதா அவன் பாவங்கள் எல்லாம் அழிந்து போக?'' எனச் சொல்லித் தங்கள் விமானத்தில் ஏற்றிச் சென்றார்களாம்.

கதையாக இருந்தாலும் இதன் உள்ளுறை பொருளை உணர வேண்டும். இறைவன் திருவடியில் ஈடுபட்டவர்களுக்குச் சிறை மாற்றம் இல்லை. அவர்கள் அடையும் மரணமே அவர்களுக்கு உடம்பினின்றும் உயிர்பெறும் விடுதலை ஆகிவிடுகிறது. பாவம் செய்கிறவர்களுக்கோ சிறை மாற்றம் போல உயிர் இக்கூட்டை விட்டு மற்றொரு கூட்டை அடைய மரணம் ஏற்படுகிறது. நாம் விடுதலை அடையப்போகிறோம் என்ற நம்பிக்கையுடைய கைதி தன்னுடைய விடுதலை நாள் என்றைக்கு வரும் என ஏங்கிக் காத்துக் கொண்டிருப்பது போலவே, தம் உயிர் இனி வேறு எந்த உடலுக்கும் போகாமல் நேரே வீடாகிய மோட்சத்திற்குப் போகும் என்பதை ஞானத்தினால் அறிந்தவர்கள், என்றைக்கு உயிர் விடுதலை அடையும் எனக் காத்துக் கிடப்பார்கள். தனக்கு விடுதலை கிடையாது, சிறைமாற்றந்தான் உண்டு என்பதை உணர்ந்த கைதி, ''இந்தச் சிறையிலேயே இருந்து விடலாமே. இங்கே காவலர்கள் மிகவும் நல்லவர்கள். நம்மை அதிகம் அடிப்பதில்லை. புகை பிடிக்கச் சுருட்டுக் கொடுக்கிறார்கள். புதிய சிறை எப்படி இருக்குமோ?'' என்றெல்லாம் எண்ணி அஞ்சிச் சிறை மாற்ற நாளை எதிர் நோக்கிப் பயப்படுவார்கள். அவ்வாறே அஞ்ஞானிகள் தமக்கு மரணம் வருகிறதே என வருந்துவார்கள்.

## பரிபூரணம்

நம்மைப் போன்றவர்கள் இறந்தால் மரணம் அடைந்தார்கள் என்று சொல்லலாம். ஞானிகள், சித்தர்கள் காலமானால் பரிபூரணம் அடைந்தார்கள் என்று சொல்வது வழக்கம். பரிபூரணம் என்றால் நிறைவு என்று பொருள். யார் வாழ்க்கையில் நிறைவு அடைந்தார்களோ, அவர்கள் பரிபூரணம் அடைந்தவர்கள். சிறை வாச காலம் நிறைவேறியவர்கள் அவர்கள். மரணம் என்பது அவர்களுடைய மரணம் இல்லாப் பெரு வாழ்வின் பிறப்பு. என்றைக்கு மரணம் அடைகிறார்களோ, அன்றைக்கே அவர்களது அமர வாழ்வு தொடங்குகிறது. அதற்கு அப்பால் மீட்டும் உடம்பாகிய சிறையில் புகும் வேலை அவர்களுக்கு இல்லை.

## பயண முடிவு

ஒருவர் திருவண்ணாமலை போகிறார். மெயில் வண்டியில் ஏறி விழுப்புரத்தில் போய் இறங்கிப் பிறகு பாசஞ்சர் வண்டியில்

திருவண்ணாமலை போகிறார். மற்றொருவர் பம்பாயிலிருந்து வேலூர் மார்க்கமாக வருகிறார். மெயில் வண்டியில் ஏறியவர் இறங்கமாட்டார் என்றோ, பாசஞ்சர் வண்டியில் திரும்ப ஏறமாட்டார் என்றோ சொல்ல முடியுமா? எத்தனை இடங்களில் ஏறி இறங்க வேண்டுமானாலும், எந்த வண்டியில் போக வேண்டு மானாலும் போகத்தான் வேண்டும். திருவண்ணாமலை போகும் வரையில் அவர் பிரயாணம் முடிவதில்லை. அதைப் போல உயிர் பதியை அடையும் வரையில் பிறவியாகிய பிரயாணம் செய்யத் தான் வேண்டும். மிக மிக உயர்ந்த பிறவி எடுத்தவன் அடுதத பிறிவியில் உயர்ந்த நிலையிலேயே இருப்பான் என்று சொல்ல முடியாது. மெயில் வண்டியில் போனவர் இறங்கிச் சாதாரண வண்டியில் எப்படிப் போகிறாரோ அதுபோல உயர்ந்த பிறவி எடுத்தவர் அடுத்தபடி தாழ்ந்த பிறவியை அடையலாம். உயிர் எங்கே போய் இறங்க வேண்டுமோ அங்கே போய் இறங்கிய பின்பு தான் வேறு வண்டியில் ஏற வேண்டிய அவசியம் இல்லாமற் போகும்.

## மங்கல மரணம்

நமக்குச் சாவு ஏற்பட்டால் மறு பிறப்பும், மீண்டும் சாவும் காத்திருக்கின்றன. ஞானிகளுக்கு அதுவே மரணமில்லாப் பெரு வாழ்வின் தொடக்கமாக இருக்கிறது. இனி வேறு ஒரு பிறவியோ, சாவோ அவர்களுக்கு இல்லை. மரணத்திலும் மங்கல மரணம் ஒன்று. தவறான மரணம் ஒன்று. உலக வழக்கில் எண்பது வயசுக்கு மேல் வாழ்ந்துவிட்டு யாராவது இறந்து போனால் அதைக் கல்யாணச் சாவு என்று சொல்வார்கள். அவன் வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டியவற்றை அநுபவித்துவிட்டுச் செத்தான்; செய்ய வேண்டிய வற்றைச் செய்து விட்டுச் செத்தான்; அவன் செத்துப் போனதற்கு வருந்த வேண்டியதில்லை. அதனால், 'பெரியவர் பழுத்த பழமாகிப் போய்விட்டார்' என்று நினைத்துக் கொண்டாடுகிறார்கள். உண்மையான கல்யாணச் சாவு இறைவனுடைய திருவருளைப் பெற்று, இனிப் பிறவியே இல்லை என்று உள்ள மரணந்தான். உயிர் விடுதலை பெற்று இறைவனது கழலடியைச் சேர்ந்து எம்பெருமானோடு கல்யாணம் நிகழும் நிலை அது. இதுவே மங்கல மரணம். இறந்து இறந்து பிறவி எடுத்து மரணம் அடை

வது தவறு. அதனால் மரணத்தையே தவறு என்று சொன்னார். ஞானிகளுக்கு இந்த மரணமாகிய தவறு இராது. அது விடுதலை யாக, பரிபூரணமாக இருக்கும். இதுவே மரணமில்லாப் பெரு வாழ்வின் தொடக்கமாக இருக்கும்.

**மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்.**

## *வாய்த்த துணை*

இறைவனை நம்பினவர்களுக்கு மரணம் வராது; விடுதலை தான் கிடைக்கும். அப்படிச் சொன்னவுடனேயே நமக்கு ஆசை உண்டாகிறது. மரணம் ஆகிய தவறு இல்லாத மங்கல வாழ்வு கிடைக்கிறது என்று சொன்னால் யாருக்குத்தான் ஆசை இராது? ''லட்ச ரூபாய் இனாம்'' என்று கொட்டை எழுத்தில் விளம்பரம் செய்திருப்பதைப் பார்த்தவுடன், ''அடடா! அது நமக்கு வேண்டு மானால் என்ன செய்ய வேண்டும்?'' என்று எத்தனை பேர் பார்க்கிறார்கள்! ஒரு ரூபாய் கூப்பன் வாங்கி எழுதி அனுப்ப வேண்டும் என்று நிபந்தனை போட்டால் பத்து ரூபாய்க்கு வாங்கி அனுப்புவார்கள் அல்லவா? யாரிடமாவது, ''லட்ச ரூபாய் இனாம் கிடைக்கும்'' என்பதை முதலில் சொல்லாமல் ஒரு ரூபாய்க்குக் கூப்பன் வாங்கி அனுப்பச் சொன்னால் அனுப்பு வார்களா? இவ்வுலக விளம்பரத்தைப் போலவே அருணகிரியார் முதலில், ''மரணப்ரமாதம் நமக்கில்லையாம்'' என்று ஆசை காட்டுகிறார். 'அடடா! நமக்கும் அந்த மரணமில்லாப் பெரு வாழ்வு கிடைக்காதா?' என்று ஆசைப்பட்ட மக்கள் அவரிடம் சென்று, ''சுவாமி, அப்படிச் சொல்ல உங்களுக்கு யார் துணை? எமனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது உங்களுக்கு நண்பரா? அதனால்தான் எமன் உங்களைக் கொல்ல மாட்டானா? அவ்வழியை எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்று கேட்டால், அவர் சொல்கிறார்:

**என்றும் வாய்த்த துணை**
**கிரணக் கலாபியும் வேலும் உண்டே.**

''எனக்கு இந்த உலகத்தில் வாழும் போதும், இந்த உலகை விட்டு மரணம் அடைகின்ற போதும், சென்று சேர வேண்டிய இடத்திலும் வேலும் மயிலும் துணை நிற்கின்றன. எல்லாக்

காலத்திலும் எனக்கு என்று அமைந்த துணை அவை. ஆகவே எனக்கு மரணமாகிய தவறு இல்லை'' என்கிறார்.

கிரணக் கலாபி–ஒளி வீசுகின்ற தோகையையுடைய மயில். தவறு இருந்தால் மரணத்தை அடைவான். தவறு செய்யாமல், நெறி தவறிப் போகாதவாறு பாதுகாத்திருப்பவை இரண்டு. வேலும் மயிலும் துணை என்று சொல்லிக் கொண்டே வாழ்க்கையை நேர் நெறியில் செலுத்திக் கொண்டிருப்பவர் அருணகிரியார். ஒளி வீசு கின்ற தோகையை உடைய மயில் நமக்கு எதை நினைவுறுத்து கிறது? ''செல்லத் தகாத வழியில் செல்லாதே'' என்று நினை வுறுத்துகிறது. வேலோ இறைவன் திருவடியில் ஈடுபடவேண்டும் என்று நினைவுறுத்துகிறது.

சூரபன்மன் பலவகையிலும் அறம் அல்லாத வழியில் போனான். இறைவனை நாயகனாகக் கொண்டு வாழாமல், காமினீ காஞ் சனத்தை விரும்பினால் சிறந்த வாழ்வு வாழ முடியாது. உலகத் திலுள்ள பொருள்களுக்கு ஆசைப்பட்டு வாழ்ந்த சூரன் என்ன கதி அடைந்தான்? இறைவனுடைய தண்டனைக்கு ஆளானான். அந்தச் சூரனே மயிலாக மாறினான். தவறு செய்து வந்தால் தண்டனை கிடைக்கும் என்பதைக் கிரணக் கலாபி சுட்டுகிறது. இன்னது செய்ய வேண்டுமென்று சொல்வது வேல். இறைவன் திருவடி தொடங்கி முடிவரையில் நீண்டு நின்று அவன் உருவத்தை அது நமக்குக் காட்டுகிறது. ''ஆசை மிகுதி ஆக ஆகச் சூரன் அடைந்த கதியே ஏற்படும்; ஆசைப்படாதே'' என்று மயில் கூறுகிறது. ஒளி படைத்த வேல், வழியில் ஞான ஒளியைக் காட்டுகிறது. ''அஞ்ஞானத்தை அடையாதே என்று மயிலும், ஞானத்தை அடை என்று வேலும் துணையாக நின்று சுட்டுவதனால், நான் தவறுகளைச் செய்யாமல் தவறு அல்லாத நல்ல வழியில் செல்கிறேன். அதனால் மரணப் பிரமாதம் எனக்கு இல்லையாம்'' என்றார் அருணகிரியார்.

## குழந்தையின் உவகை

முருகனைப் பார்த்தே இப்படிச் சொல்கிறார். சின்னஞ்சிறு குழந்தை, ''அப்பா, எனக்குச் சொல்லிக் கொடுத்தபடியே இன்று வாத்தியாரிடம் பதில் சொன்னேன். எனக்கு நூற்றுக்கு நூறு மார்க்குக்

கொடுத்தார்'' என்று சொல்வதுபோல, ஆண்டவன் திருவருளால் இந்த வாழ்வு பெற்றமையை அவனிடமே சொல்கிறார்.

**கிண்கிணி முகுள**
**சரண! ப்ரதாப! சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா**
**பரண! க்ருபாகர! ஞானாகர!சுர பாஸ்கரனே!**

## போதணிந்த திருவடி

இதில் நான்கு பகுதிகள் இருக்கின்றன. நல்ல அழகான அர்ச்சனை இது. முதலில் திருவடியிலிருந்து தொடங்குகிறது. எந்த இடத்தில் நமக்கு உஜ்ஜீவனம் கிடைத்ததோ அந்த இடத்தை மறுபடியும் நினைக்கிறார். எல்லாவிதமான துன்பத்தையும் போக்கும் இடமாக இருப்பது ஆண்டவன் திருவடி. இறைவன் அடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார் என வள்ளுவர் சொல்கிறார். துன்ப நீக்கத்திற்கு இருப்பிடமாக உள்ள ஆண்டவனது சரணாரவிந்தங் களை நினைந்து, அந்தப் பாதத்தை அழகாகப் பாடுகிறார்.

**கிண்கிணி முகுள சரண!**

முகுளம் என்பது மொட்டு. அரும்பாக இருந்தால் பறிக்க மாட்டார்கள். அரும்பு முதிர்ந்தால் பேரரும்பு ஆகும். அதற்குப் போது என்று பெயர். இன்ன பொழுது என்று காட்டுவதனால் அந்தப் பெயர் வந்தது. அது கொஞ்சம் வாய் திறந்து இருக்கும். நடனமாடுபவர்கள் காலில் கெச்சை கட்டிக் கொள்கிறார்கள். அதன் வாய் சிறிது திறந்து இருக்கும். அந்தச் கெச்சைக்குக் கிண் கிணி என்று பெயர். இதைப் போலே அரும்பாகவும் இல்லாமல், முழுப் பூவாகவும் இல்லாமல் மலரும் பக்குவத்தில் இருக்கிற பேரரும்பானது சிறிது வாய் நெகிழ்ந்து இருக்கும். கிண்கிணியைப் போன்ற முகுளம் என்று அதைச் சொல்வார்கள். அன்பர்கள் ஆண்டவன் திருவடியில் நன்கு மலர்ந்த பூக்களைப் போடுவ தில்லை. அரும்புகளையும் போடுவதில்லை. வாய் சிறிது திறந் திருக்கிற பேரரும்புகளைப் பறித்துப் போடுவார்கள். ஆண்டவனது திருப்பாதம் கிண்கிணி முகுளங்களால் அர்ச்சனை செய்யப் பட்டிருக்கிறது. 'கிண்கிணி போன்றுள்ள பேரரும்புகள் கிடக்கும் திருவடியை உடையவனே!' என்கிறார் அருணகிரியார்.

## வீரப்புகழ்

முருகன் பிரதாபத்தை உடையவன். புகழ் இரண்டு வகையில் வருகின்றது. வீரத்தினால் வருகின்ற புகழ் ஒன்று; ஈகையினால் வருகின்ற புகழ் ஒன்று.

''ஈதல் இசைபட வாழ்தல்''

என்று வள்ளுவர் சொல்கிறார். யார் கொடுக்கிறார்களோ அவர்கள் புகழ் பெறுகிறார்கள். ஈகையினால் வருகின்ற இப்புகழைக் கீர்த்தி என்பர். வீரத்தினால் அடைகின்ற புகழ் பிரதாபம். முருகன் மிக்க பிரதாபம் உடையவன்; வீரத்தினால் வந்த புகழ் உடையவன்.

## தாலி காத்தவன்

முருகப் பெருமான் உலகம் எல்லாம் புகழ்கின்ற பிரதாபம் உடையவன் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்கிறார். அவனுடைய வீரச் செயலுக்கு அடையாளமாக என்ன இருக்கிறது? ஜயக்கொடி எங்கே பறக்கிறது? வெற்றித் தூண் எங்கே நாட்டப்பட்டிருக்கிறது? தான் செய்த காரியத்தைத் தானே பெரிதாகச் சொல்லிக்கொள் பவன் அல்ல அவன். நாலாணாவுக்குச் செய்கின்ற தர்மத்தை எட்டணாச் செலவழித்து எழுதி வைக்கிறவர்களைப் போல வைத்துக் கொள்பவன் அல்ல. ஆனால் அவனுடைய பெரிய வீரத்திற்கு அடையாளம் எங்கே இருக்கிறது தெரியுமா? இந்திர லோகத் திற்குப் போங்கள். இந்திரனின் அந்தப்புரத்திற்குப் போங்கள். இந்திராணியைப் பாருங்கள். அவள் கழுத்தைப் பாருங்கள். ''பார்த் தால் என்ன தெரியும்?'' என்றா கேட்கிறீர்கள்? அவளுடைய கழுத்தில் மங்கல நாண் இருக்கிறது அல்லவா? அந்த மங்கல நாண்தான் முருகப் பெருமானுடைய பிரதாபத்திற்கு அடையாளம்.

முருகனுடைய பிரதாபத்திற்கும், இந்திராணியின் கழுத்தில் உள்ள மங்கல நாணுக்கும் என்ன சம்பந்தம்? அந்த மங்கல நாண் சிறியது; மிக மெல்லியதுதான். இவ்வளவு சிறிய மெல்லிய நாண் முருகன் இல்லாவிட்டால் அவள் கழுத்தில் இல்லாமல் போயி ருக்கும். சூரன் வென்றிருந்தால் ஓர் அசுரக் குழந்தை இந்திரனைக் கொன்றிருப்பான். இந்திராணியின் மங்கல்ய தந்து, தாலிக் கயிறு, வாங்கப்பட்டிருக்கும். அதை ரட்சிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு எம்பெருமான் முருகன் அமர்க்களத்திற்குப்

*போனான். தாரகாசுரன் அழிந்தான்; பானுகோபன் மாண்டான்; சிங்கமுகாசுரன் மரித்தான்; சூரபன்மனும் சிதறுண்டான். அதனால் இந்திரன் வாழ்ந்தான். இந்திராணியின் கழுத்திலுள்ள மாங்கல்ய மும் அறுபடாமல் பிழைத்தது. அவள் கழுத்தில் இருக்கிற மாங்கல்ய நாண் அல்லவா முருகனுடைய பிரதாபத்திற்கு அடையாளம்?*

கிண்கிணி
சரண! ப்ரதாப! சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷா
பரண!

*சசி என்பது இந்திராணியின் பெயர். சசி தேவியினுடைய மங்கல நாணைத் தாங்கிக் கொண்டிருந்தவன் முருகன்; பாதுகாத்தவன் முருகன். அவள் கழுத்தில் கட்டிய நூல் அறுபடாமல் இருக்க வேண்டுமென்று தன் கையில் கங்கணம் கட்டிக் கொண்டவன் அவன். இதே கருத்தை அருணகிரியார் பின்னால் வேறு வகையில் சொல்கிறார். ஒரு கருத்தையே அலங்காரமாக மாற்றி மாற்றிச் சொல்கிற ஆற்றல் அவருக்கு உண்டு.*

*நான்கு கொம்பு படைத்த ஐராவதமாகிய வெள்ளை யானையின் மேல் வருகிறான் இந்திரன். வெள்ளி மலையே கால் படைத்து நடந்து வந்தால் எப்படி வருமோ அப்படி வருகிற அந்த யானை யின் மேல் வீற்றிருக்கும் இந்திரனால் தன் மனையாட்டியின் கழுத்தில் உள்ள மெல்லிய நூலாகிய மங்கல நாணைக் காப்பாற்ற முடிந்ததா? இல்லை. அவனுடைய இல்லக் கிழத்தி தன் கழுத்தில் இருந்த நூலை வாங்கிடாது, வேல் வாங்கிக் காப்பாற்றியவன் முருகன்.*

''வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி கழுத்தில்கட்டும்
நூல்வாங்கி டாதுஅன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு
நெஞ்சே''

*என்கிறார்.*

*எம்பெருமான் வீரப்பிரதாபம் உடையவன். சசி தேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரணனாக இருக்கிறான். அவனது பிரதாபத் திற்கு அடையாளம் சசி தேவியின் கழுத்தில் உள்ள நூல்.*

## கிருபை வழங்குவான்

அவன் வீரப் புகழ் மாத்திரம் உடையவன் அல்லன். ஈகைப் புகழும் உடையவன். பிறருக்கு இல்லையென்னாது கொடுத்துக் கொடுத்துப் புகழை அடைவதற்கு அவன் நிறைய அருளை வைத்திருக்கிறான். பொருளைக் காட்டிலும் சிறந்தது அருள். பொருளை மனிதன் தன்னுடைய முயற்சியினால் பெறலாம். அருளைப் பெற முடியாது. பொருள் பெற்றிருந்தாலும் அருள் இல்லாவிட்டால் அதை அநுபவிக்க முடியாது. யார் யார் தன்னுடைய சரணங்களைப் புகலிடமாகக் கொள்கிறார்களோ அவர்களுக்கு அடைக்கலம் தந்து வாரி வழங்க அருள் நிதியை வைத்திருக்கிறான். அழியாத அருட்செல்வத்தை வாரி வழங்கும் பெரிய பணக்காரனாக இருக்கிறான் எம்பெருமான்; கிருபை யாகிய செல்வத்திற்கு ஆகரமாக இருக்கிறான். கிருபையை எல்லோருக்கும் தருவதற்காக நிரம்ப வைத்துக் கொண்டிருக்கிற இடமாக இருப்பவன் ஆகையால்,

**கிருபாகர!**

என்கிறார்.

## ஞானாகரன்

அதுமாத்திரம் அல்ல. மரணம் இல்லையாக வேண்டு மானால் அறியாமை போக வேண்டும். ஞானம் பெற வேண்டும். அவன் அருளால் ஞானம் உண்டாகிறது. உயிர்கள் தங்களுடைய மரணத்தை நீக்கிக் கொள்வதற்கு வழியே அவன் தாளைப் பற்றுவது என உணர்ந்து, பற்றிய பின் ஞானத்தால் உய்வு பெறுகிறார்கள். அறியாமையில் உழன்று மரணத்தை அடைகின்ற உயிர்களுக்கு அருள் கொடுத்து ஞானத்தையும் கொடுத்து மரணமில்லாப் பேரின்ப வாழ்வைப் பெறும்படி செய்கிறான். அந்த ஞானத்துக்கு இருப்பிடம் அவன்.

**ஞானாகர!**

## தேவசூரியன்

அவன் தேவர்களுடைய இருளைப் போக்கும் ஞாயிறாக இருக்கிறான். இராத்திரி காலத்தில் பொருள்களினுடைய உண்மை

உருவம், வண்ணம் எதுவும் தெரியாமல் தவித்த நமக்குச் சூரியன் ஒளி கொடுத்துப் பொருள்களின் உருவம், வண்ணம் எல்லாம் தெரிந்துகொள்ளும்படி செய்கிறான்; இருளினால் ஏற்படுகின்ற துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுக்கிறான். அதுபோலவே தேவர்களுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற அகங்காரமாகிய இருள் நீக்கத்திற்கு எம்பெருமான் ஞான சூரியனாக இருக்கிறான். அகங்கார மமகாரங்களால் தலைதருக்கி இருக்கின்ற தேவர்களின் உள்ளத்தில் அறியாமை இருள் சூழும்போது துன்பப்படுகிறார்கள். அவர்களது துன்பத்தைப் போக்கும் எம் பெருமான் அவர்களது அறியாமை இருளை நீக்கும் சூரியனாக இருக்கிறான். ஆகவே,

**சுரபாஸ்கரனே!**

என்கிறார்.

''எனக்கு மரணமாகிய தவறு கிடையாது. மரணம் இல்லாப் பெருவாழ்வைப் பெறுவதற்கு எனக்குத் துணையாக இருப்பன வேலும் மயிலும். தவறான காரியங்களை விலக்கு என்று மயிலும், தவறு அல்லாத காரியங்களைச் செய் என்று ஞான வேலும் போதிக்கின்றன. இவை இரண்டும் எனக்குத் துணையாக இருப்பதனால் நான் நல்ல நெறியில் செல்கிறேன். நன்னெறியில் செல்ல எனக்குத் துணையாக இருக்கும் வேலையும் மயிலையும் உடைய எம்பெருமானாகிய நீ வீரத்தினாலும் ஈகையினாலும் படைத்த பெரும் புகழை உடையவன். உன்னுடைய வீரப் பிரதாபத்திற்கு அடையாளமாக இந்திராணியின் கழுத்தில் மங்கல நாண் இருந்து கொண்டிருக்கிறது. அறியாமை இருளைப் போக்கிக் கொள்ளும் முயற்சி உடையவர்களுக்குச் சாதன அருளை வழங்கும் கிருபாகரனாக விளங்குகிறாய். இந்த முயற்சி உண்டான பிற்பாடு ஞானத்தைக் கொடுக்கும் ஞானகரனாகவும் நீ இருக்கிறாய். அடியேனுடைய அறியாமை இருளை மாத்திரம் போக்குகின்ற ஞான ஒளியை நீ கொடுக்கவில்லை. தேவர்களுடைய அறியாமை இருளையும் நீக்கும் சுர பாஸ்கரனாக நீ இருக்கிறாய். நின் அருளாலேயே மரணப்ரமாதம் நமக்கில்லையாம்'' என்று பெருமிதத்தோடு நமக்கு அருள் கொடுத்த ஆண்டவனிடத்திலே அருணகிரியார் சொல்கிறார்.

## மரணம் இல்லா வாழ்வுக்கு வழி

அருணகிரியாரைப் போல நாமும் மரணம் இல்லாப் பெரு வாழ்வு வாழலாம். வீணாகப் பயனின்றிக் காலத்தைக் கொன்றால் காலன் நம்மைக் கொன்றுவிடுவான். காலத்தைக் கொல்லாமல் பயன்படுத்திக் கொண்டால் காலனைக் கொன்றுவிடலாம். காலத்தை வீணாக்காமல் இறைவனோடு தொடர்புடைய நல்ல விஷயங்களைச் சொல்வதைக் காலக்ஷேபம் எனச் சொல்வது வழக்கம். நம்முடைய எண்ணங்களை எல்லாம் ஆண்டவன்பால் செலுத்தி வாழ்ந்தால் காலம் போய்க் கொண்டிருக்கும். ஆனால் போவது தெரியாது. நெடுந்தூரம் பிரயாணம் செய்கிறவன் ரெயில் வண்டியில் ஏறிப் படுத்துக் கொண்டு விடுகிறான். காலையில் எழுந்து பார்த்தால் முந்நூறு மைல் பிரயாணம் செய்திருப்பது தெரிகிறது. அவனுக்கே தெரியாமல் முந்நூறு மைல்கள் போய் விடுகின்றன. விழித்துக் கொண்டே இருந்தான் என்றால் கொஞ்ச தூரம் பல பல காட்சிகளைப் பார்த்து வருவான். கண்ணில் கரித் துண்டு விழும்; கசக்கிக் கொள்வான். கண் மிக வெப்பமாக இருக்கும். "இன்னும் பத்து மைல்கூடப் போகவில்லையா?" என்று கவலைப்படுவான். தூங்குகிறவனுக்கோ தூரம் போவது தெரிவதில்லை.

வாழ்க்கையில் நாம் எத்தனை காலம் வாழ வேண்டும் என்ற வரையறை இருக்கிறதோ அதுவரையில் தூங்க வேண்டும். தூங்கு வதாவது, மனம் இறைவன் அடியில் ஒருமைப்பட்டு இருத்தல். வேலும் மயிலும் துணை என்று நினைத்து, கிண்கிணி முகுள சரணங்களில், க்ருபாகரனுடைய, ஞானாகரனுடைய, சுர பாஸ் கரனுடைய பாதங்களில் உறங்கினால் காலம் போவது தெரியாது. காலனைக் கொன்றுவிடலாம். வாழ்க்கையில் ஏற்படுகிற தாபம் நம்மை அண்டாது. காலம் போய்கொண்டே இருந்தாலும் நம்மள வில் நின்றுவிட்டது போல ஆகும். அதன் முடிவு கால ஜயம். அதனால் பெறுவது மரணமில்லாப் பெருவாழ்வு.

"நினைந்துநினைந்து உணர்ந்துணர்ந்துநெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழும்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுடைய நாயகனே என்று

வனைந்துவனைந்து ஏத்துதும்யாம், வம்மின்உல கியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்;
புனைந்துரையேன், பொய்புகலேன், சத்தியஞ்சொல்கின்றேன்;
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே''

*என்று இராமலிங்க சுவாமிகள் பாடுகிறார்.*

*இத்தகையவர்கள் மரணமாகிய தவறு இல்லை என்ற பெரு மிதத்தில் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்தார்கள். அருணகிரி நாதரும் எம்பெருமான் முருகனுடைய, கிருபைக்கு ஆகரமாக இருப்பவனுடைய, ஞானாகரனுடைய, சுர பாஸ்கரனுடைய, கிண்கிணி முகுள சரணத்தைப் பற்றி, அவன் திருக்கரத்தில் உள்ள வேலும் மயிலும் உண்டே துணை என்று நம்பி வாழ்ந்த வகையினால், ''மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்'' என்று சொல்லும் வீறு பெற்றார்.*

மரணப்ர மாதம் நமக்கில்லை
யாம்என்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும்உண்
டே! கிண் கிணிமுகுள
சரண!ப்ர தாப! சசிதேவி
மங்கல்ய தந்துரட்சா
பரண! க்ரு பாகர! ஞானா
கர! சுர பாஸ்கரனே!

*(மரணமாகிய தவறு நமக்கு இல்லையாகும்; எல்லாக் காலத்திலும் நமக்குக் கிடைத்துள்ள துணையாக ஒளிக் கதிர் வீசும் தோகையையுடைய மயிலும் வேலாயுதமும் இருக்கின்றன. கிங்கிணி வாய் போல உள்ள பேரரும்பு சூழ்ந்த திருவடியை உடையவனே! வீரத்தால் வரும் பிரதாபத்தை உடையவனே! இந்திராணியின் மங்கல நூலைப் பாதுகாக்கும் செயலைத் தாங்கியவனே! அருளுக்கு இருப்பிடமானவனே! ஞானத்தின் உறைவிடமே! தேவர்களின் அறியாமை இருளைப் போக்கும் சூரியனே!*

*ப்ரமாதம் – தவறு. கலாபி – கலாபத்தையுடைய மயில். முகுளம் – அரும்பு. சசிதேவி – இந்திராணி. தந்து – நூல். ரக்ஷா – பாதுகாப்பு. பரணன் – தரிக்கிறவன். ரக்ஷாபரணன் – பாதுகாப்பை மேற்கொண்டவன். சுரபாஸ்கரன் – தேவசூரியன்).*

# வள்ளியை வேட்டவன்

முருகன் வள்ளி நாயகியை மணம் செய்து கொண்டான். வள்ளியை நினைக்கும்போது அருணகிரி நாதருக்குப் பேரின்ப நினைப்பும் சேர்ந்து வருவதைப் பல பாடல்களில் பார்த்தோம். இப்பொழுது வள்ளியின் வரலாற்றைச் சொல்லித் தமிழின் சிறப்பையும் சொல்ல வருகிறார். தமிழ்ப் பெண் வள்ளியிடம் ஈடுபட்டமையால் தமிழ் மொழியினிடம் மிக்க விருப்பம் உடையவனாக முருகன் இருக்கிறான்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன், முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்.

முருகன், வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலையை அணிகின்ற குழலை உடைய வள்ளியை வேட்டவன்; மணம் புரிந்து கொண்டவன். மனைவியின் வீட்டை வேட்டகம் என்று சொல்வர். வேள்வி என்பது திருமணத்துக்கும் பெயர். வேட்டல் என்பதற்கு விரும்புதல் என்பதும் ஒரு பொருள். தாய் தகப்பனார் விரும்பிப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வது ஒரு முறை. ஆண், பெண்ணைப் பார்த்து விரும்பிக் கல்யாணம் செய்து கொள்வதும் உண்டு. பெண், ஆணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமும் இருக்கிறது. இங்கே முருகப் பெருமான் வள்ளியைத் தானே வேட்டு அடைந்தான்.

தேவசேனையின் கல்யாணத்துக்கும் வள்ளி கல்யாணத்துக்கும் வேறுபாடு உண்டு. முருகப் பெருமான் சூரனைச் சங்காரம் செய்து தம் வாழ்வை மீட்டும் பெறச் செய்ததற்கு நன்றி அறிதலாக ஏதாவது செய்ய வேண்டுமென்று இந்திராதி தேவர்கள் நினைத்தார்கள். எம்பெருமானுடைய திருமணக் கோலத்தைக் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. தன் பெண்ணாகிய தேவசேனையைத் திருமணம் செய்து வைக்க விரும்பினான் இந்திரன்.

தேவர்களுடைய மகிழ்வுக்காகத் தேவசேனையை மணம் செய்து கொண்டான் முருகன். ஆனால் வள்ளி நாயகியிடத்தில் தானே காதல் செய்து, அவள் விரட்டி ஓட்டினாலும் போக மாட்டேன் என்று காத்திருந்து, அவள் அன்பை இரந்து நின்றான்.

## கூந்தற் பூ

வள்ளியை, ''மொய்தார் அணி குழல் வள்ளி'' என்று அருண கிரியார் வருணிக்கிறார். மலரால் ஆகிய மாலையை அப்பிராட்டி தலையில் அணிந்திருக்கிறாள். அந்த மாலையில் மணம் இருப்ப தனால் வண்டு மொய்க்கிறது. நல்ல மணம் பொருந்திய மலரை அணிவது தமிழ்நாட்டுப் பெண்களின் வழக்கம். கூந்தலுக்கு இயற்கை வாசனை இருந்தாலும் மலர் தன் மணத்தையும் அதற்கு ஊட்டுகிறது. அது மாத்திரம் அல்ல. மலருக்குத் தண்மை உண்டு. ஆதலால் பூ வைத்துக் கொண்டால் தலை குளிர்ச்சியாக இருக்கும். நம் நாட்டில் சுமங்கலிகள் அடிக்கடி தலை முழுகுவது இல்லை. ஆகையால் தலை குளிச்சியாக இருப்பதற்கு மலரைச் சூடுவது வழக்கம். பெரும்பாலும் மலரைக் கூந்தலுக்குள்ளே, கொண்டைக் குள்ளே செருகிக் கொள்வார்கள்; பிறர் காணும்படியாகச் சூட்டிக் கொள்ள மாட்டார்கள். பிறர் கண்ணில் படும்படியாகப் பூ வைப்பது தவறென்று நாடோடியாக வழங்கும் முத்து வீராயி பாட்டுச் சொல்கிறது.

''பெண்கள் பூத்தேடி வைக்க வேணும்; வைத்தால்
பிறர் அறியாமல் இருக்க வேணும்;
கொண்டைமேல் பூத்தோண வைத்தால் வேசிஎன்று
கூறுவாரே முத்து வீராயி.''

மலரைச் சூட்டிக் கொள்வதால் கூந்தல் நறுமணம் பெறுவது மாத்திரம் அல்ல; மூளைக்குக் குளிர்ச்சி உண்டாகிறது.

வள்ளி நாயகி காட்டில் வாழ்ந்தாள். காட்டில் மலருக்குப் பஞ்சமா? காசு கொடுத்து வாங்க வேண்டுமா? எங்கே பார்த் தாலும் மலர் பூத்துக் குலுங்கும். பறித்து அணிந்து கொள்ளலாம். வள்ளியம்மை நடந்து சென்றால், அவள் கூந்தலில் உள்ள மலரின் நுட்பமான மணம் வள்ளி போகிறாள் என்பதைக் காட்டும். அவளை முருகன் வேட்டான்.

## முத்தமிழ்

*அவன் தமிழில் அளவிறந்த காதல் உடையவன்.*

முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்.

*தமிழ் மூன்று; இயல், இசை, நாடகம் என்று சொல்வார்கள். இலக்கியம் இலக்கணம் எல்லாம் இயல் தமிழைச் சார்ந்தவை. சங்கீத சம்பந்தமானது இசைத் தமிழ். நாடகத்திற்கு உரியது நாடகத் தமிழ். இந்த மூன்று தமிழிலும் அடிப்படையானது இயல் தமிழ். அதன் பின் வளர்ந்தது இசைத் தமிழ். அது விரிந்து அமைந்த பின் படர்ந்தது நாடகத் தமிழ். இசைத்தமிழில் இயல் தமிழும் கலந்திருக்கும். சாகித்தியம் இல்லாமல் பாட்டு இல்லை. வெறும் ராகம் பாடினால் அது மட்டும் சங்கீதம் ஆகாது.*

"பண் என்னாம் பாடற் கியைபின்றேல்." (குறள்)

*சாகித்தியத்தோடு பண் சேரும்போதுதான் சுவை உண்டாகிறது. இறைவன் புகழை மனம் கொள்ளுமாறு, எல்லோருடைய உள்ளமும் உருகிக் கரையுமாறு ஒரு பாட்டு இருக்கிறது என்றால், அதில் அந்த உருக்கத்தை உண்டாக்கும் பொருளை உடைய சாகித்தியம் அல்லது இயல் சிறப்பாக இருக்கிறது என்றுதான் கொள்ள வேண்டும். இயல் தமிழைக் காட்டிலும், இயலும் இசையும் சேர்ந்த இசைத்தமிழ் மிக்க பயனைத் தருகிறது. நாடகத் தமிழில் இயல் தமிழும், இசைத் தமிழும் கலந்திருக்கும். நாடகத் தமிழ் பரமசிவனைப் போல் உள்ளது. பிரம்மா படைக்கும் காரியம் மாத்திரம் செய்வார். திருமால் படைத்தல், காத்தல் இரண்டையும் செய்கிறார். சிவபிரனோ படைப்பார், காப்பார், துடைப்பார். பிரம்மாவுக்கு ஒரு தொழில். திருமாலுக்கு இரண்டு தொழில். பரமேசுவரனுக்கு மூன்று தொழில். இயல் தமிழ் தனித்திருப்பது. இசைத்தமிழ் இயல் இசை இரண்டும் கலந்தது. நாடகத் தமிழில் இயல், இசை, நாடகம் மூன்றும் உள்ளன. இவை மூன்றும் பழங்காலத்தில் சிறப்பாக இருந்தமையினால் முத்தமிழ் என்று தமிழைப் பாராட்டிச் சொல்வது வழக்கம்.*

## முருகனது தமிழ்க் காதல்

அந்த முத்தமிழின்பால் முருகப் பெருமானுக்குக் கரையில்லாக் காதல் உண்டு. தமிழால் புகழ்கிறார்கள் என்பதால் அல்ல. முத்தமிழால் வைதாலும் வசவு என்று பார்க்க மாட்டான்; அது தமிழ் அல்லவா என்று நினைத்து இன்புறுவான்.

பல காலத்திற்கு முன் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் ஒரு பெரியார் அங்கத்தினராக இருந்தார். ஏழாம் எட்வர்டு இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலம். அப்போது வேல்ஸ் இளவரசர் கல்கத்தாவுக்கு வந்தார். அப்போது இந்தியாவின் தலைநகரம் கல்கத்தா. இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் அடங்கியிருந்ததால், கல்கத்தாவுக்கு வந்து இறங்கிய இளவர சருக்குப் பெரிய வரவேற்பு நிகழ்ந்தது. கன்னியா குமரியிலிருந்து இமயமலை வரையில் உள்ள பாரத நாட்டின் எல்லாப் பாகங்களி லிருந்தும் போலீஸ்காரர்கள் கல்கத்தா வந்து குவிந்தார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் பலர் போயிருந்தார்கள். இவர்களுக்கு, அங்கே எல்லோரும் இந்தி, ஆங்கிலம் பேசுவதைக் கேட்டுக் கேட்டு அலுத்துவிட்டது. 'தமிழில் யாராவது பேச மாட்டார்களா? தமிழ் பேசுகிற முகம் கண்ணில்படாதா?' என்ற ஏக்கம் உண்டாகிவிட்டது.

முன்னே சொன்ன அறிஞர், மகனை அழைத்துக் கொண்டு கல்கத்தாவுக்குப் போனார். பெருங்கூட்டத்தில் அவர்கள் போகும் போது இரு பக்கமும் அணி வகுத்து நின்ற போலீஸ்காரர்களுள் ஒருவன் தன் கால் பூட்ஸினால் பையனின் காலை மிதித்து விட்டான். "அட முட்டாள்!" என்று அந்தப் பையன் திட்டினான். அதைக் கேட்டவுடனே போலீஸ்காரன், "தம்பி நீ எந்த ஊர்?" என்று அன்போடு அருகில் வந்து கட்டிக் கொண்டான். அவன் தன் செவியில் தமிழ் விழாதா என்று ஏங்கிக் கிடந்தவன். பையன் தமிழில் அவனை வைதபோதிலும், அவன் அதை வசவு என்று பார்க்கவில்லை. அது தமிழ் என்று உணர்ந்தான். ஆதலால் அவனை அன்போடு தட்டிக் கொடுத்து அணைத்தான். வைதாரையும் வாழ வைக்கிற அன்பு அவனிடம் இருந்தது. 'தமிழ் முகத்தைப் பார்க்க மாட்டோமா, தமிழ்ச் சொல்லிக் கேட்க மாட்டோமா!' என ஏங்கியிருந்த போலீஸ்காரனுக்கு, "அட முட்டாள்" என்ற வசவுச் சொல்லும் இனிமையாகத் தோன்றி, உள்ளத்தில் அன்பு

கொப்புளிக்கச் செய்தது. அதைப் போலவேதான் முருகனும் முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கிறான்.

## பழைய நினைவு

தமிழில் வைத வசவு முருகனுக்கு இனிமையாக இருக்க மற்றொரு காரணமும் உண்டு. பொதுவாக ஒருவரோடு ஒருவர் பழகும்போது முதல் முதலாக நம் மனத்தில் பதிகின்ற எண்ணம் எதுவோ அது, எப்பொழுதும் உள்ளத்தே நின்று கொண்டிருக்கும். இதைத்தான், "First impression is the best impression" என்று ஆங்கிலத்தில் கூறுவர். முதல் முதலில் ஒரு நண்பனைச் சந்தித்துப் பழகுகிறோம். அப்போது அவன் சிறிய புத்தகம் ஒன்றைக் கொடுக்கிறான். அந்தப் புத்தகம் நமக்கு முதலில் வந்ததாதலின் அதனிடம் அபிமானம் அதிகம் இருக்கும்.

நல்ல மணமுள்ள மலர்களை அணிகின்ற குழலையுடைய வள்ளியை வேட்டு முருகன் தினைப்புனத்துக்கு ஓடினான். அப்போது அவனிடம் வள்ளி பேசினாளா? இல்லை. அவள் வாயிலிருந்து ஒரு சொல் வராதா என அவன் ஏங்கி எத்தனையோ காரியங்கள் செய்தான். அவளுக்குக் கோபத்தை மூட்டினான். வள்ளி மலை யிலே ஆலோலம் பாடிக் கிளியை ஓட்டிக் கொண்டிருந்த அவளிடம் அவன் மூட்டிய கோபம், ''ஏடா, வேடா, மூடா, போடா'' என்ற வார்த்தைகளை அவள் வாயிலிருந்து உதிரச் செய்தது. அவள் பேசமாட்டாளா என ஏங்கிக் கிடந்த முருகனுக்கு அந்தச் சொற்கள் வசவாகவா தோன்றின? பேசாமல் இருந்த வள்ளி பேசிவிட்டாளே என்று மகிழ்ச்சியினால் துள்ளிக் குதித்தான். அந்த வசவை வாங்கிக் கொண்டு, ''நம்மையும் பார்த்து இவள் பேசினாளே!'' என்ற நினைவில் மெய்ம்மறந்து நின்றான். யாரா வது முருகனை வைதால், 'இந்த மாதிரிதானே வள்ளி நம்மை வைதாள்?' என்ற கிளுகிளுப்பு அவனுக்கு உண்டாகிறது. வள்ளி யின் வாயிலிருந்து அவன் கேட்ட முதல் பேச்சு, தண்டமிழ் வசவு. அது அவனுக்கு இன்பத்தை அளித்தது. முத்தமிழால் வைதாலும், அது வசவு அல்லவா என்று நினைக்காமல், வள்ளி முதல் முதலாகப் பேசிய பேச்சுப் போன்றதல்லவா என்ற உணர்ச்சியில் கிளர்ச்சி உண்டாகி அருள் புரிகிறான். இதை நினைந்தே,

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையும்அங்கு வாழவைப்போன்

என்று இரண்டையும் இணைத்துச் சொன்னார். பின்னாலே உள்ள தற்கு முதலில் சொன்னது காரணம்.

## குற்றம் காணா அன்பு

மற்றொன்று: இணக்கமான அன்பு உடையவர்கள் எந்தப் பொருளிடத்தில் அன்பு வைக்கிறார்களோ, அப்பொருளிடத்தில் உள்ள குறைகளை மறந்து விடுவார்கள். இது தூய அன்புக்கு அறிகுறி. நம் வீட்டுக் குழந்தை மூக்கை ஒழுக விட்டுக் கொண் டிருந்தால் அது நமக்கு அருவருப்பை உண்டாக்குவது இல்லை. பக்கத்து வீட்டுக் குழந்தையானால் வெறுக்கிறோம். இரண்டின் மூக்கும் ஒழுகுகின்றன. ஆனால் ஒன்று நம் அன்புக்கு உரியது. ஆகவே, அதனிடத்தில் உள்ள குற்றத்தை நாம் பாராட்டுவதில்லை. **''குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை''** என்பது பழமொழி. நாம் எத்தனைக்கெத்தனை அன்பு பண்ணுகிறோமே, அத்தனைக்கு அத்தனை குற்றத்தை மறக்கிறோம். நம்மிடத்தில் நமக்கு அளவற்ற அபிமானமும் அன்பும் இருக்கின்றன. அதனால் நம்முடைய குற்றம் நமக்குத் தெரிகிறது இல்லை. பிறருடைய குற்றம் எப் பொழுது மறைய ஆரம்பிக்கிறதோ, அப்போது அவர்களிடத்தில் அன்பு உண்டாகிறதென்று தெரிந்து கொள்ளலாம்.

தமிழால் தன்னை அணுகுகிறவர்களின் குற்றம்கூடத் தெரியாத அளவுக்கு முருகனுக்கு என்ன அவ்வளவு விருப்பம்? முருகன் எல்லா உலகத்திற்கும் தலைவன்; அப்படியிருக்கத் தமிழ் நாட்டு மக்களின் மொழியாகிய தமிழிடத்தில் மட்டும் அத்தனை விருப்பம் உண்டாகக் காரணம் என்ன?

## தமிழ்நாடும் முருகனும்

பல மூர்த்திகளாகப் பக்தர்கள் வழிபடும் தெய்வம் ஒன்று தான். அந்தத் தெய்வமே முருகன் என்ற கோலத்தோடு வருகிறது. அந்தக் கோலத்தை நன்றாக உணர்ந்து பாராட்டுகிறார்கள் தமிழர்கள். முருகனுக்கு வேறு எங்கும் கிடைக்காத மதிப்புத் தமிழ்நாட்டில்

கிடைக்கிறது. அதனை விரும்பும் இடத்தில்தானே அந்தக் கோலத்தில் இருப்பவன் அதிக விருப்பம் பூண்டு இருப்பான்?

''டை'' கட்டிக் கொண்டு, நான்கு கை உடைய கறுப்புச் சட்டை அணிந்து தலையில் பெரிய தலைப்பாகையுடன் ஒருவர் போகிறார். அந்தக் கோலத்தை யார் மதிக்கிறார்கள்? அக்கோலத் திற்கு வீட்டிலே மதிப்பு இல்லை; வீதியிலும் இல்லை. ஆனால் நீதி மன்றத்தில் மதிப்புக் கிடைக்கிறது. அதே போல் எல்லா நாட்டுக்கும் பொதுவானவன் முருகனாகிய கடவுள் என்றாலும், அவனுடைய முருகக் கோலத்திற்குத் தமிழ் நாட்டில்தான் பெருமதிப்பு இருக்கிறது. ஆறுமுகமும் பன்னிரு திருக்கரங்களும் உடையவனாகி, வேலும் வில்லும் தாங்கி, மயில் மேல் வரு கின்ற பெருமானை வாழ்த்தி, வணங்கி அன்பு செய்கிறவர்கள் தமிழர்களே. ஆதலால் அவன் அவர்களிடம் கருணை கொண்டு தன் அருள் விளையாடல்களைப் புரிகிறான். ''குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்'' என்பது ஒரு பழமொழி. முருகனோ குழந்தைக் கோலங் கொண்ட தெய்வம். அவனைத் தமிழ்நாட்டில் கொண்டாடுகிறார்கள். அதனால் அந்நாட்டு மக்களிடத்தில் அன்பு கொண்டவனாக இருக்கிறான்.

## கார்த்திகேயன்

வடக்கே உள்ளவர்களுக்கு முருகன் என்ற பெயர் தெரியாது. சுப்பிரமணியன் என்ற பெயர் ஓரளவு தெரியும். பெரும்பாலும், ''கார்த்திக்'' என்று சொல்வார்கள். கார்த்திகேயன் என நாம் சொல்லும் அந்தச் சொல்லே அப்படி வழங்குகிறது. அந்த நாட்டில் முருகனைப் பிரம்மசாரி என்று நினைக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல; பெண்கள் முருகனைத் தரிசிப்பது இல்லை.

நான் பூனாவுக்குப் போயிருந்தேன். அந்நகரை அடுத்து ஒரு மலை இருக்கிறது. அதற்குப் பார்வதி மலை என்று பெயர். அங்கு முருகப் பெருமான் ஆறுமுகங்களோடு மயிலின்மீது தனியே எழுந்தருளியிருக்கிறான். கார்த்திகேயனுடைய திருவுருவம் பளிங் கினால் அமைந்தது. என்னுடன் வந்த நண்பர், ''கார்த்திகேயருக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை. அவர் பிரம்மசாரி. யாராவது பெண் வந்தால் அவளை அவர் பற்றிக் கொள்வாராம். ஆகை யினால் அவரைப் பெண்கள் வந்து தரிசிப்பதில்லை'' என்றார்.

எனக்கு உடனே ஓர் எண்ணம் உண்டாயிற்று. ''தமிழ் நாட்டு வள்ளியம்பெருமாட்டியைக் கண்டுகளித்த கண்ணால் வடநாட்டுப் பெண் யாரையும் பார்ப்பது இல்லை என்று இருக்கின்றாயா, முருகா?'' என்ற கருத்தை வைத்து ஒரு கவி பாடினேன்.

வங்காளத்திலும் கார்த்திகேயன் பிரம்மசாரி என்ற கருத்தே நிலவுகிறது. உலகம் யாவும் சக்தி மயம் என்ற கருத்தை விளக்க ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்கிறார். ஒருநாள் முருகக் குழந்தை ஒரு பெண் பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தானாம். விளையாட்டில் அவன் கை நகம் பூனையின் மேல் கீறிவிட்டது. விளையாட்டு முடிந்து,''அம்மா'' என்று தன் தாயினிடம் ஓடிப் போன போது, ''வாடா, குழந்தை'' என அவனை இரு கைகளையும் நீட்டி வரவேற்றாள், பரமேசுவரி. அப்பொழுது பார்த்தால், பிராட்டியின் மேலும் நகத்தின் கீறல் இருந்ததாம். ''இது என்ன அம்மா,'' என்று கேட்டதற்கு, ''நீ பூனையோடு விளையாடினாய் அல்லவா? உன் நகம் பூனையின் மேல் பட்டது; என் மேலும் பட்டது'' என்று சொன்னாளாம். முருகனுக்கு அப்போது உலகத்தில் உள்ள பெண் இனம் எல்லாம் அம்மாவே என்ற உண்மை தெரிந்ததாம். ''உலகில் உள்ள எல்லாப் பெண்களும் அம்மாவாக இருப்பதால் நான் யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன்'' என்று பிரம்மசாரியாகவே இருக்கிறானாம். இந்தக் கதையைப் பரமஹம்சர் சொல்லி, ''சர்வம் சக்தி மயம் ஜகத்'' என்ற தத்துவத்தை நிலை நாட்டுகிறார்.

ஆகவே, முருகன் வள்ளிமணாளனாக இருக்கும் கோலம் வடநாட்டவர்களுக்குத் தெரியவில்லை. வள்ளி மணாளனாக வரும் முருகப் பெருமானின் திருக்கோலத்தை வழிபடும் வழக்கம் இத் தமிழ் நாட்டில்தான் இருக்கிறது. மிகப் பழங்காலம் முதற் கொண்டே முருகனை இந்நாட்டுத் தெய்வமாகத் தமிழர்கள் வழி படுகிறார்கள்.

## பரிபாடலில் கண்ட செய்தி

பரிபாடல் என்ற நூலில் ஒரு புலவர் தமிழ் மரபில் முருகனுக் குள்ள அபிமானத்தைச் சொல்கிறார். திருப்பரங் குன்றத்தில் ஒரு சண்டை நடக்கிறது. கொலைச் சண்டை நடக்கவிலை; இரத்தம்

ஆறாக ஓடவில்லை. வாக்குச் சண்டை நடக்கிறது; கவி இன்ப ரசம் ஓடுகிறது.

தேவசேனையின் கல்யாணம் திருப்பரங்குன்றத்தில் நடந்த தென்பது ஐதிஹ்யம். அங்கே தேவலோக வாசிகளும், பூலோக வாசிகளும் கூடி இருக்கிறார்கள். தேவசேனையின் கூட்டத்தார் ஒரு கட்சியாகவும், தமிழ்நாட்டுப் பெண் வள்ளிநாயகியைச் சார்ந்தவர்கள் ஒரு கட்சியாகவும் இருக்கிறார்கள். இரண்டு சாராரும் வாக்கு வாதம் செய்கிறார்கள். கல்யாணம் நடக்கும் போது பழைய காலத்தில் இப்படிச் சம்பந்திகள் வாக்குவாதம் செய்வதுண்டு. ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வார்கள். பாட்டிலே சிவபிரானுக்கும் திருமாலுக்கும் வாக்குவாதம். லட்சுமிக்கும் பார்வதிக்கும் வாக்குவாதம் என்று சில உண்டு. அது போலத் திருப்பரங்குன்றத்தில் தேவசேனையின் கட்சிக்கும், வள்ளி நாயகியின் கட்சிக்கும் வாக்குவாதம். இந்தப் போர் இன்பப் போராக நடக்கிறது. தேவசேனையைச் சேர்ந்தவர்கள் நான்மறை முனிவர்; ''முருகன் தேவர்களுக்கு உரியவனாக இருக்கிறான்'' என்று பேசுகிறார்கள்.

வள்ளியைச் சார்ந்தவர்கள், ''அதெல்லாம் உங்கள் கட்சி; முருகன் எங்கள் தமிழ்நாட்டுப் பெண் வள்ளியை, தமிழ் இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளபடி முதலில் களவுக்காதல் செய்து பின்னர்க் கல்யாணம் செய்து கொண்டான். தமிழ்நாட்டு இலக்கணத்திலே இதற்குத் தனி வரையறை உண்டு. வேதம் படித்த உங்களுக்கு அது தெரியாது'' என்கிறார்கள்.

> ''நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
> வாய்மொழிப் புலவீர்! கேண்மின், சிறந்தது
> காதற்காமம் – – –
> தள்ளப் பொருளியல்பில் தண்டமிழ்ஆய் வந்திலார்
> கொள்ளார்இக் குன்று பயன்.''

'தமிழை ஆராய்ச்சி பண்ணாதவர்களுக்கு இந்த அருமை தெரியாது. என்ன பைத்தியக்காரத்தனம் என்று நினைப்பார்கள்' என்கிறார்கள். வாழ்க்கையில் இன்பம் தரக் கூடிய தூய காதலின் தன்மையைத் தமிழ் நூல் வரையறை செய்ததுபோல வேறு எதுவும் செய்யவில்லை. முருகப் பெருமான் வள்ளிநாயகியின்

காதலை வேண்டித் தினைப்புனத்தில் வந்து காத்திருந்து மணந்தது, தமிழர் கூறும் களவுக் காதலை மேற்கொண்ட விளையாடல். கற்பு மணம் என்பது முன்னாலே கல்யாணம் செய்து கொண்டு பின்னாலே காதல் மீதூர்ந்து அன்பு வாழ்க்கை வாழ்வது. களவு மணம் என்பது முன்னாலே பழகிக் காதல் செய்து அன்பு மீதூர்ந்து இருவரும் மணந்து கொள்வது. களவு மணம் செய்து கொள்வது தமிழர் மரபு. தமிழினிடம் பெருங்காதல் கொண்ட முருகன் தமிழ்நாட்டு வள்ளிபால் காதல் கொண்டான். தமிழின்பால் உள்ள காதல் அதனாலும் தெரிகிறது. அதனாலே அந்தத் தமிழால் வைதாலும் அவன் அருள் செய்வான்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன், முத்தமிழல்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்.

## நிந்தாஸ்துதி

வைவதே வாழ்த்தாகிற சந்தர்ப்பம் வேறு ஒன்று உண்டு. வடமொழியில் ''நிந்தா ஸ்துதி'' என்று சொல்லுகிற மாதிரியே தமிழிலும் உண்டு. இறைவனைப் பார்த்து, கூத்தன், பித்தன், குறை மதியன் என்றெல்லாம் சொல்லும் போது குறைவு படுத்துவது போல இருந்தாலும், பொருளைப் பார்ப்பின் புகழாக இருக்கும். குறைமதியன் என்றால் குறைவான அறிவுடையவன் என்று தோன்றும். ஆனால் பூரண சந்திரனல்லாமல் கலையில் குறைந்த பிறையை அணிந்தவன் என்பதே அதன் பொருள். இது நிந்தாஸ்துதி. பழிப்பது போலப் புகழ்தல் என்று தமிழில் சொல்வார்கள். இது ஓர் அலங்காரம்.

## காளமேகத்தின் பாடல்

காளமேகப் புலவர் நிந்தாஸ்துதியில் வல்லவர். அவர் ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் இருட்டி விட்டது. அங்கே ஒரு பிள்ளையார் கோயில். அக்கோயிலின் திண்ணைமீது தம் கையில் இருந்த முடிச்சை வைத்துக்கொண்டு படுத்து உறங்கிவிட்டார். காலையில் எழுந்து பார்த்தால் அவர் வைத்திருந்த முடிச்சைக் காணவில்லை. அவருக்குக் கோபம் வந்தது. ''பிள்ளையாரே, உம்மை நம்பித் தானே நான் இங்கே

படுத்தேன்? என் முடிச்சை நீர் திருடிக் கொண்டு விட்டீரே!'' எனக் கேட்கிறார். நமக்குக் கோபம் வந்தால் நாம் வைவது கேட்கச் சகிக்காமல் இருக்கும். அவர் புலவராதலாலே அவர் கோபம் பாட்டாக வந்தது; ''என்னையா பிள்ளையாரே, பேசாமல் இருக்கிறீர்? உம்மைத் தவிர வேறு யார் இங்கே வந்தார்கள்? நீர்தாம் என் முடிச்சை அவிழ்த்துக் கொண்டு விட்டீர். உம்முடைய தம்பி யார் என்று எனக்குத் தெரியும். தமிழ்நாட்டுப் பெண் வள்ளியைத் திருடிக் கொண்டு போனவன் அவன். உம் தாயாருடன் பிறந்த மாமன் ஒரு வம்பன்; மாமாயன்; அவன் நெய் திருடி. நீரோ இப்போது என் முடிச்சைத் திருடி விட்டீர். எப்படி ஐயா கோத்திரத்திற்கு உள்ள குணம் உம்மைவிட்டுப் போகும்?'' என்று கேட்கிறார்.

''தம்பியோ பெண்திருடி தாயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடி மாமாயன் – அம்புவியில்
மூத்தபிள்ளை யாரே, முடிச்சவிழ்த்தீர்; போமோ
கோத்திரத்திற் குள்ள குணம்?''

ஏசுவதைப் போலப் பாட்டு இருந்தாலும் இது வசவு அன்று; நிந்தாஸ்துதி. வசவு போன்று தோன்றும்படி இறைவன் புகழை முத்தமிழால் சொல்கிறார்கள் புலவர்கள். அந்தத் தமிழைக் கேட்பதில் இறைவனுக்கு விருப்பம் உண்டு. முருகனும் அத்தகைய வசவைக் கேட்டான். அதைச் சொன்னவர்களை வாழ வைப்பான்.

முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்போன்.

## மாமன் புகழ்

அத்தகைய முருகனுடைய உறவினர்கள் யார்? அதைப் பின்வருகின்ற அடிகளில் சொல்கிறார் அருணை முனிவர்.

அருணகிரி நாதருக்கு விநயம் தெரியும். ஒருவரை எப்படி எப்படிப் புகழ்ந்தால் மகிழ்விக்க முடியும் என்கிற சாதுரியம் தெரியும். மாப்பிள்ளையிடம் போய் மாமனாரை இழிவுபடுத்திப் பேசினால் அது எப்படி விளையும் என்று அவருக்குத் தெரியாதா? மாமனாரைக் குறைவு படுத்திப் பேசினால், நம் தந்தையைக் குறைவு படுத்திப் பேசுகிறார் என்று பெண்ணுக்குக் கோபம்

உண்டாகும். அவளுக்குக் கோபம் வந்தால் ஊடல் விளையும்; அதனால் மாமனாரைக் குறை சொன்னவர்மேல் மாப்பிள்ளைக்குக் கோபம் வருவது இயல்புதானே? மாமனாரைப் புகழ்ந்தால் மாப்பிள்ளைக்கு மகிழ்ச்சி உண்டாகும்.

முருகப் பெருமானுடைய அன்பைப் பெற வேண்டும் என்று அருணகிரிநாதர் விரும்புகிறார். அது மிக எளிதில் கிடைக்க வேண்டுமானால் வள்ளியைப் பிடித்தால்தான் நடக்கும். அவளுக்கு மகிழ்ச்சி உண்டானால், முருகனுக்கும் அவர்பால் அன்பு உண்டாகும். பொதுவாகப் பெண்களுக்கு அவர்களுடைய தகப்பனாரைப் புகழ்ந்து சொன்னால் மகிழ்ச்சி உண்டாகிவிடும். இதை உணர்ந்து கொண்டவர் அருணகிரிநாதர். ஆகவே தம் முடைய பாட்டிலே நேரே முருகனைப் பாடினாலும்கூட, அவன் திருமாலுக்கு மாப்பிள்ளையாக இருப்பதனால் பின் இரண்டடி யில் ராமசந்திர மூர்த்தியைப் புகழ்ந்து சொல்கிறார்.

வெய்ய வாரணம்போல்
கைதான்இருபது உடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன்.

## ராவண சங்காரம்

ராமசந்திர மூர்த்தி ராவண சங்காரம் பண்ணினார். ராவணன் பத்துத் தலையும் இருபது கைகளும் உடைய அரக்கன். பலத்துக்கு யானையை உவமானம் சொல்வது வழக்கம். இங்கே வெய்ய வாரணத்தை ராவணனுக்கு உவமை கூறுகிறார். வெய்ய வாரணம் – மதம் பிடித்த யானை. மதம் பிடித்த யானை எவ்வளவு நாசத்தை விளைவிக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? மதம் யானைக்குக் காமம் மிகும்போது வரும். ராவணன் காம மிகுதியினாலே அழிந்து போனான். யானை பலமுடையதாக இருப்பினும் காமம் மிகுந்தால் அழிவு வேலையைச் செய்கிறது; அதனால் அடிபடுகிறது. ராவணன் அளவில்லாத தவ வலிமை உடையவன். மிக மிகச் சிறந்த தவம் உடையவர்களாக இருப்பினும் காமம் மிகுந்துவிட்டால், அதனாலேயே அவர்கள் அழிந்து போவார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டு ராவணன். மதம் கொண்ட யானையைப் போலக் காம

மிகுதியினாலே கண் தெரியாமல் இருந்தான் ராவணன். இருபது கைகளும் பத்துத் தலைகளும் இருந்த போதிலும் அவனுக்குக் காமம் மிகுந்த போது, அவை பயன்படாமல் போய்விட்டன.

தசமுகம் கொண்ட ராவணன் உலகத்தை எல்லாம் அடக்கி ஆண்டான். பத்துத் திசைகளிலும் அவன் செல்வாக்கைச் செலுத்தினான். பத்துத் தலை உடையவன் என்பது இந்த உண்மையைக் காட்டும் சின்னம்.

அது மட்டும் அல்ல. மனந்தான் ராவணன். கன்மேந்திரியங்கள் ஐந்து; ஞானேந்திரியங்கள் ஐந்து. இந்தப் பத்து இந்திரியங்களின் உதவியைக் கொண்டு மனம் ஆட்சி புரிகிறது; நம்மை ஆட்டி வைக்கிறது; பல செயல்களைப் புரிகின்றது. மனம் ஆகிய ராவணன் பத்து இந்திரியங்கள் ஆகிய பத்துத் தலைகளை உடையவனாக இருக்கிறான். எல்லோருடைய மனங்களும் பத்துத் தலை ராவணர்களே. பத்துத் தலை ராவணனின் ஆட்டம் குலைய வேண்டுமானால் ராமசந்திர மூர்த்தியைத் தியானம் பண்ண வேண்டும், 'ராமன் ராவணனுடைய பத்துத் தலையையும் கத்தரித்துத் துண்டாகி விழும்படி அம்பை எய்தான். அவனுடைய மருமகன் முருகன்' என்று அருணகிரிநாத சுவாமி ராமசந்திர மூர்த்தியின் பிரதாபத்தைச் சொல்லி, முருகனை நமக்கு அறிமுகம் பண்ணி வைக்கிறார்.

**வெய்ய வாரணம்போல்**
**கைதான் இருபது உடையான் தலைபத்தும் கத்தரிக்க**
**எய்தான் மருகன்.**

ராவணனை எடுத்த எடுப்பில், ''வெய்ய வாரணம் போல்'' என்றார். யானைக்குப் பிரதானமானது எது? கை; துதிக்கை. ஆகவே யானை என்றவுடன் கை நினைவுக்கு வருகிறது. ''வெய்ய வாரணம் போல் கைதான் இருபது உடையான்'' என்றார். மதம் பிடித்த யானை தன் துதிக்கையினால் எல்லாவற்றையும் பற்றி இழுத்து நாசம் செய்யும். மற்றவர்கள் சுகத்திற்கு எவை பொருளாக இருக்கின்றனவோ, அவற்றை வாரி எடுக்கிற கைகள் ராவணனுடைய இருபது கைகள். சீதையை அந்தக் கைகள்தாமே எடுத்துச் சென்றன? மதங்கொண்ட யானையை உவமை கூறுவது எவ்வளவு பொருத்தம்!

## உமை குமரன்

மாமாவைச் சொன்னவர் அந்த உறவுக்குக் காரணமான அம்மா வையும் சொல்கிறார். மாமன் உறவு அம்மாவின் மூலமாகத் தானே வருகிறது?

உமையாள் பயந்த இலஞ்சியமே

உமையாள் பெற்ற குழந்தை முருகன். இலஞ்சியம் என்ற சொல் மிகவும் அருமையானது. இப்பொழுது கடலூர்ப் பக்கத்தில் குழந்தையை இலஞ்சியம் என்று அருமை பாராட்டிச் சொல் கிறார்கள்.

''வள்ளியை மணந்து கொண்டவன் முருகன்; அதனால் தமிழில் ஆர்வம் உடையவன்; முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கிறவன். ராவணசங்காரம் செய்த ராமசந்திர மூர்த்தியின் மருமகன். உமையவளின் அருமைக் குழந்தை'' என்று முருக னுடைய புகழை அலங்காரமாகச் சொல்கிறார். அருணை முனிவர்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
   வேட்டவன், முத்தமிழால்
வைதா ரையும் அங்கு வாழவைப்
   போன்,வெய்ய வாரணம்போல்
கைதான் இருபது உடையான்
   தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன், உமையாள்
   பயந்த இலஞ்சியமே.

(வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலையை அணிந்த கூந்தலை யுடைய வள்ளி நாயகியை விரும்பி மணந்து கொண்ட முருகன், மூன்று தமிழினால் வைதவர்களையும் அப்பொழுதே வாழ வைப்பவன்; மதங்கொண்ட யானையைப் போலக் கைகள் இருபது உடைய ராவணனுடைய தலைகள் பத்தும் அற்று விழச் செய்யும்படி அம்பை எய்த இராமபிரானுடைய மருமகன்; உமாதேவி பெற்ற அருமைக் குழந்தை.

வள்ளியை வேட்டவன்: எழுவாய். வாழவைப்போன், மருகன், இலஞ்சியம் என்ற மூன்றும் பெயர்ப் பயனிலைகள்.

மொய் – வண்டு மொய்க்கும். தார் என்பது பெரும்பாலும் ஆடவர் மார்பில் அணியும் மாலையைக் குறிப்பது; ஆயினும் இங்கே கூந்தலில் சூடும் மாலைக்கு வந்தது. வேட்டல் – விரும்புதல், மணம் செய்

*கொள்ளுதல்; இங்கே விரும்பி மணம் செய்து கொள்ளுதல் என்று பொருள் கொள்வது சிறப்பு. முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவாக உள்ள தமிழ். வைதாரையும்: உம்மை - உயர்வு சிறப்பு. வாழ்த்தினாரை வாழவைப்பதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அங்கு என்றது அப்பொழுதே என்ற பொருளில் வந்தது. வெய்ய வாரணம்: வெம்மை காம மிகுதியால் உண்டான மதத்தைக் குறிப்பித்தது. வாரணம் - யானை. வெய்ய வாரணம் கையினாலும், காமத்தினாலும் ராவணனுக்கு உவமையாயிற்று. தான் கை இருபதுடையான் என்று, தான் என்பதை இராவணனுக்குக் கொள்க. கத்தரிக்க - துண்டு படுத்த, எய்தான் - அம்பை எய்தவன். பயந்த - பெற்ற. இலஞ்சியம் - அருமைக் குழந்தை.)*

# பலித்த விண்ணப்பம்

கந்தர் அலங்காரம் 108 பாடல்களை உடையதாக இப்போது இருக்கிறது. 108 மணிகள் கொண்ட ஜபமாலையைப் போல இருக்கிறது. குஞ்சமாகிற காப்புப் பாட்டு ஒன்றும், நூலாக 100 பாடல்களும், நூறுக்குமேலும் பொங்கி வழிந்த ஏழு பாடல் களும் ஆக 108 பாடல்கள். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. முருகன் கருணை நோக்கைப் பற்றிச் சொல்லும் சிறப்புடையவை சில. அடியார்களின் பெருமையைச் சொல்வன சில. நம்முடைய குற்றங்களை நினைக்கச் செய்பவை சில. அருணகிரியார் தம் அநுபவத்தைச் சொல்வன சில. இப்பொழுது சொல்லப் போகிற பாட்டு அருணகிரிநாதருடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது.

## ஆனந்த வாழ்வு

அருணகிரி நாதர் இறைவனால் ஆடகொள்ளப் பெற்றவர். அவனுடைய அருளால் கிடைத்த பேரானந்தத்தை இந்த உடம்பில் இருக்கும்போதே பெற்றார். மற்ற மக்கள் உயிர் உடம்மை விட்டுப் பிரிந்த பிறகு, மரணம் அடைந்த பிறகுதான், பேரின்ப அநுபவம் பெற முடியும். அருணகிரிநாதர் தம் பூத உடம்பு அழிவதற்கு முன்னமேயே ஆனந்த வாழ்வு பெற்றார். அவர் கிளியாக மாறி எம்பெருமான் திருக்கரத்தில் இருக்கிறார் என்பது ஒரு வழக்கு. மற்றவர்கள் மரணம் அடைகின்ற மாதிரி அருணகிரிநாதர் மரணம் அடையவில்லை என்ற ஒன்றை நினைவு வைத்துக் கொண்டால் போதும். அந்த நிலை அவருக்கு எப்படி வந்தது? சித்தர்கள் மரணம் அடையாதிருக்கப் பல விதமான மூலிகைகளை உண்டு பல காலம் வாழ்ந்திருப்பார்கள். பூத உடம்பு அழிந்து போக உயிர் மரணம் அடையும் வாழ்வு கூடாது என்று அருணகிரிநாதர் விரும்பினார். அந்த விருப்பதைக் காட்டுவது இப்போது சொல்லப் போகும் பாட்டு.

## அநாயாச மரணம்

உடம்போடு வாழ்கின்ற உயிர்கள் மரணம் அடைவதற்கு முன் நரை, திரை, மூப்பு என்பன வருகின்றன. பிணி வந்து நலிகின்றது. உடம்பில் அப்போது பல வகை வேதனைகள் உண்டாகின்றன. அதனால் பலர், "கடவுளே, எனக்கு அநாயாசமான மரணம் கிடைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்வார்கள். மரணமே வேண்டாம் என்றால் அது நடக்காது. ஆதலால் அநாயாசமாக, துன்பம் இன்றி, உயிர் போக வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்கள். இந்த உலகத்தில் நுகர வேண்டிய அநுபவங்களை எல்லாம் பெற்று, ஒவ்வொரு நாளும் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகிறவர்கள், "கடவுளே, அநாயாசமாக என்னைக் கொண்டுபோக மாட்டாயா?" என்று கேட்பது நம் காதில் விழுகிறது உண்டு. அருணகிரியார் அப்படிக் கேட்கவில்லை. "இந்த உடம்பு இருக்கும்போதே என்னைக் காத்தருள வேண்டும்; இன்ப வாழ்வை அருள வேண்டும்" என்று கேட்கிறார். அவர் கேட்கிற இன்பம் மோட்ச இன்பம். "மோட்சம் என்பது உடம்போடு இருக்கிற வரையிலும் கிடைக்காது. உடம்பை விட்டு உயிர் புறப்பட்ட பிறகே கிடைக்கும்' என்று உலகிலுள்ள மதங்கள் சொல்கின்றன. இந்த நாட்டில் உள்ள சமயவாதிகளில் சிலரும் மோட்சம் என்பது இந்தப் பிறவிக்குப் பின்பே கிடைப்பது என்பார்கள்.

## வாழ்க்கையின் இன்பம்

சிலர், "செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்று இருக்கிறீர்களே! வைய வாழ்க்கைக்குப் பயன் அளிக்காத தெய்வம் எதற்கு? வான வாழ்வைப் பார்த்து வைய வாழ்வை ஏன் உருக்குலைத்துக் கொள்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். நாமும் அவர்கள் சொல்வது நியாயமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அருணகிரியார், ஞானசம்பந்தப் பெருமான் முதலியவர்கள் வைய வாழ்வை நினைக்காமலா வான வாழ்வை நினைந்து வாழ்ந்தார்கள்? வைய வாழ்வில் அவர்கள் ஒவ்வொரு கணமும் நன்றாக வாழ்ந்தார்கள்; புகழ் வாழ்வு வாழ்ந்தார்கள். நாமோ வாழத் தெரியாமல் வாழ்வில் ஒவ்வொரு கணமும் செத்துக் கொண்டிருக்கிறோம். "கோழை பலமுறை சாகிறான்"

என்பது ஆங்கிலப் பழமொழி. காலனை இக்கோழைகள் எதிர்த்து நிற்கமாட்டார்கள் என்பது இருக்கட்டும். போலீஸ்காரனுக்கு முன்னாலேகூட இவர்கள் நிற்கமாட்டார்கள்; அமீனாவுக்கு முன்னாலே நிற்க மாட்டார்கள்; கலெக்டர் முன்னாலே நிற்க மாட்டார்கள். இவர்கள் காலனை எதிர்த்து நிற்பது எங்கே? அருணகிரிநாதரைப் போன்றவர்கள் நம்மைப் போலக் கோழை அல்லர். யாருக்கும் எதற்கும் அஞ்சாமல் தம் கொள்கையை நிலை நாட்டி நன்றாக வாழ்ந்தவர்கள். இந்த வாழ்க்கையிலேயே இறையின்பத்தை நுகர்ந்தார்கள்.

"இத்தேகமொடு காண்பனோ"

என்று தாயுமானவர் ஏங்குகிறார். "இத்தேகம் இருக்கும்போதே சந்தேகம் இல்லாமல் எனக்கு உன்னுடைய திருவருள் பதிய வேண்டும். நான் சோறு சாப்பிடுவது போல, தண்ணீர் பருகுவது போல, வெற்றிலை மெல்லுவது போல உன்னுடைய திருவருளை நான் நுகர வேண்டும்" என்று ஞானிகள் வேண்டினர்.

## இறைவனை உணர்தல்

இறைவன் அருளை நாம் தெளிவாக உணரலாம் என்று மகாத்மா காந்தி சொன்னார். அவர் மகாஞானி என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் நம்மைப் போன்ற அஞ்ஞானியும் அல்ல. நல்ல அநுபவி. அவர் அநுபவத்திற்கும் அருணகிரிநாதருடைய அநுபவத் திற்கும் எத்தனையோ தூரம் இருக்கலாம். ஆனால் நம்மைக் காட்டிலும் மிகச் சிறந்த அநுபவம் உடையவர் மகாத்மா. அப்படிப் பார்க்க வேண்டும். நம்மை அருணகிரிநாதர் என்று எண்ணிக் கொண்டு, "காந்தி என்ன? அவர் வெறும் அரசியல் தலைவர்தாமே?" என்று சொல்லிவிடக் கூடாது.

எங்கள் ஆசிரியர் ஒன்று சொல்வார்கள். " 'ராமனும் கிருஷ்ண னும் என்ன, சாதாரண மனிதர்கள் தாமே? சிவபிரானைப் போன்றவர்களா?' என்று சில சைவர்கள் சொல்வார்கள். சிவனை நோக்க ராமன் தாழ்ந்தவனாக இருக்காலாம். நம்மைச் சிவனாக எண்ணிக் கொண்டு ராமனும் கிருஷ்ணனும் தாழ்ந்தவர்கள் என்று பேசலாமா? அப்பாவுக்குப் பக்கத்தில் இருப்பதனால் குழந்தை அப்பா ஆகிவிடுமா? நம்மைவிட ராமன், கிருஷ்ணன் உயர்ந்த

வர்கள் என்ற உண்மையை எண்ணி அவர்களிடம் மரியாதை வைக்க வேண்டும்'' என்று சொல்வார்கள்.

''நான் மற்றப் பொருள்களை உணர்கிற மாதிரி கடவுளுடைய இருப்பை உணர்கிறேன். உள்ளொலியை நான் கேட்கிறேன்'' என்று காந்தியடிகள் சொன்னார். அவர் சாதகம் எதுவும் பண்ண வில்லை. யோகம் பண்ணவில்லை. தம் வாழ்க்கை முழுவதும் சத்திய சோதனை செய்தார். அவர் இறைவனை உணர்ந்தார் என்றால் ஆண்டவனது பேரருளிலேயே கலந்து வாழ்ந்தவர்களான அருணகிரிநாதர், ஞானசம்பந்தப் பெருமான் முதலியவர்கள் கடவுளின் இன்ப அநுபவத்தை இகவாழ்விலே பெற்றார்கள் என்பதில் ஐயம் என்ன?

## வேண்டுகோள்

அருணகிரி நாதரும் தம் அநுபவ நிலையில் இன்ப நிறைவு பெற்றார். அதனைப் பெறுவதற்கு முன்னாலே வேண்டிக் கொண்ட வேண்டுகோள் இது: ''ஆண்டவனே, இந்த உடம்பு இருக்கும்போது நீ அருள் செய் அப்பா. இந்த உடம்பாகிய வீடு நெடுநாள் இராது என்று தெரியும். சின்னக் குடிசை இது. இரண்டு கால் நட்ட குடிசை. இந்தக் குடிசை குலைவதற்கு முன்னாலே நீ வந்து என்னைக் காத்து அருள வேண்டும். இந்த உடம்பை விட்ட பிறகு எனக்குக் கிடைக்கிற இன்ப அநுபவம் இந்த உடம்போடு இருக்கும்போதே ஏற்படவேண்டும்'' என்று தம் அவாவை வெளிப்படுத்திப் பிரார்த்தனை செய்கிறார். ''அப்படி அருளினால், கடவுளே, எந்தக் காலத்திலும் உன்னை மறக்க மாட்டேன்'' என்றும் சொல்கிறார். இந்த வேண்டுகோளைத் திருச்செங் கோட்டில் சமர்ப்பிக்கிறார்.

## திருச்செங்கோடு

திருச்செங்கோட்டு மலையின் மேல் விளக்காக உள்ள முருகனை நோக்கி விண்ணப்பித்துக் கொள்கிறார். கொங்கு நாட்டில் சேலம் மாவட்டத்தில் திருச்செங்கோடு என்பது ஒரு தாலூக்கா. அதன் தலைநகர் திருச்செங்கோடு. கொடிமாடச் செங்குன்றூர் என்று தேவாரத்தில் அதன் பெயர் வருகிறது. ஞானசம்பந்தப் பெருமான் அந்த ஊருக்குத் தொண்டர் கூட்டத்தோடு சென்றார்.

*அவர்களுக்குக் குளிர் சுரம் வந்தது. அதை நளிர் சுரம் என்றும் சொல்வார்கள். எந்த மருந்துக்கும் அந்த வெப்பு நோய் கட்டுப் படாமையால் சம்பந்தர் ஒரு பதிகம் பாடினார். நளிர் சுரம் நீங்கி விட்டது.*

## *அர்த்தநாரீசுவரர்*

*திருச்செங்கோடு மிகப் பழமையான தலம். அங்கு எழுந் தருளியுள்ள மூர்த்தி அர்த்தநாரீசுவரர். மாதிருக்கும் பாதியனாகிய கோலமே பழைய திருக்கோலம். இறைவன் உலகத்திற்கு அருள் செய்ய உருவம் கொண்டு அருளிய போது முதல் முதலில் அர்த்தநாரீசுவர உருவம் வந்தது. ஐங்குறுநூற்றில் பாரதம் பாடிய பெருந்தேவனார் அப்படிச் சொல்கிறார்.*

"நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே."

*மாணிக்கவாசகரோ அதனைத் தொன்மைக் கோலம் என்பார்.*

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக் கோலமே
நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

*என்று சொல்கிறார்.*

*உலகத்திற்கு முதலில் தோற்றிய கோலம் பாதி உமையும், பாதி ஆண்டவனுமாக அமைந்த அந்தத் திருக்கோலம்.*

## *செங்கோட்டு வேலவன்*

*அங்கே முருகனும் எழுந்தருளியிருக்கிறான். எல்லாச் சிவால யங்களிலும் முருகப் பெருமானுக்குக் கோயில் உண்டு. சில தலங் களில் முருகனுக்கு அதிகப் பெருமை இருக்கும்; மற்ற மூர்த்தி களுக்கு அவ்வளவு சிறப்பு இராது. தேவாரத்தில் பாடல் பெற்ற தலமாகத் திருப்பரங்குன்றம் இருந்தாலும் சிவபிரான் சந்நிதி அங்கே இருக்கிறது என்பது பெரும்பாலோருக்குத் தெரியாது. பிள்ளை கலெக்டரானால் அவருடைய குமாஸ்தாவைத் தெரிந்*

திருந்தாலும் தெரிந்திருக்கும்; தகப்பனாரைப் பலருக்குத் தெரியாது அல்லவா? அப்படி அந்தத் தலத்தில் பழைய பரமசிவம் இருக்கிறார். முருகனுக்கு உகந்த தலம், ஆறுபடை வீடுகளில் முதலாவது என்றே பலரும் அறிவார்கள். அப்படியின்றி முருகன், அம்மை, அப்பன் மூவருக்கும் சிறப்பு அமைந்த தலங்கள் சில உண்டு. வைத்தீசுவரன் கோயில் என்ற ஊரில் சிவபிரான் வைத்தியநாதப் பெருமானாக எழுந்தருளியிருக்கிறார். அம்பிகையாகிய தையல் நாயகியின் சந்நிதானத்தில் பேய்கள் ஆடிக் கொண்டிருக்கும். முருகனுக்கு முத்துகுமாரசுவாமி என்று திருநாமம். அவன் சந்நிதியிலே தொண்டர்கள் வந்து குழுமுவார்கள். இப்படி அந்த ஊரில் மூன்று பேரும் சமமான நிலையில் இருக்கிறார்கள். அதுபோலவே திருச்செங்கோட்டில் அம்மையப்பராகிய அர்த்தநாரீசுவரருக்கும் பெருமை. முருகனுக்கும் பெருமை. அங்குள்ள முருகனை, ''செங்கோட்டு வேலப்பன்'' என்பார்கள். அப்படியே பெயர் வைத்துக் கொள்வார்கள்; செங்கோடன் என்றும் வைத்துக் கொள்வதுண்டு. முருகனுடைய திருவுருவத்தில் வேலைத் தனியே சாத்த வேண்டிய அவசியமின்றி உருவத்தோடு சேர்ந்தே அமைந்திருக்கிறது.

## அருணகிரியார் ஈடுபாடு

அத்தலத்தில் அருணகிரிநாதருக்கு மிகவும் ஈடுபாடு. கந்தர் அலங்காரத்தில் அந்தத் தலத்தைக் குறித்து ஐந்து பாட்டுச் சொல்லியிருக்கிறார். திருப்புகழிலும் பல பாடல்கள் பாடியிருக்கிறார்.

அருணகிரியாருக்கு அத்தலத்தில் தனியான ஈடுபாடு உண்டென்பதற்கு மற்றொரு சான்று இருக்கிறது. கந்தர் அநுபூதி பாடும் போது அவர் இந்தப் பௌதிக உடம்பின் சம்பந்தம் இல்லாமல் எம்பெருமான் திருக்கரத்தில் கிளியாக அமர்ந்து பாடினாராம். பசுகரணங்கள் நழுவி, பதிகரணம் பெற்று, முருகன் பேசும் பேச்சையே, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போலத் திருவாய் மலர்ந்தார். அதுவே கந்தர் அநுபூதி என்பர். அதில் அருணகிரியார் வேறு எந்தத் தலத்தையும் சொல்லவில்லை. திருச்செங்கோட்டை மாத்திரம் சொல்கிறார்.

''நாகாசல வேலவ''

*என்று அத்தலத்தில் உள்ள முருகனைச் சொல்கிறார். இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சி பண்ணினேன். ஒன்று விளங்கிறது.* அந்தப் பாட்டுக்கும் கந்தர் அலங்காரத்தில் இன்று நாம் பார்க்கப் போகிற பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறது. இந்த அலங்காரப் பாட்டில் அவர் முருகனிடம் என்ன பிரார்த்தனை செய்து கொள்கிறார்? ''ஆண்டவனே, எல்லோரையும் போல நான் மரணம் அடையக் கூடாது. இந்தக் குடிசை குலைவதற்கு முன்னே வந்து நீ என்னைக் காத்தருள்வாய்'' என விண்ணப்பம் போடுகிறார். இந்த விண்ணப்பம் பலித்தது. அதனால் கந்தர் அநுபூதியில், ''என் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தாயே, அப்பனே! உனக்கு மிக்க வந்தனம்'' என்று நன்றியறிவுடன் பாராட்டுகிறார்.*

*கந்தர் அலங்காரப் பாட்டைப் பார்க்கலாம்.*

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
    வாழும் செழுஞ்சுடரே,
வை வத்த வேற்படை வானவ
    னே,மற வேன்உனைநான்;
ஐவர்க்கு இடம்பெறக் கால்இரண்டு
    ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
    னேவந்து காத்தருளே.

*இது அருணகிரியார் செய்து கொண்ட விண்ணப்பம்.*

## செழுஞ்சுடர்

*விளக்குப் போல இருக்கிறான் ஆண்டவன். விளக்கானது சுடர்விட வேண்டுமானால் அகல் இருந்தால் மட்டும் போதாது; நெய்யும், திரியும் வேண்டும். அது செழுமை இல்லாத விளக்கு. ஆண்டவனோ வேறு எதன் துணையையும் வேண்டாமல் சுயம் பிரகாசனாக இருக்கிறான். ''சூரியனுக்கு யாரும் உதவி செய்ய வில்லையே! அவன் சுயம்பிரகாசன் அல்லவா?'' என்று கேட்கலாம். ஆண்டவனது அருளாகிய திரியும், நெய்யும் இருப்பதனால்தான்*

---

★ **'பெரும்பெயர் முருகன்'** *என்னும் புத்தகத்தில் உள்ள 'நாகாசல வேலவன்' என்ற கட்டுரையையும் பார்க்க.*

அவன் ஒளி விடுகிறான். அகல் விளக்கையே பார்த்துப் பழகிய நாட்டுப்புறத்தான் சென்னபட்டினம் வந்தால் மின்சார விளக்கைப் பார்த்து வியக்கிறான். ''இந்த விளக்கு ஆச்சரியமாக இருக்கிறதே! திரி இல்லை; எண்ணெய் இல்லை. ஒன்றும் வேண்டாமல், தானே எரிகிறதே!'' என மலைப்பான். ஆனால் நமக்கு உண்மை தெரியும்; 'இந்தப் பல்பு சும்மா எரியவில்லை. மின் கம்பி போட்டிருக்கிறோம். மின்சார சக்தி அதனுள் ஓடுகிறது. அதனால் பல்பு எரிகிறது' என்பது தெரியும். அதைப்போல, நமக்குத் தெரியாவிட்டாலும் பெரியவர்கள் அறிந்து சொல்கிறார்கள்; சூரியனுடைய ஒளிக்கு இறைவனே காரணம் என்கிறார்கள்.

''அருக்கனிற் சோதி வைத்தோன்'' (திருவாசகம்)

என்று ஆண்டவனைப் புகழ்கிறார்கள். கதிரவனுக்கு ஒளியை வழங்கினவன் ஆண்டவன். எவன் எல்லாச் சோதிக்கும் மேலான சோதியாக இருக்கிறானோ, அவன்தான் தனிப்பெருஞ்சோதி; அருட்பெருஞ் சோதி; சுயஞ் சோதி; பரஞ்சோதி. அந்தச் செழுமை மிக்க சுடரான ஆண்டவன் பெரிய மலையாகிய திருச்செங் கோட்டின் மேல் ஒளிவிட்டுக் கொண்டு விளங்குகிறான்; மலை விளக்காக இருக்கிறான். சாதாரண விளக்கு இந்த உலகத்துப் பொருள்களைக் காட்டும். மலை விளக்காக இருக்கிற ஆண்டவன் உலகினூடே உள்ள உண்மைப் பொருளைக் காட்டுகிறான்.

புகைப்படம் எடுக்கிறோம். அவை நமது மேல் உடம்பைக் காட்டுகிறது. உடம்புக்குள் என்ன இருக்கின்றன என்று அது காட்டுவது இல்லை. ஆனால் 'எக்ஸ்ரே' மூலம் படம் எடுத்தால் உடம்புக்குள் இருக்கும் பொருள்களையும் காட்டுகிறது. சாதாரணப் போட்டோவைக் காட்டிலும் 'எக்ஸ்ரே' எடுப்பதற்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டும். அது நுட்பமான கருவிகளை உடையது. அந்த எக்ஸ்ரேயினாலும் காட்ட முடியாத பொருள்கள் இருக்கின்றன. அவற்றைக் காட்டுவது ஆண்டவனுடைய பேரொளி. அதனால்தான் திருமுருகாற்றுப்படையில்,

''சேண்விளங்கு அவிர்ஒளி''

என்று நக்கீரர் பாடுகிறார். முருகன் ஒளி நெடுந்தூரம் வரையிலும் வீசுகிறதாம்.

## சேய்மையும் அணிமையும்

"நமக்கு அந்த ஒளியிலே ஒன்றும் தெரியவில்லையே!" என்று சொல்லத் தோன்றுகிறது. அந்த ஒளியே நமக்குத் தெரிய வில்லை. ஒரு பொருளின் அருகில் இருந்தும் அதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். நமது பக்கத்து வீட்டில் யார் இருக்கிறார்கள் என்பது தெரியாமல் நாம் சென்னையில் வாழ வில்லையா? யாரேனும் விசாரித்துக் கொண்டு வந்தால், "எனக்குத் தெரியாது. நீங்கள் விசாரித்துப் பாருங்கள்" என்று சொல்கிறோம். பல ஆண்டுகளாக அங்கே வசித்துக் கொண்டிருந்தும் விசாரிக்க வில்லை; வந்து ஐந்து நிமிஷம்கூட ஆகாத ஒருவரைப்போய் விசாரிக்கச் சொல்கிறோம்! அவர் நமது வீட்டுக்கு அருகில் இருப்பவராக இருப்பினும் நமக்கு வெகுதூரத்தில் இருப்பவராக ஆகிறார்.

சேய்மை, அணிமை என்பது கண்ணாலே அளந்து பார்க்கும் அளவு என்று பொதுவாகச் சொல்கிறோம். கருத்தினால் சேய்மையும் அணிமையும் அமைவது உண்டு. வெகுதூரத்தில் இருக்கிற ஒருவனைச் சுட்டுகிறபோது, "அவன்" என்று சொல்கிறோம். அருகில் இருப்பவனை, "இவன்" என்று சொல்கிறோம். அது, அவன், அவள் என்பவை சேய்மைச் சுட்டு. புறநானூற்றில், "இளையன் **இவன்** என உளையக் கூறி" என்று வருகிறது. அங்கே, இவன் என்று சுட்டியவன் நெடுந்தூரத்தில் உள்ளவன். அவனை, அவன் என்னாமல் இவன் என்று சொல்லலாமா? அதற்கு உரையாசிரியர் நியாயம் கூறுகிறார். "இவன் என்றார், தம் கருத்துக் கண் அணுமையான்" என்று உரை எழுதுகிறார். ஆண்டவன் மனத்திற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டவனாக இருக்கிறானா தலின், "அவன், அவன்" என்று குறிப்பிடுவது மரபு. ஞான சம்பந்தப் பெருமான் அவன் தம் மனத்தில் உறைபவனாதலால்,

"பெம்மான் இவன் அன்றே"

என்றார். ஆண்டவனைப் பார்த்து "இவன்" என்று யார் சுட்டுவார் கள்? "அவன், அவன்" என்று வேதம் சொல்ல, "அவன், அவன்" என்றே முனிபுங்கவர்கள் எல்லாம் சொல்ல, "அவன், அவன்" என்று நம் போன்றவர்கள் சொல்ல, "அவன் அன்றி ஓரணுவும் அசை யாது" என்று பழமொழியும் சொல்ல, "இவன்" என்றார் அவர்.

"தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்
உள்ளங் கவர்கள்வன்;
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே"

என்பது அவர் பாட்டு. ஆண்டவன் தம் அநுபவத்திற்கு உள்ளாகி, அண்மையில் இருப்பதனாலே, ''இவன்'' என்று சொன்னார்.

இப்படி இறைவன் சிலருடைய உள்ளத்திற்கு அநுபவப் பொருளாக இருக்கும்போது, நம் போன்றவர்களுக்கு அநுபவத் திற்கு எட்டாத பொருளாக நெடுந்தூரத்தில் இருக்கிறான். அருகில் வருபவர்களையே அறிந்து கொள்ளாதவர்கள் நாம் அல்லவா?

பக்கத்து அறையில் தம் பிள்ளை இருப்பது தெரியாத ஒருவர், அவன் வெகு தூரத்தில் தோட்டத்தில் இருப்பதாக எண்ணி, ''ஏ சுப்பிரமணியா!'' எனக் கத்திக் கூப்பிடுகிறார். அவர் கூப்பிடும் சத்தமே சுப்பிரமணியம் பக்கத்தில் இல்லை, தூரத்தில் இருக் கிறான் என்று அவர் எண்ணியிருப்பதைக் காட்டும். அண்மையில் இருந்தும் அதை அறியவில்லை. அருகில் இருப்பது தெரிந்தால் அப்படிக் கூப்பிட மாட்டார். கடவுளை நாம் அப்படித்தான் அழைத்துப் புலம்புகிறோம். நமக்குள்ளே இருக்கும் பொருளை அவனது அருளொளிதான் காட்டமுடியும். அந்த அருளொளியை உடைய செழுஞ்சுடர் திருச்செங்கோட்டின் மேலே இருக்கிறது.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழும் செழுஞ்சுடரே!

மலையின் மேல் உள்ள சுடரை நினைப்பது மலையின் மேல் விளக்கிடும் அருணையில் ஞானம் பெற்ற அருணகிரியாருக்கு எளிதல்லவா?

## செங்கோட்டின் பெருமை

செங்கோடு என்றால் செங்குத்தான மலை என்று பொருள். மற்ற மலைகளில் ஏறுவது போலத் திருச்செங்கோட்டு மலை

மேல் ஏற முடியாது. ஏறும்போது அடிக்கடி முழங்காலைத் தழுவிக் கொண்டே ஏறவேண்டும். அது செங்குத்தாக இருக்கும். எங்கே பார்த்தாலும் தெய்வத் தன்மை பொருந்தி இருக்கும் மலை அது. ஆதிசேஷன் அங்கே பூசித்தான் என்பார்கள். அவனுடைய முடி ஒன்றே அப்படி ஆயிற்று என்றும் சொல்வர். ஆகவே அதை நாகமலை, அரவகிரி, நாகாசலம் என்று சொல்வர். ''நாகாசல வேலவனே'' என அம்மலை மீது எழுந்தருளியிருக்கும் வேலனைத் தான் அருணகிரியார் கந்தர் அநுபூதியில் சுட்டுகிறார்.

## அடையாளம்

மலைமேலே இருக்கிற விளக்குத் தெளிவாகத் தெரியும். பார்க்கிறவர்களுக்குத்தான் தெரியும். வேறு திசையில் பார்த்தாலும், கண்ணை மூடிக் கொண்டாலும் அது தெரியாது; கண் இல்லாக் குருடர்களுக்கும் தெரியாது. நமக்கு அந்தச் சுடர் தெரியவில்லையே என்றால், இந்த மூன்று வகையில் ஒரு வகையினர் நாம் என்றே கொள்ள வேண்டும். அருணகிரிநாதர் குருடர் அல்ல. அவர் மலை மேல் இருக்கின்ற செழுஞ்சுடரை நன்றாகப் பார்த்தார். ஆகவே,

**தெய்வத் திருமலைச் செங்கோட்டில்**
**வாழும் செழுஞ்சுடரே!**

என்றார்.

அந்தச் சுடருக்கு ஓர் அடையாளம் சொல்கிறார். முதலில் சுடர்ப் பிழம்பு தோற்றியது. பிறகு அடையாளமாகிய வேல் தோற்றியது. இந்தப் பல்பு ஒளி விடுகிறது. முதலில் பல்புதான் தோன்றுகிறது. உற்றுப் பார்த்தால் உள்ளே உள்ள கம்பி தோன்றும். மலைமேல் இருக்கும் செழுஞ்சுடரைக் கண்டார் அருணகிரியார். மேலும் அதை உற்று நோக்கினார். அந்தச் செழுஞ்சுடருக்குள் ஒரு கதிர் தோன்றியது. அதுதான் வேல்.

**வைவைத்த வேற்படை வானவனே!**

(வை வைத்த – கூர்மையை வைத்திருக்கிற. வேல் படை – வேலாயுதத்தை உடைய. வானவனே – தெய்வமே.)

மற்ற வேல்கள் அழுக்கடைந்த உடலுக்குள் பாய்ந்து, ரத்தம் தோயந்து தானும் அழுக்கடையும்; முனை மழுங்கும். மற்றப்

பேர்களைக் கொலை செய்கின்ற வேல் போன்றது அல்ல எம்பெருமான் திருக்கரத்தில் உள்ள வேல். இந்த வேல் அஞ் ஞானத்தைப் போக்குகின்ற ஞானத்திருவுருவம் உடையது. அத னாலே ஞான சக்தி என்ற பெயர் உடையது. கூர்மையான வேலைப் படையாகக் கொண்ட தெய்வம், செங்கோட்டு வேலன்.

## பீடிகை

அருணகிரியார் அப்பெருமானைப் பார்த்து,

**மறவேன் உனைநான்**

என்றார். உத்தியோகம் வேண்டுகிறவர்கள், ''எனக்குத் தாங்கள் அந்த வேலையைக் கொடுத்தால் உங்களை எப்பொழுதும் மறக்க மாட்டேன்'' என்று சொல்வது இல்லையா? அதுபோலத் தாம் சொல்லும் விண்ணப்பம் இன்னது என்று தெரிவிப்பதற்கு முன்னாலே, ''மறவேன் உனை நான்'' எனச் சொல்கிறார்.

ஆண்டவன் அருணகிரியார் துதித்ததைக் கொண்டு இன்புறு கிறான். தன்னுடைய பக்தன், தன் இருப்பிடத்தைக் கண்டு, தன் னுடைய ஒளியைக் கண்டு, தன் கரத்திலுள்ள வேலைக் கண்டு பாராட்டுகிறான் என்ற பெருமிதத்தோடு இருக்கிறான். அப்பொழுது அருணகிரியார், ''முருகா, இனி நான் சொல்லப் போவதைக் கொஞ்சம் கேளப்பா'' என்ற குறிப்போடு, **''மறவேன் உனை நான்''** என்று பீடிகை போடுகிறார். நம்மிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்த ஒருவர் திடீர் என்று, ''ஒரு விஷயம். உங்களை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன்'' எனச் சொல்ல ஆரம்பித்தால், அவர் ஏதோ வேண்டுகோளை விடுக்கப் போகிறார் என்பதை உணர்ந்து, அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கக் காதை நீட்டுவோம் அல்லவா? அதைப் போல எம்பெருமானிடத்தில் அளவற்ற பக்தி உடைய அருண கிரியார், ''மலைமேல் இருக்கும் செழுஞ்சுடரே! வேற்படை வானவனே!'' எனத் துதித்து விட்டு, ''உன்னை நான் என்றைக்கும் மறவேன்'' என்று கூறிப் பின்னே தாம் வெளியிடப் போகும் பிரார்த்தனை ஒன்று உண்டு என்பதைக் குறிப்பிக்கிறார். ஆண்டவன், ''மறவேன் உனை நான்'' என்று சொன்னவுடனேயே, இவர் என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்கச் சித்தனாக இருக்கிறான். அவர் சொல்கிறார்:

ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு
ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னே வந்து காத்தருளே.

## *நாம் வாழும் குடிசை*

*"எனக்கு இரண்டு கால் நட்டு, இரண்டு கை வைத்து ஒரு குடிசை கட்டிக் கொடுத்திருக்கிறாய். இது எனக்குச் சொந்தம் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறேன். ஆனால் நீ வேறு ஐந்து பேர்களைக் குடியிருக்கச் செய்திருக்கிறாயே!"*

ஐவர்க்கு இடம் பெற.

*கால், கை என்பவை உடம்பில் இருக்கின்றன. கட்டிய வீட்டிலும் அவை உண்டு. தூணுக்குக் கால் என்று பேர். குறுக்கே போடும் கட்டைகளுக்குக் கை என்று பேர். "இந்தக் குடிசையை எனது என்று எண்ணி ஏமாந்து போவேனா? ஐந்து பேர்களோடு நானும் ஒருவனாக அல்லவா இங்கே ஒண்டிக் கொண்டிருக்கிறேன்? இது நிலையானது அன்று; ஒரு புயல் வந்தால் போதும், குலைந்து போகுமே! இது குலைவதற்குள் எனக்கு வேறு ஓர் இடம் காட்ட மாட்டாயா?" என்று கேட்கிறார்.*

ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு
ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னே வந்து காத்தருளே.

## *குலையும் வீடு*

*காஞ்சீபுரத்தில் பெரிய உற்சவம் நடக்கிறது. அங்கே ஒருவர் போகிறார். அங்குள்ள தம் நண்பர் ஒருவர் வீட்டில் தங்குகிறார். இவரைப் போல இன்னும் சில விருந்தாளிகள் அங்கே இருக்கிறார்கள். இவருடைய நண்பர் இவருக்கு உணவு இட்டு, உபசாரம் செய்து, படுக்கவும் நல்ல படுக்கை தலையணை அளித்து, ஓர் இடத்தைக் காட்டுகிறார். காலையில் எழுந்திருந்தவுடன் இவர், "நான் ஊருக்குப் போய் வருகிறேன்" என்று சொல்லிக் கொள்கிறாரே யன்றி, அதையே தம் வீடு என்று எண்ணி, அதைச்*

செப்பஞ் செய்ய வேண்டும் என்று நினைக்கிறாரா? "அவ்வீடு அவனுக்குச் சொந்தம்; நமக்கு அல்ல" என்ற பகுத்தறிவோடு, "நான் ஊருக்குப் போய் வரட்டுமா?" என்று சொல்லிக் கொள் கிறார். அந்த வீட்டைப் பொறுத்த வரையில் அவருக்குப் பகுத் தறிவு இருக்கிறது. ஆனால் தம் உடம்பாகிய வீட்டைப் பற்றிய அறிவு இல்லையே! இதைத் தமக்குச் சொந்தம் என்றல்லவா எண்ணிச் சீர்திருத்த நினைக்கிறார்?

அருணகிரியார், "ஆண்டவனே. இந்தக் குடிசை ஐந்து பேர் வாழ நீ போட்டிருக்கிறாய். இது நிச்சயமாகக் குலைந்துவிடும். அதற்குமுன் என்னைக் காப்பாற்றியருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொள்கிறார்.

## வருமுன் காப்போன்

மனிதர்களுள் மூன்று வகை உண்டு. வந்த பின் காப்பவன் ஒருவன். வருகின்றபோது காப்பவன் மற்றொருவன். வருமுன் காப்பவன் மூன்றாமவன். முதல் இரண்டு பேரைக் காட்டிலும் வருமுன் காப்பவன் சிறந்த அறிவாளி. புயல் வருமே என்று எண்ணி நல்ல அஸ்திவாரம் போட்டு, கட்டிடத்தை நல்ல முறையில் கட்டிக் கொள்கிறவனுக்குப் புயல் வந்தால் பயம் இல்லை. அவன் கட்டிடம் ஒன்றும் ஆகாது. புயல் வருகிற போது பார்த்துக் கொள்ளலாம் என இருப்பவன் புயல் அடிக்கிறபோது அங்கும் இங்குமாக முட்டுக் கொடுத்து வீடு குலையாமல் இருக்கப் பாடுபடுவான். வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அசிரத்தையாக இருப்பவன், புயல் வந்து, வீடு குலைந்து, எல்லாவிதமான பொருள்களும் போன பிற்பாடு அழுது கொண்டு இருப்பான்.

அருணகிரியார் வருமுன் காத்துக் கொண்டவர். ஏதோ ஒரு காலத்தில் வருகின்ற புயலுக்கே பலர் எத்தனையோ முன் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் அடிக்கின்ற புயலாகிய மரணத்திலிருந்து தப்ப வேண்டுமானால் நாம் ஜாக்கிர தையாக இருக்க வேண்டாமா? ஒவ்வொரு நாளும் மரணப் புயல் அடிக்கின்றது என்பதற்குச் சாட்சி என்ன? மயானந்தான். அந்த அந்தச் சமய விதிப்படி புதைக்கிற இடமாக இருந்தாலும், எரிக்கிற இடமாக இருந்தாலும் எல்லோருக்கும் பொதுவான

இடம் மயானம். வாழ்வதற்கு வேண்டுமானால் பல பல வீடுகளைக் கட்டிக் கொண்டு இருக்கலாம். இறந்தால் போகிற இடம் மாயனம் ஒன்றுதான். இறந்தால் நமது பிள்ளைகூட நம் உடம்பை வீட்டில் எரிக்க அநுமதிக்க மாட்டான். மயானத்தில் கட்டிடம் எதுவும் இல்லை. ஆனாலும் எல்லாச் சரீரங்களும் போக வேண்டிய இடம் அதுதான். ஒவ்வொரு நாளும் மயானத்துக்குச் சடலங்கள் போய்க் கொண்டே இருக்கின்றன. அது நமக்கும் புயல் வரும் என்பதை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது. அஞ்சி னாலும் அஞ்சாவிட்டாலும் புயல் வரும். அஞ்சுபவர்கள் புயல் வந்தால் தப்ப வழி தேடி வைத்துக் கொள்வர். 'அஞ்சாமல் இருப்பேன்' என்று சும்மா இருந்தால் புயல் வரும்போது துன்பம் மிகுதி. இடர் வந்த பிறகு துணை தேடுவதைக் காட்டிலும் இடர் வருமே என அஞ்சித் துணையோடு இருப்பது நல்லது. அந்தத் துணையை நாடுகிறார் அருணகிரியார்.

## விளக்கும் ஆயுதமும்

நாம் எல்லோரும் கடைசியாகப் பிரயாணம் செய்ய வேண்டிய நெடுவழி ஒன்று இருக்கிறது. ''துணையோடல்லது நெடுவழி போகேல்'' என்றல்லவா சொல்லியிருக்கிறார்கள்? இருட்டாக இருக்கிற அந்த நெடுவழியில் நாம் பயமின்றிப் போக வேண்டு மென்றால் ஒளி வேண்டும். ஆண்டவனின் அருள் ஒளி இல்லாத இடங்கள் யாவும் இருள் நிறைந்த இடங்கள். ''இருள் தருமா ஞாலம்'' என்று சொல்வார்கள். இருட்டாக இருக்கிற இடத்தில் திருடர்கள் இருப்பார்கள்; விலங்குகள் இருக்கும். கையில் விளக்கு, ஆயுதம் எதுவும் இன்றி அத்தகைய இடங்களில் போனால் திருடர்கள் நம்மை அடித்துக் கொன்று நம்மிடம் இருப்பனவற்றைப் பறித்துப் போவார்கள். அவ்வழியே போயாக வேண்டுமென்றால் விளக்கை மாத்திரம் எடுத்துப்போனால் போதாது? விளக்கானது திருடர் களைக் காட்டும். திருடர்கள் நம்மை வந்து தாக்குகிறபோது அவர்களை எதிர்க்க நம் கையில் எதுவும் இல்லாததால் அவர் களிடையே நாம் சிக்கிக் கொண்டு அல்லலுறநேரும். விளக்கு இன்றி, ஆயுதம் மாத்திரம் கொண்டு போனாலும் திருடன் இருக் கிற இடம் தெரியாது. ஆகையால் விளக்கும் வேண்டும்; ஆயுத மும் வேண்டும்.

முருகப் பெருமான் செழுஞ்சுடர் விளக்காகத் தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழ்கிறான். அவனிடம் கூர்மையான வேலாயுதமும் இருக்கிறது. நமக்குத் துணையாக அவன் நெடு வழிப் பயணத்தின்போது வந்தால் அவனே ஒளி காட்டுவான். திருடர்கள் வந்தால் தன் வேலாயுதத்தை வீசி நம்மைக் காப்பாற்றுவான். வந்த பின் காக்கும் மனமுடையவர்கள் இந்த இருட்டு நெடுவழியில் துணையின்றிப் போகக் கூடும். போனால் திருடன் வரும் போது துணைதேட முடியாமல் அவனுக்கு இரை யாகி விடுவார்கள். திருடன் வந்தால் என்ன செய்வது என்று அஞ்சி முன்பே துணை தேடி வைத்துக் கொண்டு போகிறவர்களே பிழைக்க முடியும்.

## தோன்றாத் துணை

வருமுன் காப்பவர் அருணகிரியார். ஆதலாலே அவர் துணை தேடுகிறார். புயல் வருவதற்கு முன்பே துணைபெற்றுவிட்டால் புயலினால் குடிசை அழியும்போது முருகன் ஆதரவு அளித்துக் காப்பாற்றுவான். நடுவீதியில் நாற்றமுற்றுக் கிடக்காமல அவன் அரண்மனையில் ஆனந்தமாக இருக்கலாம்.

ஐவருக்கு இடம்பெறக் காலிரண்டு ஓட்டி, இரண்டு கை வைத்த வீட்டை நமது என்று எண்ணி வாழ்வதால் நாம் செய்ய வேண்டிய நெடும் பயணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக் கிறோம். நெடும் பயணம் பண்ணத்தான் வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் அப்பயணம் உண்டு.

தேக அநுபவம்முற்றியிருப்பதனாலே தெய்வத்தை மறந்து விடுகிறோம். சரீர அபிமானம் மற்ற எல்லாவற்றையும் மறைக் கிறது. நல்ல உணவைச் சாப்பிட்டு விட்டு, திண்டு தலையணை யில் படுத்திருக்கும்போது பௌதிகமான உடம்பு இயங்குவதற்குக் காரணமாக இருக்கும் உயிரை மறந்து விடுகிறோம். உடம்பைப் பற்றிய நினைவு உயிரை மறைக்கிறது. உடம்பை இயக்குவது உயிர் என உணர்ந்தவர்கள், உயிரை இயக்கித் தோன்றாத் துணையாக இருப்பது எது எனச் சிந்திக்க வேண்டாமா?

செத்துப் போனான் ஒருவன். அவனுடைய உறவினர்கள் எல்லாம் குய்யோ முறையோ எனக் கத்தி அலறி அடித்துக் கொண்டு அழுதார்கள். அவர்களைப் பார்த்து ஒருவர், ''நீங்கள்

ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டார். ''உயிர் போய்விட்டது. அதனால் அழுகிறோம்'' என்று அவர்கள் சொன்னார்கள். அவர், ''உயிர் போனதைப் பார்த்தீர்களா? அல்லது வந்ததையாவது பார்த்தீர்களா? இரண்டையும் நீங்கள் பார்க்கவில்லையே! கண்ணாலே பார்க்காத பொருளுக்காக ஏன் அழுகிறீர்கள்? கண்ணால் பார்த்த உடம்புதான் இருக்கிறதே. இதைக் கொண்டு போய்ப் பத்திரமாக வைத்துக் கொண்டு இன்பமாக இருங்கள்'' என்றாராம். கண்ணாலே காணாவிட்டாலும் உடம்பை இயக்குவது உயிர் என்று நமது பகுத்தறிவுக்குத் தெரியும். உடம்புக்குள் உயிர் இருப்பதனாலே உடம்பு ஆடுகின்றது என்றால், உயிர் இயங்குவதற்கு காரணமாய் இருப்பது எது என்று நுட்பமாகச் சிந்தித்து உணரவேண்டும். சின்ன உயிர் உடம்பை இயக்குகிறது என்றால், சின்ன உயிரை இயக்குவது பெரிய உயிராக இருக்க வேண்டும். சின்ன உயிர் ஆத்மா. பெரிய உயிர் பரமாத்மா. பரமாத்மாவே ஆண்டவன். அவன் நமக்கு வெளிப்படையாகத் தோன்றாவிட்டாலும் துணை யாகவே இருக்கிறான். அதனால் அவனைத் தோன்றாத் துணை என்று சொல்வார்கள்.

நமக்குத் தோன்றாமல் இருக்கிற உயிர் உடம்பை இயக்குவது போல நமக்குத் தோன்றாமல் இருக்கும் ஆண்டவன் உயிரை இயங்க வைக்கிறான். இதனை உணர்ந்து கொண்டால் அவனை நாடத் தோன்றும். அந்த உணர்ச்சி நமக்கு இல்லை. உணர்ச்சி உள்ளவர் கள் முன் கூட்டியே அவன் துணையை நாடிப் பெறுவார்கள்.

## முருகன் கருணை

ஒரு மாதத்திற்கு அரிசி வேண்டுமே என்று சம்பளம் வந்த வுடன் ஒரு மூட்டை அரிசி வாங்கிப் போட நமக்குத் தெரிகிறது. ஒரு வருஷத்திற்கு வேண்டுமே என்று ஒரு டஜன் சட்டை வேட்டி வாங்கி வைத்துக் கொள்ளத் தெரிகிறது. நமக்குப் பிறந்திருக்கும் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண வேண்டுமே என்று, அவள் பிறந்த அன்றிலிருந்தே பணம் சேர்த்து வைத்துக் கொள்ளத் தெரி கிறது. இவை எல்லாம் பின்னால் வரும் காரியங்களை நினைந்து செய்கின்றவை அல்லவா? இப்படி எல்லா வகைகளிலும் வருமுன் காப்பவர்களாக நாம் இருந்தும், பிறந்துவிட்ட நமக்கு மரணம் நிச்சயமாக வந்துவிடுமே என எண்ணி, மரணத்திலிரு

காப்பாற்றிக் கொள்வதற்கு எந்தவிதமான முயற்சியையும் செய்யாமலே இருக்கிறோம். அருணகிரியாரோ, ''இந்த உடம்பு இருக்கும்போதே, முருகா, என்னை வந்து காத்தருளே'' என்று பிரார்த்திக்கிறார்.

கருணை மிக்க இறைவனிடத்தில் அவருக்கு அளவற்ற நம்பிக்கை. ''ஐயையோ! சுரம் அதிகமாக இருக்கிறதே! போய் டாக்டரை அழைத்து வாருங்கள்'' என்று சொன்னால் நாம் போய் டாக்டரைக் கூப்பிடுகிறோம். டாக்டர், ''நோயாளியை இங்கே எடுத்து வா'' என்கிறார். அதுதான் தம் கௌவரத்துக்கு ஏற்றது என்று டாக்டர் எண்ணுகிறார். உலகத்தில் இறைவன் அப்படி மரியாதை பார்ப்பது இல்லை. யார் கூப்பிடுகிறார்களோ அவர்கள் இருக்கும் இடத்துக்குத் தானே ஓடி வந்து காத்து அருளுகின்ற தயாமூர்த்தி அவன். ஊர் கூட்டிக் கத்தி அழைக்க வேண்டாம். கை ஒடியத் தட்டி அழைக்க வேண்டாம். உள்ளம் உருக நெஞ்சிளகி, ''ஆண்டவனே!'' என்று அழைத்தால் போதும். மனத்தில் இருக்கின்ற மாயைத் திரையை நீக்கி, அஞ்ஞானத் திரையை நீக்கி, கூப்பிட்டால், போதும். அவன் உள்ளே இருப்பவன் தானே? மெல்ல அழைத்தாலும் அவனுக்குக் கேட்கும். உள்ளே இருக்கும் அவனைக் கைதியைப் போல அடைத்துவிட்டுப் பூட்டியிருப்பவர்கள் நாம். பூட்டை உடைத்துவிட்டு, ''ஆண்டவனே!'' எனக் கூப்பிட்டால் அவன் உடனே உள்ளிருந்து ஓடி வருவான். எங்கோ இருக்கிறவன் வர வேண்டுமென்பது இல்லை. அருணகிரியார் உள்ளக் கதவைத் திறந்து பிரார்த்தனை செய்து கொள்கிறார்.

## இந்த வேண்டுகோள்

எத்தனையோ இடங்களில் அவர் பல பல வேண்டுகோளைத் தெரிவித்திருக்கிறார்; ''ஆண்டவனே, எனக்கு ஜபமாலை தா. வள்ளியம்மையோடு மயில் மேலே, நான் வேண்டும்போது நீ வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். கந்தர் அலங்காரத்தில் இந்தப் பாட்டில்தான், ''இந்த உடம்பு அழிவதற்கு முன்னாலே என்னை வந்து நீ காத்தருள வேண்டும்'' என்ற வேண்டுகோளைப் போட்டார்.

ஒருவன் பி.ஏ.யில் தேர்ச்சி பெற்றவுடன் வேலைக்காகப் பல இடங்களுக்கு விண்ணப்பம் போட்டான். தினமும் காலையில்

பத்திரிகையைப் பார்த்துத் தேவை விளம்பரங்களில் வரும் இடங்களுக்கெல்லாம் போட்டான். ஒன்றும் பலிக்கவில்லை. ஒருநாள் திருத்தணி போயிருந்த போது தற்செயலாக அவன் கண்ணில் ஒரு விளம்பரம் பட்டது. ஒரு கடையில் உட்கார்ந்து அதைப் பார்த்தவன் உடனே அங்கிருந்தே ஒரு விண்ணப்பம் எழுதிப் போட்டுவிட்டுச் சென்னைக்கு வந்தான். இங்கே வேலை கிடைத்துவிட்டது. அப்போது அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி யாக இருக்கும்! தன் ஆயுளில் அவன் எப்போது திருத்தணி போனாலும், ''நான் இந்த இடத்தில் போட்ட விண்ணப்பந்தான் ப்லித்ததப்பா!'' என்று நினைத்துப் பூரிக்க மாட்டானா?

அதைப் போல எத்தனையோ இடங்களில் எத்தனையோ வகையான விண்ணப்பங்களைப் போட்டவர் அருணகிரியார். தாம் உயிரோடு இருக்கும்போதே தம்மை வந்து ஆண்டு கொள்ள வேண்டுமென்று அவர் விண்ணப்பம் போட்ட இடம் திருச்செங் கோடு. அங்குள்ள முருகனைப் பார்த்து, ''தெய்வத் தன்மை பொருந்திய மலைமேல் வாழும் சுடரே! கூர்மையான வேலைப் படைத்த தேவனே! ஐவர்க்கு இடம் பெற, கால் இரண்டு கை இரண்டு வைத்துக் கட்டிக் கொடுத்திருக்கிற இந்த உடம்பாகிய வீடு குலைவதற்கு முன்னே வந்து என்னைக் காத்தருளுவாய் அப்பா அப்படிச் செய்தால் நான் உன்னை என்றும் மறவேன்'' என்று கை தட்டிக் கொடுப்பது போலச் சொல்லி விண்ணப்பம் போட்டார். இந்த உடம்பு இருக்கும்போதே ஜீவன் முக்தன் ஆகவேண்டுமென்று அவருக்கு ஆசை. எல்லோரும் செத்துப் போகிற மாதிரி செத்துப்போகக்கூடாது; இவ்வுடம்பு மரணம் அடைந்து, நாற்றமெடுத்து அழியக்கூடாது என்பது அவர் அவா. விண்ணப்பம் போட்டார். அவர் எழுதிய விலாசம் என்ன? ''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ் சுடரே! வைவைத்த வேற்படை வானவனே!'' என நீண்ட விலாசம் எழுதிப் போட்டார்.

## பலித்தது

அது பலித்துவிட்டது. மற்றவர்கள் மரணம் அடைவதைப் போல அல்லாமல், கிளியாக மாறி இறைவன் திருக்கரத்தில் உட்கார்ந்துவிட்டார். அவருடைய கருவி கரணங்கள் எல்லாம் மாறிவிட்டன.

*கிளியாக மாறிய நிலையிலிருந்து கந்தர் அநுபூதி பாடினார். எல்லாவற்றையும் மறந்து, தாம் சென்று சுற்றின தலங்களை எல்லாம் மறந்து, பாடினார். இருந்தாலும், ''எனக்கு இந்நிலை கிடைத்தால், தெய்வத்திருமலைச் செங்கோட்டில் வாழும் சுடரே, வைவைத்த வேற்படை வானவனே, உனை நான் மறவேன்'' என்று எழுதிக் கொடுத்திருக்கிறார் அல்லவா? அந்தத் தலத்தை மறக்கலாமா? எல்லாத் தலங்களையும் மறந்து விட்ட போதிலும்,*

"நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகா! சுரலோக சிகாமணியே"

*என்று கந்தர் அநுபூதியில் நாகாசல வேலவனை மாத்திரம் மறக்காமல் பாடினார்.*

"கூகாஎன என் கிளை கூடிஅழப்
போகாவகை,மெய்ப்பொருள் பேசியவா!"

*''எல்லோரும் கூகா எனக் கத்தி மார்பிலே அடித்துக் கொண்டு புரண்டு அழுது வருந்தும்படியாக மரணம் அடையாமல் என்னைக் காப்பாற்றினாயே!'' என்றார். அதைத்தானே அவர் கேட்டார்?*

## *இதுவும் அதுவும்*

ஐவர்க் கிடம்பெறக் கால்இரண்டு
ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னே வந்து காத்தருளே

*என்றுதானே திருமலைச் செங்கோட்டில் வாழும் வேலனிடம் விண்ணப்பம் போட்டுக் கொண்டார்? ''மறவேன் உனை நான்'' என்றும் சொன்னார் அல்லவா? அவ்விண்ணப்பம் முருகனிடம் போயிற்று. அலங்காரத்தில் மிக நீளமாக எழுதியிருந்த விலாசம் ஞாபகத்திற்கு வரும்படியாக அநுபூதியில் சுருக்கிச் சொல்லி நினைவூட்டுகிறார்;*

"நாகாசல வேலவ!"

*என்கிறார்.*

*நாகாசலம் என்பதுதான் திருச்செங்கோடு. இங்கே தெய்வத் திருமலைச் செங்கோடு என்றார். அங்கே நாகாசல என்று ஒரே*

சொல்லால் நினைப்பூட்டுகிறார். "வை வைத்த வேற்படை வான வனே" என்று இங்கே அழைத்தார். அங்கே **"வேலவ"** என்றார். இங்கே சொன்னவற்றைக் குறிப்பிக்க இந்த அடையாளம் போதாதா? அவர் போட்ட விண்ணப்பம் பலிக்காவிட்டால் என்ன ஆயிருக்கும்? மற்றவர்களைப் போல அவரும் மரணம் அடைந்திருப்பார். அவரது கிளை கூகா எனக் கூடி அழுதிருக்கும். 'அப்படியின்றி என் விருப்பத்திற்குச் செவி சாய்த்து, நான் கேட்டுக் கொண்ட வாறு இவ்வீடு குலையும் முன்னே வந்து காத்தருளினாயே!' என்ற நன்றியறிதலோடு கந்தர் அநுபூதியில் பாடுகிறார்.

"கூகாஎன என்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா!
நாகாசல வேலவ! நாலுகவித்
தியாகாசுர லோக சிகாமணியே!

ஆகவே அருணகிரிநாத சுவாமியின் வாழ்க்கையில் திருச்செங் கோடு ஒரு முக்கியமான தலம். அந்தத் தலம் அவருடைய விண்ணப்பத்தைப் பலிக்க வைத்த தலம். அவர் போட்ட விண்ணப்பந்தான் இந்தப் பாட்டு-

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழும் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவ
னே!மற வேன்உனை நான்;
ஐவர்க்கு இடம்பெறக் கால்இரண்டு
ஓட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே.

(தெய்வத்தன்மை பொருந்திய அழகிய மலையாகிய திருச்செங் கோட்டில் எழுந்தருளியிருக்கும் செழுமை மிக்க சோதியே! கூர்மையை உடைய வேலாயுதத்தையுடைய தேவனே! உன்னை நான் மறக்க மாட்டேன். ஐந்து பொறிகளுக்கு இடம் கிடைக்கும்படியாக இரண்டு காலை நிறுவி அதில் இரண்டு கைகளைப் பொருத்திய உடம்பாகிய வீடு மரணம் அடைந்து குலைவதற்கு முன்பாகவே வந்து அடியேனைக் காத்தருள்வாயாக!

வை–கூர்மை. ஐவர்–ஐம்பொறிகள். வீடு என்றது இங்கே உடம்பை.)

# வெளியான இரகசியம்

## 1

### *நயமான சரக்கு*

*ஓர் ஊரில் ஒரு செட்டியார் கடை வைத்திருந்தார். அவரிடம் நயமான சரக்குகள் கிடைக்கும் என்பது ஊர் அறிந்த செய்தி. அந்த ஊருக்குப் புதிதாக ஒருவர் வந்தார். அவர் எப்போதுமே நயமான பண்டங்களையே வாங்குபவர். பணம் எவ்வளவு செலவழிந்தாலும் சரி, நல்ல சரக்குகளையே வாங்கவேண்டும் என்ற கொள்கையை உடையவர். அந்தச் செட்டியாரிடம் மிகவும் நல்ல சரக்குகள் இருக்கின்றன என்றும், பணச் செலவைப் பாராதவர்களுக்கு அவரிடம் உயர்ந்த பண்டங்கள் கிடைக்கும் என்றும் ஊர்க்காரர்கள் சொல்லிக் கொண்டார்கள்.*

*புதிய மனிதருக்குக் காபியில் விருப்பம் அதிகம். அவருக்கு என்ன? எல்லோருக்குமே அந்த அமுத பானத்தில் விருப்பம் இருக்கத்தான் இருக்கிறது. அவர் மிகவும் உயர்ந்த ரகமான உருண்டைக் கொட்டையை வாங்கி உபயோகிப்பார். புதிய ஊரில் உயர்ந்த காபிக் கொட்டை கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற சந்தேகம் அவருக்கு இருந்தது. ஊர்க்காரர்கள் செட்டியாரைப் பற்றிச் சொன்னதைக் கேட்டபோது அவருக்குத் திருப்தி ஏற்பட்டது. 'இங்கே நல்ல காபி சாப்பிடலாம்' என்ற எண்ணம் உண்டாயிற்று.*

*செட்டியாரைக் கண்டு அவர் விசாரித்தார். செட்டியார், ''நம்மிடம் எல்லாமே உயர்ந்த சரக்குத்தான். மட்டமான சரக்கே இந்தக் கடைக்குள் வராது. பணம் வாங்கிக் கொண்டுதானே வியாபாரம் செய்கிறோம்? சும்மாவா கொடுக்கிறோம்? நல்ல சரக்குக்குத் தக்கபடி பணம் கேட்டால், வேண்டியவர்கள் கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்கிறார்கள்'' என்று சொன்னார்.*

காபி பக்தர் அவரிடம் மறுபடியும் கேட்டார்; மெல்லக் கேட்டார்; ''உங்களிடம் இருக்கும் சரக்கு எல்லாம் நயமானவை என்பதை ஒப்புக் கொள்கிறேன். மற்ற இடங்களில் கிடைப்ப வற்றைவிட உயர்ந்தவையே இங்கே உள்ளன என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது சரிதான். ஆனால் உயர்ந்த ரகத்திலும் மேல் கீழ் என்று தரம் இருக்கிறதல்லவா? பணம் அதிகமாகக் கொடுத் தால் இருப்பவற்றுள் அருமையான சாமானைக் கொடுக்கலாமே. அப்படி அருமையாக யாராவது வாங்கினால் கொடுக்கும் சரக்கு உங்களிடம் உண்டா? மற்றவற்றைப் பற்றி இப்போது கவலை இல்லை. உங்களிடம் இருக்கும் காபிக் கொட்டையில் மிகவும் உயர்ந்த ரகத்தை எனக்குக் கொடுங்கள். என்ன விலையானாலும் கொடுக்கிறேன்'' என்று சொன்னார்.

செட்டியார், ''அப்படியே செய்கிறேன். என்னிடம் உள்ள வற்றில் சிறந்ததையே தருகிறேன். ஆனால் இதை வெளியில் சொல்ல வேண்டாம். நமக்குள் இரகசியமாகவே இருக்கட்டும். உங்களைப் போல் பணத்தைப் பற்றிக் கவலைப் படாதவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்று சொல்லி நயமான காபிக் கொட்டையை அவருக்குக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டு சென்ற காபி பக்தர் அதை உபயோகப் படுத்திப் பார்த்தார். உண்மையாகவே அது சிறந்ததாக இருந்தது. 'இந்தச் செட்டியார் நமக்கு மாத்திரம் உயர்ந்த ரகக் கொட்டையைக் கொடுத்திருக்கிறார்' என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

## குட்டு வெளிப்பட்டது

சில காலம் சென்றது. அவருக்கு ஊரில் உள்ளவர்கள் நன் றாகப் பழக்கமாகி விட்டார்கள். பல நண்பர்கள் ஏற்பட்டார்கள். ஓய்ந்த வேளைகளில் அவர்கள் வீட்டுக்குப் போவதும் உரையாடு வதும் சிற்றுண்டி அருந்துவதுமாக அவர்களுக்கும் அவருக்கும் பழக்கம் முதிர்ந்து வந்தது. ஒரு நாள் ஒரு நண்பர் அவரைச் சிற்றுண்டிக்கு அழைத்திருந்தார். விருந்தின்போது காபி கொடுத் தார். அது மிகவும் நன்றாக இருந்தது. காபியின் தரத்தை அறிவ தில் அவர் வல்லவர் அல்லவா? 'இதென்ன! நமக்குத்தான் நல்ல காபிக் கொட்டை கிடைக்கிறதென்று நினைத்தோம். செட்டியார் நமக்கு மட்டும் இரகசியமாக அந்தக் கொட்டையைத் தருகிறார்.

இவருக்கு எங்கே இது கிடைத்திருக்கும்? என்று யோசனை பண்ணினார். அன்பரையே கேட்டுவிடலாம் என்றெண்ணி, ''காபி மிகவும் நன்றாக இருக்கிறது. நீங்கள் வெளியூரிலிருந்து இந்தக் கொட்டையை வாங்கி வந்தீர்களா?'' என்று கேட்டார்.

நண்பர் சொன்ன பதில் அவரைத் தூக்கி வாரிப் போட்டது. ''வெளியூருக்கு ஏன் போக வேண்டும்? நம்முடைய செட்டியாரே நல்ல சரக்காகக் கொடுக்கிறாரே! அவர் கடையில் வாங்கினது தான் இது'' என்று நண்பர் கூறினார். பாவம்! அந்த மனிதர் ஏமாந்து போனார். தமக்கு மாத்திரம் அந்த அற்புதமான கொட்டை கிடைக்கிறதென்றும், அதற்கு ஏற்ற விலையைத் தாம் ஒருவரே தரும் சக்தி உடையவரென்றும், மற்றவர்கள் அதை வாங்க முடியாதென்றும் அவர் எண்ணிக் கொண்டிருந்தார்.

உடனே அவர் செட்டியாரிடம் ஓடி வந்தார். ''செட்டியாரே, உம்முடைய குட்டு வெளிப்பட்டு விட்டது!'' என்றார்.

''ஏன்? என்ன சமாசாரம்?'' என்று செட்டியார் கேட்டார்.

''எனக்கு மாத்திரம் கொடுக்கிறீர் என்று நினைத்திருந்த காபிக் கொட்டை இந்த ஊர் முழுவதும் இருக்கிறதே! எனக்குக் கொடுத்த சரக்கையே எல்லோருக்கும் கொடுத்திருக்கிறீரே!'' என்றார் காபி பக்தர்.

''நான் நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்து உயர்ந்த சரக்கை வாங்கிக் காத்திருக்க முடியுமா? உங்களைப் போலச் சில பேர் உத்தமமான சரக்குகளை வாங்குபவர்கள் இருப்பதனால் தான் நான் வாங்கி வைக்கிறேன். நீங்களும் அவர்களைப் போன்ற வர்கள் என்று தெரிந்து அதை உங்களுக்குக் கொடுத்தேன். உங்களுக்கு கொடுத்ததைக் காட்டிலும் உயர்ந்ததை எங்காவது நீங்கள் கண்டிருந்தால் என்னைக் குறை கூறலாம். அப்படி இருக்க நியாயம் இல்லையே!''

காபி பக்தர் என்ன சொல்வார்?

அவர் செட்டியாரிடம் வந்து, ''உம்முடைய குட்டு வெளிப் பட்டு விட்டது'' என்று சொன்னாரே, அது போலவே அருணகிரி நாதர் சொல்கிறார். அவரிடம் வியாபாரம் செய்த செட்டியார் முருகப் பெருமான்.

## செட்டியார்

முருகனுக்குச் செட்டி என்பதும் ஒரு பெயர். செட்டியென்ற சொல் செட்டு என்பதிலிருந்து பிறந்தது என்று சொல்வார்கள். சிரேஷ்டி என்ற வட சொல்லே செட்டி ஆயிற்றென்றும் கூறுபவர்கள் இருக்கிறார்கள். பிறர் பொருளையும் தம் பொருளைப் போல் பேணி, குறையப் பண்டத்தைக் கொடுக்காமல், கூட விலை சொல்லி வாங்காமல் வாணிகம் செய்கிறவர்கள் வணிகர்கள் என்று சங்க நூல்கள் சொல்கின்றன. அத்தகைய வணிகர்கள், சமுதாயத்துக்கு உபகாரம் செய்யும் உத்தமமான தொண்டர்கள்; சிறந்தவர்கள். அவர்களைச் சிரேஷ்டிகள் என்று சொல்வது மிகவும் பொருத்தமானது.

முருகனும் சிரேஷ்டமானவன். 'தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே!' என்று அவனுடைய சிரேஷ்டத்தை அடுக்குகிறார் அருணகிரிநாதர்.

"செட்டியப்பனை"

என்று சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகையில் முருகனைச் செட்டியென்று குறிக்கிறார். திருப்புகழில்,

"செட்டி எனுமொர்திரு நாமக்கார"

என்று வருகிறது.

முருகனைச் செட்டி என்று வழங்கும் வழக்கை வைத்துக் கொண்டு ஒரு புலவர் வேடிக்கையாக ஒரு பாட்டுப் பாடுகிறார். முருகப்ப செட்டியாரிடம் வியாபாரம் செய்கிறவராக நின்று அவர், "இன்ன சரக்கு வேண்டாம்; இது வேண்டும்" என்று கேட்கிறார். செட்டியார் திருவேரகமாகிய சுவாமி மலையில் கடை வைத்திருக்கிறவர். அது ஆறுபடை வீடுகளில் ஒன்று அல்லவா? "ஏரகத்துச் செட்டியாரே!" என்று அழைத்துத் தம் விருப்பத்தை வெளியிடுகிறார் புலவர்.

## ஏரகத்துச் செட்டியார்

"செட்டியாரே, வெங்காயக் குழம்பு வைக்கலாமென்று வெங்காயமும் வெந்தயமும் வாங்கிக் கொண்டு போனேன். கவனம் இல்லாமையால் வெங்காயம் இருப்பதையே மறந்து விட்டேன்.

அது இப்போது ஒட்டி உலர்ந்து சுக்காகப் போய் விட்டது. எதற்கும் பயன் இல்லாமல் போயிற்று. வெறும் வெந்தயத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்! காய்ந்து போன வெங்காயத்தை வீணே சுமந்து கொண்டிருப்பதில்தான் என்ன பயன்? குழம்புக்குப் போடப் பெருங்காயங்கூட வாங்க வேண்டுமென்று எண்ணினேன். இப்போது அந்த எண்ணமெல் லாம் போய்விட்டது. வெங்காயம், வெந்தயம், பெருங்காயம் ஒன்றுமே வேண்டாம். வெங்காயம் விரதத்துக்கு ஆகாது. வெறும் சீரக ரசம் பண்ணிச் சாப்பிடலாம் என்று தோன்றிவிட்டது. ஆகையால் சீரகம் தாரும்; மற்றது ஒன்றும் வேண்டாம்'' என்று ஏரகத்து முருகப்ப செட்டியாரிடம் சொல்கிறார்.

''வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை? – மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே!''

பாட்டு, செட்டியார் என்பதற்குப் பொருத்தமாக இருக்கிறது அல்லவா? இந்தப் பாட்டை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் வெங்காயக் குழம்பு வேண்டாத சாது ஒருவன் சீரக ரசத்தை விரும்பி சீரகம் கேட்பது போலத் தோன்றுகிறது. அது வெறும் தொனிப் பொருள். உண்மைப் பொருள் வேறு உண்டு. முருகனிடம் வெங்காயத்தையும் சுக்கையும் பற்றியா சொல்லிக் கொண்டிருப் பார்? செட்டி என்ற பெயருக்கு ஏற்றபடி அந்தப் பெயர்களின் ஒலி காதில் விழும்படியாகப் பாட்டை அமைத்திருக்கிறார். பொருள், முருகனிடம் எதைக் கேட்க வேண்டுமோ அதைக் கேட்பதாக அமைந்திருக்கிறது.

உடம்புக்குக் காயம் என்று பெயர். இது பல நோய்களுக்கு இடமாக இருப்பது; வெப்பம் உள்ளது. ஆகையால் இதுவே வெங்காயம். பல பல உறுப்புக்களை உடைய பெரிய யந்திரம் இது. இதுவே பெருங்காயமாகவும் (பெரிய உடம்பாகவும்) இருக்கிறது. வெறும் காயத்துக்கு மதிப்பு இல்லை. இதனூடே உயிரோட்டம் இருந்தால்தான் மதிப்பு. உயிரில்லாமல் இது உலர்ந்து போனால் இதை யாரும் தொட மாட்டார்கள். வெந்த அயமாகிய அயபஸ்பத்தை வாயில் புகுத்தினாலும் பிணம் உயிர் பெற்று எழாது. பயன் இல்லாத சரக்காகிய இந்த உடம்பைச்

சுமந்து திரிவதை ஞானிகள் விரும்பமாட்டார்கள். உயிர் பழ வினையின் பயனை அநுபவிக்க வந்து தங்கும் குடிசை இது. நிரந்தரமாக உள்ள சிறந்த மோட்சமே உயிர் இன்பம் பெறும் இல்லம்; சிறந்த வீடு; சீர் அகம். அந்தச் சீரகத்தை இறைவன் அருளினால் மறுபடியும் இந்தப் பெரிய காயத்தினுள் உயிர் வந்து புகவேண்டிய அவசியம் இல்லை.

இந்த அழகிய கருத்தை அந்தப் பாட்டுச் சொல்கிறது. 'ஏரகத்துச் செட்டியாரே, வெம்மையான இந்த உடல் உயிர் நீங்கிச் சுக்குப்போல ஆகிவிட்டால் அயபஸ்பத்தால் என்ன பயன் உண்டாகும்? இந்தப் பயனற்ற பண்டத்தை இங்கே யார் சுமந்து கொண்டு தொல்லைப் படுவார்கள்? எப்போதும் அழியாத சிறந்த மோட்சத்தைத் தருவீரானால் இந்தப் பெரிய உடம்பை நான் விரும்பமாட்டேன்' என்று அதற்குப் பொருள் செய்ய வேண்டும்.

> "வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
> இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை? – மங்காத
> சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
> ஏரகத்துச் செட்டியா ரே!"

இந்தச் செட்டியாரிடம் அருணகிரி நாதர், "உம்முடைய இரகசியம் அம்பலமாகிவிட்டது" என்று சொல்கிறார். "கொட்டு மேளத்துடன் ஊர் அறிய வெளிப்பட்டு விட்டது" என்று கூறு கிறார். "எனக்கு மாத்திரம் நயமான காபிக் கொட்டையைக் கொடுத்தீர் என்றல்லவா நினைத்தேன்? ஊரார் எல்லோருக்கும் கொடுத்துவிட்டீரே! உம்முடைய இரகசியம் வெளிப்பட்டு விட்டதே!" என்று சொன்ன காபி பக்தரைப் போல இந்தப் பக்தர் சொல்கிறார். இனி அதைக் கவனிக்கலாம்.

# 2

## முருகன் சொன்ன இரகசியம்

முருகன் அருணகிரிநாதருக்கு ஓர் உபதேசம் செய்தான். அதை மிகவும் இரகசியமாகச் சொன்னான். அவர் பக்தித் திறத்தை யும் பட்ட வேதனையையும் கண்டு, இனி அந்தத் துன்பத்தை அடையாத வகையை அருள வேண்டுமென்ற விருப்பத்தால் அந்த

இரகசியத்தை அவர் காதில் மட்டும் கேட்கும்படி சொன்னார். அதை,

**கின்னம் குறித்து அடியேன் செவி**
**நீ அன்று கேட்கச் சொன்ன**
**குன்னம்**

என்று குறிக்கிறார். கின்னம் என்பது துன்பம். 'நான் படுகின்ற துன்பத்தை உலகில் பலர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் என்னிடம் இரக்கம் கொண்டு அதை நீக்கும் வழியை யாரும் காட்டவில்லை. நீ என் துன்பத்தைக் கண்டாய். உன் திருவுள்ளக் குறிப்பில் அதனைப் போக்க வேண்டும் என்ற நினைவு உண்டாயிற்று. ஆகையால் நீ வந்து அடியேனுக்கு உபதேசம் செய்தாய். என் துன்பமும் கவலையும் போகும்படியாக உபதேசம் செய்தாய். என் செவி மாத்திரம் கேட்கும்படியாக அன்று ஒருநாள் அந்த இரகசியத்தைச் சொன்னாய்' என்று அருணகிரியார் சொல்கிறார்.

அருணகிரியார் பல சமயங்களில் முருகனுடைய உபதேசத்தைப் பெற்றிருக்கிறார். "நீ திருப்புகழ் பாடு" என்று முருகனே அவருக்குக் கட்டளையிட்டான்;

**"திருப்புகழ் விருப்பமொடு செப்பென**
**எனக்கருள்கை மறவேனே"**

என்று பாடுகிறார். மந்திரம் உபதேசித்தானாம்;

**"உபதேச மந்திரப் பொருளாலே**
**உனைநான் நினைந்தருட் பெறுவேனோ?"**

என்று ஓரிடத்தில் சொல்கிறார். இப்படியே முருகன் குருநாதனாக எழுந்தருளி உபதேசித்ததைப் புலப்படுத்தியிருக்கிறார். இந்தப் பாட்டிலும் முருகன் திருவாய் மலர்ந்தருளிய ஒன்றைப் பற்றிச் சொல்கிறார். முதலில், "என் காது மாத்திரம் கேட்கும்படியாக, என் துன்பத்தைக் களைவதற்காக, அன்று சொன்ன இரகசியம்" என்று சொல்லிவிட்டு, "அது மலைவாணர் ஊரில் வெளியாகி விட்டது" என்கிறார். குறிச்சி என்பது மலைப் பிரதேசமாகிய குறிஞ்சி நிலத்து ஊருக்குப் பெயர். அந்தக் குறிச்சி இந்தக் குன்னத்தை (இரகசியத்தை) வெளிப்படுத்தி விட்டதாம்.

**குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது**

## உபதேசம்

இந்த நாட்டில் குருமுகமாக உபதேசம் பெறுவதை மிகச் சிறப்பாக வைத்திருக்கிறார்கள். குரு மாணாக்கன் செவியில் கேட்கும்படியாக இரகசியத்தைச் சொல்கிறார். சொல்பவனும் கேட்பவனும் மாத்திரம் உணரும் வகையில் சொல்வதனால் மந்திரோபதேசத்தை இரகசியம் என்று சொல்கிறார்கள். இரகசிய மானாலும் அது பலரும் அறிந்த இரகசியந்தான். உலகறிந்த இரகசியம் என்று சொல்வதை நாம் கேட்கிறோம். அது ஏதோ முரண்பாடு உள்ளது போலத் தோன்றுகிறது. பலரும் அறிவது இரகசியத்துக்கு விரோதம் என்று நாம் எண்ணிக் கொண்டிருக் கிறோம். உண்மை அது அன்று. பலர் அறிவதனால் இரகசியத் தின் தன்மை மாறாது. எப்படி அறிகிறார்கள் என்பதில் தான் அந்தத் தன்மை நிற்கிறது. அது சமயத்தில் ஒருவன் மட்டும் கேட்க உணர்த்துவதனால் அது இரகசியமாகிறது. ஆயிரம் பேருக்குக் கேட்கும்படியாக மேடையின்மேல் நின்று ஒன்றைச் சொன்னால் அது இரகசியம் ஆகாது. ஆனால் அந்த ஆயிரம் பேரில் ஒவ்வொருவரையும் தனித்தனியே அழைத்துப் பிறர் அறியாதவண்ணம் சொன்னால் அது இரகசியம் ஆகிறது; ஆயிரம் பேர் அறிந்த இரகசியமாகிறது.

இரகசியமாகக் குருநாதன் உபதேசம் செய்வது எதற்காக என்று கேட்கலாம். உபதேசம் செய்யும் மந்திரத்துக்கு ஓரளவு பெருமை இருக்கிறது. ஆனால் அதனால் உண்டாகும் பயன் உபதேசம் செய்யும் குருவையும் உபதேசம் பெறும் மாணாக்கனின் பக்குவத்தையும் பொறுத்திருக்கிறது. சிறந்த குரு மாணாக்கனுடைய பக்குவத்தை நன்கு அறிந்தே உபதேசம் செய்வார். அந்த உப தேசத்தைப் பெற வேண்டும் என்று ஏங்கிக் கிடக்கும் சீடனுக்கே அந்த உபதேசம் கிடைக்கும்.

மாணிக்கவாசகர், இறைவன் தம் பக்குவத்தைப் பாராமல் உபதேசம் செய்தான் என்பதை ஓர் உவமை மூலமாகச் சொல்கிறார். சின்னஞ்சிறு குழந்தையின் கையில் விளையாட்டுச் செப்புகளைக் கொடுக்கிறோம். மரத்தாலோ, வெண்கலத்தாலோ, இரும்பினாலோ ஆன செப்புக்களைக் கொடுப்பது வழக்கம். ஒரு செல்வர் தம் குழந்தைக்குப் பொற் கிண்ணம் ஒன்றையே விளையாடக் கொடுத்து

விட்டார். அந்தக் குழந்தைக்கு அதன் பெருமை தெரியுமா? அதையும் பழுக்காய்ச் செப்புடனே வைத்து விளையாடும்; வீசி எறியும்; நசுக்கும்; யாரேனும் திருடிப் போனால் பறி கொடுத்து விட்டு நிற்கும். "நீ குழந்தையின் கையில் உள்ள பொற்கிண்ணம் போல எனக்குத் தோற்றுகிறாய். உன்னை அரியவன் என்று நான் நினைக்கவில்லை" என்று பாடுகிறார் மணிவாசகர்.

"மழக் கையிலங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்."

பக்குவத்தை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் ஏற்ற உபதேசத்தைச் செய்வது குருநாதர்களின் வழக்கம். அந்த உபதேசம் அந்தச் சமயத்தில் அந்த மாணாக்கனுக்கே உரிய சிறப்பான உபதேசம். அவன் ஒருவன் மாத்திரம் கேட்கும்படி செய்வதாலின் அது இரகசியம்.

## அருணகிரியார் பெற்ற பேறு

அருணகிரிநாதர் தம்முடைய துன்பங்களையெல்லாம் எடுத்துக் கூறி முருகனிடம் முறையிட்டார். அந்தக் கின்னங்களை முருகன் கேட்டான். அவற்றை எண்ணி இரகசியமாக உபதேசம் செய்தான். அதை உணர்ந்த போது அருணகிரியாருக்கு, "ஆகா! இது என்ன அற்புதமான உபதேசம்! உய்ய முடியுமா என்ற ஏங்கி நின்ற எனக்கு ஏற்ற உபதேசம். முருகன் என்னிடத்தில் தனியான அன்பு கொண்டல்லவா இந்த இரகசியத்தை எனக்குச் சொன்னான்? அவன் கருணையை என்னவென்று சொல்வது! இப்படி யார் அவனிடம் உபதேசம் பெற்றிருக்க முடியும்? நான் பெற்ற வேறு பெரும் பேறு; யாருக்கும் கிடைக்காத பேறு" என்று ஆனந்தக் கூத்தாடினார்.

## இரகசியம் வெளிப்பட்டது

முருகனுடைய இயல்புகளையும், திருவிளையாடல்களையும் அவர் ஆராய்ந்து உணரத் தலைப்பட்டார். அவன் வள்ளி நாயகியை மணந்துகொண்ட கருணைத் திருவிளையாடலைப் பற்றித் தெரிந்து கொண்டார். அதன் கருத்தை எண்ண எண்ண அவருக்கு உணர்ச்சி விஞ்சியது. முருகப் பெருமானுடைய பெருங் கருணைத் திறத்தைக் காட்டும் திருவிளையாடல் அது

என்பதை அவர் உணர்ந்தார். தமக்கு முருகன் எந்த நல்லுபதேசத்தை இரகசியமாக அருளினானோ, எத்தகைய இன்ப அநுபவத்தை அவன் பெறச் செய்தானோ, அதே கருணைச் செயலை உலகமெல்லாம் உணரும்படி காட்டியதே வள்ளி திருமணம் என்பதைத் தெளிந்தார். வள்ளியின் நிலை, அவள் இயல்பு, அவளுக்கும் முருகனுக்கும் உள்ள பழைய உரிமை, வேடரிடையே அப்பெருமாட்டி குறத்தியைப் போல வாழ்ந்த வகை, தான் வளர்ந்த குலத்துக்கு உரிய மரபுப்படி அவள் முருகனிடம் அன்பு பூண்டது, மற்றக் குறப் பெண்களைப்போலக் கிளி ஓட்டித் தினை காவல் புரிந்தது ஆகிய முன் கதைகளையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்தார். யோகமோ, ஞான விசாரமோ, நல்லவர் இணக்கமோ இல்லாத அப்பெருமாட்டியை அவள் இருந்த இடத்திற்கே உருமாறி வேடம் பூண்டு வந்து அவளிடம் காதல் பூண்டவன் போல அலமந்து ஏங்கி இரந்து, கோலம் மாறிக் காட்டி, இறுதியில் ஆனையைக் காட்டி, அப்பெருமாட்டி உயிருக்கு அஞ்சித் தன்னைச் சரணடையச் செய்து, ஆட்கொண்ட பெருங் கருணையை ஆழ்ந்து சிந்தித்தார். முருகன் தமக்கு உபதேசம் செய்து அருளநுபவம் துய்க்கும்படி அருளிய செயலுக்கும் அந்த வரலாற்றுக்கும் ஒப்புமை இருப்பதைக் கண்டார். வள்ளி நாயகியை முருகன் ஆட்கொண்ட வரலாறு முருகனுடைய கருணைச் சிறப்பைக் காட்டுவது. அந்தக் கருணையினால்தான் அவன் தம்மையும் ஆண்டு கொண்டான் என்பதை ஒப்பு நோக்கி உணர்ந்தார். 'நமக்கு யாரும் அறியாத இரகசியமாக உபதேசித்து, அநுபவம் பெற அருளியது இது என்று எண்ணியிருந்தோமே! அந்தக் காலத்தில் மலைவாணர் அறிய நடைபெற்ற வள்ளி திருமணத்திலேயே இந்தக் கருணை வெளியாகிக் கிடக்கிறதே!' என்று வியந்தார். அதை வித்தகமாகச் சொல்லப் புகுந்தார்.

**கின்னம் குறித்து அடியேன் செவி**
**நீ அன்று கேட்கச் சொன்ன**
**குன்னம், குறிச்சி வெளியாக்கி**
**விட்டது.**

தமக்கு இறைவன் அருள் கிட்டிய நாளை அன்று என்று சுட்டுகிறார். அதை அவர் நெஞ்சு மாத்திரம் அறியும்; நெஞ்சறி

சுட்டு இது. அந்த இரகசியத்தை மலை நாட்டு ஊர் வெளியாக்கி விட்டதாம். எப்படி வெளியாக்கியது? எதை வெளியாக்கியது – இவற்றிற்கு நேர்முகமான விடைகளைப் பாட்டில் காண முடியாது. ஆனாலும் குறிப்பாகப் பெற வைத்திருக்கிறார்.

## குறிப்பு

ஒரு வேடிக்கையான விடுகதை உண்டு.

"காயும் கோணற்காய் கொள்ளடா மைத்துனா
கதையும் விடுவித்தேன் சொல்லடா மைத்துனா"

என்பது அது. இந்த விடுகதையிலேயே விடையும் இருக்கிறது. கொள் அடா என்பது இதை ஏற்றுக் கொள் என்ற பொருளை முதலில் தந்து, பின்பு கொள் என்னும் தானியம் என்ற பொருளையும் தந்து விடையைப் புலப்படுத்துகிறது. அதுபோல, "உன் இரகசியத்தை இன்ன வகையில் வெளிப்படுத்தி விட்டது" என்று சொல்லாமல், முருகனைத் துதிக்கும் வார்த்தைகளிலே அந்தச் செய்தி புலப்படும்படி இணைத்திருக்கிறார்.

கோடுகுழல்
சின்னம் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னம் குறிச்சியில் சென்று கல்
யாணம் முயன்றவனே.

'கொம்பும் குழலும் வேறு சின்னங்களும் முழங்கக் குறிஞ்சி நிலத்தவர்களாகிய குறவர்களின் சிறு பெண்ணை முன்பு அவர்கள் ஊருக்கு வலியச் சென்று திருமணம் செய்து கொண்டவனே!" என்று முருகனை விளித்துத் துதிக்கிறார். இந்த விளியே அந்த இரகசியம் வெளிப்பட்டதைப் பொதிந்து வைத்திருக்கிறது.

இராமாநுஜர் கோபுரத்தின் மேல் ஏறித் திருமந்திரத்தை யாரும் அறியச் சொன்னாராம். முருகனோ மலைமேல் ஏறி யாரும் அறிய வெளியிட்டானாம்; மலைமேல் உள்ள ஊர் வெளியிடும்படி செய்துவிட்டதாம்.

வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்ட செயலிலே முருகனுடைய பெருங்கருணை வெளியாகிறது. ஐந்து முகமுடைய

சிவபிரான் ஆறுமுகமுடைய முருகனாக எழுந்தருளியதற்குக் காரணம் எதுவோ அது அந்த மணத்தில் வெளியாகியது. அப்படி வெளியான இரகசியம் என்னவென்பதைச் கூர்ந்து பார்க்கலாம்.

## அதுவும் இதுவும்

முருகன் தேவர்களுக்கெல்லாம் பெரிய தலைவன்; அவர்களுடைய வாழ்வுக்கு ஆதார பூதமானவன். அவனுக்குக் கந்தர்வ லோகத்தில் திருமணம் நடக்க வேண்டும். தேவர்கள் அனைவரும் தங்கள் முழு ஆற்றலையும் காட்டி, மண்டபம், பந்தல் முதலிய அமைப்புகளை நிறுவி அலங்காரம் செய்ய, தேவர்களும் ஞானியரும் குழுமிய அலங்காரப் பெரு மண்டபத்திலே திருமணம் நிகழ வேண்டும். தேவயானைக்கு அப்படித்தான் நடந்தது. ஆனால் வள்ளியம்மை திருமணம் மலை நிலத்துச் சிற்றூராகிய குறிச்சியிலே நடந்தது. குறவரும் குறத்திமாருமே திருமணத்திற்கு வந்தார்கள். மணமகளோ குறிஞ்சிக் கிழவர் சிறுமி.

தேவலோகத்தில் கல்யாணம் நடந்தால் ஒரு பால் மறை முழங்கும்; ஒரு பால் தேவதுந்துபி இயம்பும்; ஒருசார் தும்புரு நாரதர் வீணை வாசிப்பார்கள்; ஒரு பால் நந்தியும் திருமாலும் முழவு இசைப்பார்கள்; அரம்பைமார்கள் ஆடுவார்கள்; கின்னரர் கீதம் பாடுவார்கள்; கந்தருவரும் வித்தியாதரரும் இன்னிசை எழுப்புவார்கள். இவற்றில் ஒன்றையும் விரும்பாமல் முருகன் ஓடிவந்தான். இங்கே என்ன வாத்தியங்கள் முழங்கின? குறவர்கள் ஊது கொம்பை ஊதினார்கள்; மூங்கிலைத் துளைத்த குழலை ஊதினார்கள்; இன்னும் என்ன எனனவோ சின்னங்களை ஊதினார்கள். தேவலோகக் திருமணக் காட்சி எங்கே! இந்த மலைக் காட்டுக் கல்யாணம் எங்கே!

''வள்ளி கல்யாணத்தில் என்ன என்ன கச்சேரி?'' என்று தேவலோகவாசிகள் கேட்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். என்ன சொல்லும்படி இருக்கும்? ''நூறு தம்பட்டங்கள், இரு நூறு தாரைகள், முந்நூறு ஊது கொம்புகள், நானூறு குழல்கள்'' என்று சொல்ல வேண்டும். அவர்கள் அதைக் கேட்டுச் சிரிப்பார்கள். தாரை ஊதுவதாக எண்ணிக் கொண்டு காதைப் பொத்திக் கொள்வார்கள். அவர்களுக்கு அவற்றை நினைத்தாலே அருவருப்பாக இருக்கும்.

ஆனால் முருகன் அந்தக் கல்யாணத்தைத்தான் விரும்பினான். வள்ளியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் என்ன? தேவ லோகத்தில் அதை நடத்தும்படி ஏற்பாடு செய்யக் கூடாதோ? அந்தக் குறவர்களோடு குறவனாய் இருந்து குதூகலம் அடைந்தான்.

சிறப்பான கல்யாணத்தை அவன் அநுபவத்தில் கண்டிருக் கிறான். இதற்குமுன் தேவயானையை மணம் புரிந்து கொண்ட போது இந்திரலோகமே களிக் கூத்தாடியது. கண் கொள்ளாக் காட்சி. அந்தக் கல்யாணத்தில் தேவராஜனுடைய பெண்ணைத் தன் அருகில் இருக்கச் செய்து மணந்தவனே இப்போது அந்தக் குறக் கல்யாணத்தைச் செய்து கொண்டான். என்ன ஆச்சரியம்! அவனுக்கு என்ன, பைத்தியமா பிடித்துவிட்டது?

தேவானையை இந்திரன் வலிந்து திருமணம் செய்து கொடுத் தான். அவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி முருகன் அப் பிராட்டியை மணந்தான். இங்கே எத்தனை இடையூறுகள்! எத்தனை ஏச்சுப் பேச்சுகள்! அவ்வளவையும் பொறுத்துக் கொண்டான். தானே வலியச் சென்று தன் நிலையைக் குறைத்துக் கொண்டு குறவருக்கு ஏற்ற குறவனாக நின்றான். மாமுனிவருக்கு உறவாகிய ஞானமூர்த்தி கொலை வேடனாக வந்தான். என்றும் இளைய னாகிய அவன் கிழவனாக வந்தான். கற்பகதரு நீழலில் வாழும் வாழ்வை இந்திரனுக்கு அருளிய வள்ளல் வேங்கை மரமாக நின்றான். வேட வேடம் போட்டுப் பல்லைக் காட்டினான்; வேங்கை மரமாகப் பிரமித்து நின்றான்; அவள் காதலால் கூனிக் குறுகிக் கிழவனாக வந்தான். என்ன வேற்றுமை!

இங்கே எத்தனைக்கு எத்தனை குறைபாடும் தாழ்வும் உள்ளனவோ, அத்தனைக்கு அத்தனை முருகன் காதலும் மகிழ்ச்சி யும் மீதூர நின்றான். அவன் நினைத்திருந்தால் இந்தக் குறிச்சி யையே அமராவதி நகரம் போல ஆக்கியிருக்கலாம். பூதகணங் களை அழைத்து ஏவினால் இரவோடு இரவாகக் காட்டையெல்லாம் அழித்து அற்புதமான திருமண மண்டபத்தை அமைத்திருக்கும். குறவாணர் குன்றில் குறவாணர் கல்யாண மாகவே இருக்க வேண்டுமென்று அவுன் விரும்பினான்.

ஏழை வீட்டுக்குச் செல்வரான விருந்தாளி ஒருவர் வருகிறார். அவர் மிகவும் நல்லவர். வந்தவுடன், ''எனக்காக ஒன்றும் அதிக மாகச் செய்ய வேண்டாம். நீங்கள் எதைச் சாப்பிடுகிறீர்களோ, அதைப்

போடுங்கள் போதும். வெறும் வற்றல் குழம்பு வையுங்கள்'' என்று சொல்கிறார். இப்படிச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

முருகனும் அவ்வாறே சொன்னான் போலும்! ''எனக்கென்று வேறு ஊர் வாத்தியங்களை அழைக்க வேண்டாம். உங்கள் ஊரில் உள்ள கொம்பும் குழலும் போதும்'' என்று சொல்லியிருப்பான்.

## வள்ளி திருமணம்

அருணகிரி நாதருக்குச் சொன்ன உபதேசம் எதுவோ, அதன் வெளியீடாக இருப்பது வள்ளியம்மை திருமணம். அடியவரை ஆட்கொள்ளும் செயலும் அந்தத் திருமணச் செயலும் ஒரே பயனை உடையவை. வெவ்வேறாகத் தோற்றினாலும் இரண்டும் முருகன் பெருங்கருணையை மேற்கொண்டு, தக்க பக்குவம் இல்லா திருப்பினும் தன்னை ஓரளவு நினைத்த அளவிலே அப்படி நினைப்பவர்பால் தானே வலியச் சென்று ஆட்கொள்வான் என்ற உண்மையைக் காட்டுகின்றன.

வள்ளி திருமணம், முருகன் ஆன்மாவை வலியவந்து தடுத்தாட் கொள்ளும் கருணைத் திருவிளையாடல். வள்ளி நாயகி தவ முனிவருக்கும் மானுக்கும் பெண்ணாகப் பிறந்தவள். அதற்கு முன் திருமாலின் பெண்; முருகனை மணக்கும் உரிமை உடைய வள். ஆயினும் வள்ளிமலையில் நம்பிராஜனுடைய பெண்ணாக வளர்ந்தாள். தான் குறமகள் என்றே எண்ணி வாழ்ந்தாள். குறமகளிருடைய பழக்க வழக்கங்களையே மேற்கொண்டாள். வேடர்களுக்கு நடுவே இருள் அடர்ந்த காடுகளில் யானையும் பிற விலங்கினங்களும் திரியும் குறிஞ்சி நிலத்து ஊரில் வாழ்ந் தாள். தினைப் புனத்தில் அந்தப் புன்செய்த் தானியத்தைக் காவல் காத்துக் கொண்டு கிளி முதலியவற்றை ஓட்டினாள்.

ஆன்மாவும் இந்த நிலையில்தான் இருக்கிறது. இறைவனோடு ஒன்றி வாழும் உரிமையையுடைய அது பிரபஞ்சமாகிய காட்டில் ஆணவமென்னும் யானையும் காமம் கோபம் முதலிய விலங்கினங் களும் திரியும் சூழலில் ஐம்புலமாகிய வேடர்களிடையே வாழ்கிறது. சிற்றின்பமாகிய தினையைத் தனக்குரியதாக எண்ணி அதை நுகர்வதில் பற்றுடையதாகிப் பகையும் அழுக்காறும் பிறரை வெருட்டும் இயல்பும் வளரத் தன் உரிமையை மறந்து நிற்கிறது.

வள்ளிநாயகி குறவாணர் குல வழக்கத்தின்படி முருகனை எண்ணி அன்பு செய்தாள். வேறு வகையான சாதனம் ஒன்றும் பயிலவில்லை. முருகன் தான் உள்ள இடத்துக்கு அவள் வரட்டும் என்று காத்திராமல், அவள் உள்ளத்தில் உள்ள சிறிதளவு அன்பையே பற்றுக் கோடாகக் கொண்டு அவளை ஆட்கொள்ள வந்தான்.

பக்தி நெறியில் ஓரளவு புகும் ஆன்மாவுக்கு இன்னும் பக்குவம் நிரம்ப வேண்டும் என்று காத்திராமல் அருள் செய் வதற்கு முருகன் எழுந்தருளுவான்.

வள்ளியம்மையினிடம் தன் திருவுருவத்தைக் காட்டி, என்னை மணந்து கொள் என்றால் அப்பெருமாட்டி உடனே வணங்கி முருகனிடம் ஈடுபட்டிருப்பாள். அவன் அவ்வாறு செய்யாமல் வேடனாகி வந்தான்; வேங்கை மரமானான்; கிழ வனாக வந்து கெஞ்சினான். வள்ளிநாயகியின் கற்பு நெறியைச் சோதிக்கச் செய்த சோதனைகள் அவை. சோதனை வந்தால் உள்ளே மறைந்து கிடக்கும் ஆற்றல் வெளிப்படும். முருகன் காளைப் பருவ வேடனாகி வந்து நயந்தும் பயந்தும் பேசிய பேச்சுக்களிலே வள்ளி நாயகி மயங்காமல் இருந்தாள். அதனால் வருந்தினவனைப் போல முருகன் பாவனை செய்தாலும் அவன் திருவுள்ளத்தில் மிக்க மகிழ்ச்சி கொண்டான். நம்முடைய சோதனைகளில் இவள் வெற்றி பெறுகிறாள் என்று உணர்ந்து பெருமிதம் அடைந்தான்.

## சோதனையும் போதனையும்

அன்புடையவனைத் தடுத்தாட் கொள்ள வரும் இறைவன் அவனைச் சோதிக்க முற்படுகிறான். சோதனையும் போதனையும் இறைவன் அடியார்களிடம் செய்கிறான். சோதனையினால் அன்பருடைய அன்பு பின்னும் முறுகி உரம் பெறுகிறது. நன்றாகப் படித்த மாணாக்கன் பரீட்சைக்கு அஞ்சாமல் அதில் தன் ஆற்றலைக் காட்டி வெல்வதைப் போல, உலகில் உண்டாகும் இடையூறுகளையெல்லாம் இறைவன் திருவருளென்றே எண்ணிச் சோதனைகளில் தேர்ச்சி பெறுகிறார். அப்போது இறைவன் போதனை செய்கிறான். இறைவன் பல சந்தர்ப்பங்களில் நாம் அறிவு பெறும் வகையைக் காட்டுகிறான். அந்த அநுபவங்களினால்

தெளிவு பெறுவோமானால் நம் பக்குவம் உயர்கிறது. இல்லை யானால் பிரபஞ்சச் சேற்றில் அமிழ்ந்து போக வேண்டியதுதான்.

வள்ளிநாயகிக்கு முன் விநாயகரை யானையாக வரச் செய் தான் முருகன். அந்த யானையைக் கண்டு அஞ்சி முருகா என்று கதறிக் கிழவனாக வந்த அவனைச் சார்ந்தாள். அப்போது முருகன் தன் திருவுருவத்தைக் காட்டி அருள் புரிந்தான். யானையைக் கண்டவுடன் வள்ளிநாயகிக்கு, ''உயிர் போய்விடும்'' என்ற அச்சம் உண்டாயிற்று. அவள் உள்ளத்தில் அப்போது முருகனுடைய நினைவு உச்சநிலையில் எழுந்தது. உயிருக்கு மோசம் வரும் என்ற உணர்வு வரும்போதுதான் இறைவனிடம் உரமான பக்தி எழும்.

''ஆவிக்கு மோசம் வருமாறு
அறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றி
லேன்வினை தீர்த்தருள்வாய்''

என்று கந்தரலாங்காரத்தில் பின்னே ஒரு பாட்டில் அருணகிரி நாதர் சொல்லப் போகிறார்.

இறைவனையன்றி வேறு துணையில்லை என்பதை ஒருவன் மற்றச் சமயங்களில் தெளிவாக உணர முடிவதில்லை. மரணத் துன்பத்தை உள்ளவாறு அறிந்தால்தான் அந்த உணர்ச்சி ஏற்படும். வள்ளியம்மைக்கு அத்தகைய உணர்வு வந்தபோது முருகன் ஆட்கொண்டான்.

வள்ளிநாயகி திருமணம் ஆன்மா பரமான்மாவோடு ஒன்று படும் திருமணம். வேறு வேறு வகையில் சாதனம் புரிந்து பக்குவம் உயர்ந்தால் இறைவன் திருவருளுக்கு ஆளாவது முறை. முருகனோ தன்னை நம்பின அடியவனிடம் பக்குவக் குறைபாடு இருந்தாலும் கருணை மிகுதியால் அவனை நாடி வந்து சோதனை செய்து ஏற்றுக் கொண்டு இன்பம் அருளுகிறான். பக்தனுக்குள்ள பக்குவக் குறைவை முருகனிடம் உள்ள கருணை மிகுதி, பொருட் படுத்தாமல் நிரப்புகிறது.

## அநுபவ ஒற்றுமை

இந்த அநுபவத்தை வள்ளிநாயகி பெற்றாள். அருணகிரி யாரும் பெற்றார். மற்றவர்களைப் போலவே உலகியலில் உழன்ற

அவருக்கு முருகன்பால் அன்பு முகிழ்த்தது. முருகன் பெருங் கருணையை மேற்கொண்டு தடுத்தாட் கொண்டான். பலவகைச் சோதனைகளைச் செய்து பக்குவம் ஏற்றிப் போதனை செய்து ஆட்கொண்டான். அவருடைய துன்பங்களைத் திருவுள்ளத்தில் அடைத்து வலியத் தடுத்தாட்கொண்டு அவர் செவி கேட்கும் வண்ணம் போதனை புரிந்தான்.

கின்னம் குறித்தடியேன் செவி
நீ அன்று கேட்கச் சொன்ன
குன்னம்

என்று அந்தப் போதனையையே குறித்தார்.

வள்ளிநாயகியிடத்தும் இந்தச் சோதனையும் போதனையும் நிகழ்ந்தன. அருணகிரிநாதர் பெற்றதை அவர் ஒருவரே அறிவார். வள்ளிநாயகி பெற்றதை அன்று மலைநாட்டு ஊராகிய குறிஞ்சி முழுவதும் அறிந்தது. 'கோடு குழல் சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை, முன்னம் குறிச்சியில் சென்று கல்யாணம் முயன்ற போது அந்தக் குறிச்சி, அடியார்களிடம் இரகசியமாக நிகழும் சோதனையையும் போதனையையும் வெளியாக்கிவிட்டது.

'முருகன் பெருங் கருணை உடையவன்; பக்குவத்தில் குறைபாடு இருந்தாலும் வலியவந்து தடுத்தாட் கொள்வான்; சோதனையால் பக்குவத்தை முறுகச் செய்து போதனையால் இன்ப அநுபவத்தை வழங்குவான்' என்ற இரகசியத்தை அருணகிரிநாதர் அறிந்தார். அது தமக்கு மாத்திரம் தெரிந்த இரகசியம் என்று நினைத்தார். ஆனால் அது மலைநாட்டு ஊர் அறிந்த இரகசியம் என்பதைப் பின்பு உணர்ந்தபோது, ''முருகா, நீ எனக்குச் சொன்ன இரக சியத்தை முன்பே குறிச்சி வெளியாக்கி விட்டதே!'' என்று அவனைப் பார்த்தே சொல்கிறார்.

கின்னம் குறித்துஅடி யேன்செவி
நீ அன்று கேட்கச்சொன்ன
குன்னம், குறிச்சி வெளியாக்கி
விட்டது; கோடுகுழல்
சின்னம் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னம் குறிச்சியில் சென்று
கல்யாணம் முயன்றவனே!

*(ஊது கொம்புகளும் பலவகையான குழல்களும் பிற சின்னங்களும் முழங்க, முன் ஒரு காலத்தில் குறிஞ்சி நிலத்து ஊருக்குப் போய்க் குறிஞ்சி நிலத்துக்கு உரியவர்களாகிய குறவாணர்களுடைய சிறு மகளாகிய வள்ளியைத் திருமணம் புரிந்து கொண்டவனே! அடியேன் பட்ட துன்பங்களைப் போக்க எண்ணி, அடியேனது செவி கேட்கும்படியாக நீ அன்று திருவாய் மலர்ந்தருளிய இரகசியத்தை அந்தக் குறிஞ்சி நிலத்து ஊர் யாரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தி விட்டது.*

*பசி குறித்துத் தந்த உணவு என்னுமிடத்துப் பசியைப் போக்குவதை எண்ணித் தந்த உணவு என்று பொருள்படுவது போல, இங்கே கின்னத்தைப் போக்குதலை எண்ணி என்று பொருள் செய்ய வேண்டும். கின்னம் – துன்பம். ''நினைவார், கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே'' என்று அநுபூதியில் பாடுவார். செவி கேட்கச் சொன்னது உபதேசம். குன்னம் – இரகசியம்; குஹ்யம் என்பதன் திரிபுபோலும். குறிச்சி – குறிஞ்சி நிலத்து ஊர்; வேடர் வாழும் இடம்; 'குறிஞ்சி புக்க மான் போலவும்' என்பது பழைய உரைகாரர்கள் கூறும் உவமை. வெளி யாக்குதல், யாவரும் எளிதில் அறியச் செய்தல். ஒருவர் செவிக்கு மாத்திரம் கேட்கும்படி சொன்ன மறையை யாவரும் முயற்சியின்றியே எளிதில் உணரும்படி அந்தக் குறிச்சி செய்து விட்டது.*

*அடியேன் செவி கேட்க அன்று நீ சொன்ன என்று கூட்டுக. அன்று: நெஞ்சறி சுட்டு. குன்னத்தைக் குறிச்சி வெளியாக்கி விட்டது.*

*கோடு–ஊது கொம்பு. குழல் – மூங்கிலால் செய்த புல்லாங்குழல். சின்னம் – தாரை முதலியன. குறிக்க – ஒலிக்க. குறிஞ்சிக் கிழவர். குறிஞ்சி நிலத்தில் வாழும் உரிமையுடையவர்கள்; வேட்டுவர். முன்னம் – பழங்காலத்தில், சென்று – தானே வலியச் சென்று. முயன்றவன் – புரிந்தவன்.*

# அந்தகா! வந்து பார்!

மனிதன் வாழ்ந்தால் அவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் நிச்சயமாக ஓர் அநுபவத்தைப் பெறத்தான் வேண்டும். அவன் ஞானியாய் இருந்தாலும் அஞ்ஞானியாய் இருந்தாலும், செல்வம் பெற்ற சீமானாக இருந்தாலும், வறுமை வாய்ப்பட்டு உழலும் ஏழையாய் இருந்தாலும், கலை வல்லு நனாய் இருந்தாலும் கலைஞானம் சிறிதுமில்லாக் கசடனாக இருந்தாலும், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் நிச்சயமாக அதற்கு உட்பட்டே ஆக வேண்டும். மற்ற அநுபவங்கள் எல்லோருக்கும் பொது என்று சொல்ல இயலாது. எல்லோரும் கல்யாணம் பண்ணிக் கொண்டு இருப்பார்கள் என்று சொல்ல வழி இல்லை. பிரம்மசாரியாகவே இருப்பார்கள் என்று சொல்ல வும் முடியாது. வாழ்நாளில் பலவிதமான ஜுரமும் அடைந்தார் கள் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கலாம். ''ஒருமுறைகூட எனக்கு ஜுரம் வந்ததே கிடையாது'' என்கின்ற மக்களும் இருக் கிறார்கள். ஆனால், நிச்சயமாக ஒரு சம்பவம் எல்லோருடைய வாழ்க்கையிலும் நிகழும். அதுதான் மரணம். பிறந்தவர் எல்லோரும் மரணம் அடைவது என்பது உறுதி.

## அதிசயம்

தர்மபுத்திரரைப் பார்த்து ஒரு யட்சன், ''இந்த உலகத்தில் எது அதிசயம்?'' என்று கேட்டானாம். ''பிறந்தவர்கள் இறந்து போவது நிச்சயம் என்பதை உணர்ந்தும், அதை மறந்து, மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்களே, அது பெரிய அதிசயம்'' என்று அவர் சொன் னாராம். அந்த விடை, உலகில் பிறந்த மக்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் செய்யாவிட்டாலும், மரணம் என்ற சம்பவத்திற்கு .ட்பட்டே ஆகவேண்டுமென்பதை நினைப்பூட்டுகிறது.

## அஞ்சுதலும் விஞ்சுதலும்

மரணத்தைக் கண்டு, அதனாலே வருகின்ற துன்பத்தை நினைந்து நாம் வருந்துகிறோம். நாம் என்ன? பல காலம் இறைவன் திருவருளில் ஈடுபட்ட பல பெரியோர்களும் அஞ்சியிருக்கிறார்கள். அந்த அச்சத்தைப் கடந்தவர் மிக அரியர். அந்தத் தைரியம் யாருக் கேனும் இருக்குமானால், அதை உண்டாக்கியது பெரிய அருள் என்றே சொல்ல வேண்டும். அதைப் பெறும்வரையில் பலர் அஞ்சி யிருக்கிறார்கள். பின்னர் அஞ்சாமல் விஞ்சியும் இருக்கிறார்கள்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

என்று பாடிய அப்பரைப் போலவே ஆழ்வாரும்,

"நாவலிட்டுழிதர் கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே"

என்கிறார்; "எங்கள் உயிரைக் கொண்டு போவதற்கு யமன் தூதுவர் வந்தால் அவர்கள் தலையில் ஏறி மிதிப்போம்" என்று கூறுகிறார்.

## அருணகிரியார் செய்த புதுமைகள்

இப்படிப் பேசிய கூட்டத்தினரில் ஒருவர் அருணகிரிநாதர். அவரும் முன்னோர்கள் சொன்னதையே சொன்னாலும், அவர் சொல்வதில் ஒரு புதுமை இருப்பதைக் காணலாம். அவர் பல புதுமைகளைச் செய்திருக்கிறார். அவருடைய பாடல்கள் எல்லாம் இயற்பாட்டாகவும், இசைப் பாட்டாகவும் அமைந்தவை. இலக்கிய மாகப் படித்துச் சுவைத்தாலும், இசையாகச் சந்தத்தோடும் தாளத் தோடும் பாடக்கூடிய வகையிலும் அமைந்தவை அவை. சந்தப் பாட்டுக்களை மிகுதியாகப் பாடிய பெருமை அருணகிரிநாத ருடையது. இது ஒரு புதுமை.

அவருக்கும் முந்தி, பல பேர்கள் எத்தனையோ தெய்வங் களைப் பற்றிப் பாடினார்கள். ஆனால், அவரவர்கள் அவரவர் களுடைய உபாசனா தெய்வத்தை உயர்த்தியும், மற்ற மற்றத் தெய்வங்களைத் தாழ்த்தியும் பாடியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது இந்தக் காலத்துச் சமரச ஞானிகளுக்கு, "ஒருவருக்கொருவர் பகை உண்டாகும் வகையில் இவர்கள் கூடப் பாடியிருக்கிறார் களே!" என்று தோன்றும். அருணகிரி நாதரோ இக்காலத்தவரும் போற்றும் சமரச ஞானம் படைத்தவர். திருமாலினுடைய

பெருமையாகவே பாடி வருவார். கடைசியில் அத்தகைய பெருமை வாய்ந்த திருமாலின் மருகோனே என்று முருகனைக் குறிப்பிடு வார். திருமாலைத் தாழ்வாகச் சொல்ல மாட்டார்; சிறப்பாகவே புகழ்வார். ஓரிடத்தில் அம்பிகையின் அர்ச்சனையாகவே பாட்டு வரும். அவளுடைய திருமகனே எனக் கடைசியில் தம் வழிபடு கடவுளாகிய முருகனை அழைப்பார். இப்படி முருகப் பெரு மானுடைய பெருமையை மற்றத் தெய்வங்களின் சிறப்போடு இணைத்துப் பார்க்கும் உள்ளம் அருணகிரிநாதருடையது. அவரது சமரச உள்ளமாகிய பீடத்தில் கொலுவீற்றிருந்து நடுநாயகமாக ஒளிவிட்டு வாழ்கிறவன் முருகன். இந்தப் புதுமையை அருணகிரி யார் செய்தார்.

மற்ற அடியார்களைப் போலவே, ''எனக்கு எமனைக் கண்டு பயம் இல்லை. மரணப்ரமாதம் நமக்கில்லையாம்'' என்று பாடினார். சிலர், ''யாரைக் கண்டாலும் பயமில்லை'' என்று தம் பக்கத்தில் யாரும் வராத வரையில் பேசுவார்கள். வந்துவிட்டால் தலை மறைந்து ஓடி விடுவார்கள்; அல்லது கோழையைப் போலப் பேசுவார்கள். அருணகிரிநாதர் அத்தகையவர் அல்ல. எமனையே நேருக்கு நேர் நிறுத்தி வைத்து, முன்னிலைப் படுத்தி இப்பாட்டில் பேசுகிறார். இதுவும் ஒரு புதுமை.

தண்டா யுதமும் திரிசூல
 மும்விழத் தாக்கிஉன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
 வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத
 ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாஅந்த கா! வந்து
 பார் சற்றுஎன் கைக்கெட்டவே.

நேரே ஒரு தடி எடுத்து, எமன் தலையில் அடிக்கிறது போல இந்தப் பாட்டைப் பாடுகிறார். இப்படி அறைகூவுவதால் என்ன பயன் என்று சிலருக்குத் தோற்றும்.

இப்படி வாயினால் பேசுவதற்கே ஒரு தைரியம் வேண்டும். அந்தத் தைரியத்தை அருணகிரிநாதர் பெற்றிருக்கிறார். எமனைப் பற்றி நினைந்து நினைந்து, சாம்பிச் சாம்பி, ''ஐயோ செத்துப்

போய்விடுவேனே!'' என்று புலம்பிப் புலம்பி ஒவ்வொரு விநாடியும் நலிந்து கொண்டிருக்கிற மக்களுக்கு தம் நிலையை விளம்பரப் படுத்திக் கொள்வதற்காக அருணகிரிநாதர் இதைப் பாடவில்லை. நம்மைப் போன்ற மக்கள் முருகவேளின் திருவடியைப் பற்றிக் கொள்ள வேண்டும், எமனை நினைந்து குமைந்து குமைந்து வாழ்ந்து மடிகின்ற நிலையினின்று மீட்சி பெறவேண்டும் என் பதற்காகப் பாடினார். இந்தப் பாட்டைப் பாடி, அச்சத்தைப் போக்கி உய்வு பெறவேண்டும் என்பதே அவர் திருவுள்ளம்.

## அச்சத்தைப் போக்கும் வழி

அச்சம் என்பது மனத்தில் உதிப்பது. நெளிந்து போகின்றவற்றை எல்லாம் பார்த்து, ''பாம்பு பாம்பு'' என அலறுகின்ற மக்கள் இருக்கிறார்கள். ஆனால் பாம்புப் பிடாரன் அந்தப் பாம்போடு விளையாடுகிறான். பாம்பு கடித்தால் விஷம் அவன் உடம்பில் ஏறும். ஆறு அறிவு படைத்த மனிதன் கிடக்கட்டும். ஒரு சின்னக் கீரிப்பிள்ளை. பாம்பு கடித்தால் உடனே செத்துப்போகும். ஆனால் அது பாம்போடு விளையாடுகிறதே. பாம்பைக் கண்டு அது நடுங்குவது இல்லையே! காரணம் பாம்பின் நஞ்சு அதனிடத்தில் பலிக்காது என்பது அல்ல. நம்மைப் போல அது பயந்து நடுங்கு வது இல்லை. பாம்போடு சண்டைபோடுகிறது. எந்த இடத்தில் பற்றினால் பாம்பால் தன்னைக் கடிக்க முடியாதோ அந்த இடத்தில் பற்றிவிடுகிறது. பாம்பைக் கண்டவுடனே நம் உள்ளங் களில் ஏற்படுகிற கிலி அந்தச் சிறிய பிராணிக்குக் கிடையாது. அதனாலேதான் அது பாம்பைப் பிடித்துப் பிடித்து விளையாடு கிறது. நமக்குப் பாம்பு கால்வாசி, பயம் முக்கால்வாசியாக இருக்கின்றன.

எமனைப் பற்றி நினைக்குந்தோறும் உள்ளத்தில் பயந்து பயந்து கிலி பிடித்துச் சாகின்ற நாம், ''எமன் என்னை ஒன்றும் செய்ய முடியாது; எமன் என் அருகில் வந்தாலும் அவனைக் கொன்று வீழ்த்துவேன்'' என்று சொல்லிச் சொல்லி உள்ளத்தில் முறுக்கு ஏற்றித் தைரியத்தைப் பெற வேண்டும் என்ற கருணை யினால் இந்தப் பாட்டின் வாயிலாகச் சிறந்த உபதேசத்தைச் செய்கிறார் அருணகிரியார்.

## மெஸ்மெரிஸம்

'மெஸ்மெரிஸம்' என்ற வித்தையை நீங்கள் அறிவீர்கள். மருந்து கொடுப்பதில்லை. மென்மையான உள்ளம் படைத்தவனை அப்படியே அமர வைத்து, ''நீ தூங்கப் போகிறாய். இதோ நீ தூங்கப் போகிறாய்!'' என்று வித்தை வல்லவன் சொல்லிக் கொண்டே இருக்கிறான். ''நான் தூங்க மாட்டேன்' என இவன் நினைத்துக் கொண்டிருந்தாலும் அவன் கூறுகின்ற சொற்கள் காதுவழியாகப் புகுந்து, கல்லாய் இருக்கிற உள்ளத்தைத் தாக்கி, 'நான் தூங்கிவிடுவேன் போலிருக்கிறதே' என நினைக்கச் செய்து, கொட்டாவி விடப்பண்ணி, ''நான் தூங்கி விடுவேன்' என்ற முடிவையும் ஏற்படுத்தி விடுகிறது. 'தூங்கப் போகிறேன்' என்று மனத்தில் தோற்றிய எண்ணம் அவனைத் தூங்கவே பண்ணிவிடு கிறது. நல்ல ஆற்றல் உடையவனும் தூங்கிப் போய்விடுகிறான். விஞ்ஞான அறிவிலே தலைசிறந்து விளங்கும் மேல்நாட்டார் செய்கின்ற வித்தை இது. இந்த வித்தையை நாம் பார்க்கிறோம்.

இதைப் போலவே ஒருவன், ''நான் செத்துப் போவேன்'' என்று உள்ளத்தில் எண்ணி எண்ணி அஞ்சிக் கொண்டிருக்கிறான்; கடைசியில் செத்தே போகிறான். ''நான் சாக மாட்டேன்; எமனைக் கண்டு அஞ்சமாட்டேன்'' என்று நினைக்கிற ஆற்றலை உள்ளத்தில் பெற்றோமானால் அந்த நினைப்பினால் உள்ளத்தில் முறுக்கு ஏற, இறைவன் திருவருளைப் பற்றிக் கொண்டு மரண மில்லாப் பெருவாழ்வைப் பெற முடியும். உண்மையில் எத்தனையோ தாய்மார்கள், காய்ச்சலால் அவதிப்படுகின்ற தங்கள் குழந்தை களுக்குத் தெய்வத்தை நம்பி விபூதியைப் பூசிவிட்டு கந்தர் அலங்காரமோ, திருமுருகாற்றுப்படையோ, கந்தர் அநுபூதியோ பாராயணம் செய்து கொண்டிருக்கவில்லையா? நெஞ்சில் உறுதி யிருக்குமானால் நிச்சயமாக நோய் தீர்ந்துவிடும்.

## நினைப்பில் வலிமை

மேல்நாட்டினரிற் சிலர் 'ஆட்டோ ஸஜ்ஜஷன்' (Auto Suggestion) என்ற இம்முறைப்படி பல வியாதிகளைக் குணமாக்கி வருகிறார்கள். நோய் உடைய ஒருவன், ''எனக்கு நோய் இல்லை; எனக்கு நோய் போய்விட்டது'' என்று சொல்லிக் கொண்டே

இருந்தால், அவன் சங்கற்பம் செய்து கொண்ட நினைப்பினால் உடம்பில் முறுக்கு ஏறி, நரம்பில் முறுக்கு ஏறி, நோய் தீர்ந்த வனாகிறான். ''யத்பாவம் தத்பவதி'' என்பது ஒரு வடமொழி வாக்கியம். 'எதை நினைக்கிறானோ அது கிடைக்கிறது' என்று பொருள்.

'நான் சக்தி உடையவன்; வல்லமை உடையவன்; எமனை வெல்பவன்' என்ற நினைப்பினால் எப்படிச் சக்தி ஏறி, முறுக்கு ஏறிச் சக்தியையும் வல்லமையையும் உடையவனாக ஆகின்றானோ, அதேபோலத்தான் ஒருவன், 'எனக்குச் சக்தி இல்லை; வல்லமை இல்லை' என்ற நினைப்பினால் உடல் சக்தி தளர்ந்து, முறுக்குத் தளர்ந்து சக்தி அற்றவனாகவும், வல்லமை அற்றவனாகவும் ஆகிவிடுகிறான். உள்ளத்தில் ஏற்படும் பயத்தினாலேயே கட்டு விட்டு உடம்பு நலிகிறது. ''எந்தக் காரியத்தையும் சாதிப்பேன்'' என்று நினைக்கிற நினைப்பு நரம்பில் முறுக்கு ஏற்றிப் பல காரியங்களைச் சாதிக்கச் செய்கிறது. காம உணர்ச்சி மிகுதியாக உள்ளவன் மனத்தில் ஏறுகின்ற முறுக்கு, தான் விரும்பிய பெண்ணையே எத்தனை துன்பம் வந்தாலும் பெறும்படியாகச் செய்யவில்லையா? 'அகப்பட்டுக் கொள்ளக் கூடாது; எப்படியும் தப்பிவிட வேண்டும்' என்ற எண்ணம் மனத்தில் முறுக்கு ஏறிய திருடன் ஏற முடியாத பெரிய மாடியில் ஏறிக் குதிப்பதில்லையா? சாதாரண நேரத்தில் அக்காரியங்களை அவர்களால் செய்ய முடியாது.

ஆகவே, எமனை எதிர்க்கின்ற முறுக்கை நம் உள்ளங்களில் ஏற்ற வேண்டுமென்ற கருத்தினால் அருணகிரிநாதர் இந்தப் பாட்டைச் சொன்னார். இதைப் பலமுறை சொல்லிச் சொல்லிப் பழகினால் எமனைக் கண்டு அஞ்சுகின்ற கிலி பறந்து போய் விடும். அதுவே முக்காற் பங்கு கால ஜயம் என்று சொல்லவேண்டும்.

''துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்''

என்று திருமூலர் பேசுகின்றார். ''எவன் சந்தேகப்படுகிறானோ, அவன் அழிந்து ஒழிகிறான்'' என்று கீதை சொல்கிறது. ஆகவே, சந்தேகத்தை நீக்கித் துணிவுடன், ''என்னை எமன் ஒன்றும் செய்ய முடியாது. எமனை நான் முருகப் பெருமானின் அருளைக் கொண்டே கொன்று விடுவேன்'' எனச் சொல்லிச் சொல்லி, நம்

உள்ளத்தடத்தில் பேயாக நடம்புரிகின்ற அச்சத்தை விரட்டி அடித்தால், நிச்சயமாக நலிவு இல்லை. எமனை விரட்டக்கூடிய ஆற்றல் உண்டாகிவிடும். ஒரு பெரிய கோபுரத்தின் மேல் ஏற வேண்டுமென்றால் மெல்ல மெல்ல ஒவ்வொரு படியாகத்தானே ஏறியாக வேண்டும்? அந்தப் பெரிய ஆற்றலைப் பெறுவற்கு நாம் ஒவ்வொரு படியாக முன்னேற வேண்டும். அதற்கு உதவுபவை பெரியவர்களுடைய வாக்குகள். அருணகிரிநாதப் பெருமானுடைய வாக்கும் நமக்கு அவ்வாறே பயன்படுகிறது.

உடம்பை எடுத்த பின் நாம் ஒவ்வொரு கணமும் படுகின்ற கவலைகள், அஞ்சுகின்ற அச்சங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உடம்பையே அழிக்கும் எம பாசமாக வருகின்றன. தேர் பிடித்து இழுக்கும் வடம் அப்படியே விளையவில்லை. உரிமட்டை நார்களின் துரும்புகள் பல சேர்ந்து முறுக்கி முறுக்கி அவ்வளவு பெரிய வடமாக மாறுகின்றன. அது போலவே நாம் செய்கின்ற தீங்கான காரியங்கள் எல்லாம் நமது உள்ளத்தில் பலவீனத்தை அளித்து, அந்தப் பலவீனங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து முறுக்கு ஏறும்போது, எமபாசமாக வருகிறது. இந்தப் பாசக் கயிற்றை அறுக்க வேண்டுமானால், உள்ளத்தில் நம்பிக்கை உண்டாகி, அந்த நம்பிக்கை உரம் பெற்றுப் பெரிய வடமாக வேண்டும். அப்போது அந்த வடம் நம்மைப் பற்றி இழுத்து, ஆண்டவனுடைய சந்நிதானத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். அது ஒரு நாளில் சாத்தியமாவது அன்று.

முதலில் அழிவை நோக்கி நம்மைப் பிடித்து இழுக்கும் பாசக் கயிறு அறவேண்டும். அதற்கு முன் உள்ளத்தில் கிலி நீங்கித் தைரியம் விளைய வேண்டும். தைரியத்தை உண்டு பண்ணும் முருகப் பெருமானின் அடியிணைகளைப் பற்ற வேண்டும். அவன் அன்பு ஏற ஏற மனம் உறுதி பெறும்.

இறைவன் அடியைப் பற்றி இத்தகைய தைரியம் அடைந்து, எமனைக் கண்டு அஞ்சமாட்டோம் எனக் சொன்ன ஞானிகள் பலர் உண்டு. அவர்களைப் போலவே அருணகிரியார் சொன்னா லும் பிறர் சொல்வது போலச் சொல்லாமல் புதிய முறையில் எமனைப் பார்த்தே சொல்லுகிறார்.

## தண்டமும் சூலமும்

முருகன் தண்டத்தைத் தாங்கி நிற்கிறான். அவனைத் தந்த சிவபிரான் சூலபாணி. அவ்விருவரும் தாங்கும் தண்டத்தையும் சூலத்தையும் காலன் தாங்கி நிற்பதால் அடியவர்கள் அவனைக் கண்டு ஏமாறமாட்டார்கள். தண்டமும் சூலமும் யார் கையில் இருந்தாலும் சிறப்பை அடைவதில்லை. கத்தியை வைத்துக் கொண்டு காய்கறி நறுக்குகிறான் ஒருவன். அதே கத்தியைக் கொண்டு வேறொருவன் கசாப்புக் கடையில் ஆட்டை வெட்டு கிறான். இரண்டிடத்தும் கத்தி வேலை செய்தாலும் இரண்டு கத்தியும் ஒன்றாகுமா? ஒரே பெருமையைப் பெறுமா? இருக்கிற இடத்தைப் பொறுத்துத்தான் அதற்கு மதிப்பு ஏற்படுகிறது. தண்டமும் சூலமும் கடவுள் கையில் இருந்தால் மதிப்பு; யமன் கையில் இருந்தால் அது இல்லை. அதை அவன் தாங்குவதற்கே தகுதி இல்லாதவன். தண்டம் எடுத்தவன் எல்லாம் தண்டற்காரன் ஆகிவிட முடியாது? "உன் கையில் உள்ள தண்டத்தையும், சூலத்தையும் கண்டு பயப்பட மாட்டேன். அவற்றைக் கண்டு உனக்கு மதிப்பும் கொடுக்க மாட்டேன். அந்தச் சூலத்தையும் தண்டத்தையும் வைத்துக் கொண்டு வந்தால் நான் உன்னைப் பார்த்து என்னுடைய பெருமானோ என எண்ணி மயங்கிவிடு வேன் என்று நினைக்கிறாயா?" என்று எண்ணிச் சொல்வதுபோல அருணகிரியார் சொல்கிறார்.

தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி

என்று அவர் சொல்வதிலே அவருக்குத் தண்டத்திடமும், சூலத் திடமும் கோபம் இல்லை என்பதும் தெரிகிறது. அவற்றை யமன் எடுத்து வைத்துக் கொண்டால் அவை என்ன செய்யும்? எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? "என்ன இருந்தாலும் அவை எம் பெருமானை நினைப்பூட்டும் சின்னங்கள். உன்னை அழிப்பேனே தவிர, அவற்றை அழிக்க மாட்டேன். ஆகவே, உன் கையிலுள்ள சூலமும், தண்டமும் கீழே விழுமாறு செய்து உன்னைத் தாக்குவேன்" என்கிறார்.

எமன் தண்டத்தை உடையவன். தண்டதரன் என்ற பெயர் அவனுக்கு உண்டு. அவனுக்குச் சூலமும் ஆயுதம்.

**தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி உன்னைத்**
**திண்டாட வெட்டி விழவிடுவேன்.**

*தாக்கி அவனை வெட்டி வீழ்த்தி விடுவாராம்.*

## *அவர் பெற்ற ஆயுதம்*

*எமன் நிதானிக்கிறான். 'இந்தப் பேர்வழி நம் கையில் இருக்கிற படைகளையும் தெரிந்து கொண்டிருக்கிறான். நமது பலத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறான். இவன் கையிலோ எந்த ஆயுதமும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்தத் தைரியத் தினால் இவன் இவ்வாறு பேசுகிறான்?' என்று யோசிக்கிறான். அவனைப் பார்த்து, ''என்னிடம் என்ன ஆயுதம் இருக்கிறது என்றா யோசிக்கிறாய்? சொல்கிறேன் கேள்'' என்று கூறுகிறார்.*

**செந்தில் வேலனுக்குத்**
**தொண்டாகிய என் அவிரோத**
**ஞானச் சுடர்வடிவாள்**
**கண்டாயடா அந்தகா!**

## *செந்தில் வேலவன்*

*''வேலை ஆயுதமாகப் படைத்த ஆண்டவனுடைய சேவகன் நான்'' என்று தொடங்குகிறார். வெல் என்பதிலிருந்து வேல் என்பது பிறந்தது. வெல்வதற்கு உரியது வேல். மற்றப் படைகள் எல்லாவற்றினும் சிறந்தது அது. சாமானிய வேலுக்கே அந்தப் பெருமை இருக்கிறது. எம்பெருமான் பிடித்திருப்பது ஞானவேல். அதனைப் பிடித்துக் கொண்டிருக்கும் பெருமான் செந்திலில் இருக்கிறான். செந்தில் வேலனுக்குத் தொண்டர் அருணகிரிநாதர்.*

*செந்தி என்ற சொல் செந்தில் ஆயிற்று என்பர். ஜயந்தி என்ற சொல்லே செந்தி ஆயிற்றாம். ஜயந்தி என்பது வெற்றியைக் கொண்டாடிய இடம் என்ற பொருளை உடையது. சூரனோடு போராட இந்த இடத்திலிருந்து முருகன் புறப்பட்டான். சென்று சூரபன்மனை அடக்கி ஒடுக்கி வெற்றி பெற்றுத் தேவர்களுக்கு இன்பம் தந்தான். அந்த வெற்றிக் கொண்டாட்டம், விஜயாபி ஷேகம் நடந்தது இந்த இடத்தில்தான். தேவர்களும் மற்றவர்களும் கூடி இங்கேதான் அவனது வெற்றியைக் கொண்டாடி வெற்றித்*

தம்பம் நாட்டினார்கள். ஆகவே, இந்த இடத்திற்கு ஜயந்தி எனப் பெயர் வந்தது. 'ஜயந்தியாகிய செந்திலில் வெற்றிவேல் பெருமான் இருக்கிறார். அந்தச் செந்தில் வேலவனிடத்திலிருந்து நான் ஓர் ஆயுதம் பெற்றிருக்கிறேன். அது என்ன தெரியுமா?' என்று மேலே சொல்லுகிறார்.

செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்.

செந்தில் வேலனுக்குத் தொண்டு என்று அந்தப் படைக் கலத்துக்குப் பெயர். அவனிடத்தில் தொண்டு பூண்ட அடிமை இவன் என்ற வலிமையே அந்த ஆயுதம். அந்தப் படை அகக்கண்ணுக்குப் புலப்படுமேயன்றி, புறக்கண்ணுக்குப் புலப்படுவது அன்று.

## தொண்டும் ஞானமும்

ஆண்டவனுக்குத் தொண்டு பண்ணுவதாவது என்ன? தினந் தோறும் அர்ச்சனை பண்ணிவிட்டு, ஒருமுறை கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருமுருகாற்றுப் படை முதலியவற்றைப் பாராயணம் செய்துவிட்டு, ஆண்டுக்கு ஒரு முறை ஆறுபடை வீடுகளையும் தரிசித்து வருவதோடு நிற்பது அன்று. இறைவனிடத் தில் உண்மை அன்பு உடையவன், எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாலிப்பவனாக இருப்பான். பிற உயிர்களிடத்தும் அன்பு செய்வதை மறந்து என்னதான் ஆண்டவனிடத்தில் அன்பு செய்வதாகச் சொன்னாலும், அவன் ஆண்டவனுக்கு உண்மைத் தொண்டனாக முடியாது. அவன் அர்ச்சனையை ஆண்டவன் ஏற்கமாட்டான். அருணகிரியார் எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் பார்க்கின்ற கருணையாளர். "என்னுடைய கையில் ஒரு சுடர் வடிவாள் இருக்கிறது. பிரகாசம் பொருந்திய கூர்மை யான வாள் அது. அந்த வாளுக்கு இரண்டு பெயர். செந்தில் வேலனுக்குத் தொண்டு என்பது ஒரு பெயர். அந்த வாள் ஞான சொரூபம். அதற்கு அவிரோத ஞானம் என்பதும் பெயர்" என்று குறிப்பிடுகிறார். தொண்டு என்பது கர்மம்; செந்தில் வேலனுக்குத் தொண்டு என்பது பக்தி; அவிரோத ஞானம் என்பது ஞானம். 'கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்றும் வெவ்வேறாக இருக்க, அவற்றை இவர் ஒன்றாகச் சொல்கிறாரே!' என்ற ஐயம் இங்கே எழலாம்.

## பக்தி, கர்மம், ஞானம்

இதைப் பற்றி இங்கே சற்றுச் சிந்திக்கலாம் என்று நினைக்கிறேன். பக்தியோகம், கர்ம யோகம், ஞானயோகம் என்று வேதாந்த சாஸ்திரங்களில் மூன்று நெறியைச் சொல்வார்கள். அந்த மூன்றும் ஒன்றிற்கு ஒன்று தொடர்பு இல்லாதன என்று நினைப்பது தவறு. பக்தியில்லாமல் நற்கர்மம் இல்லை; ஞானமும் இல்லை. அப்படியே நற்கர்மம் இன்றி ஞானம் இல்லை; பக்தியும் இல்லை. ஞானம் இன்றி நற்கர்மமும் பக்தியும் இல்லை. இந்த மூன்றில் எது மிகுதியாக இருக்கிறதோ அதை எண்ணிப் பக்தி நெறி, கர்ம நெறி, ஞான நெறி என்று வழங்குவார்கள்.

இங்கே அப்பர் சுவாமிகளுடைய திருப்பாட்டு ஒன்றைப் பார்க்கலாம். "ஆண்டவன் எல்லா இடத்திலும் இருக்கிறான். அப்படி இருந்தாலும் எல்லோருக்கும் தெரியவில்லையே!" எனக் கூறுகிறவர்களுக்குச் சொல்கிறார் அப்பர் சுவாமிகள்.

விறகு முழுவதும் அக்கினி இருக்கிறது. ஆனால் அது எப்பொழுது தோன்றுகிறது? தீப்பெட்டி இல்லாத பழங்காலத்தில் கட்டையைக் கடைந்து தீ உண்டாக்குவார்கள். விறகை எந்த இடத்தில் கடைந்தாலும் தீயானது தோன்றும். விறகு முழுவதும் இருக்கும் தீ அதைக் கடைந்தால் வெளிப்படும்.

பாலில் வெண்ணெய் ஒவ்வொரு துளியிலும் இருக்கிறது. அதைத் தயிராக்கிக் கடையும்போது வெண்ணெய் தோன்றுகிறது. கடையாவிட்டால் தோன்றுவதில்லை. வைரம் முதலிய மணிகள் சுடர் வீசுபவை. அவற்றைச் சாணையிட்டுக் கடைய வேண்டும். கடையாத மணி மங்கலாக இருப்பது கொண்டு அதை ஒளியில்லாத கல் என்று சொல்லுவது முறையன்று. விறகு, பால், மணி என்னும் மூன்று விதமான பொருள்களையும் கடைந்தால் அவற்றினூடே மறைந்திருக்கும் தீ, வெண்ணெய், ஒளி ஆகியவை வெளிப்படும்.

அப்படியே எம்பெருமான் பார்க்குமிடம் எங்கும் நீக்கமற இருந்தாலும் அன்பு என்னும் கோலை நட்டு ஞானம் என்னும் கயிற்றினால் கடைந்தால் வெளிப்படுவான்.

"விறகில் தீயினன்; பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

இறைவன் தீயைப் போலவும் வெண்ணெயைப் போலவும் ஒளியைப் போலவும் மறைந்து நிற்கிறான். கடையும் பொருள் மூன்றிலிருந்து வெளிப்படுபவை அவை. மூன்றும் கடையும் பொருள்களே ஆயினும் கடையும் முயற்சியில் வேற்றுமை உண்டு. விறகை நன்றாக முறுக வாங்கிக் கடைந்தால்தான் நெருப்பு உண்டாகும். பாலில் வெண்ணெய் தோன்ற அவ்வளவு பலம் வேண்டாம்; வாங்கிக் கடைய வேண்டும். இவ்வளவு சிரமங்கூட மணிக்கு வேண்டியதில்லை; கடைந்தாலே போதும்; ஒளி தோன்றிவிடும். அழுந்த முறுகக் கடைய வேண்டியது விறகு. நடுத்தரமாகக் கடைவது பால். மெல்லக் கடைவது மணி. இப்படியே மக்களில் முதல் இடை கடை என்று மூன்று வகை யான மன இயல்புடையவர்கள் இருக்கிறார்கள். பலவகையால் முயன்று பக்குவம் பெறுவாரும் ஓரளவு முயன்று அது பெறு வாரும் சிறிதளவில் அது பெறுவாரும் உண்டு.

எத்தகைய முயற்சி செய்தால் இறைவனை உணரலாமென் பதை அந்த உவமையின் வாயிலாகவே தெரிந்து கொள்ளலாம். நாவுக்கரசர் நவில்கிறார், கடையும் செயலை இன்னவாறு செய்ய வேண்டும் என்று.

தாய்மார்கள் தயிர் கடைவதைப் பார்த்திருக்கிறோம். ஒரு கம்பத்தை ஒட்டிச் சட்டியை வைத்து, அதிலே தயிரை ஊற்றி, மத்தைச் சட்டியில் இட்டு அதைக் கம்பத்தோடு தொடர்புடைய தாக்கி, மத்தைச் சுற்றியுள்ள கயிற்றைப் பிடித்து இழுத்துத் தயிர் கடைகிறார்கள். மத்துச் சுழலும் போது அதற்கு ஆதாரமாக இருக்கிற கம்பம் அசையாமல் இருக்க வேண்டும். அது ஆடினால் எத்தனை தான் கடைந்தாலும் வெண்ணெய் திரளாது. தயிர்ச் சட்டியே உடைந்தாலும் உடைந்துவிடும்.

கடவுளை உணர்வது கடைவது போன்ற செயலென்றால், அதற்கும் சாதனங்கள் உண்டு. கடைவதற்கு நட்ட கோலும், கயிறும் வேண்டும். இறைவனைக் காணும் முயற்சிக்கும் ஒரு கோல் வேண்டும்; கயிறு வேண்டும்.

"உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

அன்பு என்ற கோலை நட்டு, உணர்வு என்ற கயிற்றைக் கொண்டு கடைய வேண்டும். உறவு என்பது பக்தி. அது அசையாமல், தளராததாக இருக்க வேண்டும். அசஞ்சல் பக்தி என்று கூறுவார்கள். கடைவதற்குக் கோல் நடுவது முதல் காரியம். கயிறு மாறும்; சட்டி மாறும்; தயிர் மாறும்; கடைபவர் மாறலாம். ஆனால் நட்ட கம்பம் மாத்திரம் நிலையாக இருக்கும். அதுபோல இறைவனைக் கடைந்து உணரும் செயலில் பக்தி இன்றியமையாதது. மற்றவற்றில் வேறுபட்ட அளவு இருப்பினும், தளர்வற்ற அன்பு அல்லது பக்தி மாறாமல் இருக்க வேண்டும்.

உணர்வு அல்லது ஞானத்தைக் கயிறாகச் சொல்கிறார். ஞானம் என்பது வர வர வளர்வது. அறியப்படும் பொருள் விரிய விரிய ஞானம் விரிகிறது. அதில் பல நிலைகள் உண்டு. ஆதலின் கயிற்றை உவமையாகச் சொன்னார்.

இந்த இரண்டோடு, கடைவதாகிய செயலும் வேண்டும். அது இல்லாவிட்டால் மற்றவை இருந்து பயன் இல்லை.

உறவு என்பது பக்தி; உணர்வு என்பது ஞானம்; கடைதல் கர்மம். இந்த மூன்றும் சேர்ந்து முயற்சி செய்தால் இறைவன் முன் நிற்பான்.

## மூன்று வகை மக்கள்

இறைவனை உணர்ந்து கொள்ளும் முயற்சியில் மூன்று வகையினர் உண்டென்று முன்னே சொன்னேன். விறகுக் கட்டை மனிதர். பால் மனிதர், மணி மனிதர் என்று அவர்களுக்குப் பேர் கொடுக்கலாம். பிறவித் துன்பத்தில் உழன்று உழன்று தடித்துப் போன உள்ளம் படைத்தவர்களுக்கு எளிதில் இறைவனைப் பற்றிய உணர்வு வருவதில்லை. வாழ்க்கையில் மிகவும் அல்லலுற்று நைந்து போன பிறகே அவர்கள் அறிவு பெறுகிறார்கள்.

அடுத்தபடி பாலைப் போன்ற உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். குருநாதனுடைய கிருபையால் அவர்கள் அருள் பெறுகிறார்கள்.

''கடவுள் மனத்தில் இருக்கிறார் என்கிறீர்களே; என் மனத்தில் இருக்கிறாரா? இருந்தால் எங்கே காட்டுங்கள் பார்ப்போம்'' என்று சொல்கிறவர்கள் உண்டு. ஒரு சின்னக் குழந்தை தன் தாயிடம் போய், ''இந்தப் பாலில் வெண்ணெய் இருக்கிறது என்றாயே! வெண்ணெயைக் காணோமே. எங்கே காட்டு, பார்ப்போம்'' எனக் கேட்டால் அம்மா என்ன சொல்லுவாள்? ''என் அருமைக் குழந்தையே, பாலை இப்படியே வைத்துக் கொண்டு பார்த்தால் உனக்கு வெண்ணெய் தெரியாது. பாலின் ஒவ்வொரு துளியிலும் வெண்ணெய் இருக்கிறது. அதை இங்கே கொண்டு வா, காட்டுகிறேன்'' என்று சொல்லிப் பாலை வாங்கிக் காய்ச்சி உறைகுத்தி, தயிராக்கி, வாங்கிக் கடைந்து வெண்ணெயை உருட்டி, அதன் கையில் கொடுப்பாள். அதைப்போல, ''என் மனத்தில் இருக்கிற கடவுளைக் காட்டு, பார்ப்போம்'' எனக் கேட்டுக் கொண்டு வருபவர்களை ஞான குருக்கள் அவர்களை விட்டே அன்பு என்னும் உறவுகோல் நட்டு, உணர்வு என்னும் கயிற்றைக் கொண்டு, வாங்கிக் கடையச் சொல்லி ஆண்டவனைக் காட்டுகிறார்கள்.

மூன்றாவது வகையினரான மக்கள் மணியைப் போன்றவர்கள். கொஞ்சம் பாசி படர்ந்திருக்கிற மணியைக் கடைந்தாலே ஒளி வீசுவதைப் போல, அந்த மக்கள் முன்னைப் பிறப்பில் கடுந்தவம் செய்து, யோகாப்பியாசங்கள் செய்து, ஆண்டவனைக் காண இடைவிடாது சாதனை செய்தவர்களாக இருப்பார்கள். பாயசத் திற்கு ஏலக்காய் தூள் பண்ணிப் போட மறந்துவிட்டதுபோல, குழம்புக்கு மாவு கரைத்து ஊற்றி இறக்கி வைக்க மறந்துவிட்டது போல, தலைவாரிப் பின்னிக் கொண்டு உடையெல்லாம் எடுத்துக் கட்டிக் கொண்டு அலங்காரம் பண்ணிக் கொண்டவள் நெற்றிக்குப் போட்டு வைத்துக் கொள்ள மறந்துவிட்டது போல, எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்துவிட்டு கல்யாணத்திலே தாலி கட்ட மறந்துவிட்டதைப் போல, இவர்கள் முந்திய பிறப்பில் எல்லாவிதமான காரியங்களையும் செய்துவிட்டு இறைவன் அருளைப் பெறுவதற்குள் மரித்திருப்பார்கள். அவர்களை யோகப் பிரஷ்டர்கள் என்று சொல்வார்கள். அவர்கள் இப்பிறப்பில் விட்ட குறை தொட்ட குறையாக மிக விரைவில் இறைவன் அருளைப் பெற்றுவிடுவது உண்டு. குழம்பு கொதிக்க நேரமாகுமே தவிர,

மாவு கரைத்து ஊற்றி இறக்கி வைக்க நேரமாகாது. கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய நேரமாகுமே தவிர, தாலி கட்ட நேரமாகாது. பாயசம் வைக்க நேரமாகுமே தவிர, ஏலக்காய் பொடி பண்ணிப் போட நேரம் ஆகாது. அவ்வாறு இறைவன் அருளைப் பெறுவதற்கு வேண்டிய எல்லா விதமான ஏற்பாடு களையும் முற்பிறப்பிலேயே செய்து கொண்டுவிட்டவர்கள் இந்தப் பிறப்பில் மிக எளிதில் அவ்வருளைப் பெற்றுவிடுகிறார்கள்.

"நரைவரும் என்று எண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்"

என்பது நாலடி. நல்ல அறிவுடையவர்கள் குழந்தைப் பிராயத்திலே உள்ளத் துறவைப் பெற்றுவிடுகிறார்களாம்.

ஞானசம்பந்தப் பெருமான் குழந்தைப் பருவத்திலேயே ஞானம் பெற்றார். மிகப் பெரியதாக உயர்ந்திருக்கிற கட்டிடத்தைப் பார்க்கின்ற குழந்தைக்குப் பூமிக்கு அடியில் அஸ்திவாரம் எத்தனை ஆழத்தில் போடப்பட்டு இருக்கிறது எனத் தெரியுமா? அவ்வளவு பெரிய கட்டிடம் அஸ்திவாரம் இல்லாமல் எழும்பாது என்பது நமக்குத் தெரியும். அந்த அஸ்திவாரம் மறைந்திருக்கும். கட்டிடம் மேலே தெரியும்.

விட்டகுறை தொட்டகுறையுடைய யோகப் பிரஷ்டர்கள் முந்திய பிறப்பில் பலமான அஸ்திவாரம் போட்டுக் கொண்டவர்கள்; அவர்களுக்கு இந்தப் பிறப்பில் கொஞ்சம் முயற்சி இருந்தால் போதும். இறைவனைக் காணும் நிலை வந்து விடுகிறது.

எந்த நிலையில் இருப்பவர்களானாலும் உறவு, உணர்வு, செய்கையாகிய மூன்றும் வேண்டும். பக்தி, ஞானம், கர்மம் என்ற மூன்றும் ஒன்றனோடு ஒன்று தொடர்பு உடையவை. அந்த மூன்றும் இணைந்த முயற்சியிலேதான் இறைவனைக் காண முடியும்.

பக்தி இல்லாமல் கர்மம், ஞானம் இருந்து பயனில்லை. கர்மம், ஞானம் இல்லாமல் வெறும் பக்தி இருந்தால் பயனில்லை. எம்பெருமானிடத்தில் பக்தி இல்லாமல், தாருகாவனத்து ரிஷிகள் கர்மாக்களைச் செய்தனர். அவர்கள் நல்ல பயனைப் பெற்றார் களா? இல்லை. இறைவனுடைய பெருமையை உணரும் ஞானமும் அவர்களுக்கு இல்லாமற்போயிற்று. அவனைப் பகைவனாக

எண்ணித் தீயவேள்வி செய்து அதில் எழுந்த பாம்புகளை ஆண்டவன் மேல் ஏவிவிட்டார்கள். இறைவன் அந்தப் பாம்பு களையே ஆபரணமாகப் பூண்டு, அவர்கள் தருக்கை அழித்தான். மூட பக்தி என்று சொல்கிறோமே, அது ஞானம் இல்லாத பக்தி. பக்தரைப் போல ஆடிப் பாடுவார்கள். ஆனால் பயன் விளை யாது. தன்னுடைய உடம்பையே அறுத்து அறுத்து அவிசாகப் போட்டான் சூரபன்மன்; அவனுக்குப் பக்தியோ ஞானமோ இல்லை. அவனைப் போலக் கடுந்தவம் செய்ய இயலாது; ஆனால் அந்தத் தவம் நல்ல பயனை உண்டாக்கவில்லை. அதன் பயனாக உலகத்திற்குத் தீங்கு விளைந்தது; முடிவில் அவனுக்கும் தீங்கு விளைந்தது.

ஞான சாஸ்திரம் படிக்கிறவர்களிற் சிலர், ''இறைவனிடத்தில் பக்தி செய்து, தொண்டு செய்து பயன் என்ன? அகம் பிரம்மாஸ்மி என்று பாவனை செய்தால் போதும்'' என்பார்கள். ஞான நூல் களைப் படித்த மாத்திரத்தில் ஞானமே வந்துவிட்டதாக எண்ணிக் கொள்வார்கள். நூலறிவு தர்க்கத்துக்கு உதவுமேயன்றி அநுபவத் துக்குப் பயன்படாது. ஆண்டவனிடத்தில் பக்தி செய்து, தொண்டு செய்தால் ஞானசித்தி பெறலாம்.

''ஞானம் அடைந்துவிட்ட பிறகு பக்தி வேண்டியதில்லை'' என்று சிலர் சொல்வார்கள். பெரிய மாளிகையின் உள்ளே நுழைவதற்கு உதவிய வாயிற்படியை யாராவது உள்ளே நுழைந்த பின் அடைத்துவிடுவார்களா? எந்த வாசலின் வழியாக உள்ளே நுழைந்தார்களோ அந்த வாசலை நன்றாக அலங்கரித்து வைப்பார்கள். தங்களுக்கு ஞானம் உண்டாவதற்குக் காரணமாய் இருந்த மூர்த்தியை அவரவர்கள் கடைசிவரையிலும் வைத்துப் பூசித்துப் பக்தி செய்வார்கள். குரு பரம்பரையில் முதன்மை ஸ்தானம் வகிக்கின்ற சமயாசாரியர்களைப் பார்க்கலாம். சங்கரர் வழிவந்த ஆசாரியார்கள் அம்பிகையைப் பூசிக்கிறார்கள். சைவ மடங்களிலும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. மற்றச் சமய ஆசாரியர்களும் ஆராதனையை விடவில்லை. மகா ஞானி யாகிய சதாசிவப் பிரம்மேந்திரர் கிருஷ்ணனையும் ராமனையும் உருகி உருகிப் பாடியிருக்கிறார். சில காலத்துக்கு முன் வாழ்ந் திருந்த ராமகிருஷ்ண பரமஹம்சர் அம்பிகையின் பூசையிலே பேரானந்தம் பெற்றார். ஆகவே, ''எனக்கு ஞானம் வந்து

விட்டது; இறைவனுக்குத் தொண்டு செய்ய மாட்டேன்'' என்று சொல்வது சரியன்று.

## சீவன் முக்தன் செயல்

சிவஞான போதம் என்ற ஞான நூலில் பன்னிரண்டு சூத்திரங்கள் இருக்கின்றன. அதில் கடைசிச் சூத்திரம் என்ன சொல்லி முடிக்கிறது, தெரியுமா?

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பராடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே''

என்பது அது. சீவன் முக்தர்களுக்கும் சில சமயங்களில் வாசனை வந்து தாக்கும். உடம்பு இருக்கிறவரைக்கும் அந்தத் தாக்குதலுக்கு இடம் உண்டு. அதனால் ஞானம் பெற்றுவிட்டோம் என்று அசட்டையாக இருத்தலாகாது. வாசனை வந்து தாக்காமல் எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

மேலான ஞானம் பெற்ற சீவன் முக்தர்களும் வாசனா மலம் தாக்காமல் இருக்க இரண்டு காரியங்கள் செய்ய வேண்டுமாம். சிவவேடத்தையும் ஆலயத்தையும் வழிபட வேண்டும். ''சாதாரண மக்கள் இறைவன் அருளைப் பெற அவனிடம் அன்பு கொண்டவர்களாக ஆலயத்திற்குப் போகவேண்டும்'' என்று சொல்வதைக் கேட்கிறோம். ஞானம் பெற்றவர்களுக்கு வாசனா மலம் தாக்காமல் இருப்பதற்காக ஆண்டவனிடத்தில் அன்பு செய்து தொண்டு செய்யத்தான் வேண்டுமாம். இல்லாவிட்டால் நாளடைவில் உலகம் வாசனா மலத்தை அவர்களுக்கும் கொண்டு வந்து விடுமாம். இப்படி ஞான சாஸ்திரம் பேசுகின்றது.

இந்த உண்மையெல்லாம் அநுபவத்தினால் உணர்ந்த அருணகிரியார், ''செந்தில் வேலனுக்குத் தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர் வடிவாள்'' என்றார். ''என்னிடத்தில் செந்தில் வேலனுக்குத் தொண்டாகிய அன்பு வாள் இருக்கிறது. அது ஞானத்திற்குப் புறம்பானது அல்ல. அதுவே அவிரோத ஞானச் சுடர் வடிவாள்'' என்கிறார்.

## அவிரோத ஞானம்

ஞானம் என்பது அறிவு. உங்கள் வீட்டின் எண் பன்னிரண்டு என்று நான் அறிந்தால் அதுவும் ஒரு வகை ஞானந்தான். இனிப்புப் பண்டத்தை வாயில் போட்டு உண்டு, இனிக்கிறது என்று அநுபவித்துச் சொன்னால் அதுவும் அறிவுதான். இந்த அறிவெல்லாம் உலகியலறிவு. இத்தகைய அறிவைக் கொண்டு நாம் உலகிலுள்ளவற்றைப் பிரித்துப் பிரித்து அறிகிறோம். இவன் வேண்டியவன், இவன் வேண்டாதவன், இவன் நம் சாதி, இவன் வேறு சாதியைச் சேர்ந்தவன், இது ஆண், இது பெண் என்றெல் லாம் பிரித்துப் பிரித்து அறிகிறோம். இது நமக்கு வேண்டும், இது நமக்கு வேண்டாம் என்ற வேறுபாடு காண்கிறோம். இது பேத ஞானம்; இதையே விரோத ஞானம் என்றும் சொல்லலாம்.

எமனுக்குக் கூற்றுவன் என்று ஒரு பெயர். அவன் உடம்பையும் உயிரையும் கூறுபோட்டுப் பிரிப்பதனால் அப்பெயர் பெற்றான். உலகில் உள்ளனவற்றை எல்லாம் கூறு போட்டுப் பிரித்துப் பார்க்கின்ற பேத ஞானம் உடைய நாம் கடைசியில் கூற்றுவன் கையிலே சிக்கிக் கொள்கிறோம். கூறு படுத்தும் ஞானம் கூறு படுத்தும் கூற்றுவன் கையில் நம்மைச் சிக்க வைத்து விடுகிறது.

இறைவனுடைய திருவடிக்கண்ணே உண்மையான அன்பு செய்கிறவர்களுக்கு அபேத ஞானம் வரும்; எல்லா உயிர்களிடத் திலும் சமமான தயை பிறக்கும். வேறுபடுத்திப் பார்க்கத் தோன்றாது. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் முருகனை,

"சேரா நிருதர் குலகலகா"

என்று அதன் ஆசிரியர் பாடுகிறார். நிருதர்களாகிய அசுரர்கள் தாமும் ஒன்று சேர மாட்டார்கள். பிறரையும் ஒன்று சேர விட மாட்டார்கள்; இணையவேண்டியவைகளையும் பிரித்துத் துன் புறுத்தும் நாட்டமுடையவர்கள். அந்த உணர்ச்சி உடையவர்கள் யாவருமே அசுர பரம்பரையினர் என்று சொல்லிவிடலாம்.

அணைக்கும் கை தாயின் கை; அமரர் கை; தெய்வக் கை. பிரிக்கும் கை பேயின் கை; அசுரர் கை. இறைவனிடம் தொண்டு பூண்டவர்கள் அணைக்கும் கையும் இணைக்கும் மனமும் உடை யவர்கள்; கண்ட ஞானம் இன்றி அகண்ட ஞானம் பெற்றவர்கள்.

அவிரோத ஞானிகள் அவர்கள்; யாரிடமும் பகையின்றி, வெறுப்பின்றி வாழ்கிறவர்கள். 'அவிரோத உந்தியார்' என்ற ஞான நூல் ஒன்று தமிழில் உண்டு.

செந்தில் வேலனுக்குத் தொண்டு என்றாலும் அவிரோத ஞானம் என்றாலும் ஒன்றுதான். ஒவ்வொரு நிலையிலிருந்து பார்க்கும்போது ஒவ்வொரு வகையாகத் தோற்றும். ஆனாலும் வேறுபாடு இல்லை.

## இறைவன் தொண்டும் உயிர்களிடம் அன்பும்

முருகனுடைய தொண்டினால், உலகத்து ஆருயிர்கள் அத்தனையும் ஒன்று என்ற நினைப்பு வந்தது. ஆண்டவனுக்கு அவ்வுயிர்களெல்லாம் குழந்தைகள் என்று உணர்ந்து, பிரித்துப் பிரித்துப் பார்க்கின்ற தன்மை மாறி, எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்க்கின்ற அவிரோத ஞானம் வந்தது. ''அந்த வாள் என் கையில் இருக்கிறது'' என்று அருணகிரியார் பேசுகின்றார். ஆண்டவனுக்குத் தொண்டு செய்பவர்கள் உயிர்களுக்கும் தொண்டு செய்து அன்பு பாலிப்பார்கள். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டியவை. தகப்பனிடம் அன்பு செய்பவர்கள் யாரேனும் அவனுடைய குழந்தையை அலட்சியம் செய்யலாமா? சிவபெருமானிடம் பக்தியோடு தொண்டு புரியும் பிரம்மா அப்படித்தான் முருகனை அலட்சியம் செய்துவிட்டு உள்ளே நுழைந்தான். அவனுடைய தலைக்கிறுக்கை அடக்கினான் முருகன்.

இறைவனிடம் அன்பு உள்ளவர்கள் என்றால் அவனுடைய குழந்தைகளாகிய உலகிலுள்ள உயிர்களிடத்திலும் அன்பு செய்தால் தான் இறைவன் அவர்களுக்கு அருள் செய்வான். அவன் வேறு, இவன் வேறு என்கிற விரோத ஞானம் போய், எல்லோரும் ஆண்டவனுடைய குழந்தைகள் என்கிற அவிரோத ஞானத்தால் காலனையும் வென்றுவிடலாம்.

## ''வந்து பார்''

அருணகிரியார், ''என்னிடத்தில் தொண்டாகிய வாள் இருக்கிறது. அவிரோத ஞானம் என்கிற வாளும் அதுதான்'' என்கிறார்.

சுடர்வடிவாள்.

சுடர்–தேசு. வடி–கூர்மை. கண் உடையவனுக்குத்தான் ஒளியைப் பார்க்க முடியும்; தேசு பொருந்தி விளங்குகின்ற வாளைக் காண முடியும். கண் இல்லாதவன் வாள் தன்மேல் படும்போதுதான் அதன் கூர்மையால் உணரமுடியும். ''இந்த ஞானச் சுடர் வாளைக் கண்டாய் அல்லவா?'' என்றார் அருணகிரியார். யமனுக்கு அந்தகன் என்பது ஒரு பேர். அச்சொல்லுக்குக் குருடன் என்ற பொருள் உண்டல்லவா? ஆகையால் உடனே, ''ஓ, நீ அந்தகன் அல்லவா? உனக்கு இந்த வாளின் சுடர் எங்கே தெரியப் போகிறது? உடம்பிலே கொஞ்சம் கீறினால்தான் தெரியும். எங்கே, என் கைக்கு எட்டும்படி வா பார்க்கலாம்; இதன் கூர்மையைக் காட்டுகிறேன்'' என்கிறார்.

செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா! அந்தகா! வந்து
பார், என்றன் கைக்கு எட்டவே.

''ஏதோ நான் வெற்று வேட்டு என்று நினைக்காதே. என் கையில் பள பளவென்று மின்னுகின்ற கத்தியை நீ பார்த்தாலும் நாடகக் காரன் கையிலுள்ள கத்தி என்று எண்ணிவிடுவாய். சாதாரணக் கத்தியைவிட அது அதிகப் பளபள வென்றுதான் இருக்கும். இது ரேக்கு ஒட்டிய அக்கத்தியைப் போலக் கண்ணுக்கு மாத்திரம் பளபளக்கின்ற சுடர்வாள் என்று எண்ணிவிடாதே. ஏ அந்தகா, என் கைக்கு எட்டும்படியாகச் சற்று என் அருகில் வந்து பாரேன். இந்தக் கத்தியின் கூர்மை எவ்வளவு என்பதையும் காட்டுகிறேன்'' எனச் சொல்வதுபோல இருக்கிறது இது.

அவரைப் போலவே நாமும் தைரியமாகச் சொல்ல வேண்டு மென்றால் நமது நெஞ்சங்களிலும் முறுக்கு ஏற வேண்டும். செந்தில் வேலனுக்குத் தொண்டரானால்தான் முறுக்கு ஏறும். அவனுக்குத் தொண்டராக மாத்திரம் இருந்து கொண்டு உலகிலுள்ள உயிர்களிடத்து அன்பு இல்லாமல் இருத்தலாகாது. அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று கூறுபோட்டுக் கொண்டு இருந்தால் கூற்றுவனுக்குத்தான் இரையாகும்படி நேரிடும். கூற்று வனையே வெட்டி வீழ்த்த வேண்டுமென்றால் கூறுபோட்டுப்

பிரித்து விடுகின்ற விரோத ஞானம் போக வேண்டும். செந்தில் வேலனுக்குத் தொண்டு செய்து கொண்டே, உலகிலுள்ள ஆருயிர் களெல்லாம் அவன் குழந்தைகள் என உணர்ந்து, எல்லா உயிர் களிடத்திலும் அன்பு பாலிப்பதே அவிரோத ஞானம்.

## *வீரம்*

அந்த ஞானம் நமக்கு வந்துவிட்டால் நெஞ்சிலே எத்தனை வீரம் வந்துவிடும், தெரியுமா? யமனுக்கு அஞ்சாத தைரியம் வரும். திருடனையும் பாம்பையும் பேயையும் கண்டு அஞ்சாத தைரியம் ஒரு தைரியமா? காலனுக்கு அஞ்சாமல் நிமிர்ந்து நிற்கும் வீரமே வீரம். இந்திரியங்களின் வழியே செல்கிறவர் களுக்கு அந்த வீரம் வராது. இறைவன் அருளை நம்பிப் பக்தியில் முறுகினவர்களுக்கு வரும். உண்மை அடியார்களை வீரர் என்று பெரிய புராண ஆசிரியர் சொல்கிறார்.

"ஆரம் கண்டிகை; ஆடையும் கந்தையே;
பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்
ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்;
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?"

சேக்கிழார் ஒரு பெரிய அரசாங்கத்தில் மந்திரியாகப் பதவி வகித்தவர். பல போர்களைப் பார்த்தவர். வீரம் இன்னது என்பதை நன்கு உணர்ந்தவர். அத்தகையவர், "இந்த வீரம் என்னால் விளம்பும் தன்மையுடையதோ?" என்று கூறுகிறார். சிறந்த வீரம் அதுதான்.

அத்தகைய வீரப் பெருமக்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் அருணகிரியார். நம்முடைய கோழை நெஞ்சத்தில் தைரியம் பிறந்து முறுக்கு ஏறி உய்ய வேண்டுமென்ற பெருங் கருணையோடு இந்தப் பாட்டைப் பாடுகிறார். "நான் செந்தில் வேல்முருகனுடைய தொண்டன். எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாலிக்கின்றவன். என்னுடைய கையில் என்ன ஆயுதம் இருக்கிறது தெரியுமா? செந்தில் வேலனுக்குத் தொண்டாகிய அவிரோத ஞானச் சுடர் வடிவாள் இருக்கிறது. அந்தகா, வந்து பார் சற்று என் கைக்கெட்டவே. என்னை நெருங்கினால் என்ன செய்வேன் தெரியுமா? உன் கையில் இருக்கிற தண்டாயுதமும் திரிசூலமும்

*விழத் தாக்கி உன்னைத் திண்டாட வெட்டிவிடுவேன்'' என்று சொல்லும் இந்த அறைகூவலை நாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே இருந்தால் நமது உள்ளத்தில் முறுக்கு ஏறும். நரம்புகளில் முறுக்கு ஏறும். நம்மிடம் உள்ள கோழைத் தன்மை போகும்.*

தண்டா யுதமும் திரிசூல
 மும்விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
 வேன்;செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத
 ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாஅந்த கா! வந்து
 பார்சற்றுஎன் கைக்கெட்டவே.

*(அந்தகா! நீ பிடித்த தண்டாயுதமும் திரிசூலமும் விழும்படியாக உன்னைத் தாக்கி நீ திண்டாடும்படியாக வெட்டி விழச் செய்வேன்; திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் வடிவேற் பெருமானுக்குத் தொண்டு செய்யும் இயல்பாகிய எனது அவிரோத ஞானம் என்னும் சுடர்வீசும் கூரிய வாளைக் கண்டாயே; அடா, இங்கே சற்று என் கைக்கு எட்டும்படியாக வந்து பார்.*

*திண்டாட - செயலிழந்து தவிக்க. தொண்டு - தொழும்பு; அடியா னாகிய தன்மை. வடி-கூர்மை)*

# காலத்தை வெல்லுதல்

உயிர் உடம்பை விட்டுப் போனால் மரணம் அடைந்தார் என்று சொல்வது வழக்கம். ஆனால் இந்த உடம்பு இருக்கும் போதே சாவது ஒன்று இருக்கிறது. ஆங்கிலத்தில், 'கோழை பல முறைகள் மரிக்கிறான்' என்று சொல்வது வழக்கம். தனக்கு வருகிற துன்பத்துக்கு அஞ்சாமல் எதிர்த்து நின்று உறுதியோடு வாழ வகை தெரியாதவன் பயத்தினாலேயே ஒவ்வொரு கணமும் செத்துப் போகிறானாம். ''அவன் பயந்து பயந்து சாகிறான்'' என்று நாம்கூடச் சொல்கிறோம். பயமுள்ளவனைச் செத்துப் போனவனுக்குச் சமானமாகச் சொல்வதற்குரிய காரணத்தை ஆராய வேண்டும்.

## *வாழாத வாழ்வு*

உடம்பு படைத்த அளவிலே ஒருவனை வாழ்கிறான் என்று சொல்ல இயலாது. பக்கவாதம் வந்தால் ஒருவனுக்குக் கை கால் சுவாதீனம் இல்லாமல் போய் விடுகின்றன. அவன் நூறு ஆண்டுகள் உயிரோடு இருந்தாலும் சுகமாக வாழ்ந்தான் என்று சொல்வது பொருந்தாது. ''முப்பது ஆண்டு வாழ்ந்தவனும் இல்லை; முப்பது ஆண்டு கெட்டவனும் இல்லை'' என்று சொல்வார்கள். இங்கே வாழ்வது என்பது உயிரோடு இருப்பது என்ற பொருளுடையது அன்று. எல்லா அங்கங்களும் குறைவறப் பெற்ற பயனை நன்றாக அநுபவித்தால் வாழ்வதாகச் சொல்லலாம்.

சிலருடைய உடம்பு வெறும் பிண்டமாக இருக்கும். கண்ணைத் திறக்கும், பேசாது. அந்த உடம்பில் உயிர் இருந்தாலும் 'வாழ் கிறேன்' என்று சொல்லும் தகுதி அதற்கு இல்லை. உடம்பை எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ, அந்த வகையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை.

கை உடையவன் அந்தக் கையால் அடிக்கடி பிறரை அடித்து வேலை செய்தால் போதாது. கை செய்ய வேண்டிய உத்தமமான

வேலை எதுவோ அதைச் செய்தால்தான் கை வாழ்ந்தது என்று சொல்லலாம். உடம்பு முழுவதும் வாழ்வதாவது, உடம்பிலுள்ள அங்கங்கள் எல்லாம் தத்தமக்குள்ள ஒழுக்க முறையில் நின்று உத்தமமான காரியங்களைச் செய்வதாகும். உடம்பு முழுவதும் இருந்தாலும் ஒருவனுக்குத் தீவினைப் பயனால் ஒரு கை குறை யாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மற்றவர்கள் இரு கையாலும் செய்யும் காரியங்களை அவன் செய்ய முடியாது. ஒருவனுக்குக் கண் இல்லை என்று வைத்துக் கொள்வோம். மற்றவர்கள் கண் படைத்ததனால் உலகிலுள்ள பொருள்களின் வடிவம், நிறம், அழகான காட்சி ஆகியவற்றைப் பார்த்துப் பார்த்து இன்புறுகிறார்கள்; அவனால் அந்த அநுபவத்தைப் பெற இயலாது. உடம்பு முழுவதும் இருந்தாலும் கை இல்லாதவனுக்குக் கையினால் வாழ்கின்ற வாழ்வு இல்லை. பிற உறுப்புக்கள் இருப்பினும் கண் இல்லாதவனுக்குக் கண்ணினால் வாழ்கின்ற வாழ்வு இல்லை. கந்தப் பெருமானுக்குத் திவ்யமான அலங்காரம் செய்திருக்கிறார்கள் என்றால், காதாலே அந்தச் செய்தியைக் கேட்கலாமே யொழிய, கண்ணாலே கண்டு இன்புற முடியாது. ஐந்து பொறிகளையும் குறைவறப் பெற்ற ஒருவன் ஐந்து பங்கு வாழ்கிறான் என்றால் கண் என்ற ஒரு பொறி இல்லாதவன் நான்கு பங்குதான் வாழமுடியும். உயிரும் உடம்பும் ஒன்றி இருந் தால் மட்டும் வாழ்வதற்குப் போதுவதில்லை என்ற உண்மையை இவற்றால் உணர்கிறோம். ''உறுப்புக் குறைவாக இருந்தால்தான் நன்றாக வாழ முடியாது; உறுப்புக்கள் எல்லாம் நன்றாக உள்ளவன் நன்றாக வாழ்கிறான் என்று சொல்லிவிட முடியுமா?'' என்பது அடுத்த கேள்வி. அதையும் சற்றே ஆராயலாம்.

எல்லா உறுப்புக்களையும் கொண்டவன் வாழவும் வாழலாம்; தாழவும் தாழலாம். நல்ல மணம் வீசுகிற ஓர் இடத்திற்குப் போகிறவன், ''ஆ எவ்வளவு இன்பமான மணமாக இருக்கிறது!'' என்று நறுமணத்தை நுகர்ந்து அநுபவிக்கிறான். ஆனால் அவனது மூக்கே துர்நாற்றம் ஒன்றை நுகர்ந்தால், ''சீ, என்ன நாற்றம்! மூக்கை அறுத்து எறி'' என்று சொல்வதைக் கேட்கிறோம். மிதிக்கத் தகாத ஒன்றை மிதித்துவிட்டால், ''ஐயோ! காலை வெட்டி எறிய வேண்டும்'' என்று சொல்லி அருவருப் படைகிறான்.

## லாப நஷ்டக் கணக்கு

இப்படி மனிதன் நல்லவற்றைப் புலன்கள் அநுபவிக்கும் போது இன்புறுகிறான். அல்லாதனவற்றை அநுபவிக்கும் போது வெறுப்புக் கொள்கிறான். நல்லதை உணரும்போது லாபம், அல்லாததை உணரும்போது நஷ்டம் என்று வைத்துக் கொள்ள லாம். லாபமும் நஷ்டமும் இல்லாத நிலை ஒன்று உண்டு.

எல்லா அங்கங்களையும் பூர்ணமாகப் பெற்றிருப்பவன், அவற்றைப் பெற்றிருப்பதன் பயனை நன்கு உணர்ந்து, அவ்வ வற்றுக்குரிய ஒழுக்க நெறியில் நின்று உத்தமமான காரியங்களைச் செய்யும்போது லாபம் அடைகிறான். அதமமான வழியில் தன் உறுப்புக்களைச் செலுத்துகின்றவனுக்கு நஷ்டம். உறுப்பு இல்லா மையினால் உத்தமமான காரியத்தைச் செய்து லாபம் அடையா விட்டாலும், அதமமான காரியத்தைச் செய்வதனால் வருகின்ற நஷ்டம் இல்லை. ஆகவே அவனுக்கு லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை.

காது படைத்திருப்பதன் பயனாக நல்ல இனிய திருப்புகழைக் கேட்டால் லாபம். கேட்கத் தகாத ஆபாசமானவற்றைக் கேட்டால் நஷ்டம். காது இல்லாதவனுக்கு எதையுமே கேட்க முடியாது. ஆகவே லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை.

வாய் படைத்திருப்பதன் பயனாகக் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி முதலியவற்றைச் சொன்னால் லாபம். சொல்லத்தகாத வற்றை, இன்னாதனவற்றை, பொய்யைச் சொன்னால் நஷ்டம். ஊமை எதையுமே சொல்ல முடியாது. ஆகவே லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை.

வாயைப் படைத்து, எம்பெருமான் புகழைச் சொல்லாமல் இன்னாதன பேசித் திரிகிறவனைவிட ஊமை நல்லவன் என்று சொல்லவேண்டும். கண்ணைப் படைத்து எம்பெருமான் திரு வடியைப் பார்த்துப் பார்த்து மகிழாமல் பார்க்கத் தகாதவற்றைப் பார்த்துத் திரிகின்றானே அவனைவிடக் குருடன் நல்லவன். ஊமை செய்த பாவங்களை எல்லாம் பட்டியலாக எழுதினால், வாய் படைத்திருப்பதன் பயனாக ஒருவன் செய்கின்ற பாவங்கள் இரா.

ஆகவே, உறுப்புக்களைப் பெற்றிருக்கின்ற ஒருவன் எப்படி எப்படி அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறானோ அவ்வாறே நல்லன பொல்லாதன அமைகின்றன.

''ஒருவன் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வைரம் வாங்கினான். அதுவே அவனுக்கு யமன் ஆக முடிந்தது'' என்று கேள்வியுறுகிறோம். காதில் போட்டுக் கொள்வதை வாயில் போட்டுக் கொண்டால் சிறந்த ஆபரணமாகத் திகழ வேண்டிய வைரம் நஞ்சாக மாறிவிடுகிறது. இரண்டிடத்திலும் வைரம் என்னவோ ஒன்றுதான். ஆனால் அதை எப்படி உபயோகித்துக் கொள்ள வேண்டுமோ அப்படி உபயோகித்துக் கொள்ளாவிட்டால், அது அவனையே கொல்லும் நஞ்சாகிவிடுகிறது.

உறுப்புக்களும் உத்தமமான காரியங்களைச் செய்தால்தான் வாழ்கின்றன என்று சொல்ல உரியனவாகும். கை அறச் செயல்களைச் செய்தால், அது வாழ்ந்தது என்று சொல்லலாம். அப்படியே வாய் உத்தமமான சொற்களைப் பேசினால், அது வாழ்ந்தது என்று சொல்லலாம்.

## அரசனும் மந்திரியும்

ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகள் சேர்ந்த உடம்பு ஒரு கோட்டையைப் போன்றது. உயிர் என்ற அரசன் வாழ்வதற்காக இந்த உடம்பாகிய கோட்டையை வகுத்துத் தந்திருக்கிறான் ஆண்டவன். முன்னாலே செய்திருக்கும் வினைப்பயனை அநுபவிக்க உடம்பு வந்துவிடுகிறது. இந்த அற்புதக் கோட்டைக்கு ஒன்பது வாசலை வைத்து ஆண்டவன் அனுப்பியிருக்கிறான். இந்தக் கோட்டையிலிருந்து ஆட்சி செய்யும் ஆத்மா என்னும் அரசனுக்கு இரண்டு மந்திரிகள் முக்கியமானவர்கள். ஒருவன் நல்ல மந்திரி; மற்றொருவன் கெட்ட மந்திரி. மனம் என்பதுதான் கெட்ட மந்திரி. புத்தி என்பது நல்ல மந்திரி. அரசன் எவ்வளவு திறமையுடையவனாயினும் தானே ஒரு காரியத்தைச் செய்ய முடியாது. மதி மந்திரிகள் மூலந்தான் செய்வான். மந்திரிகளின் அறிவைத் தன் அறிவுக்குத் துணையாகக் கொண்டவன் நல்ல அரசன். மந்திரியின் அறிவையே தன் அறிவாகக் கொண்டான் என்றால் சங்கடம் உண்டாகும். சிறந்த அரசன் தன் அறிவாற்றலால் யோசனை செய்து மந்திரிகளோடும் ஆராய்ந்து

தான் செய்ய நினைத்த காரியம் சிறந்தது என்று முடிவு கண்டால் அதைச் செய்வான்; செய்யத் தகாது எனக் கண்டால் அதைச் செய்யாமல் விட்டுவிடுவான்.

சக்கரவர்த்தி திருமகனாகிய இராமபிரான் அப்படித்தான் செய்தார். இராவணனோடு போர் புரிவதற்காகக் கடலைத் தாண்டிச் சென்றார். விபீஷணன் இராமபிரானைச் சரண் என்று வந்து அடைந்தான். சரண் அடைந்த அவனைத் தம் கட்சியில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பது அவருடைய எண்ணம். இருந்தாலும் அமைச்சர்களின் கருத்தையும் அறிய வேண்டு மென்று எண்ணினார். தம் கட்சியில் புதிதாகச் சேர்த்துக் கொள்ள விரும்புகிற விபீஷணன் தங்களுக்கு அநுகூலமாக இருப்பானா? பகைவர்கள் கட்சியிலிருந்து வந்தவனாயிற்றே; இராவணனுடைய சொந்தத் தம்பி. அவனைப் பற்றி எதுவுமே தெரியாதபோது அவனை ஏற்றுக் கொள்ளலாமா? இதைப் பற்றி விவாதிக்க மந்திரி சபையைக் கூட்டி ஆலோசித்தார். மந்திரிகளுக்கு மதிப்பு வைத்து அவர்களுடைய அறிவைத் தம் அறிவுக்குத் துணையாகக் கொண்டார். அவருக்கு நல்ல மந்திரியாக அநுமன் வாய்த்திருந்தான்.

## இரண்டு மந்திரிகள்

ஆத்மாவாகிய அரசன் புத்தி, மனம் என்ற இரண்டு மந்திரிக ளைக் கொண்டு எப்பொழுதும் வேலை செய்கிறான். புத்தி என்ற நல்ல மந்திரியின் வேலை அதிகமாக இருந்தால் உய்யலாம். மனம் என்ற கெட்ட மந்திரியின் வேலை அதிகமாக இருந்தால் கீழேதான் போகவேண்டியிருக்கும். புத்தி அதிகமாக வேலை செய்தால் மனம் புத்திக்கு அநுகூலமாக இருக்கும். மனத்தின் ஆற்றல் கூடுதலாக இருந்தால் புத்தி மடங்கிவிடும். மனம் என்ற கெட்ட மந்திரியின் கைப்பொம்மையாகிவிட்டால் உலகத்திலுள்ள கண்ணியில் சிக்கிக் கொள்ள நேரும்.

இந்த உடம்பாகிய கோட்டையில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இரண்டு பக்கத்திலும் அகழ். இந்த இரண்டு அகழிலும் விழாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பாவம், புண்ணியம் என்ற இரண்டு அகழிலும் விழாமல் நின்று மேலும் புதிய சங்கடங் களை உண்டு பண்ணிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

இந்தக் கோட்டையில் ஐந்து நுட்பமான வாசல்களை வைத்திருக்கிறான். யுத்தம் வந்துவிட்டால் வாசல்களை அடைத்து விடுவார்கள். அங்கே ஆயுதங்களை வைத்திருப்பார்கள். அந்த வாசலின் வழியே பகைவர்கள் உள்ளே நுழையப் பார்த்தால் அவர்களை ஆயுதங்கள் கொண்டு தாக்குவார்கள்.

ஐம்பொறிகளின் வழியே அடிக்கடி அரசனாகிய ஆத்மாவைத் தாக்கப் பகைவர்கள் உள்ளே நுழையப் பார்ப்பார்கள். எத்தனை பகைவர்கள் எதிர்த்தாலும் ஆத்மாவாகிய அரசன் புத்தியென்னும் நல்ல மந்திரியின் துணையையே நாடினால், மனம் என்ற கெட்ட மந்திரி தனித்து இயங்கமாட்டாமல் புத்திக்குச் சார்பாகவே காரியங் களைச் செய்வான். புத்தியின் கருத்துக்களுக்கு ஆத்மாவாகிய அரசன் மதிப்புக் கொடுக்கவில்லை என்றால் மனம் என்னும் மந்திரி தன்னிச்சை போலக் காரியங்களைச் செய்ய ஆரம்பித்து விடுவான். அந்த மந்திரி யுத்த காலத்தில் எப்போதும் ஐந்தாம் படைப் பேர்வழியாகவே வேலை செய்வான். அவன் வழியே போனால் நாசமடைய நேரும். பகைவர்கள் ஐம்பொறி வாயில் வழியே உள்ளே புகுந்து கொள்ளும்படியாக மனம் என்னும் மந்திரி செய்துவிடுவான்.

காதாலே நல்லதைக் கேட்கலாம்; பொல்லாததையும் கேட்க லாம். வாயினாலே ஆண்டவன் திருநாமத்தை ஜபிக்கலாம்; பேசத் தகாத வார்த்தைகளையும் பேசலாம். புத்தி என்ற மந்திரியின் உதவியைப் பெற்றால் காதின் வழியே நல்லவைகளே நுழையும். வாயாலே நல்ல வார்த்தைகளே பேசும் நிலை வரும். மனம் என்ற மந்திரியின் வசப்பட்டுவிட்டாலோ கேட்கத் தகாதனவே காது வழியே நுழையும். பேசத் தகாத வசவுகள் வாயிலே பிறக்கும்.

உடம்போடு வாழ்கின்ற வாழ்க்கையில் புத்தி என்ற மந்திரியின் துணை ஆத்மா என்ற அரசனுக்கு எப்பொழுதும் இருந்தால் உடம்பாகிய கோட்டைக்குள் இருக்கும் இந்திரியங்கள் எல்லாம் தத்தமக்குரிய நெறியில் நின்று ஒழுக்கம் மிக்க காரியங்களையே புரியும். கோட்டைக்குள் பகைவர்கள் நுழைந்தால், நுழைய முடியாதபடி தாக்கி அரசனுக்கு எவ்விதமான ஊறும் வராதபடி காப்பாற்றுவான். எவ்வளவு பாடுபட்டு உழைக்க வேண்டுமோ அவ்வளவு பாடுபட்டு உழைப்பான்.

## உடம்பின் குறை

நமக்குக் கிடைத்த இந்த உடம்பு சித்தர்களுக்குக் கிடைத்தது போல நீண்ட நாள் வாழும் உடல் அல்ல. தேவர்களுக்குக் கிடைத்துள்ள ஒளிமிக்க சரீரமும் அல்ல. ஒரு மனிதன் நூறு ஆண்டு வாழலாம் என்று புத்தகம் சொல்லுகிறது. இந்தியாவில் உள்ளவர்களின் சராசரி வயசு இருபத்தைந்தே. இந்தக் குறுகிய காலமாகிய வாழ்வை உடையது இந்த உடம்பு. அதனோடு பல குறைபாடுகளை உடையது. வறியவனுக்கு ஒரு காணி நிலம் கிடைத்ததுபோல இது நமக்குக் கிடைத்திருக்கிறது. இதை எவ்வளவு சிறப்பான வகையில் இயக்கிப் பயன் பெற வேண்டுமோ அப்படிச் செய்வதே நல்லது.

மக்களுக்கு மிக்க நன்மையைச் செய்ய வேண்டுமென்று ஒருவன் தேர்தலில் நின்று வெற்றி பெற்றான். மந்திரியாகவும் ஆனான். அவன் மந்திரியாக இருக்கும் காலம் இரண்டு வருஷங்கள் தாம் என்றால், அந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைத் தன்னால் முடிந்த அளவு செய்து விட வேண்டுமென்று முயல்வான். கெட்டவனாக இருந்தால் தனக்கு வேண்டியவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பான்; அதிகாரத்தைத் தீயமுறையில் செலுத்துவான்; அதனால் விரைவில் பதவியிலிருந்தும் நீக்கப்படுவான்.

## பயனுள்ள வாழ்வு

மிகக் குறைந்த காலத்துக்கு மிகக் குறைபாடு உள்ள உடம்பைப் படைத்திருக்கும் மனிதர்களில் நல்லவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே செய்ய வேண்டிய நல்ல செயல் களைச் செய்கிறார்கள். வாழ்வு சில ஆண்டுகளேயானாலும் ஒவ்வோராண்டையும் 365 நாட்களாகப் பிரித்து, ஒவ்வொரு நாளையும் 24 மணியாகப் பிரித்து, ஒவ்வொரு மணியையும் 60 நிமிஷமாகப் பிரித்து, ஒவ்வொரு நிமிஷத்தையும் 60 விநாடி களாகப் பிரித்து வைத்துக் கொண்டு கணக்குப் பண்ணி வாழ் கிறார்கள். ஒருவேளைகூட வாழத் தெரியாதவன்தான், ''நான் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால் எவ்வளவோ காரியம் செய்து விடுவேன்'' என்பான். தான் வாழும் ஒவ்வொரு கணத்தையும் பயனுள்ளதாகக் கழிப்பவன் நன்றாக வாழ்பவன்.

> "ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
> கோடியும் அல்ல பல"

என்பது வள்ளுவர் வாய்மொழி. வீண் ஆசைப்பட்டு, செயலிலே ஈடுபடாத மக்கள் தமக்குக் கிடைத்த குறுகிய வாழ்க்கையில்கூட நன்றாக வாழ்வதில்லை.

"நமக்குக் கிடைத்திருக்கும் இந்த உடம்பு சில வாழ் நாளையும் பல பிணிகளையும் உடையது. பல குறைபாடுகளைப் பெற்றது. விரிந்து கொண்டே போகின்ற ஆசைகளின் அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் ஆயுளின் அளவு மிக மிகக் குறைவு. அதற்குள்ளேயே நீ செய்ய நினைக்கிற காரியங்களின் ஒரு பகுதியையாவது செய்துவிட வேண்டும். மேலும் மேலும் ஆசைப்படாமல் கொஞ்ச மாக ஆசைப்பட்டு உடனே அதைச் செய்துவிடு. உள்ளே போய் வருகின்ற காற்று எந்த நிமிஷம் சுழல் மாறிப் போய் விடுமோ" என ஞானிகள் நமக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது நமக்குத் தெரியாதது அன்று. நமக்குத் தெரியாததை எவ்வளவு பேர் சொன்னாலும் விளங்காது. நமக்குத் தெரிந்ததையே அவர்கள் நினைப்பூட்டுகிறார்கள். சாப்பிட வேண்டுமென்பது தெரிந்தும் மறந்து போய் உட்கார்ந்திருக்கிற தன் குழந்தையிடம் தாய், "அப்பா, நேரமாகிவிட்டது; குளித்துவிட்டுச் சாப்பிட வா" என் நினைப்பூட்டுவது போல அவர்கள் நமக்கு மரணம் உண்டு என்பதை நினைப்பூட்டுகிறார்கள்.

## பற்றுவதே பற்றுதல்

நம் மனம் பற்றுவதைப் பற்றிக் கொண்டே இருக்கும். சாதாரண மாக ஒருவன் இந்தப் பக்கமாகப் போவான். சொற்பொழிவு நடக்கிறதென்று தெரிந்து உள்ளே வந்து உட்கார்ந்தால் சொற் பொழிவைக் கேட்கும்போதே அவன் மனம் தினமும் இங்கே வந்து சொற்பொழிவைக் கேட்க வேண்டுமென்று விரும்பும். ஆனால் சினிமாக் கொட்டகைப் பக்கம் போனால் தினமும் சினிமாவுக்குப் போக வேண்டுமென்று அதைப் பற்றிக் கொள்ளும். இப்படிப் பற்றிக் கொண்டதையே பற்றுவது மனத்தின் சுபாவம். பற்றிக் கொள்வது நல்லதாக இருந்தால் நன்மை விளையும். தீயதாய் இருந்தால் தீமை உண்டாகும். படிக்கிற குழந்தை விஷமம் செய்து கொண்டே இருந்தால் கெட்டுவிடும் என்பதை

உணர்ந்து, ''படியடா, படியடா'' என்று தாய் பிள்ளைக்கு நினைப்பூட்டுகிறாள். தெய்வத்தை நினைந்து நினைந்து நெக்கு விட்டு உருகி வாழ வேண்டிய மக்கள் இறைவனை மறந்து செயல் புரிந்து வருவதைக் கண்டு அவர்களுக்கு இறைவனது நினைப்பு ஊட்டி, ''நீங்கள் விரைவில் இறந்து போய்விடுவீர்களே; உங்கள் வாழ்க்கைக் காலம் மிகக் குறைந்தது. இந்தக் குறுகிய காலத்தில் இறைவனது அருளைப் பெற வழி தேட வேண்டும்'' என்று நினைப்பூட்டுகிறார்கள் பெரியவர்கள்.

## காலத்தைக் கொல்லுதல்

நமக்குக் கிடைத்த காலத்தைத் தக்க வழியில் பயன்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டும். 'காலத்தை நாம் கொல்ல வேண்டும், இல்லாவிட்டால் காலம் நம்மைக் கொன்றுவிடும்' என்பார்கள். ஓர் அரசாங்க வேலைக்காரர் வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார். ஆனால் ஓய்வு பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அவர் இளைத்துப் போவதையும், நோய்வாய்ப்படுவதையும், பின்பு மரிப்பதையும் கண்டிருக்கிறோம். காரணம் என்ன? மிகவும் சுறுசுறுப்பாகப் பத்துமணி முதல் ஐந்துமணி வரையில் காரியாலயத்தில் உழைத்துப் பழகிப்போன அவருக்கு வீட்டில் அதே நேரத்தில் வேலை செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் தவிக்கிறார். அவர் உடம்பு வாழ்வதில்லை. அதற்கு வேலை கொடுக்க வழியில்லை. காலத்தைக் கொல்ல முடியாமல் தவிக்கிறார். காலன் அவரைக் கொன்று விடுகிறான். காலம் போவது தெரியாமல் இருந்தார், நாள் முழுவதும் உழைத்து வேலை செய்து கொண்டிருந்தபோது. இப்போது வேலை இல்லை. ''பொழுது போகவில்லையே'' என்று ஏங்க ஆரம்பித்துவிடுகிறார். காலத்தைக் கொல்வதற்கு அவரிடத்தில் வேலை இல்லை. ஆரம்ப முதற்கொண்டே, 'நின்றும் இருந்தும் கிடந்தும் நினைமின்கள், என்றும் சிவன்தாள் இணை'' என்றபடி இறைவனுக்குத் தொண்டு என்ற வேலையை ஒழிவு ஏற்படும் நேரங்களிலே செய்து பழகியிருந்தாரானால், பூர்ண ஓய்வு பெற்ற காலத்தில் அந்த வேலையை முழுநேரமும் செய்வதற்கு அவரால் முடியும். வேலை இல்லையே என்று ஏங்க வேண்டிய அவசியம் இராது. வேலை செய்து கொண்டே இருந்த உடம்புக்கு வேலை இல்லை என்றால் அது வாடிவிடுகிறது. உள்ளம்

வாடி விடுகிறது. உடம்போடு எத்தனை காலம் இருக்கின் றோமோ அத்தனை காலமும் அதற்கு வேலை கொடுக்கவேண்டும்.

மற்ற வேலைகளுக்கு இட எல்லை, கால எல்லை உண்டு. எந்தப் பொருளுக்குக் கால இட எல்லை இல்லையோ அந்தப் பொருளை நினைக்கும் வேலைக்கும் கால எல்லையே இல்லை. பரம்பொருளைத் தியானம் செய்யத் தலைப்பட்டால் காலம் போவதே தெரியாது. ஓய்வு பெற்ற பிறகு நினைக்கத் தொடங் கினால் எளிதில் அந்த முயற்சி பலிக்காது. மற்ற வேலைகளைச் செய்துகொண்டிருந்தபோதே இந்த வேலையையும் இடையிடையே செய்து வந்தால், நீண்ட ஓய்வு கிடைக்கும்போது இதையே செய்யும் திறமை உண்டாகும். அதற்கு ஏற்ற பழக்கங்களை நம் முன்னோர்கள் வைத்திருக்கிறார்கள். சாப்பிடுவதற்கு முன் சாப்பாட்டை இறைவனுக்கு நிவேதனம் பண்ணுகிறோம். முதல் கவளத்தை எடுத்து வாயில் போடும்போதே இறைவனை நினைக் கிறோம். எப்பொழுதுமே கடவுளை நினைந்து கொண்டிருக்கும் ஆற்றல் நமக்கு வராமல் இருக்கலாம். நாம் ஞானி அல்ல. ஆனால் நாம் செய்கின்ற காரியங்களிடையே அவனை நினைக்க வழி உண்டு. எந்தக் காரியம் செய்தாலும் இறைவனை நினைந்து தொடங்கும் வழக்கத்தை நம்மவர் வைத்திருக்கிறார்கள். இடை யீடில்லாமல் நல்ல காரியங்களைச் செய்கிறவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்.

வெள்ளைக்காரர்கள் அதிக காலம் உயிரோடு வாழ்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு நம்மைப்போலத் தெய்வ பக்தி இல்லையே! சம்பளத்திற்குச் செய்கின்ற வேலை அல்லாமல் ஒவ்வொருவரும் ஒருதொழிலைப் பொழுதுபோக்காக (Hobby)ச் செய்கிறார்கள். சர்ச்சிலை எடுத்துக் கொள்ளுங்கள். வாரக் கடைசியில் அவர் மீன் பிடிக்கப் போய்விடுவார். சிலர் புத்தகம் எழுதுவார்கள். சிலர் தோட்ட வேலை செய்வார்கள். சிலர் தேனீ, கோழி முதலியவற்றை வளர்ப்பார்கள். தாவரங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வோரும் உண்டு. சம்பளம் வாங்குகிற உத்தியோகம் அல்லாமல், அந்த வேலை இல்லாத மற்றக் காலங்களிலும் உடம்பு வாழ்வதற்கு, உள்ளம் சோர்வு அடையாமல் வாழ்வதற்கு, அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு ''ஹாபி''யை வைத்துக் கொண் டிருக்கிறார்கள். எத்தனை காலம் வாழ்ந்தாலும் ஏதாவது வேலையைச் செய்து கொண்டே இருப்பார்கள்.

நம் நாட்டில் எல்லாக் காலத்திற்கும் பயன்படுகிற வேலை இறை வழிபாடு. பற்பல கோயில்களைக் கட்டி, ஆறுகால பூசையை ஏற்படுத்தி, அவரவர்களுக்கு எந்தக் காலத்தில் ஒழியுமோ அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்க, துதிக்க வழிவகைளைச் செய்திருக்கிறார்கள். சொந்தமாக இறைவனை நினைந்து பாட நமக்கு ஆற்றல் இல்லாவிட்டால் பல்லாயிரக்கணக் கான பாடல்களை நாம் பாடி மகிழப் பெரியவர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒரு முறை படிப்பது என்றாலே நமக்கு ஆயுள் போதாது. இயன்ற அளவு அவற்றைப் படித்து ஆழ்ந்தால் மன அமைதி உண்டாகும்.

## சீலம்

ஆண்டவன் வழங்கிய உடம்பிலுள்ள அவயவங்களை அவன்பால் செலுத்தி நல்லொழுக்க நெறியில் நிற்பதைச் சீலம் என்று சொல்வார்கள். உலகில் பிறந்துவிட்டதனால் கடமைகளைச் செய்ய வேண்டுமென்றாலும் அந்தக் கடமைகளுக்குப் புறம்பே நிற்கின்ற பரம்பொருளை எப்போதும் நினைப்பது நல்ல சீலம். வேலை இல்லாதபோது பரம்பொருளையே அன்பர்கள் தியானம் செய்கிறார்கள். அத்தகையவர்கள் காலத்தை வீண் போக்குவது இல்லை. காலம் போகவில்லை என்று சொல்லாமல் காலம் போதவில்லையே என்பவர்களாக வாழ்கிறார்கள்.

யமனைப் பார்த்து, ''அந்தகா வந்து பார்'' என்று அறை கூவினார் அருணகிரியார். அதை முன் பாட்டில் பார்த்தோம். அந்த நிலை எப்படி வந்தது என்ற கேள்விக்கு விடை போல இந்தப் பாட்டைச் சொல்கிறார். 'வாழ்க்கையைப் பயனுடை யதாக வைத்துச் சீலத்துடன் வாழ்ந்தால் காலத்தை வெல்லலாம்; அதுவே காலனை வெல்ல வழி' என்று சொல்கிறார்.

நமது வீடுகளில் விழுகிற குப்பையை எடுத்துப் போய் வீதியில் கொட்டினால் கார்ப்பொரேஷன் தொண்டர்கள் அவற்றைப் பெருக்கி எடுத்துப் போகிறார்கள். வீதியில் கொட்டாமல் அங்கே வைத்திருக்கிற தொட்டியில் கொட்டி வந்தால் அதில் உள்ள குப்பையை வண்டிக்காரன் வந்து எடுத்துப் போகிறான். தொட்டி யிலும் கொட்டாமல் வீட்டுப் புழைக் கடையில் குழிதோண்டிப்

புதைத்து எருவாக்கிவிட்டால் அந்தத் தெருப் பக்கமே குப்பை வண்டிக்காரனுக்கு வேலை இல்லை. நாற்றம் அடிக்கும் குப்பை வண்டி அங்கே வராது. நமது உடம்பாகிய வீட்டில் மிகுதியான குப்பை கூளங்களை நாம் கொட்டி வைக்கிறோம். அதைச் சுத்தம் செய்யக் கூற்றுவன் வருகிறான். ஞானாக்கினியில் அக்குப்பை கூளங்களை நாமே பொசுக்கிவிட்டால் அவன் வரவேண்டிய வேலை இல்லை. வீட்டிலும், தெருவிலும் குப்பை கூளங்களைப் போடாமல் தன் வீட்டுத் தோட்டத்திலேயே புதைத்து விடுகிற கார்ப்பொரேஷன் என்ஜினீயர் கார்ப்பரேஷன் வண்டிக்காரனைப் பார்த்து, ''இனி இந்தப் பக்கமே வராதே'' என அதிகாரத்தோடு சொல்வது போல, யமனைப் பார்த்துப் பேசினார் அருணகிரியார்.

இப்போது அது எப்படிச் சாத்தியமாயிற்று என்பதைத் தெரிந்து கொள்ளும்படி பாடுகிறார்.

**நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்எந்த நேரத்திலும்**
**கோலக்குறத்தி யுடன்வரு வான்குரு நாதன் சொன்ன**
**சீலத்தை மெள்ளத் தெளிந்து அறி வார்சிவ யோகிகளே**
**காலத்தை வென்று இருப்பார்மரிப் பார்வெறும் கர்மிகளே.**

வெறும் கர்மிகள் மரிப்பர். காலத்தை வென்றிருப்பார் சிவ யோகிகள். சிவயோகிகள் சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார். குருநாதன் சொன்ன சீலத்தை அவர்கள் அறிவார்கள். அந்தக் குருநாதன் யார்? நீலச் சிகண்டியில் ஏறிவரும் வள்ளி மணாளன்.

## குருநாதன்

முருகனைச் சுமந்து வரத் தன் பெரிய மத்தகத்தைக் காட்டிக் கொண்டு வெள்ளை யானை காத்து நிற்கிறது. நான்கு கொம்புடைய யானை என்பர் அதை. அவனோ பறவையாகிய மயிலின் மீது வருகிறான்.

**நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்.**

நீலச் சிகண்டி – நீல நிறம் பொருந்திய மயில். சிகண்டி– மயில். எத்தனை விதமான வாகனங்கள் அவனுக்குக் காத்துக் கிடந்தாலும் அவற்றை எல்லாம் வேண்டாம் என்று ஒதுக்கி விட்டு, நீல நிறம் பொருந்திய மயிலின் மேலே ஏறி வருகின்ற பெருமான் அவன். பக்தர்கள் அழைக்கின்ற இடங்களுக்கு அந்த

மயில் வேகமாகப் போவதனாலே அவர்களுக்கு அநுகூலம் செய்வதற்காக அதில் செல்கிறான்.

''எந்த நேரத்திலும் அவன் நீலச் சிகண்டியில் வருவான். எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான்'' என்று எந்த நேரத்திலும் என்ற சொற்களை முன்னும்பின்னும் கூட்டிக் கொள்ள வேண்டும். இதை இலக்கணத்தில் இடைநிலைத் தீவகம் என்பர்.

## கோலக் குறத்தி

''முருகப் பெருமானுக்கு இரண்டு மனைவிகள் உண்டே. ஒருத்தி தேவயானை. மற்றொருத்தி வள்ளி. தேவயானையோடு அவன் வரமாட்டானா?'' எனச் சிலருக்குச் சந்தேகம் தோன்றலாம். பக்தர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் நிலையில் இருப்பவள் வள்ளி. நம்மைப்போல உலகத்தில் பிறந்து வாழ்ந்து முருகன் அருளைப் பெற்றவள். நீங்களும் அவன் அருளைப் பெறலாம் என்று தன் தோற்றத்தினால் புலப்படுத்துகிறாள்.

அவளைக் கோலக் குறத்தி என்கிறார். நாம் சரீர சம்பந்தமான புற அழகைப் பெரிதாக மதிக்கிறோம். ஆண்டவன் புற அழகை நினைக்கிறது இல்லை. குண சௌந்தரியத்தைப் பெரியதாக நினைக்கிறான். வள்ளியெம்பெருமாட்டியிடம் குண சௌந்தரியத்தை அவன் கண்டான். தன் நாயகனாக முருகனையே அவள் வரித்துவிட்டாள். அவள் மன உறுதியைச் சோதிப்பவனைப் போல வேடனாக வந்தான். கிழவனாக வந்தான். அந்த உருவங்களை எல்லாம் அவள் ஏறெடுத்தும் பார்த்தாளா? ''போ, என் அருகில் வராதே'' என விரட்டி அடித்தாள். அவள் கோபங்கூட அவனுக்கு இன்பமாக இருந்தது. ''உலகத்திலுள்ள மக்கள் நம்மை நாடாமல் எந்த எந்தப் பொருள்களையோ விரும்பி ஓடிக் கொண்டிருக்கிறார்களே; இந்த வள்ளி நம்மைத் தவிர வேறு யாரையும் பார்க்கக்கூட அல்லவா மறுக்கிறாள்? நம்பால் இவள் கொண்ட உள்ளக் காதல்தான் என்னே!'' என வியந்து அவளது அன்பாகிய குண சௌந்தரியத்தைக் கண்டான்.

அவள் எம்பெருமானை அடையாத வரையிலும் குறத்தியாக இருந்தாள். அவனைப் பிரிந்து இருந்தபொழுது வனவிலங்குகளுடனே அவள் இருந்தாள். ஆலோலம் பாடிக் கொண்டு வாழ்ந்தாள். ஆனால் எம்பெருமானை அடைந்த பிறகு, நீலச் சிகண்டி

யின் மேலே எம்பெருமானின் அருகிலே கோலக் குறத்தியாக இருக்கிறாள். எம்பெருமான், 'எந்த நேரத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான்.'

## எப்போதும் வருவான்

காலத்தை வெல்லவேண்டியவர்களாகிய நாம், எந்தப் பொழுதில் பூசை செய்யவேண்டும்? எப்போது அவனை நினைத்தால் வருவான்? சில பணக்காரர்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென்றால், ''இந்த வேளையில் போகவேண்டும்; அப்போதுதான் சிரித்த முகமாக இருப்பார்; மற்ற நேரங்களில் போனால் 'வள்' என்று விழுவார்'' எனச் சொல்வது இல்லையா? முருகனுக்கு அப்படி வரையறையாக இந்தக் காலந்தான் அடியார்களுக்கு அருள் புரியும் காலம் என்பது இல்லை. அவன் எப்போதும் வருவான். அவனுக்கு அதுதான் வேலை.

சிறந்த வள்ளல்களாக இருந்தவர்களுக்கே இன்ன நேரத்தில் தான் கொடை வழங்குவார்கள் என்ற வரையறை இல்லை. மலையமான் திருமுடிக் காரி என்பவன் ஒரு வள்ளல். அவனைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றில் இருக்கின்றன. அவனிடம் பரிசு பெறப் போகிறவர்கள் நல்ல நாள் பார்த்துச் சகுனம் பார்த்துச் சொல்லவேண்டும் என்பதில்லையாம். நல்லநாள் இல்லாவிட்டாலும் சகுனம் ஆகாவிட்டாலும் தம் குறையை எடுத்துச் சொல்லும் ஆற்றல் இராவிட்டாலும் போகிறவர்கள் வெறும் கையோடு வரமாட்டார்கள். அவன் கொடைக்கு நாள் இல்லை; முகூர்த்தம் இல்லை; எப்போதும் கொடுப்பவன்.

"நாளன்று போகிப் புள் இடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர், நெறிகொளப்
பாடான்று இரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே."*

---

★ நல்ல நாளல்லாத நாளில் போய்ச் சகுனம் இடையிலே தடுக்கச் சந்தர்ப்பம் அல்லாத செவ்வியிற் புகுந்து ஆற்றலில்லாத வகையில் சொன்னாலும், ஒழுங்காக ஒலி நிறைந்து முழங்கும் அருவியையும் பெருமையையும் உடைய மலையைப் பெற்ற காரியைப் பாடிய புலவர் வெறுங் கையோடு வரமாட்டார்.

முருகன் வள்ளல்களிற் பெரிய வள்ளல். அவனுக்கு இன்ன காலம் என்ற வரையறை இல்லை. அவனை எப்பொழுது வேண்டுமானாலும் திருப்புகழ் பாடித் துதிக்கலாம். எதற்கும் ஒரு காலம் குறிப்பிட்டு வேலை செய்கின்ற நாம், ஆண்டவனைத் துதிக்கவும் ஒரு குறிப்பிட்ட காலம் வேண்டுமே எனக் கலங்க வேண்டாம். எப்போது கூப்பிட்டாலும் அவன் வருவான். 'எந்த நேரத்திலும்' என்பதோடு எந்த இடத்திலும் என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ''எந்த இடத்திலிருந்து நீ கூப்பிட்டாலும் அவன் வருவான்'' என்று கொள்ளலாம்.

நீலச் சிகண்டியில் ஏறும்
பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்.

நீல வண்ணம் பொருந்திய மயிலின்மேல் ஏறும் பிரான் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கோலக் குறத்தியுடன் வருவான். யார் அழைத்தாலும் வருவான். அவன் அருள் எல்லாக் காலத்திலும், எந்த இடத்திலும் கிடைப்பது மாத்திரம் அல்ல. எந்தப் பக்குவத்தில் இருந்தாலும் அவன் அருள் செய்வான். ''இறைவன் அருளைப் பெறுவதற்கு நான் எந்த விதமான பூசையையும் செய்யவில்லையே! நான் இவ்வுலகில் மிகப் பாவியாகப் பல தீய செயல்களை அல்லவா செய்து கொண்டிருக் கிறேன்? எனக்கு அவன் அருள் எப்படிக் கிடைக்கும்?'' எனப் பயப்படவேண்டியதில்லை. நாம் எந்த நிலையில் இருந்தாலும் எந்தக் கோலத்தில் இருந்தாலும், அவனை அழைத்தால் போதும்; அவன் ஓடி வந்து நமக்கு அருள் செய்யக் காத்திருக்கிறான். குறமகளோடு வருவது இதைப் புலப்படுத்துகிறது.

வள்ளி இருந்த நிலை என்ன? அவள் கோலம் என்ன? அவள் பிறந்து வாழ்ந்த குடி எப்படிப்பட்டது? அவை எல்லாம் நமக்குத் தெரியும். வேடர்களின் மத்தியிலே, தினைக் கொல்லையைக் காத்துக் கொண்டு, குற மகளாக வள்ளி இருந்தாலும், அவள் அவனை நினைந்து கூப்பிட்டாள். அவள் குலத்தையும், கோலத்தையும், அவள் வளர்ந்து கொண்டிருந்த நிலையையும் கண்டு எம்பெருமான் வராமல் இருக்கவில்லை. ஓடிப்போய் அவளை ஆட்கொண்டான். ''உன்னைக் காட்டிலும் தாழ்வான சூழலில் இருந்தவள் வள்ளி. அவளை ஆட்கொண்ட எம்

பெருமானை நினைந்து நீ உருகி அழைத்தால் அவன் உன்னை ஏற்றுக் கொள்வான். அதற்காகவே அவன் கோலக் குறத்தி வள்ளி யுடனேயே வருவான்'' என்னும் கருத்துப் புலப்பட அருண கிரியார் இதை உபதேசிக்கிறார்.

## உபதேசம்

அவன் குருநாதன்; உபதேசம் செய்கின்றவன். பல இடங் களிலே அருணகிரியார் தமக்கு உபதேசம் செய்தவன் முருகன் என்பதைச் சொல்லியிருக்கிறார்.

''தேனென்று பாகென் றுவமிக்
கொணாமொழித் தெய்வவள்ளி
கோன்அன்று எனக்கு உபதேசித்து
ஒன்று உண்டு''

என்று முன்பே சொல்லியிருக்கிறார். அந்தக் குருநாதன் வருவான். அவன் ஒரு சீலத்தைச் சொன்னவன்.

குருநாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார் சிவயோகிகளே.

அவன் சொன்ன சீலம் அல்லது ஒழுக்கத்தை மெள்ளத் தெளிந்து அறிபவர் சிவயோகிகளாம். ''நமக்கு வள்ளி நாயகன் ஒன்றும் உபதேசம் செய்யவில்லையே! அருணகிரிநாதர் அல்லவா உபதேசம் செய்கிறார்?'' என்று நாம் நினைக்கலாம். கங்கை நீர் பல பல கால்வாய்களின் வழியாக வந்தாலும் அது கங்கை நீரே தவிர வேறு நீர் ஆகாது. கங்கைத் தண்ணீரை ஒரு சின்னச் செம்பில் மொண்டு கொண்டு வந்து வைக்கிறோம். எத்தனை காலம் ஆனாலும் அது கங்கையாகவே நம் வீடுகளில் இருக்கின்றது. உபதேசமும் அத்தகையதே. பரம்பரை பரம்பரையாக அது வந்து கொண்டிருக்கிறது. காலத்தினால் இடையறாமல் ஞான குரு பரம்பரை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. கங்கையில் இருக்கிற நீரும் நம் வீட்டில் இருக்கிற நீரும் ஒன்றேயாவது போல முருகன் எம்பெருமானுக்கு உபதேசம் செய்ய, அவர் முனி புங்கவர்களுக்கு உபதேசம் செய்ய, அவர்கள் வழிவழியாக மக்களுக்கு உபதேசம் செய்ய அந்த உபதேச மொழி வந்து

கொண்டே இருக்கிறது. குமரகுருபரன் சொன்ன மூல உபதேசமே இன்று பல கால்களாகப் பிரிந்து அருணகிரிநாதரைப் போன்ற நல்லோர்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கிறது. அவன் சொன்ன காலம் வேறு, சொன்ன இடம் வேறு என்று எண்ணாமல் அவனே குருநாதனாக இப்போதும் எழுந்தருளி வந்திருக்கிறான் என்று எண்ணுவதுதான் முறை.

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகிய கொள்கையைச்
சிறுமை என்று இகழாதே"

என்பது திருவாசகம்.

எப்போதும் ஆண்டவனை நினைத்து வாழ்வதே குருநாதன் சொன்ன சீலம். இந்தச் சீலத்தை யார் அநுஷ்டிக்கிறார்களோ அவர்கள் சிவயோகிகள். 'குருநாதன் எனக்குச் சொன்ன' என்று பொருள் செய்யாமல் 'யாவருக்கும் பயன்படும்படி சொன்ன' என்று கொள்ள வேண்டும். இன்றும் குரு பரம்பரை இருக்கிறது. அவர்கள் சொல்கின்ற சீலத்தை யார் மெள்ளத் தெளிந்து அறிவார்களோ அவர்கள் காலத்தை வென்றிருப்பார். சீலம் என்பது ஒழுக்கம். வாக்கினாலும் உடம்பினாலும் செயலாலும் அவ்வவற்றுக்குரிய ஒழுக்க நெறியில் நிற்பவர்கள் காலத்தை வென்றிருப்பார்கள். மனிதன் வாழ்நாளில் நினைப்பினாலும், வாக்கினாலும், செயல்களினாலும் பூரண வாழ்வுக்கேற்ற வரன் முறையையறிந்து செயல் செய்து ஒழுக வேண்டும். அந்த ஒழுக்கத்தின் ஆதார சுருதியாக இறையுணர்ச்சி இருக்க வேண்டும். அந்த வகையில் ஈடுபடுகிறவனுக்குக் காலம் போவதே தெரியாது.

## காலத்தை வெல்லுதல்

ஒருவன் தொழிற்சாலையில் வேலை செய்கிறான். காலையில் சங்கு ஊதியபோது உள்ளே நுழைகிறான். இயந்திரங்களின் நடுவில் தன்னை மறந்து வேலை செய்கின்ற அவன் பிற்பகல் ஒரு மணிக்குச் சங்கு பிடித்தவுடன்தான் தன் நினைவு பெற்று, 'மணி ஒன்றாகி விட்டதே!' என நினைக்கிறான். ஐந்து மணி நேரம் தன்னை மறந்து வேலை செய்தான். நேரம் போனது அவனுக்குத் தெரியவில்லை. மற்றொருவன் வீட்டிலே காலைச்

சிற்றுண்டியை உண்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறான். ''பொழுது போகவில்லையே. பொழுதுபோகவில்லையே! என்று உள்ளுக்கும் வெளிக்குமாக நடந்து கொண்டிருக்கிறான். இப்படிக் காலத்தை நினைந்து, காலத்தைக் கொல்வதற்கு வழி தெரியாமல் திணறி மனம் சலித்துப் போகின்றவர்களைக் காலன் கொண்டு போய் விடுகிறான். காலனை வெல்லக் காலத்தை வென்று வாழ்பவர் கள் யார்? குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத்தெளிந்து அறியும் சிவயோகிகள். இவர்களே காலத்தை வென்றிருப்பவர்கள்; காலனையும் வெல்கிறவர்கள்.

ரெயிலில் ஏறிப் படுத்த பிரயாணி ஒருவர் இருநூறு மைல் தூரத்தை எவ்விதச் சிரமமும் இன்றி, கண்களில் எரிச்சல் இல்லாமல் சுகமாகத் தூங்கிக் கொண்டே கடந்து விடுகிறார். வாழ்க்கையிலே குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிந்த சிவயோகிகள் இறைவன் அருள் நினைவிலே தூங்கிக் காலத்தைச் சுகமாக வென்று எவ்விதமான பயமும் துன்பமும் இன்றிக் காலனையே வென்றுவிடுகிறார்கள்.

## யோகம்

யோகம் என்பது மனத்தை நிறுத்துதல்; சித்த விருத்தியைத் தடுத்தல்.

''யோகாஸ் சித்த வ்ருத்தி நிரோத:'' என்பது பதஞ்சலி யோகசூத்திரம்.

வேகமாக ஓடுகின்ற உள்ளத்தை இறைவன் நாமத்தைச் சொல்லிச் சொல்லி நிறுத்தினால் அதுவே யோகம். குருநாதன் சொன்ன சீலத்தைக் கடைப்பிடித்து, மனத்தைச் சுத்தமாக வைத்து, ஆண்டவன் அருள் நெறியில் ஒழுக வேண்டும். அந்த நெறிப்படி செல்கின்ற வர்கள் சித்த விருத்தியை ஒழித்துக் காலத்தை வெல்வார்கள்.

## வெறும் கர்மிகள்

### மரிப்பார் வெறும் கர்மிகளே

இறைவனை நினைந்து செய்கின்ற கர்மமே யோகம் ஆகிவிடு கிறது. கர்மங்கள் நிஷ்காம்ய கர்மம், காம்ய கர்மம் என இரு வகைப்படும். எவன் கர்மத்தின் விளைவில் கருத்தை வைத்துச்

செய்கின்றானோ அவனுக்குப் பிறவி உண்டு. பிறவியினால் துன்பம் உண்டு. பலனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் எது வந்தாலும் வரட்டும் என்று இறைவன் மேலே பாரத்தைப் போட்டு ஒழுக்க நெறியிலே நின்று எவன் தன் கடமைகளைச் செய்கிறானோ அவனுக்குப் பிறவி இல்லை; துன்பமும் இல்லை. அவன் செய்வது வெறும் கர்மம் அல்ல; யோகமாகிய கர்மம். அவன் கர்மயோகி. இறைவனை நினைக்காமல் தான் செய்கின்ற காரியத்திற்கு உடனே கூலியை எண்ணுகிறவன் செய்வது வெறும் கர்மம். அவனே வெறும் கர்மி. இறைவன்பால் பக்தி இல்லாமல் செய்பவை வெறும் கர்மங்கள். ஆண்டவன் நெறியில் எந்த விதமான கூலியையும் எதிர் பார்க்காமல் செய்கின்ற கர்மங்கள் எல்லாம் யோகமாக மாறிவிடுகின்றன. அத்தகையவன் காலத்தை மறந்து இறைவனது திருவருள் விலாசத்திலே தூங்குகிறான். இறைவனை நினைக்காமல் தான் செய்கின்ற கர்மங்களின் பயனையே நினைந்து வாழ்பவன் காலத்தைக் கொல்ல மாட்டாமல் தவிக்கிறான். அவனைக் காலம் பயமுறுத்த, பின்னர்க் காலன் வந்து பயமுறுத்துகிறான். வாழும்போதே அவன் செத்துப் போவான். வாழ்ந்தும் வாழாது இருக்கின்றவன் அவன். நடமாடும் பிணமாக வெறும் கர்மியாக இருக்கிறான். இத்தகைய வெறும் கர்மிகள் மரிப்பார்கள்.

குருநாதனிடம் பக்தியின்றி அவன் சொன்ன சீலம் இன்னதென்று தெரியாமல் தம் மனம் போன போக்கிலேயே செய்பவர்களையும் வெறும் கர்மிகள் என்னலாம். அவர்களும் பயன் கருதிச் செயல் புரிவோரும் ஒரே வகையைச் சார்ந்தவர்களே.

மனிதர்களாக இருந்தாலும், தேவர்களாக இருந்தாலும் இறைவனை நினைந்து வாழாதவர்கள் அசுரர்கள். இவர்கள் செய்கின்ற கர்மாக்கள் வெறும் கர்மாக்கள். அவர்கள் வெறும் கர்மிகளே; கர்மயோகிகள் அல்ல.

'வாழ்நாளில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் இறைவன் இருக்கின்றான் என்ற நினைப்போடு, செய்கின்ற காரியங்களின் பலனைக் கருதாமல் இறைவனையே நினைந்து தங்கள் கடமை களைச் செய்கின்றவர்கள் யோகிகள். இவர்கள் காலத்தை வென் றிருப்பார்கள்; காலனையும் வென்று விடுவார்கள். இறைவனை

*நினைக்காமல் மற்றக் காரியங்கள் எத்தனை செய்தாலும், அவர்கள் வெறும் கர்மிகள்தாம். அவர்கள் காலத்தை வெல்லாமல், காலனுக்கு இரையாகி மரிப்பார்கள்.' இதுவே இந்தப் பாடலின் கருத்து.*

நீலச் சிகண்டியில் ஏறும்
　　பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன் வரு
　　வான்குரு நாதன்;சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
　　வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்; மரிப்
　　பார்வெறும் கர்மிகளே.

*(நீல மயிலின் மேல் ஏறி வரும் பெருமானும் எந்த வேளையிலும் அழகையுடைய குறத்தியாகிய வள்ளியுடன் வருபவனுமாகிய குருநாதன் உலக மக்கள் உய்யும் பொருட்டுத் திருவாய் மலர்ந்தருளிய ஒழுக்கத்தை மெல்லத் தெளிந்து உணர்பவர்களாகிய சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பார்கள்; அந்தச் சீலத்தை உணராமல் வெறும் கர்மத்தைச் செய்பவர்கள் மரிப்பார்கள்.*

*சிகண்டி–மயில். சீலம்–ஒழுக்கம். கர்மிகள் மரிப்பார் என்றமையால் சிவயோகிகள் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவார்கள் என்று கொள்க. அவர் காலத்தை வென்றிருப்பார் என்றமையால் வெறும் கர்மிகள் காலத்தால் வெல்லப்படுவார் என்று கொள்க,)*

# காலையும் மாலையும்

# முகவுரை

வாழ்நாளில் மனிதனது மனத்திண்மையைக் குலைப்பது காமம். இல்வாழ்வில் இருப்பவனையும் துறவியையும் நிலைகுலையச் செய்து அவர்களுடைய ஒழுக்கத்தைப் பாழாக்கிப் பலவகைத் துன்பங்களை அவர்களுக்கும் அவர்களால் பிறருக்கும் உண்டாகும் படி செய்யும் அந்த நோய்க்கு உட்படாதவர்கள் பெரியவர்கள். காமனை வென்றவன் சிவபெருமான். அவன் காமனை எரித்த பிறகு முருகன் திரு அவதாரம் செய்தான். வேலாயுதப் பெருமான் ஞானமே உருவானவன். அவனை நம்பினவர்களுக்குக் காமத்தால் உண்டாகும் துன்பம் இல்லை. அவனுடைய அருள் இருந்தால் மனத்திண்மை உண்டாகும். அந்தத் திண்மையாகிய புணையைக் கொண்டு காமக் கடலைக் கடந்து விடலாம்.

கந்தர் அலங்காரத்தில் வரும் ஆறு பாடல்களுக்குரிய விளக்கம் இந்தப் புத்தகத்தில் இருக்கிறது (27 – 32). இந்த ஆறு பாடல்களிலும் மூன்று காமத்தைப் பற்றிப் பேசுகின்றன. இரண்டு பாடல்கள் பெண் மயலில் உழன்று தடுமாறுவதைச் சொல்கின்றன (4, 6). மூன்றாவது காமத்தை வென்ற பெருமிதத்தைச் சொல்கிறது (3). பெண் மயலில் உழன்றதைச் சொல்லும் இரண்டு பாடல்களில் ஒன்று (4) மனத்தைப் பார்த்துப் பேசுவதாக அமைந்துள்ளது. ‘பெண்களைக் கண்டு அவர்களுடைய உறுப்பு நலன்களைப் பாராட்ட எண்ணுகிற நீ, முருகனிடம் உள்ள பொருள்களை எண்ண வாய்ப்பு இருக்கிறதே! அவற்றை எண்ணாமல் இருக்கிறாயே! எப்படி முக்தியை அடைவது?’ என்று மனத்தை நோக்கி இடித்துரைக்கும் பாடல் அது. அது ஒரு வகையில், காம உணர்ச்சி உண்டாகாமல் இருக்க எவ்வாறு மகளிரைக் காண வேண்டுமென்றும், எவ்வாறு எண்ண வேண்டு மென்றும் வழி சொல்லித் தருகிறது. மற்றொரு பாட்டோ (6)

துறவிகளும் மங்கையர் விழி வலையிற் பட்டுத் தடுமாறுவதை விரிக்கிறது.

'வள்ளிமணாளன் திருவருளால் நான் காம சமுத்திரத்தைக் கடந்தேன்' (3) என்று ஒரு பாட்டில் அருணகிரியார் பாடுகிறார்.

வாழ்க்கையினிடையே காமனால் அச்சம் உண்டாகிறது. வாழ்க்கையின் முடிவில் காலனால் அச்சம் உண்டாகிறது. காமனை வெல்வது போலவே முருகன் அருள் இருந்தால் காலனையும் வென்று விடலாம் என்பதை அருணகிரிநாதர் பல இடங்களில் எடுத்துச் சொல்கிறார். இப் புத்தகத்தில் எடுத்து விளக்கும் முதற் பாடல் அந்தக் கால ஐயத்தையே பேசுகிறது. ஓலையும் தூதரும் கண்டு திண்டாடுவதைப் போக்கி முருகனுடைய திருவுருவம் முன் நிற்கிறதாம். அப்பெருமானுடைய உருவத்தியானம் செய்தால் இடருறும்போது அவ்வுருவம் முன்வந்து நின்று அதனைக் களையும் என்ற குறிப்பும் இப்பாடலில் இருக்கிறது.

ஒரு பாட்டு, இந்த உடலாகிய சிறையிலே புகாத வண்ணம் திருவடியாகிய வீட்டைத் தந்தருள வேண்டுமென்று முருகனை வேண்டுவதாக இருக்கிறது (5). இறைவன் திருவடியே வீடாக இருக்கும் என்ற உண்மையை இப் பாடல் புலப்படுத்துகிறது.

மற்றொரு பாட்டு (2), இறைவன் திருவருளால் பெறும் அநுபவத்தைப் பற்றிச் சொல்கிறது. அகண்டமாக இருக்கும் பரம்பொருளை உருவமாக வைத்து வழிபட்டுப் புகலடைந்து காதல் கொண்டால் அக்காதல் முறுகுமிடத்துப் பிறக்கும் இன்பம் இத்தகையதென்று பிறருக்கு உணர்த்தலாகாது என்று அருண கிரிநாதர் சொல்கிறார். "முருகுப்பித்துப் பிடித்துப் போய் அந்த இன்பத்தை அநுபவித்துப் பார்க்க வேண்டுமேயன்றி எவ்வாறு புகல்வது?" என்று கேட்கிறார்.

இதில் உள்ள ஆறு பாடல்களில் ஒன்று மனத்தை முன்னிலைப் படுத்திச் சொல்லியது (4); இரண்டு முருகனை முன்னிலை

யாக்கிப் பாடியவை (5, 6); மற்ற மூன்றும் படர்க்கையில் அமைந்தவை. முருகனுடைய வீரத் திருவிளையாடல்களை இரண்டு பாடல்களில் காணலாம் (5, 6). அவனுடைய வேலின் பெருமையை நான்கு பாடல்கள் சொல்கின்றன (2, 4, 5, 6). அவனுடைய மயிலை இரண்டு பாடல்களும் (1, 4), திருவடியை மூன்று பாடல்களும் (2, 4, 5) நினைப்பூட்டுகின்றன. அவன் திருவடியை, செய்ய தாள் என்றும், வெட்சித் தண்டைக்கால் என்றும், புண்டரீகத்தினும் செக்கச் சிவந்த கழல் என்றும் போற்றுகிறார்.

தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வியாழக்கிழமை தோறும் இந்தச் சொற்பொழிவுகள் நடைபெறு கின்றன. பல அன்பர்கள் ஆர்வத்துடன் கேட்பதால் சிந்தித்துச் சொல்லவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகிறது. பேசுவதைச் சுருக்கெழுத்தால் எழுதி உருவாக்கும் பொறுப்பை அன்பர் ஸ்ரீ அனந்தன் ஏற்றுக் கொண்டிருப்பதால், கூடிய வரையில் திருத்தமாகப் பேச வேண்டும் என்று எண்ணுகிறேன். இந்தப் பாதுகாப்புக்களுக்கு நடுவே, 'இது புத்தக உருவாகிறது' என்ற எண்ணமும் உள்ளத்தில் இருந்து எச்சரிக்கை செய்கிறது. இந்தக் காரணங்களால் சொன்னதையே சொல்லாமல் இருக்க முயன்று பார்க்கிறேன். ஆயினும் சில இடங்களில் முன்பு விரிவாகச் சொன்னதைச் சுருக்கமாகச் சொல்லும் அவசியம் நேர்ந்து விடுகிறது.

சொற்பொழிவு வாரந்தோறும் நடைபெற்றாலும் அன்பர் அனந்தன் தட்டெழுத்தில் வடித்துத் தந்தவற்றைப் பார்ப்பதில் சோம்பல் இடையே குறுக்கிடுகிறது. அதனால் புத்தகங்கள் சற்றே எருமை நடை போடுகின்றன.

பேசுவது காற்றோடு போகாமல் உருவாவதற்கு இப்படி ஓர் அன்பரை முருகன் கூட்டுவித்தானே என்று எண்ணி அவனருளை வியக்கிறேன். அவருக்கும், இந்த நூல் வரிசையை அச்சேற்றும்

பொறுப்பைத் தாங்கும் என் அன்பர் ஸ்ரீ ரா.ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்களுக்கும், இந்தச் சொற்பொழிவுகள் இடையூறின்றி நடக்க வழிகோலி வரும் முருகன் திருக்கோயில் பாதுகாவலராகிய ஸ்ரீ சந்திரசேகரன், ஸ்ரீ நரசிம்மன், ஸ்ரீ திருவேங்கட நாயகர் ஆகிய மும்மூர்த்திகளுக்கும் அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தகங்களில் சிறிதளவேனும் பொருள் இருப்பதாக எண்ணும் அன்பர்களின் பாராட்டில் பெரும் பங்கு மேலே சொன்ன ஐந்து பேர்களுக்கும் உரியதாகும்.

முருகன் திருவருள் யாண்டும் மல்குக.

**கி.வா. ஜகந்நாதன்**

03.08.1957

# காலையும் மாலையும்

## 1

யமனுடைய வாதனையினின்றும் நீங்குவதற்குக் காலத்தை மாய்த்துக் காலத்தினால் மாய்க்கப்படாமல் இருப்பதற்கு, இறைவன் திருவருளால் பெறுவதற்குரிய உபதேச சீலம் இன்னதென்பதை, ''நீலச் சிகண்டியில் ஏறும்பிரான்,'' என்னும் பாட்டினால் தெரிந்து கொண்டோம். அடுத்த பாட்டில் அருணகிரிநாதர் மற்றோர் உபாயம் சொல்கிறார்.

### பல வகை உபாயம்

கருணை நிரம்பியவர்கள் மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமானால் நான்கைந்து வழிகளைக் காட்டுவார்கள். ஏதேனும் ஒரு வழியை மாத்திரம் காட்டினால் அந்த வழியிலே செல்லும் திண்மையும் தகுதியும் இல்லாதவர்களுக்கு அதனால் பயன் உண்டாகாது. அதனால் ஒன்று இல்லாவிட்டாலும் மற்றொன்று பயன்படட்டும் என்ற கருணையோடு பலவகை வழியைப் பெரியோர்கள் காட்டுவார்கள்.

மிகக் குறைந்த செல்வம் உடையவன் ஒருவனை அணுகினால் அவன் தன்னிடம் பண்டம் ஒன்றும் இல்லாமையினால் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் கொடுப்பான். அப்படி இல்லாமல் வளவாழ்வு பெற்று, எல்லாப் பொருளும் தன் மாளிகையில் குவித்து வைத்திருக்கும் செல்வனை அணுகினால் அவன் வேண்டுவனவற்றையெல்லாம் பண்டமாகக் கொடுப்பான்; வகை வகையான பண்டங்களைக் கொடுப்பான்.

பொருள் இருந்தாலும் மனம் இல்லாவிட்டால் கொடுக்க இயலாது. மனம் இருந்தாலும் பொருள் இல்லாவிட்டால் அப்போதும் கொடுக்க இயலாது. ஆகவே இரண்டும் உடைய மக்களின் வழியாகத்தான் அவர்களைச் சார்ந்தவர்களுக்குப் பலவகைப் பண்டங்களும் பணமும் கிடைக்கின்றன.

எவ்வளவு ஏழையான தாயாக இருந்தாலும் தன் செல்வ நிலைக்கு உட்பட்டுப் பல பல அணிகளையும், சுவைமிக்க பண்டங்களையும் தன் குழந்தைக்கு அளிக்கிறாள். அதைப்போல யமவாதனையினின்றும் விடுதலை பெற மக்களுக்குப் பல வழிகளைக் கருணைமிக்க ஆசிரியர்கள் காட்டுகிறார்கள்.

## பலவகை வழிபாடுகள்

நம் சமயத்தில் பல வகையான வழிபாடுகள் இருப்பதற்குக் காரணம் பல தரப்பட்ட மக்களும் இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்ற கருணை நோக்கந்தான். ஒவ்வொரு மனிதருக்கும் உள்ள மனப்பக்குவத்தை உணர்ந்து அதற்கு ஏற்றபடி எப்படி எப்படி உபதேசம் செய்யவேண்டுமோ அப்படிச் செய்தவர்கள் நம் நாட்டுப் பெரியோர்கள். இறைவனது அருளால் இன்பப் பேற்றைப் பெற்றுநின்ற அருணகிரிநாதரும் எல்லா மக்களும் எம்பெருமான் அருளால் இன்பத்துக்கு உரியவர்களாக வேண்டுமென்ற பெருங் கருணையோடு கந்தர் அலங்காரத்தில் பல வழிகளைச் சொல்கிறார். ''ஆருயிர்கள் காலனிடத்திலிருந்து தப்ப வேண்டும்'' என்ற கருணையோடு முன்னே,

> **''அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியை அன்பால்**
> **எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்டதென்ன**
> **விழித்துப் புகைஎழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்**
> **கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே''**

என்ற பாட்டில் எதிர்மறை முகமாக, ''எம்பெருமான் புகழைச் சொல்லும் தமிழ்க் கவிகளை எழுத்துப் பிழையறக் கற்றால் கூற்று வனுடைய இன்னலுக்கு ஆளாகாமல் இருக்கலாம்'' என்பதைப் புலப்படுத்தினார். பிறகு வேலும் மயிலும் துணையாக இருப்பத னால், ''மரணப்ரமாதம் நமக்கு இல்லையாம்'' என்றார். பிறகு யமனையே அறைகூவி, ''அவிரோத ஞானச் சுடர்வடிவாள் கண்டா யடா!'' என்றார். அதற்கு அப்பால், ''குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்து அறிவார் சிவயோகிகளே, காலத்தை வென்றிருப்பார்'' என்று கூறினார். இப்போது, ''சுவாமி! எனக்குத் தமிழ் தெரியாது. எனக்குக் குருநாதனும் கிடைக்கவில்லை. அப்படியே யாராவது உபதேசம் செய்தாலும் அந்தச் சீலத்தின்படி

ஒழுக எனக்குத் திறமை இல்லை. எனக்கு ஒன்றும் வழி இல்லையா?'' என்று கேட்டால் அதற்கு விடைபோல இருக்கும் பாட்டைச் சொல்கிறார்.

ஓலையும் தூதரும் கண்டுதிண்
　டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு
　மேகந்த வேள்மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும்
　கையில் சிவந்தசெச்சை
மாலையும் சேவல் பதாகையும்
　தோகையும் வாகையுமே.

இந்தப் பாட்டின் பொருளைக் கேள்வியாகவும் விடையாகவும் கற்பனை செய்து பார்க்கலாம்.

## காட்சியும் பதிவும்

''கோயிலுக்குப் போய் இருக்கிறாயா? ஆண்டவனுக்கு எத்தனையோ விதமான அலங்காரங்களைப் பண்ணுகிறார் களே! அவற்றையெல்லாம் பார்த்திருக்கிறாயா?'' என்று ஒரு வினாவைக் கேட்டார் அருணகிரிநாதர்.

''போயிருக்கிறேன் சுவாமி. கந்த சஷ்டி அன்றுகூடக் கோயிலுக்குப் போய்ப் பார்த்தேன்'' என்று அன்பன் பதில் சொன்னான்.

''பார்த்துவிட்டு வந்தாயே; என்ன பயனைக் கண்டாய்?''

''பார்த்தேன். அலங்காரம் அழகாய் இருந்தது. எல்லோரும் கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். நானும் போட்டுக் கொண்டு கீழே விழுந்து வணங்கிவிட்டு வந்தேன்.''

''கண் பெற்ற பயனாகக் கண்டேன் என்றாயே; அது நல்லது. ஆனால் கண்ணுக்கு அப்பால் நோக்கும் நோக்கம் ஒன்று இருக்கிறது. அறிவுடைய மனிதனாக நீ இருப்பதனால் கண்ணாலே பார்த்து வந்துவிட்டேன் எனச் சொல்வதில் பயன் இல்லை.''

''பின்னே என்ன செய்ய வேண்டும்?''

''கண்ணாலே பார்த்ததைக் கருத்திலே பதித்துக் கொள்ள வேண்டும்.''

''கருத்திலே அதை எப்படிப் பதித்துக் கொள்வது?'' என்று அவன் கேட்டான்; பதில் வருகிறது.

''உலகத்தில் எத்தனையோ பொருள்களை நீ பார்க்கிறாய். அவை எல்லாம் உன் மனத்தில் நிற்பது இல்லையா? உனக்கு அழகான மனையாட்டி இருக்கிறாள்; அன்புள்ள குழந்தை இருக்கிறது. அவர்கள் ஊருக்குப் போயிருக்கிறார்கள். நீ தனிமையில் படுத்திருக்கிறாய். கண்ணை மூடிக்கொண்டு ஏதோ யோசிக்கிறாய். உன் அழகான மனைவி உன் கருத்திலே தோன்றுவது இல்லையா? உன் செல்லக் குழந்தை மார்பின் மீது தவழ்ந்து விளையாடுவது போல நினைந்து உடம்பு கிளுகிளுத்துப் போகிறாய் அல்லவா? அப்போது குழந்தை உன்னிடத்தில் இல்லாவிட்டாலும் மார்பின் மீது நீந்துவது போல நினைத்து இன்புறுகிறாயே! அது எப்படி? அவர்களுடைய உருவம் உன் உள்ளத்தில் எப்படிப் பதிந்தன?''

''நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்; அதனால் பதிந்தன.''

''அப்படியானால் நீ அடிக்கடி ஆண்டவன் கோயிலுக்குச் செல்லலாமே! அவன் அலங்காரத்தைப் பார்க்கலாமே! பார்த்தால் பதிவு ஏற்படாதா?''

''நான் அடிக்கடி போகிறேன்; அடிக்கடி பார்க்கிறேன். இருந்தும் பதிவு ஏற்படவில்லையே!''

''மனையாட்டியை அடிக்கடி பார்க்கிறேன், அதனாலே பதிவு ஏற்பட்டது என்று சொல்கிறாய். ஆண்டவனை அடிக்கடி பார்க்கிறேன், இருந்தும் பதிவு ஏற்படவில்லை என்கிறாய். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்லவா? நீயே யோசித்துப் பார்.''

விடை வரவில்லை. அவர் மேலும் விளக்குகிறார். ''மனையாட்டியை அடிக்கடி பார்ப்பது இருக்கட்டும். ஒருவன் மணம் செய்து கொள்வதற்கு முன் பெண் பார்க்கச் சென்றான். தனக்கு மனையாட்டியாக வரப்போகும் அந்தப் பெண்ணை ஒருமுறை தான் பார்த்தான். இருந்தும் கல்யாணம் ஆகும் வரையில் கிட்டத்தட்ட இரண்டு மாதம் எப்போதும் அவளையே நினைத்துக் கொண்டிருந்தான்; அந்தப் பெண்ணின் உருவம் அவன் மனத்திலேயே பதிந்து நின்றது. இப்படி நிகழ்வது உண்டு அல்லவா?''

''உண்டு. உண்மையைச் சொல்கிறேன். நான் என் கல்யாணத் தின்போது பெண் பார்க்கச் சென்றேன். பெண் வீட்டில் தங்கியது அரை மணி நேரம். அதுவும் பெண்ணைப் பார்த்தது ஐந்தே நிமிஷந்தான். அதற்குப் பிறகு கல்யாணம் ஆகும் வரையில் அவள் உருவம் என் மனத்திலேயே நின்றது.''

## கண்ணும் கருத்தும்

''ஓர் உருவம் மனத்தில் பதிவு பெறவேண்டுமென்பதற்குப் பல முறைகள் காணவேண்டுமென்பது அவசியம் அன்று. ஒரே முறை பெண்ணைப் பார்த்தவன், அவள் என் காதலியாக வரப் போகிற பெருமாட்டி என்ற அறிவோடு பார்த்தான். கண்ணைக் கொண்டு பார்க்கும்போதே தன் கருத்தைக் கொண்டும் பார்த்தான். அதனால் ஒரு முறை பார்த்தாலும் பதிந்தது. பல முறைகள் பார்த்தும் மனத்தில் எத்தனையோ உருவங்கள் பதிவு ஆகாமல் இருந்தும், இந்த உருவம் கண நேரத்தில் பதிவாகிவிட்டது. உருவம் மனத்தில் பதியவேண்டுமென்றால் அறிவோடு, கருத்தோடு பார்த்தல் வேண்டும்.''

''அறிவோடு பார்ப்பது என்றால் என்ன?''

''அந்தப் பொருளின் பற்பல பகுதிகளையும் தனித்தனியாகக் கூர்ந்து பார்ப்பது மனத்தில் பதிய வழியாகும்; அதுவே அறிவோடு பார்ப்பது. தனித்தனியாக, ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து வந்தால் கடைசியில் அந்தத் திருவுருவம் முழுவதும் மனத்தில் அமையும். இல்லாவிட்டால் அமையாது.''

''நான் நாளைக்குக் கோயிலுக்குப் போவேன். ஆண்டவனது திருவுருவத்தை எப்படிப் பார்ப்பது என்று கொஞ்சம் சொல்லித் தாருங்கள். நீங்கள் சொல்வது அத்தனையும் என்னுடைய அநுபவத்தில் உண்மை என்று படுகின்றது. கண்ணால் பார்க்கும் போதே என்னுடைய அநுபவப் பொருளாகக் கருத்திலும் நான் பார்த்ததனால்தான் மனையாட்டியின் உருவமும் குழந்தையின் உருவமும் மனத்தில் பதிந்திருக்கின்றன. அப்படியே ஆண்ட வனையும் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறீர்களே; நான் எப்படிப் பார்க்க வேண்டும்? கோயிலுக்குப் போனால் தீபாராதனை காட்டுகிறார்கள். ஒரே கூட்டமாக இருக்கிறது. நான் அவ்விடத்தில்

எவ்வாறு ஆண்டவனைத் தரிசித்து, அவன் திருவுருவத்தை மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுங்கள்'' என்று அன்பன் கேட்கிறான்.

# 2

''அப்பா! சொல்லுகிறேன் கேள். சொல்வதற்கு முன்னாலே எனக்கு ஒரு சந்தேகம். உன்னைப் போன்றவர்கள் இவ்வாறு கேட்பதற்கு முன்னாலே ஒரு கேள்வி போடுவது வழக்கமாயிற்றே. அந்தக் கேள்வியைக் கேட்க நீ ஏன் மறந்துவிட்டாய்?'' என்றார் அருணகிரியார்.

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''அது என்ன கேள்வி சுவாமி?'' என்றான்.

## என்ன பயன்?

''என்ன அப்பா! நீ இருபதாவது நூற்றாண்டிலே வாழ்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறாய்! இந்த நூற்றாண்டிலே வாழ்பவர்களின் முதல் கேள்வி, 'அதனால் என்ன பயன்?' என்பது தானே? 'இறைவனைக் கண்ணாலும் கருத்தாலும் பார்த்துப் பதிவை ஏற்படுத்திக் கொள்வதனால் பயன் என்ன சுவாமி?' என்றல்லவா நீ எடுத்த எடுப்பில் கேட்க வேண்டும்?''

''சரி. அந்தக் கேள்வியை நீங்களே போட்டுக் கொண்டு விடையும் சொல்லுங்கள்'' என்றான் அவன்.

அருணகிரியார் சொல்கிறார். ''மனிதன் உலகத்தில் வாழ்கிறான். வாழ்வு முடிந்தவுடன் சாகிறான். வாழ்நாளில் வருகின்ற துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகமிகப் பெரிய துன்பம் சாவு. அந்தத் துன்பம் என்றைக்குமே வராமல் இருந்தால் துன்பமே அவனுக்கு அற்றுப்போய்விட்டது எனலாம். துன்பம் இல்லாமல் போனால் ஆனந்தம் தலை எடுக்கும். இருட்டு எங்கே இல்லையோ அங்கே ஒளி இருக்கும். துன்பம் தருகின்ற இருட்டாகிய சாவை ஒழித்து விட்டால், கால ஜயம் செய்துவிட்டால், இன்ப ஒளி உண்டாகும். அதுதான் இறைவன் திருவுருவத்தை மனத்தில் பதித்துக்கொள்வதன் பயன்'' என்றார்.

''அடடா! நீங்கள் சொல்வதே எனக்கு இன்பமாக இருக் கிறது! அந்த யமன் வந்தால் என்ன செய்வான்? அவனே நேரில் வருவானா?''

## யம பயம்

''அப்பா! யமன் நேரே வரமாட்டான். யமன் ஒரு பெரிய ராஜா. அவனுக்குக் கீழே பல தூதர்கள் இருக்கிறார்கள். அந்தத் தூதர்களைத்தான் அவன் ஏவி விடுவது வழக்கம். மிகப் பெரியவர்களானால் அவனே நேரில் வருவான். மார்க்கண்டே யனை இழுத்துப் போக அவனே நேரில் வந்தான். மார்க்கண்டன் எம்பெருமானைத் தழுவிக் கொள்ள, எம்பெருமானையும் சேர்த்து யமன் பாசக் கயிற்றைப் போட்டு இழுக்க, எம்பெருமான் தன் காலாலே காலனை உதைத்துத் தள்ளினான் என்ற கதையை நீ கேட்டது இல்லையா?''

''ஆமாம்; கேட்டிருக்கிறேன்.''

''மார்க்கண்டேயனைப் பிடித்துப் போக முதலில் எம தூதர்கள் வந்தார்களாம். ஆனால் அவர்கள் அவனை அணுக முடியவில்லை. பின்பு கூற்றுவன் வந்தானாம். அவனாலும் முடியவில்லை. கூற்றுவன் தூதர்களின் தலைவன். அதைக் கேட்டு எமன் சீற்றம் கொண்டானாம். 'நானே அவனைப் போய்க் கொண்டு வருகிறேன்' என்று மீசையை முறுக்கிக் கொண்டு கரிய எருமை வாகனத்தில் புறப்பட்டு வந்தான். திருக்கடவூர் வந்து சேர்ந்தான். தமிழ்நாட்டில் திருக்கடவூர் என்ற தலம் இருக்கிறது உனக்குத் தெரியுமா?''

''தெரியும்; அதைத் திருக்கடையூர் என்று சொல்கிறார்கள்.''

'அப்படி மருவி வழங்குவதற்கும் ஒரு பொருள் சொல்லலாம். மார்க்கண்டேயன் தன் வாழ்நாளின் கடைசி வந்துவிட்டது என்று அஞ்சி இறைவனைப் புகல் புகுந்த கடைசி ஊர் அது. நாமும் நம் முடைய வாழ்நாளின் கடையை, இறுதியை, நினைக்கச் செய்யும் ஊர் ஆதலால் திருக்கடையூர் என்பது ஒரு வகையில் பொருத்தமே.''

''அங்கே யமன் மார்க்கண்டேயன் மேலே பாசம் வீசினான். பாசத்திற்கு அகப்படாத ஆண்டவனையும் சேர்த்துப் பாசம் வீசிய தால் செத்து ஒழிந்தான். மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்றான் என்ற கதையைக் கேட்டிருக்கிறேன். எமனுடைய தூதர்கள் வருவார்கள்.

ஓலையை நீட்டுவார்கள். அதை வாங்கிப் படித்தவர்கள் திரும்ப வந்து அதில் என்ன எழுதியிருந்தது என்று சொன்னது கிடையாது. சொல்லியிருந்தாலாவது அவன் வரும் போது எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கற்றுக் கொள்ளலாம். இப்பொழுது நான் என்ன செய்வேன்!''

## அறிகுறிகள்

''யமன், எருமைக்கடா, ஓலை என்பனவெல்லாம் அறிகுறிகள். நுட்பமான பொருள்களை நினைவுபடுத்திக் கொள்வதற்காகப் பருப் பொருளான அடையாளங்களை வைத்து வழங்குவது பெரியோர்கள் வழக்கம். மரணத் துன்பத்தை நாம் நினைவு கூர்வதற்குப் பயங்கரமான யமனையும் பிற பொருள்களையும் அறிகுறிகளாகக் காட்டுகிறார்கள். பருப்பொருளாகச் சொன்னாலும் அறிவுடையவர்கள் உள்ளுறையை உணர்ந்துகொண்டு விடுவார்கள். நம் நாட்டுப் புராணக் கதைகள் வரலாறாகத் தோன்றினாலும் நுட்பமான கருத்துக்களை உள்ளுறையாக உடையவை.''

''அவை கிடக்கட்டும். இப்பொழுது யமன் விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்று அன்பன் இடைமறித்துக் கேட்டான்.

''அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். நீ இவ்வுலகில் இத்தனை காலந்தான் வாழ்வாய் என்று உன்னைப் படைக்கும் போது நீ செய்திருக்கும் பாவ புண்ணிய வினைகளை எல்லாம் கணக்கிட்டு உன் தலையில் பிரம்மன் எழுதி அனுப்பிவிட்டான். உன் தலை எழுத்தின் ஒருபடி எமனுக்கும் அப்பொழுதே அனுப்பப்பட்டு விடுகிறது. உன் ஆயுள் காலம் முடியும்போது அந்தப் படியாகிய ஓலையை எடுத்துக் கொண்டு யமதூதன் வருவான். 'ஒப்பந்தப்படி நீ இவ்வுலகில் வாழவேண்டிய காலம் முடிந்துவிட்டது; இனி என்னுடன் வா' என்று குறிப்பிக்க யமதூதன் ஓலையை உன்னிடம் நீட்டுவான். அதைப் பார்க்கும் போதே உன் கண் பஞ்சடைய ஆரம்பிக்கும். வாய் குழறும். காது அடைத்துக்கொள்ளும்.

''ஓலையையும், அதைக் கொண்டுவந்து உன்னிடம் கொடுத்த யமதூதனையும் கண்டு உயிர் உடம்பை விட்டுவிடவேண்டுமே என்று திண்டாடுவாய்; வேதனைப் படுவாய். ஓலையைக் கண்ட

வுடனே அச்சம்; எதிரே நிற்கின்ற தூதனைக் காணும்போது நடுக்கம்; இவற்றுடன் உயிர் ஊசலாடிக்கொண்டு வெளியே போகத் திண் டாடும். இந்தத் திண்டாட்ட வாதனையை ஒழிக்கலாம்.''

**ஓலையும் தூதரும் கண்டு திண்டாடல் ஒழித்து**

என்று அருணகிரியார் சொன்னவுடனேயே, ''அது எப்படி சுவாமி? என் ஆயுள் முடிந்துவிட்டது என்பதை அறிவிக்கும் ஓலையையும், 'என்னுடனே வா' என அழைக்கின்ற யம தூதரையும் கண்டு, உடல் சோர்வு அடைய, கண் பஞ்சு அடைய, பயத்தினாலே திண்டாடுகின்ற நிலையை ஒழிக்க உண்மையிலே இயலுமா?'' என்று கேட்கிறான்.

# 3

## படம் எழுதுதல்

''அப்பா! முடியும். அதற்குப் படம் எழுதவேண்டும். எம்பெருமான் முருகனுடைய படத்தை எழுதவேண்டும். மனத்திரையில் எழுதிக்கொள்ள வேண்டும்.''

''சுவாமி! நீங்கள் சொல்வது விளங்கவில்லை. மனத்திரையில் எப்படி எழுதுவது? ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரமும் நான் எம்பெருமான் திருவுருவத்தைப் பார்த்துக்கொண்டே நின்றாலும் நான் அவன் உருவத்தை மனத்திரையில் எழுதும் பாக்கியம் இல்லாதவன் ஆயிற்றே. அப்படி இருக்க, காலை எட்டு மணிக்குக் காரியாலயம் போனால் மாலை எட்டு மணிக்குத் தான் திரும்பி வருகிறேன். வீட்டில் தங்கும் சில மணி நேரம் தூக்கத்திலும், சாப்பாட்டுக்கு வேண்டிய பொருளை வாங்கி வரு வதிலுமே செலவாகி விடுகிறதே. எனக்கு எப்போதும் ஆண்டவனை நினைக்க நேரம் எங்கே?'' என்று பரிதாபமாகக் கெஞ்சுகிறான் அன்பன்.

## காலையும் மாலையும்

''நீ இருபத்து நான்கு மணி நேரமும் ஆண்டவனை நினைக்க வேண்டாம். அவன் திருவுருவத்தை நினைப்பதற்கு இரண்டு போதுகள் இருக்கின்றன. அந்த இரண்டு போதும்

வழிபட்டால் போதும். அதிலிருந்து இன்பம் உண்டாகும். நம் நாட்டில் ஒரு வழக்கம் இருக்கிறது; உனக்குத் தெரியுமா? நாள்தோறும் தேவாரத்திலுள்ள பதிகத்தைப் பாராயணம் பண்ணும் எண்ணம் உடையவர்கள் நேரம் இல்லாவிட்டால் அப்பதிகத்தின் முதல் பாட்டையும் கடைசிப் பாட்டையும் சொல்வது வழக்கம். அந்த இரண்டையும் பாடினாலேயே நடுவில் இருக்கிற அத்தனையையும் சொன்னது போலாகும் என்று சொல்வார்கள். அதைப் போலவே இருபத்து நான்கு மணி நேரத்தில் மாலை என்பது ஓர் எல்லை; காலை என்பது ஓர் எல்லை. பகலில் எங்கும் ஒளி பரவி நிற்கும். இரவில் எங்கும் இருள் கவிந்திருக்கும். ஒளி இறைவனுக்கு அடையாளம். இருள் கூற்றுவனுக்கு அடையாளம். வாழ்க்கையில் ஒளி நிரம்பிய பகல் பிறப்பைப் போலவும், இரவு இறப்பைப் போலவும் உள்ளன.

> **''உறங்குவது போலவும் சாக்காடு உறங்கி**
> **விழிப்பது போலும் பிறப்பு''**

என்கிறார் வள்ளுவர். இரவில் உடம்பு தொழில்படாமல் அடங்கி யிருக்கும். இரவு நேரம் போனபிறகு எல்லா உறுப்புக்களும் தொழில் படுகின்றன. விடியும்போது பிறக்கிறான்; உறுப்புக்கள் தொழில்பட ஆரம்பிக்கின்றன. இரவில் மரிக்கிறான்; உறுப்புக்கள் தொழில்படாமல் அடங்கிவிடுகின்றன. பிறக்கின்ற, இறக்கின்ற காலம் இரண்டுக்கும் எல்லையாக உள்ள இரண்டு போதுகள் காலையும் மாலையும். இந்த இரண்டு நேரங்களில் இறைவனை நினைந்து வழிபட்டு, அவன் திருவுருவத்தை மனத் திரையில் ஓவியமாகத் தீட்டிக் கொண்டால் இப்போதைக்குப் போதும்'' என்கிறார் அருணகிரியார்.

### காலையும் மாலையும் முன் நிற்குமே

அந்தணர்கள் காலை, மாலை, மத்தியான்னம் ஆகிய மூன்று போதும் சந்தியாவந்தனம் செய்வார்கள். காலையும், மாலையும் தவறாமல் செய்வது மிக்க விசேஷம். பெரிய திருக்கோயில்களில் ஆறு காலம் பூசை நடைபெறும். சிறிய கோயில்களில் காலையும் மாலையுமாகிய இரண்டு சந்திகளில் பூசை நிகழும். சந்திகளில் சிறந்தவை காலையும் மாலையும். இந்த இரண்டு பொழுதும்

இறைவனை நினைந்து வழிபட்டால் போதும். அது மற்ற நேரங்களில் மனசில் இருக்கும்.

புதிதாகக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன், காலையிலே சாப்பிட்டுவிட்டுக் காரியாலயம் போகும்போது, தன் மனையாட்டி மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டு, ஆசை விழிகளோடு அவளைப் பார்த்துவிட்டு வெளியே போகிறான். இருந்தாலும் இடையிலுள்ள நேரங்களில் காரியாலயத்தில் அவன் செய்கின்ற வேலைகளுக்கிடையே மனையாட்டியின் நினைவும் அவன் கருத்தில் வந்து வந்து மறைந்துகொண்டே இருக்கிறது. காலையும் மாலையும் மனைவியைப் பார்ப்பது செயலாக இருந்தது. இடைப்பட்ட காலத்தில் எப்படி இருக்கிறது? மனத்தின் நினைவாக இருக்கிறது. அப்படியே காலையும் மாலையும் இறைவனைத் தரிசித்து வழிபட்டு அவன் திருவுருவத்தை மனத்திலே நினைந்து பழகினால் இடைப்பட்ட காலத்திலும் அந்த நினைவு மறக்காமல் இருக்கும்.

## கடைசி நினைவு

**நா**ம் எத்தனை காலம் வாழ்ந்தாலும் கடைசியில் இறந்து படுவோம் என்கிற ஞானம் வரவேண்டும். இறைவன் நாமத்தைச் சாகிறபோது சொல்லிக்கொள்ளலாம் என்று இருந்தால் அது இயலாது. எவ்வளவு முயன்றாலும் பழைய வாசனையே முன்வந்து நிற்கும். இறைவன் நினைவு சாகிறபோது வரவேண்டுமானால் வாழும்போது ஒவ்வொரு சந்தியிலும் அவனை நினைத்துப் பழகியிருக்க வேண்டும்.

"காலன் வரும்முன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே – மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு"

என்று பட்டினத்துப் பிள்ளையார் கூறுகிறார். ஆகவே, இறக்கும் போது இறைவனை நினைத்துக் கொள்ளலாம் என்று இருப்பதனால் பயன் இல்லை. மனத்திலே அவனுடைய நினைவாகிய வாசனை கொஞ்சம் கொஞ்சமாக ஏற வேண்டும். எப்படி ஏறும்? இராக்காலத்தில் ஒவ்வொரு நாளும் படுத்துக் கொள்ளும்போது

இறைவனை நினைந்து நினைந்து அவன் திருவுருவத்தை மனத்திலே தீட்டிக் கொள்ள வேண்டும். அதன் பயனாக விடியற் காலையில் எழுந்திருக்கும்போது இறைவன் நினைவு வரும். இரவு எதைப்பற்றி நினைத்துக்கொண்டு உறங்குகிறதோ அதைப் பற்றியே நினைத்துக்கொண்டு எழுந்திருப்பது மனத்தின் இயல்பு.

"தொழுது எழுவார் வினைவளம் நீறெழ நீறணியம்பலவன்"

என்று மாணிக்கவாசர் திருக்கோவையாரில் பாடியிருக்கிறார். படுக்கும்போது இறைவனைத் தொழுது படுப்பவர்களாதலின் விடிந்தவுடன் எழும்போது நினைப்பு வந்து தொழுகிறார்கள். இது இறைவனுடைய அடியார்களுக்கு இயல்பு. இறைவனுடைய நினைவு அவர்களுக்குக் காலையும் மாலையும் முன்னிற்கிறது.

இதேபோலத்தான் இறக்கும்பொழுது ஆண்டவனை நினைந்து தொழுதுகொண்டே இறப்பவர்கள் பிறக்கும் பொழுது ஆண்டவனையே நினைந்து தொழும் இயல்போடு பிறக்கிறார்கள். பிறந்தவுடன் திடீரென்று ஒருவனுக்கு ஞானம் வந்துவிடாது. "கல்யாணம் கூட ஆகவில்லை. முருகா முருகா என்று அவன் சாமியாராகப் போய்விட்டானே!" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ரமண பகவான் சிறு வயசிலேயே திருவண்ணா மலை வந்து விட்டார். ஒரு நாளைக்கும் மற்றொரு நாளைக்கும் எப்படித் தொடர்பு இருக்கிறதோ, அதேபோலத்தான் ஒரு பிறவிக்கும் மற்றொரு பிறவிக்கும் இணைப்பு இருக்கிறது. முதல் நாள் இரவு ஒருவன் படுக்கும்பொழுது எந்த நினைவுடன் படுக்கிறானோ, அதுவே மறுநாள் காலையில் தெளிவாகத் தோன்றுகிறது. இந்தப் பழக்கம் உறுதிப்பட்டால், வாழ்விலே எத்தனை விதமான காரியத்தைச் செய்தாலும் இறக்கும்பொழுது இறைவனது நினைவு முன்வந்து நிற்கும். இறக்கும்போது உள்ள நினைவே மறுபிறப்புக்குக் காரணமாகிறது என்பார்கள். சிற்றின்பங்களை நுகரவில்லையே என்ற நினைவோடே இறந்தால் மீண்டும் பிறந்து அந்த இன்பங்களை நுகர வேண்டி வரும். இறைவன் அடியைத் தொழ வேண்டும் என்ற இறுதி நினைவோடு இறந்தால் அதற்குத் தக்க பிறவியே கிடைக்கும். மனிதனுக்கு மட்டும் இந்த நியதி என்பதன்று; விலங்கினங்களுக்கும் இது பொருந்தும்.

## காக்கைக்குச் சோறு

பெரும்பாலும் விலங்கினங்கள் உண்ணுவதும், உறங்குவது மாகத்தான் காலத்தைக் கழிக்கின்றன. அவை இறக்கும்பொழுது என்ன நினைவோடு இறக்கின்றனவோ அதற்கு ஏற்ற பிறவியை எடுக்கும். விலங்கு சாகும்போது மனிதனை நினைத்தால் அடுத்த பிறவியில் அது மனிதனாகப் பிறக்கும்.

இந்த நாட்டில் உண்பதற்குமுன் காக்கைக்குச் சோறிடுவது வழக்கம். அதில் இரண்டு பயன் உண்டு. ஒன்று நம்மைப் பாது காப்பது; மற்றொன்று காக்கையைப் பாதுகாப்பது. காக்கை கா கா என்று தன் இனத்தைக் கூவி அழைத்து உண்ணும் தன்மையைக் கண்டு நாமும் நம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து உண்ணக் கற்கிறோம். சோறு முதலானவற்றில் நஞ்சு கலந்திருந்தால் அதை உண்ணும்போது காகம் மயங்கி விழுந்துவிடும். அதைக் கண்டு நாம் அந்த உணவை உட்கொள்ளக் கூடாது என்று அறிந்து கொள்ளலாம்.

## உண்டுகாட்டி

முற்காலங்களில் பெரிய அரசன் உணவை அருந்துவதற்கு முன்பு உண்டு பார்க்கும் சிலர் இருப்பார்கள். அதில் யாராவது பகைவன் நஞ்சைக் கலந்து வைத்திருக்கப் போகிறானே என்ற எண்ணத்தால் அந்த வழக்கம் இருந்தது. அரசன் உண்பதற்கு முன் உணவின் இயல்பைத் தெரிந்துகொள்ள உண்பவர்களை **''உண்டு காட்டிகள்''** என்பர். கண்ணப்ப நாயனார் முதலில் தாம் உண்டு, மிக்க சுவையுள்ளவற்றைக் காளத்தியப்பனுக்குக் கொடுத்தாராம். ஆண்டவனுக்குக் கண்ணப்பர் உண்டுகாட்டியாக இருந்தார் என்று சொல்லலாம்.

பெரியவர்களுக்கு ஒன்றை அளிப்பதற்கு முன்பாக அது நல்லதா, தீங்கு இல்லாததா என்பதை அன்புடையவர்கள் பரீட்சை செய்து பார்த்துவிட்டு அளிப்பதுண்டு. ஒரு குருநாதரிடத்தில் பல மாணவர்கள் இருந்தார்கள். ஒருநாள் அவரிடம் வந்து, ''சுவாமி! தாங்கள் உறங்க வேண்டிய படுக்கையைப் போட்டுவிட்டு, அதிலே உங்கள் சிஷ்யன் ஒருவன் தினமும் படுத்துப் புரளுகிறான். அவன் உங்கள்பால் அன்பு உடையவன் என்று சொல்லிக் கொள்கிறீர்களே''

வேண்டுமானால் தினமும் இறைவனை நினைந்து பழகியிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் எப்போதும் இறைவனை நினைக்க இயலாவிட்டாலும் காலையும் மாலையுமாவது நினைத்துப் பழக வேண்டும். மாலையில் செய்கிற காரியம் மறுநாள் காலையில் செய்கிற காரியத்திற்குத் தோற்றுவாய்.

ஆகவே அருணகிரியார் சொல்கின்றார்: ''அப்பா, நீ எப்போதும் இறைவனை நினைத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பது இல்லை. எனக்கு ஒன்று தெரியும். காலையும் மாலையும் ஆகிய இரு சந்தி வேளையில் இறைவனை நினைத்தால் போதும். அவன் எப்போதும் உன் முன்னே நிற்பான்'' என்கிறார்.

எனக்குக் காலையும் மாலையும் முன்னிற்குமே.

ஒவ்வொரு நாளும் காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் செய்கின்ற தியானத்தின் வாசனை உள்ளத்தில் ஏற ஏற, இறக்கிற காலம் ஆகிய மாலையிலும், பிறக்கிற காலம் ஆகிய காலையிலும் **'முன்னிற்கும்'** என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

# 4

## இறைவன் திருக்கோலம்

காலையும் மாலையும் முன் நிற்கும் உருவம் எது? அதன் அங்கங்கள் எவை?

கந்த வேள்மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும் கையில் சிவந்தசெச்சை
மாலையும் சேவல் பதாகையும் தோகையும் வாகையுமே.

இறைவனுடைய உருவத்தில் தோன்றுவனவற்றை வரிசையாக அடுக்குகிறார்.

''இறைவன் திருக்கோலத்தைப் பார்'' என்கிறார் அருணகிரி நாதர்.

''பார்த்தேன்'' என்கிறான் அன்பன்.

''என்ன பார்த்தாய்? செக்கச் செவேல் என்று இருக்கும் சிவந்த மேனியைப் பார்த்தாயா? அவன் இடையில் கட்டியுள்ள சிவந்த ஆடையைப் பார்த்தாயா? இடுப்பில் தொங்கும் கத்தியைப்

என்று ஒருவன் சொன்னான். அதைக் கேட்ட குருநாதர் ஒரு கணம் யோசித்தார். ''அப்படி அவன் செய்ய மாட்டானே'' என்றார். ''இல்லை. நான் சொன்னால் நீங்க நம்பமாட்டீர்கள். என்னுடன் வாருங்கள். இன்று இரவு நான் காட்டுகிறேன்'' என்று அவன் சொன்னான். ''சரி'' என்று அன்று இரவு அவனோடு போய்ப் பார்த்தபோது, அவன் சொன்னது போலவே சிஷ்யன் முதலில் குருநாதரின் படுக்கையைப் போட்டான். உடனே அதில் படுத்துப் புரண்டான்.

குருநாதர் உடனே அவனிடம் போய், ''ஏன் இப்படிப் படுத்துப் புரளுகிறாய்?'' என்று கேட்டார்.

''சுவாமி! இந்தப் படுக்கை தாங்கள் படுத்துக் கொண்டு உறங்க வேண்டியதாயிற்றே. படுக்கையை நன்றாகத் தட்டித்தான் போட்டேன்; என்றாலும், என் கண்ணுக்குத் தெரியாமல் மணல் இருந்தால் அது தேவரீர் திருமேனியில் உறுத்தும். அப்படி இருந்தால் அதையும் தட்டிவிடலாம் என்பதற்காகப் படுத்துப் பார்த்தேன்'' என்றானாம்.

## இறக்கும்போது நினைவு

**கா**க்கை நமக்கு உண்டு காட்டியாக இருக்கிறது. இது காக்கைக்குச் சோறு போடுவதனால் விளையும் ஒரு பயன். மற்றொன்றையும் பார்க்கலாம்.

காக்கை ஒரு பறவை. பறவைக்கு ஒரே நோக்கந்தான் வாழ் நாளில் உண்டு. அதற்குப் பக்தி தெரியாது; சங்கீதம் தெரியாது. பசி தெரியும். தினமும் அதற்கு உணவு அளித்தால், 'இங்கே போனால் இந்த அம்மாள் இந்த வேளையில் உணவு அளிப்பாள்' என்பது தெரியும். சாகும்போது அது என்ன நினைக்கிறது? 'பசிக் கிறதே. அங்கே போனால் அந்த அம்மாள் உணவு போடுவாளே' என்று அந்த அம்மாளை நினைக்கிறது. அந்த நினைப்பினால் அடுத்த பிறவி மனிதப் பிறவியாகக் கிடைக்கிறது.

இவ்வளவும் எதற்காகச் சொன்னேன்? இறக்கும்போது எந்த நினைவு தோன்றுகிறதோ அதற்கு ஏற்றபடி பிறவி அமையும். இறைவனுடைய நினைப்போடு இறந்தால் மறுமையில் இறைவன் அருள் கிடைக்கும். இறக்கும்போது இறைவனை நினைக்க

பார்த்தாயா? தோளில் அணிந்துள்ள மாலையைப் பார்த்தாயா? கையில் தாங்கியுள்ள சேவல் கொடியைப் பார்த்தாயா? அவனுக்கு அருகில் நிற்கும் தோகையுடைய மயிலைப் பார்த்தாயா? வெற்றி மாலையைப் பார்த்தாயா?'' என்று அருணகிரியார் கேட்டுக்கொண்டே போகிறார். ''காலையும், மாலையும் இவற்றையெல்லாம் பார்த்தால், கருத்தோடு பார்த்து மனத்தில் பதிவை ஏற்படுத்திக் கொண்டால் நீ இறக்கும் மாலையிலும், பிறக்கும் காலையிலும் இவை முன்நிற்கும்'' என்கிறார்.

## கந்தவேள்

வேள் என்ற பெயருடையோர் இருவர். ஒருவன் செவ்வேள்; மற்றொருவன் கருவேள். முருகன் செவ்வேள். பொதுவாக வேள் என்று சொல்லும்போது அது முருகனையே குறிக்கும். இங்கே சொன்ன வேள் கந்த வேள்.

**கந்தவேள் மருங்கில் சேலையும்**

மருங்கு என்பது இடை. அவன் இடுப்பில் ஆடை கட்டியிருக்கிறான். சேலை என்பது ஆடைக்குரிய பொதுப் பெயராக இருந்தது மாறி இப்போது பெண்டிர் கட்டும் ஆடைக்கு வழங்குகிறது.

**கட்டிய சீராவும்**

எம்பெருமான் வீரன் அல்லவா? தன் இடையில் உடைவாள் கட்டியிருக்கிறான். சீரா என்பது உடைவாள். இடுப்பிலே சிவந்த ஆடை கட்டியிருக்கிறான். மேலே உடைவாள் தொங்குகிறது. பக்தர்களின் பகைவர்களை அழிக்கும் வாள் அது. பக்தர்களுக்கு ஞான ஒளி கொடுப்பது அது.

## வெட்சி மாலை

**கையில் சிவந்த செச்சை மாலையும்**

செச்சை என்பது வெட்சிப் பூவுக்குப் பெயர். செக்கச் செவேல் என்று இருக்கும். சிவந்த வெட்சிப் பூவால் ஆனமாலை, செச்சை மாலை. அது முருகனுக்கு உரியது. வெட்சி என்னும் பூவைப்பற்றிச் சற்று இங்கே சிந்திப்போம்.

தமிழ் இலக்கணத்தை இரு பிரிவாகப் பிரித்தார்கள். அகம், புறம் என்பவை அவை. காதலோடு தொடர்புடையது அகம்.

பெரும்பாலும் வீரத்தோடு தொடர்புடையது புறம். அகப் பொருள் குறிஞ்சி முதலிய ஐந்து திணைகளை உடையது. புறப்பொருள் வெட்சி முதலிய பல திணைகளை உடையது. அகப்பொருளின் முதல் திணை குறிஞ்சி. புறப்பொருளின் முதல் திணை வெட்சி. இந்த இரண்டும் இரண்டு மலர்களால் பெயர் பெற்றவை.

குறிஞ்சிப் பூ என்பது மலையில் விளைகின்ற பூ. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மலரும். அது குறிஞ்சி நிலத்துக்கு அடையாளம். குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம் முருகன். அதனால் குறிஞ்சிப் பூவை விரும்புகிறவன் அவன். அதுபோலவே புறப் பொருளின் முதல் திணையாகிய வெட்சிக்குரிய பூவும் முருகனுக்கு ஏற்றது. அகப்பொருள் புறப் பொருளாகிய இரண்டிலும் முதலில் முருகனுக்குரிய மலர்களை நினைப்பூட்டும் திணைகள் இருக்கின்றன.

புறப் பொருளில் வீரத்திற்கு உரிய போர் முதலிய செய்திகள் வருகின்றன. இந்தக் காலத்தைப்போல அணுகுண்டைப் போட்டுப் போரில் கலந்து கொண்டவர்கள், கலக்காதவர்கள் எல்லோரையும் அழிப்பது அந்தக் காலத்தில் இல்லை. போர் செய்வதற்காக என்று தனியாகவே போர்க்களம் உண்டு. போருக்கும் ஒரு வரையறை உண்டு. யுத்த தர்மம் இன்னது என்பதைப் பாரதம் முதலிய நூல்களில் பார்க்கலாம். போரேயானாலும் வரையறை யோடு நடப்பதால் அறப்போர் என்று சொன்னார்கள்.

ஒரு நாட்டு அரசனுக்கும், மற்றொரு நாட்டு அரசனுக்கும் பகை மூண்டுவிட்டால் உடனே படை எடுத்து வந்து முற்றுகை யிட மாட்டார்கள். பகைவன் நாட்டுக்குச் சென்று முதலில் போர் செய்யப் போகிறோம் என்பதற்கு அடையாளமாக நாட்டிலுள்ள பசுமாடுகளை ஓட்டிக் கொண்டு போவார்கள். குழந்தைகள், கிழவர்கள், பெண்கள் எல்லோரும் பாதுகாப்பான இடத்திற்கு ஓடி விடலாம் என்று பறை சாற்றுவார்கள். மேயப் போன மாடுகளை ஓட்டிப் போய்விடுவார்கள். ''சண்டைக்கு எடுபிடி மாடு பிடி'' என்று ஒரு பழமொழி உண்டு. பாரதத்தில் விராத னுடைய மாடுகளைத் துரியோதனன் படையைச் சார்ந்தவர்கள் ஓட்டிச் சென்றபோது அர்ச்சுனன் அவற்றை மீட்டுவந்தான் என்று படித்திருக்கிறோம். போருக்குத் தொடக்கமாக ஆநிரையைக் கைப் பற்றுவது வெட்சியென்னும் திணை. அதற்கு அடையாளம் வெட்சிப்

பூ. அது முருகனுக்கு விருப்பமான மலர். முதல் திணை வெட்சி, கடைசித் திணை வாகை; அது வெற்றியைச் சொல்வது. அதைக் காட்டும் பூ வாகை. அதையும் முருகன் அணிந்திருக்கிறான்.

தமிழ் இலக்கணத்தில் அகத்திணை, புறத்திணை ஆகிய இரண்டோடும் அவற்றின் பொருளாகிய காதலோடும், வீரத் தோடும் சம்பந்தப்பட்டவன் முருகன் என்பதை உணர்த்தக் குறிஞ்சி மலரும், வெட்சி மலரும் முருகனுக்கு உரியனவாக இருக்கின்றன.

**கையில் சிவந்த செச்சை மாலையும்**

தன் கைகளிலே சிவந்த வெட்சிப் பூ மாலையைக் கட்டிக் கொண்டிருக்கின்றான் முருகன்.

## கொடி முதலியன

"ஆண்டவன் கோயிலுக்குப் போய், அவன் திருவுருவத்தை மனத்திலே பதித்துக் கொள்ளும்படியாக எப்படிப் பார்ப்பது?" என்று கேட்டவனுக்கு அருணகிரியார் சொல்வதாக கற்பனை செய்து கொண்டோம்?

"அதோ இருக்கிறான் பார் கந்தவேள். முதலில் அவன் இடையில் கட்டிய சேலையைப் பார். கண்ணை மூடிக் கொண்டு அதை நினைக்க வேண்டும். பின்னர் அவன் சீராவை நினைக்க வேண்டும். கையில் சிவந்த செச்சை மாலையை அணிந்திருக் கிறான்; அதை நினைக்கவேண்டும்" அப்புறம்?

**சேவல் பதாகையும் தோகையும்**

சண்டையைப் பற்றிச் சொல்வது போலச் சீராவைச் சொன்னார்; வெட்சியைச் சொன்னார். கத்தியை எடுத்துக் கொண்டு, வெட்சி அணிந்து கொண்டான். சேவற் கொடியைப் பிடித்துக் கொண்டான். மயில்மேல் ஏறிக் கொண்டான். உடனே தமிழ் படித்த மக்களுக்கு ஆண்டவன் போர் செய்யப் போகிறானோ என்ற நினைவு வந்துவிடும் அல்லவா? ஆண்டவன் ஆயுதங்களை எடுத்தாலே போதும்; சண்டை போட வேண்டும் என்னும் அவசியமே இல்லை; பகைவர்கள் அழிந்து போவார்கள்.

ஜனகனுடைய வில்லைத் தூக்க முடியாமல் பலர் திணறி னார்கள். ஆனால் ராமன் என்ன செய்தான்? வில்லினிடம் அவன்

நெருங்கி வந்ததைக் கண்டார்கள். அவன் தொட்டுத் தூக்கிய தையும் கண்டார்கள். கண்மூடிக் கண் திறப்பதற்குள் என்ன சத்தம்! வில் ஒடிந்துபோய் விழுந்த சத்தந்தான் காதில் விழுந்தது.

''எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்''

என்கிறார் கம்பர். அதைப்போல முருகன் இடுப்பில் உடை வாளையும் கையில் வெட்சி மாலையையும் கண்டோம். கொடி கட்டி மயிலின்மேல் ஏறியதைப் பார்த்தோம். இது என்ன? வெற்றி மாலையை அல்லவா காண்கிறோம்?

ஆம்; அவன் வெற்றி பெற்றுவிட்டான். உடைவாளுடன் வெட்சியை அணிந்து கையில் கொடியை உயர்த்திக் கொண்டு மயிலுடன் புறப்பட்டுவிட்டான் என்றால் அவன் போருக்குத் தான் எழுந்தான் என்று எண்ணுவதில் தவறு இல்லை. ஆனால் போர் நடந்தது நமக்குத் தெரியாது. பகைவன் அழிந்துவிட்டான். முருகப் பெருமான் வெற்றி வீரனாகிவிட்டான். இதற்கு அடை யாளம் என்ன?

வாகையுமே

அவன் வாகை மாலையை அணிந்து கொண்டிருக்கிறான்.

மற்றவர்களுக்குத் தன்னுடைய வீரத்தை, வெற்றியை விளம்பரப் படுத்திக் கொள்ளவா அவன் வாகை மாலை சூட்டிக் கொண்டிருக் கிறான்? ''நீ பயப்படாதே. நான் இதோ இருக்கிறேன். எப்படிப் பட்ட பகைவர்களானாலும் என்னிடம் வந்தால் நான் அழித்து விடுவேன். வெற்றி எப்பொழுதும் எனக்குத்தான்'' என்பதை வாகை மூலமாக ஆருயிர்களுக்கு உணர்த்திப் பயத்தைப் போக்கு கிறான். ''என்னிடத்தில் உனக்குத் தொடர்பு இருந்தால் உனக்கு வெற்றி அளிக்க நான் வருவேன்'' என்பதற்கு அடையாளமாக வாகை மாலையை சூடிக்கொண்டிருக்கிறான். சேவல் பதாகை பிடித்திருக்கிறான்.

முருகன் இடையில் கட்டிய சேலையையும், சீராவையும், கையில் அணிந்துள்ள செச்சை மாலையையும், சேவல் பதாகை யையும், தோகையையும், வாகையையும் கண்டு இன்பப் பூரிப்பு அடைகிறார்கள் பக்தர்கள்.

## ஆறு பொருள்கள்

அருணகிரியார் இங்கே ஆறு பொருள்களைச் சொன்னார். முருகப் பெருமான் ஷண்முகநாதன் அல்லவா? முருக பக்தர்கள் ஆறு ஆறு என்று எண்ணுவதில் ஆனந்தம் காண்பார்கள். ஆறு என்ற எண்ணே அவர்களுக்கு ஆறுமுகநாதனை நினைவு ஊட்டும். ஆண்டவன் சந்நிதானத்தில் வணங்கினால் ஆறு முறை வணங்குவார்கள். வலம் வந்தால் ஆறு முறை வருவார்கள். யாராவது பணம் கேட்டால் ஆறு ரூபாய் கொடுப்பார்கள். ஆறெழுத்து ஜபிப்பார்கள்.

திருப்புகழில் ஓரிடத்தில் முருகனடியார்களாகிய மாதவர்கள் திருநீறு அணிவதைச் சொல்கிறார் அருணை முனிவர். அவர்கள் ஆறுமுகம் ஆறுமுகம் என்று சொல்லி அணிகிறார்களாம். அதை ஆறு தடவை சொல்கிறார்களாம்.

**ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்**
**ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் – என்று பூதி**
**ஆகமணி மாதவர்கள்**

முருகனுடைய திருக்கோலத்தை நினைப்பூட்டுகையில் இங்கே ஆறு பொருளைச் சொல்கிறார். எம்பெருமான் மருங்கில் அணிந்துள்ள சேலையை நினைக்கச் செய்கிறார். கட்டிய சீராவை நினைக்கச் செய்கிறார். கையில் அணிந்துள்ள சிவந்த செச்சை மாலையை நினைப்பூட்டுகிறார். சேவல் பதாகையையும் பார்க்கச் சொல்கிறார். தோகையையும் காட்டி, வாகை மாலையையும் கண்டு களிக்கச் செய்கிறார். ஆக ஆறு பொருள்களை அழகாகக் காட்டுகிறார்.

## குறிப்பு

“உலகத்தில் பிறந்தவர்கள் செத்துப் போகிறார்கள். சாகின்ற துன்பம் மிகப் பெரிய துன்பம். அந்தத் துன்பம் போகவேண்டு மென்றால், எம்பெருமானின் திருவுருவத்தை மனத்திரையில் எழுதிக்கொண்டு காலையும் மாலையும் நினைந்து வாழ வேண்டும். அப்படிச் செய்தால் எம்பெருமானின் திருவுருவம் நீ இறக்கின்றபோது, உன்னுடைய மாலையில் வந்து முன் நிற்கும். பின்னர் மறுபிறவி எடுத்தாலும் பிறப்பாகிய காலையில் வந்து நிற்கும்” என்பதை இப்பாட்டில் புலப்படுத்துகிறார்.

ஒருவனைப் பார்த்து, ''நீ அப்படிச் செய். வெற்றி பெறு வாய்'' என்று சொன்னால் ஒருகால் அவன் வெற்றி அளிக்கும் என்பது என்ன நிச்சயம் என்று எண்ணிச் செய்யாமல் விட்டாலும் விட்டுவிடுவான். ''நான் அப்படித்தான் செய்தேன், வெற்றி அடைந்தேன்'' என்று வெளிப்படையாகச் சொல்லி, ''நீயும் அப்படிச் செய்'' என்பதைக் குறிப்பாகப் பெற வைக்கிறார்.

''எம்பெருமானின் திருவுருவத்தைத் தரிசித்துப் பின்பு காலையும் மாலையும் ஆன சந்தியா வேளையில் அவற்றைத் தியானம் செய்தால் அவ்விரு வேளைகளிலும் அவனது திருவுருவம் உனக்கு முன் தோன்றும். ஒருநாள் காலையும் மாலையும் தோன்றுவது மாத்திரம் அல்ல. இறக்கும்போதும் அத்திருவுருவம் வந்து முன் நிற்கும். அதனால் என்ன பயன் தெரியுமா? ஓலை யுடன் எம தூதன் வரமாட்டான். இது என் அநுபவம். எனக்கு அத்திருக்கோலம் முன் நிற்கிறது'' என்பது அவர் உபதேசம்.

## அநுபவத்தால் உணரல்

மடையில் தண்ணீர் பாய்கிறது. தண்ணீர் வேகமாய்ப் போய் வயலில் பாய்வது தெரிகிறது. நூற்றைம்பது கன அடி தண்ணீர் விட்டான் என்று அளவு கொடுக்கலாம். பயிர் நன்றாக விளைந்து வருவதையும் பார்க்கிறோம். தண்ணீர் பயிருக்குள் எப்படிப் பாய்ந்தது என்றால் என்ன சொல்வது? தண்ணீர் பாயும்போது கண்ணுக்குத் தெரிந்தது. பயிர் விளைந்து தழைத்து நிற்கும் போதும் கண்ணுக்குத் தெரிகிறது. ''இடையில் எப்படித் தண்ணீர் பாய்ந்தது? எப்படிப் பயிர் அவற்றை எடுத்துக் கொண்டது? தானியம் எப்படி விளைந்தது?'' என்றால் என்ன பதில் சொல்வது? நடுவில் நடக்கின்ற காரியங்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

அதே போல எம்பெருமானின் அழகான திருவுருவ தரிசனம் கண்டுகொண்டால் அதன் பயனாகத் தீங்குகள் போய்விடும். மனத்திலுள்ள சோர்வுகள் போய்விடும். அச்சம் போய்விடும். இருள் அகன்றுவிடும். ஞான ஒளி பிறக்கும். காலனுக்கு அங்கே வேலை இல்லை. வரமாட்டான். இறைவன் திருவருள் இன்பம் கிடைக்கும். அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு என்று விளக்க இயலாது. அது அநுபவித்து உணர வேண்டியது.

★

ஓலையும் தூதரும் கண்டுதிண்
டாடல் ஒழித்து, எனக்குக்
காலையும் மாலையும் முன்நிற்கு
மே,கந்த வேள்மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும்
கையில் சிவந்தசெச்சை
மாலையும் சேவல் பதாகையும்
தோகையும் வாகையுமே.

*(கந்தவேளினது இடையில் கட்டிய ஆடையும் உடை வாளும் கையில் கட்டிய சிவந்த வெட்சி மாலையும் அவன் உயர்த்திய சேவலாகிய கொடியும் அவன் ஏறும் வாகனமாகிய மயிலும் வெற்றி மாலையும் நான் கண்டு தியானித்த பழக்கத்தினால், யமனுடைய ஓலையையும் அவன் விடும் தூதரையும் நான் கண்டு மனம் கலங்குவதை நீக்கி எனக்குக் காலையிலும் மாலையிலும் வந்து முன் நிற்கும்.*

*ஓலை – யமன் ஓலை. தூதர் – எமதூதர். ''வருபவர்கள் ஓலை கொண்டு யமனுடைய தூதரென்று'' என்று திருப்புகழிலும் இவ்விரண்டையும் சொல்வார். கண்டு திண்டாடுவது இனிமேல் இல்லையாகப் போகும் உறுதி பற்றி, ஒழித்து என்று இறந்த காலத்தால் கூறினார். ஓலையும் தூதரும் இனி வரப்போகின்றவையானாலும் அவற்றை எண்ணி மனம் கலங்குவது இப்போது நிகழும் நிகழ்ச்சி. அதை ஒழித்து முன் நிற்கும் என்று உரை கூறுவதும் பொருந்தும்.*

*மருங்கு – இடை. சேலை – ஆடை. சீரா – உடைவாள். கையென்றது முன்கை; தோளுமாம். செச்சை – வெட்சி. பதாகை – கொடி. வாகை – வெற்றிக்குரிய மாலை.)*

# கண்டமும் அகண்டமும்

சென்ற பாட்டில் முருகனுடைய திருவருளில் ஈடுபட்ட வர்கள் அவனுடைய திருவுருவத்தை மனத்தில் தாரணை செய்து கொண்டு, காலையும் மாலையும் தியானம் செய்தால் யமனைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு ஒழிந்து போகிறது என்பதைப் பார்த்தோம். சர்வாலங்கார மூர்த்தியாக இருக்கும் எம்பெரு மானுடைய திருக்கோலத்தைக் கண்டு கண்டு உள்ளத்திலே அவனது திருவுருவத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லும்போது, அது சாஸ்திரத்துக்கு விரோதமாக இருக்குமோ என்று ஐயப்பாடு தோன்றுகிறது. வேத சாஸ்திரங்களிலும் உபநிடத நூல்களிலும், வாக்கு மனம் கடந்தவனாக ஆண்டவன் இருக்கிறான் என்றும், குணம் குறி கடந்தவன் எம்பெருமான் என்றும் சொல்லி இருக்க, தோத்திரப்பாடலோ அவன் திருவடியையும், தண்டையையும், மருங்கில் கட்டிய சேலையையும், சீராவையும், கையில் கட்டிய செச்சை மாலையையும் சொல்லிக் கொண்டிருக்கின்றது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா, இல்லையா?

இறைவனுக்கு உருவம் இல்லையென்று சாதிக்கப் புகுந்த வர்கள் சிலர் முன்பும் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள்.

## அநுபவத்துக்கு முன்

"இறைவனைப்பற்றி ஆராய்வதிலே பயன் இல்லை. அவன் இயல்பை அநுபவத்தில்தான் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றால் அது நம்மால் முடியாத காரியம். ஆராயவும் இயலாது; அநுபவமும் இல்லை என்றால், நமக்கு உய்வே இல்லையா?

ஓர் ஊருக்குப் போகிறோம். அந்த ஊரில் சாப்பாடு எங்கே கிடைக்கும் என்று கேட்டால் யாரும் சொல்வார்கள். ஆனால் சாப்பாடு எப்படி இருக்கும் என்பதை நாம் சாப்பிடாமல் அறிந்து கொள்ள முடியாது. நாமே சாப்பிட்டால்தான் அதைத் தெரிந்து

கொள்ள முடியும். சாப்பிட வேண்டிய பொருளின் தரத்தைத் தெரிந்துகொள்ளாமல் சாப்பிடவும் கூடாது.

சாப்பாட்டை உண்ணாமல் தெரிந்துகொள்ள முடியாது. தெரிந்து கொள்ளாமல் உண்ணக் கூடாது என்பது நமக்குப் புரிகிறது. அதேபோல இறைவன் திருவடிகளைப் பற்றிக் கொள்ளாமல் அவனைத் தெரிந்துகொள்ள முடியாது, தெரிந்து கொள்ளாமல் அவன் திருவடியைப் பற்றவும் முடியாது. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தோன்றலாம்.

சாப்பிடப் போகிறவர்கள் என்ன செய்கிறார்கள்? எந்த இடத்தில் சாப்பாடு கிடைக்குமோ அந்த இடத்தில் சாப்பிட்டு வருகிறவர்களிடம், "சாப்பாடு எப்படி இருக்கிறது?" என்று கேட்கிறார்கள். அவர்கள், "நன்றாக இருக்கிறது" என்றால் அவர்கள் வார்த்தையை நம்பி உள்ளே போய்ச் சுவைத்துச் சாப்பிட்டுப் பசியைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். "அவர்கள் சொல்வதை எப்படி நம்புவது?" என்று சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தால் சாப்பிடவே முடியாது. சந்தேகம் உள்ளவர்கள் வீட்டில்தான் எப்படிச் சாப்பிடுவார்கள்? தாயார் சமைத்து வைத்திருக்கிற பண்டத்தில் நஞ்சு கலந்திருந்தால் என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டே இருந்தால் சாப்பிடாமல் இருக்க வேண்டியதுதான். எதற்கும் சந்தேகப்பட்டுக்கொண்டு, நம்பிக்கை என்பது அறவே இல்லாமல் இருப்பவர்கள் உலகில் ஒரு கணம்கூட வாழ முடியாது. நம்பிக்கையில்தான் உலகம் இயங்குகிறது. எல்லாவற்றையும் தெளிவாக நாமே தெரிந்து கொள்ள வேண்டுமென்பது இயலாது. நமக்கு உணவுப் பண்டம் கொடுப்பவர்கள் நல்லவர்களா, நம்முடைய நன்மையையே கருதுபவர்களா என்று முதலில் ஆராய்ச்சி பண்ணி முடிவு செய்து கொள்ளலாம். அவர்கள் நல்லவர்கள், நம்பால் அன்பு உள்ளவர்கள் என்று தெரிந்து கொண்டு விட்டால் அவர்கள் கொடுப்பதை ஐயமின்றிப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

## நம்பிக்கை

இறைவனைப்பற்றி நாமே தெரிந்து கொண்டுதான் அவனது அருளைப் பெற முயற்சி செய்யவேண்டும் என்பது முடியாத காரியம். அவன் அருளைப் பெற்றவர்கள் என்ன சொல்கிறார்கள்

என்பதைக் கேட்டு, அதை நம்பி முயற்சி செய்ய வேண்டும். இறைவன் திருவருளைப் பெற்று இன்பத்தில் திளைத்த எத்தனையோ ஞானிகள் நம் நாட்டில் இருந்தார்கள். அவன் அருளைப் பெறாதவர்களும் தாம் பெற்ற இன்பத்தைப் பெற வேண்டுமென்ற கருணையோடு அவர்கள் தம் அநுபவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மிக நல்லவர்கள்; நம் நம்பிக்கைக்கு உரியவர்கள். அவர்களுள் ஒருவர் அருணகிரியார்.

அவர் சில சமயங்களில் தமக்கு இன்ப நலத்தை வழங்கிய எம்பெருமானுடைய திருவுருவத்தை அடிமுதல் முடியின் காறும் வருணிக்கிறார். சில இடங்களில், ''அவன் இன்னவாறு இருப்பான் என்று நான் எவ்வாறு சொல்ல முடியும்? மனவாக்குச் செயலுக்கு அப்பாற்பட்டவன் ஆயிற்றே'' என்கிறார். இந்த இரண்டையும் சேர்த்துப் பார்க்கும்போது நமக்கு மயக்கம் உண்டாகிறது.

## உருவ வழிபாடு

விவேகானந்த சுவாமி அமெரிக்காவுக்குச் சென்று சிகாகோ நகரத்தில் பெரிய விரிவுரை நிகழ்த்தினார். அங்கே கூடியிருந்த உலகப் பேரறிஞர்கள் நுட்பமான கருத்துக்கள் புதைந்த அவர் சொற்பொழிவைக் கேட்டுப் பரவசமாகப் போனார்கள். அந் நாட்டைச் சேர்ந்த பலர் அவரிடம் அன்புகொண்டு அணுகிப் பணிந்தார்கள். அவர்களுக்குள் ஒருவர் ஒருநாள் விவேகானந்தரைப் பார்த்துக் கேட்டார்; ''உங்கள் நாட்டில் உள்ள சமயத்தைப் பற்றிப் பேசினீர்கள். இறைவன் எல்லை கடந்தவன், மனவாக்குச் செயலாலே உணர்வதற்கு அரியவன் என்று சொன்னிர்கள். அத்தனையும் மிகவும் பொருத்தமாகத் தோன்றுகின்றனவென்றும் அங்கே கடவுளின் திருவுருவங்களுக்குப் பூசை முதலியன நடந்து வருகின்றனவென்றும் சொன்னீர்களே, அதுதான் விளங்கவில்லை. எல்லைக்குள் அடங்காமல் இருக்கிற கடவுளுக்கு, அருவமாகிய பரம்பொருளுக்கு, உருவம் அமைத்து வழிபடுவது எதற்காக?'' என்று கேட்டாராம்.

விவேகானந்தர் அதற்கு உடனே விடை சொல்லவில்லை. அவர் வீட்டிலே ஒரு படம் இருந்தது. ''இது யார்?'' என்று சுவாமிகள் கேட்டார். ''என் தந்தையார்'' என்று கூறினார் அவர். ''வெறும் சட்டமும், கண்ணாடியும், அட்டையும் ஓவியமுமாக

இருக்கின்ற இது உன் தந்தையா?'' என்று கேட்டார். ''இல்லை. இது என் தந்தை அல்ல. ஆனால் தந்தையை நினைக்கச் செய்கிற அடையாளம்'' என்றார்.

''இதைப் போலத்தான் எங்கள் நாட்டுக் கோயில்களில் இருக்கிற விக்கிரகங்கள் இறைவனை நினைப்பூட்டும் அடை யாளமாகத் திகழ்கின்றன'' எனச் சொன்னாராம். அப்புறந்தான் அந்தக் கேள்வியைக் கேட்டவருக்கு உண்மை விளங்கிற்றாம்.

## இணைப்புப் பாலம்

நாம் இன்னும் அக்கரைக்குப் போகவில்லை. சேற்றுக் குள்ளேயே நின்றுகொண்டிருக்கிறோம். பிரபஞ்சம் என்னும் சேற்றுக்குள் இருக்கின்ற நமக்கும், பிரபஞ்சச் சேற்றைக் கடந்து நிற்கிற ஆண்டவனுக்கும் ஓர் இணைப்புப் பாலம் இருந்தால் நாம் அவனைத் தெரிந்துகொள்ள முடியும். பாலம் அங்கேயிருந்து வராது; இங்கிருந்து போட வேண்டும். இங்கிருந்து அங்கே போன ஒருவர் திரும்பவும் அங்கிருந்து இங்கே வந்து, பாலம் கட்டி நம்மை அங்கே அழைத்துப் போகவேண்டும். ஆண்டவனது திருவருள் இன்பத்தைத் தாம் பெற்று, அந்த இன்ப நுகர்ச்சியின் மிகுதியாலே, நாமும் உய்வு பெறுவதற்கு ஏற்றபடி அவர் பாலம் போட வேண்டும்.

அப்படிப்போட்டால்தான் நமக்கும் இறைவனுக்கும் தொடர்பு உண்டாகும். அத்தகையவர்களே குருமூர்த்திகள். அருணகிரிநாதர் அந்தக் குருமூர்த்திகளுள் ஒருவர். அகண்டமாய் இருக்கிற பொருளை நமக்குக் கண்டமாகக் காட்டுகிறார். அகண்டம் என்பது எல்லை இல்லாத ஒன்று. கண்டம் என்பது எல்லையை உடையது. ''எல்லை இல்லாத அகண்டமாய் இருக்கும் ஒன்றை, எல்லைகளை உடைய கண்டமாக எப்படிக் காட்ட முடியும்?'' என யாராவது கேள்வி கேட்கலாம்.

## சோலையின் ஓவியம்

ஒரு மைல் நீளம், ஒரு மைல் அகலம் உடைய ஒரு பூஞ் சோலை. அங்கே அழகான வண்ணப்பூக்களைக் கொண்ட செடி கள் உள்ளன. கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய விருந்தாக இருக்கும் அந்தச் சோலையைப் பலரும் கண்டு மகிழ்ச்சி அடைய

வேண்டுமென்று ஒரு பத்திரிகையின் ஆசிரியர் நினைத்தார். செல்வம் உடையவர்கள் பல பல இடங்களில் இருந்து ஆண்டுதோறும் வந்து பார்த்துப் போனார்கள். ஆனால் ஏழைகள், வரமுடியாதவர் கள் வெளியூர்களிலிருந்து வர முடியவில்லை. படங்களின் மூல மாவது அவர்கள் கண்டு களிக்கட்டும் என்று நினைத்து ஓர் ஓவி யனையும், படம் பிடிக்கிறவனையும் பத்திரிகைக் காரியாலயத் திலிருந்து அனுப்பி வைத்தார்.

இருவரும் பூஞ்சோலைக்குச் சென்றார்கள். ஓவியன் பூஞ் சோலையின் அழகைக் கண்டு கண்டு பருகினான். அந்தச் சோலையின் உருவத்தைப் பல வகையான வண்ணங்களைக் குழைத்துத் தீட்டினான். படம் எடுப்பவன் கருவியைக் கொண்டு படம் பிடித்தான். இரண்டு பேரும் தங்கள் படங்களைக் கொண்டுவந்து பத்திரிகையின் ஆசிரியரிடம் கொடுத்தார்கள். அதைப் பார்த்துவிட்டு, "என்ன இது? நீங்கள் ஒரு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் உள்ள பூஞ்சோலையை இவ்வளவு சிறிய படத்திலே கொடுத்துவிட்டீர்களே?" என்றா அவர் கேட்பார்? கண்ணுக்கு ஒரே சமயத்தில் அகப்படாமல் விரிந்து கிடக்கின்ற சோலையை அவர்கள் கண்ணுக்குள் அடங்கும் சோலையாகக் கொடுத்தார்கள். அது சோலையின் உருவம் அல்ல என்று சொல்ல முடியாது. ஆனால் சோலை முழுவதும் இல்லை. அதன் ஒரு பகுதியைத்தான் ஓவியமாகவும் படமாகவும் கொடுத்தார்கள். அந்த உருவத்தைப் பார்க்கும்போது எல்லையற்றுப் பரந்து கிடக்கின்ற சோலையை நேரில் பார்த்தவர்கள், அந்தச் சோலை யின் உருவத்தை நினைவுக்குக் கொண்டு வருவார்கள் அல்லவா?

## சிறைப்பட்டவன் காணும் காட்சி

ஒரு சிறைக்கு நடுவில் அறை ஒன்று இருக்கிறது. அதற்குள் ஒருவன் இருந்தான். சிறைக்குச் சன்னல்கள் இருந்தாலும் அவை எல்லாம் மூடப்பட்டுக் கிடந்தன. பல நாள் அவன் அச் சிற்ற றைக்குள் அடைபட்டுக் கிடந்தான். அவனுக்கு வெளி உலகம் எப்படி இருக்கிறது என்றே தெரியவில்லை. எல்லையற்றுப் பரந்து கிடக்கின்ற உலகம் அவனைப் பொறுத்தவரையில் அந்தச் சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளேயே அடங்கிக் கிடந்தது. ஒரு நாள் சிறைக் காவலாளி சன்னல் கதவைத் திறந்தான். அறைக்குள்

நின்றபடியே அந்தச் சன்னல் வழியாக ஊடுருவிப் பார்த்தான் சிறைப்பட்டிருந்தவன். கண் பார்வை செல்லக்கூடிய மட்டும் பார்த்தான். ஆனால் அவனால் நெடுந்தூரம் பார்க்க முடியவில்லை. சிறிய அறையில் அடைபட்டிருந்தவன் அல்லவா? இருந்தாலும், "அடடா! எவ்வளவு அழகாக இருக்கிறது! மரங்கள் தெரிகின் றனவே! நீல வானம் தெரிகின்றதே!" என்று வியப்படைந்தான். அகண்டமாக இருக்கும் பொருளை அவன் கண்டமாகக் கண்டு ஆனந்தப்பட்டான். இது வரையிலும் சிற்றறைக்குள் அடைப் பட்டுக் கிடந்த உலகம் இப்பொழுது சன்னலின் அளவுக்கு அவனுக்கு விரிந்தது.

சில நாட்களுக்குப் பின் அவனை அறையை விட்டுத் திறந்துவிட்டார்கள். ஆனால் சிறையை விட்டுப் போகவில்லை. அவன் இப்போது சன்னலுக்கு அருகில் நெருங்கி நின்றுகொண்டு பார்த்தான். இப்பொழுது, பரந்து விரிந்து கிடக்கின்ற உலகத் திற்கும் அவனுக்கும் நடுவில் எல்லைக் கோடாக இருந்தது சிறைக்கூடத்தின் சுவர். சன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு பார்க்கின்ற அவனுக்கு உலகம் முழுவதும் தெரிந்ததா? எல்லாப் பட்சிகளும் கண்ணில் பட்டனவா? மரங்கள் அத்தனையும் கண்டு விட்டானா? இல்லை. சில மரங்களைக் கண்டான். சில பட்சிகளைக் கண்டான். பார்த்த பொருள்கள் எல்லாம் ஓரளவிலே அடங்கியவை.

## விடுதலைக்குப் பின்

அவன் விடுதலை அடைந்து வெளியே வந்தான். எல்லை யற்றுப் பரந்து கிடந்தது உலகம். நெடுந்தூரம் வரையில் பார்த் தான். பூமியை வான் தொடுவதுபோலத் தோன்றிய தூரம் வரையில் பார்த்தான். தான் முன்பு சன்னல் வழியாகக் கண்ட பொருள்கள் எல்லாம் தோன்றின. அவற்றுக்கு மேற்பட்ட பொருள் களும் தோன்றின. அங்கே சிறைக்கூடத்துச் சன்னல் அளவுக்குப் பார்வை விரிந்தது. இங்கே அவன் பார்வையை தடுக்கின்ற தடை கள் எதுவும் இல்லை. இருந்தாலும் அவன் கண் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கிய பார்வையை உடையது. ஆதலாலே தொடுவானம் வரையில் தெரிந்தது. உண்மையில் தொடுவானம் என்று ஒன்று இருக்கிறதா? முட்டை வடிவம் போல உலகம்

இருப்பதனால் அப்படித் தோன்றுகிறது என்று பூகோளகக்காரர் கள் சொல்வார்கள். இவன் அந்தத் தொடுவானம் வரையிலும் போய்ப் பார்த்துவிடுவது என்று போய்க்கொண்டே இருந்தானா னால் இவனால் அந்த இடத்திற்குப் போகத்தான் முடியுமா? உண்மையில் நம் கண் பார்வைக்கு வானமும் பூமியும் முட்டுவது போல இருக்கிறது. காரணம் கண்ணின் பார்வை எல்லைக்குட் பட்டது. அந்த எல்லைக்கோடு வரையிலும் ஒருவன் படமாக எழுதிக் கொள்ளலாம். அந்தப் படம் எல்லை இல்லாத அகண்ட உருவத்தைக் கண்டமாகக் காட்டும். இதைப் போலவேதான் இறைவன் அகண்டமாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட எல்லைக் குள் அடங்கிய வாழ்க்கையைப் பெற்ற மனிதர்கள் அவனைக் கண்டமாகக் காண்கிறார்கள். அவரவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்றபடி அந்தக் கண்டம் அமைகிறது.

அனுபவத்தைப் பெறாத மக்களுக்கு எப்படித் தோற்று கிறான்? சிறைக்குள்ளே சிற்றறையில் அடைபட்டுக் கிடந்த குற்றவாளிக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. சிறைக்காவலன் சன்னலைத் திறந்துவிட்டபோது, சன்னல் அளவுக்கு உலகம் அவனுக்குத் தெரிந்தது. அதைப் போலவே பெரியவர்களுடைய உபதேசமாகிய சன்னல் கிடைத்தால் அதன் வழியே பார்க்கும்போது இறைவனைப் பற்றி ஓர் அளவுக்குத் தெரிந்துகொள்ளலாம். அகண்டமாக இருக்கின்ற உலகத்தின் ஒரு பகுதியே உள்ளேயும் இருக்கிறது என்பதை அவன் உணருகிறான். ஆனால் அவனுக்குப் புறம்பேயுள்ள அந்த அகண்டவெளி முழு வதையும் அவன் காணவில்லை. நல்லவனுடைய துணையினால் அவன் அறையை விட்டு வெளியே வரும்போது பரந்த வெளியைக் கண் பார்வை விரிகின்ற அளவு பார்க்கிறான். அவன் பார்வை அப்போதும் ஓர் எல்லைக்குள் அடங்கித்தான் இருக்கிறது.

எல்லை என்பது என்ன? தனக்கு அப்பாலும் ஒன்று இருக் கிறது என உணர்த்துவது எல்லை. சிறைக்குள் இருப்பவனுக்குச் சுவர் எல்லையாக இருந்தது. சுவருக்கு அப்பாலே திறந்தவெளி பரந்து கிடக்கிறது என்பதை உணர்ந்தான். சுவருக்கு உள்ளேயும் அந்த வெளியின் கண்டம் இருக்கிறது என்பதை உணர்ந்தான். சிறைக்கு வெளியே வந்தபோது தன் கண் பார்வையின் எல்லை யளவும் வெளியும் காட்சிகளும் தெரிந்தன. அதற்கு அப்பாலும்

அகண்டவெளிப் பரப்பு இருக்கிறது என்பதையும் உணர்ந்தான். கண்டதற்கு ஓர் எல்லை இருந்ததைக் காணும்போது காணாத தாகிய எல்லை கடந்த ஒன்று இருப்பதை உணர்ந்தான்.

## கண்டமும் அகண்டமும்

இப்படியே, நல்லவர்களுடைய உபதேசத்தால் நாம் அகண்ட மாக இருக்கின்ற இறைவனின் உருவத்தைக் கண்டமாகக் காண்கிறோம். மேலும் மேலும் நமது பார்வைக்குத் தடையாக இருக்கிற பொருள்கள் விலகும்போது நம் பார்வை விரிந்து கொண்டே போகும். அப்பொழுதும் நம் கண் பார்வையின் எல்லைக் குள் அகப்பட்டே அகண்டத்தின் பகுதியைக் கண்டமாகக் காண் போம். ஆனால் முன்பு காணாதன எல்லாம் கண்டோம் என வியக்கும் நிலை உண்டாகும்.

## கோயிலில் காணும் காட்சி

ஒருவன் கோயிலுக்குப் போகிறான். அங்கே உள்ள விக்கிர கத்தைப் பார்த்துவிட்டு மற்றவர்களைப் போலக் கன்னத்தில் போட்டுக்கொண்டு வருகிறான். அவன் கண்ணில் கோயிலில் உள்ள கூட்டம், விளக்குகள், சுவாமியின் உருவம் ஆகியவை படுகின்றன. வேறு ஒருவன் கோயிலுக்குப் போகிறான். அவன் கண்ணில் கோயிலில் நின்றவர்கள் யார் யார் என்பது படவில்லை. ஆண்டவனது விக்கிரகத்தைத் தரிசித்து, வைத்த கண் வாங்காமல் மெய் சிலிர்க்கப் பார்க்கிறான். வெளியே வரும்போது, ''ஆண்ட வன் முகம் கொஞ்சுவது போல இருக்கிறது'' என்கிறான். முதலில் கோயிலுக்குப் போய் வந்தவன், 'குழந்தையா கொஞ்சு வதற்கு? கல் கொஞ்சுமா? பைத்தியக்காரன்!'' என்று இவனைப் பார்த்துச் சொல்கிறான்.

திருச்செங்கோட்டு முருகனை அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் எத்தனையோ பேர்கள் பார்த்துக் கொண்டே வருகிறார்கள். ஆனால் செங்கோட்டு வேலவனைப் பார்த்து விட்டு அருணகிரியார் சொல்வதைக் கேளுங்கள்.

**''செங்கோட னைச்சென்று கண்டுதொழ**
**நாலா யிரங்கண் படைத்திலனே**
**அந்த நான்முகனே!''**

என்கிறார். அதே மலை, அதே கடவுள் இன்றைக்கும் இருக்கின்றன. ஆனால் அவரைப் போல நம் மனம் உருகவில்லையே! அவ்வுருவத்திற்குள் இறைவனது இருப்பைக் கண்டால் அல்லவா நம் மனம் உருகும்? கனிந்து கனிந்து இளகும்!

''மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

என்கிறார் வள்ளுவர். இதற்குப் பரிமேலழகர் உரை எழுதப் புகுந்தபோது, 'அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு **விரைந்து சேறலின் ஏகினான்** என இறந்த காலத்தால் கூறினார்' என்று குறிப்பிட்டு, 'சேர்தல் என்பது இடைவிடாது நினைத்தல்' என்கிறார். நினைப்பதாவது மனத்தை இறைவனது திருவடியிலே நெருங்கி நிற்கச் செய்து தியானித்தல்.

நாம் ஆண்டவனுக்கு எத்தனை பக்கத்தில் போய் நின்றாலும், மனம் நெருங்கி நிற்காமல் இருக்கிறோம். ஒரே வீட்டில் அடுத்த அறையில் குடியிருக்கிறவன் யார் என்று நமக்குத் தெரியாதே! மனைவியும் கணவனும் ஒரே வீட்டில் இருப்பார்கள். ஆனால் இவர்கள் இரண்டு பேருடைய மனமும் நெருங்கியிருப்பதில்லை. நெருங்குவது போலச் சென்று, திரும்பவும் பிரிந்து விடுகிறோம். சிறைக்கூடத்தின் நடுவில் இருந்தவன் சன்னலுக்கு அருகில் நெருங்கிச் சென்று பார்த்தபோது எப்படி முன்னே தெரியாத பொருள்களை அதிகமாகப் பார்த்தானோ, அப்படியே இறைவனது உருவத்தை உள்ளத்தால் நெருங்கிப் பார்ப்பவர்களுக்கு முன்பு தெரிந்ததைவிட அதிகமாக அவனது அகண்டவுருவத்தின் பல கண்டங்கள் தெரிகின்றன. மற்றவர்கள் கண்ணுக்குத் தெரியாத பல புது உண்மைகள் விளங்குகின்றன. அறையை விட்டு வெளி வந்தவனுக்கு அகண்டமான உலகம் எப்படி அவன் கண்ணின் எல்லைக்கு எட்டிய வரையில் தெரிந்ததோ அதேபோலப் பிரபஞ்சச் சேற்றைவிட்டு வெளிவந்தவனுக்கு இறைவனது அகண்டமான உருவம் அவன் அகக்கண் எட்டிய மட்டும் தெரிகிறது.

அகண்டமாக இருக்கிற பொருளைப் பார்த்தேன் என்று சொன்னால் என்ன பொருள்? அகண்டமாய் இருக்கிற பொருள் முழுவதையும் பார்க்கவில்லை. அவன் எதைப் பார்த்தானோ, எது அகண்ட சொரூபத்தை அவனுக்கு நினைப்பூட்டுகிறதோ அது, அகண்ட சொரூத்தின் ஒரு பகுதி என்று நாம் தெரிந்துகொள்ள

வேண்டும். சிறைக்குள்ளேயே இருந்து பார்த்த பொருளுக்கும், சிறைச் சன்னல் அருகில் நெருங்கிப் பார்த்த பொருளுக்கும், சிறையைவிட்டே வெளியே வந்து பார்த்த பொருளுக்கும் சம்பந்தம் உண்டு என்பது கைதிக்குத் தெரியும். அவை யாவும் ஒன்றுதான் எனவும் உணர்கிறான். கடலைக் கண்டேன் என்றால் கடல் முழுவதையும் கண்டு விட்டானா? கடற்கரையில் நின்று சமுத்திரத்தைப் பார்த்தான். தொலைநோக்கிக் கண்ணாடியை வைத்துக் கொண்டும் பார்த்தான். ஆனால் அந்த எல்லைக்கும் அப்பாலேயும் கடல் இருக்கிறது என உணர்ந்தான். நீலக் கடலையும், தன் வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கிக் கொண்டு வரும் அலைகளையும் கண்டு விட்டேன் என கத்துகிறான். அகண்டமான ஒன்றை அவன் எப்படிக் கண்டான்? கண்டமாகக் கண்டான்.

எல்லைக்குள் அகப்படாத அகண்டமாய் இருக்கிற ஆண்டவனைக் கோயிலுக்குள் இருக்கும் விக்கிரகத்திற்குள் பக்தர்கள் கண்டார்கள். நெருங்கி நெருங்கிப் பார்க்கும்போது முதலில் வெறும் கையும் காலுமாகத் தோற்றிய ஒன்று ஒளிவிஞ்சும் திருவுருவமாகத் தோற்றியது. பார்த்துப் பார்த்துப் பரவசத்தில் கண்ணீர் சொரிய நின்றார்கள்.

## எண்ணும் அநுபவமும்

தபால்காரன் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்த என் பெண் அந்தக் கார்டில் இருந்த 4,800–80 என்ற எண்களைப் படித்தாள். அவள் கையில் இருந்து அதை வாங்கிய என் பையன், ''அது வெறும் 4,800–80 அல்ல; 4,800 ரூபாய் எண்பது பைசா'' என்றான். என் பெண்ணுக்கு வெறும் எண்களே தெரியும்; ரூபாய் பைசாக் கணக்குத் தெரியாது. என் பையன் அக்கார்டை என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் பார்த்தபோது முதலில் எனக்கும் 4,800–80 என்ற எண் தெரிந்தது. பின்னர் அது 4,800 ரூபாய் 80 பைசா என்றும் தெரிந்தது. உடனே எனக்கு ஒதுவித இன்பம் உண்டாயிற்று. ஏன் தெரியுமா? என்னுடைய உழைப்பினால் வரும் பணத்தை நான் பாங்கியில் போட்டு வந்தேன். என் கணக்கில் இன்றையத் தேதியில் நாலாயிரத்து எண்ணூறு ரூபாய், எண்பது பைசா இருக்கிறது

என்கிற எண்ணந்தான். அதன் பின் எண்ணம் விரிந்தது. ஒரு கார் வாங்க வேண்டுமென்று நினைத்தேன். அதற்குப் போதுமான பணம் இதோ இருக்கிறது என நினைத்தபோது பெண்ணுக்கு வெறும் எண்ணாகத் தோன்றி ஒன்று, பையனுக்கும் வெறும் ரூபா பைசாவாகத் தோன்றிய ஒன்று, எனக்கு எண்ணாகவும் தோன்றியது; ரூபா பைசா ஆகவும் தோன்றியத; என்னுடைய பணமாகவும் தோன்றியது; அதுவே என் இன்பத்திற்குப் பயன்படும் பொருளாகவும் தோன்றி எனக்கு மிக்க இன்பத்தை அளித்தது. ஆக நான்கு நிலைகள் இதில் வந்துவிட்டன. ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல; ஒன்றிலிருந்து ஒன்று வளர்ந்து நின்ற நிலை.

## அநுபவ வளர்ச்சி

ஒருவன் கோயிலுக்குப் போக ஆரம்பித்தான். முதலில் கோயிலில் இருந்த சாதாரணக் கல் விக்கிரமாகத் தோற்றியது. பின்னர் அதுவே அவனுக்குக் கொஞ்சம் முகமாகத் தோற்றியது. பின்னர் மனம் நெருங்க நெருங்க ஆண்டவனது கொஞ்சும் முகம் ஒளி விஞ்சும் முகமாகத் தோற்றியது. கடைசியில் இது யாருக்கோ பயன்படப் போவது அன்று, நமக்கே பயன்படக் கூடியது என எண்ணி இன்பச் சிலிர்ப்பு எய்தினான். ''நாலாயிரத்து எண்ணூறு ரூபாய், எண்பது பைசா இது; இது என்னுடைய பணம்; எனக்குக் கார் வாங்கப் பயன்படப் போகிறது'' என எண்ணுகிறவனுடைய நினைப்பு எப்படி வெறும் எண்ணிலிருந்து தோன்றுகிறதோ, அவ்வாறே முதலில் இறைவன் விக்கிரகத்தில் காணும் முகம் பின்பு தன் வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய இன்ப நலங்களைப் பெற்று உய்யும்படி அருளும் ஒளிவிஞ்சும் முகமாகத் தோன்றி அவனுடன் கொஞ்சுகிறது.

## வேல் விளங்கும் கை

எல்லோருக்கும் இல்லாத அடையாளம் முருகப் பெருமானிடம் ஒன்று இருக்கிறது. அவன் வெற்றிவேல் பெருமாள்.

எம்பெருமானின் திருக்கையில் வேல் இருப்பதால் அவன் பெருமை உயரவில்லை. அவனால் வேல் பெருமை அடைகிறது. எம்பெருமான் கையில் இல்லாமல் வேறு ஒருவருடைய கையில் அது இருந்தால் அதற்கு அவ்வளவு பெருமை உண்டா?

*தனக்கு அடையாளமாக அவன் கையிலே வேலைத் தாங்கிக் கொண்டு நிற்கிறான். வேல் அவனுக்கு அடையாளம் மாத்திரம் அல்ல. அகண்டமாக இருக்கிற புறவெளியைக் காணச் செய் வதற்கு வேண்டிய ஞானத்தின் அடையாளமாக அதை அவன் வைத்திருக்கிறான்.*

**வேலே விளங்கு கையான்.**

*மாணவர்களுக்கு மயக்கம் இல்லாமல் விஷயத்தைப் போதிக் கின்ற நல்ல ஆசிரியர் அருணகிரியார். ஆகையால் எடுத்த எடுப்பி லேயே, ''அகண்டமாக இருக்கும் ஒன்றை, வாக்கு, மனம், செயல் இவற்றுக்கு அப்பாற்பட்ட இறைவனை நான் எப்படி அப்பா உனக்குச் சொல்ல முடியும்?'' என்று சொல்லிப் பக்தர்களைப் பயமுறுத்தாமல், ''இறைவனது அருளைப் பெற்று இன்பத்தைச் சுவைக்கத்தானே விரும்புகிறாய்? இங்கே வா அப்பா'' எனத் தம் அருகில் அழைத்து வைத்துக் கொண்டு, அகண்டமாக இருக்கிற வெளியையும், கண்டமாக இருக்கிற ஒளியையும் சம்பந்தப்படுத்திப் பாலம் போட்டு, மயக்கம் நீங்க அழைத்துப் போகிறார்.*

**வேலே விளங்குகை யான்செய்ய**
**தாளினில் வீழ்ந்திறைஞ்சி**
**மாலே கௌவிங்ஙன் காண்பதல்**
**லால்மன வாக்குச்செய**
**லாலே அடைதற் கரிதாய்**
**அருவுரு வாகிஒன்று**
**போலே இருக்கும் பொருளைஎவ்**
**வாறு புகல்வதுவே?**

*அகண்ட சொரூபமாய் இருக்கிற பொருளை எவ்வாறு ்வது? மனவாக்குச் செயலாலே அடைவதற்கு அரியவன். , உருவாகி ஒன்று போலே இருக்கும் பொருள் அல்லவா வன்? அவனை எவ்வாறு புகல்வது?' என்பதை முதலில் ொல்லவில்லை. பயந்து போய்விடப் போகிறார்களே என்பது போல அதைப் பின்னாலே சொல்லி, அந்த அகண்ட உருவத்தைக் கண்டமாகப் படம் பிடித்து முன்னால் நிறுத்துகிறார்.*

**வேலே விளங்கு கையான்.**

ஆண்டவன் திருக்கரத்தில் இருப்பதனாலே அந்த வேல் விளக்கம் பெற்று இருக்கிறது. யாருடைய கையில் சேர்ந்தால் எல்லாப் பொருளும் விளக்கம் பெறுமோ, அந்தத் திருக்கரத்தில் அது இருப்பதனாலே அது விளங்குகிறது.

**வேலே விளங்குகை யான்செய்ய**
**தாளினில் வீழ்ந்தி றைஞ்சி.**

ஆண்டவன் திருக்கோயிலுக்குப் போனால் அவன் கையிலே விளங்குகின்ற வேலைப் பாருங்கள். அஞ்ஞான இருளைப் போக்கி, ஞான ஒளியை அளிக்கின்ற வேல் அது. நம் கையில் அதை வாங்கிக் கொள்வதைவிட அது அவன் கையிலேயே இருந்தால் தான் நமக்குப் பயன்படும். அவன் அருளைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

## வீழ்ந்து இறைஞ்சுதல்

**செய்ய தாளினில் வீழ்ந்து இறைஞ்சி.**

பக்தர்கள் பற்றிக் கொள்வதற்காகச் செக்கச் செவேல் என்று இருக்கும் தன் இரண்டு பாதங்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு நிற்கிறான் அவன். அவை செந்தாமரை போன்ற திருவடிகள்; செய்ய தாள். செய்ய என்பது செம்மையான என்று பொருள்படும். எம்பெருமான் திருவடி நிறைவு பெற்றது; நேர்மையானது; குணம் நிறைந்தது; எல்லாவிதமான தன்மை களும் நிரம்பியது. நடக்க நடக்கப் பின்னும் சிவக்கின்ற திருவடி அல்லவா அது? அன்பர்களுக்கு அருள் செய்ய நின்ற இடத்தில் நிற்காமல் ஓடுகிறான். தன்னை நினைக்கின்ற ஒவ்வொரு வருடைய வன்மனக் கருங்கற் பாறையிலும் நடமாடி அவன் கால் சிவந்து நிற்கிறது. அதனால் செய்ய தாள் உடையவனாக இருக் கிறான். அந்தத் தாளைப் பார்?

- பின் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

**"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை"**

என்கிறார் வள்ளுவர். இறைவனைப் பார்த்து அவன் தாளைத் தலையால் வணங்க வேண்டும். தாளினில் தலை வீழ்ந்து

வணங்க வேண்டுமானால் அடியற்ற மரம்போலக் கீழே விழுந்து வணங்க வேண்டும். என்றைக்கோ ஒரு நாள் இந்த உடம்பைக் காலன் நிச்சயமாக வந்து வெட்டிச் சாய்க்கப் போகிறான். அதற்குள் நாமே இறைவனது திருவடியை ஒட்டிச் சாய்ந்து விட்டால் காலனுக்கு வேலை இல்லை. காப்பு அற்றவர்களைக் காலன் விட்டு வைப்பானா? ''இன்னும் எனக்குக் கல்யாணம் ஆகவில்லை. கல்யாணமான பின்பு என்னை வெட்டித் தள்ளேன்'' என்று சொன்னால் விடுவானா? ''எனக்குக் குழந்தை இல்லையே! ஒரு குழந்தை பிறந்த பிறகு என்னை வெட்டக் கூடாதா?'' என்று கெஞ்சினால் விடுவானா? மாட்டான். ஆகவே, ''எம்பெருமானே! எல்லாம் என் செயலால் நடக்கிறது என்று எண்ணி இறுமாந் திருந்தேன். எனக்கு ஒருவிதமான செயலும் இல்லை'' எனச் செயலற்ற மரமாக அவன் திருவடிகளை ஒட்டிச் சாய்ந்து விழுந்து விட்டால், காலன் வெட்டிச் சாய்க்க வரமாட்டான்.

தலையாகிய உறுப்பைப் பெற்றிருப்பதன் பயன் எண் குணங் கள் நிரம்பிய இறைவனது திருவடியில் வணங்குவது ஆகும். இல்லாவிடின் ஒரு பயனும் இல்லாதது அத்தலை என்கிறார் வள்ளுவர். இறைவன் நமக்குக் கை கொடுத்த பயனாகக் கையால் கும்பிட்டு வணங்குகிறோம். தலை கொடுத்த பயனாகத் தலை யால் வணங்குகிறோம். உடம்பையும் உறுப்புக்களையும் பெற் றிருப்பதன் பயன் சாஷ்டாங்கமாகத் தரையில் வீழ்ந்து வணங்கு வதாகும்.

சாஷ்டாங்க நமஸ்காரம் என்பதற்குப் பொருள் என்ன? அஷ்ட அங்கம் என்றால் எட்டு உறுப்புக்கள். எட்டு உறுப்புக்கள் தரையில் படும்படியாக வணங்குவது சாஷ்டாங்க நமஸ்காரம். இரண்டு கை, இரண்டு முழங்கால், இருதோள், மார்பு, நெற்றி ஆகிய எட்டு உறுப்புக்களும் படிய வணங்க வேண்டும்.

## இறைஞ்சுவதால் பயன்

''அப்படி வணங்குவதால் பயன் என்ன?'' என்று சிலர் கேட்கலாம். பெரியவர்களை வணங்கும்போது உள்ளத்தே பணிவு ஏற்படுவது ஒரு பயன். அதோடு உடம்பும் வணங்கு கிறது. அந்தக் காலத்தில் கல்யாணம் நடந்தால் பெண்ணைப் பார்க்கப் பலர் வருவார்கள். பெண்ணைவிட வயசான ஒருவர்

வந்தால், பெண்ணை அழைத்து, அவரை வணங்கச் சொல் வார்கள். அதேபோல் பெண்ணைவிடச் சின்னவர்கள் வந்தால் வந்தவர்கள் பெண்ணை வணங்குவார்கள். இதனால் ஒருவருக் கொருவர் அறிமுகம் ஆவார். இது இரண்டாவது பயன். மூன்றாவது பயன். உடம்புக்கு வலிமை உண்டாவது. தண்டால் எடுப்பதில் பாதிப் பலனாவது நமஸ்காரத்தில் உண்டாகாதா?

நம்மிடமுள்ள அகங்காரம், மமகாரம் ஆகிய இரண்டும் அடியோடு எப்போது போகின்றனவோ அப்போது இறைவன் திருவருளுக்குப் பாத்திரம் ஆவோம். அகங்காரம், மமகாரம் ஆகிய இரண்டையும் அழிக்க உதவுவது நமஸ்காரம். எம்பெரு மானுடைய செய்ய தாளினில் அடியற்ற மரம்போல வீழ்ந்து இறைஞ்சினால் சரீர அபிமானம் போய் விடுகிறது. இந்தக் காலத்தில் முதலில் சட்டை அபிமானம் போகும். சட்டையைக் கழற்றிவிட்டுப் போய் விழும்போது சரீர அபிமானம் போகும்.

பணிவு, அறிமுகம், உடல் பயிற்சி, உடம்பின் மீது கொண்ட பற்றுப் போதல் ஆகிய இவ்வளவும் நமஸ்காரம் செய்வதன் மூலம் வருகின்றன.

வாழ்வில் துன்பம் வருகின்ற சமயங்களில் நாம் நிமிர்ந்து வாழவேண்டுமானால் இறைவனுடைய சந்நிதானத்தில் வணங்கி வாழவேண்டும். நிமிர்ந்துள்ள வில் வளைந்தால்தான் அம்பு செல்லுகிறது. வில்லை வளைக்கும் கயிற்றுக்கு நாண் என்று பெயர். நாணினால் வில் வளைகிறது. அதைப்போலவே நாமும் இறைவனுடைய சந்நிதானத்தில், "ஆண்டவனே, எனக்கு எல்லாம் தெரியும் என்று இறுமாந்து நிமிர்ந்து நின்றேனே! எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்கு எந்தவிதமான சக்தியும், செயலும் இல்லை" என எண்ணி நாணினால் உடல் வளையும். இறைவனுக்கு முன்னே நாணி வளையும்போது மற்றவர்களுக்கு முன்னே நிமிர்ந்து செல்லும் நிலை உண்டாகும். இறைவனுக்கு முன்னே நாமே நம் நிலையை உணர்ந்து நாணி வணங்கிவிட்டால், உலகத்தோரின் பழிக்கு அஞ்சி நாணித் தலை குனிய வேண்டி வராது.

நம் நாட்டுப் பெரியோர்கள் ஆண்டவன் திருவடிகளிலே வீழ்ந்து வீழ்ந்து, நைந்து நைந்து, இறைஞ்சி வாழ்ந்தார்கள். அருணகிரியார் அதை முதலில் சொல்கிறார்.

**வேலே விளங்குகை யான் செய்ய**
**தாளினில் வீழ்ந்திறைஞ்சி.**

*இறைவனுடைய செய்ய தாளினில் வீழ்ந்து இறைஞ்சி, அகங்காரம், மமகாரம் போய்க் குழைந்து நின்றால் என்ன ஆகும்?*

## *மால் கொள்ளுதல்*

**மாலே கொள.**

*மால் என்பது காதல்; மயக்கம்; இன்னது என்று தெரியாத நிலை என்று கொள்ளலாம். மிகுதியாகத் துன்பம் வரும்போதும், இன்பம் வரும்போதும் ஒன்றும் தெரியாததோர் நிலை வரும். அதையே மயக்கம் என்னலாம். அதைப்போன்ற ஒரு நிலை இறைவன் பாதத்திலே வீழ்ந்து இறைஞ்சி, குழைந்து நிற்கும் போது வரும். இதுவரையிலும் ஆண்டவனது வேல், கை, கால் என்று பார்த்து வந்த நிலை போய், கொஞ்சும் முகம் மாறி, ஒளி விஞ்சும் முகமாகத் தோன்ற, அதைப் பார்த்து அப்படியே பிரமித்து, வியப்பு எய்தித் தன்னை மறந்து நிற்கும் நிலை உண்டாகும்.*

**இங்ஙன் காண்பதல்லால்.**

*இவ்வாறு காண்பதல்லாமல்..... மேலே என்ன சொல்லப் போகிறார்?*

## *சொல்ல அரியது*

*"இதற்குமேல் நான் அவனை எப்படி அப்பா சொல்ல முடியும்!" எனச் சொல்லப் போகிறார். 'இங்ஙன் காண்பதல்லால்' என்று சொல்வதிலிருந்தே ஏதோ ஒன்றைக் கண்டு இன்பத்தைச் சுவைத்த மிதப்பிலே அவர் பேசுகிறார் என்பது நமக்குப் புலனாகும். அவர் சொல்வது அவருடைய அநுபவம் என்றும் தெரிகிறது.*

*இறைவனைப்பற்றி அடையாளம் சொல்கின்ற நிலை இதுவரைக்குந்தான். இறைவனது திருவுருவத்தைக் காணுகின்ற நிலை இதோடு முடிந்துவிடுகிறது. எம்பெருமான் திருவடியில் வீழ்ந்து இறைஞ்சுகின்ற நிலை வரையில் இருப்பது அது. நெருங்கி நெருங்கி, அவன் அடையாளங்களை ஒவ்வொன்றாகப்*

பார்த்து வந்து, அவன் திருவடியில் வீழ்ந்தாகிவிட்டது. உருவம் மறைந்து ஒளி விஞ்சும் தோற்றம் உண்டாகிறது. அதைப் பார்த்து ஆனந்தமயமான காதலில் ஒருவகைப் பிரமிப்பு, அதிசய நிலை வந்துவிட்டது.

இதுவரையில் அருணகிரியார் முருகன் கையில் உள்ள வேலைச் சொன்னார். வேல் விளங்கும் கையைச் சொன்னார். கையான் செய்ய தாளினைச் சொன்னார். செய்ய தாளினில் வீழச் சொன்னார். வீழ்ந்து மனம் குழைந்து இறைஞ்சச் சொன்னார். இறைஞ்சி மால் கொள்ளச் சொன்னார். அதற்குப் பிறகு எப்படி எம்பெருமானைக் காண்பது என்பதைச் சொல்கிறார். "இவ்வாறு காண்பதைத் தவிர வேறு என்ன நான் சொல்ல முடியும்?" என்கிறார். சாப்பாடு எங்கே கிடைக்கும் எனக் கேட்டவனுக்கு, "இன்ன இடத்தில் கிடைக்கும்" என்று சொல்கிறான் ஒருவன். பிறகு, "சாப்பாடு எப்படி இருக்கும் தெரியுமா? உள்ளே போய் என்னைப் போல நீங்கள் சாப்பிட்டு வந்தீர்களானால் அப்பொழுது தான் அதன் சுவை உங்களுக்குத் தெரியும்" என்று சொல்கிறான். உணவு கிடைக்கும் இடம் தெரிந்து கொண்டாகிவிட்டது. அதன் சுவையை உண்டால்தானே தெரிந்து கொள்ள முடியும்?

"நீங்கள் சொல்லி வந்தது மிகவும் இனிமையாக இருக்கிறது. மேலும் சொல்லுங்கள். மாலே கொள நின்று எப்படிக் காண்பது? இறைவன் எப்படி இருப்பான்?" என்று அருணகிரியாரைக் கேட்டால் அவர் எப்படிச் சொல்வார்?

## எவ்வாறு புகல்வது?

"நான் எப்படி இதற்குமேல் சொல்ல முடியும்? அது எப்படி இருக்கும் என்பதை நீயே அநுபவித்துத்தான் தெரிந்து கொள்ள முடியும். சர்க்கரை இனிக்கிறது என்கிறேன். சர்க் கரையை நீ வாயில் போட்டுக் கொண்டால்தான் இனிப்பாகிய சுவையைத் தெரிந்துகொள்ள முடியும். எம்பெருமான் திருக் கரத்திலுள்ள வேலைப் பார். வேல் விளங்கும் கையைப் பார். கையான் தாளைப் பார். அதில் விழு. வீழ்ந்து இறைஞ்சு. எல்லையற்ற ஆனந்த மயமான மால் கொள் என்று சொன்னேன். அதற்குமேல் நான் எப்படிச் சொல்ல முடியும்? இங்ஙன் நீயே காண்தலல்லால் என்னால் எவ்வாறு புகல முடியும்?" என்கிறார்.

மன வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய்
அருவுரு வாகிஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்
வாறு புகல்வதுவே?

*அந்த இன்ப அநுபவத்தை விளக்க முடியாது. மன வாக்குச் செயலாலே அடைவதற்கு அரியவன் அவன். மூன்று கரணங் களினால் மனிதன் எல்லாவற்றையும் அறிகின்றான். இந்த மூன்று கரணங்களுக்கும் உட்பட்ட பொருளாக அவன் இருந்தால் அவனை அடைந்து, அறிவிக்க முடியும். கரணங்களின் நுகர்ச்சிக் கும் அப்பாற்பட்டவனாக அவன் இருக்கும்போது அவனை எப்படிச் சொல்வது? மனத்தினாலே அடைவதற்கும், வாக்கினாலே அடைவதற்கும், செயலாலே அடைவதற்கும் அரியதாய் இருக்கும் பொருள் அது. உருவம் எதுவும் இல்லாதது அது; அருவே உருவமானது. இத்தனை நேரம் அவர் ஏதோ உருவம் உடைய பொருளாகச் சொல்லி வந்தார். ஆனால் அநுபவ நிலையில் அது அருவே உருவாக இருக்கிறது.*

ஒன்று போலே இருக்கும் பொருளை.

*இன்று ஒரு விதம், நாளை ஒரு விதம் என்று மாறுதல் இன்றி ஒரு படித்தாக, ஒன்றுபோல இருக்கும் பொருள் அது.*

*''வாசலைக் காட்டிவிட்டேன். இனி நீயே உள்ளே நுழைந்து போய்ப் பார்க்க வேண்டியதுதான். அகண்ட சொரூபமாக இருக்கும் பொருளைக் கண்டமாகக் காட்டினேன். இனி நீயே கண்டமாக இருக்கும் ஒன்றின் அகண்ட சொரூபத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். உள்ளே நுழைந்து அவனைக் காணவேண்டு மானால் வாசற் படியாக இருக்கின்ற அவன் திருவடிகளில் தலை வைத்து வீழ்ந்து இறைஞ்சு. இறைஞ்சி மால் கொண்டால் உனக்கே தெரியும். நீயே காணமுடியும். நான் கண்ட மாதிரியே காணமுடியும். ஆனால் நான் எவ்வாறு கண்டேன் எனக் கேட்டுப் பயனில்லை. என் அநுபவத்தை எப்படிச் சொல்ல முடியும்? மன வாக்குச் செயலுக்கு அப்பாற்பட்டதை வாக்குக்கு உட்படுத்த இயலாது. அதை எவ்வாறு புகல்வது?'' என்கிறார் அருணை முனிவர்.*

பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையாகத் தாய் தேடலாம்; சிறப்பாகக் கல்யாணம் பண்ணலாம்; ஆனால் அவள் கணவனோடு சேர்ந்து அடையும் இன்பம் எப்படி இருக்கும் என்று மகள் கேட்டால் சொல்ல முடியுமா?

**''மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய**
**சுகத்தைச் சொல்எனிற் சொல்லுமா றெங்ஙனே?''**

அந்த இன்ப சுகத்தை மகளே அநுபவித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் இருக்கும் பிரபஞ்சச் சேற்றிலிருந்து விடுபட்டு, அகண்ட சொரூபமாய் நிலவும் ஆண்டவனை அடைவதற்குரிய பாலத்தை அருணகிரியார் போட்டுக் கொடுத்து விட்டார். அந்தப் பாலம் என்ன?

எம்பெருமானின் திருக்கரத்தில் இருந்து அஞ்ஞான இருளைப் போக்கும் ஞான வேலைப் பார்ப்பது; வேல் விளங்கும் கையைப் பார்ப்பது; கையான் செய்ய தாளைப் பார்ப்பது; தாளினில் வீழ்வது; வீழ்ந்து இறைஞ்சுவது; இறைஞ்சி மால் கொள்வது. அப்புறம் அருணகிரியாரைப் போலவே நாமும் காணவேண்டியதுதான். ஒன்றுபோல மாறுபாடு இல்லாமல் இருக்கும் பொருளாக அது இருப்பதனால் அவருக்கு ஏற்பட்ட இன்ப அநுபவமே நமக்கும் ஏற்படும். ''பல ஆண்டுகளுக்கு முன் அவர் பெற்ற அநுபவம் அது; இன்று அதே அநுபவம் நமக்குக் கிடைக்குமா?'' என்ற ஐயமே வேண்டாம். என்றும் மாறாமல் ஒன்று போல இருக்கும் பொருளின் அநுபவமாதலின் அது என்றும் ஒரே மாதிரி இருக்கும்.

புகல்வதற்கு அரியதான அகண்ட பர வெளியை, அருணகிரியார் உபதேச வாசலைத் திறந்து கண்டமாகக் காட்டினார். ''உள்ளே போய்ச் சொல்வதற்கு அரியதாய் அருவுருவாய் இருக்கிற பொருளை நீயே கண்டு கொள்'' என்கிறார் பரம கருணையினால். சாஸ்திரக் கருத்துக்கும், தோத்திரங்களின் கருத்துக்கும் முரண்பாடு இல்லை. இரண்டிற்கும் பாலமாக இருப்பது இறைவனது செய்ய தாள். அதில் வீழ்ந்து இறைஞ்சி மால் கொண்டு நாமே கண்டுகொள்ள வேண்டும். அப்படிக் கண்டால் முதலில் 4800 – 80 என்பது எண்ணாகத் தோற்றி, பின்பு ரூபாயாகத் தோற்றி, பின்பு நம்முடைய பணமாகவும், பிறகு நாம் ஊர்ந்து

செல்லும் காராகவும் தோற்றி இன்பம் அளித்தாற்போல, இறைவனை நம்முடைய இன்ப அநுபவப் பொருளாகவே நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

★

வேலே விளங்குகை யான்செய்ய
    தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளஇங்ஙன் காண்பதல்
    லால்மன வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய்
    அருவுரு வாகிஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்
    வாறு புகல்வதுவே!

*(வேலாயுதம் விளக்கம் பெறும் திருக்கரத்தையுடையவனாகிய முருகனுடைய சிவந்த திருவடிகளில் விழுந்து பணிந்து அவன்பால் தீவிரமான அன்புகொள்ள, அதனால் தோற்றும் இன்பத்தை யான் நுகரும்படி நுகர்வதன்றி, மனம் வாக்குச் செயலென்னும் மூன்று கரணத்துக்குரிய காரியங்களாலும் அடைவதற்கு அரியதாகி அருவமே தன் உருவமாகி என்றும் மாறாமல் ஒரு நிலையாகவே இருக்கும் பரம்பொருளநுபவத்தை எவ்வாறு சொல்வது?*

*மால் – முறுகிய அன்பு; காதல். இங்ஙன் என்பது அருணகிரியார் தாம் பெற்ற வண்ணத்தைச் சுட்டுகிறார்; இது நெஞ்சறி சுட்டு. காண்பது - நுகர்வது. மனம் – நினைப்பு; ஆகு பெயர். வாக்கு – பேச்சு. செயல் - உடம்பாற் செய்யும் காரியம். மூன்று கரணத்தையும் கூறினார். அரு உருவாகி – அருவே உருவாகி. ஒன்றுபோலே – ஒரே நிலையில்.)*

# கடலும் புணையும்

இப்போது சங்கடமான பாட்டு ஒன்றைப் பார்க்கப் போகி றோம். அருணகிரிநாத சுவாமிகளின் சரித்திரத்தைப் பலவகை யாகச் சொல்வதுண்டு. திருப்புகழில் பெண்களைப் பற்றிச் சொல்கின்ற பாடல்கள் மிகுதியாக இருக்கிறதைப் பார்த்து, அவர் தம் வாழ்நாளில் காமத்தினாலே அலைப்புரண்டு அதனால் தொழுநோய் பெற்று வாடினார் என்று சிலர் சொல்வர்.

## அருணகிரியார் கருணை

ஆனால் அருணகிரிநாதப் பெருமான் திருப்புகழில் சொன்ன அத்தனை துன்பங்களையும் ஒருவர் அநுபவிக்க வேண்டுமானால் அது ஓர் ஆயுளில் நிகழ இயலாது என்று முன்பே சொன்னேன். பல நூறு பிறவிகள் எடுத்தால்தான் அத்தனை குற்றங்களையும் செய்யமுடியும்; அவ்வளவு துன்ப அநுபவங்களையும் பெற முடியும். அருணகிரிநாதப் பெருமான் உலகில் வாழ்கின்ற மக்கள் செய்கின்ற குற்றங்கள் அத்தனையும் படுகின்ற துன்பங்கள் அத்தனையும் தம்முடைய சொந்த வாழ்வில் நிகழ்ந்ததைப் போல எண்ணி இறைவனிடம் இரங்குகின்ற பெருங்கருணையாளர்.

''அப்படியானால் மக்கள் எத்தனையோ குற்றங்களைச் செய் கின்றார்களே! அவை எல்லாவற்றையும் குறிப்பிடாமல் பெண் களைப் பற்றி மட்டும் மிகுதியாகக் கூறியிருப்பானேன்?'' என்ற கேள்வி எழலாம். அதனாலேதான் அவர் நமக்காகவே பாடினார் என்று கொள்ளலாம். எப்படி என்று பார்ப்போம்.

## மிகுதியாக உள்ள நோய்

ஒரு டாக்டர் எந்த வியாதிக்காரர் தம்மிடம் வந்தாலும், நன்றாகச் சோதனை செய்து தனித் தனியாக மருந்து எழுதிக் கொடுப்பது வழக்கம். கம்பவுண்டர் சீட்டைப் பார்த்து மருந்து

கலக்கிக் கொடுப்பார். ஒரு சமயம் ஊரில் திடீரென்று பேதி நோய் கண்டது; ஊர் முழுவதும் பரவி விட்டது. அவர் வீட்டுக்கு வரு கின்ற நோயாளிகள் யாரைப் பார்த்தாலும் பேதி என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். டாக்டர் என்ன செய்வார்? ஒவ்வொரு வருக்கும் தனித்தனி மருந்தா எழுதிக் கொடுப்பார்? ஒரு பெரிய பாத்திரம் நிறையக் காலரா மருந்தைக் கலந்து வைத்து, வருகின்ற நோயாளிகளுக்கு அதை எடுத்தெடுத்துக் கொடுக்கச் செய்தார்.

அவ்வாறே எந்தக் காலத்திலும் பெரும்பாலானவர்களுக்கு மிகுதியாக வருகின்ற வியாதியாகக் 'காம நோய்' இருப்பதனால், வைத்தியராகிய அருணகிரிநாதப் பெருமான் அந்த வியாதிக்கான மருந்தை மிகப் பெரிய அளவில் கலந்து வைத்திருக்கிறார்.

மனிதர்களுக்குள்ள நோய் இருவகை. ஒன்று உடம்புக்கு வருவது; மற்றொன்று மனத்திற்கு வருவது. மனம் நல்ல வழியில் செல்லாமல் அல்லாத வழியில் சென்று தகாததைச் செய்வதற்கு முக்கியமான காரணம் ஆறு வகையில் வருகின்ற நோய்கள். தான் நினைத்தபடி காரியங்களைச் செய்வதற்குப் பயன்படும் இந்திரி யங்களைப் பெற்றிருப்பது சுகமான உடம்பு; நல்ல உடம்பு. அதில் நோய் வந்துவிட்டால் அப்படிச் செய்ய முடியாது; நம் விருப்பப்படி எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது.

கைகால் நன்றாக இருந்தால் அவை தொழில்பட வேண்டும். ஒருவனுக்குக் கையும் காலும் எப்பொழுது பார்த்தாலும் ஆடிக் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவை இயங்கு கின்றது கண்டு நல்லநிலை என்று சொல்ல இயலாது. அது நோய். எப்பொழுது ஆட வேண்டுமோ அப்பொழுது ஆட வேண்டும்; சும்மா இருக்க வேண்டியபொழுது ஆடாமல் இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் சுகமான உடம்பு என்று சொல்ல முடியும்.

## மனத்தில் வரும் நோய்

அவ்வாறே ஒன்றைவிட்டு ஒன்றையே எண்ணிக் கொண் டிருந்தால் அந்த மனம் சுகமான மனமாகாது. நல்லவற்றை எண்ண வேண்டும்; பல சமயங்களில் எண்ணாமல் இருக்கவும் பழக வேண்டும்.

அதுவும் அன்றி, பின்னாலே வருகின்ற பிறவிகளுக்குக் காரண மான எண்ணங்களைக் கொண்டிருப்பதால் மனம் நோயுடையது என்று சொல்கிறார்கள். உடம்புக்கு வருகின்ற ஒவ்வொரு நோய்க்கும் பெயர் இருப்பதைப் போலவே மனத்திலே உண்டா கின்ற வியாதி எல்லாவற்றையும் தொகுத்து ஆறாகப் பிரித்தார்கள். உடம்பில் வருகின்ற நோய்களுக்குப் பல பெயர்கள் இருந்தாலும் வாதம், கபம், பித்தம் என்று மூன்றினாலே வருபவை என்று நம் நாட்டு வைத்தியர்கள் சொல்கிறார்கள். அது போலவே மனத் திற்கு வருகின்ற நோய்கள் ஆறு. அறு பகை என்று தமிழிலும், அரிஷட் வர்க்கம் என்று வடமொழியிலும் அவற்றைச் சொல் வார்கள். இவை மனத்தின் உள்ளே பற்றுகின்ற நோய்; எக்ஸ்ரேக்கும் தெரியாமல் அறுவை மருத்துவத்தால் மாற்ற முடியாமல் உள்ளுக்குள்ளேயே புரையோடுகின்ற நோய்.

இருதய வியாதி என்று ஒருவகை நோய் உண்டு. இந்த நோய் கள் அந்த இனத்தைச் சேர்ந்தவை அல்ல. நுண் பொருளாகிய மனத்தில் படரும் நோய்கள் இவை.

வெளியில் இருக்கும் நோய் எல்லோருக்கும் தெரியும். உள்ளே இருக்கும் நோய் யாருக்குமே தெரியாது. அதை உள்ளபடி தெரிந்துகொள்ளக் கூடியவன் உள்ளுக்குள் இருக்கிற ஆண்டவன் ஒருவன்தான். அந்த நோய் ஆறு காரணங்களால் வருவன. அவை காமக் குரோத லோப மோக மத மாச்சரியம் எனச் சொல்வர் பெரியோர். ஆறிலும் முதலில் காமத்தை வைத்தார்கள். அதுதான் பெரிய வியாதி. பெரும்பாலோரைப் பற்றியிருக்கும் பிணி.

## காம மென்னும் நோய்

**கா**மம் என்பதற்கு ஆசை என்று பொருள். இது மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை ஆகிய மூன்றுக்கும் பொதுவானது என்றாலும் வாழ்க்கையில் மிகப் பெரிய ஆசையாகப் பெண்ணாசை இருப்பதனால் அதற்கே காமம் என்ற பெயர் வழக்கில் வந்து விட்டது. அந்த ஆசைதான் மனிதர்களுக்கு உண்டாகின்ற பெரிய நோய். இன்றைக்குத்தான் உலகத்தில் அப்படி வந்திருக்கிறது என்று சொல்லலாமா? எல்லாக் காலத்திலும் அப்படியே இருந்து வருகிறது. பெரிய பெரிய சண்டைகளுக்கு மூல காரணம் காமம். ராம ராவண யுத்தத்துக்கு அடி அதுதான். ராமன் அயோத்தியில்

இருந்து இலங்கைக்குப் போய்ச் சண்டை போட்டான். காரணம் பெண்ணான சீதை மேல் இராவணனுக்கு ஏற்பட்ட ராட்சசக் காதல். அதற்கு மூலவித்துத் தூவியவள் சூர்ப்பனகை. ஆண்மை நிரம்பிய ராமனிடத்தில் அவளுக்கு உண்டான ராட்சசக் காமம் அந்த வித்தைத் தூவியதற்குக் காரணம். ஆகவே ஆண்களுக்கும் தீய நிலையில் காமம் வரும். பெண்களுக்கும் தீய நிலையில் காமம் எழும். ராம ராவணப் பெரும் போருக்கு மூல வித்தே காமம்.

அகலிகைக்கு மிகப் பெரிய துன்பம் வந்ததற்குக் காரணம் இந்திரனது காமம். இப்படியாகக் காமத்தினால் உண்டான இன்னல் கள் மிகப் பல. மனித சாதியினிடத்தில் பல வகைத் தீய குணங்கள் புகுந்துகொண்டாலும் எல்லாவற்றுக்கும் மேலாக, மிகுதியாக இருப்பது காமம். அந்த நோய் எல்லாக் காலங்களிலும் இருக் கிறது. ஆகவே, மருத்துவராகிய அருணகிரிநாதர் அதற்கான மருந்தை அண்டா அண்டாவாகக் கலந்து வைத்திருக்கிறார். மற்ற நோய்களுக்கும் மருந்து அவரது பாட்டுக்களில் இருக்கிறது; ஆனாலும் காமத்தைப் பற்றிச் சொல்கின்ற பாடல்களே திருப் புகழில் மிகுதியாக வருகின்றன.

## காமம் என்ற சொற் பொருள்

நாம் இன்று 'காமம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள் கொள்கிறோமோ அப்படிப் பழைய காலத்தில் கொண்டது இல்லை. காமம் என்றால் காதலுக்குப் பெயர். பிற்காலத்தில் சரீர சம்பந்தமான ஆசையையே காமம் என்று சொல்வது வழக்கமாகி விட்டது.

## நேர்மையான காமம்

இந்த உணர்ச்சி நேர்மையான முறையில் அமைந்திருந்தால் தவறு இல்லை. யார் யார் நெறி தவறாமல் தம்முடைய தர்ம பத்தினியோடு வாழ்க்கை நடத்துகின்றார்களோ அவர்கள் பிரம்ம சாரிக்குச் சமமானவர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. வாழ்க்கை யில் அறத்தைச் செய்வதற்குத் தர்ம பத்தினியை மணம் செய்து கொள்கிறார்கள். அவர் காம பத்தினி அல்ல; தர்ம பத்தினி; தர்மத்தைச் செய்வதற்குத் துணையாக இருப்பவள்.

## வாழ்க்கைத் துணை

வள்ளுவர், மனைவியின் இலக்கணத்தை ஓர் அதிகாரத்தில் சொல்கிறார். பத்துப் பாட்டுக்களால் மனைவி இன்ன இன்ன குணங்கள் நிரம்பியவளாக இருக்க வேண்டுமென வரையறுக் கிறார். அந்த அதிகாரத்துக்கு ஒரு தலைப்பு இட்டார். சுருங்கிய குறள்களில் ஆழமும் விரிவுமுள்ள கருத்துக்களை விளக்குகின்ற வள்ளுவர் அந்த அதிகாரத்துக்கு மனைவி என்று தலைப்புக் கொடுக்க லாம்; அல்லது காதலி என்று கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. மனைவி என்பவள் கணவனுக்குத் துணையாக அறத்தின் வழியே நின்று அறத்தை வளர்ப்பவள் என்பதை அறிவுறுத்த நல்ல தமிழ்த் தொடரை அமைத்திருக்கிறார்.

மனிதன் வாழ வேண்டும். நன்றாக வாழ வேண்டும். நன்றாக வாழ்வதற்கு மூல காரணமாய் இருக்கிற பொருள் அறம்.

அறம் இல்லாவிட்டால் நன்றாக வாழ முடியாது. அறம் செய்ய வேண்டுமானால் துணை வேண்டும். நலமான வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவள் மனைவி. ஆதலால், அந்த அதிகாரத்துக்கு ''வாழ்க்கைத்துணை நலம்'' என்று பெயர் கொடுத்திருக்கிறார். அந்தத் தலைப்பிலிருந்தே மனைவியின் இலக்கணம் ஓரளவு புலப்படுகிறது.

மனிதனுக்கு உடம்பு, மனம் ஆகியவை இருப்பதே நல்ல முறையில் வாழ வேண்டும் என்பதற்காக. நல்ல முறையில் வாழ் வதாவது அறநெறியில் வாழ்வது. அற நெறியில் வாழவேண்டு மானால் தனி மனிதனால் முடியாது. துணை தேடிக்கொள்ள வேண்டும். அந்தத் துணைதான் மனையாட்டி. வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவள் அவள். அவளுடைய நலத்தைச் சொல்லும் அதிகாரம் அது என்று புலனாகிறது.

தர்ம பத்தினி என்ற வடமொழித் தொடருக்கும் வாழ்க்கையில் செய்ய வேண்டிய தர்மத்திற்குத் துணையாக இருக்கின்றவள் என்பதே பொருள். அப்படித் துணையாக இருக்கிறவளுடன் நடத்தும் இல்வாழ்க்கை அறம் பொருள் இன்பம் ஆகியவற்றைத் தந்து வீடாகிய பேற்றைப் பெறவும் காரணமாகும்.

## கடமையும் இன்பமும்

இவ்வுலகில் பல மரஞ் செடி கொடிகள் இருக்கின்றன. மனித பரம்பரை வளர்வது போல மரத்தின் பரம்பரையும் வளர வேண்டும். அது வளரவேண்டுமானால் விதை உண்டாக வேண்டும். விதை கீழே விழுந்து முளைக்க வேண்டும். இலையிலோ, கிளையிலோ, வேரிலோ நினைத்த இடத்தில் விதை உண்டாகும் படி இறைவன் செய்திருக்கலாம். அங்கெல்லாம் உண்டானால் யாரும் கவனிக்க மாட்டார்கள். எல்லோரும் கவனிக்கக்கூடிய இடத்தில் அதை வைக்க வேண்டும். ஆதலால் இனிமையான பழத்திற்குள் வைத்திருக்கிறான்.

''பழத்தை நன்றாகச் சாப்பிடுங்கள். ஆனால் அதற்குள் இருக்கும் விதையை நல்ல இடத்தில் புதைத்தால் அது போன்ற சுவை மிக்க பழங்களைத் தரும் மரம் வளரும்'' என்பதைப் போல ஆண்டவன் வித்து நடுவதாகிய கடமையைப் பழம் தின்பதாகிய இன்பத்தோடு சேர்த்தே வைத்திருக்கிறான்.

மனிதன் செய்கின்ற வேலைக்குக் கூலி வேண்டாமா? ஆகவே அறத்தை வளர்க்கும் வேலைக்கு முன்கூட்டியே இறைவன் கூலி கொடுக்கிறான், பழமாக.

''நன்றாக இவ்வுலகத்தில் நீ வாழ்வாய்'' என்று கை கால்கள் ஆகியவற்றோடு நல்ல உடம்பைக் கொடுத்து அனுப்புகிறான் இறைவன். மலருக்கும், மலத்திற்கும் வேறுபாடு காணாமல் நல்ல ஞானிபோலவே குழந்தை பிறக்கிறது. ஆனால் அது வளர்ந்து, பலவகைத் தொழில் புரிந்து, அல்லாதன புரிந்து, நோயையும் நொடியையும் பெற்று வருந்துகிறது என்றால் அதற்கு இறைவன் என்ன செய்வான்? மனிதனுக்கு எப்பொழுதும் நல்லதையே முன்னால் கொடுக்கிறான்.

கடமையை மாத்திரம் செய்யச் சொன்னால் மனிதன் செய்ய மாட்டான். ''கோயிலுக்குப் போங்கள்'' என்றால் போக மாட்டான். ''மார்கழி மாதம் வெண் பொங்கல் கொடுக்கிறார்கள்'' என்றால் ஆண்டாள் பாசுரத்தைப் பாடிக்கொண்டு ஓடுகிறான். மாணிக்க வாசகர் பள்ளி யெழுச்சியைப் பாட வைக்கிறது சுடச் சுடக் கொடுக்கும் பொங்கல். மனிதனுக்கு எப்பொழுதும் இன்பத்தில்

ஆசை. ஆகவே இறைவன் கடமையைச் செய்வதில் இன்பத்தையும் பிணைத்து வைத்திருக்கிறான்.

## பரம்பரை வளர

நாம் உலகில் வாழ்கிறோம். நாம் வாழ்வது போல உலகம் வாழ வேண்டும். தொடர்ந்து மனித பரம்பரை வளர வேண்டும். பரம்பரை நல்ல முறையில் வளர வேண்டுமானால் வித்துப் போடுவது என்ற கடமை நல்ல முறையில் நடக்க வேண்டும். இன்பம் இல்லாவிட்டால் யாரும் கடமையைச் செய்ய மாட்டார்கள். சுவை மிக்க பழத்திற்குள்ளே வித்தை வைத்தாற்போல, மனித பரம்பரையின் வளர்ச்சிக்கான வித்தைக் காம இன்பத்திற்கிடையே வைத்தான் இறைவன்.

முறைப்படி வாழ்ந்தால் தர்மம் செய்யலாம்; காமம் அநுபவிக்கலாம். ஆனால் காமத்தின் முடிவு என்ன? பரம்பரைத் தர்மத்தைக் காப்பாற்றுவது.

## தசரதன் விருப்பம்

தசரதன் சொல்கிறான். அறுபதாயிரம் மனைவியோடு வாழ்ந்தவன் அவன். இருந்தாலும் குழந்தை பிறக்கவில்லை. மிக்க துயரத்தோடு வசிட்டரைப் பார்த்துப் பேசுகிறான்.

தன் குடும்பத்திற்கு ஒரு குழந்தை வேண்டுமென்ற நினைப்பைக் காட்டிலும் உலகம் ஆகிய குடும்பத்திற்கு ஒரு குழந்தை வேண்டுமென்று அவன் நினைக்கிறான். ''நான் அறுபதினாயிரம் ஆண்டு செவ்வனே இவ்வுலகத்தைக் காத்துவிட்டேன். எனக்குக் குறை ஒன்றும் இல்லை. என் காலத்திற்குப் பிறகு, இவ்வுலகைக் காப்பவர் இல்லாமையால், இவ்வையகம் கலங்கி விடுமே என்கிற மனக்கலக்கந்தான் உண்டாகிறது'' என்கிறான்.

**''அறுபதி னாயிரம் ஆண்டு மாண்டுற**
**உறுபகை யொடுக்கிஇவ் வுலகை ஓம்பினேன்**
**பிறிதொரு குறையிலை எற்பின் வையகம்**
**மறுகுறு மென்பதோர் மறுக்க முண்டரோ.''**

அவன் ஆற்றி வந்த கடமைகளைத் தொடர்ந்து ஆற்றி வருவதற் காகவே பிள்ளை வேண்டும் என்கிறான்.

## தருமியின் வேண்டுகோள்

மதுரையில் ஆலவாய்ப் பெருமானுக்கு அருச்சனை பண்ணிக் கொண்டிருந்தார் தருமி என்ற குருக்கள். நக்கீரர் திருமுருகாற்றுப் படை பாடுவதற்கு மூல காரணமாய் இருந்தவர் அவர் என்று சொல்ல வேண்டும். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடக் காரண மாக இருந்தது அப்புலவர் பெற்ற சாபம். அந்தச் சாபத்திற்குக் காரணம் ஒரு பாட்டு. அந்தப் பாட்டுக்குக் காரணம் தருமி. அவர் பிரம்மச்சாரி. அவருக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டு மென்ற ஆசை. அதற்கு வேண்டிய பொருள் அவரிடத்தில் இல்லை. பாண்டிய அரசன் தன் கருத்தைத் தெரிவிக்கும் கவிதையை இயற்றுபவருக்கு ஆயிரம் பொன் தருவதாகச் சொல்லி ஒரு கிழியைக் கட்டித் தொங்கவிட்டிருந்தான். தருமிக்குக் கவிதை பாட வராது. அவர் இறைவனிடம் போய், "சுவாமி! எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று ஆசை. பொருளில்லையே! அரசன் கட்டித் தொங்க விட்டிருக்கும் பொன் எனக்குக் கிடைக்கும்படியாகச் செய்யுங்கள்" என்றா கேட்டார்? அப்படிக் கேட்டிருந்தால், "குருக்களுக்கு எதற்கையா கல்யாணம்?" என நம்மைப் போல இறைவன் சொல்லியிருந்தாலும் சொல்லி யிருப்பாரே! அவர் அப்படிக் கேட்கவில்லை. "இறைவனே! உனக்கு நான் மாத்திரம் பூசை பண்ணினால் போதுமா? உன்னுடைய வழிபாடு தொன்று தொட்டுப் பரம்பரை பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது. என் அளவில் அந்தப் பரம்பரை முடிந்துவிடப் போகிறதே! எனக்குச் சந்ததி உண்டானால்தான் உன் கைங்கரியம் தொடர் அறாது நிகழும். இந்தப் பரம்பரைச் செல்வம் மிக அரியது. இதை என்னோடு முற்றுப் பெறும்படியாகச் செய்யக் கூடாது. முற்றுப் பெறாதவாறு செய்ய எனக்கு ஒரு குழந்தை வேண்டுமே! அதற்கு ஒரு தர்ம பத்தினி வேண்டாமா? மணம் செய்து கொள்ளலாம் என்றால் கையில் பொருள் இல்லையே" எனக் கேட்டார்.

**"எந்தையே, கந்தர் தந்தாய்,**
**இளைத்தனன்; பொருளோ இல்லை.**
**மைந்தன்உண் டாக என்னை**
**மன்றல்செய் வித்தல் வேண்டும்."**

"தாதையுந் தாயும் உற்ற
சுற்றமும் தனமும் மற்றும்
வேதனை வினையி னேற்கு
நீயலால் வேறும் உண்டோ?

கோதிலா மரபின் வந்த
குலந்தலை அழியு மோஎன்று
ஆதிநா யகன்றன் பாதத்
தழுதுவீழ்ந் திளைய சொன்னான்."

(பழைய திருவிளையாடல்)

தசரதன் விருப்பமும் தருமியின் விருப்பமும் தாம் செய்த அறம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே. அதற்குப் மகப் பேறு வேண்டும். அது பெற மனையாட்டி வேண்டும்.

அறத்திற்குத் துணையாக நிற்பவள் மனைவி. அப்படி இல்லாமல் தன் காமத்தை மாத்திரம் தீர்ப்பவளாக ஒருவன் மனையாட்டியை வைத்துக்கொண்டால், தாசியை வைத்துக் கொண்டது போன்றதுதான். அப்படித்தான் சாஸ்திரம் சொல்கிறது.

காமம் அல்லது இன்பம் கடமையைச் செய்வதற்குப் பாது காப்பாக இருக்க வேண்டுமேயன்றிக் கடமையை மறப்பதற்குக் காரணமாக இருத்தலாகாது.

## உண்மை அன்பு

மனையாட்டியைப் பார்க்கும்போது, "மேனி அழகாக இருக் கிறாளா? நிறைய அணிகள் அணிந்திருக்கிறாளா? ஆற்றல் மிக்க வளாக இருக்கிறாளா?" என்று சிலர் பார்க்கலாம். மனைவி அழகாய் இருக்க வேண்டுமென்று வள்ளுவர் சொல்லவில்லை. அழகான பெண்டாட்டிதான் வேண்டும் என்று இருந்தால் சொல்லியிருக்கலாம். அழகாக இல்லாத பெண்கள் கல்யாணம் ஆகாமலேயே நின்று விடுகிறார்களா? அழகு என்பது கண்ணுக்குக் கண் வேறுபடும். ஒருவன் கண்ணுக்கு அழகற்றவளாய்த் தோன்று பவள் மற்றவன் கண்ணுக்கு ரம்பையாகக் காட்சி அளிப்பாள். வள்ளுவர்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்."

என்கிறார்.

*பல் எல்லாம் உதிர்ந்து போன கிழவர் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை பாக்கைச் சிறிய இரும்பு உரலில் போட்டு இடித்துக்கொண்டிருக்கிறார். மெள்ள மெள்ள இடிப்பதால் ஓசை கேட்கவில்லை. கொட்டில் தாழ்வாரத்தில் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள் அவரது மனையாட்டி; தலையெல்லாம் தும்பைப் பூவைப் போல நரைத்துவிட்ட கிழவி. அவள் தன் பேரனைப் பார்த்து, ''ஏய்! போய்ப் பாரடா? கிழவர் கஷ்டப்படுகிறார். நீயாவது கொஞ்சம் வாங்கி அதை இடித்துக் கொடுக்கக் கூடாதா?'' என்கிறாள். அதுதான் உண்மைக் காதல்; உண்மையான அன்பு; பருவம் கடந்தும் பசுமையாக நிலவும் அன்பு. அழகு உடம்பு முதிர முதிரத் தேயும். செல்வமும் நாளடைவில் தேயும். ஆற்றல் தேயும். ஆனால் இந்த அன்பு மாத்திரம் உடம்பு தளரத் தளர வளரும்.*

## காமத்தை வெல்ல வழி

*நல்ல கட்டிளங் காளையாக இருக்கும்போது ஊரைச் சுற்றித் திமிர் பிடித்து அலைந்த எத்தனையோ பேர்கள் வயசு ஆக ஆக அடங்கி ஒடுங்கி நல்லவர்களாக உட்கார்ந்து விடுகிறார்கள். தசைக் கொழுப்பு இருக்கிற வரைக்கும் மனிதனுக்குத் தெளிவு உண்டாவதில்லை. தசைக் கொழுப்பின் கிளர்ச்சியே காமம் என்பது. அதையும் மீறி ஒருவன் தர்மம் செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? அதைத்தான் இந்தப் பாட்டில் சொல்ல வருகிறார் அருணகிரியார்.*

கடத்தில் குறத்தி பிரான்அரு
    ளால்கலங் காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந்
    தேன்சித்ர மாதர்அல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்
    வாயில் பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங்
    காம சமுத்திரமே.

*சமுத்திரம் கரை இல்லாதது. இந்த வெங் காம சமுத்திரத் திற்கும் கரை இல்லை. ஐந்து கல்யாணம் பண்ணிக் கொண்டவன்,*

ஆறாம் கல்யாணமும் பண்ணிக் கொள்வதைப் பார்க்கிறோம். தசரத சக்கரவர்த்தி அறுபதினாயிரம் மனைவிகளை மணந்து கொண்டவர். திரௌபதைக்கு ஐந்து கணவர்கள்; அதற்கு மேலும் கர்ணனிடத்தில் அவளுக்கு ஆசை இருந்ததாம். இது காமத்தின் இயற்கை. விசுவாமித்திரர் முதலிய பெரிய முனிவர்களும் காமத்தினால் அல்லற்பட்டார்கள்.

## காம மென்னும் கடல்

**தோ**ற்றத்தைக் கண்டு, தோலைக் கண்டு, மூக்கு விழியைக் கண்டு ஏமாந்து போகிறவனுக்குக் காமம் பரவுவதற்குக் காரணம் அந்தத் தோற்றமே. அதனால் காமமென்னும் கடல் மையல் செய்யும் மங்கையரின் உறுப்புக்களில் பரவிக் கிடக்கிறது என்கிறார் அருணகிரியார்.

சித்ர மாதர்அல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்
வாயில் பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங்
காம சமுத்திரமே.

புறப் பார்வையில் படுகின்ற சரீர உறுப்பில் பரவி இருக்கிறதாம்.

## இருவகைக் காமம்

**கா**மம் என்பதற்கு இரண்டுவிதமான பொருள் உண்டு. ஒன்று தீயது; மற்றொன்று நல்லது. தீயது மயல்; நல்லது காதல்.

பொதுவாகக் காமம் என்ற சொல் பழைய நூல்களில் அன்பாகிய காதலுக்கே வழங்கப்பட்டது. உறுதிப் பொருள்களுக்கு இலக்கணம் வரைந்த வள்ளுவர் காமத்துப் பால் என்றே பெயர் வகுத்திருக்கிறார். அந்தக் காலத்தில் காமம் என்பதற்குத் தவறான பொருள் வழங்கியிருந்தால் இன்பப் பால் என வைத்திருக்கலாம். அப்படி இருக்க வேண்டுமென்றுகூட இக்காலத்தில் சிலர் சொல்கிறார்கள்; 'காமம்' என்பதற்குத் தவறான பொருள் இப்போது ஏற்பட்டு விட்டதனால் அப்படிச் சொல்கிறார்கள்.

காமத்தில் நல்லதாகிய ஒன்றும், தீயதாகிய ஒன்றும் உள்ளன. அன்புடைய காமம் காதல்; அது நல்ல காமம். தீயதோ வெங்காமம்;

கொடுமையான காமம். அதனால் அதை, ''வெங் காம சமுத்திரம்'' என்கிறார். புறக்கண்களால் வெறும் உடல் அழகை மாத்திரம் பார்ப்பதனால் எழுகின்ற காமம் வெங்காமம். குண நலங்களைப் பார்க்கும் பார்வை வெங் காமத்துக்கு இல்லை.

## சீதையின் பண்பு

சீதா பிராட்டியை இராமனும் பார்த்தான்; அவளும் அவனைப் பார்த்தாள். இருவரும் கண்களாகிய வாசல் வழியே நுழைந்து ஒருவர் உள்ளத்தை ஒருவர் தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

**''பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்து**
**இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்.''**

மன்மதன் உலகத்திற்கே அழகு அரசன் அல்லவா? அவனும் சீதையைப் பார்த்தான். அவள் அங்கங்களின் அழகைப் பார்த்தான். சீதா பிராட்டியை அப்படியே சித்திரம் எழுத வேண்டுமென்று நினைத்தான். அவள் உலகத்தை எல்லாம் காத்து ரட்சிக்கின்ற அன்னையாக, திருமகளாக இருக்கிறபொழுது எழுதலாம். இராமன் ஒருவனை அன்றிப் பிறரைக் காணாத கற்புடைய சீதையாக அவதாரம் எடுத்திருக்கிறபோது அவளைச் சித்திரத்தில் எழுதிவிட முடியுமா?

நல்ல எழுத்தாளர்கள் கதை எழுதுவதைப் பார்த்து நாமும் எழுதலாம் என்று சிலர் ஆரம்பிப்பார்கள். காகிதம், பேனா எல்லாவற்றையும் எடுத்து வைத்துக்கொண்டு உட்காருவார்கள். தலைப்பைப் போட்டுக்கொண்டு ஆரம்பிக்கும் போதுதான் என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்று யோசிப்பார்கள்.

அப்படி மன்மதன் செய்தானாம். அமுதம் கலந்த வண்ணத்தைக் குழைத்து வைத்துக்கொண்டு தூரிகையை எடுத்துச் சித்திரம் தீட்டப் போனான். சீதையின் உயிரோவியத்தைத் தீட்ட வேண்டும். அவள் குணங்களைக் கண்டு எழுதத் துணிந்தானா? அவள் உள்ளச் சிறப்பை உணர்ந்து தீட்டப் போனானா? இல்லை.

சீதையை மற்றப் பெண்களைப் போலவே எண்ணி, அங்க நலங்களைப் பார்த்துத் தீட்டப் போனான்; அவனால் சீதையை எழுத முடியுமா?

**"ஆதரித்து அமுதிற் கோல்தோய்த்**
**தவயவம் அமைக்கும் தன்மை**
**யாதெனத் திகைக்கு மல்லால்**
**மதனற்கும் எழுத வொண்ணாச்,சீதை"**

மன்மதனாய் இருந்தால் என்ன? அவனாலும் எழுதுவதற்கு முடியாத கற்புடைய மங்கை சீதை.

## சித்ரமாதர்

சித்ர மாதர் என்கிறார் அருணகிரியார். அலங்காரமான பெண்கள் என்று பொருள். தன் நாயகனுக்கு மாத்திரம் இன்பம் அளிக்க அலங்காரம் பண்ணிக் கொள்ளும் பெண்ணின் அழகு பிறர் கண்களில் படாது. பிறர் கண்களில் படவேண்டும் என்றே தம்மை அலங்காரம் பண்ணிக் கொண்டு, ஆடவர் உள்ளங்களை மயக்கிக் கவர்ந்து வந்த சித்திர மாதர்கள் தனியாகவே ஒரு பகுதி இருந்தனர். உலக முழுவதும் இருந்தார்கள்.

வெங்காம சமுத்திரம் அத்தகைய சித்திர மாதர் மேனி முழுவதும் படர்ந்திருக்கிறது என்கிறார் அருணகிரியார். அவர் கற்புடைய பெண்களைக் குறிக்கவில்லை. பிறர் கண்ணில் பட்டும் மயல் செய்யாத கற்புடைய மங்கையர்களுடைய அழகு அவர் களுடைய கணவர்களுக்கு மட்டுமே குளிர்ச்சியையும் இன்பத்தையும் அளிக்கும்.

சமுத்திரம் பரவிக் கிடக்கின்றது என்றாலும் அதில் ஒரு துளியாவது மனிதனுடைய தாகத்தை அடக்குமா? கடல் நீரைப் பருகப் பருகத் தாகந்தான் அதிகமாகும். அதைப்போல வெங் காமத்தை நுகர நுகர மேலும் மேலும் தாகம் உண்டாகிறது; காமம் மேலும் வளர்கிறது. அந்தக் கடல் புறப் பார்வையில் படும் படியாகச் சித்திர மாதர்களுடைய உறுப்புக்களில் கொந்தளித்துக் கொண் டிருக்கிறது. தன் புறக் கண்களால் இந்த அழகைப் பார்த்து மனத்தை இழப்பவன், அக்கடலுள் மூழ்கித் துன்புறுகிறான். வாழ்நாளை வீணாக்கிக்கொண்டு ஆழ்ந்துபோகிறான்.

அந்தச் சமுத்திரத்தை அருணகிரியார் கடந்தாராம்.

## தெப்பம்

"சமுத்திரத்தைக் கடக்க வேண்டுமானால் தெப்பம் வேண்டும்! உங்களுக்குத் தெப்பம் ஏது?" என்ற கேள்வி வரும் அல்லவா?

மிகவும் வேடிக்கையாக, அழகாக, முரண்பாடுபோலத் தோன்றும்படி விடை சொல்கிறார்.

கடத்தில் குறத்தி பிரான்அரு
ளால்கலங் காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந்தேன்.

## முரண்பாடா?

பசித்தவன் ஒருவரிடத்தில் போய், "என் பசியை யார் தீர்ப்பார்?" என்று கேட்டபோது, "அவனிடம் போ" என ஒருவனைக் கைகாட்டி விட்டுப் போனார் அவர். ஆனால் இவன் அவனிடம் போய்ப் பார்த்தால், அவன் ஒரு மாதம் பட்டினி. அவனிடம் போனாலா பசி தீரும்?

"வெங்காம சமுத்திரத்தைக் கடந்தேன் என்கிறீர்களே! புணை ஏது?" என்று கேட்டால் அருணகிரியார், "காட்டில் வாழும் வள்ளியிடம் ஆசை கொண்டானே, அவன் தந்தான்" என்று சொல்கிறார்.

"காமத்தை வெல்லக் காமத்தை வென்றவன்தானே வழி காட்ட முடியும்? ஆனால் நீங்கள் சொல்கிற பேர்வழி காமத்தை வென்றவனா? முன்பே ஒரு மனையாட்டி இருக்க, காட்டில் இருக்கும் குறப்பெண்ணான வள்ளியைத் தேடி ஓடியவனாயிற்றே! அவனைத் துணையாகக் கொண்டால் எப்படிக் காம சமுத்திரத்தைக் கடக்க முடியும்?" என்று கேட்கத் தோன்றுகிறது. வள்ளி திருமணத்தின் கருத்தை உணர்ந்தால் அந்தக் கேள்வி எழாது.

வள்ளி கல்யாணம் என்பது காமக் கல்யாணம் அன்று; அது ஞானக் கல்யாணம்; காமம் கடந்த கல்யாணம். ஆகவே வள்ளியை ஆட்கொண்ட எம்பெருமானின் அருள் கிடைக்குமானால், வெங்காம சமுத்திரத்தைக் கடக்கலாம்.

## காணும் வழி

காமத்தைப் போக்க நினைப்பவர்கள் பெண்களைக் கண்ணால் காணமாட்டேன் என்று இருப்பது உலகத்தில் இயலும்

செயலன்று. பெண்களைக் காணாமல் இருக்க முடியாது. அவர் களைப் பார்க்கும்போது காம உணர்ச்சியின்றிப் பார்க்கலாம். அதற்கு ஒரு வழி உண்டு.

ஆண்களுடைய பெயர்களுக்குப் பிறகு செட்டியார், ரெட்டி யார், முதலியார், ஐயர் என்ற பட்டங்கள் இருக்கின்றன. ஆனால் பெண்கள் பெயர்களுக்குப் பின் எந்தச் சாதிக்காரர்களாக இருந் தாலும் அம்மாள் என்ற பட்டந்தான். லட்சுமி அம்மாள், சரசுவதி அம்மாள், பாகீரதி அம்மாள் என்று எந்தப் பெண் மணியாக இருந்தாலும் அம்மாள் என்று அழைப்பதே வழக்கம்.

அண்ணன் தன் தங்கையை அம்மா என்றே அழைக்கின்றான்; தந்தை தம் பெண்ணை அம்மா என்றே கூப்பிடுகிறார். மனை யாட்டியைத் தவிர மற்ற பெண்கள் எல்லாரும் அம்மாவே.

காமத்தை வெல்ல வேண்டியவர்கள் உலகிலுள்ள பெண் களைத் தாயாகப் பார்க்க வேண்டும்; தாயாகப் பழக வேண்டும்; தாயிடம் பேசுவது போலப் பேசவேண்டும்.

பெண்டாட்டி என்ற சொல்லுக்கு இயல்பான பொருள் பெண் என்பதுதான். ஆனால் அதற்கு இப்போது மனைவி என்ற பொருள் வந்துவிட்டது. மனைவி ஒருத்தியைத்தான் பெண்ணாகக் கண்டார்கள்; சொன்னார்கள். திருநெல்வேலியிலுள்ள அந்தணர்கள் மனைவியைப் பெண்ணாய்ப் பிறந்தவள் என்பார்கள். அதுவும் இந்தக் கருத்தையே புலப்படுத்தும்.

பெரியவர்கள் எத்தனை பெண்களைப் பார்த்தாலும் மனைவி ஒருத்தியைத்தான் பெண்பாலாகப் பார்த்தார்கள்; மற்றவர்களைத் தாயாகப் பார்த்தார்கள்.

## பேராண்மை

**வ**ள்ளுவர் ஒன்று சொல்கிறார். மனிதன் இரண்டு விதமான வீரம் உடையவன்; புற வீரம் ஒன்று; அகவீரம் ஒன்று. உடம்பின் ஆற்றலால் தன்னை எதிர்க்கின்றவர்களோடு போராடி வெல்வது புறவீரம். அகவீரம் என்பது காமத்தை வெல்லும் வீரம். உலகி லுள்ள பெண்களைத் தாயாகப் பாவித்துத் தன் உள்ளத்தில் எழுகின்ற வெங்காமத்தைப் பொசுக்கி வெல்கின்ற வீரமே அக வீரம். அகப்பகையை வென்றவர்கள் முனிவர்கள். புறப்பகையை

அடக்கும் ஆண்மை உடையவர்களுக்கும், வீரம் மிக்கவர்களுக்கும் உட்பகையாகிய காமத்தை அடக்குவது அருமை. புறப்பகையை அடக்க ஆண்மை வேண்டுமென்றால் அகப்பகையை அடக்கப் பேராண்மை வேண்டும். அகப்பகையை வென்றவர் மாபெரும் வீரர். வள்ளுவர் சொல்கிறார் :

**"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு."**

"பிறன் மனையாட்டியைப் பார்க்காத பேராண்மை உடையவர்களுக்கு அறனுமாம்; நிரம்பிய ஒழுக்கமுமாம்" என்கிறார்.

## லட்சுமணன் இயல்பு

லட்சுமணன் அப்படி இருந்தான். சீதா பிராட்டியை இராவணன் தூக்கிச் சென்றபோது, தன்னைத் தூக்கிச் செல்லும் வழி இராமனுக்குத் தெரியட்டும் என்பதற்காகத் தன்னுடைய ஒளிமிக்க அணிகளை ஒவ்வொன்றாகக் கழற்றிப் போட்டுக் கொண்டே சென்றாள். அவற்றையெல்லாம் அநுமான் பொறுக்கிச் சேர்த்து வைத்திருந்தான். கிஷ்கிந்தாபுரிக்கு இராம லட்சுமணர் வந்தபோது அவ்வணிகளை அவர்களிடம் கொடுத்தான். இராமன் அவை சீதையுடையன என்பதை அறிந்து வருந்தினான். காதணியை எடுத்துப் பார்த்தான்; கழுத்து ஆபரணத்தை எடுத்துப் பார்த்தான்; கை வளையல்களை எடுத்துப் பார்த்தான். சீதையினுடைய முழு உருவமும் அவன் உளக் கண்ணின் முன்னே தோன்றி அவனை வருத்தியது. "தம்பி லட்சுமணா, இந்த ஆபரணங்களை எல்லாம் பார்த்தாயா? இவையாவும் உன் அண்ணியினுடையவை அல்லவா?" எனத் தாங்கமாட்டாத துக்கத்தோடு கேட்டான்.

லட்சுமணன் தோட்டை எடுத்து விலக்கி அப்பால் வைத்தான். மாலைகளை எடுத்து விலக்கி அப்பால் வைத்தான்; வளையல்களை எடுத்து அப்பால் வைத்தான். காலில் அணியும் சிலம்பை எடுத்தான். "அண்ணா! இது அண்ணியுடையதுதான்" என்று சொன்னான்.

தன் அண்ணியின் பாதத்தைத் தவிர வேறு உறுப்பை அவன் ஏறெடுத்தும் பார்க்காமல் பாத சேவை மாத்திரம் பண்ணியவன். ஆகவே பிராட்டியின் மற்ற அங்கங்களில் அணிந்து கொண்டிருந்த

அணி எதையும் அவன் பார்க்கவில்லை. திருவடியில் அணிந் திருந்த சிலம்பை மாத்திரம் அடையாளம் கண்டுகொண்டான். அவன் பிறன்மனை நோக்காத பேராண்மையாளன்.

## திருக்கோவையாரில் உள்ள காட்சி

திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் ஒரு காட்சியை வருணிக்கிறார்.

ஒரு பெண் ஓர் ஆடவனிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள். ஆனால் வேறொருவனுக்கு அவளை மணம் செய்விக்க அவளுடைய பெற்றோர்கள் முடிவு செய்தார்கள். தோழியின் மூலம் தன் எண்ணத்தை அந்தப் பெண் தன் பெற்றோர்களுக்கு உணர்த்தச் சொன்னாள். ''இந்தப் பிள்ளை வேண்டாம் அம்மா! இவனைவிட வேறு ஒரு நல்ல ஆடவன் வருவான்'' எனத் தோழியும் குறிப்பாக உணர்த்தினாள். அவர்கள் கேட்கவில்லை. பெற்றோர்கள் முடிவுப்படி அந்தப் பெண் வேறு ஒருவனை மணந்துகொண்டால் அவள் கற்பு இழந்தவளாகி விடுவாள். அதைவிட அவள் உயிரை இழந்துவிடலாம். தோழி, ''நீ இந்த அறம் மறந்த ஊரில் இருக்கவேண்டாம். உன் தலைவனோடு இரவுக்கு இரவாகவே வேறு எங்காவது போய் விடு'' என்று சொல்லி, அவள் காதலனுக்கும் தெரிவித்தாள்.

தோழியின் யோசனைப்படியே அந்தப் பெண் தன் காதல னுடன் போய்விட்டாள். விடிந்தது; வீட்டிலுள்ளவர்கள் எழுந்து பார்த்தபோது பெண்ணைக் காணவில்லை.

''எங்கே? எங்கே?'' என்று தேடினார்கள். அகப்படவில்லை. தோழியைக் கேட்டார்கள். ''நான்தான் அப்பொழுதே குறிப்பாகச் சொன்னேனே, அம்மா. அவளுக்கு முன்பே ஒரு காதலன் இருக் கிறான். அதைத் தெரிந்து கொள்ளாமல் வேறோர் ஆடவனுக்கு மணம் செய்விக்க நினைத்தீர்கள். அவள் கற்பை இழக்கத் துணிய வில்லை'' என்று சொல்லிவிட்டாள்.

தன் உயிரினும் சிறந்த பெண் வீட்டை விட்டே போய் விட்டாள் என்றவுடன் பெண்ணின் தாய்க்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. அவளை வளர்த்த செவிலித்தாய், ''நான் போய்த்

தேடிப் பார்த்து அவளை அழைத்து வருகிறேன் பார்'' என்று சொல்லி வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

மரம் இல்லாத பாலைவனத்தின் வழியே அவள் போய்க் கொண்டிருந்தாள். அப்போது கொஞ்ச தூரத்தில் அவளுக்கு முன்னால் ஒரு பெண்ணும் ஓர் ஆணும் வருவது தெரிந்தது. ''நம் மகள்தான் வருகிறாள் போலிருக்கிறதே. அவள் கட்டியிருக்கும் புடவைகூட அதுதான்; அவளே தான்; அந்த ஆடவன்தான் அவள் காதலனோ!'' என்று நினைத்தாள். ''அவர்கள் என் பெண்ணும் அவள் காதலனுமாக இருக்கக்கூடாதா'' என்ற ஆசை அவள் நெஞ்சில் துடித்தது. பறந்துபோன பறவை திரும்பி வருமா?

வேறு யாரோ இரண்டு பேர்கள் ஆணும் பெண்ணுமாக வந்தார்கள். அப்பெண் அவள் பெண்ணைப்போலவே தோற்றினாள். அதே உயரம்; அதே அலங்காரம். பக்கத்தில் வந்து பார்த்தால் வேறாக இருக்கிறது. உடனே மனம் 'பக்' என்றது. 'அவர்களை இப்படிப் பார்த்து விட்டோமே; அவர்கள் தவறாக எண்ணிக் கொள்வார்களோ' என்ற நாணம் உண்டாயிற்று.

உடனே அவர்களிடம், அவர்களை அப்படி எதற்காகப் பார்த்தாள் என்பதைச் சொல்கிறாள்.

''உங்களை நான் ஏன் அப்படிப் பார்த்தேன் தெரியுமா? என் பெண்ணும் அவளுடைய காதலனும் என்று எண்ணிப் பார்த் தேன். அவர்களும் இப்படியேதான் இருப்பார்கள். அவர்கள்தாம் மீண்டும் வந்துவிட்டார்கள் என்று எண்ணி மகிழ்ந்தேன்.''

**''மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மைஇம் மேதகவே**
**பூண்டார் இருவர்முன் போயினாரோ?''**

அவர்களைப் பார்த்து, ''நீங்கள் இந்த வழியாகவேதானே வந்தீர்கள்? உங்களுக்கு முன்னே உங்களைப் போலவே இரண்டு பேர் போனார்களா?'' என்று கேட்கிறாள்.

அவர்களுக்கு எதிரே இருவர் போனதுண்டு. அதைச் சொல்ல அந்த ஆடவன் முந்துகிறான். கண்டதைச் சொல்ல வேண்டும் அல்லவா?

**''புலியூர் எனைநின்று**
**ஆண்டான் அருவரை யாளியன் னானைக் கண்டேன்.''**

இது சிதம்பர சம்பந்தமான கோவை; ஆதலின் சிதம்பரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். புலியூர் என்பது சிதம்பரம். ''சிதம்பரத்தில் தன் வேலைகளை விட்டுவிட்டு என்னை ஆளும் பொருட்டு நின்று ஆட்கொண்ட சிவபிரானுக்குரிய மலையில், சிங்கத்தைப்போல இருந்த ஒரு வீரனைக் கண்டேன்.''

பார்த்ததைச் சொல்ல வேண்டும் என்று ஆசை. பாட்டியோ தன் பெண்ணைப் பார்த்தாயா என்று கேட்கும் விருப்பமுடையவள். ஆனாலும் அது முறையன்று என்று, இரண்டு பேர்களைப் பார்த்தாயா என்று கேட்கிறாள். அவனோ பெண்ணைப் பற்றிச் சொல்லவில்லை. ''ஆளியன்னானைக் கண்டேன்'' என்று சொல்கிறான்.

அந்த அம்மாள் தேடி வந்தது தன் பெண்ணை; ஆனால் இவன் ஆணைக் கண்டேன் என்கிறான். அவள் திருப்தி அடைந்து விடுவாளா? மாட்டாள் என அவனுக்கே தெரியும்.

அவன் ஏன் அப்படிச் சொன்னான்? ஆடவனைத்தான் அவன் பார்த்தான். பார்த்ததைச் சொல்லிவிட்டான். ஆனால் அவளை இவன் பார்க்கவில்லை. அதனால் அதைச் சொல்லவில்லை. அந்தச் செவிலியின் உளம் குளிர வேண்டுமே. அந்தப் பெண்ணை இவன் காதலி பார்த்திருப்பாள். அவளைச் சொல்லும்படி சொல்கிறான்.

**''ஆளியன்னானைக்கண் டேன்; அயலே**
**தூண்டா விளக்கனை யாய்என்னை**
**யோஅன்னை சொல்லியதே.''**

''தூண்டா விளக்குப் போன்றவளே! அம்மா ஏதோ சொன்னாளே'' என்று அவன் சொன்னான். அவன் அந்தப் பெண்ணைப் பார்க்கவில்லை. பார்த்தவளைச் சொல்லச் சொல்கிறான்.

''வேறு பெண்ணையே பார்க்காதவன் என்றால் அவனிடம் எதிரே நின்று இத்தனை நேரமும் பேசுபவள் பெண்தானே? அவளைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டுதான் பேசினானோ?'' என்று கேட்கலாம்.

அவன் எதிரே நின்றவளைப் பார்த்தான். பெண்ணாகப் பார்க்கவில்லை. தாயாகப் பார்த்தான். அது எப்படித் தெரிகிறது?

"என்னையோ அன்னை சொல்லியதே?"

என்பதில், அன்னையென்று சுட்டுவதனால் தெரிகிறது.

இப்படித் தன் மனைவி ஒருத்தியையே பெண்ணாகவும், மற்றவர்களை எல்லாம் தாயாகவும் பார்க்கும் தமிழரின் பண்பட்ட மரபை மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் ஒரு நாடகமாக்கிக் காட்டுகிறார்.

## அம்மையும் அப்பனும்

புறத் தோற்றத்தைக் கண்டு, பொறிகளின் வயப்பட்டு அறிவு இழந்து வெங்காம சமுத்திரத்திலே ஆழ்ந்து போகின்றவர்கள் மீள வேண்டுமானால் அவர்களுடைய பார்வை மாற வேண்டும். உலகிலுள்ள பெண்களை எல்லாம் தாயாகப் பார்க்கின்ற பாவம் வர வேண்டும். அன்னையாகப் பார்க்க வேண்டுமென்றால் அன்னைக்குப் பக்கத்தில் அப்பா இருக்க வேண்டும். அப்பாவும், அம்மாவும் கலந்த கோலத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தால் காமத்தைப் போக்கி விடலாம். முருகனை அப்படிப் பார்த்துப் பார்த்துத் தியானம் செய்து காமத்தை வெல்லலாம். சிவப்பிரகாசர் இந்தக் கருத்தைச் **சோணசைல மாலையிற்** பாடுகிறார்.

**"கண்புனல் துளிப்ப அழற்படும் இழுதிற்**
**கரைந்துகும் நெஞ்சில்நின் றனையே**
**பெண்பயில் உருவ மொடுநினைந் தெனது**
**பெண்மயல் அகற்றும்நாள் உளதோ?"**

வெங்காம சமுத்திரத்தைக் கடக்கத் தமக்கு அருளியவன் இன்னானென்று அடையாளம் கூறுகிறார் அருணை முனிவர்.

கடத்தில் குறத்தி பிரான்.

காட்டிலுள்ள குறத்தியின் தலைவன், வள்ளி மணாளனது அருளினால் கடந்தாராம். முருகக் கடவுள் என்று சொல்லாமல் வள்ளி காந்தன் என்று சொல்கிறார்.

"வள்ளி நாயகனின் அருளினால், என்னைக் கலங்க வைத்த நிலை போய்ச் சித்தத்தில் ஏற்பட்ட திடத்தையே புணையாகக் கொண்டு நான் வெங்காம சமுத்திரத்தைக் கடந்துவிட்டேன்" என்று சொல்கிறார். வள்ளி கல்யாணம் என்பது காமக் கல்யாணம் அல்ல, ஞானக் கல்யாணம் என்பதை இது புலப்படுத்துகிறது.

## குமாரனும் மாரனும்

முருகனுக்குக் குமாரன் என்ற பெயர் உண்டு. மாரன் என்பது மன்மதனுக்குப் பெயர். காம உணர்ச்சியை எழுப்பு கிறவன் மாரன். குமாரன் என்பதற்கு மாரனைக் குற்சிதம் செய்யும் பேரழகுடையவன் என்பது பொருள்.

முருகப் பெருமானது அவதாரக் கதை நமக்குத் தெரியும். தியானத்தில் அமர்ந்திருந்த சிவபெருமானை மன்மதன் மலரம்பை விட்டுத் தியானம் கலையச் செய்தான். நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனையே சுட்டெரித்தான் சிவபிரான். அப்புறந்தான் பார்வதி கல்யாணம் நிகழ்ந்தது. பின்பே முருகப் பெருமானின் அவதாரம். ஆகவே, முருகன் பிறப்பதற்கு முன் மன்மதன் அழிந்தான். குமார ஜனனத்திற்கு முன் மார தகனம் நடந்தது. குமாரன் எங்கே இருக்கிறானோ அங்கே மாரனுக்கு வேலை இல்லை. குமாரனுடைய அருள் இருந்தால் மாரனை வென்று விடலாம். உலகத்தில் சித்திர மாதர் மையல் வலைப் பட்டு, மனமழிந்து, பலர் துன்பத்தில் துவளுவதைப் பார்த்து வருந்தி, தாமே துன்பப்படுவது போல வாடி, ''இனி எனக்குத் துன்பம் இல்லை. நான் காட்டிலுள்ள குறவள்ளி நாயகனின் அருளினால் உண்டான சித்த உறுதியையே தெப்பமாகக் கொண்டு சித்திர மாதர்களின் மேனி எல்லாம் படர்ந்து பரவி இருக்கிற வெங்காம சமுத்திரத்தைக் கடந்து விட்டேன்'' எனச் சொல்கிறார் அருணகிரியார். அப்படிச் சொல்லும் வாயிலாக, ''சித்திர மாதர் மேனியைப் பார்த்து மயங்கிப் போகிறீர்களே! வெங்காம சமுத்திரத்தில் மூழ்கிப் போகிறீர்களே! அந்த ஆழமான கடலைக் கடக்க வேண்டுமானால் தெப்பம் வேண்டும். தெப்பம் குமாரனுடைய அருளால் கிடைக்கும். உலகிலுள்ள பெண்களைத் தாயாகப் பாருங்கள். தாயாகவும், தந்தையாகவும் உலகிலுள்ள ஆண் பெண்களை நீங்கள் பார்க்க வேண்டுமென்றே அவன் குறத்தியாகிய வள்ளியோடு, வள்ளி நாயகனாக வருகிறான். வள்ளி காந்தனைப் பாருங்கள்; தொழுங்கள்; அவன் அருள் உங்கள் சித்தத்தின் சலனத்தைப் போக்கி உறுதியை உண்டாக்கும்'' என நல்லுபதேசம் செய்கிறார்.

★

கடத்தில் குறத்தி பிரான்அரு
ளால்கலங் காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந்
தேன்சித்ர மாதர்அல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்
வாயில் பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங்
காம சமுத்திரமே.

*(காட்டில் வாழ்ந்த குறமகளாகிய வள்ளியின் நாயகனாகிய முருகனுடைய திருவருளால் கலக்கமின்றி இருந்த சித்தத்தின் உறுதியினால், அவ்வுறுதியே தெப்பமாக யான், அலங்காரத்தையுடைய மாதர்களின் இரகசியத் தானமாகிய அரவுப் படத்திலும் கழுத்திலும் கோவைப் பழம் பழுத்தாற் போன்றுள்ள செம்மையான வாயிலும் மூங்கிலைப் போன்ற தோளிலும் கொப்பூழாகிய இடத்திலும் நகிலிலும் பரந்து கிடக்கும் வெவ்விய காமமாகிய கடலைக் கடந்தேன்.*

*கடம் – காடு. முதலில் சித்தம் கலங்குதலை ஒழிந்து பின்பு உறுதி பெற்றமையின், 'கலங்காத சித்தத்திடம்' என்றார். புணை – தெப்பம். சித்தத்திடமே புணையாக என்று கொள்க. சித்திரம் – அலங்காரம்; வியப்பைத் தருவது எனலுமாம். படம் – பாம்பின் படம். பணை – மூங்கில்; இங்கே உவம ஆகுபெயராய்த் தோளைக் குறித்தது. உந்தித்தடம் – கொப்பூழ்ப் பிரதேசம். தடம் – பொய்கை எனலுமாம். வெம்காமம் என்றது முறையற்ற காமத்தைச் சுட்டியது. சமுத்திரத்தைத் திடத்தினால் யான் கடந்தேன்.)*

# சொல்வதும் சொல்ல வேண்டுவதும்

அருணகிரி நாதப் பெருமான் வெங்காமக் கடலைக் கடப்பதற்கு இன்னது வழி என்று சொன்னதை முன் பாட்டில் பார்த்தோம். அந்த நினைப்போடு மறுபடியும் அவர் பாடுகிறார். இறைவனை நாடிச் சரண் அடைந்தால் மனத்திலே உண்டாவது திடம்; அந்தத் திடத்தைப் புணையெனக் கொண்டு காமக் கடலைக் கடக்கலாம் என்று சொன்னார்.

மனத்திலே திடம் எப்படி வரும்? இறைவன் அருளாலே திடீரென்று மனத்திலே திடம் வந்துவிடுமா?

## முயற்சியும் அநுபவமும்

எந்தக் காரியமும் திடீரென்று நடந்துவிடாது. பல பல படிகளில் ஏறிய பிறகே உயர்ந்த மாடியை அடைய முடியும். முயற்சி மெல்ல மெல்ல அதிகமாக ஆக அதனால் ஏற்படும் பலனும் மெல்ல மெல்ல வளர்ந்து வரும். திடீரென்று ஒருவருக்கு உயர்ந்த நிலை வந்ததானால் அது இந்தப் பிறவியின் முயற்சியினால் வந்த பயன் என்று சொல்ல முடியாது. முற்பிறவிகளில் செய்த முயற்சிகளின் பயன் அது. முயற்சியின் அளவுக்கு ஏற்றபடி அநுபவங்களும் உண்டாகி வரும். சாப்பிட உட்கார்ந்தவனுடைய பசி, பாயசத்திலிருந்து தயிர்ச்சாதம் வரையில் சாப்பிட்ட பிறகுதான் அடங்கும் என்று சொல்லலாமா? ஒவ்வொன்றாகச் சாப்பிடச் சாப்பிட அவன் பசி மெல்ல மெல்லக் குறைந்து வரும்.

சாதனம் செய்யும்போது எந்த எந்தப் பக்குவத்தில் இருக்கிறோமோ அந்த அந்தப் பக்குவத்திற்கு ஏற்ப அநுபவம் ஏற்படும். அதனால்தான் குருநாதர் சந்நிதானத்தை அடைந்து, அவர் சொன்ன வழிப்படி மெல்ல மெல்லப் பயின்று வரவேண்டும் என்கிறார்கள். குருவின் உபதேசம் பெற்றவுடனே முடிந்த முடிவாகிய பயன் கிடைத்து விடாது; உழைப்பின்றி ஊதியம் இல்லை.

''விரிவான நூல்களைப் பலர் எழுதியிருக்கிறார்களே; அவற்றையே நாம் குரு உபதேசமாகக் கொள்ளக் கூடாதா? குருவை நேரிலே அடைந்து உபதேசம் பெற வேண்டும் என்பது என்ன அவசியம்?'' என்று சிலருக்குத் தோன்றுகிறது.

## செட்டியார் விருந்து

ஒரு செட்டியார் மண்டிக் கடை வைத்திருக்கிறார். அவர் உயர்ந்த சம்பா அரிசி வியாபாரம் பண்ணுகிறார். ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் அந்தக் கடையில்தான் அரிசி வாங்குகிறார்கள். அரிசி வாங்கியவர்கள் அதை அப்படியே சாப்பிட முடிகிறதா? தங்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று, தங்கள் குடும்பத்தின் தேவைக்கு ஏற்ப அரிசியை எடுத்துச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். ஒருவர் செட்டியாருடைய விருந்தினராக அவர் வீட்டுக்குப் போகிறார். அப்போது செட்டியார் என்ன செய்கிறார்? கடையில் இருக்கும் அரிசியை எடுத்தும் தம் வீட்டிலேயே சமைக்கச் சொல்லி விருந்தினருக்கு வேண்டிய அமுது படைக்கிறார். ஊருக்கு எல்லாம் அரிசி வியாபாரம் செய்யும் செட்டியார் தம் வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு அதே சம்பா அரிசியைக் கொண்டு அன்னம் படைக்கிறார்.

எல்லோருக்கும் அரிசி தருவது பொதுவான வேலை; தம் வீட்டிற்கு வருபவருக்குச் சாப்பாடு போடுவது சிறப்பான செயல். பொதுவான அநுபவத்தையும், சிறப்பான அநுபவத்தையும் தருபவர் செட்டியார்தாம். அப்படியே, பெரியவர்கள் எழுதி வைத்திருக்கும் நூல்களில் உள்ளவை பொதுவான உபதேசம். ஆனால் அவர்களிடமே நேரில் சென்றால் அவர்கள் செய்வது சிறப்பான உபதேசம். இன்ன பக்குவம் உடையவர் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்றபடி செய்யும் உபதேசம் சிறப்பான உபதேசம். அந்த உபதேசப்படி நடப்பவர்களுக்கு வெவ்வேறு அநுபவம் விளையும். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவன் அவனுடைய நிலைக்கு ஏற்றபடி அநுபவம் உண்டாகும்.

## பலவகைப் பயிற்சி

மாம்பழத்தை ஒருவன் நறுக்கிச் சாப்பிடுகிறான். மற்றொருவன் அப்படியே கடித்துச் சாப்பிடுகிறான். மூன்றாமவன் சாற்றைப்

பிழித்து சாப்பிடுகிறான். இப்படிச் சுவைக்கும் முறை வேறு பட்டாலும் சுவைத்த பின் கிடைக்கின்ற இனிப்பாகிய அநுபவம் ஒன்றாகவே இருக்கும்.

உலகியல் சம்பந்தமான இந்திரியங்களின் அநுபவத்திலேயே இத்தகைய வேறுபாடுகள் இருக்கின்றன. அவ்வாறே இறைவன் அருள்நெறியில் செல்கின்றபோது வேறுபட்ட பல அநுபவங்கள் உண்டு. ஒவ்வொருவரும் பின்பற்றும் சாதனம் வேறு வேறாக இருக்கும். ஒருவர் எம்பெருமான் திருவுருவத்தை அகத்திலே பதித்துக் கொண்டு எப்போதும் தியானத்தில் மூழ்கி இருப்பர். மற்றொருவரோ எம்பெருமான் புகழை நல்ல நல்ல பாட்டாகக் கோத்துப் பாடிப் பரவசமாய் நிற்பர். வேறு ஒருவர் ஆண்டவன் திருவுருவத்திற்கு வண்ண வண்ண மலர்களால் அர்ச்சனை செய்து கொண்டே இருப்பர். இவ்வாறு பல படியாக ஆண்டவனை நினைந்து, வாழ்த்தி, வணங்கி அவன் திருவருளைப் பெற்றவர்கள் எத்தனையோ பேர். அகண்டமான இறைவனைக் கண்டமான உருவத்தில் வழிபடுகிறோம். அந்த உருவங்கள் பலவாக இருக் கின்றன. அதைப் போலவே அவனை அடைவதற்குரிய வழிகளும் பல. இது ஒன்றே வழி என அறுதியிட்டுக் கூற முடியாது. அவரவர்களுடைய நெஞ்சுக்கு ஏற்பப் பல வழிகள் உண்டு.

பல மாணாக்கர்கள் ஒரே குருநாதரிடம் சென்றாலும் அவர் அத்தனை மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாக உபதேசம் செய்வது இல்லை. ஏனென்றால், அவர்கள் எல்லோருடைய மனமும் ஒரே விதமான பக்குவத்தில் இரா. அவரவர்களுடைய பக்குவத்தை உணர்ந்து, மனத்தின் திண்மையை உணர்ந்து, அவர்கள் எல்லோரும் பயனடையவேண்டுமென்ற கருணையினால் அவரவர்களுக்கு ஏற்றபடி உபதேசம் செய்வார் குருநாதர். தம்மை வந்து அடை கின்ற மாணாக்கர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை முதலில் உணர்ந்து, அவர்கள் மேலே ஏறும் அடுத்த நிலை இன்னது என்பதைக் கண்டு அதற்கு ஏற்ற உபதேசம் செய்வார். எம்பெருமான் திருவருளைப் பெறுகிற முயற்சி உடையவர் களுக்குக் குருநாதனின் கிருபை இருந்தால் அநுபவம் வர வர உயர்ந்து வரும். அநுபவம் ஏற ஏற அவற்றின் இன்பமும் ஏறிக் கொண்டே இருக்கும். ஒரு பிடி சாப்பிட்ட உடனே அதற்கு ஏற்ற அளவு பசி தணிவது போல; அநுபவம் கொஞ்சம் பெற்ற உடனே

இன்பம் தலைப்பட ஆரம்பித்துவிடும். படிப்படியாகச் சாதனம் தொடங்கும்போதே முடிந்த முடிபாகிய முத்தியின்பம் கிடைக்கும் என்பது இல்லை. ஆனால் செய்யும் முயற்சி உண்மையானால் அதற்கேற்ற அநுபவம் நிச்சயமாக உண்டாகும். ஒன்றும் செய் யாமல் சும்மா இருப்பதில் பயன் இல்லை. சிறிது செய்தாலும் கூலி உண்டு.

இந்தப் பிறவியிலேயே முடிந்த முடிபாகிய இன்பத்தைப் பெற முடியாமல் போகலாம். அடுத்த பிறவிகளிலாவது கிடைக்கும் என்ற உறுதி உண்டு. உயிர் உடம்போடு வாழும் வாழ்க்கையில் இந்த உடம்போடிருப்பது ஓர் அத்தியாயம். இப்போது ஒரு நல்ல சாதனத்தைத் தொடங்கினால் அது எப்படியும் சிறந்த பயனைப் பெறும்படி செய்துவிடும். இப்போது நாம் செய்கின்ற முயற்சியின் பயன் வரும் பிறவியாகிய அடுத்த அத்தியாயத்தில் உயிரோடு ஒட்டி வரும்.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து"**

என்று வள்ளுவர் சொல்கிறார். எனவே இந்தப் பிறவியில் செய் கின்ற முயற்சி கை கூடுமோ கூடாதோ என்று நினைக்க வேண்டாம். இப்பொழுது கை கூடாவிட்டாலும் இந்த முயற்சியின் பயன் வரும் பிறவிகளிலும் தொடரும்; ஏதோ ஒரு பிறவியில் ஜீவ யாத்திரை நிற்கும்; அழியாத இன்பம் வரும். ஆதலால் ஏதாவது ஒரு வகையில் ஈடுபட்டு இறைவன் அருள் பெறுவதற்குரிய சாதனத்தைத் தளர்ச்சியின்றிச் செய்து வர வேண்டும். கருவின் அருள் பெற வேண்டும்.

## மன நலம்

மனிதனுடைய வளர்ச்சி அவன் உடம்பைப் பற்றியது அன்று; மனத்தைப் பற்றியதாகும். மனப் பண்பு வளர வளர மனிதன் வளருகிறான். மனத்தின் இயல்பு ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றுவதுதான். அப்படிப் பற்றுகிற மனம் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்த பண்புடைய ஒன்றைப் பற்றுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது உயரும். சாமானிய மனிதன் ஒருவன் தன் முயற்சியினால் பொதுஜனத் தொண்டனாகி, நகராண்மைக் கழக

உறுப்பினனாகி, தலைவனாகி, சட்டசபை அங்கத்தினனாகி, மந்திரி யாகவும் வந்துவிடுகிறான். இது போன்ற வளர்ச்சி முறை மனப் பண்பாட்டினால் உண்டாக வேண்டும். சமூகத்தாரின் கண்ணில் கீழ்ச்சாதியில் பிறந்தவன் நந்தன். ஆனால் அவனைக் காட்டிலும் உயர்ந்த வேதியர் யாராவது உண்டா? கண்ணப்பன் வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவன்தான். ஆனால் அவனைக் காட்டிலும் உயர்ந்தவர் யாராவது உண்டா? அவர்களுடைய மனநலம் வளர்ச்சி பெற்றது.

**''மனநலம் மன்னுயிர்க் காக்கம்''**

என்பது குறள்.

## சூர்தாஸ்

**உ**டம்பு வளர்வதும் உறுப்பு நலனும் மனித வளர்ச்சி என்று உலகம் நினைத்து ஏமாந்து போகிறது. நான் ஒரு சித்திரம் பார்த்தேன். அது சூர்தாஸ் என்பவரின் படம். சூர்தாஸ் பெரிய கவி. அதைவிட அவர் பெரிய பக்தர். அவர் கண் இல்லாதவர். ''இந்தப் பாழான உலகத்தைப் புறக்கண் கொண்டு பார்த்து மயங்க மாட்டேன். கருணை ஒளி வீசும் எம்பெருமான் திருவுருவத்தை அகக் கண் கொண்டு பார்ப்பேன்'' என்று இருந்தார் போலும்! அவர் உடம்பு எலும்பெடுத்து வளப்பமின்றி இருக்கிறது. புறப்பார்வையே இன்றிக் கையில் தம்புராவை மீட்டிக் கொண்டு பாடுகிறார். அவருக்கு முன்னே உட்கார்ந்து கொண்டு கண்ணன் மிகவும் பய பக்தியோடு அவர் பாட்டைக் கேட்கிறான். இதைப் படம் காட்டுகிறது. வெளியே அமர்ந்து கேட்டது போதாது என்று கருதி அந்த இருதயத்தின் பெருமையை உணர வேண்டுவான் போல அந்தச் சரீரத்திற்குள்ளும் நின்று கேட்கிறான். அதைப் படத்தில் காண முடியாது. பார்ப்போர்களின் மனம் உருகும் வகை யில் அந்தப் படம் இருக்கிறது. அவரது உடம்பு மெலிவானது; அவருக்குப் புறக் கண் இல்லை. ஆனால் அவர் உள்ளத்திலே தான் எவ்வளவு பெரிய கண்! கண்ணனையே கண்ணாகக் கொண்ட உடம்பு அல்லவா அது?

**''உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்**
**கச்சாணி யன்னார் உடைத்து''**

என்கிறார் வள்ளுவர். ''புறக்கண்களால் பார்க்கும் உருவத்தைக் கண்டு மயங்காதே. தேர் பெரியது. அச்சாணி எவ்வளவு சிறியது! அதுபோன்ற மனிதர்கள் இருக்கிறார்கள்'' என்று கூறுகிறார். அகத்தியர் வரலாற்றைப் பாருங்கள். எம்பெருமானின் திருமணத்தின் போது வானவர்களும், பூவுலகத்தினரும் திருமணக் கோலம் கண்டுகளிக்க இமயமலைக்கு வந்து கூடிவிட்டார்கள். வடநாடு தாழ்ந்ததால் தென்னாடு உயர்ந்துவிட்டது. இதைச் சமன்படுத்த உருவத்தால் சிறுத்த அகத்திய முனிவரை எம்பெருமான் தென்னாடு அனுப்பவில்லையா? சின்னஞ்சிறு குறுமுனிவர், தமிழ் நூலை நமக்குத் தந்த குரு முனிவர், உருவைக் கண்டு எள்ளாமை வேண்டும் என்பதற்குச் சான்றாக நிற்கிறார். அகத்திய முனிவர் தனியாகத் தான் தென்னாடு வந்தார். நிலம் சமன்பட்டு விட்டது. அது அவரது உடம்பின் வல்லமையா? அவர் உள்ளம் பெரியது. மனத்தின் வன்மை அதிகமாக, திடம் அதிகமாக, பண்பு செறிந்து வளர்ந்து நிற்கும்.

## முயற்சியும் பண்பும்

நம்முடைய முயற்சிகள் பயன்பெற்று வந்தால் நம் பண்பு வளர்ந்து வரும். மனத்தில் உறுதி தோன்றும். ஆண்டவனது அருள் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றும். ஆண்டவன் இருக்கிறான் என்று பிறர் சொல்லக் கேட்கிறோம். நமக்கு அதில் முழு நம்பிக்கை இல்லை. சந்தேகம் இருந்து கொண்டே இருக்கிறது. அந்தச் சந்தேகம் கழல வேண்டும். ஆண்டவன் இருக்கிறான்; காணாத குறை நம்முடையதே. அவன் எங்கே, எங்கே, எங்கே என்ற கேள்வி தொடங்கும்போது நம்பிக்கை உதயமாகும். கேள்விக் குறியைப் போட்டுக் கொண்டே போனால் பயன் இல்லை. கேள்விக்குப் பதிலை அளிக்கும் குருநாதரை அண்டி, அவர் காட்டும் நெறியிலே, சீலத்திலே ஒழுகி நின்றால் பயன் உண்டு. அப்பால், இனி நமக்குப் பயம் இல்லை என்ற நினைவு உறுதிப்படும். எடுத்த பிறவியையும் சீரணம் பண்ணி விட்டோம் என்ற எண்ணம் திடப்படும்.

மனத்திடம் என்பது ஒரு நாளில் வராது. உடற்பயிற்சி செய்பவர்களுக்கு உடல் வன்மை ஒரே நாளில் வந்துவிடுகிறதா? பயிற்சியை விடாமல் செய்யச் செய்யப் படிப்படியாகத்தான்

உடல் வலுப்பெறுகிறது. அதைப் போலவே மனம் திடப்படவும் படிப்படியாக விடாமல் சாதனம் செய்ய வேண்டும். இறைவன் திருவருளை நம்பியிருந்தால் இடையில் தடை ஏற்படாது. பல காலமாக உலகத்து மாயையில் சிக்கிச் சுழன்ற மனத்தில் படிந்துள்ள பழைய வாசனை மறைய வேண்டுமென்றால் பல கால உழைப்பு வேண்டும். அந்த உழைப்பினால் பழைய வாசனை அற்றுப் போகச் செய்து, மனத்தையே நாசம் செய்பவர்கள் ஜீவன் முக்தர்கள். அத்தகைய நிலை எய்வதற்குரிய நெறியில் முதல்படி இறைவனிடத்தில் கொள்ளும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையினால் திடம் வரும். ஒன்றை ஒன்றாகப் பார்த்து மயங்குகின்ற தன்மை ஒழியும். அந்தத் திடம் உண்மையாக இருந்தால் அதைப் புணை யாகக் கொண்டு பிறவிப் பெருங் கடலை நீந்தி விடலாம்.

அருணகிரிநாதர் சென்ற பாட்டிலே, ''நான் வெங்காம சமுத்திரத்தைக் கடந்து விட்டேன்'' என்று சொன்னார். அதைக் கடப்பதற்கு உரிய புணையாகிய சித்தத் திடம் அவருக்கு எப்படி உண்டாயிற்று? இந்தக் கேள்விக்குரிய விடையைத் தம் மனத்தைப் பார்த்துச் சொல்வது போல, இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

மனம் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யவில்லை. எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்கிறது. இப்படி உள்ள மனத்தைப் பார்த்து,

**மனமே, எங்ஙனே முத்தி காண்பதுவே?**

என இரங்குகிறார். மனம் என்ன செய்கிறது?

**பாலென் பதுமொழி, பஞ்செஎன் பதுபதம்**
**பாவையர்கண் சேல்என்பதாகத்**

திரிகின்றது. அப்படியானால் அருணகிரியார் பாவையர் மொழியைக் கேட்கின்ற காதைப் பார்த்துச் சொல்லி இருக்கலாமே; பாவையர் மேனியைத் தொட்டுப் பார்க்கின்ற கையைப் பார்த்துச் சொல்லி யிருக்கலாமே; பாவையர் அழகைப் பருகுகின்ற கண்ணைப் பார்த்துச் சொல்லி இருக்கலாமே. மனத்தைப் பார்த்து ஏன் சொல்கிறார்?

## மனமும் பொறிகளும்

**க**ண் பார்க்கிறது; ''நான் பார்த்தேன்'' என்று சொல்கிறோம். காது கேட்கிறது; ''நான் கேட்டேன்'' என்று சொல்கிறோம்.

*கண்ணையும் காதையும் கருவியாகக் கொண்டு 'நான்' என்பது பார்க்கிறது; கேட்கிறது. ஐந்து பொறிகள் மாத்திரம் இருந்து உயிர் இல்லாவிட்டால் இவை இயங்கா. உயிரும், கண்ணும் இருந்தால் பார்க்கலாம் என்று சொல்லலாமா? எதையோ ஒன்றை நினைத்துக் கொண்டு ஒருவன் போய்க் கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிரிலே போகின்ற நம்மை அவன் பார்ப்பது இல்லை. நம் மேல் அவன் கண் படாமல் இல்லை. ஆனால் அவன் மனம் கண்ணோடு ஒன்றி நம்மைப் பார்க்கவில்லை. கண்ணை வாயிலாகக் கொண்டு மனம் இயங்கவில்லை. மனம் எதையோ நினைத்துக் கொண் டிருக்கிறது.*

*மனம் ஆகிய ஒன்று, கண் காது ஆகிய இந்திரியங்களை வாயிலாகக் கொண்டு இயங்கும்போதுதான் பார்க்கிறேன், கேட் கிறேன் என்றெல்லாம் சொல்கிறான். அதனால் எல்லாவற்றுக்கும் மூலமாக இருக்கும் மனத்தைப் பார்த்து, ''நீ இப்படிச் செய்ய வில்லையே!'' என்று சொல்கிறார்.*

*அது ஒரு காரியம் செய்கிறது; மற்றொரு காரியம் செய்ய வில்லை. அது செய்கிற காரியம் என்ன?*

**பாலென் பதுமொழி, பஞ்சென் பதுபதம்,**
**பாவையர்கண் சேல்என்ப தாகத் திரிகின்றநீ.**

*நீ என்று மனத்தைச் சுட்டுகிறார். அது எப்போதும் திரிந்து கொண்டே இருக்கிறது. ஒன்றை நினைக்காமல் பலபல பொருள் களைப் பற்றி நினைந்து திரிகின்றது. மனத்திற்கு அதுதான் வேலை. மனம் வாயுவின் பகுதி; ஆகையால் அது சலித்துக் கொண்டே இருக்கிறது. ஒரு கணம் கூட ஒரு நிலையில் நிற்பதில்லை.*

*மனத்தை நிறுத்துவது எளிய காரியம் அன்று. பூனையை யானை ஆக்கி விடுகிறேன் என்பான். யானையை ஒட்டகமாக்கி விடுவேன் என்பான். இந்திர ஜாலவித்தை காட்டுவேன் எனப் பேசுவான். ஆனால் ஒன்றையும் பேசாமல், நினையாமல் மனம் ஓய்வாக நிற்க ஒருகணம்கூட இருக்கமாட்டான்.*

***''சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்***
***மனம் இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே?''***

*என்று தாயுமானவர் பாடுகிறார். மனத்தை அடக்கும் சித்தியே மிக மிகப் பெரிய சித்தி. இறைவன் திருவருளினால் அது கைகூட*

வேண்டும். அந்தச் சித்தி கைவரப் பெற்றால் அப்போது உலகம் அவனுக்குள் அடங்கிவிடும்; இந்திரியங்கள் அடங்கிவிடும்.

## மடை மாற்றுதல்

மனமோ எப்போதும் திரிந்து கொண்டே இருக்கிறது. அதை எப்படி அடக்குவது? பலவற்றைச் சிந்தித்துக் கொண்டே இருக்கும் மனத்தை, ''எதைப்பற்றியும் சிந்திக்காதே'' என்று எவ்வளவு பலமான கூட்டில் அடைத்தாலும் அது நில்லாது. சிந்திக்கின்ற மனத்தைச் சிந்திக்காதே எனச் சொல்வதைவிட, ''நல்லவற்றைச் சிந்தி'' என்று சொல்வது நலம். ''இறைவன் சம்பந்தமான விஷயங் களைச் சிந்தி'' என்று சொல்ல வேண்டும். அதன் போக்கிலே விட்டு மடைமாற்றிவிட வேண்டும். அதனால்தான் முன்பு,

''தடுங்கோள் மனத்தை''

என்று சொன்னார், தடுப்பதாவது மடை மாற்றிடுவது. மடை மாற்றிவிட்டு மனத்தைப் போகவிட்டால், இறைவன் என்ற முளையைச் சுற்றியுள்ளவற்றையே நினைக்கச் செய்தால், மெல்ல மெல்ல உணர்வு வரும். இறைவன் திருவடியில் நின்று நிலைத்துத் தூங்கும் நிலை வரும். இறைவனோடு தொடர்புடையவற்றை நினைந்து அது மெல்ல மெல்லக் குறைய, இறைவனையே நினைக் கின்ற நினைப்பு வரும்போது மனம் நிற்கும். அதை மனோலயம் என்பர். மனோலயம் வருவதற்கு முன், பார்க்கின்ற பார்வை, கேட்கின்ற மொழி, செய்கின்ற செய்கை யாவும் இறைவன் நினைப்பிலே கொண்டுபோய் விடுவனவாக அமைய வேண்டும்.

## அநுபவ வேறுபாடு

பார்க்கின்ற பொருள் ஒன்றாக இருந்தாலும் பார்க்கின்றவர் களுக்கு ஏற்றபடி அநுபவம் இருக்கிறது. ஒரு குளத்தில் தாமரை மலர்ந்திருக்கிறது. அந்தப் பக்கம் போகிற ஒரு பிள்ளை அதைப் பார்க்கிறான்; பறிக்கிறான்; இதழ் இதழாகக் கிள்ளிக் கசக்கி எறிந்துவிட்டுப் போகிறான். ஓர் ஓவியன் வருகிறான்; அதன் வண்ணத்தையும் மலர்ச்சியையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து அப்படியே ஓவியம் தீட்ட உட்காருகிறான். ஒரு கவிஞன் பார்க் கிறான்; ''இந்தத் தாமரையைப் போலல்லவா மிக்க எழிலாக,

மலர்ச்சியாகப் பெண்களின் முகங்கள் இருக்கின்றன?'' என்று வருணிக்கிறான். அதையே ஒரு பக்தன் பார்க்கிறான்; ''இன்பத் தேனைச் சொரிந்து பக்தர்களை வா, வா என்று வருந்தி அழைக் கின்ற எம்பெருமானுடைய திருவடிகளைப் போலல்லவா வண்டு களை அழைக்கும் அரவிந்தம் இருக்கிறது?'' என்று பரவசமாகி நிற்கிறான். நினைக்கின்ற நினைப்பை நல்லதாக்கிக் கொண்டவன் பக்தன். ஆதலால் தாமரையைப் பார்க்கும்போது எம்பெருமானுடைய திருவடி மலர்களை நினைக்கிறான்.

இப்படி எங்கெங்கோ போகின்ற நினைவை மடைமாற்றி இறைவனைப்பற்றி நினைக்கப் பழகினால் கடைசியில் நேரே இறைவனை நினைக்கிற நிலைக்கு மனம் வந்து விடும்.

## குழந்தையும் பசியும்

**சி**ன்னக் குழந்தை; விளையாட்டுப் புத்தியுள்ள குழந்தை; எப்போதும் வீதியிலே விளையாடிக் கொண்டிருக்கிறது. சாப்பிடு கிற வேளையில்கூட உள்ளே வராமல் விளையாடுகிறது. தாய் கிண்ணத்தில் உணவைப் பிசைந்து எடுத்துச் சென்று குழந்தையை இழுத்துவந்து ஊட்டுகிறாள். ஒரு வாய் சாப்பிடுகிறது; மறுபடி யும் ஓடிவிடுகிறது. திரும்பவும் இழுத்துவந்து ஊட்டுகிறாள். விளையாட்டுத் தோழர்கள் போய்விடுவார்களே என அந்தப் பிடியை வாங்கிக் கொண்டு ஓடப் பார்க்கிறது. ஓர் அடி அடித்து, ''அவர்கள் இருப்பார்கள்; சாப்பிட்டுவிட்டுப் போ'' என்று தாய் அதட்டுகிறாள். தாய்க்குப் பயந்துகொண்டு உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் வாயை வாயைத் திறக்கிறது குழந்தை. ஆனால் அதன் கண் வீதியிலேயே இருக்கிறது. ''உம்'' எனத் தாய் அதட்டுகிறாள். அவள் முகத்தைப் பார்க்கிறது குழந்தை. அவள் கொடுக்கும் உணவை ஆடாமல் அசையாமல் சாப்பிடுகிறது.

அந்தக் குழந்தை சாப்பாட்டின் சுவையை ரசித்துச் சாப்பிடப் பழகிவிட்டால் அப்புறம் மிக்க பசி வந்த பொழுது தாயைச் சுற்றிச் சுற்றி அடுக்களையில் வருமே தவிர, விளையாடப் போ, போ என்று சொன்னாலும் போகுமா? யார் வந்து கூப்பிட்டாலும் போகாது. ''இன்னும் போடு; இன்னும் போடு'' என்று சொல்லிக் கொண்டே உண்ணும்.

அதைப் போலப் பலபலவற்றை நினைத்துத் தாவித்தாவி ஓடிக்கொண்டிருக்கும் குழந்தையாகிய மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மடைமாற்றிவிட்டு இறைவன் சம்பந்தமான பொருளை நினைக்கச் செய்தால், பிறகு இறைவனையே நினைக்கவும், நினைத்து உறங்கவும் பழகிவிடும். பார்க்கின்ற பார்வையில், கேட்கின்ற மொழியில், செய்கின்ற செய்கையில் எப்படி இறைவன் நினைவு வரவேண்டும் என்பதைத்தான் அருணகிரியார் இந்தப் பாட்டில் நமக்குச் சொல்கிறார்.

எந்தக் காரியத்தைச் செய்தாலும், எந்த இடத்திலே இருந்தாலும் நினைப்பு நமக்கு எதில் ஊன்றி இருக்கிறதோ அதுவே முந்திக்கொண்டு நிற்கும்.

## செருப்பு நினைவு

ஒரு வைணவர் பல நாள் செருப்பு இல்லாமல் வருந்தினார். ஒன்று வாங்க வேண்டுமென்று ஆசை. வறுமையினால் வாங்க இயலவில்லை. கடைசியில் வாங்கிவிட்டார். அதைப் போட்டுக் கொண்டு வரும்போது பெருமாள் கோயிலைப் பார்த்தார். பக்தி உடையவர் ஆகையினால் உள்ளே போய்ப் பெருமாளை சேவிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ஆனால் காலிலே போட்டிருக்கும் புதுச் செருப்பை எங்கே வைப்பது? யாரிடமாவது ஒப்படைத்துப் போகலாம் என்றால் யாரும் இல்லை. சட்டெனக் கழற்றி வெளியே வைத்துவிட்டு உள்ளே போனார். விரைவில் வந்துவிடலாமென்று போனார். பட்டர், பெருமாளுக்குத் தீபாராதனை செய்ய நேரம் செய்தார். இவர் நினைவோ வீதியில் கிடக்கும் செருப்பில் இருக்கிறது. என்ன செய்வார்? தீபாராதனை ஆயிற்று. சடகோபம் சாதிக்க நாழிகையாயிற்று. ''சீக்கிரம் செருப்புச் சாதிக்க வேணும்'' என்றார். பெருமாள் சந்நிதியில் இருந்தாலும் அவருக்குச் செருப்புமேல் ஆசை. ''செருப்பு வைத்துச் சேவடி தொழுமாப் போலே'' என்று வைணவ நூல்களில் வியாக்கியானத்தில் இந்த உதாரணம் வருகிறது.

## நினைவு முந்துதல்

மனத்திலே எந்த நினைப்பு இருக்கின்றதோ அதுவே முந்திக்கொண்டு வரும் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

இறக்கும்போது இறைவன் நினைப்பு வரவேண்டுமானால் காலையும் மாலையும் அவனை நினைந்து பழக வேண்டும். பார்க்கின்ற பொருள்களை எல்லாம் அவனோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க வேண்டும். அவன் உருவத்தைக் கண்டு கண்டு அதை உள் வாங்கிக்கொண்டு அகக் கண்ணால் பார்க்க வேண்டும்.

வீட்டில் குழந்தை அழுகிறது. தாய் ஏதேதோ வேலை செய்து கொண்டே இருக்கிறாளே தவிர அதைப் போய் எடுக்க வேண்டு மென்ற பரபரப்பு ஏற்படுவது இல்லை. ஆனால் குழந்தையின் அழுகுரல் வீதிப் பக்கம் இருந்து வருகிறது. அப்போது தாய் அலறி அடித்துக்கொண்டு ஓடுகிறாள்.

அதே போல இறைவனது அற்புதமான திருவுருவத்தைத் தியானம் பண்ண வேண்டுமென்ற ஆசை இருக்கிறவர்கள் அது நழுவும்போது மிக்க கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். நழுவாதிருக்கத் திரும்பத் திரும்ப ஓடிப்போய் அத்திருவுருவத்தைப் பார்க்க வேண்டும். பார்க்கின்ற பொருள்களிலெல்லாம் அத் திருவுருவத்தை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

***''உயிரா வணமிருந்து உற்று நோக்கி***
***உள்ளக் கிழியில் உருவெழுதி''***

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். மூச்சுக்கூட விடாமல் எம்பெருமான் திருவுருவத்தை உள்ளத்தில் வைத்துத் தியானிக்க வேண்டும்.

அவன் உருவம் காண்பதற்கான சாதனையைப் படிப்படி யாகச் செய்ய வேண்டும். அந்தத் தியானத்திற்கு எது தடையாக இருக்கிறதோ அதை நீக்குவது எளிது அன்று. ஒன்றை நினைக் கின்ற மனத்தை எதையும் நினைக்காதே என்று சொல்வதற்குப் பதிலாக, ''இதை நினை'' என்று சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்கிறார் அருணகிரியார்.

## மூன்று முறிவு

மக்களுக்குத் தாம் அநுபவிக்கும் பொருளைப்பற்றிச் சிறப் பித்துப் பேச ஆசை உண்டாவது இயல்பு. மகளிரை எத்தனையோ வகையில் வருணனை செய்யத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அருணகிரியார், ''பாவையர்கள் பேசுகின்ற மொழியைக் கேட்டுப் பால் என்கிறாயே. அவர்களது ஒயிலான நடையைப் பார்த்து அவர்கள் பாதம் பஞ்சு என்கிறாயே. அவர்களது கண்களைப் பார்த்துச் சேல் போல் இருக்கின்றன என்கிறாயே. இந்த மூன்றுக்கும் மூன்று முறிவு சொல்லித்தருகிறேன்'' என்று சொல் வாரைப் போலப் பேசுகிறார்.

அருணகிரியார் பெண்ணைப் பற்றிச் சொல்லுவன கற்புடைய மகளிரைப்பற்றி யல்ல என்று முன்பே சொல்லியிருக்கிறேன். அறத்தின் வழியே இன்பம் நுகர்பவர்களைப் பற்றி அவர் சொல்லவில்லை. காமத்தினால் அலைப்புண்டு புறப்பார்வையில் மனத்தைப் பறிகொடுத்து, இந்திரியங்களின் வசப்பட்டுத் திண்டாடிச் சந்தியில் நிற்கின்றவர்களைப் பற்றியே பேசுகின்றார். கண்ணா லும், மேனி மினுக்காலும் உலகோரின் மனத்தை மயக்கும் பாவையர்களைப் பற்றியே பேசுகின்றார்.

இத்தகைய பாவையர்கள் எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். உலகத்தில் பிறந்து வாழ்கின்ற மனிதர்கள் யாரும் இவர்கள் கண்ணில் படாமல் இருக்க முடியும் எனச் சொல்ல முடியாது. அவர் களையே பார்க்கக் கூடாது எனவும் சொல்லவில்லை. பார்க்கலாம். அதனால் தீங்கு வரக்கூடாது என்றால் என்ன செய்யவேண்டும்?

பாவையர்கள் மொழியைக் கேட்கும்போதும், ஒயிலான நடையையும் வாள் போன்ற விழியையும் பார்க்கும் போதும் இறைவனைப் பற்றிய நினைவு வரும்படி செய்ய வேண்டும். அதற்கான வழியை அருணகிரியார் இங்கே சொல்கிறார்.

பாலென் பதுமொழி பஞ்சென்
    பதுபதம் பாவையர்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற
    நீசெந்தி லோன்திருக்கை
வேல்என் கிலைகொற்ற மாயூரம்
    என்கிலை வெட்சித்தண்டைக்
கால்என் கிலைமன மே,எங்ங
    னேமுத்தி காண்பதுவே?

எப்படிப் பார்க்கவேண்டும், எப்படிப் பார்க்கக் கூடாது என்பதைத் தலைகீழ்ப் பாடமாகச் சொல்கிறார்.

## எதிர் நிரனிறை

இலக்கணத்தில் நிரல்நிறை என்று ஒன்று உண்டு. ''நான் டவுனுக்குப் போய், மார்க்கெட்டுக்குச் சென்று, திருவல்லிக்கேணி வந்து, குடை, உருளைக்கிழங்கு, நாமக்கட்டி எல்லாம் வாங்கி வந்தேன்'' என்றால், ''டவுனுக்குப் போய்க் குடை வாங்கி, மார்க்கெட்டுக்குச் சென்று உருளைக் கிழங்கு வாங்கி, திருவல்லிக் கேணி வந்து நாமக்கட்டி வாங்கி வந்தேன்'' என்றாகும். இப்படிக் கூட்டுவதை **நேர் நிரல் நிறை** என்று இலக்கணத்தில் சொல்வர். இதற்கு எதிராக இருப்பதை எதிர் நிரனிறை என்பர். அருண கிரியார் எதிர் நிரனிறையை வைத்து இப்பாட்டைச் சொல்கிறார்.

நமக்கு நஞ்சாக இருப்பதை, நாம் செய்யக் கூடாததை முதலில் சொல்லி, நமக்கு நன்மை அளிப்பதை, நாம் செய்ய வேண்டியதைப் பின்னே எதிர் நிரனிறையாகச் சொல்கிறார்.

எல்லாப் பெண்களைப் பார்க்கும்போதும் காம உணர்ச்சி உண்டாவதில்லை. தாயாகப் பார்க்கும்போதும் சகோதரியாகப் பார்க்கும்போதும் உள்ளத்தில் தீய கருத்து உண்டாகாது. ஆகை யால் பெண்களைப் பார்ப்பதில் தீமை இல்லை. பார்க்கின்ற போது நினைக்கின்ற நினைப்புக்கு ஏற்ப நன்மை, தீமை ஆகிய விளைவுகள் இருக்கின்றன. காம ஊற்றைத் திறக்கின்ற அதே கண்தான் பக்தி ஊற்றையும் பொங்கச் செய்யும். ''பெண்களின் கண்ணைப் பார்த்துச் சேல் எனச் சொல்வதற்குப் பதிலாகச் செந்தில் ஆண்டவன் திருக்கரத்தில் உள்ள வேல் என்று சொல்'' என்பது அருணகிரியார் உபதேசம்.

**பாவையர்கண்**
**சேல்என்ப தாகத் திரிகின்ற**
**நீசெந்தி லோன்திருக்கை**
**வேல்என்கிலை.**

நாம் நினைக்கின்ற நினைப்பு, பேரின்பத்திற்கு வழிகோலு வதாக இருக்கவேண்டும். பாவையர்களைப் பார்க்கின்ற பார்வை தவறானது அல்ல; ஆனால் எண்ணம் தவறானதாக இருக்கக் கூடாது; நல்லதாக இருந்தால் நன்மை பயக்கும்.

*'அவர்கள் கண்ணைப் பார்த்துச் சேல் என்கிறாயே. வாள் விழி, வேல் விழி என்று வருணிப்பது இல்லையா? வேல் என்று நினை; சாதாரண வேலை நினைக்காதே; எம்பெருமான் திருக் கரத்தில் உள்ள வேலை நினை. செந்திலோன் திருக்கை வேல் என்று நினைத்தால் காமம் தோன்றாது.*

*'அப் பாவையர் பாதம் மென்மையாக இருக்கிறது, பஞ்சு போல் இருக்கிறது என்கிறாயே. அது நடக்கும் பாதம் அல்லவா? பெண்களின் நடை மயிலின் நடை என்பார்களே. மயில் மென்மை யாக இல்லையா? பதம் பஞ்சு என்று நினைப்பதைத் தவிர்த்துக் கொற்ற மாயூரம் என்று நினைக்கக் கூடாதா?'*

பஞ்சென் பதுபதம்....
என்பதாகத் திரிகின்ற
நீசெந்திலோன்...கொற்ற மாயூரம்
என்கிலை.

*'அவர்களது இனிய மொழியைக் கேட்டுப் பால் என்கிறாயே. அப் பாவையரது மொழியின் இனிமை உனக்குப் பாலைத்தானே நினைவுறுத்துகிறது? எம்பெருமானின் திருவடியில் அணிந்துள்ள தண்டையின் இனிமையான ஒலி உன் நினைவுக்கு வரவில்லையே! மொழியின் ஒலியில் முருகன் தண்டை ஒலியை நினைக்கலாமே.'*

பால்என் பதுமொழி....
என்பதாகத் திரிகின்ற நீசெந்திலோன்
வெட்சித் தண்டைக் கால்என்கிலை.

## *அவகாமமும் சிவகாமமும்*

*பாவையர்களைக் காண்பது தவறு அல்ல. அவர்களது இனிமையான மொழியைக் கேட்பதும் தவறல்ல. கேட்பதாலும், பார்ப்பதாலும், தொடுவதாலும் நமக்குப் பால், சேல், பஞ்சு ஆகியவை நினைவுக்கு வந்தால் உள்ளத்தில் அவகாமந்தான் எழும்பும். அவகாமம் ஒழிந்து சிவகாமம் எழவேண்டுமானால் செந்திலோன் திருக்கை வேல், கொற்ற மாயூரம், வெட்சித் தண்டைக் கால் நினைவுக்கு வரவேண்டும். உலகிலுள்ள பொருள் களை நம்முடைய இன்பத்திற்கு உரிய பொருளாகப் பார்க்கும் வரையில் நம் உள்ளத்தடத்தில் அவகாமந்தான் பொங்கும். அவை*

யாவும் நமக்கு இறைவனோடு தொடர்புடைய பொருள்களின் நினைவை எழுப்புமானால் சிவகாமம் உண்டாகும். அதனால் தானே ஞானிகள் எல்லாப் பொருளையும் சிவார்ப்பணம் செய்தார்கள்?

## வரகுணன் வரலாறு

வரகுண பாண்டியன் அப்படிச் செய்தான். அவனுக்குத் திருமணம் நடந்தது. தனக்கு வாய்த்த மனையாட்டியை அவன் தனக்குரிய இன்ப அநுபவப் பொருளாகக் கருதவில்லை. தன்னிடமுள்ள எல்லாப் பொருளையும் சிவார்ப்பணம் செய்தவன் அவன். மனைவியைக் கண்டவுடன் அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்று ஆண்டவன் சந்நிதானம் போய், ''இந்த அழகிய பொருள் உனக்கு உரியதாகட்டும்'' என்றான். சிவலிங்கம் பிளக்கவே உள்ளே இறங்கச் செய்துவிட்டு, இறைவன் ஏற்றுக் கொண்டான் என்ற திருப்தியுடன் வந்தான்.

மறுநாள் காலை ஆலயத்திற்குச் சென்ற குருக்கள் கர்ப்பக் கிருகத்தைத் திறந்து பார்த்தார். லிங்கத்திற்கு மேலே ஒரு பெண்ணின் கரம் நீட்டிக்கொண்டிருந்தது. அவருக்கு அச்சம் உண்டாகிவிட்டது. பேயோ, பிசாசோ என்று அலறிக்கொண்டு அவர் ஓடினார். மற்றவர்களும் கேட்டுத் திகிலுற்று ஓடினார்கள். இச் செய்தி வரகுண பாண்டியன் செவிக்கு எட்டிற்று. அவன் ஆலயத்திற்கு ஓடி வந்தான். எம்பெருமான் தலைக்கு மேலே தெரிகின்ற கையைப் பார்த்துத் தன் தலையில் அடித்துக்கொண்டு, ''ஆண்டவனே, இந்தப் பாவி செய்த அபசாரத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்று அலறினான். பக்கத்தில் நின்றவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''ஆண்டவனே, உனக்கு நிவேதனமாகும் பொருளை நான் எப்படிச் சமர்ப்பிக்க வேண்டுமோ அந்த முறையில் தவறிவிட்டேனே! கையைப் பற்றி அழைத்துவந்தது தவறு என்று தெரியவில்லையே! என் கைப்பட்ட அது எச்சில் என்று ஒதுக்கிவிட்டாயோ?'' என்று சொல்லி அழுதான். உடனே அந்தக் கை உள்ளே போய்விட்டதாம்.

அத்தகைய பக்தி நம் உள்ளத்தில் தோன்றினால் அவகாமம் தோன்றாமல் சிவகாமம் வரும். ஆண்டவன் அருளுக்கு உரியவர்கள்

ஆவோம். காணும் பொருளிலே இறைவன் நினைவை வருவித்துக் கொள்ள வழி கண்டுபிடிக்க வேண்டும்.

## எங்ஙனம் காண்பது?

**பா**வையர் கண்ணைப் பார்த்துச் சேல் எனச் சொல்லித் திரிகின்றதை ஒழித்துச் செந்திலோன் திருக்கை வேல் என நினைத்து உருகினால், பாவையர் பதங்களைப் பார்த்துப் பஞ்சு எனச் சொல்லித் திரிகின்றதை ஒழித்துக் கொற்ற மாயூரம் என எண்ணி வியந்தால், பாவையர் மொழியைக் கேட்டுப் பால் எனச் சொல்லித் திரிகின்றதை ஒழித்துச் செந்திலோன் கால் வெட்சித் தண்டை எழுப்பும் ஒலி எனக் கேட்டு நின்றால் அந்த நினைவு நம்மை மேலே ஏற்றிவிடும். அவன் திருக்கை வேலைப் பார்த்து, கொற்ற மாயூரத்தைப் பார்த்து, அவன் வெட்சி மலரணிந்த காலில் உள்ள தண்டை ஓசையைக் கேட்டு அவன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு தூங்கலாமே. தூங்குவதாவது தியானம் செய்தல். அதனால் இந்திரியங்கள் அடங்கி, மலம் ஒழிந்து, இன்ப துன்பமில்லாப் பெருவாழ்வாகிய முத்தி கிடைக்கும். அப்படிச் செய்யாமல் மனம் திரிகிறது.

**மனமே, எங்ஙனே முத்தி காண்பதுவே?**

''இப்படி இருந்தால் மனமே, உனக்கு எவ்வாறு முத்தி கிட்டும்?'' என்று கேட்கிறார் அருணகிரியார்.

ஆண்டவனது திருவடியைப் பற்றிக் கொள்பவர்களுக்கு அருள் கிடைக்கும். அதைப் பார்த்து, வணங்கி, அத்திருவடியிலேயே சிந்தனையைச் செலுத்தி உறங்குபவர்களுக்கு முத்தி கிடைக்கும். அவன் அருளை நாடி ஓடுகின்ற தவ முனிவர்கள் அவன் திருவடி எங்கே என்று தேடிப் பிடித்துக் கொள்வார்கள். பக்குவம் இல்லாதவர்கள் நெடுந்தூரத்தில் இருந்தாலும், கேட்டுத் திரும்பிப் பார்த்தாவது பிடித்துக் கொள்ளட்டும் என்பதற்காக அவன் தன் திருவடிகளிலே தண்டையை அணிந்திருக்கிறான். 'ஜல் ஜல்' என்ற அந்தத் தண்டை ஒலியைக் கேட்டவுடன், ''அதோ, அவன் திருவடி'' என ஓடிவந்து பற்றிக்கொள்ளலாம். வெட்சித் தண்டைக் காலைக் கடைசியில் வைத்தார், அதுவே இறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டியதாதலால்.

எவை நம்மை மயலில் ஆழ்த்தும் என்று எண்ணி அஞ்சு கிறோமோ அவற்றைக் காணும் முறையை மாற்றிக் கண்டால் அவைகளே முருகனை நினைக்க வழிகோலும். இந்தத் தந்திரத்தை அருணகிரியார் சொல்லித் தருகிறார். "எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லாமல், வேறு விதமாகச் சொல்லி அவகாமத் திற்கு உள்ளாகி, இந்திரியங்களின் ஆட்சிக்கு உட்பட்டுத் துன்புற்றுத் திரிகின்றாயே. உனக்கு எப்படி இன்ப துன்பமில்லாத முத்தி வாழ்வு கிட்டும்?" என்று தம் மனத்தைப் பார்த்து இரங்குவார் போலப் பாடுகிறார். அப்படித் திரிகின்ற நாம் உய்வு பெற வேண்டுமென்றே அவ்வாறு பாடுகிறார்.

★

**பால்என் பதுமொழி, பஞ்சென்**
**பதுபதம், பாவையர்கண்**
**சேல்,என்ப தாகத் திரிகின்ற**
**நீசெந்தி லோன்திருக்கை**
**வேல்என் கிலை;கொற்ற மாயூரம்**
**என்கிலை; வெட்சித்தண்டைக்**
**கால்என் கிலை;மன மே!எங்ங**
**னேமுத்தி காண்பதுவே?**

*(மனமே! 'பெண்களின் சொல் பால் என்று சிறப்பித்துச் சொல் வதற்குரியது; அவர்களுடைய அடி மென்மையுடைமையால் பஞ்சு என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது; அவர்கள் கண் சேல் போன்றது' என்று சொல்லியும் எண்ணியும் திரிகின்ற நீ, அவற்றைக் கண்டு திருச்செந்தில் முருகனுடைய அழகிய கையில் உள்ள வேல் என்று கூறவில்லை; அவனுக்குரிய வெற்றியையுடைய மயில் என்று கூறவில்லை; அவனுடைய வெட்சியையும் தண்டையையும் அணிந்த திருவடி என்று சொல்லவில்லை; நான் எவ்வாறு முத்தியின்பத்தை நுகர்வது?*

*என்பது – என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுவது. இனிமைக்குப் பால் உவமை. மென்மைக்குப் பஞ்சு உவமை. பாவையர் என்பதை மொழி, பதம் என்பவற்றிற்கும் கூட்டுக. என்பதாக – என்று; இது தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருப்பதை நினைந்தபடி. செந்திலோன் மாயூரம், செந்திலோன் கால் என்று பின்னும் கூட்டுக.*

*மொழி பால் என்று சொல்லாமல், வெட்சித் தண்டை ஒலியை எண்ணி அந்த நினைவின் தொடர்பால் காலைக் கூறலாம்; அப்படி நீ*

*செய்யவில்லை. பதம் பஞ்சு என்று கூறாமல், மென்மைக்கு இருப்பிட மாகிய மயிலைக் கூறலாம்; அப்படியும் நீ செய்திலை. கண் சேல் என்னாமல், வேல் என்று கூற வாய்ப்பு உண்டு; அப்படியும் செய்திலை.*

*இவ்வாறு எதிர் நிரனிறையாகக் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். மாயூரம் – மயில். மயூரம் என்பது இங்கே மாயூரம் என நின்றது: ''கேயூர வாகும் கிரிதனையும் மானும்ஒரு, மாயூரம் நீங்காத வாமமும்'' (திருவானைக்காவுலா, 233) என்று பிறரும் ஆள்வர். வெட்சியும் தண்டையும் அணிந்த கால். காண்பது – நுகர்வது.)*

# குடிலும் வீடும்

இறைவன் திருவருளில் ஈடுபட்டுப் பெறுவதற்கு அரிய பேற்றைப் பெற்ற அருணகிரிநாதர், உலகத்து மயலில் ஆழ்ந் திருக்கும் மக்களும் எவ்வாறு அவன் திருவருளில் ஈடுபட்டு இன்பத்தைப் பெற்று உய்யலாம் என்பதற்கு மிக எளிதான வழி ஒன்றைச் சொன்னார். அதனைச் சென்ற பாட்டில் பார்த்தோம்.

## பொறி இன்பம் நிலை அன்று

"இந்த உடம்போடு வாழும் வாழ்க்கை பிரத்தியட்சமாக இன்பத்தைத் தருவதாக இருக்கிறதே! இப்போது அநுபவிக்கும் இன்பத்தைக் காட்டிலும், எம்பெருமான் திருவருள் சித்திப்பத னால் பேரின்பம் உண்டாகும் என்பது மெய்யென்றால், இதை விட்டு அதைப் பெறுவதற்குச் செய்கின்ற முயற்சி வீண் அன்று. ஆனால் அது உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்? கண்ணால் பார்த்து அநுபவிக்கிற இன்பத்தை விட்டு விட்டுக் கண்ணாலே காண முடியாத ஒன்றை அடைய ஏன் முயற்சி செய்யவேண்டும்?" என்ற கேள்வி பலரிடத்தில் உதிக்கும். அத்தகைய கேள்வி உடம்பில் முறுக்கு இருக்கும் வரையில்தான் எழும். உலகத்தில் பல காலம் வாழ்ந்தாலும் சில காலந்தான் இந்திரியங்களின் வாயிலாகச் சுகத்தை அநுபவிக்க முடியும்.

குழந்தைகளாக இருக்கும் பருவத்தில் இன்ப துன்பப் பதிவு கள் ஏற்படுவது இல்லை. வயசு மிகுதியாகி முதுமையை அடைந்த வர்களுக்கு ஆசை இருந்தாலும் அநுபவிக்க முடியாத நிலைமை உண்டாகி விடும். உடம்பைச் சுமப்பதே அவர்களுக்கு வெறுப்பை அளிக்கும். முதுமை முதிர முதிர உடம்பு கைவிட்டுக் கொண்டே வரும்.

## முதுமையும் தளர்ச்சியும்

மரணம் அடையும்போது உடம்பு பயன்படாமற் போகிறது என்பது இருக்கட்டும். வாழும்போதே நம் உறுப்புகள் ஒவ்வொன்

றாகச் செயலற்றுப் போகின்றன. நினைத்தால் பத்து மைல் நடக்கின்ற ஒருவன் முதுமை வந்தபிறகு அடுத்த வீட்டுக்குச் செல்வதற்குக் கூட முடியாமல் தவிப்பதைப் பார்க்கிறோம். எந்தப் பொருளை எடுக்க வேண்டுமானாலும் யாரேனும் ஓர் ஏவலாளனைக் கூப்பிடுகிறான். தன்னுடைய உதவிக்குப் பிறரை அழைப்பதால் வீட்டிலுள்ளவர்களே, ''கிழத்திற்கு என்ன வேலை?'' என்று வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். அப்போது, எல்லோராலும் புறக்கணிக்கப்படுகிற நிலையில் பூமிக்குப் பாரமாக உடம்பைத் தாங்கிக் கொண்டு எதற்காக இருக்க வேண்டுமென்று நொந்து கொள்கிறான்.

உடம்பில் பலமும் கொழுப்பும் இருக்கும் வரையில் உடம்பினால் பெறுகின்ற இன்பமே பெரிதென்று தோன்றும். எத்தனைக்கு எத்தனை முதுமை கூடுகிறதோ அத்தனைக்கு அத்தனை எல்லோரும் இழிபடுத்தும் நிலைமை ஏற்படும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் உலகத்தில் வாழ்வதே பெரும் தவறு என்று இடித்துரைப்பது போல இருக்கும்.

உடம்பு எப்படி வந்ததோ அப்படியேதான் அழியும். பிறப்பதும் இறப்பதும் நம் கையில் இல்லை. பிறந்தவர் இறப்பர் என்பது மட்டும் உறுதி. பிறப்பதையும் கண்ணால் பார்க்கிறோம். பிறந்தவர்கள் இறப்பதையும் கண்ணால் பார்க்கிறோம். இதற்காகப் பெரிய சாஸ்திரங்களைப் படிக்க வேண்டாம். பிறப்பே எல்லாவிதமான துன்பங்களுக்கும் மூல காரணம் என்பதை ஒரு வகையில் உணர்கிறோம். பிறவாமல் இருந்தால் துன்பம் இல்லை என்றும் தெரிகிறது. பிறப்புக்கு மூல காரணம் பாவ புண்ணியச் செய்கைகள் எனப் பெரியவர்கள் சொல்கிறார்கள். அது தெரிந்தும் வாழ்க்கையில் நாம் செய்கின்ற பாவங்கள் எத்தனையோ!

## மூன்று குளங்கள்

**த**ண்ணீர் இல்லாத குளம் ஒன்று, தண்ணீர் இருந்தும் பாசி மூடிக் கிடக்கிற குளம் ஒன்று, பாசியே இல்லாமல் படிகம் போலத் தெளிவான நீர் உள்ள குளம் ஒன்று. இவை மூன்றும் இருக்கின்றன. தண்ணீரே இல்லாத குளத்தால் பயன் இல்லை. பகுத்தறியும் ஞானம் இல்லாத விலங்கினங்கள் இந்த இனத்தைச் சார்ந்தவை. தெளிவான தண்ணீரை உடைய குளத்தைப் போன்ற

வர்கள் ஞானிகள். அவர்கள் எப்போதும் மாயையாகிய பாசி மூடாத ஞானம் உடையவர்கள். மற்றவர்கள் பாசி மூடிய குளம் போன்றவர்கள். பாசியை அகற்றிவிட்டால் குளத்து நீர் தெளி வடையும். ஞானம் இருந்தும் மாயையினால் மூடப்பட்டு இழி செயல்கள் செய்து வருகிற நம்முடைய நிலை தண்ணீர் இருந்தும் பாசி மூடிய குளத்தைப் போன்றது.

நம் உள்ளத்தில் எப்போதும் தெளிவு இல்லை என்று சொல்வது தவறு. வாழ்க்கை நிலையற்றது என்பது நமக்கு விளங்குகிறது. சுடுகாட்டைப் பார்க்கும்போது நாமும் இறந்து படுவோம் என்று உணர்கிறோம். மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வகையுண்டு என்று பெரியவர்கள் சொல்லும்போது நமக்கு அது உண்மையெனச் சில சமயம் விளங்குகிறது. ஆனால் அதற்கு ஏற்ற வகையில் உழைக்கும் ஆற்றல் நமக்கு இல்லை. முயற்சி செய்யத் துணியும் அறிவு தோன்றினாலோ அடுத்த விநாடியே மாயை என்னும் பாசி மூடிக்கொண்டு விடுகிறது.

'ஆண்டவனே, உன் அருள் தர வேண்டும்' என்று வேண்டும் உணர்வு சில சமயங்களில் பிறக்கிறது. அது எப்போதும் உறுதியாக உள்ளத்தில் நிற்பதில்லை. அடுத்த கணத்தில் மறந்துபோகிறது. இந்த மறைப்பைத் திரோதாயி என்று சொல்வார்கள். ஆண்டவன் அருளால் இந்த மாயை நீங்க வேண்டும். அவனைச் சரண் புகுந் தால்தான் அவன் அருள் கிடைக்கும்.

## உடம்பை வெறுத்தல்

பெரியவர்கள், 'உடம்பு நிலையற்றது; இந்திரியங்களினால் பெறுகின்ற சுகங்கள் நிரந்தரமான பேரின்பத்தை அளிக்க வல்லன அல்ல' என்பதை உணர்ந்து உடம்பையே வெறுத்தார்கள்.

உடம்பு எடுப்பதையே பிறவி என்கிறோம். பிறப்பு ஒழிந்தால் துன்பமில்லை. அதை ஒழிக்க என்ன செய்வது?

**"மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி"**

என்று மணிவாசகர் கூறுவர். பிறப்பை ஒழித்துப் பேரின்பத்தை நல்கும் பிரானுடைய திருவடிகளைப் போற்றிப் பற்றிக் கொண் டார்கள் பெரியவர்கள்.

நம் வீட்டில் சமையற்கட்டு இருக்கிறது. அதற்கு அப்பால் வெகு தூரத்தில் தோட்டத்திலே கொண்டு போய்க் குப்பைத் தொட்டியை வைக்கிறோம். பண்டக சாலைக்கு அருகில் குப்பைத் தொட்டியை வைப்போமா? உடம்பும் ஒருவகை வீடுதான். இந்த வீட்டில் உணவுப் பாண்டமும், மல பாண்டமும் ஒன்றுக்கொன்று பக்கத்தில் இருக்கின்றன. மனிதன் உடம்புக்குள் போவது சம்பா அரிசிச் சோறு, மலைப் பழம், கோதுமை அல்வா என்று பலவகை. வெளிப்படுவன எல்லாவற்றுக்கும் மலம் என்று ஒரே பெயர்.

**"உண்டன மலமாம்"**

என்கிறார் பட்டினத்தார். வெவ்வேறு விலாசத்தோடு, வெவ்வேறு மதிப்போடு உலகத்தில் எத்தனை பொருள்கள் நிரம்பியிருந் தாலும் அவை யாவும் மனிதனது உடம்புக்குள் போய் வெளி வந்தால் எல்லோராலும் அருவருத்து ஒதுக்கத்தக்க மலமாகின்றன. உடம்பின் எந்தப் பாகத்திலிருந்து எது வெளிப்பட்டாலும் அதை வெறுக்கிறோம். உடம்பே ஒரு மல பாண்டம். இதைப் பட்டினத்தார் போன்றவர்கள் வெறுத்தார்கள்.

எத்தனையோ பேர் உடம்பை வெறுப்பதாகப் பேசுகிறார்கள். ஆனால் உள்ளத்தில் பல மாசுகள் கொண்டு உலாவுகிறார்கள். உள்ளம் பாசத்திலே ஊன்றிக் கிடக்கிறது. தம்முடைய பேச்சுக் களால் உடலை வெறுக்கின்ற அவர்கள் யாவருமே உள்ளத்தால் உடம்பை வெறுப்பது இல்லை.

## உடம்பை விடாமை

**உ**டலை வெறுப்பது உண்மையானால், முதுமையினாலும், நோயினாலும் அவதியுறுகிறவர்களுக்குத் தற்கொலை செய்து கொள்ளவா வழி இல்லை? அவர்களுக்கு உடம்பைவிட மனம் வரவில்லை; அதனால் உடம்பினால் துன்பம் உண்டானாலும் அதைத் தாங்கிக்கொண்டு வாழ்கிறார்கள்.

குடியிருக்கும் வீட்டில் ஒருவனுக்குப் பல தொல்லைகள். வீட்டுக்காரனோ தினமும் பொழுது விடிந்தால் சண்டைக்கு வருகிறான். வீட்டைக் காலி பண்ணிவிட்டுப் போ என்று விரட்டு கிறான். மழை பெய்தால் தாரை தாரையாக வீடு ஒழுகுகின்றது.

சுற்றிலும் வீட்டுக்காரன் கட்டியுள்ள மாடுகள் அசுத்தம் செய்கின்றன. ஒரே கொசு! எந்தக் கணம் அவ்வீட்டைக் காலி பண்ணிவிட்டுப் போவோம் என்று அவனும் ஆறுமாதமாகத் துடிக்கிறான். ஆனாலும் இன்னும் காலி பண்ணவில்லை. காலி பண்ணிவிட்டு எங்கே போவான்? நடுவீதியிலா சட்டி பானையை வைத்துக் கொண்டு நிற்பான்? அவன் தனக்கென்று ஒரு வீட்டைச் சொந்தமாகக் கட்டிக் கொண்டுவிட்டால், அதற்கப்புறம் ஒரு விநாடி அந்த வீட்டில் வசிப்பானா? வீட்டுக்காரன் காலி பண்ண வேண்டாம் என்று சொன்னாலும் கேட்கமாட்டான்.

அதைப்போல இப்பொழுது நாம் வசிக்கும் உடம்பாகிய வீடு துன்பத்தை அளிப்பது, இது ஓட்டைக் குடிசை என்று நமக்குத் தெரிந்தால் போதாது. இந்த ஓட்டைக் குடிசையை விட்டு வெளியேற வேண்டுமானால், இத்தகைய துன்பங்கள் இல்லாமல் பாதுகாப்புடன் வாழ்கின்ற நல்ல வீடு எங்கே இருக்கிறது எனத் தெரிந்து கொள்ள வேண்டும். அது நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டாக வேண்டும்.

வீடு என்ற சொல் விடு என்பதிலிருந்து வந்தது. விடுதல் என்பதற்குத் தங்குதல் என்று பொருள். இந்த உடம்பு உயிர் தங்குகிற வீடு; குடி. நாம் வாழ்கிற இந்தக் குடில் நமக்குச் சொந்தம் அன்று. குடியிருக்கிற வீடுதான். இதை எந்தக் கணத்திலும் விட்டு விடலாம்; என்றைக்கு நமக்கென்று ஒரு சொந்த வீடு கிடைக்கிறதோ அன்றைக்கு விட்டு விடலாம். அந்த வீடு கிடைப்பது உறுதி என்று தெரிந்து விட்டால் இந்த வீட்டைக் காலி செய்ய ஆயத்தமாக இருக்கிறோம் என்று அறிவித்துவிடலாம்.

நல்ல வீடு கட்டிக் கொண்டவன் வாடகை வீட்டில் ஒரு கணம்கூட இருக்க மனம் ஒப்பமாட்டான். உயிர் உறைவதற்குப் பேரின்ப மயமான முத்தியென்னும் வீட்டைப் பெறும் உரிமையை உடையவர்கள் இந்த உடம்பாகிய பொக்கக் குடிலில் ஒரு நாழிகை கூடத் தங்க மனம் ஒப்பமாட்டார்கள். இறைவன் திருவருளால் என்றைக்கும் நிச்சயமாக இன்பத்தைத் தருகின்ற வீடு கிடைக்குமென்ற உறுதிப்பாடு உடையவர்களுக்கு இந்த உடம்பில் வாழ்கின்ற ஒவ்வொரு கணமும் முள்மேல் இருப்பது போல் இருக்கும். மறுபடியும் இந்த உடம்பைப் பெறாமல் என்றும் மாறாத வீட்டில் வாழும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அருணகிரி நாதர் இந்த இரண்டு வீடுகளையும் பற்றிப் பாடுகிறார்.

## உடம்பு நோயும் மன நோயும்

இந்த உடம்பு நோய் இல்லாமல் இருந்தால் இதிலேயே பல காலம் வாழலாம் என்று சில சமயம் தோன்றுகிறது. உடம்புக்கு நோய் வந்தால்தான் துன்பம் என்று எண்ணுவது தவறு. நோய் இல்லாத உடம்பினாலும் துன்பந்தான். நோயினால் அலைப் புண்ணுகிறவன் அதனால் ஏற்படும் வேதனையைத் தாங்கமாட்டாமல் ஐயோ ஐயோ என்று அலறுகிறான். நோயில்லாதவனோ மனம் போன போக்கெல்லாம் போய் அதனால் வருகின்ற துன்பத்தைத் தாங்க மாட்டாமல் அலறுகிறான். இந்த உடம்பு நன்றாக இருந்தால் போதாது; மனம் நல்ல வழியில் சென்றால்தான் இன்பம் உண்டாகும்; தீய வழியில் செல்லும்போது அதன் விளைவான துன்பத்தை அநுபவித்து அல்லலுறுகிறது. ஆகவே நோய் இல்லாத உடம்பைப் பெற்றோம் என்று களிப்பது முறை ஆகாது. நோய் இல்லாத மனமும் வேண்டும்.

## பிறவித் துன்பம்

சின்னஞ் சிறிய இலைகளை விரித்துக்கொண்டு புல் முளைத்தது. அதைப் போய் ஆடு கடித்தது. அந்தத் துன்பத்தைச் சகிக்கமாட்டாத புல், ''ஆண்டவனே, என்னை இத்தனை சிறிய புல்லாக்கி விட்டாயே! அதனால் அல்லவா இந்த ஆடுகள் என்னைக் கடிக் கின்றன? பெரிய மரமாக நான் வளரும்படியாகச் செய்து விட்டால் இந்த ஆடுமாடுகளால் அழிக்க முடியாதே!'' என நினைந்து வேண்டியது. ஆண்டவன் அதை மரமாக்கிவிட்டான்.

மரமாக வளர்ந்த பிறகும் அதற்குத் துன்பம் நீங்கவில்லை. யார் யாரோ மரத்தின் மேலேறி அதன் கப்புகளையும் கிளைகளையும் வெட்டினார்கள். மரம் வலி பொறுக்க மாட்டாமல் அலறியது. அப்போது மரத்தின்மேல் ஏறியவர்கள் அங்கே ஒரு பாம்பைக் கண்டு அலறிக் கொண்டு ஓடினார்கள். அதைப் பார்த்ததும் மரத்துக்கு ஒரு நினைவு உண்டாயிற்று; ''ஆண்டவனே, புல்லாக இருந்தேன்; ஆடுகள் கடித்துத் துன்புறுத்தின. அதனால் மரம் ஆக்கச் சொன்னேன்; மரமாக்கினாய். இப்போது என் கப்புக் கிளைகளை எல்லாம் வெட்டித் துன்புறுத்துகிறார்களே! இவர் களுக்குப் பயந்து ஓடலாம் என்றால் என்னால் நகர முடிய வில்லையே! என்னை ஊர்ந்து செல்லும் பாம்பாக ஆக்கி விடக்

கூடாதா?'' என்று வேண்டிக் கொண்டது. ஆண்டவன் அப்படியே செய்தான். ''பாம்பு பாம்பு!'' என்று அதைக் கண்டு பயந்து ஓடினர் சிலர். வேறு பலர் கம்பை எடுத்துக் கொண்டு அது வெளியில் தலை காட்டும்போதெல்லாம் அடிக்க ஓடி வந்தனர். தன்னைவிட மனிதர்கள் பலமுள்ளவர்கள் என்று அதற்குத் தோன்றியது. ''ஐயோ! இவர்களுக்குப் பயந்து கொண்டு நான் எத்தனை காலம் உயிர் வாழ்வேன்! எல்லாவற்றையும் அடக்கியாளும் சக்தி உடைய மனிதனாக என்னை ஆக்கிவிடக் கூடாதா?'' என்று அந்தப் பாம்பு இறைஞ்சியது.

இறைவன் திருவருளால் அது மனிதப் பிறவியையும் எடுத்து விட்டது. அவன் ஏழையாக அன்றாட வாழ்க்கைக்கு அல்லலுற்றான். அப்போது, ''என்னைச் செல்வன் ஆக்கமாட்டாயா?'' என வேண்டினான். செல்வனான பிறகு மனக் கவலை அதிகமாகி விட்டது. அவன் தேவனானான். அப்போதும் துயரம். இறுதியில், எந்தப் பிறவி எடுத்தாலும் துன்பம் உடன் வரும் என்ற உணர்வு உண்டாயிற்று.

''ஆண்டவனே, நான் என்ன என்ன வேண்டும் என்று கேட்டேனோ அவற்றை எல்லாம் தந்தாய். ஆனால் நான் கேட்டவை எல்லாவற்றாலும் எனக்குத் துன்பமே வந்தன. என்னுடைய ஆசையினாலே எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' என்று அவ்வுயிர் வருந்துகிறது.

**''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்''**

என்று வள்ளுவர் சொல்கிறார். எந்த எந்தப் பொருளோடு மனிதனுக்குத் தொடர்பு இல்லையோ அந்த அந்தப் பொருளால் அவனுக்கு வருகிற துன்பம் இல்லை. தொடர்பு எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அவற்றினால் வருகின்ற துன்பமும் அதிகமாகும். எத்தனைக்கு எத்தனை மனசிலே பற்று இல்லாமல் ஒட்டு இல்லாமல் வாழ்கிறானோ அத்தனைக்கு அத்தனை இன்பம்.

ஒரு சின்ன புல்லாக இருந்து, பெரிய தேவனான வரையில் எந்தப் பிறவியிலாவது இன்பம் உண்டா? குறையினால் இளைத்தது தவிர நிறைவு உண்டாகவில்லை. ஆகவே குறைவு உடைய

இத்தகைய வாழ்க்கையை ஞானிகள் வெறுத்தார்கள். துன்பத்திற்கு மூலகாரணமாக இருக்கும் பிறவியையே வெறுத்து ஒதுக்கினார்கள்.

**“புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்”**

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

சென்ற பிறவிகளை நாம் பார்க்க முடியாது. வரும் பிறவி என்ன என்றும் உணர முடியாது. ஆயினும் இப்போது உள்ள பிறவியைப் பார்க்கலாம். எப்போதாவது இந்தப் பிறவியில் நமக்கு நிறைவு உண்டாகிறதா? நன்றாகப் படிக்க வேண்டுமே என்று வேதனைப்படுகிறோம். படித்துவிட்டாலோ வேலை கிடைக்கவில்லையே என்ற குறை. வேலை கிடைத்து விட்டால் காயம் ஆகவில்லையே என்ற குறை. காயம் ஆகிவிட்டால் சம்பளம் உயரவில்லை என்ற குறை. இப்படி நாளுக்கு நாள் நம் ஆசைகளும், குறைகளும் வளர்ந்துகொண்டு போகின்றனவே ஒழிய நிறைவு எப்போதும் உண்டாவதில்லை. எப்போதும் அல்லலுறுவதாகவே உணர்கிறோம். உணர்ந்தும் உடம்பைவிட்டு விட முடிகிறதா? விட்டுவிட்டால் நமக்கு என்ன கதி ஏற்படுமோ என்ற அச்சம் முந்துகிறது. “இனி நமக்குக் கிடைக்கின்ற வீடு நல்லது; துன்பம் இல்லாதது” என உணர்ந்துவிட்ட ஞானிகள் இந்த உடம்பை விடுவதற்குப் பயப்பட மாட்டார்கள்.

## மரணத்துக்கு அஞ்சாதவர்கள்

**உ**டம்பைப் பெற்றதன் பயனாக எம்பெருமான் திருவருளுக்குப் பாத்திரம் ஆகும் நெறியில் சென்று, அவன் அருளால் நிச்சயமாக இன்ப துன்பம் இல்லாத நிரதிசய ஆனந்தமயமான அவனது கழலாகிய வீடு கிடைக்கும் என்ற உறுதி உடையவர்கள், உடம்பை விட்டு உயிரைப் பிரித்து எடுத்துச் செல்கிற கூற்றுவனுக்குப் பயப் படாமல் ‘மரணப் பிரமாதம் நமக்கு இல்லை’ என்று சொல் வார்கள்;

**"தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கிஉன்னைத்**
**திண்டாட வெட்டி விழவிடுவேன்... அந்தகா"**

என்று எமனைப் பார்த்தே அறை கூவும் நெஞ்சுறுதி உடையவர்க
ஆவார்கள். அப்பர்,

**"நாமார்க்கும் குடியல்லாம்"**

என்றார்.

**"நாவலிட் டுழிதர் கின்றோம் நமன்றமர் தலைகள் மீதே"**

என்று ஆழ்வார் பேசுகிறார்.

## அருணகிரியார் வேண்டுகோள்

உடம்பாகிய பொக்கக்குடிலை, பொய்யான குடிசை
விட்டு, இறைவனது பேரருளினால் அவனது செக்கச் சிவந்த கழ
வீட்டைப் பெறவேண்டும். இதை வேண்டுகிறார் அருணகிரியார்

பொக்கக் குடிலில் புகுதா வகைப்புண்ட ரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்; சிந்துவெந்து
கொக்குத் தறிபட்டு எரிபட்டு உதிரம் குமுகுமெனக்
கக்கக் கிரிஉரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே!

பொக்கம் – பொய். "ஆண்டவனே, இன்பம் அளிப்பது
போலத் தோற்றி எப்போதும் துன்பத்தையே அளிக்கின்ற இந்தப்
பொய்யான குடில் எனக்கு இனி வேண்டாம். இந்தக் குடிலை
விட்டு வந்துவிடு என நீ சொன்னால்தான் என்ன செய்வேன்,
எனக்கு வேறு வீடு எதுவும் இல்லையே! இன்ப துன்பமற்ற
வீட்டை நீ கொடுக்க வேண்டும். உயிர் தனித்திருக்கும் இயல்பு
உடையது அல்லவே! பாசத்தோடு ஒட்டி இந்த உடம்பாகிய
வீட்டில் அது இருக்கவேண்டும். இல்லையானால் உன் பாதத்
தோடு ஒட்டி முத்தி வீட்டில் வாழவேண்டும். உன் கழலே வீடு.
அந்த வீட்டை எனக்கு நீ தந்தருள்வாய்" என்று பாடுகிறார்.

## திருவடியே வீடு

இறைவன் திருவடியே வீடாக இருக்கும். யாரேனும்
பெரியவர் இறந்துபோனால், "அவர் சிவபெருமான் திருவடி
நிழல் சேர்ந்தார்" என்று பிறருக்கு ஓலை அனுப்புவது வழக்கம்.

*அவர் முத்தி அடைந்தார் என்பதே அதற்குப் பொருள். நடராஜப் பெருமான் தன் திருவடியைத் தூக்கி ஆடுகிறான். சிலம்பு ஒலிக்கும் அத்திருவடியைப் பற்றிக் கொண்டால் உய்வு உண்டு. அந்தப் பதத்தை முக்தி என்று சொல்வர். ''முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு'' என்று சாஸ்திரம் சொல்கிறது.*

**"மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுஉற்றேன்"**

*என்கிறார் மாணிக்கவாசகர்.*

*''இனிமேல் இந்தப் பொய்யான குடிலில் புகுதா வகை செய்ய வேண்டும். துன்பமில்லாத வேறு ஒரு வீடு கொடுக்கிறேன் என்றால் எனக்கு இனி உடம்பாகிய வீடு வேண்டாம். என்றைக்குமே இன்பதுன்பமில்லாத வீடு ஒன்று வேண்டும். அது எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும். அது தாமரை போன்று இருக்கும். அதையும்விடச் செக்கச் செவேல் என்று இருக்கும். அதுதான் உன் கழல். அந்தக் கழல் வீடு தந்து அருள வேண்டும்'' என்று அருணகிரியார் முருகனைப் பார்த்து வேண்டுகிறார்.*

## 2

சிந்து வெந்து
கொக்குத் தறிபட்டு எரிபட்டு உதிரம் குமுகுமெனக்
கக்கக் கிரிஉரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

*தத்துவங்கள் எல்லாம் கடந்த நாயகனாகிய எம்பெருமான், தன்னுடைய கருணைத் திறத்தினாலே முருகனாக எழுந்தருளினான். மாயையின் பிள்ளையாகிய சூரனைச் சங்காரம் செய்து, தேவ லோகத்திற்குக் காவலனாக நின்றான். அந்தக் கதையை நினைத்துப் பாடுகிறார்.*

### *சூரசங்காரம்*

*உலகத்திற்கு வருகின்ற துன்பமெல்லாம் மாயா சம்பந்தத்தால் வருவன. சூரன் மாயையின் பிள்ளை. அவனால் எத்தனை துன்பம் உண்டாகியிருக்கும்!*

*சூரபன்மன் தேவர்களுக்கும், மற்ற நல்லவர்களுக்கும் சொல்ல முடியாத தீங்கை விளைவித்து வந்தான். அவனுக்கு ஒரு கவசம் போல் இருந்தது வெள்ளி மலை. கிரௌஞ்சாசுரனாகிய அந்த*

மலைக்குள் புகுந்துகொண்டு சூரன் இழைத்த அநீதிகள் சொல்லொணாதவை. அவனை வெற்றி கொள்வதற்காக எம்பெருமான் அவனோடு போரிட்ட வரலாற்றைக் கந்தபுராணம் மிக விரிவாகச் சொல்கிறது.

சூரன் பல பல உருவம் தாங்கி வந்து முருகப் பெருமானோடு போரிட்டான். கடலுக்குள் புகுந்து ஒளிந்து கொண்டான். சூரனுக்கு ஒளிய இடம் கொடுத்த சமுத்திரத்திற்குள் தன் வேலைச் செலுத்தி அதன் நீர் வற்றிப் போகும்படி செய்தான் முருகன்.

**சிந்து வெந்து.**

சிந்து – சமுத்திரம். அது கொதித்து ஆவியாகி விட்டது.

அடுத்தபடியாகச் சூரன் மாமரமாக நின்றான். உலகில் உள்ள மாமரத்தின் வேர் மண்ணுக்குள்ளும், கப்பு கிளைகள் எல்லாம் மேல் நோக்கியும் இருக்கின்றன. ஆனால் வேர் மேல் நோக்கியும், கிளை இலைகள் எல்லாம் கீழ்நோக்கியும் இருக்கும் வண்ணம் சூரன் நின்றான். அந்த மாமரம் எரிந்தது.

**கொக்குத் தறிபட்டு எரிபட்டு.**

கொக்கு – மாமரம். அது தறிபட்டது; துண்டாயிற்று. பின்பு எரிபட்டது.

வெறும் மாமரமாக இருந்தால் கரியும் சாம்பலும் அதிலிருந்து வந்திருக்கவேண்டும். ஆனால் உள்ளே சூரன் இருந்தான். அதனால் உதிரம் வந்தது.

**உதிரம் குமுகுமெனக் கக்க.**

**வே**ல் பட்ட மாத்திரத்தில் ரத்தம் குமுகுமெனக் கக்கிக் கொண்டு வெளியாயிற்று. மாமரமாக நின்ற சூரன் மாய்ந்தான்.

புராண வரலாறாக இருந்தால், அவன் படை அழிந்தது, பின்பு அவன் கவசம் அழிந்தது, பிறகு அவன் அழிந்தான் என்று நிகழ்ச்சிகள் வரிசையாக வரும். இது தோத்திர நூல் ஆதலால் சம்பவங்கள் அடைவாக வராமல் முன்பின்னாக வருகின்றன.

**கிரிஉருவ.**

சூரனுக்குக் கவசம் போல் இருந்த கிரௌஞ்சாசுரன் ஆகிய கிரி துளைப்பட்டது. அதை உருவிக்கொண்டு சென்றது வேல்.

முருகப் பெருமான், சூரனுக்குக் கவசம் போன்றிருந்த கிரௌஞ்ச கிரி பொடியாகவும், சூரனுக்கு ஒளிய இடங்கொடுத்த கடல் வற்றிப் போகவும், மாமரமாக நின்ற அவன் தறிபட்டு எரிபட்டு உதிரம் குமுகுமெனக் கக்கி அழிந்து போகவும் தன்னுடைய கையில் உள்ள வேலை விட்டான்.

**கதிர்வேல்.**

அந்த வேல் கதிரை உடைய வேல்; நல்ல வழியிலே செல் பவர்களைக் காப்பாற்றுவதையே தன் வேலையாக உடைய பெருமான் ஒளிமிக்க கதிர்களை உடைய தன் வேலைப் பிரயோகம் பண்ணி னான். அது ஞானத்தின் உருவம்.

**கதிர்வேல் தொட்ட காவலனே!**

சூரபன்மனும் அவனது துணைவர்களும் அழிந்து ஒழியும்படி யாகக் கதிர்வேல் தொட்ட காவலனை நோக்கிப் பிரார்த்தித்துக் கொள்கிறார்.

''எம் பெருமானே, உன் பெருமை எனக்குத் தெரியாதா? நீ கதிரை உடைய வேலைப் படைத்த காவலன் அல்லவா? நீ தேவர்களுக்கு வாழ்வு அளித்தாய். சூரன் ஒளிந்த கடல் சுவறிப் போகும்படி செய்தாய். சூரனுக்குக் கவசம் போன்றிருந்த மலை பொடியாகும்படி செய்தாய். மாமரமாக நின்ற சூரன் உடல் தறிபட்டு, எரிபட்டு, ரத்தம் குமுகுமெனக் கக்க அழிந்து போகும் படி செய்தாயே! நானும் இனி உடம்பென்னும் பொய்யான குடிலில் புகுதாவகையில், புண்டரீகத்தினும் செக்கச் சிவந்த உன் கழல் வீட்டைத் தந்தருள மாட்டாயா?'' என்று இறைஞ்சுகிறார்.

சூரன் என்பவன் அகங்காரம். கிரௌஞ்சாசுரன் மமகாரம். அகங்காரத்தை உள்ளடக்கி மமகாரம் சுற்றிச் சூழ்ந்து விரிந்து கிடக்கிறது. எம்பெருமான் திருக்கரத்திலுள்ள ஞான வேல் நமது உள்ளங்களிலும் பாய்ந்தால் மமகாரம் முதலில் ஒழிந்து, பின்னர் அகங்காரமும் நாசமாகி விடும். அகங்காரம், மமகாரம் ஞானத் தால் ஒழிந்தால் முடிவில்லாப் பிறவியை ஒழித்து, எம்பெரு மானுடைய கழலடி பெற்று உய்வு பெறலாம். ஞானமே முருகன் திருக்கரத்தில் உள்ள வேல்.

★

பொக்கக் குடிலில் புகுதா
வகைபுண்ட ரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு
தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட்டு எரிபட்டு
உதிரம் குமுகுமெனக்
கக்கக் கிரிஉரு வக்கதிர்
வேல்தொட்ட காவலனே!

*(பொய்யான குடிலைப்போன்ற உடம்பிலே இனிப் புகுந்து பிறவா வண்ணம் தாமரையைக் காட்டிலும் மிகச் சிவந்த நின் திருவடியாகி மோட்ச வீட்டைத் தந்தருள்வாயாக. சூரன் மறைந்த கடல் தீப்பட்டு சுவறி சூரனாகிய மாமரம் துண்டுபட்டுத் தீய்ந்து, இரத்தம் குமுகு வென்று வெளிப்படவும் கிரௌஞ்சமலை உருவும்படியாகவு கதிரையுடைய வேலாயுதத்தை விட்ட காவற் பெருமானே!*

*பொக்கம் - பொய், வஞ்சனை. குடில் - குடிசை. கழலாகிய வீடு சிந்து - கடல். கொக்கு - மாமரம். தறிபட்டு - வெட்டுப்பட்டு. தொட்ட வீசிய.)*

# கண்ணும் வேலும்

உடம்பு எத்தனைதான் பலம் உடையதாக இருந்தாலும், உடம்பை இயக்குகின்ற மனம் திண்மை அற்றதாக இருந்தால் அந்த உடம்பினால் பயன் இல்லை. மனத்தின் பலத்துக்கு ஏற்றபடியே மனிதன் பலம் உடையவனாகிறான்.

## தவத்தின் இலக்கணம்

**''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு''**

என்று வள்ளுவர் தவத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். தனக்கு எந்த ஊறு வந்தாலும் பொறுத்துக் கொள்ளுதல், பிறருக்குத் தீமை செய்யாமல் இருத்தல் என்று இரண்டு இலக்கணம் சொல்கிறார். முதலில் சொன்னது சகிப்புத் தன்மை. இரண்டாவது சொன்னது அகிம்சை. தனக்கு ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு, தனக்கு ஊறு செய்தவனுக்கும் தீங்கு நினைக்காமல் வாழ்வது என்பது நல்ல மன வலிமை உடையவர்களால்தான் முடியும். நம் குழந்தை நம்மைக் கிள்ளுகிறது. பதிலுக்கு நாம் குழந்தையையா கிள்ளுகிறோம்? நமக்கு அதன்மேலுள்ள அன்பால் அதனை அணைத்துக் கொள்கிறோம். அதைப் போல பண்புடைய மக்கள் எல்லா மக்களையும் அன்புடன் நேசிப்பதனாலே அவர்களால் தங்களுக்கு வருகின்ற துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு உண்டாகும். திரும்ப அவர்களுக்கு எவ்விதமான தீங்கும் செய்யாமல் அவர்களை அணைத்துக் கொள்கிறார்கள். இப்படி வாழ்வது துறவிகளுடைய நிலைமை.

## தவமுனிவரின் படைகள்

தவவேடம் தாங்கி, தவநெறியில் சென்று எப்போதும் இறைவனையே தியானம் செய்து வாழ்கின்ற துறவிகளுக்குப் பல படைக்கலங்கள் துணையாக இருக்கின்றன. அவர்களுக்குத் தாடி

ஒரு படை. உடம்பில் பூசியிருக்கும் விபூதி ஒரு படை. இடையிலே அணிந்துள்ள ருத்திராட்சம் ஒரு படை. பகைவர்கள் இவற்றைக் கண்டு அஞ்சி நடுங்குவார்கள்.

## மனவலிமை

புறத்திலே துறந்தவர்கள் போலக் கோலங்கொள்வது அகத்திலே கொண்ட திண்மைக்கு அடையாளம். மனத்திற்குள் துறவுத் தன்மை இன்றி வெறும் புறக்கோலம் மாத்திரம் இருந்தால் அவர்கள் துறந்தவர்கள் ஆகமாட்டார்கள். உள்ளே பலம் இன்றிப் புறப்படையினால் பயன் இல்லை.

**“மனத்தகத்து அழுக்கறுத்த மௌன யோக ஞானிகள்**
**முலைத்தடத் திருப்பினும் மனத்தகத் தழுக்குறார்”**

என்று பேசுகிறார் சிவ வாக்கியர். மனசிலே மாசு இல்லாதவர்கள் மகளிருக்கு அருகில் இருந்தாலும், அவர்களுடைய மார்பிலே பழகினாலும் மனத்திலே அழுக்கு உறாமல் இருப்பார்களாம். அவர்களே உண்மை ஞானிகள். ‘‘அப்படி உண்டா?’’ என்று கேட்கலாம். குழந்தைகள் இருப்பது இல்லையா? பெண்களின் மார்பிலே கிடக்கிற குழந்தைகளுக்குக் காம உணர்ச்சி உண்டாவதில்லை. அந்த நிலையில் இருப்பவர்கள் உண்மை ஞானிகள். அவர்கள் எல்லாவற்றையும் துறந்தவர்கள்; புலன்களை எல்லாம் வென்றவர்கள்.

## தாக்கும் படை

அவர்களையும் கெடுக்கப் பார்க்கிறார்கள் பொல்லாதவர்கள். தவம் செய்கின்றவர்களைக் கெடுக்கப் பொல்லாதவர்கள் இந்தக் காலத்தில்தான் இருக்கிறார்கள் என்பது அல்ல; அந்தக் காலத்திலும் இருந்தார்கள். அந்தப் பொல்லாதவர்களின் படை திறமையாக வேலை செய்கிறது. முனிவர்கள் பொறிகளை அடக்கியவர்கள்; புலன்களுக்குரிய இன்பங்களை வேண்டாம் என்று உதறிவிட்டு ஓடிவந்தவர்கள்; உடலின்பத்தை நீங்கி நின்றவர்கள். தவவேடம் தாங்கிய வீரர்களாகிய அவர்களைத் தாக்குவதற்கு வருகின்ற படை கண்; மகளிருடைய கண். அது எங்கே தாக்குகிறது? வாய்ப்பான இடம் என்று பார்த்துத் தாக்குகிறது.

பழைய காலத்துக் கதைகளில் ஒரு செய்தி வரும். அசுரர் களோடு போராடும்போது அவர்களை எந்த எந்த வகையில் கொன்றாலும் சாகாமல் திரும்பத் திரும்பப் பல வித உருவங் களை எடுத்துக் கொண்டே இருப்பார்களாம். அவர்களுடைய உயிர்நிலை இருக்கும் இடம் எது என்று அறிந்து அங்கே தாக்கிக் கொல்வார்களாம்.

அதேபோல இந்தக் கண் என்ற படை யாருடைய மனம் பலவீனமாக இருக்கிறது என்று பார்த்துப் போய்த் தாக்குகிறது. தாக்கும்போது அவர்களுடைய புறக்கோலத்தைக் கண்டு அஞ்சாமல் தாக்குகிறது.

## விசுவாமித்திரர் கதை

விசுவாமித்திரருடைய தவவேடத்தைக் கண்டு மேனகை அஞ்சவில்லை. குலத்திற்குப் பழக்கமான தொழில் அந்தக் குலத்தில் வந்தவர்களுக்கு அருமையாக இராது. இயற்கையாகவே குலத் தொழிலைச் செய்யும் ஆற்றல் அவர்களிடத்தில் உண்டாகி விடும். வேறொரு குலத் தொழிலைச் செய்ய வேண்டுமென்றால் மிகுதியாக உழைத்துப் பயில வேண்டும். கற்றுவிட்டால் பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலைச் செய்பவர்களைக் காட்டிலும் மிகத் திறமையாகச் செய்வார்கள். க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர் விசுவாமித்திரர்; கௌசிகன் என்ற பெயரோடு பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்ட சக்கரவர்த்தி. வாளெடுத்துப் போர் செய்யும் மரபில் உதித்த அவருக்கு, காட்டில் போய் உட்கார்ந்து கொண்டு தவம் செய்யும் ஆற்றல் இயல்பிலே உண்டாகாது. நாட்டைத் துறந்து, அரசாட்சியைத் துறந்து, அரசனுக்குரிய இன்பத்தைத் துறந்து, வனவிலங்குகளிடையே உறைந்து கடுமை யான தவம் செய்தவர் விசுவாமித்திரர். தவம் செய்ய வேண்டு மென்ற எண்ணம் அவருக்கு உண்டானது எப்படித் தெரியுமா?

ஒருநாள் தன் பெரும்படைகளுடன் கௌசிக அரசன் காட்டுக்குப் போனான். அங்கே வசிஷ்டர் தவம் செய்து கொண் டிருந்தார். அரசன் தன் பரிவாரங்களுடன் காட்டுக்கு வருகிறான் என்று உணர்ந்தவுடன் வசிஷ்டர் மரியாதையுடன் வரவேற்று அவனுக்கும் அவனுடைய பரிவாரங்களுக்கும் விருந்து அளிக்க நினைத்தார். தம் கருத்தை மன்னனிடம் தெரிவித்தார்.

கௌசிக மன்னனுக்குச் சிரிப்பு வந்தது. 'காட்டில் வாழும் முனிவர், தம்முடைய உணவுக்கே வழியில்லாமல் காய் கிழங்கு களைத் தின்று கொண்டு வாழ்பவர், நமக்கும் நம் பரிவாரங் களுக்கும் விருந்து வைப்பதா? இது என்ன ஆச்சரியம்?' என்று எண்ணினவனாய், ''அப்படியே தங்கள் விருந்தை நாங்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்வோம்'' என்று சொன்னான்.

சாப்பாட்டு நேரம் வந்தது. ''இலை போடலாமா?'' என்று கேட்டார் வசிஷ்டர். ''போடுங்கள்'' என்று இசைந்தான் கௌசிகன்.

அடுத்த கணம் வசிஷ்டர் தேவலோகத்துப் பசுவாகிய காம தேனுவை ஏவினார். அது வந்தது. அத்தனை பேர்களுக்கும் இலை போட்டார்கள்; அறுசுவை உண்டி பரிமாறினார்கள்.

அத்தனை பேர்களுக்கும் உணவு கிடைத்தது கிடக்கட்டும். இத்தகைய விருந்தை இத்தனை நாள் வரையில் கௌசிக அரசன் உண்டதே இல்லை. விருந்து நுகரும்போதே அவன் மனத்தில் கெட்ட எண்ணம் தோன்றியது. அவன் க்ஷத்திரியன்; தன்னுடைய படை வீரத்தினால் பகைவர்களின் நாட்டைப் பற்றும் ஆசை ஊறிய உள்ளம் உடையவன். 'இந்தக் காமதேனுவை நாம் பிடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன? நமக்கு வேண்டிய செல்வம் எல்லாம் இதனால் கிடைக்குமே! இந்த முனிவரிடம் கேட்போம். கொடுக்க மறுத்தால் இருக்கவே இருக்கின்றன, நம் படைகள். இவரை அடக்கிவிட்டு இதைப் பிடித்துக் கொண்டு போய்விடுவோம்' என்று எண்ணினான். வ்சிஷ்டரிடம் போய், ''சுவாமி, நீர் அளித்த விருந்துக்கு நன்றி; அந்தப் பசு உமக்கு எதற்கு? எனக்கு வேண்டும்'' என்று கேட்டான்.

வசிஷ்டர் அதை எப்படி அனுப்புவார்? ''அரசே! உனக்கு ஏற்பட்ட ஆசை தகாது. இருந்தாலும் உன்னால் முடியுமானால் அதை ஓட்டிக்கொண்டு போகலாம்'' என்று சொல்லிவிட்டார்.

''சரிதான். நானே ஓட்டிப் போகிறேன்'' என்று சொல்லிக் கௌசிகன் காமதேனுவைப் பிடிக்க நெருங்கினான். அப்போது அது தன் உடம்பைக் குலுக்கிற்று. அந்த ஒரே குலுக்கலில் எண்ணற்ற வீரர்கள் கீழே குதித்துக் கௌசிக மன்னனையும் அவன் படைகளையும் அடித்துத் துரத்திவிட்டார்கள். காமதேனு தேவலோகத்திற்குப் பறந்து போய்விட்டது.

ஏமாற்றத்தால் கௌசிக மன்னன் கண்கள் சிவந்து விட்டன. "அடே! தாடி வைத்துக் கொண்டிருக்கும் இந்த முனிவனுக்கு இவ்வளவு அகந்தையா? அந்த மாட்டைத் தானே பிடித்து என்னிடம் கொடுக்க வேண்டியது இருக்க, என்னைப் பிடித்துக் கொண்டு போ என்று சொல்லி எனக்குத் தோல்வியை உண்டு பண்ணிவிட்டு இவன் உட்கார்ந்து தவம் செய்வதா? இவனையே என் படைப்பலம் கொண்டு அடித்துக் கொல்கிறேன் பார்" என்று பெரும்படையுடன் வசிஷ்டருடைய ஆசிரமத்தைத் தாக்க ஆரம்பித்தான்.

வசிஷ்டர் புன்னகை புரிந்தார். தம்முடைய கையில் இருந்த தண்டத்தைத் தமக்கு முன்னால் ஊன்றி அப்படியே உட்கார்ந்தார். எத்தனை எத்தனையோ விதமாகக் கௌசிகன் போரிட்டான். அவனுடைய படைகளை எல்லாம் வசிஷ்டருக்கு முன்னால் இருந்த தண்டம் விழுங்கிவிட்டது.

அப்போது நினைத்தான் கௌசிகன்: "சீ சீ! என்னுடைய உடல் பலத்தினால் பயன் இல்லை. என்னிட முள்ள பெரிய படைப்பலத்தினாலும் பயன் இல்லை. பெரிய நாட்டுக்கு நான் அரசனாக இருப்பதனாலும் பயன் இல்லை. என்னிடம் இருக்கும் செல்வத்தில் அணுவளவுகூட இல்லாத இந்த முனிவர் அவ்வளவு செல்வமும் தோற்றுப் போகும்படி செய்துவிட்டாரே! என் படைகள் எல்லாம் பயன் இல்லாமல் போகும்படியாகச் செய்ய இவரிடம் இருக்கும் படை ஒன்றே ஒன்றுதான். அது இவருடைய தவம். அந்தத் தவத்தை நான் இனிச் செய்வேன். எனக்கு நாடு வேண்டாம்; அரண்மனை வேண்டாம்; பெண்டு பிள்ளைகள் வேண்டாம்; மந்திரிகள் வேண்டாம்; படை வீரர்கள் வேண்டாம். இந்தக் கணமே எல்லாவற்றையும் துறந்துவிட்டு வசிஷ்டரைப் போலக் காட்டுக்குச் சென்று தவவலிமை உடையவன் ஆவேன்" என்று உறுதி பூண்டு எல்லாவற்றையும் துறந்து காட்டிற்கு ஓடிவந்தான் கௌசிக மன்னன். தன் குலத்திற்கு இயல்பல்லாத தவத் தொழிலை மேற்கொண்டு முனிவன் ஆனான். அவனுடைய திறமை எவ்வளவு சிறப்பானதாக இருக்கவேண்டும்! அவனே விசுவாமித்திர முனிவர்.

மிகக் கடுமையாகத் தவம் செய்யலானார் விசுவாமித்திர முனிவர். அந்தத் துறவியின் தவத்தைக் கண்டு இந்திரனே

நடுங்கினான். 'எப்படியாவது இவர் தவத்தைக் கலைத்துவிட்டால் நல்லது; என்ன செய்யலாம்?' என்று யோசித்தான்.

முனிவரின் தவத்தைக் குலைக்க வேண்டுமானால் அவரது மன உறுதியைக் குலைக்கும் ஆற்றலைப் பெற்ற படையை அனுப்ப வேண்டும். துறவியின் உள்ளத்தையும் தகர்க்கும் படை கண்தான். வாள் போன்ற கூர்மையான கண்ணை உடைய தேவலோகத்து மாதர்களில் ஒருத்தியான மேனகையை அனுப்பி வைப்போம் என்று தீர்மானித்தான்; அப்படியே செய்தான்.

தன் கூர்மையான விழிகளை உருட்டிக் கொண்டு மேனகை விசுவாமித்திரரின் அருகில் வந்து நடனம் ஆடினாள். சதங்கைச் சத்தத்தைக் கேட்டவுடனேயே, "சீ சீ! என் தவத்தைக் குலைக்கும் படை வந்துவிட்டதே! இதற்குத் தோற்றுப் போகக் கூடாது. அவளைக் கண்ணால் பார்க்கக் கூடாது; பார்க்கக் கூடாது" என்று விசுவாமித்திரர் தம் கண்களை இறுக மூடிக்கொண்டார். மேனகையின் சதங்கை ஒலி அவர் உள்ளத்தைப் பிடித்துப் பிடித்து இழுத்தது. "அவளைப் பார்க்கக் கூடாது, பார்க்கக் கூடாது" என்று அவர் எவ்வளவுக்கு எவ்வளவு எண்ணினாரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர் உள்ளம் மிக வேகமாகத் துடித்தது; படபட வென்று அடித்துக் கொண்டது. கண் மெல்லத் திறந்து பார்க்க ஆரம்பித்தது. பார்த்தபோது அவர் நெஞ்சு பதைத்தது. அந்த மகாமுனிவரின் பக்கத்தில் வந்துவிட்டாள் மேனகை. "இது என்ன கோலம்? என்னைப் பாருங்கள்! கண்ணுக்கு எதிரே கிடைக்கும் இன்பத்தை உதறலாமா?" என்பதைப் போல அவள் கண் கெஞ்சிக் கொண்டே அவரது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துவிட்டது. முதலில் கண்ணைத் திறந்தார். விசுவாமித்திரர். அவளைப் பார்த்தவுடனேயே அவரது உள்ளமும் திறந்துவிட்டது. அந்தத் துறவியை வளைத்துப் பிடித்து, அவரது நெஞ்சம் பதைக்கப் பதைக்க வதைத்தது மேனகையின் கண். விசுவாமித்திரர் மேனகையின் கையைப் பிடித்துக் கொண்டுவிட்டார். அவளுடைய கண்ணாகிய வாட் படைக்கு இளைத்துத் தவித்துத் தோற்றுப் போய் விட்டார் அவர்.

பலகாலமாகத் தாம் ஆண்ட பெரிய அரசையே வேண்டாம் என்று துறந்து விட்டு வந்த துறவி அவர். பல காலமாகத் தாம்

*அநுபவித்த அரண்மனை இன்ப போகங்களை வேண்டாம் என்று துறந்துவிட்டு வந்தவர் அவர். பஞ்சு மெத்தை வேண்டாமென்று கானகத்துக் கட்டாந்தரையைத் தேடி ஓடி வந்த துறவியை, பட்டுப் பட்டாடைகள் எல்லாம் வேண்டாமென்று மரவுரி தரித்துத் தம் உடம்பையே சுமையாகத் தூக்கி வந்த துறவியை, மேனகையின் கண் படை என்ன செய்துவிட்டது! அவரது உள்ளத்தை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைத்து இளைத்துத் தவிக்கும்படி செய்துவிட்டது. தாடியாகிய படை வைத்திருந்தார்; காவி உடையாகிய படை வைத்திருந்தார்; வெண்ணீறு ஆகிய படை வைத்திருந்தார்; ருத்திராட்சமாகிய படை வைத்திருந்தார்; தண்டு கமண்டலம் ஆகிய படை வைத்திருந்தார். அத்தனையும் தோற்றுப் போகும்படி செய்து, அவை எல்லாவற்றுக்குமே தலைக்குனிவை உண்டு பண்ணிவிட்டது அந்தக் கண்ணாகிய ஆயுதம். அதற்குக் கிடைத்த வெற்றி தான் சகுந்தலையின் அவதாரம்.*

*விசுவாமித்திரர் வசிஷ்டரது தவ வலிமை தமக்கும் வர வேண்டும் என அரசை விட்டு ஓடி வந்து பயன் என்ன? அரண்மனையை விட்டு ஓடி வந்து பயன் என்ன? நாடு நகரம், அரண்மனை, அந்தப்புரம் ஆகிய இன்ப போகங்களை எல்வலாம் வேண்டாமென்று துறந்துவிட்டு வந்து பயன் என்ன? அவரை மேனகையின் கண்ணாகிய படை எளிதில் தோல்வியுறச் செய்து விட்டது. மறுபடியும் தவம் செய்தார்.*

*அத்தகைய மாமுனிவரே தோற்றுப் போய்விட்டார் என்றால் சாதாரண மக்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்? மங்கையர் கண்ணாகிய படையிலிருந்து தப்ப வேண்டுமென்றால் அதையும் விட மிக்க வலிமை உடைய ஆயுதம் நமக்குத் துணையாக வேண்டும். மாரனைச் சங்காரம் செய்த பிறகு தோன்றிய குமாரன் கை வேற் படை துணையாக வந்து ரட்சிக்க வேண்டும் என்று அருணகிரியார் சொல்கிறார்.*

## *வதைக்கும் கண்ணார்*

துறந்தோர் உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்கும் கண்ணார்க்கு

**இளைத்துத் தவிக்கின்ற என்னைஎந்**
**நாள்வந்து இரட்சிப்பையே?**

*துறந்தோர் – எல்லாவிதமான இன்ப போகங்களையும் துறந்த வர்கள். உளத்தை – காம நினைவு உடைய மனசை. அதனை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்கும் படையை உடையவர்கள் மங்கையர்கள். பிறர் உள்ளத்தில் காமத்தைக் கொப்புளிக்கும்படியாகச் செய்கின்ற அலங்கார மாதர்கள் இவர்கள்.*

**இளைத்துத் தவிக்கின்ற என்னை.**

*'அவர்களுக்கு முன்னாலே மனோபலம் இழந்து இளைப் புற்றுத் தவிக்கின்றேன் நான்; உள்ளத் திண்மை எல்லாம் போய்த் தவிக்கின்றேன். என்னை நீ காப்பாற்ற வேண்டும். நான் அந்தப் படையை வென்று தலை நிமிர்ந்து நிற்கும்படியாக அருள வேண்டும்.'*

**எந்நாள் வந்து இரட்சிப்பையே?**

*''எத்தனை தவம் உடையவர்களானாலும் அவர்கள் உள்ளத்தில் மகளிரது கண்ணாகிய படை நுழைந்து சிவ காமத்தை ஒழித்து, அவகாமத்தை எழுப்பி விடுகிறதே! அதனால் தவிக்கிறேன்! என்னை எப்போது வந்து பாதுகாப்பாய், அப்பா?'' என்று அருணகிரியார் பாடுகிறார்.*

## *அவர் கருணை*

*ஆண்டவன் அவரை ரட்சிக்கவில்லையா? அவரை ரட்சித்து விட்டான். பிரபஞ்சச் சேற்றைக் கழியவிட்டு, வெங்காம சமுத்தி ரத்தைக் கடக்க அவருக்குத் திடம் அருளினான். அவனுடைய அருளைப் பெறாமல் நாம் தவிக்கின்றோம் என்கின்ற பெருங் கருணையினால் நாம் சொல்ல வேண்டிய விண்ணப்பத்தை அவர் இப்போது வெளியிடுகிறார். அந்தப் பாட்டில், ''நீ இப்படிச் சொல்ல வேண்டும்'' என்று எழுதியிருந்தால், நாம் அதைச் சொல்லும்போது அப்படியே, ''நீ இப்படிச் சொல்ல வேண்டும்'' என்பதையும் சேர்த்துச் சொல்ல நேரிடும். எது நாம் சொல்ல வேண்டியது, எது நமக்கு அருணகிரியார் கூறும் அறிவுரை என்று வேறுபாடு தெரியாமற் போகும். அதனால், ''நீ இப்படிச் சொல்'' என்று தனியே நமக்கு ஒரு குறிப்பை வைக்காமல் தம்முடைய*

*நிலைக்காகவே பாடுவது போலப் பாடிக் கொடுத்திருக்கிறார் பெருங் கருணை வள்ளல் அருணகிரியார்.*

*இந்த வேண்டுகோளை முருகனைப் பார்த்துச் சொல்கிறார்.*

## 2

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி ஊடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்தனே!

*அஞ்ஞானத்தால் காமம் முதலிய படைகள் அடுத்தடுத்து வந்து தாக்கித் துன்புறுத்துகிறபோது மனிதன் தன் தைரியத்தை விட்டுவிடுவான். அந்தப் படைகளிடமிருந்து தன்னைப் பாது காத்துக் கொள்ள வேண்டுமானால் ஞானம் வேண்டும். அந்த ஞானமே உருவானது வேல். வேலின் துணை இல்லையானால் மகளிரது கூர்மையாகிய கண் படைக்கு அகப்பட்டுப் பதைத்துப் பதைத்து இளைத்துத் தவிக்கின்ற நிலை மாறாது.*

### *நச்சுக் கண்*

*“கண்ணார்க்கு” என்று சொல்லும்போது அருணகிரியார் கற்புடைய மகளிரது கண்களைக் குறிப்பிடவில்லை. முன் பாடல் களிலே சொன்னது போலப் பொது மகளிரைப் பற்றியே நினைந்து இங்கும் கூறுகிறார். கற்புடைய பெண்ணரசிகளை அவர் மிக மிக உயர்வாகச் சொல்வாரே அன்றித் தாழ்வாகச் சொல்ல மாட்டார்.*

கண்ணார்க்கு

*என்பது கண்ணிலே நஞ்சை உடைய அலங்கார மாதர்களுக்கு என்று பொருள் கொள்வதற்குரியது. அவர்களுடைய பார்வை மென்மையானதுதான். ஆனால் அது வன்மையான உள்ளத்தை உடைக்கும் ஆற்றலுடையது. அந்தக் கண் படையை வெல்வதற்கு உலகத்தில் நாம் பெற்றிருக்கும் இரும்புப் படை எதுவும் பயன் படாது. இரும்பினால் குத்திய புண்ணை மருந்து போட்டு ஆற்றி விடலாம். ஆனால் கண்ணால் குத்தி உண்டான காமப் புண்ணை வேறு எதனாலும் மாற்ற முடியாது. அதற்கு முருகனது வேற் படை வேண்டும். வேல் உருவத்திலே ஆண்டவன் ஞானத்தை வைத்திருக்கிறான்.*

## ஞான சக்தி

மிட்டாய்க் கடைக்குத் தந்தையார் குழந்தையை அழைத்துக் கொண்டு போகிறார். அங்கே பல பல உருவங்களிலே மிட்டாய்கள் இருக்கின்றன. அவை யாவும் சர்க்கரையினால் ஆனவைகளே. அவற்றைப் பிட்டு வாயில் போட்டால் சர்க்கரையின் சுவைதான் கிடைக்கும். ஆனால் பார்வைக்குக் குதிரையாக இருக்கிறது; கூஜாவாக இருக்கிறது. அதைப் போலப் பல பல உருவத்திலே ஞானம் முருகனிடம் இருக்கிறது. எம்பெருமான் திருக்கரத்தில் அது வேலாக விளங்குகின்றது. அறியாமையைப் போக்குவது ஞானம். காமம் அறியாமையின் விளைவு; அதைப் போக்குகின்ற ஞானம் வேலின் உருவமாக முருகவேளின் திருக்கரத்தில் படையாக விளங்குகின்றது. அவனுக்கு **ஞான சக்திதரன்** என்ற நாமம் உண்டு.

நம்முடைய முயற்சியும் ஆண்டவனிடத்தில் பக்தியும் அவன் வேலின் நினைவும் இருக்குமானால் அப்போது அந்த முயற்சி பலிக்கும். எத்தகைய மகளிரது கூட்டத்தில் பழகினாலும் காமத்தினால் மயங்கமாட்டார்கள். மகளிர் அனைவரையும் தாயாகப் பார்க்கின்ற உள்ளம் வரும்.

## குழந்தை உள்ளம்

உடம்பினால் அந்த மகளிரைவிட வளர்ந்தவர்களாக இருந்தாலும் உள்ளத்தால் அவர்களுடைய குழந்தையாகி அவர்களைத் தாயாகப் பார்க்கின்ற மனோபாவம் வந்துவிடும். குழந்தைப் பெருமானைக் கும்பிடுகிறவர் உள்ளம் குழந்தையுள்ளமாக மாறிவிடும். குழந்தை பெண்ணைத் தாயாகத்தானே பார்க்கும்? ஞானத்தையே வேலாக உடைய குழந்தைப் பெருமானை வழிபடுகின்ற ஞானிகளும் எல்லாப் பெண்களையும் தாயாகப் பார்த்தார்கள். ஞானிகளின் இலக்கணம் சொல்ல வந்து,

**''நம் மங்கையரைத் தாய்போல் நினைந்து''**

என்று பட்டினத்தார் சொல்கிறார். நன்மங்கையரிடத்தில் பழகும் போது தாயாகப் பார்ப்பார்கள்; தீய மங்கையர்களிடம் அவர்கள் பழகவே மாட்டார்கள்.

எல்லாப் பெண்களையும் நாமும் தாயாகப் பார்க்க வேண்டு மானால் நாம் அவர்கள் எல்லோருக்கும் குழந்தை என்ற மனோ பாவம் வரவேண்டும்; நாம் முதலில் குழந்தையாகாமல் அவர்கள் தாயென்ற உணர்ச்சி வருவது அருமை.

தம் மனைவி அல்லாத மற்றப் பெண்களை எல்லாம் இந்நாட்டவர், ''அம்மா'' என்று அழைப்பது மரபு. அம்மா என்று அழைக்கும் உள்ளத்திலே அவகாமம் தோன்றக் கூடுமா? தோன்றுகிறதே என்றால் நினைக்கின்ற உள்ளத்திலே தெம்பு இல்லை. மனத்திண்மை இல்லாதவர்கள் எம்பெருமான் திருக் கரத்திலுள்ள ஞானவேலை நினைத்துக் கொண்டால் போதும்; மனத்தின் கோழைத்தனத்தைப் போக்கித் தைரியத்தையும் திண்மை யையும் வேல் அளித்துவிடும்.

## வேற் கந்தன்

அதை நினைந்துதான் அருணகிரியார், ''வேற் கந்தனே'' என்று துணைக்குக் கூவி அழைக்கிறார்.

''ஞான வேலைப் படையாக உடைய கந்தப் பெருமானே'' என்று அழைத்து, ''அப்பா! இந்த நாட்டிலே எல்லா இன்ப போகங்களையும் துறந்து பல காலமாக உன் துணையின்றி வேறு எத்தனையோ விதமான புறப்படைகளைப் பூண்டு தவம் செய்யத் துணிந்த துறவிகள் இருக்கிறார்களே; அவர்களைப்போலவே நானும் எல்லாவற்றையும் துறந்து வந்துவிட்டேன். இருந்தாலும் துறந்தோர் உளத்தை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்கும் கண்ணார்க்கு இளைத்து நான் தவிக்கின்றேனே! நீ உன் கை வேற்படையோடு துணையாக வந்துவிட்டால் எனக்கு இளைப்பு வருமா? வராதே! இளைத்துத் தவிக்கின்ற நிலை போய் விடுமே! எப்போது அப்பா வந்து இரட்சிக்கப் போகிறாய்?'' என்ற வேண்டுகோளை விடுக்கிறார்.

முருகன் அவரைப் பார்த்துக் கேட்கிறான்: ''என்னைத் துணைக்கு அழைக்கிறாயே; என் கையிலுள்ள வேற் படையைத் துணைக்கு அழைக்கிறாயே! என்னைப் பற்றியும், என் வேலைப் பற்றியும் உனக்கு ஏதாவது தெரியுமா?'' என்று வினாவுகிறான்.

## *வெள்ளோட்டம்*

*அருணகிரியார் சொல்கிறார்: ''அது எனக்குத் தெரியாதா சுவாமி? உலகம் எல்லாம் உன்னைப் போற்றுகின்ற வரலாறு கூடத் தெரியாமல் நான் தமிழ் நாட்டில் வாழ்கிறேன் என்று நினைக்கிறாயா? எப்போதும் உன்னுடைய திருக்கரத்தில் இருக்கும் வேலின் செயல் இன்னது என்பதை எங்களுக்கு உணர்த்த வேண்டி முன்பே ஓர் ஒத்திகை செய்து காட்டியிருக்கிறாயே! சூர சங்காரம் செய்தது அந்த வேல் தானே?'' என்பது போலப் பாடுகிறார்.*

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி ஊடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேல்.

*அந்த வேல் முன்பு சூரனைச் சங்காரம் செய்தது. சூரன் மாயையின் பிள்ளை. பல பல உருவங்களோடு அவன் கிளைத்துப் புறப்பட்டுக்கொண்டே இருந்தான். இறக்க இறக்கத் திரும்பவும் பலவித உருவங்களோடு எழுந்து கொண்டே இருந்தான். அவனுக்குக் கவசமாக இருந்தது கிரௌஞ்ச கிரி. முருகன் விடுத்த வேல் அந்தக் கிரியைத் துளைத்து உள்ளே போய்க் கிளைத்துப் புறப்பட்ட சூரன் மார்பையும் துளைத்து வெளியே புறப்பட்டு வந்துவிட்டது. ''இந்த வரலாறு எனக்குத் தெரியாதா அப்பா? வெறும் வெள்ளோட்டமாக இதைக் காட்டினாய். இதைப்பற்றிக் கந்தப்புராணம் மிக விரிவாகப் பாராட்டிப் பேசுகிறது. இது ஒன்றே உன்னுடைய வேலையாக இருந்திருக்குமானால் சூர சங்காரத்திற்குப் பிறகு வேலைக் கீழே வைத்திருப்பாயே! சூர சங்காரத்தில்தான் உன்னுடைய வேலை ஆரம்பமாயிற்று. அந்த வேலை இன்னும் முடியவில்லையே! கையில் எப்போதும் அந்தச் சக்தி வேலுடன் நிற்கிறாய். அந்த வேலை நினைத்தால் உள்ளத்தில் திரும்பத் திரும்பக் கிளைத்துப் புறப்படுகின்ற காமமாகிய அசுரன், மாயா சக்தியோடு கலந்து எழும் அவகாமமாகிய அசுரன், கிளைத்துக் கிளைத்துப் புறப்பட்ட மாயையின் பிள்ளையாகிய சூரனைப்போல அழிந்து போவான் என்பதைக் காட்ட அல்லவா அன்றைக்கு ஒத்திகை போல நடத்திக் காட்டினாய்? அதை மறந்து விடுவேனா? இப்போது,*

என்னை எந்நாள்வந்து இரட்சிப்பையே?''
என்று பிரார்த்தித்துக் கொள்கிறார்.

''இப்பொழுது வா, இன்றைக்கு வா எனக் காலம், நேரம் குறிப்பிட்டு உன்னை நான் வேண்டிக்கொள்ள முடியுமா? என்னைப்போல எத்தனையோ பேர்கள் உன்னுடைய அருளுக்காக அல்லும் பகலும் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எல்லோரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது. எல்லோர் அகங்களுக்கும் போய்வர வேண்டுமென்றால் உனக்கு நேரம் வேண்டாமா? சாமானிய மனிதர்களே, 'இன்றைக்கு வா, நாளைக்கு வா என்று அழைக்காதீர்கள். நான் பல வேலைகளை உடையவன். சௌகரியப்பட்டபோது வருவேன்' என்று சொல்லுகிறார்களே! அவர்கள் எல்லோரையும்விட எப்போதும் சுறுசுறுப்பாக ஒர கணம்கூட ஓய்வில்லாமல் பக்தர்களை ஆட்கொள்ள மயில்வாகனத்தில் ஏறிப் போய்க்கொண்டே இருக்கும் உன்னை, 'இன்றைக்கு வந்து என்னை இரட்சிப்பாய்!' என்று காலம் குறிப்பிட்டு வேண்ட முடியாது. நான் என்னுடைய விண்ணப்பத்தைப் போட்டு விட்டேன். நீ உனக்குச் சௌகரியப்பட்ட காலத்தில், என்னுடைய மனப் பக்குவத்திற்கு ஏற்ப இரட்சிக்க வேண்டும். என்றைக்கு உன் திருவுள்ளம் இரங்கும்?'' என்கிறார்.

★

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
    புடன்கிரி ஊடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேல்கந்த
    னே!துறந் தோர்உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
    பதைக்க வதைக்கும்கண்ணார்க்கு
இளைத்துத் தவிக்கின்ற என்னைஎந்
    நாள்வந்து இரட்சிப்பையே?

(பல உருவங்களாகப் பிரிந்து வெளிப்பட்ட சூரபன்மனுடைய மார்போடு கிரௌஞ்சகிரியும் ஒரே சமயத்தில் ஊடுருவும்படியாகத் துளைத்து வெளிப்பட்ட ஞான வேலையுடைய கந்தபிரானே! துறந்த

வர்களின் உள்ளத்தைத் தம் பக்கலில் வளைத்து அகப்படுத்தி அவர்கள் மிகவும் பதைக்கும்படி வாதனை செய்யும் காமப் பார்வையையுடைய கண்ணைப் பெற்ற மகளிருக்கு வலியிழந்து தவிக்கின்ற அடியேனை நீ என்றைக்கு எழுந்தருளி வந்து பாதுகாப்பாய்?

கிளைத்து - மாமரமாகக் கிளைகொண்டு என்றும் பொருள் கூறலாம். மார்பையும் கிரியையும் ஒருங்கே துளைத்தது; ''கிளைபட்டெழுசூ ருரமும் கிரியும், துளைபட் டொழியத் தொடுவே லவனே'' (கந்தர் அநுபூதி.) இளைத்து - இளைப்புற்று; வலிமையை இழந்து. வேற்கந்தனே என்றது இந்தக் கண்ணால் விளையும் காமத்தைப் போக்கும் ஞான வேலைக் கொண்டவன் என்ற குறிப்பை உடையது.)



‘தமிழ்க்கவி பூஷணம்’

‘திருமுருகாற்றுப்படை அரசு’

‘வாகீச கலாநிதி’

# கி.வா. ஜகந்நாதன்

எழுதிய

அனைத்து நூல்களும் -

அவரது பேச்சுக்களின்

ஒலி நாடா

மற்றும்

குருந்தகடுகள் (பல)

வெளிவர

உள்ளது


என்பதை

மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்

கொள்கிறோம்

- பதிப்பகத்தார்



## சொல்லின் செல்வன் பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

1. வாரியார் சொற்பொழிவில் கேட்டவை I
2. வாரியர் சொற்பொழிவில் கேட்டவை II
3. அஷ்டாவக்ரர் உபதேசங்கள்
4. விதுர நீதி
5. பர்த்ருஹரியின் நீதி சதகம்
6. சனத்குமாரரின் உபதேசங்கள்
7. பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்
8. விபூதி, ருத்ராட்சம் மகிமை
9. மன உறுதியுடன் வாழ வைராக்கிய சதகம்
10. சித்தர்கள் சரித்திரம்
11. யட்சப் பிரச்னம் & பிரச்னோத்ர ரத்னமாலிகா
12. துணுக் துணுக்குகள்
13. சித்ரகுப்தன் கதைகள்
14. அருணகிரிநாதரின் ராமாயணம்
15. ஊருக்கு நல்லது சொல்வேன்
16. மஹா ஸ்வாமிகள் அருளிய ஆதிசங்கரர் வரலாறு
17. மனோபோதை
18. அர்த்தமுள்ள கண்ணதாசன் பாடல்கள் I
19. ஸ்ருங்கார சதகம்
20. நீதிக் கதைகள் பாகம் 1
21. நீதிக் கதைகள் பாகம் 2
22. அம்மன் சந்நதி அற்புதங்கள்

(மேலும் ஆசிகள் நம்மைத் தேடி வரும்)

கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுயை தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.